சிறந்தவைகளில் சிறந்தவை

ஜீவ நீரோடை

தினசரி தியான நூல்

சந்தியுங்கள் இந்த நாளை தேவனுடன்

A DAILY DEVOTIONAL FOR YOUR SPIRITUAL GROWTH

சாம்சன் பால்

ஜீவ நீரோடை தினசரி தியான நூல்

சந்தியுங்கள் இந்த நாளை தேவனுடன்

A DAILY DEVOTIONAL FOR YOUR SPIRITUAL GROWTH

சாம்சன் பால்

ஜீவ

சந்தியுங்கள் இந்த நாளை தேவனுடன்

MEET THIS DAY WITH GOD

ஜீவ நீரோடை தியான நூல் வரிசை - 23

முதல் பதிப்பு : 2020

Cover Design By : **Wilson Paul** (Wings)

SAMSON PAUL
126, Muthaiya Muthaliar Street,
Pondicherry - 605 003. INDIA
Phone : 0413-2236042
e-mail : jeevaneerodai@gmail.com
Website : www.jeevaneerodai.com
Youtube : "Jeevaneerodai"

Typesetting by : **Platinum Graphics,** Pondicherry -1. Ph : 2220 378
Printed by : **United Bind Graphics**, Chennai-10. Ph : 2640 1531

₹ 160/-

LIVING STREAM

Daily Devotional Book

Gift

Presented to ______________________

By ______________________

Date ______________________

Occasion ______________________

ஆசிரியரிடமிருந்து...

தேவ ஐக்கியத்தோடும் தேவ வழிநடத்துதலோடும் வாழ்வதற்குத் தேவையான கிருபைகளைத் தேவன் தருகின்றார். இவ்விதமானதோர் வாழ்க்கையில் வளர்வதற்குத் தேவையான தேவ வார்த்தைகளைப் பெற்றுக் கொடுக்கின்ற ஒரு உன்னதப் பணியில் இன்னும் தேவன் என்னை வழிநடத்திக்கொண்டிருக்கின்றார். தினசரி தியானநூல் என்பது தினசரி பக்திக் கடமையை நிறைவேற்றுகின்ற ஒரு பூஜைப் பொருள் அல்ல. அது வாசிக்கின்றவர்களைத் தினமும் தேவனுக்கேற்ற பாதைகளில் நடத்துவதற்கான நோக்கம் கொண்டவையாயிருக்க வேண்டும். அதனை வாசிக்கின்றவர்கள் ஒரு பக்தி சம்பிரதாயமாக வாசிக்காமல், வாழ்க்கையை மேன்மையாக வாழ்வதற்கான ஊக்குவிப்பை எதிர்பார்த்து வாசிக்க வேண்டும்.

பலவிதமான வாழ்க்கைச் சூழ்நிலைகளின் நடுவில் இதனைப் பலர் வாசிக்கின்றார்கள் அவர்களுக்கு அந்தந்தச் சூழ்நிலைகளுக்கேற்ற தெளிவான ஒரு வழிகாட்டுதல் கிடைக்க வேண்டும் என்பதைக் குறியாக வைத்துதான் தினசரி தியானநூல் ஆயத்தம் பண்ணப்படுகிறது. அவ்விதமான ஒரு தீர்க்கமான நோக்கம் சார்ந்த இந்த நல்ல பணியில் இதுவரை கர்த்தர் சிறப்பாக நடத்தி வருகின்றார். ஒவ்வொரு முறையும் தினசரி தியானநூல் வெளியிடும் போது இதுவரை அறிந்திராத ஏராளம் நல்ல உண்மைகளை புதிதாக அறிந்தோம் என கூறுகின்ற பலர் உண்டு. எந்த நல்ல பயனும் இல்லாத பல கிறிஸ்தவப் புத்தகங்கள் பலர் நடுவில் அதிகப் பிரசித்தம் அடைந்திருக்கின்ற நிலையில், இதுபோன்ற சத்தியத்தரம் மிகுந்த தினசரி தியானநூல்கள், இன்னும் அநேகருக்கு அறியப்படாமலிருக்கிறதே என்று ஆதங்கப்படுவோரும் பலர் உண்டு.

தினசரி தியானங்களை எழுதுவது மட்டுமே கடினமான பணி அல்ல. அதற்குச் சரியானதோர் தலைப்பு பெயர் கொடுப்பதும் கடினமான வேலையே. மிக எளிதானதாகவும் பொருத்தமானதாகவும் இருக்கும்படியாக சிந்தித்தபோது, **“சந்தியுங்கள் இந்த நாளை தேவனுடன்”** என்ற இந்த தலைப்பைப் பெற தேவன் உதவி செய்தார்.

ஒவ்வொரு நாளும் ஒவ்வொருவிதமான சூழ்நிலையை நாம் சந்திக்கும் தேவை ஏற்படுகிறது. எந்தச் சூழ்நிலையாயினும் அதனை நாம் சந்தித்துக் கடந்து செல்லவேண்டும். அதனை எதனைக் கொண்டு சந்திப்பது என்பது முக்கியமானதோர் கேள்வி. தேவனுடைய பதில், தேவனுடைய பிரசன்னத்தோடு வாழ்கின்றவர்கள் எந்தச் சூழ்நிலையையும் வெற்றியாகச் சந்திக்க முடியும் என்பதே. அவ்விதம் சந்திப்பதற்குத் தேவையான தேவ வார்த்தைகளின் குவியல்தான் இந்த தினசரி தியானநூல். கடமைக்காக இந்த தினசரி தியான நூலை வாசிக்காமல், கரிசனையோடு வாசித்து கர்த்தர் அருளும் பலத்தால் ஒவ்வொரு நாளையும் வெற்றியுடன் சந்திக்க, கர்த்தர் அருள்புரிவாராக.

சாம்சன் பால்

ஒரு நல்ல பரிசைக் கொடுங்கள்

ஜீவநீரோடை தினசரி தியான நூலை வாசித்துப் பயனடையும் பலர் இதனை நல்ல ஒரு பரிசாகத் தங்களின் நண்பர்களுக்கும் உறவினர்களுக்கும் தருகின்றனர். இதனால் அநேகர் தாங்கள் உண்மையிலேயே நல்ல ஒரு பயனுள்ள பரிசைப் பெற்றுக்கொண்ட உணர்வோடு கர்த்தருக்கு நன்றி செலுத்துகின்றனர். ஜீவநீரோடை தினசரி தியான நூல் உங்களுக்குக் கர்த்தரால் தரப்பட்ட நல்லதொரு பரிசு என்பது உண்மை. நீங்கள் இதனால் பயன் பெற்றால் ஒரு சிலருக்காவது இதனுடைய பயன்பாடு கிடைக்க விரும்புங்கள்.

உங்களால் நேசிக்கப்படுகிறவர்களுக்குப் பயனுள்ள ஒரு பரிசைக் கொடுக்க முன்வாருங்கள். நீங்கள் உங்கள் செலவில் இந்த தியான நூலை யாருக்காவது பரிசாகக் கொடுக்க விரும்பினால், உங்கள் சார்பாக உங்கள் பெயரைக் குறிப்பிட்டு அவர்களுக்கு அனுப்பி வைப்போம்.

இந்த தியான நூல் ஆங்கிலத்திலும் கிடைக்கும்.

MEET THIS DAY WITH GOD

இந்த தியான நூலில் இரண்டு வேதப் பகுதிகள் ஏன் தரப்படவில்லை?

இந்த வருட தினசரி தியான நூலில் வாசிப்பதற்கு ஒரே ஒரு வேதப் பகுதி மட்டுமே தரப்பட்டுள்ளது. பழைய ஏற்பாட்டிலிருந்து ஒரு வேத பகுதியும் புதிய ஏற்பாட்டிலிருந்து ஒரு வேதப் பகுதியும் குறிப்பிடும் வழக்கமான முறை மாற்றப்பட்டுள்ளது.தினசரி தியானநூல் வாசிக்கும் சிலர், அந்தந்தப் பக்கத்தில் தரப்பட்டுள்ள வேதப் பகுதிகளை மட்டும் வாசித்து, தங்களின் வேத வாசிப்பை முடித்துக்கொள்கின்றனர். இந்த தினசரி தியான நூலின் நோக்கம் தினமும் ஒரு ஆவிக்குரிய நல்ல சிந்தனையை உங்களுக்குத் தருவது மட்டுமே. உங்களின் வேத வாசிப்பு அளவுகளை தியானநூல் நிர்ணயிப்பது சரியல்ல. இந்த தினசரி தியான நூலை வாசிக்கின்றவர்கள், தினமும் சுதந்திரமாக வேறு பல வேதப் பகுதிகளையும் வாசித்து தியானித்து ஆவியில் பலப்பட வேண்டும். தியான நூலில் குறிப்பிடப்பட்டுள்ள வேதப் பகுதி கொடுக்கப்பட்ட தினசரி சிந்தனையோடு தொடர்புடையது மட்டுமே.

இருள் நடுவில் சிறுவிளக்கு போல
இன்றைய கிறிஸ்தவ உலகில்
எரிந்து பிரகாசிக்கும் மாத இதழ்



வருட சந்தா ரூ.150



Annual Subscription ₹ 100/-

இது வழக்கமான ஒரு கிறிஸ்தவ
மாத இதழ் அல்ல !
முற்றிலும் வித்தியாசமானது
விசேஷமானது !

It is not just one another
Christian Magazine. It will Shape
and Transform your Lifestyle.

உங்கள் வாலியப் பிள்ளைகளை உயர்ந்த இலக்கை நோக்கி வழிநடத்தும் வல்லமையான தேவ வார்த்தைகள்

₹120



₹120

வாலிப நாட்களில் வழுவாமல் நடந்திட வழிகாட்டும் தினசரி தியான நூல்

சீர்கெட்ட இந்த உலகத்தில் சிறுவயதிலிருந்தே பிள்ளைகள் சிறந்த வழிகளில் நடந்திட உதவும் தியான நூல்

₹100



₹100

❑ எளிய நடை ❑ சிறு சிறு எடுத்துக்காட்டுகள்
❑ குட்டிக் கதைகள் ❑ தெளிவான ஆலோசனைகள்

நான் என்ன செய்ய வேண்டும்?

நான் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ள வேண்டியது மிக முக்கியத் தேவையா?

ஆம். இரட்சகராகிய இயேசுவின் உதவியை அவசியம் பெற்றுக்கொள்ள வேண்டிய கட்டாயமான தேவையில் நீங்கள் இருக்கிறீர்கள். நீங்கள் எந்த மத மாக இருந்தாலும், எந்த இனமாக இருந்தாலும், எந்த அந்தஸ்தில் இருந்தாலும், பாவம் என்ற அடிமைத்தனத்தில் இருப்பது உண்மை. அந்த பாவத்திலிருந்து உங்களை இரட்சிக்க இரட்சகராக உலகத்திற்கு வந்தவரே இயேசு கிறிஸ்து. அவருடைய உதவி உங்களுக்குத் தேவை. (அப்-4:12; யோவான்-8:36)

நான் பாவத்தின் அடிமைத்தனத்தில் இருப்பதற்கான அடையாளங்கள் என்ன?

உண்மையும், நேர்மையும் பரிசுத்தமுமாய் வாழவேண்டும் என்ற ஒரு வாஞ்சை போதுமான அளவிற்கு இயற்கையாக இல்லாமை, உள்ளான ஆத்துமாவில் தேவன் இருக்கிறார் என்ற நிச்சயமின்மை, தேவ ஐக்கியத்தை உணர முடியாமை, சமாதானக் குறைவு, பயம், உயர்ந்த பண்பு நிலைகளில் வாழ இயலாமை, தவறான சுபாவ நிலைகளை மாற்ற இயலாமை, உணர்ச்சி சார்ந்த தவறான இச்சைகளைக் கட்டுப்படுத்த இயலாமை, இந்த உலக வாழ்

விற்குப் பின்னால் இருப்பது என்ன என்ற அறிவின்மை, இதுபோன்ற பல விஷயங்கள் ஒருவர் பாவத்தின் அடிமைத்தனத்தில் இருப்பதற்கான முக்கிய மான அறிகுறிகளும், அடையாளங்களும் ஆகும். (மாற்கு-7:21; கலா-5:19-21)

மேற்கண்ட விஷயங்களை நானே முயற்சி செய்து அவைகளைச் சரி செய்ய முடியாதா?

உங்கள் சுய முயற்சியால் நீங்கள் பாவத்தை மேற்கொண்டு சீர்பெற முடி யாது. கடவுள் விரும்புகின்றவிதமான குணநிலைகளிலும், செயல் நிலை களிலும் வாழ முடியாத பலவீனமும், கடவுள் விரும்பாத தவறான குணநிலை களையும், செயல்களையும் விட்டு விலக முடியாத ஒரு பலவீனமும் இயற்கை யாகவே உங்களிடம் உள்ளது. நீந்த இயலாதவன் ஆற்றில் விழுந்துவிட்டால் வெளியே வர ஆசைப்படவும், முயற்சிக்கவும் செய்தாலும், அவனால் அது கூடாது. அவனை மீட்க அவசியம் ஒரு இரட்சகர் தேவை. அதுபோலவே பாவமும் (ரோமர்-7:15-25)

நான் பொதுவாக தெய்வ நம்பிக்கையோடு பல ஆன்மீக பக்திக் காரியங் களைச் செய்து கொண்டிருக்கிறேன். அது போதாதா?

பாவம் என்ற ஒன்றிற்கு அடிமையாக இருந்துகொண்டே ஒருவர் இறை நம்பிக்கையும், பக்திச் செயல்களும் உடையவராக இருக்க முடியும். ஆனால், இருதயத்தின் அடித்தளம் பரிசுத்தமாகி, தேவ ஐக்கியம் பெற்று குணநிலை, மனநிலை, பண்புநிலை, கொள்கை நிலை ஆகியவைகள் கடவுள் எதிர்பார்க்கின் றபடி மாறவேண்டுமானால், முதலாவது நீங்கள் உங்களைப் பாவத்திலிருந்து காப்பாற்ற அல்லது மீட்க அல்லது இரட்சிக்க வல்லமையுடையவராகிய இயேசுவை ஏற்றுக்கொண்டு இரட்சிக்கப்பட வேண்டும். (ஏசாயா-1:16; யோவான்-3:3)

இயேசுவை ஏற்றுக்கொள்ளுதல் என்றால் என்ன அர்த்தம்?

நீங்கள் ஆழமான ஒரு நீர் நிலையில் விழுந்துவிட்டீர்கள் என்று கற்பனை செய்துகொள்ளுங்கள். உங்களால் நீந்திக் கரை சேர இயலவில்லை. உங்களைக் காப்பாற்ற நன்கு நீச்சல் தெரிந்த ஒருவர் வருகிறார். இப்பொழுது நீங்கள் என்ன செய்யவேண்டும்? உங்களைக் காப்பாற்றிக் கரை சேர்க்க அவர் எடுத்துக்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு நீங்கள் உங்களை விட்டுக் கொடுக்க வேண்டும். உங்களைக் காப்பாற்ற அவரை அனுமதிக்க வேண்டும். அவரை நீங்கள் முற்றிலும் சார்ந்துகொண்டு அவருக்கு ஒத்துழைப்புத் தரவேண்டும். அதுபோலவே, பாவம் என்ற தீய வல்லமையிலிருந்து நீங்கள் விடுதலை பெற்று, பரிசுத்தமாக வாழ்வதற்குத் தேவையாக ஆண்டவராகிய இயேசுவை, உங்கள் வாழ்க்கையில் நீங்கள் அனுமதித்து, அவருக்கு ஒத்துழைப்புத் தரவேண்டும் (யோவான்-1:12; ரோமர்-8:15)

இயேசுவை ஏற்றுக்கொள்ளுதலை அல்லது இரட்சிக்கப்படுதலை செயல்படுத்துவது எப்படி?

முதலாவது நீங்கள் தேவனுக்கு முன்பாக அவரால் சுத்திகரிக்கப்பட வேண் டிய அவசியத்தில் உள்ள ஒரு பாவி என்பதை உண்மையாக உணர வேண்டும்.

ஒருவருடைய சரீரத்தில் இருக்கும் வியாதியை மருத்துவர் சுட்டிக்காட்டும்போது, அவர் அதனை உண்மையென்று உணர்ந்தால்தான் சிகிட்சை பெற முடியும். ஏதோ ஒரு மத பக்திக்காக உங்களைப் பாவி என ஒத்துக்கொள்ளாமல், உண்மையிலேயே உங்களில் பாவம் இருப்பதை நீங்கள் உணர வேண்டும்.

இப்போது இந்தப் பாவத்திலிருந்து உங்களை இரட்சிக்க வல்லவர் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து என்பதை நீங்கள் விசுவாசித்து, உங்கள் பாவத்திற்காக மனம் வருந்தி அவரிடம் பாவ மன்னிப்பைத் தரும்படியாக கேட்கவேண்டும். அவ்விதம் கேட்கும்போது அவர் உங்களை மன்னித்து விட்டார் என்று நீங்கள் விசுவாசிக்க வேண்டும். அது மட்டும் அல்லாமல், அவர் பாவ மன்னிப்பிற்காகச் சிலுவையில் சிந்திய இரத்தத்தினாலே உங்கள் இருதயம் கழுவப்பட்டு, இப்போது நீங்கள் பாவத்திலிருந்து மீட்கப்பட்டதாக விசுவாசிக்க வேண்டும். (லூக்கா-18:13; எபேசியர்-1:13, 14: எபே-2:8)

ஒவ்வொரு பாவங்களையும் சொல்லி மன்னிப்புக் கேட்கவேண்டுமா?

இதுவரையும் நீங்கள் செய்த எல்லாப் பாவங்களையும் ஒவ்வொன்றாக அறிக்கையிட உங்களால் இயலாது. அது தேவையில்லை. நான் பாவி, என்னை மன்னியும் என்பதே போதுமானது. சகல பாவச் செயல்களுக்கும், பாவக் குணங்களுக்கும் அடிப்படைக் காரணம் தேவனற்ற ஒரு பாவ நிலைமையில் நாம் இருப்பதே. அதற்காக நாம் மனம் வருந்தினால் போதுமானது. (லூக்கா-15:21)

இயேசுவை நான் ஏற்றுக்கொள்ள முன்வரும்போது எனக்குள் என்ன நடக்கும்?

உங்கள் பாவங்கள் மன்னிக்கப்படும். பழைய பாவ இருதயம் போய், புதிய பரிசுத்தமான ஒரு இருதயத்தை நீங்கள் பெறுவீர்கள். நீங்கள் இப்போது பாவ அடிமைத்தனத்திலிருந்து இரட்சிக்கப்பட்டுவிட்டீர்கள். அதற்கு அடையாளமாக தேவனுடைய பரிசுத்த ஆவியை நீங்கள் பெறுவீர்கள். அந்த பரிசுத்த ஆவியானவர் உங்களுக்குப் பாவத்தை வெறுக்கும் ஒரு மனநிலையையும், பரிசுத்தத்தை விரும்பும் ஒரு வாஞ்சையையும் தருவார். இப்பொழுது நீங்கள் ஒரு நல்ல மனிதர் மட்டுமல்ல. நீங்கள் தேவனுடைய மகனாக அல்லது மகளாக மாற்றப்பட்டு விட்டீர்கள். (யோவான்-16:8; யோவான்-1:12. 1:9, 3:3)

இப்பொழுது நான் என்ன செய்யவேண்டும்?

நீங்கள் இரட்சிக்கப்பட்டுவிட்டீர்கள். அதாவது நீங்கள் பாவத்தின் அடிமையாக்கும் அதிகாரத்தை விட்டு, ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவினால் வெளியே கொண்டு வரப்பட்டுவிட்டீர்கள். இப்படி நடந்துவிட்டதை நீங்கள் விசுவாசிக்க வேண்டும். இனி நீங்கள் தவறான குணங்களை விட முடியும். தவறான செயல்களையும், பழக்க வழக்கங்களையும் விட்டுவிட முடியும். அதுபோல இனி நீங்கள் நற்குணங்களை உடையவர்களாக மாற முடியும். நல்ல செயல்களைச் செய்யும் பரிசுத்த ஆற்றல் உங்களுக்கு உண்டு. இவைகளை நீங்கள்

விசுவாசிக்க வேண்டும். விசுவாசித்துச் செயல்பட வேண்டும். (தீத்து- 3:8 ; யோவான்-15:5)

விசுவாசித்துச் செயல்படுதல் என்றால் என்ன?

சாதாரணமான ஒரு நபராக உங்களை எண்ணிக்கொள்ளுங்கள். ஆனால், ஒரு பெரிய கம்பெனியின் முதலாளி உங்களை அவருடைய கம்பெனியின் முக்கியமான ஒரு மேலாளராக நியமிக்கிறார். இப்போது நீங்கள் என்ன செய்யவேண்டும்? உங்களுக்குக் கொடுக்கப்பட்ட மிகப் பெரிய பதவியை உண்மை என்று எண்ணி, உங்களுக்கு அளிக்கப்பட்ட அதிகாரத்தை நீங்கள் உபயோகித்துச் செயல்படுத்தவேண்டும். அந்தக் கம்பெனியில் உள்ளவர் களைப் பார்த்து தயங்கி நின்றால் ஒன்றும் நடக்காது. நீங்கள் அதிகாரத்தோடு கட்டளையிட்டால் அவர்கள் கீழ்ப்படிந்து செயல்படுவார்கள். அதுபோலவே கர்த்தர் உங்களைப் பலப்படுத்தியிருக்கிறார் என்ற விசுவாசத்தோடு அவர் விரும்புகின்ற விதமாக விசுவாசத்தோடு செயல்பட முன்வர வேண்டும். அப் போது உங்களால் கூடும். நல்ல குணங்களை, செயல்களை, பண்புகளை அப்பியாசியுங்கள். அப்போது உங்களால் கூடும். (ரோமர்-6:22 ; ரோமர்-6:14)

பரிசுத்தமாக வாழ்வது சாத்தியமான விஷயமா?

ஆம். பரிசுத்தமாக வாழ்வது என்பது உங்கள் சுய பலத்தையும், மன வலிமை யையும் சார்ந்ததல்ல. நீங்கள் பாவி என்ற நிலையில் இருப்பதை உணர்ந்து மனம் வருந்தி, இனி பரிசுத்தமான ஒரு வாழ்க்கை வாழவேண்டும் என்று விரும்பி இயேசுவிடம் வரும்போது, நீங்கள் பரிசுத்தமாக வாழ்வதற்குத் தேவையான ஆற்றலைத் தரும் விதமாக பரிசுத்த ஆவியை நீங்கள் பெறுவீர்கள். உங்களால் கூடாததை உங்களுக்குள் தங்கியிருக்கும் பரிசுத்த ஆவியானவர் கூடும்படியாகச் செய்வார். (அப்-1:8; பிலிப்பியர்-4:13)

பரிசுத்த ஆவியானவர் என்னிடம் வந்து என்ன செய்வார்?

பரிசுத்த ஆவியானவர் உங்களுக்கு நெருக்கமான ஒரு நல்ல ஐக்கி யத்தைத் தருவார். பாவம் தொடர்பாக உங்களைக் கண்டித்து உணர்த்துவார். பாவம் செய்யாதிருக்க உங்களைத் தூண்டுவார். பாவம் செய்யாமலிருக்கத் தேவையான ஆற்றலை அளிப்பார். பரிசுத்தமாக வாழ உங்களை ஊக்குவிப்ப தோடு, அதற்குத் தேவையான தேவ வல்லமை உங்களிடம் செயல்படச் செய்வார். பரிசுத்த ஆவியானவர் அனுதின வாழ்வில் உங்களைச் சரியான பாதையில் வழி நடத்துவார். நீங்கள் தேவனுடைய பிள்ளை என்பதை உங்களுக்கு நினைப்பூட்டி, உறுதிப்படுத்துவார். (யோவான்-16:8, 13)

இரட்சிக்கப்பட்ட பின்னர் நான் ஜெபம், வேத தியானம் இவற்றில் ஈடுபட வேண்டியது மிக அவசியமா?

ஆம். உங்கள் இரட்சிப்பின் அனுபவத்தை உயிரோடே காப்பதும், செயல்படுத்துவதும் ஜெபம், வேத தியானம் போன்றவைகளே. ஜெபம்தான்

தேவனுடைய ஐக்கியத்தை நாம் உணருவதற்கு உதவி செய்யும். தேவ ஐக்கியத்தை நமக்குள் உணர்ந்து உறுதிப்படுத்துவதன் மூலமாகத்தான் பாவம் செய்யாமலிருக்கவும், பரிசுத்தமாக வாழவும் போதுமான தெய்வீக ஆற்றல் நமக்குக் கிடைக்கும். ஜெபம் என்பது நம்மை தேவனோடு இணைக்கும் அல்லது தொடர்புபடுத்தும் ஒரு அவசியமான ஆவிக்குரிய செயல்பாடு ஆகும். ஜெபத்தின் வாயிலாகத்தான் தேவன் நம்மோடிருப்பதை அறிய முடியும். ஜெபத்தின் வாயிலாகத்தான் பரிசுத்த ஆவி நம்மிடம் செயல்படுவதைக் காண முடியும். ஜெபத்தின் வாயிலாகத்தான் பரிசுத்தமாக வாழத் தேவையான தெய்வீக ஆற்றல் உடையவர்களாக நாம் மாற முடியும்.

அவ்விதமாக வேதத்தை திரும்பத் திரும்ப வாசிக்கும்போதும், அங்கே வாசித்தவைகளைக் குறித்துச் சிந்திக்கும்போதும், கர்த்தர் நமக்குள் தாம் அறிவிக்க வந்த வார்த்தைகளையும், செய்திகளையும் அறிவிப்பார். ஆண்டவர் நமக்கு பல ஆலோசனைகளையும், வழிநடத்துதல்களையும் தருவதையும், பல காரியங்களை நமக்கு வார்த்தைகள் மூலம் உணர்த்துவதையும் நாம் கண்டறிய முடியும். (ரோமர்-12:12 ; லூக் - 5:16)

☆ ☆ ☆

SAMSON PAUL'S DAILY DEVOTIONAL BOOKS IN ENGLISH

- TOWARDS THE GOAL DAILY
- MEET THIS DAY WITH GOD
- IN YOUR WAYS
- THIS DAY TO LIVE
- WORD OF TRUTH FOR TODAY
- DAILY A NEW CHAPTER
- FOR THE HEARTS OF BLOOMING BUDS
- BE RENEWED IN MIND DAILY
- GOD'S WORD'S FOR YOUNG HEARTS
- IN THE HEARTS OF BUDS
- O LORD IN THY PRESENCE
- BLESSED WORD FOR TODAY
- EVERY DAY IN HIS PRESENCE
- WALKING CLOSER WITH GOD
- EVERYDAY WITH THE EVERLASTING GOD
- A JOURNEY WITH GOD
- WALKING WITH GOD
- GOD'S GUIDANCE TODAY
- STREAM OF LIFE

வழிபாட்டின் மார்க்கம் அல்ல

கிறிஸ்தவம் ஒரு வழிபாட்டின் மார்க்கம் அல்ல. இது ஒரு தொழுகை மார்க்கம் அல்ல. இது சில பக்திச் செயல்களின் மார்க்கமும் அல்ல. மனிதன் கடவுளை வழிபடுகிறவனாக மட்டும் அல்ல. அவன் எப்படிப்பட்டவனாயிருந்து கொண்டு கடவுளை வழிபடுகின்றான் என்பது முக்கியம். அவன் தேவனைத் தொழுதுகொள்ளுகிறவனாக மட்டும் அல்ல. அவன் எப்படிப்பட்ட இருதயத்தோடு தேவனைத் தொழுகிறான் என்பது முக்கியம். அவன் பக்தியாய்ப் பல காரியங் களைக் கடவுளுக்காக செய்கின்றான் என்பது மட்டும் அல்ல. அவன் எப்படிப்பட்ட குணங்களோடும், பண்புகளோடும் தன்மைகளோடும் வாழ்ந்துகொண்டு கடவுளுக்காகப் பக்தியாய்ப் பல காரியங்களைச் செய்கிறான் என்பது முக்கியம்.

பக்திச் செயல்கள் செய்தாலும்

கடவுளை மரியாதை உணர்வோடு நம்புதல், கடவுளை பக்தியுணர்வோடு வணங்குதல், வழிபாட்டு ஸ்தலங்களுக்குச் சென்று வழிபடுதல், பிரார்த்தனை செய்தல், நமஸ்காரம் செய்தல், கடவுளைப் போற்றிப் பாடுதல், கடவுளின் நெறி முறைகளை வாசித்தல், துதிசெய்தல், உடலை வருத்துதல், உண்ணாமலிருத்தல், இறைச்செய்திகளைக் கேட்டல், தர்மம் செய்தல், கடவுளுக்காக காணிக்கை கொடுத்தல் போன்ற பல செயல்கள் மனிதன் செய்கின்ற பக்திச் செயல்கள்.

இவை யாவற்றையும் மனிதன் தேவனுக்காச் செய்தாலும், மனிதன் எப்படியிருந்து கொண்டு இவை யாவற்றையும் செய்கிறான் என்பதையே தேவன் கவனிக்கிறார்.

காயீன் – ஆபேல்

காயீன் என்ற வேதாகமக்கால மனிதன் இறை ஆசியை விரும்பி கடவுளுக்கு காணிக்கை கொடுத்தான். ஆயினும், அவனுடைய இருதயம் கோபம், வெறுப்பு, விரோதம், பொறாமை, எரிச்சல் ஆகிய தீயகுணங்களால் நிறைந்திருந்தது. எனவே, அவனுடைய பக்தியான காணிக்கையைத் தேவன் புறக்கணித்தார். (ஆதி யாகமம் – 4:5)

பக்தியில் பிரியப்படாத தேவன்

ஏசாயா என்ற வேதாகமக்கால தீர்க்கதரிசியின் காலத்தில் வாழ்ந்த பக்திமிக்க யூதர்கள் பலியிடுதல், பண்டிகை ஆசரித்தல், ஆலய வழிபாடுகள், பிரார்த் தனைகள், சபைகூடுதல் போன்ற பல பக்தியான வழிபாடுகளில் ஈடுபட்டு வந்தனர். ஆயினும், அவர்களின் குணநிலையும், அவர்கள் வாழ்ந்த விதமும் தேவனைப் பிரியப்படுத்தவில்லை. எனவே, இதுபோன்ற வழிபாடுகளில் எனக்குப் பிரிய மில்லை என்று தேவன் சொன்னதோடு, இவை யாவும் எனக்கு வருத்த மாயிருக்கிறது என்றும் கூறினார். (ஏசாயா – 1:14)

ஆமோஸ் என்ற தேவ மனிதன் வாழ்ந்த காலத்தில் உங்கள் பண்டிகைகளைப் பகைத்து வெறுக்கிறேன். உங்கள் ஆசரிப்பு நாட்களில் எனக்குப் பிரியமில்லை என்று தேவன் கூறினார். (ஆமோஸ்–5:21)

ஆம். இவை யாவும் தேவன் மனிதனுடைய வெறும் வழிபாடுகளிலும், பக்தி யான செயல்களிலும், தொழுகைகளிலும் பிரியப்பட்டுவிடுவதில்லை என்பதை தெளிவுபடுத்துகிறது.

பரிசுத்தம் முக்கியம்

நான் பரிசுத்தராயிருக்கிறது போல நீங்களும் எனக்கேற்ற பரிசுத்தவான்களா யிருப்பீர்களாக என்று தேவன் கூறியுள்ளார். (லேவியராகமம் – 20:26) பரிசுத்த மில்லாமல் ஒருவனும் தேவனைத் தரிசிப்பதில்லை என்று வேதம் சொல்கிறது. (எபிரேயர்–12:14) இருதயத்தில் சுத்தமுள்ளவன் பாக்கியவான். அவன் தேவனைத் தரிசிப்பான் என்று இயேசு கூறினார். (மத்தேயு – 5:8)

எனவே, நாம் எவ்வளவு பக்தி மிக்கவர்கள் என்பதை விட, எவ்வளவு பரிசுத்தமா னவர்கள் என்பதே முக்கியம். தேவன் விரும்பும் பரிசுத்தம் என்ற தகுதியை அடையாமல், தேவ பக்தியினால் நாம் என்ன செய்தாலும் அதனால் நாம் தேவ அருளையோ, இறை ஆசியையோ பெற்றுவிட முடியாது என்பதே உண்மை.

மனிதன் பக்திமிக்கவன் என்பதை உறுதிப்படுத்திட இறை நம்பிக்கை சார்ந்த பல பக்தியான செயல்களைச் செய்தால் போதும். ஆனால், அவன் தேவன் பிரியப்படும் பரிசுத்தவான் என்பதை உறுதிப்படுத்த அவனிடம் நற்குணங்களும், நற்பண்புகளும் நற்செயல்களும், நல்ல மனநிலையும் வேண்டும்.

மனிதனால் முடியாது

மனிதன் இயற்கையில் பரிசுத்தமாக வாழ இயன்றவன் அல்ல. அவனால் தேவனுடைய பிரியத்திற்கிசைந்து வாழ இயலாது. அவனால் தேவன் விரும்புகின்ற விதமான குணங்களையும், சுபாவங்களையும், வெளிப்படுத்தி தேவனைப் பிரியப்படுத்த முடியாது. அவன் பக்தியான செயல்களால் தனக்குத் தேவன் மேல் உள்ள பற்றினை வெளிப்படுத்த முடியும். ஆயினும், தேவன் விரும்புகின்ற விதமான தூய்மையான இருதயத்தோடு அவருக்காக எதையும் செய்ய இயலாது.

இயற்கையில் பாவி

எனவேதான் கிறிஸ்தவம், ஒரு மனிதன் இயற்கையில் பாவியாக இருப்பதாக கூறுகின்றது. அவன் பாவம் என்ற அடிமைத்தனத்திற்குள் இருப்பதாக இயேசு கூறினார். (யோவான்-8:34) அவன் பாவத்தை மேற்கொள்ளாதவரை பக்தியாய் செய்யும் எதுவும் தேவன் அங்கீகரிக்கும் விதமாக மாறாது. பாவம் என்பது மதம், ஜாதி, நாடு, இனம், நிறம், நம்பிக்கை என்ற வேறுபாட்டைப் பாராமல், உலகத்தில் பிறந்த ஒவ்வொரு மனிதனையும் ஆளுகை செய்கிறது.

பாவம் என்றால் என்ன ?

பாவம் என்பதை ஒரு தீய வல்லமை என்று சொல்லலாம். இது ஒவ்வொரு மனிதனையும் அடிமையாக்கி ஆளுகை செய்கின்றது. இதை எப்படி அறிந்து கொள்வது? பாவத்தின் செயல்பாடுகளையும், அடையாளங்களையும் ஒவ்வொரு மனிதனும் தனக்குள் அறிந்துகொள்ள முடியும். தவறாகச் சிந்திக்கிறோம். தவறாக யோசிக்கின்றோம். தவறாக விரும்புகின்றோம். தவறாக முயற்சிக்கின்றோம். தவறாகப் பார்க்கின்றோம். தவறான வழிகளில் நடக்கின்றோம், தவறான சுபாவங்களோடு வாழ்கின்றோம், தவறான முடிவுகளை எடுக்கின்றோம், தவறான உறவுகளைத் தேடுகின்றோம், தவறான வழிகளில் மகிழ்ச்சியைத் தேடுகின்றோம். இவை யாவும் நம்மிடம் நடக்கின்றது. ஆனாலும், இவை யாவும் நல்லது என்று நாம் எண்ணவில்லை. ஆயினும், நாம் இவ்விதம் செயல்பட நமக்குள் வலிமை யாகத் தூண்டப்படுகிறோம். அதனை எதிர்த்து நிற்க இயலாமல் போகிறது. இதுதான் பாவம் என்ற தீயவல்லமை செயல்படுவதின் அடையாளங்கள்.

தேவன் இல்லாத வெற்றிடம்

நல்லதை செய்ய இயலவில்லை. தீயதை செய்யாமல் இருக்க இயலவில்லை. நமக்கெதிராக நமக்குள் ஏதோ ஒரு வல்லமை செயல்படுகிறது. இதுதான் பாவம். (ரோமர் – 7:18) இந்த பாவம் என்பது தேவன் இல்லாத ஒரு வெற்றிடத்தின் விளைவானது. தேவன் மனிதனுக்குள் வந்து அந்த வெற்றிடத்தை நிரப்பும் போது பாவம் பலமிழந்து போகும்.

இந்த பாவத்தை மனிதன் தனக்குள் வைத்துக் கொண்டு பக்தியாய் பல காரியங்களைச் செய்ய இயலும். ஆயினும் அவை தேவ அங்கீகாரம் பெறாது. எனவே பாவம் என்ற தீயவிசையின் ஆளுகையிலிருந்து மனிதன் வெளியேறாமல் செய்யும் பக்தி காரியங்கள் யாவும் வீணானவையே. ஆகையால்தான் கிறிஸ்தவம் மனிதன் பாவம் என்ற அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்கப்பட்டு பரிசுத்தன் என்ற நிலைமையை அடைவதை முதன்மையான ஆன்மிக விஷயமாக போதிக்கின்றது.

பாவம் எப்படிப் போகும் ?

பாவம் என்பது புறம்பான பக்தி செயல்களாலோ, சுய முயற்சிகளாலோ, உடலை பலவிதங்களில் சுத்திகரிப்பதாலோ, தானதர்மங்கள் செய்வதாலோ, உடலை வருத்துவதாலோ, மந்திரங்கள் ஓதுவதாலோ, ஸ்தோத்திரங்கள் கூறுவதாலோ, பிரார்த்தனைகள் செய்வதாலோ, காணிக்கை தருவதாலோ போய்விடாது.

தேவ ஆளுகை தேவை

பாவத்தின் ஆளுகையிலிருந்து விடுதலை பெற வேண்டுமானால், தேவனுடைய ஆளுகை உள்ளே வர வேண்டும். தேவனுடைய உறவு இருதயத்திற்குள் வரும் போதுதான், பாவம் பலமிழக்கும். ஆனால் பாவசுபாவமான மனிதனுக்குள் தேவன் வரமுடியாது. பாவம் தேவனை நமக்குள் வரவிடாத பிரதானத் தடை ஆகும். பாவமும் தேவனும் ஒரே இடத்தில் வாசம் செய்ய முடியாது.

ஆன்மீக வாழ்வின் முதற்படி

எனவே கிறிஸ்தவம் முதலாவது ஒரு மனிதனை விட்டு பாவம் நீக்கப்பட வேண்டியதின் அவசியத்தை முக்கியப்படுத்தி பேசுகிறது. பாவம் நீக்கப்பட்டால்தான் அங்கே பரிசுத்தராகிய தேவன் வந்து தங்க முடியும். பரிசுத்தராகிய தேவன் வந்து இருதயத்தில் தங்கினால்தான் அந்த மனிதன் பரிசுத்தவானாக முடியும். பரிசுத்தவானாக மாறினால்தான் அவனுடைய குணமும், பண்பும், தன்மையும், செயலும் தேவன் விரும்புகின்றவிதமாக இருக்கும். அப்போதுதான் அவனுடைய பக்தி வாழ்க்கை தேவனால் ஏற்றுக்கொள்ளப்படும்.

இரட்சகர் அவசியம்

பாவம் நீங்குவது எப்படி? பாவம் நீக்கப்படுவது எப்படி? கிறிஸ்தவம் முதலாவது ஒரு மனிதனுக்கு அவனை பாவத்தின் ஆளுகையிலிருந்து அவனை விடுவிக்கும் இரட்சகர் ஒருவர் வேண்டும் என்பதைப் போதிக்கின்றது. மனிதனுக்குத் தேவன் அளிக்க விரும்பும் முதல் ஆசீர்வாதம் அவனுக்கு ஒரு இரட்சகரைக் கொடுப் பதுதான். மனிதனுக்கு தேவனிடத்திலிருந்து தேவைப்படுகின்ற மிக முக்கியமான பிரதான உதவி ஒரு இரட்சகர்தான். ஏனென்றால், மனிதனுடைய பிரதான பிரச்சி னையே அவனை அடிமையாக்குகின்ற பாவம்தான். எனவேதான் பாவிகளை இரட்சிக்க கிறிஸ்து இயேசு உலகத்திற்கு வந்தார் என்று வேதம் சொல்கிறது. (1 தீமோத்தேயு -1:15) கர்த்தர் மனிதனுடைய பாவங்களிலிருந்து அவனை மீட்பதற்காக அல்லது இரட்சிப்பதற்காக இயேசு கிறிஸ்து என்ற பெயரில் மானிடராக இந்த பூமிக்கு வந்தார். அவர் பாவ நிவாரண பலியாகத் தம்மை சிலுவையில் ஒப்புக் கொடுத்து பாவ நிவாரணம் செய்தார். அவர் சிந்திய இரத்தத்தி னால் மனிதர்கள் பாவத்திலிருந்து விடுதலையடைவதற்கான பாக்கியம் கிடைத்தது. (எபேசியர்-1:7)

தேவன் தங்குவார்

இயற்கையாகவே பாவத்தினால் அடிமைப்பட்டிருக்கின்ற மனிதன் ஆண்டவ ராகிய இயேசு கிறிஸ்துவின்மேல் வைக்கும் விசுவாசத்தினால் பாவத்திலிருந்து விடுதலை அடைய முடியும். அவன் பாவத்திலிருந்து விடுதலையடையும் போது தேவன் அவனோடு தங்க இயலும். தேவன் அவனோடு தங்கும் போதுதான் அவன் தெய்வீக அழகுடையவனாக மாறுகின்றான்.

எனவே, ஒரு மனிதனுடைய ஆன்மீக வாழ்க்கை அல்லது பக்தி வாழ்க்கை என்பது அவன் பாவத்திலிருந்து விடுதலை பெறுகின்ற ஒரு அனுபவத்திலிருந்தே ஆரம்பமாகிறது. ஒரு மனிதனுடைய ஆன்மீக நம்பிக்கையும், பக்தி நடவடிக்கை களும் தேவனுடைய அங்கீகாரத்தைப் பெற வேண்டுமானால் அவன் பாவ மன்னிப்பு, பாவவிடுதலை, இரட்சிப்பு ஆகியவற்றைப் பெற்றுக்கொண்ட நிச்சயம் பெற்றவனாக மாற வேண்டும். ஒரு மனிதன் இயேசுவை ஏற்றுக் கொண்டு இரட்சிப்பு என்ற அனுபவம் அடையும் போது அவன் புதிய ஒரு சிருஷ்டியாக மாறுகின்றான் என்று வேதம் சொல்கிறது. அங்கே பழைய வாழ்க்கை முடிவடைந்து அவனுக்குள் பரிசுத்தமான ஒரு புதிய வாழ்க்கை ஆரம்பமாகிறது. (11 கொரி-5:17)

**இறைவன் ஒளியாயிருக்கிறார் என்பதில் யாருக்கும் சந்தேகமில்லை.
நீ யாருக்கு ஒளியாயிருக்கிறாய் என்பதே கேள்வி.**

ஓராண்டிற்குள் முழு வேதாகமத்தையும் வாசித்து முடிக்கும் திட்டம்

ஜனவரி

	காலை	மாலை
	மத்தேயு	ஆதி
1	1	1–3
2	2	4–6
3	3	7–9
4	4	10–12
5	5:1–26	13–15
6	5:27–48	16, 17
7	6:1–18	18, 19
8	6:19–34	20–22
9	7	23, 24
10	8:1–17	25, 26
11	8:18–17	27, 28
12	9:1–17	29, 30
13	9:18–38	31, 32
14	10:1–20	33–35
15	10:21–42	36–38
16	11	39, 40
17	12:1–23	41, 42
18	12:24–50	43–45
19	13:1–30	46–48
20	13:31–58	49, 50
		யாத்
21	14:1–21	1, 2, 3
22	14:22–36	4, 5, 6
23	15:1–20	6, 8
24	15:21–39	9–11
25	16	12, 13
26	17	14, 15
27	18:1–20	16–18
28	18:21–35	19, 20
29	19	21, 22
30	20:1–16	23, 24
31	20:17–34	25, 26

பிப்ரவரி

	காலை	மாலை
	மத்தேயு	யாத்
1	21:1–22	27, 28
2	21:23–46	29, 30
3	22:1–22	31–33
4	22:23–46	34, 35
5	23:1–22	36–38
6	23:23–39	39, 40
		லேவி
7	24:1–28	1–3
8	24:29–51	4, 5
9	25:1–30	6, 7
10	25:31–46	8–10
11	26:1–25	11, 12
12	26:26–50	13
13	26:51–75	14
14	27:1–26	15, 16
15	27:27–50	17, 18
16	27:51–66	19, 20
17	28	21, 22
	மாற்கு	
18	1:1–22	23, 24
19	1:23–45	25
20	2	26, 27
		எண்
21	3:1–19	1, 2
22	3:20–335	3, 4
23	4:1–20	5, 6
24	4:21–41	7, 8
25	5:1–20	9–11
26	5:21–43	12–14
27	6:1–29	15, 16
28	6:30–56	17–19
29	7:1–13	20–22

மார்ச்

	காலை	மாலை
	மாற்கு	எண்
1	7:14–37	23–25
2	8:1–21	26, 27
3	8:22–38	28–30
4	9:1–29	31–33
5	9:30–50	34–36
		உபா
6	10:1–31	1, 2
7	10:31–52	3, 4
8	11:1–18	5–7
9	11:19–33	8–10
10	12:1–27	11–13
11	12:28–44	14–16
12	13:1–20	17–19
13	13:21–37	20–22
14	14:1–26	23–25
15	14:27–53	26, 27
16	14:54–72	28, 29
17	15:1–25	30, 31
18	15:26–47	32–34
		யோசுவா
19	16	1–3
	லூக்கா	
20	1:1–20	4–6
21	1:21–38	7–9
22	1:39–56	10–12
23	1:57–80	13–15
24	2:1–2	16–18
25	2:25–52	19–21
26	3	22–24
		நியா
27	4:1–30	1–3
28	4:31–44	4–6
29	5:1–16	7, 8
30	5:17–39	9, 10
31	6:1–26	11, 12

ஏப்ரல்

	காலை	மாலை
	லூக்கா	நியா
1	6:27–49	13–15
2	7:1–30	16–18
3	7:31–50	19–21
4	8:1–25	ரூத்
		1 சாமு
5	8:26–56	1–3
6	9:1–17	4–6
7	9:18–36	7–9
8	9:37–62	10–12
9	10:1–24	13, 14
10	10:25–42	15, 16
11	11:1–28	17, 18
12	11:29–54	19–21
13	12:1–31	22–24
14	12:32–59	25, 26
15	13:1–22	27–29
16	13:23–35	30, 31
		2 சாமு
17	14:1–24	1, 2
18	14:25–35	3–5
19	15:1–10	6–8
20	15:11–32	9–11

21	16	12, 13
22	17:1–19	14, 15
23	17:20–37	16–18
24	18:1–23	19, 20
25	18:24–43	21, 22
26	19:1–27	23, 24
		1 இரா
27	19:28–48	1, 2
28	20:1–26	3–5
29	20:27–47	6, 7
30	21:1–19	8, 9

மே

	காலை	மாலை
	லூக்கா	1 இரா
1	21:20–38	10, 11
2	22:1–20	12, 13
3	22:21–46	14, 15
4	22:47–71	16–18
5	23:1–25	19, 20
6	23:26–56	21, 22
		2 இரா
7	24:1–35	1–3
8	24:36–53	4–6
	யோவான்	
9	1:1–28	7, 8, 9
10	1:29–51	10–12
11	2	13, 14
12	3:1–18	15, 16
13	3:19–38	17, 18
14	4:1–30	19–21
15	4:31–54	22, 23
16	5:1–24	24, 25
		1 நாளா
17	5:25–47	1–3
18	6:1–21	4–6
19	6:22–44	7–9
20	6:45–71	13–15
21	7:1–27	13–15
22	7:28–53	16–18
23	8:1–27	19–21
24	8:28–59	22–24
25	9:1–23	25–27
26	9:24–41	28, 29
		2 நாளா
27	10:1–23	1–3
28	10:24–42	4–6
29	11:1–29	7–9
30	11:30–57	10–12
31	12:1–26	13, 14

ஜூன்

	காலை	மாலை
	யோவான்	2 நாளா
1	12:27–50	15, 16
2	13:1–20	17, 18
3	13:21–38	19, 20
4	14	21, 22
5	15	23, 24
6	16	25–27
7	17	28, 29
8	18:1–18	30, 31
9	18:19–40	32, 33
10	19:1–22	34–36
		எஸ்றா
11	19:23–42	1, 2
12	20	3–5
13	21	6–8
	அப்	
14	1	9, 10
		நெகே
15	2:1–21	1–3
16	2:22–47	4–6
17	3	7–9
18	4:1–22	10, 11
19	4:23–37	12, 13
		எஸ்தர்
20	5:1–21	1, 2
21	5:22–42	3–5
22	6	6–8
23	7:1–21	9, 10
		யோபு
24	7:22–43	1, 2
25	7:44–60	3, 4
26	8:1–25	5–7
27	8:26–40	8–10
28	9:1–21	11–13
29	9:22–43	14–16
30	10:1–23	17–19

ஜூலை

	காலை	மாலை
	அப்	யோபு
1	10:24–48	20, 21
2	11	22–24
3	12	25–27
4	13:1–25	28, 29
5	13:26–52	30, 31
6	14	32, 33
7	15:1–21	34, 35 8
8	15:22–41	36, 37
9	16:1–21	38–40
10	16:22–40	41, 42
		சங்கீதம்
11	17:1–15	1–3
12	17:16–34	4–6
13	18	7–9
14	19:1–20	10–12
15	19:21–41	13–15
16	20:1–16	16, 17
17	20:17–38	18, 19
18	21:1–17	20–22
19	21:18–40	23–25
20	22	26–28
21	23:1–15	29, 30
22	23:16–35	31, 32
23	24	33, 34
24	25	35, 36
25	26	37–39
26	27:1–26	40–42
27	27:27–44	43–45
28	28	46–48
	ரோமர்	
29	1	49, 50
30	2	51–53
31	3	54–56

ஆகஸ்டு

	காலை	மாலை
	ரோமர்	சங்கீதம்
1	4	57–59
2	5	60–62
3	6	63–65
4	7	66–67
5	8:1–21	68, 69
6	8:22–39	70, 71
7	9:1–15	72, 73
8	9:16–33	74–76
9	10	77, 78
10	11:1–18	79, 80
11	11:19–36	81–83
12	12	84–86
13	13	87, 88
14	14	89, 90
15	15:1–13	91–93
16	15:14–33	94–96
17	16	97–99
	1 கொரி	
18	1	100–102
19	2	103, 104
20	3	105, 106
21	4	107–109

22	5	110–112
23	6	113–115
24	7:1–19	116–118
25	7:20–40	119:1–88
26	8	119:89–176
27	9	120–122
28	10:1–18	123–125
29	10:19–33	126–128
30	11:1–16	129–131
31	11:17–34	132–134

செப்டம்பர்

	காலை	மாலை
	1 கொரி	சங்கீதம்
1	12	135, 136
2	13	137–139
3	14:1–20	140–142
4	14:21–40	143–145
5	15:1–28	146, 147
6	15:29–58	148–150
		நீதி
7	16	1, 2
	2 கொரி	
8	1	3–5
9	2	6, 7
10	3	8, 9
11	4	10–12
12	5	13–15
13	6	16–18
14	7	19–21
15	8	22–24
16	9	25, 26
17	10	27–29
18	11:1–15	30, 31
		பிரசங்கி
19	11:16–33	1–3
20	12	4–6
21	13	7–9
	கலாத்தியர்	
22	1	10–12
		உன்
23	2	1–3
24	3	4, 5
25	4	6–8
		ஏசாயா
26	5	1, 2
27	6	3, 4
	எபேசியர்	
28	1	5, 6
29	2	7, 8
30	3	9, 10

அக்டோபர்

	காலை	மாலை
	எபேசியர்	ஏசாயா
1	4	11–13
2	5:1–16	14–16
3	5:17–33	17–19
4	6	20–22
	பிலிப்பியர்	
5	1	23–25
6	2	26, 27
7	3	28, 29
8	4	30, 31
	கொலோ	
9	1	32, 33
10	2	34–36
11	3	37, 38
12	4	39, 40
	1 தெச	
13	1	41, 42
14	2	43, 44
15	3	45, 46
16	4	47–49
17	5	50–52
	2 தெச	
18	1	53–55
19	2	56–58
20	3	59–61
	1 தீமோ	
21	1	62–64
22	2	65, 66
		எரே
23	3	1, 2
24	4	3–5
25	5	6–8
26	6	9–11
	2 தீமோ	
27	1	12–14
28	2	15–17
29	3	18, 19
30	4	20, 21
	தீத்து	
31	1	22, 23

நவம்பர்

	காலை	மாலை
	தீத்து	எரேமியா
1	2	24–26
2	3	27–29
3	பிலேமோன்	30, 31
	எபிரேயர்	
4	1	32, 33
5	2	34–36
6	3	37–39
7	4	40–42
8	5	43–45
9	6	46, 47
10	7	48, 49
11	8	50
12	9	51, 52
		புலம்பல்
13	10:1–18	1, 2
14	10:19–39	3–5
		எசேக்
15	11:1–19	1, 2
16	11:20–40	3, 4
17	12	5–7
18	13	8–10
	யாக்கோபு	
19	1	11–13
20	2	14, 15
21	3	16, 17
22	4	18, 19
23	5	20, 21
	1 பேதுரு	
24	1	22, 23
25	2	24–26
26	3	27–29
27	4	30–32
28	5	33, 34
	2 பேதுரு	
29	1	335, 36
30	2	37–39

டிசம்பர்

	காலை	மாலை
	2 பேதுரு	எசேக்
1	3	40, 41
	1 யோவான்	
2	1	42–44
3	2	45, 46
4	3	47, 48
		தானியேல்
5	4	1, 2
6	5	3, 4
7	2யோவான்	5–7
8	3யோவான்	8–10
9	யூதா	11, 12
	வெளி	ஓசியா
10	1	1–4
11	2	5–8
12	3	9–11
13	4	12–14
14	5	யோவேல்
		ஆமோஸ்
15	6	1–3
16	7	4–6
17	8	7–9
18	9	ஒபதியா
19	10	யோனா
		மீகா
20	11	1, 2, 3
21	12	4, 5
22	13	6, 7
23	14	நாகூம்
24	15	ஆபகூக்
25	16	செப்பனியா
26	17	ஆகாய்
		சகரியா
27	18	1–4
28	19	5–8
29	20	9–12
30	21	13, 14
31	22	மல்கியா

தலைப்பு அட்டவணை

நாள்	தலைப்பு	பக்கம்	நாள்	தலைப்பு	பக்கம்
1.	தினமும் தேவன்	30	31.	அவர் தரும் அமைதி	60
2.	பெரிய மீன்	31	32.	அன்பும் பக்தியும்	61
3.	எந்த ஆவி?	32	33.	கர்த்தரைத் துதிப்பேன்	62
4.	கோழியா, கழுகா ?	33	34.	தன் தவறை உணராமல்	63
5.	மோசமான காலமா?	34	35.	நாமும் – தேவனும்	64
6.	நல்ல நியாயமா? நல்ல நோக்கமா ?	35	36.	நல்லதை மட்டும்	65
7.	நாம் யார்?	36	37.	பாவம் என்றால்...	66
8.	தேவ உறவில் வளர்த்தல்	37	38.	யார் ஆறுதல்?	67
9.	மகிழ்ச்சி எப்படி?	38	39.	தேவனுக்கேற்ற இலக்கு	68
10.	நம்பத்தக்கவர் யார்?	39	40.	ஐக்கியமே அவரின் பதில்	69
11.	அறிந்திருந்தும்	40	41.	கடினமானவை – ஆனால்	70
12.	உலகமும் உலகத்தாரும்	41	42.	எதிர்பார்ப்பை உணர்ந்து	71
13.	ஏன் மன்னிக்க வேண்டும்?	42	43.	தேவை தேவ நம்பிக்கை	72
14.	தேவனா? ஊழியனா?	43	44.	பொறாமை	73
15.	குறைகளைக் களைய	44	45.	சத்தமும், அமைதியும்	74
16.	கரிசனையோடு கேட்போம்	45	46.	அனுபவிக்கப்படாத வாழ்க்கை	75
17.	ஆலமரத்துப் பறவைகள்	46	47.	ஆராதனை சந்தோஷம்	76
18.	தேவன் சொல்லாததை	47	48.	கர்த்தர் நடத்திச் செல்வார்	77
19.	திருவிருந்து எதற்காக	48	49.	பிரதிஷ்டை	78
20.	அழகல்ல, அர்த்தம்	49	50.	குறைகளைச் சகித்தல்	79
21.	விமர்சனம் ஏற்போம்	50	51.	அனுபவங்களில்லாத கிறிஸ்தவம்	80
22.	புரிந்து கொண்டோமோ?	51	52.	நேரமில்லை	81
23.	அன்பை வெளிப்படுத்துவோம்	52	53.	அன்பு இல்லாவிடில்	82
24.	மன்னிக்கும் தேவன்	53	54.	வித்தியாசமாக யோசி	83
25.	குறைகாணல்	54	55.	நம்பத்தக்கது எது?	84
26.	பொறுமை அவசியம்	55	56.	பிள்ளையின் ஆசீர்வாதம்	85
27.	தேவனிடம் பகிர்ந்து கொண்டு	56	57.	அறிவு மட்டும் போதுமா?	86
28.	மறைக்கப்பட்ட கீறல்	57	58.	துக்கங்களுக்கும் முடிவுண்டு	87
29.	நீ எனக்கு வேண்டும்	58	59.	எப்படி வாழ்ந்தாலும்	88
30.	சொகுசான வாழ்க்கை	59			

நாள்	தலைப்பு	பக்கம்	நாள்	தலைப்பு	பக்கம்
60.	ஏற்கெனவே கேட்டது	89	91.	தவறான மாதிரி	120
61.	நாமே ஜெபிக்கலாம்	90	92.	தேவனுக்கு கனம்	121
62.	ஏமாற்றங்கள்	91	93.	தியாகமும் சந்தோஷமும்	122
63.	இயேசுவைப் பிரதிபலித்தல்	92	94.	வெறும் வழிபாடுகள்	123
64.	கோபம் வேண்டாம்	93	95.	விசுவாசச் சிறகுகள்	124
65.	வெற்றியும் தோல்வியும்	94	96.	கொண்டாட்டக் கிறிஸ்தவம்	125
66.	உலகச் சுவைகள்	95	97.	பக்தி தொடரட்டும்	126
67.	யாருக்கு அதிகப் பங்கு?	96	98.	நல்லதைப் பாராட்டுகிறோமா!	127
68.	யார் நண்பன்?	97	99.	பேதுருவின் இதயம்	128
69.	தவறான முடிவுகள்	98	100.	மனமாற்றம் தராத துக்கம்	129
70.	மற்றவர்களின் சுவை	99	101.	சிலுவை	130
71.	பழைய ஆவி?	100	102.	சிலுவை புனிதமா?	131
72.	உண்மையான தாழ்மை	101	103.	நீங்களும் தரிசிக்கலாம்	132
73.	சுத்தமும், பரிசுத்தமும்	102	104.	காணிக்கை	133
74.	பிரச்சனைகளைப் பாருங்கள்	103	105.	எவ்வளவு கற்றாலும்	134
75.	மீட்பின் செய்தி	104	106.	நினைவுகளில் ஒழுங்கு	135
76.	ராஜா வேடம்	105	107.	சாதனையா? சமாதானமா?	136
77.	அவர் போதுமானவர்	106	108.	நட்சத்திரங்கள் தோன்றும்	137
78.	எதைச் செய்தாலும்	107	109.	அனுபவங்கள்	138
79.	வாழ்ந்துகாட்டாவிடில்	108	110.	கிறிஸ்தவ சாட்சி	139
80.	பக்தர்களா ? பிள்ளைகளா ?	109	111.	கிருபையும் சத்தியமும்	140
81.	தற்காலிக நிவாரணம்	110	112.	பாவம் நிறைந்த உலகத்தில்	141
82.	நற்குணங்களும் அலட்சியமும்	111	113.	கடந்து வந்த பாதை	142
83.	நன்றி மறந்தாலும்	112	114.	வாரத்தில் ஒரு நாள்	143
84.	மனதில் செழிப்பு	113	115.	கண்ணாடி எதற்கு?	144
85.	பத்து சதவிகிதத் தீமை	114	116.	நீங்களும் ஊழியரே	145
86.	நல்ல நாட்களில்	115	117.	பயணத்தின் பாதை	146
87.	சரியான அளவீடுகள்	116	118.	நோக்கமில்லாமல்	147
88.	உயர்ந்த இலக்கை நோக்கி	117	119.	கேட்டும் பலனில்லை	148
89.	பகுத்தறிவு	118	120.	முதலாவது யார்?	149
90.	அன்பும், மரியாதையும்	119	121.	தேற்றிட யாருமில்லையோ!	150

நாள்	தலைப்பு	பக்கம்	நாள்	தலைப்பு	பக்கம்
122.	நன்மை செய்ய வேண்டும்	151	154.	போதனைகளும் தேவ உறவும்	183
123.	உண்மையை விடாமல்	152	155.	வேதம் ஏன் விளங்கவில்லை?	184
124.	ஏன் ஜெபிக்கிறேன்?	153	156.	நான் நம்பவில்லை	185
125.	தீமையும் நன்மையாக	154	157.	கலியாண வஸ்திரம்	186
126.	தங்க முலாம்	155	158.	நாம் நாய்க்குட்டிகளா?	187
127.	அழகான வடிவம்	156	159.	பொழுதுபோக்கு	188
128.	கடினம் ஏன்?	157	160.	பயன்படாத வாழ்வு	189
129.	அன்பும் தீர்மானமும்	158	161.	நற்செயலும், நற்பண்பும்	190
130.	அதுவும் அன்பே	159	162.	ஏன் எரிச்சல்?	191
131.	குடும்ப வாழ்வு	160	163.	பூரண நிலை	192
132.	சொல்வது சரியா?	161	164.	ஆச்சரியம்	193
133.	எது ஆசீர்வாதம்	162	165.	சும்மாயிருங்கள்	194
134.	மாற்றத்தை விரும்பணும்	163	166.	புரியாத விஷயங்கள்	195
135.	பாவத்தை ஜெயிக்க...	164	167.	கேட்கவும் வேண்டும்	196
136.	இழக்காவிடில்	165	168.	நம்மைச் சரிசெய்வோம்	197
137.	இலவசம் வேண்டாம்	166	169.	அர்ப்பணிக்க ஆயத்தம்	198
138.	வார்த்தையே செல்வம்	167	170.	திறமையும் உண்மையும்	199
139.	இரைச்சல்களின் நடுவில்	168	171.	மனித நேயம்	200
140.	நாம் பாவிகளா ?	169	172.	தவறான கணிப்பு	201
141.	மாயத் தோற்றங்கள்	170	173.	சூழ்நிலைப் பக்தி	202
142.	பயன்படாத வேத அறிவு	171	174.	குற்றம் தேடட்டும்	203
143.	வார்த்தையில் மட்டும் உண்மை	172	175.	அற்புதமும் அமைதியும்	204
144.	எதிர்க்க வேண்டும்	173	176.	யார் யாருக்காக?	205
145.	யாருக்கு ஜெப பாரம்?	174	177.	இந்தச் சிங்கம் கடிக்காது	206
146.	சிறு குறைவு	175	178.	மாதிரி அவசியம்	207
147.	கடந்தகால மகிமை	176	179.	அறியாமை	208
148.	எதற்காக மனந்திரும்புதல்	177	180.	சிந்தியுங்கள்	209
149.	பிறர் தயவும் தேவை	178	181.	அறிவா, அனுபவமா?	210
150.	தேவன் அன்பானவரா?	179	182.	யாருக்காகச் செய்கின்றீர்கள் ?	211
151.	மகிழ வைத்து மகிழ்வோம்	180			
152.	நல்ல ஒழுங்குகள் ஆனால்	181	183.	பாவ உணர்வு	212
153.	மனிதர்களை நோகாமல்	182	184.	பயிற்சி அவசியம்	213

நாள் தலைப்பு	பக்கம்
185. சுமையும் வேகமும்	214
186. அர்த்தங்களை அலட்சியம் செய்துவிட்டு	215
187. பிரிக்க இயலாதது	216
188. கடவுள் யார்?	217
189. குற்றம் சாட்டும் தகுதி	218
190. பிரிந்து சென்று	219
191. வல்லவரும் ஆலோசகரும்	220
192. 25-வது சுற்றில்	221
193. சிரமமும் சந்தோஷமும்	222
194. மனித உறவுகள் அவசியம்	223
195. கேள், செயல்படு	224
196. பயம் ஏன்?	225
197. குற்ற உணர்வு	226
198. தேவனை அறிதல்	227
199. கோபம் மட்டுமல்ல	228
200. பாவத்தை மறைக்காமல்	229
201. சுபாவங்களே காரணம்	230
202. உண்மை	231
203. புகழ்ச்சி யாருக்கு?	232
204. பணம் பாவமா?	233
205. மன்னிப்பின் அவசியம்	234
206. நல்லதை நினைக்கனும்	235
207. தேவையா, ஆசையா?	236
208. தேவசித்தம் அறிவது எப்படி?	237
209. தேவையற்ற பயம்	238
210. தீர்மானம்	239
211. ஆராய்தல் அவசியம்	240
212. தேவனை அறிவோம்	241
213. உணர்வுகளை இழந்தால்	242
214. பலன் எதிர்பாராமல்	243
215. ஐக்கியமே முக்கியம்	244
216. எவ்விடத்திலும்	245
217. ஏன் வெட்கம்?	246
218. பிறரின் வீழ்ச்சியில்	247
219. வெளியே தெரியட்டும்	248
220. சகிப்பதும் அவசியம்	249
221. பக்தி முயற்சிகள்	250
222. பலவீனம் ஒரு பலம்	251
223. தேட வேண்டியது எது?	252
224. பலனை எதிர்பார்த்து	253
225. ஐக்கியத்தில் பிரச்சினை	254
226. யார் அன்பானவர்கள்?	255
227. சாலொமோன் அனுபவம்	256
228. சுதந்திரம்	257
229. மாற்றத்திற்கு சாட்சி	258
230. எண்ணங்கள் மாறவேண்டும்	259
231. உண்மையை அடக்காதே	260
232. துன்பமும் தேவையே	261
233. கர்த்தருடைய கண்கள்	262
234. வசனப் பலகை	263
235. சுத்தமும் அழகும்	264
236. கர்த்தருடைய பந்தி	265
237. அவசர முடிவுகள்	266
238. பாவம் பெருகினாலும்	267
239. நியாயமா? நோக்கமா?	268
240. மனம் மாறவில்லையே	269
241. கிறிஸ்தவன்	270
242. ஏன் பலன்கள் இல்லை?	271
243. பாடங்கள்	272
244. தினசரி அனுபவம்	273
245. ஜெபம் மட்டும் போதுமா ?	274
246. தீயதை மட்டுமே	

நாள்	தலைப்பு	பக்கம்
	கவனியாமல்	275
247.	தேவ ஊழியம்	276
248.	மாறுதல்கள்	277
249.	ஆசிரியர் என்பவர்	278
250.	அதிகப் பசி	279
251.	பணக்காரப் பிச்சைக்காரன்	280
252.	வெற்றி என்றால்...	281
253.	அறிவும் அனுபவமும்	282
254.	இது வல்லமையா?	283
255.	குடும்ப ஜெபம்	284
256.	தவறுகளை மறைக்காமல்	285
257.	சரியா? தவறா?	286
258.	முயற்சியும் வேண்டும்	287
259.	கட்டுப்பாடுகள்	288
260.	தரிசனம் தேவை	289
261.	தவறான எண்ணத்தை அகற்றிட	290
262.	பிறர்மேல் அன்பு	291
263.	அதிகாரமில்லாத மரியாதை	292
264.	நன்மைக்கேதுவாக	293
265.	கலாச்சாரத் தாக்கம்	294
266.	முன்மாதிரி	295
267.	தாழ்மையா? பெருமையா?	296
268.	இருதயத்தைக் காத்துக் கொள்ளுங்கள்	297
269.	அழுதது போதும்	298
270.	எது மரியாதை?	299
271.	பொறுமை	300
272.	நம்பிக்கையுடன்	301
273.	சுடப்பட்ட பாண்டம்	302
274.	மந்தநிலை	303
275.	வேதாகமம் எதற்கு	304
276.	அவருடைய ஐக்கியத்தினாலே	305
277.	இதுவா ஆராதனை?	306
278.	ஆசிரியர்	307
279.	மெல்லிய சத்தம்	308
280.	நண்பர்கள் யார்?	309
281.	வாழ்கின்றீர்களா?	310
282.	பணமா ? இயேசுவா ?	311
283.	எது உண்மையான அடையாளம்?	312
284.	பக்தியை அல்ல	313
285.	விட்டுக் கொடுத்தலின் பலன்	314
286.	யார் யூதாஸ்?	315
287.	கரடு முரடான சாலை	316
288.	பலன் தராத நல்ல பழக்கம்	317
289.	தாழ்மையிலும் பெருமை	318
290.	மதுபானமும் மதியீனமும்	319
291.	மகிமை வெளிப்பட்டால்	320
292.	யார் காரணம்?	321
293.	இனிமையும் தரமும்	322
294.	தேவ ஐக்கியத்தின் அதிகத் தேவை	323
295.	மாறுகின்ற உணர்வுகள்	324
296.	அவரை அறிந்திருந்தால்	325
297.	ஒரே ஒரு தவறு	326
298.	முதலில் மருத்துவம்	327
299.	காத்திருப்போம்	328
300.	தேவையும் பயன்பாடும்	329
301.	தேவனுக்காக வாழ்தல்	330
302.	பிரியம் இல்லையேல்	331
303.	வருவது வரட்டும்	332
304.	பணமா? குடும்ப வாழ்வா?	333
305.	புண்படுவது ஏன்?	334
306.	இயந்திரங்கள்	335

நாள்	தலைப்பு	பக்கம்	நாள்	தலைப்பு	பக்கம்
307.	நற்குணம் தேவை	336	337.	அவசியமானவர்கள்	366
308.	தவறை அறிதல்	337	338.	ஏன் சோதனைகள்?	367
309.	தோல்விகள்	338	339.	வாழப் பழகலாம்	368
310.	உண்மையான கனிகள்	339	340.	உயர்ந்த வாழ்க்கை	369
311.	பயன்தராத நியாயங்கள்	340	341.	ஆண் – பெண் நட்பு	370
312.	கனிகள் எப்படி ஏற்படும்?	341	342.	சுவைக்கேற்ற போதனைகள்	371
313.	அழகான முகம், அழகற்ற வாழ்க்கை	342	343.	தடை செய்வது எது?	372
314.	பலவிதக் கண்ணாடிகள்	343	344.	நம்மை மாற்றுவோம்	373
315.	தேவன் தங்குமிடம்	344	345.	தேவாலயம்	374
316.	பிரச்சினைக்குத் தீர்வு	345	346.	நியாயங்கள் இருந்தாலும்	375
317.	அறிவு அலட்சியம் செய்யப்படுகிறது	346	347.	அடுத்த கட்டம் வரும்	376
318.	அதிக ஆசையினால்	347	348.	தங்க முலாம்	377
319.	மீண்டும் பாவ வாசனை	348	349.	ஆராய்வது அவசியம்	378
320.	வெற்றி தோல்விகள்	349	350.	இன்னுமொரு ஆசீர்வாதம்	379
321.	செயல்பட வேண்டும்	350	351.	ஆடம்பர வாழ்வு ஆகாது	380
322.	இது நம்முடையதல்ல	351	352.	தேவ திட்டம் அறியாவிடில்	381
323.	சுவையான இச்சைகள்	352	353.	நன்மை செய்யப் பழகுங்கள்	382
324.	விரும்புவதும் பின்பற்றுவதும்	353	354.	வாழ்வு பயனற்றதா?	383
325.	அனுபவங்கள் எவ்வளவு?	354	355.	எதற்காகச் ஜெபம்	384
326.	சிறு தோல்விகள்	355	356.	கட்டுப்பாட்டிற்குள்	385
327.	ஆபரணங்கள்	356	357.	குறை கூறும் ஆவி	386
328.	இவைகளும் தவறுகளே	357	358.	சூரியனும் விளக்கும்	387
329.	ஆதாரம் என்ன?	358	359.	சுத்திகரிப்பு	388
330.	சுவை உணர்ந்த நாவு	359	360.	சந்தோஷப்படுத்துதல்	389
331.	பாவியாக மரித்தால்	360	361.	உறவுகள்	390
332.	அசௌகரியங்கள்	361	362.	நாம் செயல்படுகிறோமா?	391
333.	உணர்ச்சி நிலை	362	363.	யாரை நோக்கி முதலில்	392
334.	மாதிரி வாழ்க்கை	363	364.	இறங்கி விடாதீர்	393
335.	கட்டளைகள் எதற்காக?	364	365.	எதிரிகள்	394
336.	எது செல்வம் ?	365	366.	ஆயத்தமாவோம்	395

இந்த தியான நூலை எப்படி உபயோகிக்கலாம்?

☞ இந்த தியான நூலின் தியானங்களை தினமும் ஒன்று வீதம் மட்டும் படிப்பது அதிகப் பயனுள்ளதாயிருக்கும்.

☞ உங்கள் குடும்ப ஜெபங்களில் அந்தந்த நாளுக்குரிய தியானங்களை வாசியுங்கள்.

☞ ஒவ்வொரு நாள் தியானச் சிந்தனைகளையும் இரண்டு முறை படியுங்கள். அப்போது கருத்து ஆழமாக இதயத்தில் பதியும்.

☞ ஒவ்வொரு நாள் தியானப் பகுதிகள் முலம் நீங்கள் கற்றுக் கொண்டவற்றையும் உணர்ந்து கொண்டவற்றையும் பிறரோடு பகிர்ந்துக் கொள்ளுங்கள்.

☞ இந்த தியான நூல் தினமும் ஒரு தெய்வீகச் சிந்தனையை உங்களுக்குத் தரவேண்டுமென்பதையும், உங்களின் தியான வாழ்க்கையை ஊக்குவிக்க வேண்டுமென்பதயும் முக்கிய நோக்கமாகக் கொண்டதாகும். இந்த தியான நூலின் சிந்தனையைப் படிப்பதோ, அந்தந்த நாளுக்கென்று தரப்பட்டுள்ள வேதப் பகுதியை மட்டுமே படிப்பதே உங்களின் வேத தியானத்திற்குப் போது மானதல்ல. அதிகமாக வேதப்பகுதிகளைப் படித்து அதிகமான நேரங்களை தியானத்திற்கென்று செலவழியுங்கள்.

☞ இந்த தியான நூலின் ஒரு பக்கத்தை தினமும் படிப்பதால் மட்டும் உங்களுக்கு எந்த பிரயோஜனமும் ஏற்படாது. படியுங்கள், சிந்தியுங்கள், பின்பற்றுங்கள். அப்போதுதான் ஆசீர்வாதமாயிருக்கும்.

☞ இந்த தியான நூலை காலையிலோ மாலையிலோதான் படிக்க வேண்டும் என்ற கட்டாயமில்லை. தினமும் ஏதாவது ஒரு நேரத்தில் படிக்கத் தவறா திருந்தால் போதும்.

☞ நீங்கள் படித்து விசேஷமாக உள்ளத்தில் தொடப்பட்ட அனுபவங்களை, என்னோடு பகிர்ந்து கொண்டால் அது இந்த ஊழியத்தில் நல்ல உற்சாக மூட்டுதலாக இருக்கும்.

☞ இந்த தியான நூல் உங்களுக்கு ஆசீர்வாதமாயிருப்பதாக உணர்ந்தால் குறைந்தபட்சம் ஒருவருக்காவது தியான நூலை அறிமுகம் செய்து வையுங்கள்.

நினைவில் நின்றவை

சந்தியுங்கள் இந்த நாளை தேவனுடன்

தினசரி தியான நூல்

A DAILY DEVOTIONAL FOR YOUR SPIRITUAL GROWTH

ஜனவரி 1
தினமும் தேவன்

மத்தேயு 6 : 7 -21

எங்களுக்கு வேண்டிய ஆகாரத்தை இன்று எங்களுக்குத் தாரும்
மத்தேயு 6 : 11

சிலர் வருடத்தின் முதல்நாள் பக்தியோடு ஆலயத்திற்குச் சென்று தேவ அருளைத் தேடுவார்கள். இந்த ஆண்டு தங்களுக்கு ஆசீர்வாதமாயிருக்க வேண்டும் என்று பிரார்த்தனை செய்வார்கள். ஆனால், மீண்டும் அவர்கள் தேவனைத் தேடுவது அடுத்த புதிய ஆண்டின் முதல் நாளில்தான். சிலர் புதிய ஆண்டின் அதிகாலை வேளையில்தான் தேவனைத் தேடுவதற்கும், அவரிடமிருந்து வாக்குத்தத்தம் ஒன்றைப் பெறுவதற்கும் அதிக ஆவலாயிருப்பார்கள். ஆனால், அதற்குப் பின்பு அதே உத்வேகத்துடன் தேவனை தேடுவதில்லை. வருடத்தின் முதல்நாள் தேவ அருளையும் ஆசீர்வாதத்தையும் பெற்றிட நாம் காண்பிக்கும் ஆர்வமும், வாஞ்சையும் போகப் போகத் தணிந்து போவது ஏன்?

நாம் தேவ நன்மைகளை வருட அளவில் கேட்கின்றோம். ஆனால், தேவனோ ஆசீர்வாதங்களை நாள் கணக்கிலேயே தருகின்றார். எனவேதான், பரமண்டல ஜெபத்தைக் கற்றுத்தந்த இயேசு, எங்களுக்கு வேண்டிய ஆகாரத்தை "இன்று எங்களுக்குத் தாரும்" என்று ஜெபிக்கச் சொன்னார். அதாவது தேவன் தினமும் நமக்குத் தேவைப்படுகிறார். தினமும் அவருடைய உதவியும், ஆசீர்வாதமும் நமக்குத் தேவைப்படுகிறது. எனவே, ஒவ்வொரு நாளும் நாம் தேவனைத் தேடவும், அவருடைய நன்மைகளைத் தேடவும் மிகவும் தீவிரமாயிருக்க வேண்டும்.

ஒரு வருடத்திற்குரிய உணவை நாம் ஒன்றாக உண்ண முடியாது. ஒரு வருடத்திற்குரிய ஆசீர்வாதத்தை நாம் சேர்த்துப் பெற முடியாது. அது தினமும் தேடப்பட வேண்டும். இன்று மட்டுமே நமக்கு சொந்தம். நாளைய தினம் தேவனுடைய கையில். நாளைய தினம் வாழ்வதற்காகத் தரப்பட்டால் அந்த நாளைய தினத்தில் நாளைய தின நன்மைகளுக்காக வேண்டுதல் செய்ய வேண்டும்.

காலைதோறும் அவருடைய கிருபை புதிதாயிருக்கின்றது. எனவே, காலைதோறும் நாம் தேவகிருபைக்காகவும், தேவவழிநடத்துதலுக்காகவும் அவரை புதிய வேகத்தோடும் உண்மையான மனதோடும் தேட வேண்டும். தினமும் அவரைச் சார்ந்திருக்கிறோம் என்பதையும், தினமும் அவருடைய உறவை நம்பியே வாழ்கின்றோம் என்பதையும் நம்முடைய தினசரித் தேடல்கள் தெளிவாகச் சொல்ல வேண்டும். சிலர் வருடத் துவக்கத்திலேயே இந்த வருடம் நல்ல வருடமா? மோசமான வருடமா? என்பதைக் கணித்து விடுகின்றனர். ஆனால், இன்று நாம் எப்படி தேவனுக்கு முன்பாக இருப்போமோ அப்படியே இந்த வருடமும் இருக்கும். தேவன்தாமே இனிவரும் ஒவ்வொரு நாளிலும் உங்களோடிருந்து உங்களை நடத்துவாராக.

சிந்தனைக்கு...

இறைவனின் எதிர்பார்ப்புகளுக்கு ஏற்றவனாயிரு. அதுவே இறைவனிடம் நீ எதிர்பார்ப்பவைகளைப் பெறுவதற்கான வழி.

ஜனவரி 2
பெரிய மீன்

எபிரெயர் 13:1-14

உங்களுக்கு இருக்கிறவைகள் போதுமென்று எண்ணுங்கள்
எபிரெயர் 13:5

ஒரு மனிதன் தன்னுடைய சிறிய படகைக் கொண்டு எளிய முறையில் மீன் பிடிக்கச் சென்றான். அன்று அவனுடைய வலையில் மிகப்பெரிய மீன் ஒன்று சிக்கிக் கொண்டது. ஆனால், அந்தச் சிறிய படகின் மூலம் அந்தப் பெரிய மீனைக் கரைக்கு கொண்டு வருவது மிகவும் கடினம். ஆயினும், பேராசையின் விளைவாக அந்தப் பெரிய மீனை அவன் கரைக் கொண்டு வர முயற்சித்தான்.

அது மிகவும் கடினமாயிருந்தபடியால் நீண்டநேரம் முயற்சித்து களைத்துக் போனான். இறுதியில் வேறு வழியின்றி அதனை வலையுடன் கடலில் விட்டுவிட்டு உயிர் பிழைக்க கரைவந்து சேர்ந்தான். வழக்கமாகப் பிடிக்கும் கொஞ்சம் மீன்களும் அன்று அவனுக்கு நஷ்டமாயின.

சில நேரங்களில் வாழ்க்கையில் பெரிய பெரிய ஆசைகளும் பெரிய பெரிய கனவுகளும் நம்முடைய இருதயத்தில் புகுந்து நம்மை பாரமாக்கி விடுகிறது. பெரிய அளவில் ஆசைப்படத் துவங்கியதால் சின்னச் சின்ன ஆசைகளை நிறைவேற்றும் வழியும் தடைபட்டுப் போகிறது.

ஆபிரகாமோடு தேவ தரிசனத்தின் பாதையில் பயணம் செய்த லோத்துவின் இருதயத்தில் பெரிய பெரிய ஆசைகள் புகுந்தது. எனவே, ஆபிரகாமின் நல்ல உறவை இழக்க நேரிட்டது. அதனுடைய விளைவாக பெருஞ்செல்வங்களையும் வளங்களையும் தக்க வைக்க முடியாமல் போனதோடு, வாழ்க்கையின் இறுதி நாட்களை மிகுந்த மன வியாகுலத்தோடு முடிக்க நேரிட்டது.

ஏவாளின் இருதயத்தில் பிசாசானவன் மிகப் பெரிய ஆசையை நுழைய விட்டான். அவளும் அதை ஏற்றுக்கொண்டாள். தேவனைப் போல மாறினால் என்ன என்ற அவளுடைய ஆசை தேவன் அவர்களுக்காக வைத்திருந்த உயர்ந்த ஆசீர்வாதங்களை இழக்கச் செய்தது. எண்ணியதும் ஈடேறாமல் போனது.

நன்றாக இயங்கிக்கொண்டிருக்கின்ற சிலரின் உள்ளங்களில் பண ஆசை, பொருளாசை, புகழாசை, ஆடம்பர ஆசை ஆகியவைகள் புகுந்துவிடுகின்றன. அவைகள் சுமைகளாக மாறி வழக்கமாக அவர்கள் அனுபவித்துக்கொண்டிருந்த நல்ல ஆசீர்வாதங்களையும் இழக்கச் செய்துவிடுகின்றன.

கேயாசியின் உள்ளத்தில் புகுந்துவிட்ட திடீர் பொருளாசை, அவனுடைய நல்ல நிலைமையை இழக்கச் செய்ததோடு குஷ்டரோகியாகவும் அவனை மாறச் செய்தது. உயர்வுகளைக் குறித்த ஆசைகள் தவறல்ல. ஆனால், அவைகள் பேராசைகளின் முகமூடிகளாக மாறிவிடாதபடி கவனமாயிருப்போம்.

சிந்தனைக்கு...

உன்னிடமுள்ள நல்லதை பிறர் பார்க்கும்வரை பொறுமையாயிரு.
தீயதையோ பிறர் பார்க்குமுன் அகற்றிட அவசரமாயிரு.

ஜனவரி 3

எந்த ஆவி?

பிலிப்பியர் 3:10 -21

அவர்கள் பூமிக்கடுத்தவைகளைச் சிந்திக்கிறார்கள்...
பிலிப்பியர் 3 : 19

ஒரு சிறுவன் கடற்கரையோரம் விற்ற இரண்டு பலூன்களை வாங்கி விளையாடிக் கொண்டிருந்தான். கவனக் குறைவினால் பலூன்கள் அவனுடைய கையிலிருந்து நழுவிச் சென்று விட்டன. அதில் ஒரு பலூன் மேல்நோக்கிச் சென்று கொண்டிருந்தது. இன்னொன்று தாழ விழுந்து உருண்டது. ஏன் இந்த வித்தியாசம்? அதற்குள் அடைக்கப்பட்டிருந்த வாயுவின் தன்மைதான் வித்தியாசத்தை ஏற்படுத்தியது. ஒரு பலூனுக்குள் சாதாரண வாயு. அது கீழ்நோக்கிச் சென்றது. இன்னொன்றிற்குள் உயரே உந்தித் தள்ளும் தன்மையுடைய வாயு. அது மேல் நோக்கிச் சென்றது.

நாம் தேவனை நம்புகின்றோமா, நம்பவில்லையா? நாம் பக்தியாய் வாழ்கின்றோமா, வாழவில்லையா? என்ற கேள்விகளைவிட நமக்குள் என்ன ஆவி இருக்கின்றது என்ற கேள்வியே முக்கியமானது. சிலர் பக்தி விஷயத்தில் பிரமாதமாகக் காட்சியளிக்கின்றார்கள். ஆனால் ஆசை, இலக்கு, குணங்கள், அணுகுமுறைகள், நடந்து கொள்கின்ற விதங்கள் யாவும் கீழ்நோக்கும் தன்மை யுடையதாக இருக்கிறது. அவர்கள் விண்ணுக்குரியவைகளைக் குறித்து அதிகமாகப் பேசுகின்றார்கள். ஆனால், அவர்களின் மனமோ மண்ணுக்குரிய காரியங்களை நோக்கி, கீழே கீழே செல்லுகின்றன.

ஆபிரகாமும், லோத்துவும் பக்திப் பாதையில்தான் நடந்தார்கள். ஆனால், ஆபிரகாமின் பார்வை தேவன் விரும்புகின்ற விதமாக மேல் நோக்கியிருந்தது. லோத்துவின் பார்வையோ அவனுடைய சுயம் விரும்பியபடி மண்ணுக்குரிய செல்வ வளங்களின் மேலேயே பதிந்திருந்தது. ஏனென்றால், ஆபிரகாமுக்குள் தேவ ஆவியின் தூண்டுதல் இருந்தது. அவனுடைய தரிசனம் மேல் நோக்கியதாக இருந்தது. ஆனால், லோத்திற்குள் சுய ஆவியின் நடத்துதலே இருந்தது. எனவே, அவன் பக்தி மிக்க ஒரு மனிதனோடு பக்திமிக்க ஒரு பாதையில் நடந்த போதிலும், மனதின் தரிசனமோ கீழ்நோக்கியே இருந்தது.

சிலர், பக்தி தொடர்பான பல காரியங்களோடு தங்களை இணைத்திருப்பது உண்மை. ஆயினும், அவர்களின் இருதயம் பணம், பொருள், இன்பம், புகழ், அந்தஸ்து, கௌரவம், பதவி என பூமிக்குரிய காரியங்களை நோக்கி தாழ்வானதொரு தி சை நோக்கியே செல்கிறது. அவர்களின் பாதை பக்திப் பாதைபோலத் தோன்றினாலும், மனமோ உயர்ந்த ஆவிக்குரிய இலக்குகளை நோக்கிச் செல்ல வில்லை. ஏனென்றால், அவர்களுக்குள் உண்மையான தேவ ஆவி இல்லை. எனவே, அவர்களால் உயர்ந்த குணாதிசயங்களோடும் உன்னத இலக்குகளோடும் மேல்நோக்கிப் பார்த்துப் போக இயலவில்லை.

சிந்தனைக்கு...

விரும்பத்தக்கவைகளை மனிதன் தேடிச் செல்லாததால்
விரும்பத்தகாதவைகள் அவனைத் தேடி வருகின்றன.

ஜனவரி 4

கோழியா, கழுகா ?

ஏசாயா 40 : 13- 31

கழுகுகளைப்போலச் செட்டைகளை அடித்து
ஏசாயா 40:31

ஆடு மேய்க்கும் சிறுவன் ஒருவன் ஒரு மலைப்பகுதியில் கழுகின் முட்டை ஒன்றைக் கண்டான். அதனை கோழி முட்டைகளோடு வைத்து அடைகாக்கச் செய்தான். கோழிக் குஞ்சுகளோடு கழுகு முட்டையும் பொரித்து கழுகுக் குஞ்சு வந்தது. கழுகுக் குஞ்சு கோழிக் குஞ்சுகளோடு வளர்ந்ததால் தன்னையும் கோழிக்குஞ்சு என்றே எண்ணியது. கழுகுக் குஞ்சு கோழிக்குஞ்சைப் போல குப்பையைக் கிளறிக் கொண்டிருந்தது.

ஒரு நாள் உயரத்தில் பறந்துவிட்டு சற்று தூரத்தில் வந்து இளைப்பாறிய கழுகு ஒன்றைக் கண்டது. அந்த கழுகைப் போலவே நானும் இருக்கிறேன். நான் ஏன் அதைப் போல உயரமான இடங்களில் பறக்கவில்லை என்று யோசித்தது. அந்தக் கழுகைப் போல அதுவும் பறக்க முயன்றது. அங்கே அதனால் பறக்க முடிந்தது.

நம்மில் அநேகருக்கு நாம் தேவனுடைய பிள்ளைகள் என்ற விழிப்புணர்வு இல்லை. நாம் இந்த உலகத்தாரைப் போல வாழாமல், நம்முடைய உன்னத விசுவாசச் சிறகுகளை அடித்து உயர்ந்தவிதமாக வாழ அழைக்கப்பட்டவர்கள் என்பதை உணர்வதில்லை. உலகச் சூழ்நிலைகளில் வாழ்ந்து பழகிவிட்டதால், உலகத்திற் கேற்றபடியேதான் வாழ இயலும் என்று எண்ணி விடுகின்றோம்.

பவுல், பேதுரு, யோவான் ஆகியோரின் உன்னதமான வாழ்க்கைச் சாட்சிகளை வேதாகமத்தில் படித்து, அவர்கள் பரிசுத்தவான்கள் என்று மெச்சிக் கொள்கின்றோம். வில்லியம் கேரி, ஹட்சன் டெய்லர், டேவிட் லிவிங்ஸ்டன், ஜார்ஜ் முல்லர் போன்ற சரித்திரப் பிரசித்தி பெற்ற பரிசுத்தவான்களின் அனுபவ சாட்சிகளை வாசித்து ஆஹா.. எவ்வளவு பெரிய தேவ மனிதர்கள் என்று புகழ்ந்து பேசுகிறோம். அவர்களின் அழகான வாழ்க்கையைக்கண்டு ஆச்சரியப்படும் நாம், ஏன் சீர்சிறப் பற்ற ஆவிக்குரிய வாழ்க்கையை வாழ்கின்றோம்?

அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட வேதாகமம், உபதேசம், பரிசுத்த ஆவியானவர், வல்லமை, தேவ உறவு ஆகிய யாவும் நமக்கும் தேவன் தருகின்றாரே. நாம், ஏன் கழுகைப் போல பறக்காமல் கோழிகளைப் போல குப்பைகளை கிளறிக் கொண்டிருக் கின்றோம்? ஆம். நாம் உயரத்தில் பறப்பதற்காகப் படைக்கப்பட்ட கழுகுகள் என்பதைக் கண்டபின்பும், கோழிகளைப் போல வாழ்வதை வெறுத்து விலகி வரவிரும்ப வில்லை. உணர்வடைவோம், கழுகு போல பறக்க கர்த்தர் உங்களை அழைக்கின்றார்.

சிந்தனைக்கு...

வெற்றி என்பது நேற்று நடந்ததின் நினைவு அல்ல
இன்றைய தினத்தின் நிஜமாக அது இருக்க வேண்டும்.

ஜனவரி 5

மோசமான காலமா?

சங்கீதம் 102:1-28

தனித்திருக்கும் குருவியைப் போல் இருக்கிறேன்.
சங்கீதம் 102:7

வாழ்க்கையில் தனித்துவிடப்படும் காலங்கள் கசப்பானவைதான். நண்பர்கள், உறவினர்கள், தெரிந்தவர்கள், சபை மக்கள் என பலர் இருந்தும் யாரும் ஒரு ஆதரவு தராமல் தனியே விட்டுவிடுகின்ற ஒரு நேரம் மிகவும் விசனமானதுதான். தேவன் யாரைக் கொண்டாவது என்னை தேற்றியிருக்கலாமே, என்று பரிதவிக்கின்ற நேரங்கள் மிகவும் வேதனையானவைதான். இரவும் பகலும் தேவனை நோக்கிக் கூப்பிடும் எனக்கு, சற்று ஆறுதலாக ஒருவரைக்கூட தேவன் காட்டவில்லையே என்று புலம்ப நேரிடுகின்ற வேளைகள், மிகுந்த சோர்வுக்குரியவைதான்.

ஆனால், தேவ கிருபையை மட்டும் சார்ந்து நின்று பழகுவதற்காக தேவன் இப்படிப்பட்ட ஒரு நேரத்தை நாம் காணச் செய்கின்றார் என்பது உண்மை. சற்று ஆதரவாகச் செயல்பட யாரும் இல்லாத ஒரு நேரத்தில்தான், தேவனைத் தவிர யாரும் சார்ந்து கொள்ள இல்லை என்பது தெரியவரும். அது மோசமான ஒரு வேளை அல்ல. எந்த ஒரு சூழ்நிலையிலும் தைரியமாக நம்பிக்கையோடு சாய்ந்து இளைப்பாற ஒருவர் உண்டு என்ற நம்பிக்கை நிலைபெறும் வேளை அதுதான்.

சற்று ஆறுதலாக, ஆதரவாக ஒருவராவது எனக்காகக் கிடைத்தால் நலமாயிருக்குமே என்று பரிதவித்த நாட்களை நான் நினைத்துப் பார்க்கின்றேன். யாரும் அது என் வாழ்க்கையின் மிக மிக மோசமான காலங்கள் என எண்ணினேன். இல்லை. இல்லவே இல்லை. அதுதான் என் வாழ்க்கையின் மிக நல்ல காலங்கள் என்பதை மிக விரைவில் உணர்ந்தேன். ஏனென்றால், இயேசுவின் ஐக்கியமும் ஆதரவும் மட்டுமே போதுமானது என்பதையும், இனி வாழ்வின் இறுதிநாள் வரையிலும் அவருடைய ஐக்கியத்தினால் தலை நிமிர்ந்து தைரியமாய் நிற்க முடியும் என்ற நம்பிக்கையை அந்த மோசமான காலங்கள்தான் எனக்குள் உறுதிப்படுத்தியது. ஆகையால்தான் இன்றும் சகோதரனே, சகோதரியே சாய்ந்து கொள்ள உனக்கு ஒரு சாய்விடமும் பூமியில் இல்லாமல் போனாலும், இயேசு வின்மேல் சாய்ந்து உன் ஜீவித கால முழுவதும் நம்பிக்கையோடு நீ வாழ முடியும் என்று என்னால் நிச்சயத்தோடு கூற முடிகிறது.

ஆம். யோசேப்பிற்கும், தாவீதுக்கும் அப்படிப்பட்ட காலங்கள் இருந்தன. அவை மோசமான காலங்கள் என்ற தோற்றமுடையவை. ஆனால், அவர்கள் விசுவாச வீரர்களின் பட்டியலில் இடம் பிடிப்பதற்கு ஏதுவாக இருந்தவை அந்த தனித்துவிடப்பட்ட காலங்கள்தான். ஆம். உன்னுடைய உலகத்தில் உனக்காக ஒருவரைக் கூடப் பார்க்க முடியவில்லையா? இது மோசமான காலம் அல்ல. நல்ல காலம். அதோ ஒருவர் உனக்காக ஆதவு தர உன்னைப் பார்த்துக் கொண்டேயிருக்கிறார்.

சிந்தனைக்கு...

அரைகுறை அன்பாளர்களின் ஆறுதலுக்காக ஏங்காதே. பூரண அன்பாளராம் கர்த்தரின் சமுகத்தை விட்டு ஒருபோதும் நீங்காதே.

ஜனவரி 6

நல்ல நியாயமா? நல்ல நோக்கமா ?

ஆதியாகமம் 13:1-18

வாக்குவாதம் வேண்டாம் நாம் சகோதரர் ..
ஆதியாகமம் 13:8

ஆற்றைக் கடந்து அக்கரை செல்லச் சிரமப்பட்ட கிராம மக்களுக்காக ஓடம் ஒன்றை உருவாக்க கிராமத்தைச் சேர்ந்த சிலர் முன்வந்தனர். ஓடமும் செய்து முடிக்கப்பட்டது. அக்கரைக்கு அதில் செல்ல ஜனங்களும் காத்திருந்தனர். ஆனால், அந்த ஓடத்தை நிர்வாகம் செய்வது யார் என்ற கேள்வி எழுந்தது. ஓடம் உருவாக்கும் எண்ணம் எங்களுக்குத்தான் வந்தது. எனவே ஓடத்தை நாங்கள் நிர்வாகிப்போம் என்றனர் சிலர். அதற்கு மரம் கொடுத்தவர்கள் நாங்கள், எனவே, ஓடத்தை நாங்களே நிர்வாகம் பண்ணுவோம் என்றனர் சிலர். ஓடத்தை நாங்கள் திறமையாக வடி வமைத்தோம், எனவே, நாங்களே நிர்வாகம் பண்ணுவோம் என்றனர் சிலர். இல்லை, ஓடத்தை எங்களுக்குத்தான் ஓட்டத் தெரியும். எனவே, ஓடம் எங்கள் பொறுப்பிலேயே இருக்கவேண்டும் என்றனர் சிலர்.

இங்கே ஒவ்வொரு பிரிவினரும் சொன்ன நியாயமும் சரியானதுதான். ஆனால், அனைவருடைய நியாயங்களும் சரியாக இருந்தும் ஓடமோ நகரவில்லை, நோக்கமும் நிறைவேறவில்லை. சில நேரங்களில் நம்முடைய பக்கத்தில் உள்ள நல்ல நியாயங்கள்கூட, நல்ல நோக்கங்களுக்குத் தடையாகி விடுகின்றன. நல்ல நியாயங்களைக்கூட நல்ல நோக்கங்களுக்காக விட்டுக்கொடுக்க ஆயத்தமாகாவிட் டால், நல்ல விளைவுகள் ஏற்படாது. சில குடும்பங்களிலே கணவன் பக்கமும் நல்ல நியாயம் உள்ளது. மனைவி பக்கமும் நல்ல நியாயம் உள்ளது. ஆனால், குடும்பமோ சமாதானமற்று உடைந்து போகிறது. ஏனென்றால், என் நியாயம் சரியானது, நான் இறங்கி வரத் தேவையில்லை என்ற மனநிலைதான். சில சபைகளில், ஊழிய அமைப்புகளில், நிர்வாகக் குழுக்களில் இதே பிரச்சினைதான்.

ஒவ்வொருவரும் தங்கள் பக்கத்திலுள்ள சரியான அம்சங்களைப் பார்த்து அவைகளுக்காகப் போராடுவதிலே குறியாயிருப்பதால், நல்ல பயன்கள் இல்லாமல் போகிறது. ஆபிரகாம் லோத்துவின் விஷயத்தில் தன்னுடைய நல்ல நியாயத்தை விட்டுக்கொடுத்தான். ஆகாரின் விஷயத்தில் சாராளிடம் தன்னுடைய நியாயத்தை விட்டுக்கொடுத்தான். எனவேதான் அங்கே தேவநோக்கம் நிறைவேற வழி ஏற்பட்டது.

சவுல் விஷயத்தில் தாவீது தன்னுடைய நியாயத்திற்காகப் போராடவில்லை. தேவ நியாயத்திற்காக அவன் சவுலுக்கு முன்பாக இறங்கிப் போகத் தயாராயிருந்தான். எனவே, தேவநோக்கம் நிறைவேறி தாவீது உயர்த்தப்பட்டான். உங்களின் நல்ல நியாயத்தை தேவனைப் பிரியப்படுத்தும் உணர்வோடு, நல்ல ஒரு நோக்கம் நிறை வேறுவதற்கு ஏதுவாக விட்டுக்கொடுங்கள். அங்கே தேவன் மகிமைப்படுவார்.

சிந்தனைக்கு...

தாழ்மையுள்ளவன் தலைகுனியத் தயாராயிருக்கிறான். ஆனாலும் தேவன் அவனைத் தலைநிமிர்ந்து நிற்க வைக்கிறார்.

ஜனவரி 7

நாம் யார்?

யோவான் 7 : 11-24

சிலர் அவர் நல்லவர் என்றார்கள்.
யோவான் 7 : 12

சாது ஒருவர் தன்னுடைய சீடன் ஒருவனுடன் போய்க் கொண்டிருந்தார். போகும் வழியில் ஒருவன் அவரைக் கண்டான். அந்த சாதுவை அவன் வானளாவப் புகழ்ந்தான். அவரை ஒரு தெய்வம் என்றான். ஆனால், சாது பதில் எதுவும் பேசவில் லை. சந்தோஷம் எதையும் முகத்தில் பிரதிபலிக்கவில்லை.

சற்று தூரம் சென்ற பிறகு இன்னொரு மனிதன் அவரைக் கண்டான். அவன் அவரை வாய்க்கு வந்தபடி திட்டினான். அவரை ஒரு சாத்தான் என்றான். ஆனால், சாது எதையும் பேசவில்லை. முகத்தில் கோபம் எதையும் பிரதிபலிக்கவில்லை.

என்ன குருவே, ஒருவன் புகழ்ந்தான், இன்னொருவன் இகழ்ந்தான். நீரோ ஒரே விதமாயிருக்கின்றீரே என்றான் சீடன். சீடனே, இவர்கள் இருவருக்கும் என்னைச் சரியாகத் தெரியாது. எனவே, ஒருவன் தெய்வம் என்றான், இன்னொருவன், சாத்தான் என்றான். ஆனால், எனக்கு என்னைச் சரியாகத் தெரியும். எனவேதான், நான் சமநிலையாக இருக்கிறேன் என்றார் சாது.

சிலருடைய பார்வையில் நாம் தெய்வம் போலத் தோன்றலாம். சிலருடைய பார்வையில் நாம் சாத்தானாகத் தோன்றலாம். ஆனால், தேவனுடைய வெளிச்சத்தில் நாம் யார் என்பதை அறிந்து வைத்திருக்கின்றோமா என்பதே முக்கியம். நம்மைக் குறித்த நமது பார்வை சரியாயிருந்தால், பிறருடைய புகழ்ச்சி நம்மை பெருமை யடையவும் செய்யாது, பிறருடைய இகழ்ச்சி நம்மை அற்பமாக எண்ணவும் செய்யாது.

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து மானிடராக வாழ்ந்த நாட்களில் அவர் வான ளாவப் புகழப்பட்ட வேளைகளும் உண்டு. வாய்க்கு வந்தபடி இகழப்பட்ட வேளை களும் உண்டு. ஆயினும், அவைகள் அவரை உயர்த்தவோ, தாழ்த்தவோ இல்லை. அவர் சமநிலையோடு இருந்தார்.

அவர், தேவனுக்கு முன்பாகத் தம்முடைய நிலையைச் சரியாக அறிந்து வைத்தி ருந்ததால் சந்தோஷத்தால் குதிக்கவும் இல்லை, சஞ்சலத்தால், துவளவும் இல்லை.

சில நேரங்களில் பிறர் நம்மைச் சரியாக அறியாததின் விளைவாக அளவுக்கு மிஞ்சிப் பாராட்டவோ, அல்லது அளவுக்கு மிஞ்சிக் குறைகூறவோ செய்வார்கள். அவர்களின் கணக்கீடுகள் நம்மை பாதிக்கத் தேவையில்லை. நாம் தேவ சமுகத்தில் நம்மைச் சரியாகப் பார்க்கப் பழகினால், நீதி தவறவும் வாய்ப்பில்லை, நிலை குலையவும் வாய்ப்பில்லை.

சிந்தனைக்கு...

இறைவன் உன்னைப் பற்றி என்ன நினைப்பார் என்பதைச் சிந்தித்து செயல்படு; மனிதர்கள் என்ன நினைப்பார்கள் என்ற கவலை மறைந்துவிடும்.

ஜனவரி 8

தேவ உறவில் வளர்த்தல்

எபேசியர் 1:9 -23

தம்மை நீங்கள் அறிந்து கொள்வதற்கான ஞானத்தை... - எபேசியர் 1 : 17

தேவனை ஆராதிக்க நாம் பழகிக்கொள்ள இயலும். தேவனை நோக்கிச் ஜெபிக்க நாம் பழகிக்கொள்ள இயலும். தேவனை விசுவாசிக்க நாம் பழகிக்கொள்ள இயலும். தேவனுக்காக ஊழியம் செய்யவும் நாம் பழகிக் கொள்ள இயலும். ஆனால், தேவ உறவில் வாழ்வதற்குப் பழகுவதுதான் கடினம். தேவ ஐக்கியத்தை வாழ்க்கையில் அடையாளம் கண்டு செயல்படுவதற்குப் பழகுவதுதான் கடினம்.

ஆனால் ஆராதனை, விசுவாசம், வேத தியானம், உபவாசம், ஜெபம், ஊழியம் என பக்தியான பல விஷயங்கள் இருந்தாலும், தேவ உறவிலும், அன்பிலும் வாழ்ந்து பழகாவிட்டால், நம்மிடம் ஆவிக்குரிய கனிகள் தோன்றாது. ஆபிரகாம் தேவ உறவை தன் வாழ்வில் அனுபவித்துப் பழகியதால்தான் வேதாகமமும் வேத போதனைகளும் இல்லாத அந்த நாட்களிலும் தேவனுக்கேற்ற நற்சுபாவங்களுடைய மனிதனாக அவன் விளங்கினான். யோசேப்பு தேவ உறவை தன் வாழ்வில் அடையாளங் காண இயன்ற ஓர் மனிதனாக இருந்ததால்தான், பாவ சோதனைகளைச் ஜெயிக்க முடிந்தது.

சபைகளும், ஊழியர்களும் நம்மை ஆராதனையிலும், ஜெபத்திலும், வேத அறிவிலும் வளர்க்க முடியும். ஆனால், நாம் தனிப்பட்ட முறையில் தேவனைத் தேடுகின்ற அனுபவங்களில் தீவிரமாயிருந்தால்தான் தேவ உறவில் வளர முடியும். அப்போதுதான் நாம் கனிகொடுக்க இயலும்.தேவ உறவில் வளருங்கள் என்று ஆலோசனை கூறுவது எளிது. ஆனால், எப்படி அதனைஅனுபவமாக்குவது என்று சொல்லிக்கொடுப்பது கடினம். தாய் தந்தை உறவில் வளருவதெப்படி என்று பிள்ளைகளுக்குப் பாடம் சொல்லிக்கொடுப்பது கடினம்தானே. பிள்ளைகளாகப் பிறந்துவிட்டால் பெற்றோரின் உறவில் வளரவும், பெற்றோரின் அன்பை ருசிக்கவும் பாடம் சொல்லிக் கொடுக்கத் தேவையில்லை. பிள்ளைகளின் இயற்கை உள்ளுணர் வுகளே அவற்றில் அவர்களைப் பழக்குவிக்கும்.

ஒருவர் உண்மையாகத் தன்னை இயேசுவுக்கு அர்ப்பணித்து அவரை தனக்குள் பெற்றுக்கொண்டால் மறுபடியும் பிறத்தல் என்ற அனுபவம் நிகழும். அந்த அனுபவப் பின்னணியோடு தேவனை அப்பாவாகப் பார்த்து விசுவாசத்தோடு அவரை ஆத்துமாவில் விரும்பித் தேட வேண்டும். அவரை ஆலயம் சென்று ஆராதனை செய்யும் பக்த கோடிகளாக நின்று விடாமல் தினமும் தேவ உறவையும், தேவ அன்பை யும் நமக்குள் ஆர்வமாகத் தேடவேண்டும் அப்போது கர்த்தர் தம்மை நமக்குள் நாம் அறியும்படி செய்வார்.

சிந்தனைக்கு...

உலகமெல்லாம் போய் நீ இறைவனைக் குறித்துக் கற்றாலும் இருதயத்திற்குள் அவரைப் பெற்றால்தான் அந்த அறிவு பலன் தரும்.

ஜனவரி 9

மகிழ்ச்சி எப்படி?

பிலிப்பியர் 4:1-9

கர்த்தருக்குள் எப்பொழுதும் சந்தோஷமாயிருங்கள். - பிலிப்பியர் 4:4

ஒரு மனிதன் மிகுந்த துக்கத்துடன் உட்காந்திருந்தான். அவனுடைய கையில் மகிழ்ச்சியாயிருப்பது எப்படி? என்ற ஒரு புத்தகம் இருந்தது. மகிழ்ச்சியாயிருப்பது எப்படி என்ற புத்தகத்தைக் கையில் வைத்துக் கொண்டு, நீ ஏன் இவ்வளவு துக்கத்துடன் இருக்கின்றாய் என்று கேட்டார் ஒருவர்.

இந்தப் புத்தகம் என்னுடைய துக்கத்தை அதிகமாக்கி விட்டது என்றான் அவன். அது எப்படி என்று கேட்டார் அவர். மிகுந்த துக்கத்துடன் இருந்த போது இந்த புத்தகத்தை வாங்கிப் படித்தேன். இந்த புத்தகத்தில் எனக்கு உதவி செய்யும் கருத்து ஒன்றும் இல்லை. எனவே இந்த புத்தகத்தை வீணாய் வாங்கிப் படித்ததற்காகத் துக்கப்படுகிறேன் என்றான் அவன்.

மகிழ்ச்சி தொடர்பான புத்தகங்களுக்கு அளவேயில்லை. ஆனால், பல புத்த கங்கள் வெறும் ஏட்டுச் சுரைக்காயாக உள்ளதேயன்றி, உருப்படியான பலன் எதையும் தரவில்லை. ஒரு மனிதன் வியாதியை தனக்குள் வைத்துக்கொண்டு ஆரோக்கியம் தொடர்பான பல புத்தகங்களைப் படிப்பதால், ஆரோக்கியம் அடைந்து விடுவதில்லை. அநேகம் ஆலோசனைகளால் அல்ல. அவசரமான சிகிட்சையால்தான் வியாதி விலகி ஆரோக்கியம் வந்து செயல்பட முடியும்.

மனமகிழ்ச்சி என்பது நமக்குள் நம்மை மகிழ்ச்சியாக்கிக்கொள்ளப் பழகிக் கொள்வதல்ல. மகிழ்ச்சியான மனநிலையைப் பெற்றிட முதலாவது, மனதில் ஒட்டிக் கொண்டிருக்கின்ற பாவக்கறைகள் அகல வேண்டும். இரண்டாவது, மனதைப் பாவத்துக்கு விலக்கி வைத்து, பரிசுத்தமான உணர்வுகளைக் கொடுக்கின்ற ஒரு வல்லமை வேண்டும். உயர்ந்த ஆசைகளும் உன்னதமான சிந்தைகளும் மனதிற் குள் கொண்டு வரப்பட வேண்டும்.

மனம் ஆரோக்கியமாயிருந்தால்தான் மகிழ்ச்சிக்கான உணர்வுகள் தோன் றும். நாம் நம்மை அடிமை கொண்டிருக்கின்ற பாவத்தை விலக்காமல், வேறு எத்தனை செயல்கள் செய்தாலும் அதனால் மனம் மகிழ்வடைந்து விடாது. மனதை நம்மை நாமே ஆரோக்கியமாக வைக்க முடியாது. தேவ சமுகம்தான் நம்மை நமக்குள் ஆரோக்கிய மாக வைத்துக்கொள்ளும் வலிமையுடையது.

எத்தனையோ சுகபோக வசதிகளுடன் வாழ்ந்து வாழ்க்கையை இன்பத் தேடல் களால் நிறைத்துக்கொண்டிருந்தான் சாலொமோன் இராஜா. ஆனால், இறுதியில் எல்லாம் மனதுக்குச் சஞ்சலமே என்றான். ஆனால் தேவப்பிரசன்னம் தேடி வாழ்ந்த தாவீதோ, உம்முடைய சமுகத்தில் எனக்குப் பரிபூரண ஆனந்தம் உண்டென்றான்.

சிந்தனைக்கு...

பிறருடைய கவலைகளைக் குறித்துக் கொஞ்சம் நீ கவலைப்பட்டால் உன் கவலைகளில் பெரும்பகுதி கரைந்துவிடும்.

ஜனவரி 10
நம்பத்தக்கவர் யார்?

ஏசாயா 54:1-10

மலைகள் விலகினாலும், பர்வதங்கள் நிலை பெயர்ந்தாலும் -

ஏசாயா 54 : 10

நண்பர் ஒருவர் யாரையும் எளிதில் நம்பமாட்டார். மிகமிக ஆராய்ந்து பார்க்காமல் யாருக்கும் நற்சாட்சி கொடுக்கமாட்டார். ஆனால் குறிப்பிட்ட ஒருவரைக் குறித்து அவர் மிக உயர்ந்த கருத்தை வைத்திருந்தார். அந்தக் கருத்து சரியானது என்பதை அவர் பல உதாரணங்கள் மூலமாக அறிந்திருந்தார். ஆனால் ஒருநாள் அந்த நபரைக் குறித்து அவர் கேள்விபட்ட ஒரு செய்தி அவரை நிலைகுலைய வைத்தது. தான் நம்புவதற்கென்றிருந்த ஒரே நபரும் நம்பத்தகாதவராகப் போய்விட்டாரே, இனி நான் நம்புவதற்கு யாருமில்லையே என்று புலம்பினார்.

இந்தப் பூமியில் நாம் பூரணமாக நம்புவதற்கேற்ற ஒருவரைக் காண்பது கடினமே. ஏதாவது ஒரு நேரம் ஏதாவது ஒரு விஷயம் நாம் வைத்திருக்கின்ற நம்பிக்கைகளுக்கு அதிர்வுகளை ஏற்படுத்த வாய்ப்புண்டு. 2008-ம் ஆண்டு அமெரிக்காவில் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டபோது நம்பகத்தன்மையில் தலைநிமிர்ந்து நின்ற சில பிரசித்திபெறற வங்கிகள் கூட நம்பகத்தன்மையை இழந்தன. இனி எந்த வங்கியை நம்பி பணத்தை பத்திரமாக சேமிப்பது என்ற கேள்வி எழும்பியது.

ஆம். மலைகளும் விலகும். பர்வதங்களும் பெயரும். அசையாத அஸ்தி பாரங்களும் அசையும். இந்த பூமியில் யார் மேலும், எதன் மேலும் நாம் நம்பிக்கையோடு சாய்ந்து கொண்டிருக்க வாய்ப்பில்லை. தேவன் மேல் வைக்கும் நம்பிக்கை மட்டுமே நிலையானது. தேவன் மேல் சாய்ந்து கொள்கின்ற அனுபவம் மட்டுமே நிரந்தரமானது. ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவுக்காக பேதுருவும் பிற சீடர்களும் உயிரைக் கூட கொடுக்க ஆயத்தமாயிருந்தார்கள். ஆனால் இயேசு அவர்கள் கொடுத்த நம்பிக்கை வார்த்தைகளைச் சார்ந்துகொள்ளவில்லை. அவர் என்றும் விலகாதிருக்கும். பிதாவாகிய தேவனை மட்டுமே சார்ந்து நின்றார். “என் பிதா என்னோடிருப்பார்” என்று அவர் இறுதிவரை கூறினார்.

தாவீதுக்கு தோள் கொடுத்த 400 பேரும் அவனுக்கு எதிராக வந்தனர். அப்போதுதான் தேவனைத் தவிர வேறெதன் மேலும் சார்ந்து நிற்பது வெற்றி தராது என்பதை தாவீது புரிந்துகொண்டான். எனவே இறுதியில் கர்த்தரைத் தவிர சாய்ந்து கொள்ள வேறெந்த சாய்வாதாரமும் இல்லாத நிலையில் அவரை உறுதியாகப் பிடித்துக் கொண்டான். அந்த சார்பு நிலையும், நம்பிக்கையும் அவனை வெட்கப் படுத்தவில்லை. கர்த்தரை சார்ந்து வாழப் பழகுவோம். பணம் அல்ல, செல்வம் அல்ல; அறிவு அல்ல, ஞானம் அல்ல, ஆள் பலம் அல்ல. கர்த்தர் ஒருவரே நிலையானவர், நிரந்தரமானவர். அவரைச் சார்ந்திருப்பவர்கள் நிலைகுலைவதில்லை.

சிந்தனைக்கு...

உண்மையான மேன்மையை நீ உணர மறுத்தால்
பொய்யானவைகள் உன் மேன்மையை விலகச்செய்யும்

ஜனவரி 11

அறிந்திருந்தும்

லூக்கா 12:35-48

தன் எஜமானுடைய சித்தத்தை அறிந்தும்...
லூக்கா 12:47

ஒருவழிப் பாதையில் மூன்று மாணவர்கள் எதிர் திசையிலிருந்து ஜாலியாக சைக்கிள் ஓட்டி வந்தனர். போலீஸ்காரர் அவர்களைத் தடுத்து நிறுத்தி விசாரித்தார். அதில் ஒருவன் மட்டும் கிறிஸ்தவன். அவனை விசாரித்த போலீஸ்காரர் நீ பைபிள் படிப்பாயா? என்று கேட்டார். அவன் தினமும் படிப்பேன் என்றான். அந்தப் போலீஸ் காரர் மற்ற இரண்டு மாணவர்களையும் எச்சரித்து அனுப்பிவிட்டார். இவனை மட்டும் அபராதம் கட்டு என்றார். பைபிள் படிக்கின்ற நீ, இப்படி தவறு செய்ததால் உன்னைச் சும்மா விட முடியாது என்றார்

பாருங்கள். பைபிள் படிக்கும் பழக்கம் இல்லாதவர்கள் தப்பு செய்தும் தண் டிக்கப்படவில்லை. ஆனால், பைபிள் படிக்கின்றவனுக்கோ தண்டனை. ஒரு வேளை பக்தியாய்ப் பைபிள் படிக்கும் எனக்குத்தானே தண்டனை கிடைக்கிறது என்று அவன் புலம்பியிருக்கலாம். ஆம். சத்தியத்தை அறியாமல் தவறு செய்கின்றவர் களுக்காக தேவன் பரிதாபப்படுகின்றார். ஆனால், சத்தியம் அறிந்தும் அதன்படி நடவாதவர்கள்மேல் அவர் எரிச்சலடைகின்றார். ஏனென்றால், எவனிடம் அதிகமாகக் கொடுக்கப்படுகிறதோ அவனிடம்தான் அதிகமாக எதிர்பார்க்கப்படும்.

பக்தியற்ற மக்களைவிட பக்திமிக்க கிறிஸ்தவர்களின் வாழ்க்கையில் அதிகப் பிரச்சினைகளும், அதிகச் சோதனைகளும் வந்ததைப் பார்த்திருக்கின்றேன். காரணம் என்ன? அவர்கள் தேவனை அறியவும் அவருடைய போதனைகளினால் எது சரி எது தவறு என்று பகுத்தறியும் வாய்ப்பையும் பெற்றவர்கள். ஆனால், பக்தியிருந்தும் அறிந்த சத்தியத்தின்படி அவர்கள் செயல்படவில்லை. எனவே, அவர்கள்மேல் தேவன் மனதுருகாமல் மனவிசனப்படுகின்றார்.

உலக வரலாற்றில் பக்தியற்ற பல சந்ததியினரைவிட பக்திமிக்க யூத சந்ததி தான் மிகுதியாகத் துன்புற்றிருக்கின்றது. வேதாகமத்தைப் பெற்றிருப்பதும் வேத வார்த்தைகளைத் தினமும் வாசிப்பதும் பெரிய ஆசீர்வாதம்தான். ஆனால், அங்கே மறுபுறம் அபாயமும் உள்ளது. கேட்ட படித்த வேத சத்தியங்களின்படி செயல்படத் தவறும்போது, அங்கே தேவ கோபத்திற்கு வாசலைத் திறந்து விட்டு விடுகின்றோம். அறியாததின் விளைவாகச் செயல்படுவது பாவம்தான். ஆனால், அவர்களுக்கு அவர் இரங்குவார். அறிந்தும் அதன்படி செயல்படாமல் போவது முரட்டாட்டம். அந்த முரட்டாட்டத்தைத் தேவன் தண்டிக்கிறார் என்பது உண்மை. மோசேயினுடைய சிறு தவறும் தேவனுடைய பார்வையில் பெரியதொரு பாவமாகத் தோன்றியது. தேவன் அதனைச் சாதாரணமாக எடுத்துக்கொள்ளவில்லை.

சிந்தனைக்கு...

வேதாகமத்தை வாசிக்கின்றவன் பக்திமானாகலாம்.
வேதத்தை நேசிக்கிறவன்தான் பரிசுத்தவானாகிறான்.

ஜனவரி 12

உலகமும் உலகத்தாரும்

1 கொரிந்தியர் 5:1 –13

அப்படியானால் நீங்கள் உலகத்தைவிட்டு நீங்கிப் போக வேண்டியதாயிருக்குமே ... 1 கொரிந்தியர் 5 : 10

சில கிறிஸ்தவர்கள் தங்களின் சபைத் தொடர்புகளுக்கு அப்பால் யாரிடமும் எந்த உறவும் வைக்கமாட்டார்கள். அவர்கள் உலக சொந்த பந்தங்களை விட்டு தங்களை விலக்கி, இமயமலை அடிவாரத்தில் போய்த் தங்கும் முனிவர்களைப் போல, வாழ்க்கையைத் தனிமைப்படுத்திக்கொள்வதே பக்தி என எண்ணுகின்றனர். எனவே, தங்கள் சபை வட்டத்திற்கு வெளியே யாருடைய நல்லது கெட்டதுகளிலும் எந்தப் பங்கேற்பையும் கொள்வதில்லை. இன்னொரு சாரார், அவர்களும் கிறிஸ்தவர்களே. ஆனால், ஞாயிறு ஆராதனைகளில் அவர்கள் கலந்துகொள்கின்ற ஒரு வித்தியாசத்தைத் தவிர, அவர்களிடம் வேறெந்த விதத்திலும் ஒரு கிறிஸ்தவ வித்தியாசம் இராது. உலகத்தாரோடு அவர்கள் ஒட்டி உறவாடி உலகத்திற்கேற்ற வாழ்க்கையில் மூழ்கிப் போய்விடுவார்கள்.

இந்த இரண்டு வித வாழ்க்கை முறைகளும் தவறானவை. நாம் பாவத்தை விட்டு விலகியிருக்க வேண்டுமேயன்றி, பாவிகளைவிட்டு வெகுதூரம் போய்விடத் தேவையில்லை. உலகத்து மக்களுக்கேற்றபடியான ஒரு வாழ்க்கை வாழ்வதுதான் தவறேயன்றி, உலகத்து மக்களோடு பழகுவதும், நட்புக்கொள்வதும் தவறல்ல. இயேசு பாவிகளின் சிநேகிதன் என்ற பட்டப் பெயரைப் பெறுகின்ற அளவிற்கு அவர்களோடு பழகியிருந்தார். வியாதிப் பட்டவர்களின் சகவாசமே தேவையில்லை என மருத்துவர் எண்ணினால் எப்படியிருக்கும்? பாவிகளின் தொடர்பே தேவையில்லை எனப் போதகர் எண்ணினால் எப்படியிருக்கும்?

எங்கு போனாலும், யாரோடு பழகினாலும் பிறரை மாற்றும் உப்பாக நாம் விளங்க வேண்டும். அவர்கள் நம்மை மாற்றிவிடக் கூடாது. நம்முடைய பக்திக்கும், விசுவாசத்திற்கும், தெய்வீகக் குணநிலை வாழ்க்கைக்கும், பரிசுத்தக் கொள்கை சார்ந்த நிலைப்பாடுகளுக்கும் எந்தச் சேதாரமும் ஏற்படாதவிதமாக யாரோடும் நாம் பழகவும், இடைபடவும் செய்யலாம்.

நாம் உலகத்திற்கு வெளிச்சம். வெளிச்சத்திற்கு இருளில்தானே அதிக வேலை. நாம் உலகத்தின் தன்மைகளையும், அதனுடைய சாயலையும், அதனுடைய கொள்கைகளையும் வெறுக்க வேண்டுமேயன்றி, உலகத்து மக்களை அல்ல. அவர்கள் நமது அன்பை, பண்பை, நல்லுணர்வை, உண்மையை, விசுவாச மேன்மையை, யோக்கிதாம்சங்களைப் பார்க்க வேண்டுமானால், அவர்களை விட்டு விலகி அல்ல அவர்களை நெருங்கியே போக வேண்டும். ஆயினும் உறவுகளும், ஐக்கியங்களும், தொடர்புகளும், நம்முடைய கிறிஸ்தவ அடையாளங்களைத் தியாகம் செய்ய எந்த விதத்திலும் இடம் தராமல் பார்த்துக் கொள்ளவேண்டும்.

சிந்தனைக்கு...

நோயாளிகளை வெறுப்பவன் மருத்துவராகத் தொடர முடியாது. பாவிகளை வெறுப்பவன் சாட்சி வாழ்க்கை வாழ முடியாது.

ஜனவரி 13
ஏன் மன்னிக்க வேண்டும்?

எபேசியர் 4:17-32

நீங்களும் ஒருவருக்கொருவர் மன்னியுங்கள்
எபேசியர் 4:32

சார்லஸ், மார்க் இருவரும் நியூயார்க் பட்டிணத்தில் ஒரேவிதமான வியாபாரம் செய்து வந்தவர்கள். வியாபார போட்டியின் விளைவாக மார்க் தகாத முறைகளைக் கையாண்டு சார்லஸின் வியாபாரத்தை உடைத்தான். மார்க்கின் மிகத் தந்திரமான நடவடிக்கைகளின் விளைவாக சார்லஸ் வியாபாரத்தை இழந்தான். மிகுந்த கடன் தொல்லை ஏற்பட்டது. குடும்பத்தில் பிரச்சனைகள் ஏற்பட்டது. இதனால் ஆத்திரமுற்ற சார்லஸ் மார்க்கை எப்படியாவது ஒழித்துக்கட்ட வேண்டுமென்று வெறித்தனமாகச் செயல்பட்டான். ஆனால், ஒரு நாள் தன்னுடைய மனநிலையை மாற்றி மார்க்கை மன்னிக்க முன் வந்தான்.

சார்லசின் நண்பர்கள் அவனை எப்படி மன்னிக்கலாம்? இத்தனை மோசமாக செயல்பட்ட படுபாவியை ஏன் மன்னிக்க வேண்டும்? என்றனர். அதற்கு சார்லஸ் நான் மன்னிக்காதவரை எனக்குத் தான் நஷ்டம். மார்க் என் வியா பாரத்தைத் தான் அழித்தான். ஆனால், அவன் மேல் நான் கொண்ட ஆத்திரம் என்னையே அழித்துக்கொண்டிருக்கிறது. மார்க்கை அழிப்பதே என் இலக்காக மாறியதிலிருந்து நான் என்னுடைய பிற எல்லா திறமைகளையும் பிரயோ ஜனமில் லாமல் போக விடுகிறேன். அவனை மன்னிப்பதைத் தவிர நான் என்னைக் காப்பாற்ற வேறு வழியில்லை என்றான்.

பிறர் நமக்குச் செய்த தீமை நமக்கு ஒரு பாதிப்பை ஏற்படுத்தும். ஆனால், அதனை மனதில் வைத்துக் கசப்போடும், கோபத்தோடும், பழிவாங்கும் உணர்வோடும் வாழ்வதால் அங்கு பலவிதமான பாதிப்புகள் ஏற்படும். பிறரால் ஏற்பட்ட தீமையைச் சகிப்பதற்குப் பதிலாக, மன்னியாத மனநிலையுடன் வாழ்வதால் நமக்கு நாமே இன்னும் வேதனையை அதிகமாக்கிக் கொள்கின்றோம்.

அநீதி இழைக்கப்பட்டதின் விளைவாக ஆத்திர உணர்வோடும் பழிவாங்கும் உணர்வோடும் இருந்த ஒருவன், ஒருநாள் தனக்கு அநீதி இழைத்தவனிடம் போய் உன்னை நான் மனப்பூர்வமாக மன்னிக்கிறேன் என்றான். ஆனால், அந்த நபரோ அலட்சியத்தோடே உன் மன்னிப்பு எனக்குத் தேவையில்லை என்றான். ஆனால், மன்னிக்க வந்த நபரோ கோபமடையாமல் உன்னை மன்னிக்க வேண்டியது எனக்குத் தேவையாயிருக்கிறதே என்றான்.

கசப்புணர்வை மனதில் சுமப்பதால் மேலும் மேலும் நமக்குத்தானே நஷ்ட மும், கஷ்டமும். அது அமைதியைக் கெடுக்கிறது. நிதானத்தைக் கெடுக்கிறது. தேவ கிருபையைத் தடைசெய்கிறது. செயல்திறன்களைப் பலவீனப்படுத்துகிறது. இயேசு தம்மைத் துன்புறுத்தியவர்களை மன்னிக்கும்படி ஜெபித்தார். அவர்கள் மன்னிப்பைக் கேட்கவோ மனம் வருந்தவோ இல்லை. ஆனால் இயேசு அவர்களுக்காக மன்னிப்பைக் கோரினார். ஏன்? அவர் அதனை விரும்பினார்.

சிந்தனைக்கு...

இறைவனை நோக்கிய உன் அன்பில் முழுமையில்லையேல் மனிதனை நோக்கிய உன் அன்பு அரைகுறையாகவேயிருக்கும்.

ஜனவரி 14

தேவனா? ஊழியனா?

அப்போஸ்தலர் 14:1-18

நாங்களும் உங்களைப்போல பாடுள்ள மனுஷர்தானே
அப்போஸ்தலர் 14:15

அமெரிக்காவில் உள்ள பிரபல ஹாலிவுட் நடிகை ஒருத்தி, வல்லமையாக இறைப்பணி செய்யும் ஒரு இளம் ஊழியரிடம் வந்தாள். ஆன்மீக உலகிற்கு வெளியே இருக்கும் எந்த மனிதனும் மோசமாகவே இருக்கிறான். யாரையும் நம்ப முடிய வில்லை. எனவே இறைப்பணி செய்யும் அந்த நல்ல ஊழியரைத் திருமணம் செய்ய விரும்புவதாகக் கூறினாள். அந்த ஊழியரோ, அதை அப்புறம் பேசிக் கொள்வோம். முதலாவதாக என்னைவிட மிகவும் நல்லவர் ஒருவர் இருக்கிறார். அவர் இயேசு கிறிஸ்து. அவரை நீ ஆண்டவராக ஏற்றுக்கொள்கிறாயா? என்று கேட்டார். அவளோ எனக்கு நல்ல ஒரு மனிதர்தான் இப்போது தேவை. நல்ல ஒரு ஆண்டவரை ஏற்றுக் கொண்டு என் வாழ்க்கை ஓட்டத்தைச் சுருக்கிக்கொள்ளத் தற்போது நான் தயாராயில்லை என்று சொல்லிவிட்டுப் போய்விட்டாள்.

இவளைப் போன்ற மன நிலையை உடையோர் இன்று ஏராளம் பேர் உண்டு. சிலர் ஊழியர்கள் என்றால் மிகுதியாக கனப்படுத்தி உபசரித்து ஏற்றுக்கொள்வார்கள். ஆனால், இயேசுவையோ தங்கள் வாழ்க்கையில் அன்புடன் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். பிரபல ஊழியர்களோடு தங்களை அடையாளப்படுத்து வதைப் பெரிய கௌரவமாக எண்ணுவார்கள். ஆனால், இயேசுவோடு தங்கள் வாழ்க்கையை அடையாளப்படுத்துவதற்கு போதிய ஆர்வம் காட்டமாட்டார்கள். ஊழியனைவிட எஜமானனே பெரியவர். அவரை நாம் முதலில் கௌரவிக்க வேண்டும்.

ஆனால், மேற்கண்ட காரியங்களையெல்லாம் இயேசுவிடம் அன்பில்லா மலா செய்ய முடியும் என்று நாம் கேட்கலாம். அன்பில்லாமலும் செய்ய முடியும். ஒரு புகழ்ச்சிக்காக, ஒரு கௌரவத்திற்காக, நல்லதைச் செய்கின்றோம் என்ற ஒரு திருப்திக்காக நாம் அவ்விதம் செய்ய முடியும். சில வேளை அன்பினாலும் செய்ய முடியும். ஆனால், அந்த அன்பு, சிந்தனை நிலையில் மட்டும் தங்கிவிடுகிற அன்பு. உண்மையான தேவ அன்பு என்பது, முதலாவது இயேசுவின் கட்டளைகளின்படி வாழ்க்கையை அமைத்துக்கொள்வதாகும். அவரின் வழியில் நடப்பதே அவரிடம் அன்பாயிருப்பதாகும். (1 யோவான்-2:6)

ஆம். நல்ல ஊழியர்களோடும், நல்ல மனிதர்களோடும் நமக்கு ஏற்பட்ட உறவுக ளுக்காக கர்த்தருக்கு நன்றி செலுத்துவோம். அதே வேளையில் நல்ல கர்த்தரோடு நமக்கு ஏற்படும் உறவையல்லாமல் வேறெந்த உறவும் தொடர்ந்து நல்லதாகவே இருப்பதற்கு வாய்ப்பில்லை. எனவே, நல்ல கர்த்தருடைய உறவைத் தனிப்பட்ட வாழ்க்கையில் அனுபவிப்பதற்கே முதல் முக்கியத்துவத்தைத் தருவோம்.

சிந்தனைக்கு...

இறைவனின் ஐக்கியத்தை இதயத்தில் நேசிக்கும் அளவிற்குத்தான் உலகில் பாவத்தை வெறுக்கும் பலம் வரும்.

ஜனவரி 15

குறைகளைக் களைய

கொலோசெயர் 3:1-15

ஒருவர் பேரில் ஒருவருக்குக் குறைபாடு உண்டானால்...
கொலோசெயர் 3:13

சபை விசுவாசி ஒருவர் மாதத்திற்கு ஒரு முறை தன்னுடைய பாஸ்டரைச் சந்தித்து, தன்னுடைய மனைவியின் குறைகளையும், தவறுகளையும் எடுத்துக்கூறுவார். அந்தப் பாஸ்டரும் அந்த மனைவியைச் சந்தித்து பல விஷயங்களைச் சொல்லியும் நிலமை மாறவில்லை. இவர் குற்றங்குறை கூறுவதும் நிற்கவில்லை. ஒரு நாள் பாஸ்டர் அந்த விசுவாசியிடம் இத்தனை குறைகளைக் கூறுகிறீர்களே. அந்தக் குறைகள் நீங்குவதற்கு நீங்கள் எதையாவது செய்தீர்களா? என்று கேட்டார். அவரிடம் பதிலில்லை.

சிலர் பிறருடைய குறைகளை குற்றங்களைக் காணும்போது, அவைகளைக் குற்றஞ்சாட்டவும், குத்திக்காட்டவும் கிடைத்த வாய்ப்புகளாக எடுத்துக்கொள்கின்றார்கள். ஆனால், அந்தக் குற்றங்குறைகள் அகலவேண்டும் என்ற ஆசையில் எதையும் செய்வதில்லை. ஆளுங்கட்சி செய்யும் ஒவ்வொரு தவறுகளையும் எதிர்கட்சிகள் மிக உன்னிப்பாகக் கவனித்து அவைகளைச் சுட்டிக்காட்டி கண்டனம் செய்வார்கள். ஆனால், அதனுடைய நோக்கம் அந்தத் தவறுகள் களையப்படவேண்டும் என்பதல்ல. ஆளுங்கட்சியின் தவறுகள் அவர்களைத் தாக்குவதற்கு எதிர்க்கட்சிகளுக்குக் கிடைத்த நல்ல ஆயுதங்கள்.

ஆனால் குடும்ப வாழ்க்கையிலே, சபை ஐக்கியங்களிலே, உறவுகளுக்கு நடுவிலே, இந்த அணுகுமுறை சரி அல்ல. குற்றஞ்சாட்டுவது அல்ல. குற்றம் களைவதே நம்முடைய நோக்கமாயிருக்க வேண்டும். நாத்தான் தாவீது செய்த பாவத்தை அறிந்து கொள்ள நேர்ந்தபோது, குறைகூறவதற்கு முந்தாமல் சுட்டிக்காட்டி அதனைச் சரி செய்வதற்கே பிரயாசப்பட்டான்.

மனைவியின் தவறுகள் கணவனை வருத்துகின்றன. கணவனின் தவறுகள் மனைவியை வருத்தப்படுத்துகின்றன. எனவே, மன விசனம் நேரிடுகிறது. கோபமும் எரிச்சலும் மேற்கொள்கிறது. தவறுகளைக் குத்திக்காட்டி காயமேற்படுத்த மனம் ஓடுகிறது. ஆனால், இவைகள் தவறுகள் என்றும், அவைகள் அகற்றப்பட்டால் நம்முடைய குடும்ப வாழ்க்கை நன்றாயிருக்கும் என்றும் இவைகள் நம்முடைய சந்தோஷத்தையும் நல்ல ஐக்கியத்தையும் கெடுக்கிறதே என அன்பாய்ப் பேசி சீர்ப்படுத்த வாஞ்சை கொண்டோர் எத்தனை பேர்?

சபைகளி லும், குடும்பங்களிலும் நம்முடைய அணுகு முறை சீர் செய்ய உதவ வேண்டுமேயன்றி ஐக்கியங்களைச் சீர்குலைக்க அல்ல.

சிந்தனைக்கு...

எல்லாரும் நல்லவர்களாக இருக்கவே மனிதன் விரும்புகிறான். தனக்கு மட்டும் விதிவிலக்கு கேட்கிறான்.

ஜனவரி 16
கரிசனையோடு கேட்போம்

மத்தேயு 14:13 – 21

திரளான ஜனங்களைக் கண்டு.... மனதுருகி -
மத்தேயு 14:14

பல ஆண்டுகளுக்கு முன்பு மிகுந்த சோதனைகளுக்கு நடுவில் தேவ ஊழியர் ஒருவரிடம் சென்று என் மன வேதனைகளைக் கொஞ்சம் பகிர்ந்து கொள்ள விரும்பினேன். அவரோ மிக, மிக அவசரமாக இருப்பது போல தன்னைக் காண்பிக்க விரும்பினார். நான் சொல்வதை அவர் வேண்டா வெறுப்புடன் கேட்பதை அவரது முகம் காட்டியது; அவ்வப்போது கையைத் திருப்பி, கடிகாரத்தை பார்த்துக் கொண்டார். மொத்தத்தில் "நான் மிக, மிக அவசர மா யிருக்கிறேன். சுருக்கமாகப் பேசி முடி" என்று சொல்வது போல அவருடைய வளைவு நெளிவுகள் அமைந்தன. நானும் மனந்தி றந்து அதிகம் பேச இயலாமல் சீக்கிரம் முடித்துவிட்டேன். அவருடைய கரிசனையற்ற, விருப்பமற்ற, அவசரமான ஒரு கோலம் எனக்குள் மிகுந்த மனவருத்தத்தை ஏற்படுத்தியது.

நமக்கு மிக அவசரமான பல அலுவல்கள் இருக்கலாம். நேரமில்லா பிரச் சினை இருக்கலாம். ஆயினும், நம்மிடம் ஒருவர் மன ஆர்வத்தோடு பேசும் போது உண்மையான வாஞ்சையோடும், அன்போடும் அதனைக் கேட்க வேண்டும். மனபாரங்களை யாரிடமாவது பகிர்ந்து கொண்டால் கொஞ்சம் ஆறுதலாயிருக்குமே என்று எண்ணி நம்மிடம் சிலர் வரக்கூடும். அவர்களுக்குப் பணம், பொருள் கொடுக்க இயலாமல் இருக்கலாம். ஆனால் அக்கறையோடும், அன்போடும், இரக்க உணர்வோடும் அவர்களின் வார்த்தைகளைக் கவனித்துக் கேட்கும்போது, அது அவர்களுக்கு மிகுந்த ஆறுதலைத் தருகின்றது.

மிகுந்த அலுவல்களுக்கு நடுவிலும், நேரமில்லாமையின் நடுவிலும் இயேசு தம்மை நோக்கி ஆறுதலுக்காக வந்த மக்களை அன்போடு ஏற்றுக்கொண்டு அவர்களோடு பேசினார். அவர்களை ஒரு தொந்தரவாக அவர் எண்ணவில்லை. யவீருவின் மகள் மரணத்தருவாயில் கிடந்த அவசரச் செய்தி கேட்டு இயேசு விரைந்து சென்று கொண்டிருந்தார். ஆனால், செல்லும் வழியில் அவருடைய அருளுக்காக காத்திருந்தோர் ஏராளம். அவர்களைக் கண்டுகொள்ளாமல் அவர் தீயணைப்பு வண்டி போல தாம் போக வேண்டிய இடத்தைக் குறியாகக்கொண்டு வேகப்படவில்லை.

அந்தப் பெருங்கூட்டத்தில் பல வருடமாக உதிரப் போக்கால் வருந்திய பெண் ணொருத்தி வந்து அவரது ஆடையைத் தொட்டாள். ஆயினும், என்னுடைய அவச ரத்தில் இப்படி இடையூறு செய்கின்றாளே என்று அவர் எண்ணவில்லை. அங்கே தம்மைத் தொட்டது யார் என்று விசாரித்து அறிந்து, அவளின் விசுவாசத்தைப் பாராட்டி, அவளையும் சுகப்படுத்திய பின்னரே அங்கிருந்து கடந்து சென்றார்.

சிந்தனைக்கு...

உண்மையின் மேன்மையை நீ உணர மறுத்தால்
பொய்யானவைகள் உன் மேன்மையை விலகச்செய்யும்.

ஜனவரி 17

ஆலமரத்துப் பறவைகள்

யோவான் 6:48-71

யாரிடத்தில் போவாம், நித்திய ஜீவவசனங்கள் உம்மிடத்தில் உண்டே...
யோவான் 6:68

ஓங்கி வளர்ந்து கிளைகளை விரிவாகப் பரப்பியிருக்கும் ஆல மரத்தில் ஏராளம் பறவைகள் வந்து தங்கியிருக்கும். ஆலமரத்தைச் சுற்றிலும் பறவைகளின் ஓசை அதிகமாயிருக்கும். ஆயினும், அந்தப் பறவைகள் அங்கே வந்து தங்கியிருப்பது ஆலமரத்தின்மேல் கொண்ட தனிப்பட்ட பாசத்தினால் அல்ல, அந்த ஆலமரம் பட்டுப்போய் இலைகள் உதிர்ந்து போனால் ஒரு பறவையும் அங்கே வராது.

அதுபோலவே பணம், பதவி, அதிகாரம், அந்தஸ்து ஆகியவைகள் ஒருவரிடம் இருந்தால் அங்கே அவரோடு நிற்கவும், அவருக்கு உயர்ந்த மரியாதை கொடுக்கவும் ஏராளமான மனிதர்கள் வருவார்கள். ஆயினும் அந்த அன்பும், பாசமும், மரியாதை யும், உடனிருப்பும் அந்த நபரிடம் உள்ள பணத்திற்காகவும், பதவிக்காகவுமே செலுத்தப்படுகிறது. அந்த நபர் வசதிகளை இழந்துவிட்டால் மரியாதையும், வாழ்த்தும் மறைந்து போகும். யோபு மிகப்பெரிய செல்வந்தன். ஆயினும், அவைகளை இழந்த பின்பு அவனு டைய வேலைக்காரன்கூட அவனோடு நில்லாமல் அவனைப் பரிகாசம் செய்யும் நிலமை ஏற்பட்டது. சிலர் பதவிகளிலும், அதிகார நிலைகளிலும் இருக்கும்போது அவர்களுக்குப் பின்னால் ஒரு பெரிய கூட்டமே இருக்கும். பதவியும் அதிகாரமும் போய்விட்டால் அழைத்தால்கூட அவருக்காகச் சிலர் வருவது கடினமே.

சிலர் பணத்தையும், பொருளையும், பதவியையும் அடைய விரும்புவது பிறர் தங்களை அப்பொழுதுதான் மதிப்பார்கள் என்பதற்காகவே. ஆனால், நம்முடைய நற்குணம், நற்செயல், நற்பண்பு, நன்னடத்தை இவைகளைக் கண்டு மக்கள் நம்மிடம் மரியாதையும் பாசமும் காண்பிக்கவேண்டும். பணம் பந்தியிலே குணம் குப்பையிலே என்பது சில நேரங்களில் உண்மைதான். ஆனாலும் நற்பண்புகளும், நல்ல முன்னுதாரணமான வாழ்க்கை முறைகளும், சிலரை நம் பக்கம் இழுக்கும் என்பதும் உண்மை.

நற்பண்புகளின் அடிப்படையில் நாம் பெறும் நன் மதிப்பும் மரியாதையும் நிலையானவையும், மேன்மையானவையுமாகும். நீங்களும் போய் விட மன தாயிருக்கிறீர்களோ என்று இயேசு கேட்டபோது, பேதுரு யாரிடம் போவோம். நித்திய ஜீவ வசனங்கள் உம்மிடத்தில் உண்டே என்றான். அவரிடமிருந்தது பணமோ, பொருளோ, அந்தஸ்தோ அல்ல. அவர் ஜீவனுள்ள வார்த்தைகளை உடையவராகவும், தெய்வீகமான ஒரு வாழ்க்கை முறை உடை யவராகவும் இருந்தார். அவரோடு இணைந்திருக்கப் பெருங்கூட்டம்வரவில்லை. ஆனால், உண்மையின்மேல் அன்பு வைத்து வாழ்ந்த ஒரு சிறு கூட்டம் இருந்தது.

சிந்தனைக்கு...

பலர் புகழ்வதால் நீ சரியாக இருக்கிறாய் என்றோ சிலர் இகழ்வதால் நீ சரியில்லை என்றோ கூற முடியாது.

ஜனவரி 18

தேவன் சொல்லாததை

1 தீமோத்தேயு 4:1-16

சரீர முயற்சி அற்ப பியோஜனமுள்ளது...
1 தீமோத்தேயு 4:8

கனடாவில் உள்ள ஒரு வைராக்கியமுள்ள கிறிஸ்தவர் கோணிப்பை உடைகளையே அணிவார். காலில் செருப்பு அணியமாட்டார். வாரத்தில் சில நாட்கள் தலையில் சாம்பலை அள்ளிப்போட்டுக்கொண்டு சாப்பிடாமல் ஜெபிப்பார். தான் கடந்த காலத்தில் செய்த பாவத்தை நினைத்து தினமும் ஒரு முறை சாட்டையினால் தன்னை அடித்துக்கொள்வார். அந்த ஊர் மக்கள் அவரை மிகப் பெரிய பரிசுத்தவான் என்று அழைப்பார்கள்.

அவர் பரிசுத்தவான் என்பதில் சந்தேகமில்லை. ஆனால், மேற்கண்ட செயல் களால் தன்னைக் கடுமையாக வருத்தினால்தான் பரிசுத்தவானாக முடியும் என்று வேதம் சொல்லவில்லை. சில கடுமையான காரியங்களை நாம் வைராக்கியத்தோடு செய்வதால் நாம் தேவனுக்கு முன்பாக அதிக பரிசுத்தவான்களாக மாறிவிட முடி யாது. நாம் எந்த அளவு நம்மை வருத்துகிறோம் அல்லது எவ்வளவு கடுமையான உபதேசங்களைக் கடைப்பிடிக்கிறோம் என்பதல்ல. அவ்விதம் செய்யும்படி தேவன் நமக்குச் சொல்லியிருக்கிறாரா என்பதே முக்கியம். அவர் எளிய பாதை ஒன்றைக் காண்பித்திருக்கும்போது, கடுமையான ஒரு வழியை நாமாகத் தெரிந்து கொண்டால், அது நமக்கு அதிக பரிசுத்தத்தைத் தந்து விடாது.

அதிக பரிசுத்தம் என்பதும், அதிக தேவப்பற்று என்பதும் நாம் நம்மை எந்த அளவிற்கு வருத்திக்கொள்கின்றோம், சிரமப்படுத்திக்கொள்கின்றோம் என்பதைப் பொறுத்தது அல்ல. கர்த்தருடைய அன்பையும், கர்த்தர் விரும்பும் நற்குணங்களையும் செயல்படுத்துவதற்குத் தடையாக வரும் சூழ்நிலைகளை மேற்கொள்ள நாம் எந்த அளவிற்கு நம்மை அர்ப்பணிக்கின்றோம் என்பதிலேயே அது விளங்கும். மருந்து சாப்பிடக்கூடாது – ஊழியர்கள் திருமணம் செய்யக்கூடாது – நகை அணியக்கூடாது குறிப்பிட்ட நிறத்தில் மட்டுமே உடை அணிய வேண்டும். இது போன்ற கடுமையான சில காரியங்களை வற்புறுத்துவதால் சில சபைகள் தங்களை உயர்ந்தரக சபை என்று சொல்லிக்கொள்வதுண்டு. ஆனால் அது உண்மையல்ல. வேதம் சொல்லாததை நாமாக உருவாக்கி வைத்து மேன்மை பாராட்டுவது பரிசுத்தமல்ல.

பரிசுத்தம் என்பது நம்மை நாமே அதிக பக்தியால் சிரமப்படுத்திக் கொள்வதில் அல்ல. தேவனோடுள்ள உறவுகளில் வாஞ்சையோடு பெருகி தேவனுக்கேற்ற குணாதி சயங்களுடையவர்களாக மாறுவதுதான் பரிசுத்தம் ஆகும். நம்மிடம் அன்பும், தாழ்மையும், பிறர் நலன் தேடும் சிந்தையும், சுய வெறுப்பும் அதிகமதிகமாகக் காணப்படுவதுதான் பரிசுத்தத்தின் அடையாளம்.

சிந்தனைக்கு...

ஆன்மீகம் உனக்குள் உண்மையைக் கொண்டுவராவிட்டால் ஆன்மீகத்தில் நீ பொய்களைக் கலக்கிறாய் என்று பொருள்

ஜனவரி 19

திருவிருந்து எதற்காக

1 கொரிந்தியர் 11:20-34

என்னை நினைவு கூறும்படி இதைச் செய்யுங்கள்...
1 கொரிந்தியர் 11:24

இந்நாட்களில் திருவிருந்து அல்லது கர்த்தருடைய பந்தி என்பது மத நம்பிக்கை சார்ந்த ஒரு சடங்காச்சாரமாக மாறிவிட்டது. அநேகர் திருவிருந்தில் பங்கு கொள்ளா விட்டால் பாவம் என்றும் அதில் பங்கு பெற்றால் ஆசீர்வாதம் என்றும் நம்புகின்றனர். திருவிருந்தின் வேளை அல்லது அப்பம் பிட்கும் வேளை வரும்போது, அநேகர் போய் அதற்காக நிற்பது அதனால் ஏதாவது ஆசீர்வாதம் கிடைக்கும் என்பதினால்தான்.

ஆனால், அப்பம் பிட்குதலாகிய கர்த்தருடைய பந்தியைக் குறித்து இயேசு சீடர்களிடம் பேசும்போது என்னை நினைவு கூரும்படி இதைச் செய்யுங்கள் என்றார். திருவிருந்தின் நோக்கம் ஒரு சடங்கைக் கடைப்பிடித்து ஆசீர்வாதம் பெறுவதல்ல. ஒரு சடங்கைப் பின்பற்றுவதின் வாயிலாக இயேசுவும் அவர் செய்த வைகளும் நம்மால் நினைவுகூரப் படவேண்டும் என்பதே அவருடைய நோக்கம்.

என்னை நினைவு கூருங்கள் என்ற கட்டளையின் பின்னால் உள்ள செய்தி என்ன? அவருடைய அன்பு, நினைவு கூரப்பட வேண்டும். அவருடைய ஐக்கியம் நினைவு கூரப்பட வேண்டும். அவர் நமக் காகச் சிலுவையில் அறையப்பட்டது நினைவு கூரப்படவேண்டும். அவர் விரும்பிய ஒரு வருக்கொருவர் அன்பாயிருத்தல், ஐக்கிய மாயிருத்தல் ஆகியவை நினைவுகூரப்பட வேண்டும்.

இத்தனை காரியங்களையும் நினைவு கூர்ந்தால் என்ன நடக்கும்? நாம் தேவ அன்பைப் பெற்றுக்கொண்டோமா? தம்மை பலியாகக் கொடுத்து உருவாக்கிய இரட்சிப்பைப் பெற்று அனுபவிக்கின்றோமா? நாம் ஒருவரை ஒருவர் நேசிக் கின்றோமா? ஒரு வரோடொருவர் ஐக்கியமாயிருப்பதை உண்மையிலேயே விரும்பு கிறோமா? இயேசுவினால் வரும் பரிசுத்தத்தை நாம் பெற்றுக் கொண்டோமா? என்பது போன்ற கேள்விகளைக் கேட்போம்.

ஆனால், இத்தகைய ஒரு விழிப்புணர்வின் தேவையை உணர்ந்து திருவிருந்தில் பங்கு கொள்ளும் உண்மையான பக்தர்கள் எத்தனை பேர்? எல்லாம் சடங்காகவும் சம்பிரதாயமுமாக மாற்றப்பட்டுவிட்டதே. சரியான புரிந்துகொள்ளுதல் இல்லாமலும், சரியான விழிப்புணர்வு இல்லாமலும் மதக்கடமையாகப் போய் அப்பம் புசிப்பதும், திராட்சை ரசம் பானம் பண்ணுவதும் தகுதியல்ல என்று வேதம் எச்சரிக்கை தருகின்றதே. அடுத்தமுறை நீங்கள் திருவிருந்தில் பங்குகொள்ளும் முன்பு, நீங்கள் இயேசுவை உண்மையிலேயே நினைவு கூருவதற்காக அதைச் செய்யுங்கள். இரட்சிப்பின் அனுபவமும், பாவ மன்னிப்புப் பெற்ற அனுபவமும், இல்லாமல் பங்கு பெறுவது பாவமானது என்று உணருங்கள்.

சிந்தனைக்கு...

எதை நீ செய்கிறாய் என்பதை உலகம் பார்க்கும், ஏன் அதைச் செய்கிறாய் என்பதை இறைவன் பார்ப்பார்.

ஜனவரி 20

அழகல்ல, அர்த்தம்

ஏசாயா 60:1-13

எழுப்பிப் பிரகாசி; உன் ஒளி வந்தது...
ஏசாயா 60:1

ஓவியக் கண்காட்சி ஒன்றில் மிக அழகான பல ஓவியங்கள் இடம் பெற்றிருந்தன. அங்கே இருந்த ஒரு ஓவியம் பலருடைய கவனத்தைக் கவர்ந்தது. அந்த ஓவியத்தில் பெரும்பகுதி இருளாகக் காட்டப்பட்டிருந்தது. அதன் நடுவில் ஒரு சிறு மெழுகுவர்த்தி சின்ன ஒரு வெளிச்சத்தைக் கொடுத்துக் கொண்டிருந்தது. அந்த இருளாகக் காட்டப் பட்டிருந்த பெரும்பகுதியில் ஏராளம் படங்களை வரைந்து அழகுபடுத்தியிருக்கலாம். ஆனால், அந்த ஓவியர் ஒரு அழகான படத்தை அல்ல. ஒரு அழகான சிந்தனையைக் கொண்டு வருவதற்கே முக்கியத்துவம் கொடுத் திருந்தார். பெரிய இருள். அங்கே ஒரு சின்ன மெழுகுவர்த்தி, அதனால் இயன்ற வெளிச்சத்தைக் கொடுத்து ஒரு சிறு பகுதியிலிருந்த இருளை அகற்றுகிறது.

சிலருடைய வாழ்க்கை பணம், பொருள், வசதியான சூழ்நிலைகள், செல் வாக்கு, அந்தஸ்து, கல்வி, வெற்றிகள், ஆடம்பரங்கள், பிரபலம், என ஏராளம் அழ கான சித்திரங்களால் நிறைந்துள்ளது. அவைகளைப் பார்ப்பவர்களுக்குச் சகல நன்மைகளாலும், வளங்களாலும் அவர்களின் வாழ்க்கை நிரம்பி மிகக் கவர்ச்சி யாக இருப்பதாகத் தோன்றுகிறது. ஆனால், அழகாக இருந்தபோதிலும் அது யாருக்கும் எந்த அர்த்தத்தையும் வெளிப்படுத்தவில்லை.

யோவான் ஸ்நானனின் வாழ்க்கை கவர்ச்சியானது அல்ல. ஆனால் அர்த்தம் நிறைந்தது. அவன் பல நாடுகளைப் பிரகாசிப்பித்த ஒரு சூரியன் அல்ல. ஆனால் தனக்கு நியமிக்கப்பட்ட சிறிய எல்லைக்குள் ஒரு விளக்காக எரிந்து பலருடைய கவனத்தை ஈர்த்துக்கொண்டான். அவனிடம் இக்கால ஊழியர்களிடம் பார்ப்பதைப் போல பணத்தையோ, பட்டங்களையோ, ஆடம்பரமான வசதிகளையோ, யாரும் பார்க்க இயலவில்லை. ஆனால் உண்மையற்ற மக்கள் திரள்களின் நடுவில் அவன் உண்மைக்கு ஒரு சாட்சியாக நின்றான். மாய்மால மனிதர்களுக்கு நடுவிலே அவன் ஒரு கபடற்ற பரிசுத்தத்திற்கு முன்மாதிரியாக இருந்தான். மக்கள் அவனிடம் அழகையல்ல, அர்த்தத்தைக் கண்டனர்.

ஆம், நம்முடைய வாழ்க்கை பலர் நடுவில் அழகாகக் கவர்ச்சியாகத் தோன்று வதை விட, அர்த்தமுடையதாக விளங்குவதையே தேவன் விரும்புகிறார். நம்மைப் பார்த்து பிறர் கற்றுக்கொள்ள ஏதாவது இருக்கவேண்டும். நம்மைப் பார்க்கும் பிறருக்கு ஒரு மேன்மையான வேறுபாடு தெரிய வேண்டும். நாம் சூரியன்களாகப் பிரகாசிக்க இயலாமல் போகலாம். ஆனால் இருளின் நடுவில் ஒரு சிறு விளக்காக எரிந்து ஒரு சிறு இருளையாவது அகற்றலாமே.

சிந்தனைக்கு...

தேவனிடமிருந்து நீ எந்த அளவிற்குக் கற்றுக்கொள்வாயோ அந்த அளவுதான் நீ அவரிடமிருந்து பெற்றுக்கொள்ளவும் முடியும்.

ஜனவரி 21

விமர்சனம் ஏற்போம்

சங்கீதம் 19:1-14

தன்பிழைகளை உணருகிறவன் யா ர்? ...
சங்கீதம் 19:12

எவ்வளவு பெரிய அறிஞராகவும், பல அனுபவங்கள் பெற்றவராகவும் இருந்தாலும் அவரிடமும் விமர்சிக்கத்தக்க சில குறைபாடுகள் இருக்கவே செய்யும். ஒரு சிறந்த ஓவியன் மிக அருமையான ஒரு ஓவியத்தை வரைந்தான். அதனைப் பலரும் பார்த்து ஆஹா... என்ன அருமையான ஓவியம் என்று சிறப்பாகப் பாராட்டினார்கள். ஆனால், அந்த ஓவியனின் புகழை விரும்பாத இன்னொரு ஓவியன் அந்த ஓவியத்தில் எங்கேனும் குறைபாடு இருக்கிறதா என்று தேடி இறுதியாக ஒரு சிறு குறைபாட்டைக் கண்டுபிடித்து அதனை விமர்சனம் செய்தான். ஆனால், அது பொறாமையினால் வந்தது என்பது அந்த ஓவியனுக்குத் தெரியும். ஆனால், அவனோ பொறுமையாக அந்தக் குறைபாட்டை ஒத்துக்கொண்டு அதனைச் சரி செய்தான். எனவே, ஓவியம் இன்னும் அதிக பாராட்டைப் பெற்றது. இன்னொருவரின் பொறாமை, என் கண்கள் காணாத ஒரு தவறைக் கண்டு பிடிக்க செய்ததால் ஓவியம் மிகச்சிறந்த ஓவியமானது என்றான் அந்த ஓவியன்.

விமர்சனங்கள் ஏற்றுக்கொள்ளப்படுவதற்கு கடினமானவைகளே. பெரும் பாலான விமர்சனங்கள் பொறாமையினாலும், வெறுப்பினாலும், பிறர் அடைந்த புகழைக் கண்டு ஏற்பட்ட காய் மகாரத்தினாலுமே வருகிறது. ஆயினும், சொல்லப்படும் விமர்சனங்கள் யாவும் தவறானவை என்று கூறிவிட முடியாது. ஏனென்றால், நம்மிடம் நாம் காணத் தவறிய சில குறைகளைப் பிறருடைய கண்கள் தீவிரமாய்த் தேடிக் கண்டுபிடிக்கும். பொறாமையின் விளைவாக இருந்தால்கூட பிறருடைய கண்கள் தேடிக் கண்டுபிடிக்கும் சில தவறுகள் நாம் சரிசெய்ய வேண்டிய தவறுகளாக இருக்கக்கூடும். நண்பர்களின் கண் மூடித்தனமான பாராட்டுகளைவிட, பகைவர் களின் வெறுப்பினால் ஏற்பட்ட விமர்சனங்கள் நம்முடைய கண்களைத் திறக்கக் கூடும்.

சிலர் என்னுடைய எழுத்துக்களிலே கண்டறிந்த சில குறைபாடுகள், விமர்சிக்க வேண்டும் என்ற தவறான ஆசையினால் ஏற்பட்டவை என்பது எனக்குத் தெரியும். ஆயினும், அவைகளின் மூலமாக நான் பயனடைந்திருக்கிறேன். ஏனென்றால், அவ்விதம் சுட்டிக் காட்டப்பட்ட வேளைகளில்தான், அதில் கவனக் குறைவாக இருந்த சில குறைபாடுகளைக் கண்டறிந்து சரி செய்யும் வாய்ப்புக் கிட்டியது. எனவே, பிறரின் உள்நோக்கங்களை உணர்ந்து அவர்களை எதிர்க்கவோ, அவர் களின் கருத்துக்களை மறுக்கவோ தீவிரம் காட்டாமல், தவறு இருக்கிறதா என்று கண்டறியவும், சரிசெய்யவும் முன் வரவேண்டும். ஒருவேளை தேவன் அவர்களின் பொறாமை நிறைந்த விமர்சனங்களின் மூலமாகக்கூட நம்முடைய கண்களைத் திறந்து தவறுகளைக் காணச் செய்ய முடியும்.

சிந்தனைக்கு...

சத்தியத்தை ஏற்கலாம். இல்லையென்றால் மறுக்கலாம், பேரம் பேச முடியாது.

ஜனவரி 22

புரிந்து கொண்டோமோ?

2 தீமோத்தேயு 3:1-17

தேவனுடைய மனுஷன் தேறியவனாகவும்
2 தீமோத்தேயு 3:16

பெரிய ஒரு சபையின் குருவானவர் இறையியல் கல்விபயின்று பல பட்டங்கள் பெற்றவர். தினமும் வேதாகம ஆராய்ச்சி புத்தகங்கள் பல படித்து திறனாய்வு செய்கின்றவர். ஆயினும், வேதாகமச் செய்திகள் அறிவுப்பூர்வமாக எந்த அளவிற்கு உண்மை என்ற கேள்விகள் அவருக்கு ஏராளம். ஆனால், ஏழாம் வகுப்பு வரை படித்திருந்த அந்த சபையின் பணியாளர் தினமும் வேதாகமம் வாசித்து உற்சாகமாகப் பாடிக்கொண்டிருப்பார். ஒரு நாள் அவர் அந்த பணியாளருடன், இவ்வளவு ஆராய்ச்சி நூல்கள் படிக்கின்ற எனக்கே வேதம் இன்னும் விளங்க வில்லை. இந்த வெறும் வேதாகமத்தை வைத்துப் படிக்கும் நீ எதைப் புரிந்துகொள்கிறாய் என்று கேட்டார்.

ஐயா... இதைப்படித்து நான் ஒரு பாவி என்பதையும், இயேசுதான் என்னை இரட்சிக்க முடியும் என்பதையும், புரிந்துகொண்டேன். இந்த வேதாகம வார்த்தைகள் மூலம், தினமும் என் வாழ்க்கை எப்படிப் போய்க் கொண்டிருக்கிறது என்பதைச் சரியாகப் புரிந்துகொண்டு என்னைச் சரி செய்ய உதவி செய்கிறது என்றான். அந்தக் குருவானவர் தனக்கு இல்லாத ஒரு புரிந்துகொள்ளுதல், அந்தப் பாமரனாகிய பணியாளருக்கு இருப்பதை உணர்ந்தார்.

அநேகர் வேதாகம ஆராய்ச்சியிலும், வேதாகம சித்தாந்தங்களைக் கற்றறிதலிலுமே கவனம் செலுத்துகின்றனர். ஆனால், வேதம் ஒரு வெளிச்சம். அந்த வெளிச்சத்தில் நாம் யார் என்பதைக் கண்டறிதலே மிகப் பெரிய தேவை. வேதத்தை ஆராய்வது அவசியம். ஆயினும், வேதாகம சத்திய வெளிச்சத்தில் நம்மை ஆராய்ந்தறிதலே மிகவும் அவ சியம். ஒரு விளக்கின் வெளிச்சத்தை பயன் படுத்திக் கொள்வதில் கவனம் செலுத்தாமல், அது எப்படி எரிகிறது, அது எரிவதில் பின்னாலுள்ள அறிவியல் விதி என்ன என்று ஆராய்வதிலே அதிக கவனம் செலுத்துவது விவேகமல்ல.

வேதாகமப் போதனைகளால் நாம் பாவிகள் என்பதைக் கண்டறிந்து பாவ விடுதலை பெற்றுக்கொள்ள முடியும். அவைகளால் வாழ்விற்குத் தேவையான வழிகாட்டுதல்களைப் பெற்றுக்கொள்ள முடியும். ஓடம் எப்படி ஓடுகிறது என்ற ஆராய்ச்சி அவசியம். ஆயினும், ஓடத்தின் விதியை ஆராய்வதிலேயே முழுக் கவனத்தையும் செலுத்தி, அக்கரை போகாமலே இருந்துவிட்டால் அது விவேகமல்ல.

வேதாகமக் கல்வியினால் அநேகர் அறி வாளிகளாக மாறுகின்றார்களேயன்றி, பரிசுத்தவான்களாக மாறவில்லை. வேத வெளிச்சத்தில் தங்களை ஆராய்ந்தறியாமல் வேதப் போதனைகளையே ஆராய்ந்தால் மூளையில் அறிவைப் பெருக்கலாம். ஆனாலும், வாழ்க்கையில் பரிசுத்தம் அடைய முடியாது.

சிந்தனைக்கு...

வெளிச்சத்தைக் குறித்து விளக்குகின்றவர்கள் அல்ல.
விளக்காய் எரிகின்றவர்களே இன்றையத் தேவை

ஜனவரி 23
அன்பை வெளிப்படுத்துவோம்

மத்தேயு 22:33-46

பிறனிடத்திலும் அன்பு கூருவாயாக...
மத்தேயு 22:39

கடவுள் அன்புள்ளவர். அதை நீங்கள் நம்புகின்றீர்களா? என்று ஒருவரிடம் கேட்டார் இன்னொருவர். கடவுள் அன்பானவரா, அன்பு இல்லாதவரா என்பதெல்லாம் எனக்குத் தெரியாது. அந்த ஆராய்ச்சியை நான் விரும்பவும் இல்லை. ஆனால் நீங்கள் அன்பானவர் என்பது எனக்கு மிக நன்றாகத் தெரியும். உண்மையான அன்பை, கரிசனையை, அக்கறையை, மனித நேயத்தை நான் உங்களிடம் போதுமான அளவு பார்த்துவிட்டேன் என்றார் அவர். அதற்கு மற்றவர் நீங்கள் என்னிடம் கண்டவைகள் யாவும் நான் கடவுளிடமிருந்து பெற்றவைகள். இல்லையேல் என்னை நீங்கள் மிக மோசமான ஒருவராகத்தான் பார்த்திருக்க முடியும் என்றார்.

தேவன் அன்பானவர் என்ற உண்மையை வார்த்தைகளால் விளக்கினால் போதாது. நாம் வாழ்கின்ற விதத்தினால் அந்த அன்பினைப் பிறருக்கு நாம் வெளிப்படுத்த வேண்டும். அன்பை விளக்குவதைவிட வெளிப்படுத்துவதே விவேகமானது. இயேசுவின் அன்பைக் குறித்து மிகச் சிறப்பாகப் பேசினாலும் எழுதினாலும், அதனை நம்முடைய வாழ்க்கையில் பிறர் பார்க்க இயலாவிட்டால், அது வெறும் விளம்பரமாக மட்டுமே இருக்கும்.

தேவ அன்பு என்பது இயேசுவின் வாழ்க்கையில் பிறர் பார்க்கத்தக்க விதமாக வெளியரங்கமாயிருந்தது. அவர் அன்பைக் குறித்துப் போதிப்பதைவிட அதிகமாக அன்பை வெளிப்படுத்திக் காண்பிப்பதிலேயே கவனமாயிருந்தார். எனவேதான், என்னைக் கண்டவன் பிதாவைக் கண்டான் என்று இயேசு சொன்னார். (யோவான்-14:9) இன்று இயேசுவின் அன்பினைக் குறித்து மிக அழகாகவும் அருமையாகவும் பலர் பேசினாலும், அவர்களிடம் அன்பின் பிரதிபலிப்புகளாகிய தயவு, உதவி செய்தல், இரக்கம், தாழ்மை, பொறுமை, போன்ற குணங்களைப் பிறர் பார்க்க இயலவில்லை. எனவே, தேவ அன்பு என்பது வெறும் ஏட்டுச் சுரைக்காயாகவே உள்ளது.

அன்பைக் குறித்து எல்லோரும் பேச முடியும். ஆயினும் எல்லோராலும், வெளிப்படுத்த முடியாது. ஏனென்றால், கர்த்தரோடு நெருங்கிப் பழகி அவருடைய அன்பினைத் தங்களின் வாழ்க்கையில் ருசித்துப் பழக்கப்பட்டவர்கள்தான், அந்த அன்பைப் பிறருக்கு வெளிப்படுத்த முடியும். சிலருடைய அன்பு உணர்ச்சி ரீதியானதாகவும், மாம்சீகமானதாகவும் உள்ளது. அதனால் நிலைத்து நிற்க இயலாது. அந்த அன்பு விட்டில் பூச்சி போல சற்று நேரம் பரபரப்பை ஏற்படுத்தும். ஆனாலும் விரைவில் மடிந்துவிடும். தேவ அன்பினைக் கட்டளையின் விளைவாக அல்ல. கர்த்தரிடம் கண்டதின் விளைவாகவே பிறருக்குக் கொடுக்க முடியும்.

சிந்தனைக்கு...

நல்லவராயிராமலே நன்மை செய்யமுடியும். ஆனால் நன்மை செய்யாமல் நல்லவராயிருக்க முடியாது.

ஜனவரி 24
மன்னிக்கும் தேவன்

பிரசங்கி 8 : 1– 17

துர்க்கிரியைக்குத் தக்க தண்டனை சீக்கிரமாய் நடவாதபடியால்
பிரசங்கி 8:11

டிரான் ஃ ஸ்பார்மர் ஒன்றின் அருகில் ஒரு எலும்புக் கூடுபடத்துடன் எச்சரிக்கை என்று எழுதப்பட்டிருந்தது. மின்சாரம் ஓடுகின்ற அதன் அருகே வருவது ஆபத்தாகக் கூடும் என்பதால் அந்த எச்சரிக்கை. அதன் வழியாகப் பள்ளிக்கூடம் செல்லும் மாணவன் ஒருவன், அதில் உண்மையிலேயே மின்சாரம் இருக்கின்றதா என்று அறிய லேசாக வைத்துப் பார்ப்பான். பல முறை அவ்விதம் டிரான்ஸ்ஃபார்மர் பெட்டியைத் தொட்டுப் பார்த்தும் ஒன்றும் ஆகவில்லை. எனவே, அந்த எச்சரிக்கை தேவையற்றது என்று எண்ணினான். ஆனால், ஒரு நாள் வேடிக்கையாக அந்த பெட்டியைத் தொட்டபோது மின்சாரக் கசிவினால் அவன் தூக்கி வீசப்பட்டு மரித்துப் போனான்.

தவறான செயல்கள், தவறான வழிகள், தவறான குணங்கள் தேவ கோபத்தைக் கொண்டு வரும் என்றும் வேதாகமம் பல இடங்களில் எச்சரிக்கின்றது. ஆனால், இதனை அறிந்த பலருக்கு இது சாதாரண எச்சரிக்கையாகிவிட்டது. தேவனுக்கு விரோதமாகவும் மனசாட்சிக்கு விரோதமாகவும் பல தவறுகள் செய்திருந்தும், தண்டனை எதுவும் கிடைக்காததால் தவறுகளில் தொடர்ந்திட துணிகரம் வந்து விடுகின்றது. எனவே, வேத எச்சரிக்கைகளைப் பொருட் படுத்தாமல் மனம் போன போக்கில் தவறுகளைத் தயங்காமல் செய்கின்ற பழக்கம் தொடர்கதையாகி விடுகின்றது.

ஆனால், வேதம் தேவனைத் தண்டிக்கின்றவராக மட்டுமல்ல. வேதம் அவரை மன்னிக்கும் தயை மிகுந்த தேவன் என்றும் சொல்லுகின்றது. கடந்தகாலங்களில் நீங்கள் செய்த பல தவறுகள் குற்றங்கள் தேவனுடைய பார்வையில் தண்டனைக் குரியவைகளே. ஆனால், தேவன் உங்களைத் தண்டிக்கவில்லை. நீங்கள் திரும்பத் திரும்ப தவறு செய்திருந்தபோதிலும் அவர் உங்களை திரும்பத் திரும்ப மன்னித்தார் என்பதே உண்மை. நீங்கள் தவறுகளைச் சரிசெய்து மனந் திரும்புவதற்கு பல தருணங்களைத் தந்தார். ஏனென்றால் நீங்கள் தண்டிக்கப் படுவதையல்ல.

நீங்கள் மனந்திரும்பி வாழ்வதையே அவர் விரும்புகின்றார். அவர் தந்த நல்ல தருணங்களைத் தவறாகப் புரிந்து கொள்ளக்கூடாது. அது தேவன் செயல் படவில்லையென்றோ, உங்கள் தவறுகளை ஒரு பொருட்டாக அவர் எண்ணவில்லை என்றோ அர்த்தமல்ல. ஒருவேளை உங்கள் வாழ்க்கையிலும் மனந்திரும்புவதற்காக தேவன் கிருபையாய் தந்த தருணங்கள் முடிந்திருக்கலாம். உங்களை நீங்கள் ஆராய்ந்து மனந்திரும்பாமல் மனக்கடினத்தில் தொடர்ந்தால் அவருடைய தண்டனையின் அம்பு எந்த நேரத்திலும் காயப்படுத்திவிடக்கூடும்.

சிந்தனைக்கு...

தவறை உணர்வது நேர்மை.
அதனைச் சரி செய்ய முன்வருவதுதான் விவேகம்.

ஜனவரி 25

குறைகாணல்

கொலொசெயர் 3:1–13

ஒருவர் பேரில் ஒருவருக்குக் குறைபாடு உண்டானால்...
கொலோசெயர் 3:13

நண்பர் ஒருவர் திறந்த மனதுடையவர். எதையும் மறைக்காமல் சொல்லிவிடுவார். ஒரு பிரசங்கத்தைக் கேட்டதும், அதில் உள்ள குறைபாடுகளை பிரசங்கியாரிடம் சொல்வார். ஒரு நல்ல சாப்பாட்டைக் கொடுத்து சாப்பிட்ட பின்பு கருத்து கேட்டால் அதில் ஏதாவது ஒரு குறையைச் சுட்டிக்காட்டுவார். யார் ஒரு கருத்துச் சொன்னாலும், யார் ஒரு காரியத்தில் ஈடுபட்டாலும் அதில் உள்ள குறைபாடுகளை உடனேயே நேரடியாகச் சொல்லிவிடுவார். இதனால் அவர் விஷயத்தில் பலருக்கும் மனக்கஷ்டம் உண்டு. எதிலும் குறை கண்டுபிடித்து சொல்கிறீர்களே என்று யாராவது சொன்னால், எனக்குப் பொய் பேசத்தெரியாது. மனதில் தவறாகப்பட்டதை மறைக்கத் தெரியாது என்று கூறுவார். உண்மைதான். அவர் சுட்டிக்காட்டுகின்ற குறைகள் நிச்சயம் அங்கு இருக்கும்.

குறைகளை குற்றங்களை பிறரிடம் பார்க்கும்போது அவைகளைக் கண்டு கொள்ளாமல் போவதும், அவைகளை மனதில் மட்டும் வைத்துக்கொள்வதும் சரியல்ல. அதே வேளையில் எந்த ஒன்றிலும் சில குறைகள் இருக்கும். எந்த ஒருவரிடமும் சில பலவீனங்கள் இருக்கும். அவைகளில் சிலவற்றை நாம் ஏற்றுக் கொண்டு சகிக்கின்ற பண்பும் வேண்டும். சில நேரங்களில் நாம் சிலரிடம் உள்ள குறைபாடுகளை சகித்துக்கொள்ள இயலாத ஒரு மனநிலையின் காரணமாகவே, எதற்கெடுத்தாலும் சுட்டிக்காட்டும் நடவடிக்கையில் ஈடுபடுகிறோம்.

சில குறைவுகளைச் சூழ்நிலைகளின் அடிப்படையில் மனதில் சற்று அடக்கி வைக்கவும் அறிந்திருக்க வேண்டும். சூழ்நிலை அறிந்து ஏற்றவிதமாகத் தவறைச் சுட்டிக் காட்டாவிட்டால் அதுவே ஒரு தவறாக மாறிவிடும். இயேசு கிறிஸ்துவின் சீடர்கள் ஒவ்வொருவரிடமும் சில குறைவுகளும், பக்குவ மின்மைகளும், பலவீனங்களும் இருந்ததை வேதத்தை வாசிக்கும்போது அறிந்துகொள்கின்றோம். இயேசு அவர்களின் குறைவுகளைக் குத்தி குத்திக் காட்டிக்கொண்டிராமல், அவர்களை அன்பின் விளைவாக ஏற்றுக்கொண்டு அவர்களிடமிருந்து வெளிப்பட்ட சில பலவீனங்களைச் சகித்துக்கொண்டார்.

ஆனால், சிலர் சகிப்புத் தன்மை இல்லாமையின் விளைவாகவும், மற்றவர்களை மட்டந்தட்ட ஒரு வாய்ப்பாகக் குறைகளை எடுத்துக்கொள்ளும் ஒரு மனநிலையின் விளைவாகவும் குறைகளைத் தேடிக் கண்டுபிடிக்கின்றனர். அவைகளையெல்லாம் நாம் திறந்த மனம் என்றும், உண்மையை மறைக்கத் தெரியாத உள்ளம் என்றும், சொல்வது உண்மையல்ல. குறைகளைவிட அவைகளைப் பொறுமையுணர்வு இன்றியும், ஞானமின்றியும் சுட்டிக்காட்டுவது பெரிய குறையாகும்.

சிந்தனைக்கு...

தகுதியான நேரம் அறிந்து தவறைச் சுட்டிக்காட்டு
அதுவரையில் அதனைச் சகித்துக்கொள்ளப் பழகு.

ஜனவரி 26

பொறுமை அவசியம்

யாக்கோபு 5:1-12

பொறுமையாயிருக்கிறவர்களைப் பாக்கியவான்களென்கிறோமே
யாக்கோபு 5:11

ஒருவர் வெப்ஸ்டர் ஆங்கிலப் பொருளகராதியை எடுத்து ஆங்கிலப் பதம் ஒன்றிற்கு அர்த்தம் தேடினார். ஆனால், உடனேயே அந்த வார்த்தையின் அர்த்தத்தைக் கண்டுபிடிக்க முடியவில்லை. கோபமடைந்த அவர் அந்த டிக்ஸ்னரியைத் தூக்கி வீசினார். ஆனால், நோவா வெப்ஸ்டர் ஆங்கிலப் பொருளகராதியை 35 ஆண்டு கால செலவில்தான் தயாரித்து முடித்தார். ஒரு நோக்கத்தை நிறைவேற்ற அவர் 35 ஆண்டுகள் கடுமையாக உழைத்து பொறுமையாகக் காத்திருக்க வேண்டியதாயிருந்தது

இந்தத் தலைமுறையினர் ஒரு பட்டனை அழுத்தியவுடன் தாங்கள் எதிர் பார்த்தபடி காரியம் நடந்திருக்க வேண்டும் என எண்ணுகின்றனர். ஒரு சாதாரணக் கம்ப்யூட்டரை உருவாக்கி வெளியே கொண்டுவர பல வருடங்கள் ஆயின. ஆனால், இன்று ஒரு கட்டளை கொடுத்ததும் எதிர்பார்த்த தகவல் திரையில் தோன்றாவிட்டால் மவுசையும் கம்ப்யூட்டரையும் உடைக்கும் அளவிற்கு மக்கள் பொறுமையற்ற வர்களாக உள்ளனர். ஒரு காலத்தில் ஒரு டெலிபோன் இணைப்புப் பெற 5 வருடம் 10 வருடம் காத்திருக்கவேண்டும். ஆனால், இன்று காலையில் ஆர்டர் கொடுத்து மதியத்திற்குள் இணைப்புக் கிடைக்காவிட்டால் பெரிய ஏமாற்றத்தை சந்தித்தது போல உணருகின்றார்கள்.

ஆனால், பொறுமை என்பது மிக மிக அவசியமான குணம். காத்திருத்தல் என்பது மிகவும் தேவையான ஒரு பண்பு. அவசரமும் பொறுமையிழப்பும் பல நஷ்டங்களுக்கு வழிவகுக்கும். சாமுவேல் தீர்க்கன் வருவது வரையிலும் பலியிடு வதற்குக் காத்திராமல்போன சவுல் தேவ கோபத்திற்கு ஆளானான். கர்த்தர் வாக்களித்தி ருந்த ஆசீர்வாதங்களுக்காக பொறுமையாய்க் காத்திராமல் அவசரப்பட்ட இஸ்ரவேல் மக்கள் ஆசீர்வாதக் கானானை அடையாமல் போனார்கள்.

மோசேயிடம் தாம் எதிர்பார்த்த பொறுமையும், சாந்தமும், தாழ்மையும் உருவாகும் வரை தேவன் 40 வருடங்கள் காத்திருந்தார். மோசே மலையிலிருந்து திரும்பி வரும்வரை காத்திராமல் பொறுமையிழந்த இஸ்ரவேல் மக்கள், கன்றுக் குட்டியை உருவாக்கித் தண்டனையைப் பரிசாகப் பெற்றார்கள். எதையும் இங்கே இப்பொழுதே காண வேண்டும் என்ற மனநிலை நல்லதல்ல. சில சூழ்நிலைகள் மாற்றம் பெற இன்னும் நமக்கு அதிகப் பொறுமை வேண்டும். சிலரிடம் நாம் எதிர்பார்க்கும் மாற்றங்களைக் கண்டிட இன்னும் நாம் சாந்தமாய் காத்திருக்கவேண்டும். சில விஷயங்களில் நாம் காண்பிக்கும் அதிக அவசரம் நம்மைப் பதட்டப்படுத்தி தவறுக்குள் விழச் செய்துவிடாதபடி ஜாக்கிரதையாயிருப்போம்.

சிந்தனைக்கு...

விரும்பியதையெல்லாம் எளிதாகப் பெறும் மனிதனிடம் விரும்பத்தகாத குணங்களெல்லாம் விரைந்து வருகிறது.

ஜனவரி 27

தேவனிடம் பகிர்ந்து கொண்டு

1 சாமுவேல் 1:1-19

கர்த்தருடைய சந்நிதியில் என் இருதயத்தை ஊற்றிவிட்டேன்
1 சாமுவேல் 1:15

மனதிற்குள் எல்லாவற்றையும் அடக்கிக் கொண்டு அமைதியாய் இருப்பதை சிலர் திறமை என்கிறார்கள். ஆயினும், இதனால் எதிர்மறையான விளைவுகள் ஏற்பட வாய்ப்புண்டு. மனதை வருத்திக்கொண்டிருக்கும் உணர்வுகளை யாரிட மாவது பகிர்ந்துகொண்டால் கொஞ்சம் ஆறுதலாயிருக்குமே என்று மனம் சிந்திப்பது இயற்கையானது. எனவேதான் நமது மனப் போராட்டங்களை, உறுத்தல்களை, குமுறல்களை, சலிப்புகளை, சோர்வுகளை மனப்பாரத்தோடு கேட்கும் மனிதர்களை மனம் தேடுகிறது.

ஒருவர் அவ்வப்போது கடற்கரைக்கு வந்து ஒரு பழைய படகில் உட்கார்ந்து கொள்வார். அவர் நீண்ட நேரம் மனதில் உள்ளவைகளையெல்லாம் கடலைப் பார்த்து பேசுவார். இப்படிச் செய்வதால் உங்களுக்கு என்ன பயன்? என்று ஒருவர் கேட்டார். ஏதோ மனதில் இருந்ததை பேசிவிட்டோம் என்ற உணர்வு கொஞ்சம் ஆறுதலைத் தருகிறது என்றாராம். நண்பர்களிடம், உறவினர்களிடம், நலம் விரும்பிகளிடம் போய் ம னச்சுமைகளைக் குறித்துப் பேசுவதால் ஆறுதல் கிடைப்பது உண்மைதான். ஆனால், அவர்கள் அனுதாப உணர்வோடு கேட்க முடியுமேயன்றி, நம்முடைய உள்ளத்தை அவர்கள் தொட முடியாது. நம்முடைய உள் மனக்காயங்களை அவர்கள் ஆற்ற முடியாது. அவர்கள் அங்கு எழுகின்ற ஓசைகளை அடக்க முடியாது.

ஆனால், கர்த்தரிடம் நாம் பேசிப்பழக வேண்டும். அவரிடம் நம்முடைய மனச் சுமைகளைக் குறித்து சொல்லிப் பழக வேண்டும். அவர் வெறுமனே கேட்டுக் கொண்டிருப்பதில்லை. அவரிடம் நாம் பேசும்போது அவருடைய பிரசன்னம் நம்மைத் தொடும். அவருடைய ஐக்கியம் நமக்குள் ஆரவாரங்களை அடக்கி அமைதி யைப் ஏற்படுத்தும். அவருடைய வார்த்தைகள் ஆத்துமாவுக்குள் தொனித்து உள் மனக்காயங்களை ஆற்றிவிடும். அவரிடம் பேசப் பேச, அவருடைய பிரசன்னத் தின் பிரகாசம் இருதயத்திற்குள் ஊடுருவி, அச்சங்களையும் பதட்டங்களையும் அப்புறப்படுத்திவிடும்.

ஜெபத்தை ஒரு பேச்சுத்தெரபி என்று நான் சொல்வேன். நம்முடைய இருதயத்திற்குள் தம்முடைய பிரசன்னத்தை ஊடுருவச் செய்யும் கர்த்தரோடு பேசிக்கொண்டேயிருப்பது, ஒரு ஆவிக்குரிய சிகிட்சை முறை ஆகும். அவர் நம்முடைய மனவேதனைக்குரிய சூழ்நிலைகளை உடனே அகற்றாவிட்டாலும்கூட, அவருடன் பேசிக் கொண்டேயிருக்கும்போது நம்முடைய மனமும், ஆவியும் அவரால் குண மாகிக் கொண்டேயிருக்கும். இதனால் மனதிற்குள் ஆறுதல் காற்று வீசி வேதனையான வெம்மை நிலையை வெளியேற்றிவிடும்.

சிந்தனைக்கு...

பாடுகளின் பாதையில் நாம் கற்ற பாடங்களே பிறர் வெற்றி பெற நாம் கொடுக்கும் ஆயுதங்கள்.

ஜனவரி 28
மறைக்கப்பட்ட கீறல்

லூக்கா 19:41-48

இப்பொழுதோ அவைகள் உன் கண்களுக்கு மறைவாயிருக்கிறது..
லூக்கா 19:42

ஒருவருடைய வீட்டின் சுவரில் ஒரு பெரிய கீறல் விழுந்தது. அதைப் பார்க்கும் போதெல்லாம் அவருக்கு மனதிற்குக் கஷ்டமாகயிருந்தது. அதனைப் பார்க்க நேரிட்டவர்களும் இப்படிச் சுவர் கீறல் விழுந்திருக்கிறதே என்று பரிதாபப்பட்டார்கள். எனவே, அந்த மனிதன் கடைக்குப் போய் சுவரில் ஒட்டும் பெரிய படம் ஒன்றை வாங்கி வந்து அதன்மேல் ஒட்டினான். இப்போது கீறல் மறைந்து படத்தின் அழகான இயற்கைக் காட்சி அழகாகத் தோன்றியது. பார்ப்பவர்களுக்கும் இயற்கைக் காட்சி தெரிந்ததேயன்றி சுவரின் கீறல் தெரியவில்லை. ஆனால், விரைவில் அந்தச் சுவரின் கீறல் பெரியதாகி பெரிய கஷ்டத்தை வரவைக்கப் போவதை யாரும் அறியவில்லை

பலருடைய ஆவிக்குரிய அனுபவங்களும் இப்படியாகவே உள்ளன. அவர்களின் ஆவிக்குரிய ஈடுபாடுகளும் ஆன்மீகச் செயல்பாடுகளும் தங்களின் தவறான கோணல்மாணலான, குணநிலைக்கேடான, அருவருப்பான வாழ்க்கையை மறைப்பதற்கே உதவுகிறது. அவர்கள் தங்களின் கேடுபாடான மனநிலைகளையும் குணநிலைகளையும் தேவனுக்கு ஏற்காத வாழ்க்கை நிலைகளையும் தேவ சமுகத்தில் ஆராய்ந்து அவற்றைச் சரி செய்ய முன்வருவதில்லை. அதற்குப் பதிலாக அவற்றின் அருவருப்புகளை உணராமல் இருக்கும்படியாகவும், மோசமான தோற்றம் கண்களுக்குத் தெரியாமல் இருக்கும்படியாகவும் ஆவிக்குரிய சில காரியங்களில் தங்களை இணைத்துக் கொள்கின்றார்கள்.

சிலர் ஜெபம், வேதவாசிப்பு, உபவாசம், ஊழியம் என சில பக்திக் காரி யங்களைக் கொண்டு பாவவிடுதலையடையாத பரிசுத்தமற்ற வாழ்க்கையை மறைத்துக் கொள்கின்றார்கள். சிலர், தாங்கள் எப்படி வாழ்கின்றோம், எவ்வித குணநிலைகளை வெளிப் படுத்துகிறோம், பணம், பொருள் ஆகிய விஷயங்களில் தங்களின் மனம் எப்படிப்பட்ட சிந்தையைக் கொண்டிருக்கிறது என்பதையெல்லாம் உற்றுப் பார்த்து உணர விரும்புவதேயில்லை. அதற்குப் பதிலாக பாடல்கள், துதிகள், ஸ்தோத்திரங்கள், ஆராதனைகள் ஆகியவற்றால் வரும் பரவச உணர்வுகளை உணர்ந்து, தாங்கள் நன்றாக இருப்பதாக எண்ணி, தங்களைத் தாங்களே ஏமாற்றிக் கொள்கிறார்கள்.

ஆராதனைகள், பாடல்கள், ஜெபங்கள், வேத வாசிப்புகள், ஊழியங்கள் ஆகியவை நம்மை நன்றாக உணர்வதற்கும், நாம் நன்றாக இருப்பதாக எண்ணு வதற்கும் தூண்ட முடியும். ஆனால், உண்மையில் நாம் எப்படியிருக்கின்றோம் என் பதை உணராமல், மேலோட்ட சந்தோஷ உணர்வுகளையும் தோற்றங்களையும் பார்த்து பூரிப்பது, பின்னால் பெருந்தீங்கை வரவழைக்கும்.

சிந்தனைக்கு...

ஆன்மிகமே இல்லாதவனை விட அரைகுறை ஆன்மிகவாதியால் ஏராளம் பிரச்சினைகள் உண்டு.

ஜனவரி 29
நீ எனக்கு வேண்டும்

லூக்கா 15:11-32

அவன் கழுத்தைக் கட்டிக்கொண்டு அவனை முத்தஞ் செய்தான். லூக்கா 5:20

அவன் சிறுவனாய் இருந்தான். அவனுடைய பெற்றோர்கள் போயும் போயும் நீ எங்களுக்குப் பிள்ளையாய் பிறந்தாயே என்றனர். அவன் பள்ளிக்கூடம் சென்றான். ஏண்டா நீயெல்லாம் மாடு மேய்க்கப் போயிருக்கலாமே இங்கு வந்து இடத்தை அடைத்துக் கொண்டிருக்கின்றாயே என்றனர் ஆசிரியர்கள். அவன் வேலைக்குப் போனான். நீ எங்காவது சாமியாராகப் போய் சாம்பாதிக்காமலே சாப்பிட்டிருக்கலாமே. இங்கே வந்து என் உயிரையும் வாங்குகிறியே என்றார் முதலாளி. அவன் திரு மணம் செய்தான். நான் செய்த பாவம் நீ எனக்குப் போய் கணவனாக வந்திருக்கிறாய் என்றாள் மனைவி. வேறு எங்கும் போக வாய்ப்பில்லாமல் இறுதியாக கடவுளிடம் போய் நின்றான். இவ்வளவு பேரும் வேண்டாம் என்ற பிறகுதான் உனக்கு என்னைத் தேடும் உணர்வு வந்ததா. நீ மட்டும் அப்பொழுதே வந்திருந்தால் உன்னை எவ்வளவோ உயரமாய் வைத்திருப்பேன் என்று கடவுள் சொன்னாராம்.

சில நேரங்களில் இந்த உலகமும், மனிதர்களும் சூழ்நிலைகளும் ஏன் நம்முடைய சொந்த மனதும் நம்மை எதற்கும் லாயக்கில்லை என்று சொல்லவே முந்திக் கொள்ளும். நீ ஏன் வாழ்கின்றாய். நீ வாழ்வதால் என்ன பயன். நீ வாழ்வது யாருக்குத் தேவை என்ற சத்தங்கள்தான் நம்முடைய காதுகளில் தொனிக்கும்.

கெட்ட குமாரன் கெட்டுச் சீரழிந்து திரும்பி வந்தபோது, இப்படிப்பட்ட ஒருவனை தகப்பன் ஏன் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்றுதான் சொந்த சகோதரன் சிந்தித்தான். ஆனால், அந்த தகப்பன் மட்டும்தான் மகனே, நீ எவ்வளவு கெட்டுப் போனாலும் நீ எனக்கு வேண்டும். நீ எனக்கு வேண்டும் என்று சொல்ல முடிந்தது. அதுதான் தகப்பனின் மனம். அதுதான் தகப்பன் பார்வை.

சுமார் 25 ஆண்டுகளுக்கு முன்பு என்னுடைய இளம் வயதுகளில் மும்பாய் பட்டணத்தின் ஆரவார சூழ்நிலையின் நடுவில் நான் நின்றேன். உலகமும், உறவுகளும், நண்பர்களும், ஏன் என் சொந்த மனமும் "வேண்டாம் வேண்டாம் நீ யாருக்கும் தேவையில்லை" என்று சொல்லுவதை நான் உணர்ந்தேன். இத்தனை இளம் வயதில் எவருக்கும் தேவையில்லாதவன் ஆகிவிட்டேனோ என்று கண்ணீர்விட்டு அழுதேன். அந்தக் கண்ணீர் யாருடைய மனதையும் இளக வைக்கவில்லை. அங்கே கர்த்தராகிய இயேசு ஒரு வேதாகமத்தின் வாயிலாக "வேண்டும் வேண்டும் நீ எனக்கு வேண்டும்" என்றார். "உன் கண்ணீருக்கு என்னிடம் மதிப்பு உண்டு" என்றார். இன்று என்னை வேண்டும் வேண்டும் என்று சொல்ல அநேகர் உண்டு. அதற்கு ஒரே காரணம் அன்று இயேசு "நீ எனக்கு வேண்டும்" என்று சொன்னதுதான்.

சிந்தனைக்கு...

சோதனைகள் உன்னை தொய்ந்து போகச் செய்தால்; வேத வார்த்தைகளின்மேல் சாய்ந்து இளைப்பாறக் கற்றுக்கொள்.

ஜனவரி 30

சொகுசான வாழ்க்கை

1 தீமோத்தே யு 6:1–21

இவ்வுலகத்திலே ஐசுவரியமுள்ளவர்கள்...
1 தீமோத்தேயு 6:17

தமிழில் சினிமாப் படங்கள் வந்து ஜனங்கள் மத்தியில் பிரபலமான துவக்க நாட்களில், தமிழ் திரையுலகின் சூப்பர் ஸ்டார் அந்தஸ்தில் இருந்தவர் தியாகராஜ பாகவதர். அவருடைய தலைமுடி ஸ்டைலின் தாக்கம் இன்றும் தொடர்கின்றது. அவர் பாடிய பாடல்களை இன்றும் அநேகர் ரசிக்கின்றனர்.அவர் சுக போகமாக வாழ்ந்தவர். காம்புகள் நீக்கப்பட்ட மலர்களைப் படுக்கையில் விரித்து அவற்றின் மேல்தான் உறங்குவார். பன்னீரினால்தான் வாய் கழுவுவார். பல பெண்களோடு இணைத்துப் பேசப்பட்டவர். மிக ஆடம்பரமான வாழ்க்கை வாழ்ந்தவர் ஆனால், லட்சுமிகாந்தன் கொலை வழக்கில் குற்றஞ்சாட்டுப் பட்டு சிறைவாசம் அனு பவித்தார். சிறையிலிருந்து வந்த பின்பு, புஷ்பக்கட்டிலில் படுத்துத் தூங்கிய சூப்பர் ஸ்டார் மனிதன், கயிற்றுக் கட்டிலில்தான் மரிக்கும் வரை நித்திரை செய்தார்.

பட்டம் மிக உயரம் உயரமாகப் பறக்கும். ஆனால் ஏதோ ஒன்று அதனுடைய நூலை வெட்டிவிட்டதென்றால் எங்கோ போய் விழுந்துவிடும். வாழ்க்கை சூழ் நிலைகள் நிரந்தரமற்றவை. உலகத்தின் மிக முக்கிய பணக்காரர்களில் ஒருவராக எண்ணப்பட்ட பலர் கடன் மேல் கடன்பட்டு பிச்சைக்கார நிலைக்கு வந்து வாழ்வை முடித்திருக்கின்றனர். இன்று போல் என்றுமிருக்கும் என்று கூற முடியாது.

எனவே நமக்கு அமைகின்ற சூழ்நிலைகளின் அடிப்படையில் வாழ்க்கையை அமைக்காமல், எல்லாச் சூழ்நிலைகளிலும் அசையாதிருக்கத்தக்கதான சரியான ஒரு வாழ்க்கைக் கொள்கையை கொண்டிருக்க வேண்டும். ஆபிரகாம் செல்வச் சீமானாயிருந்தான். ஆயினும், சுகபோக ஜீவியாக வாழவில்லை. அவன் வாழ்க்கை என்பதைச் சரியான தெய்வீகக் கொள்கை சார்ந்து வாழ்ந்தான். கூடாரத்தில் சில காலம் தங்கிவிட்டு குடிபெயர்ந்து போக வேண்டிய யாக்கோபு, தனக்கென மாளிகை கட்டித் தங்கினான். ஆனால், திடீரென்று அங்கிருந்து ஓடிப்போக வேண்டிய கட்டாயம் நேரிட்டது.

ஊழியங்களை நேசிக்கின்ற ஒருவர், பல்லாயிரங்களை ஊழியங்களுக்காக வாரி வழங்குவார். ஆனாலும், அவர் சாதாரண வீட்டில் தங்கி, சாதாரண உணவை உண்டு, சாதாரண வாகனத்தில் பயணம் செய்து, சாதாரணமாக வாழ்வதில் உறுதி யாயிருப்பார். இன்றைய உலகத்தில் மிக மிகச் சொகுசாக வாழ்கின்றவர்களின் பட்டியலில் பலகிறிஸ்தவ ஊழியர்களும் பாஸ்டர்களும் உள்ளனர். அதனை அவர்கள் தேவனுடைய ஆசீர்வாதம் என்று எண்ணுகின்றனர். ஆனால், அவர்கள் ஆபிரகாமின் வாழ்க்கை முறைக் கொள்கையை கவனிக்க மனமின்றிப் போய்விட்டனர்

சிந்தனைக்கு...

பரிசுத்தமானவைகளை கண்கள் பார்த்துக் கொண்டிருந்தால்
பாவமானவைகளில் கால்கள் சிக்குவதில்லை.

ஜனவரி 31

அவர் தரும் அமைதி

மத்தேயு-11 :25-30

என்னிடத்தில் வாருங்கள், இளைப்பாறுதல் தருவேன்
மத்தேயு 11:28

மனதை வருத்தும்படியான பிரச்சினைகள் எதுவும் இல்லாமல் அமைதியாக இருந்த வேளைகள் உண்டு. மனதில் சுமப்பதெற்கென்று இல்லாமல் சுகமாக இருந்த வேளைகள் உண்டு, ஆனால் இது போன்ற அமைதியான வேளைகள் எனக்குள் ஒரு வெறுமையை உணர வைத்திருக்கின்றது. எந்தச் சோர்வுக்குரிய காரியங்களும் இல்லாமல் அமைதியாக இருந்த வேளைகள் எனக்கு பொழுது போகாத வேளைகளாக இருந்திருக்கின்றது.

ஆனால், சில காலகட்டங்களில் நான் எனக்குள் அனுபவித்த அமைதியின் வேளைகள் என்றும் மனதை விட்டு மறைவதில்லை. அதுபோன்ற வேளைகளில் நான் எதையும் செய்யாமல் வித்தியாசமான ஒரு மன நிலை யோடு அந்த அமைதி யை அனுபவித்திருக்கின்றேன். அந்த அமைதியின் வேளைகளில்தான் எனக்குள் உண்மையின் வெளிச்சம் அதிகமாக வீசும். அந்த வேளைகளில்தான் என்னை நான் சரியாக இருக்கின்றபடியே பார்க்க முடிந்தது. அந்த வேளைகளில் எனக் குள்ளிருந்து கடினமான மனநிலைகள் வெளியேறுவதையும், தாழ்மையுணர்வு எனக்குள் வருவதையும் உணர்ந்திருக்கின்றேன்.

ஆனால், அப்படிப்பட்ட அமைதியான மனநிலைகளை நான் பெற்ற சூழ் நிலைகள் எதுவென்பது தெரியுமா? நான் ஒடுக்கப்பட்ட வேளைகள். மனதில் நெருக்கப்பட்ட வேளைகள். ஆயிரம் சுமைகள் சேர்ந்து இருதயத்தைப் பாரப்படுத்தி யது போன்ற வேளைகள். யாரோ ஒருவருடைய வார்த்தைகளால், செயல்களால் மனதில் காயப்பட்டதை உணர்ந்த வேளைகள். மனதில் மாசற்று இருந்தும் தவறாகப் பார்க்கப்பட்டதும் பேசப்பட்டதுமான வேளைகள். நலமானதைச் செய்திருந்தும் அது தீமையானதுபோல சித்தரிக்கப்பட்ட வேளைகள். எல்லாம் எதிராகச் செயல்படுவது போல சிந்தித்து சலிப்புடன் போதும் என்று உட்கார்ந்துவிட்ட வேளைகள்.

இதுபோன்று அமைதிக்கு ஆபத்து ஏற்பட்ட எதிர்மாறான வேளைகளில்தான், மேலே சொன்னவிதமான வித்தியாசமான அமைதியான மனநிலையை நான் உணர்ந்திருக்கின்றேன். அமைதிக்குத் தொந்தரவு ஏற்பட்ட சூழ்நிலைகளில் ஏன் இப்படி ஆண்டவரே, என்ற கேள்வியோடு இயேசுவை நோக்கிப் பார்த்த வேளை களில்தான் இவ்விதமான தெய்வீக அமைதியை அனுபவித்திருக்கின்றேன். வருத்தப்பட்டுப் பாரம் சுமக்கிறவர்களே என்னிடம் வாருங்கள், “இளைப்பாறுதல் தருகிறேன்” என்று வாக்குறுதி தந்த இயேசுவின் வார்த்தைகள் எத்தனை உண்மை யானது என்பதை அங்கே உணர முடிந்தது.

சிந்தனைக்கு...

தேவ வார்த்தையை இதயத்தில் நீ சுமந்தால்
இறைவன் உன்னைச் சுமப்பதை அதனால் உணர முடியும்.

பிப்ரவரி 1
அன்பும் பக்தியும்

லூக்கா 11:37-54

நியாயத்தையும் தேவ அன்பையும் விட்டு விடுகிறீர்கள்...
லூக்கா 11:42

அவர் ஒரு கிறிஸ்தவ வியாபாரி. கிறிஸ்தவ ஒழுங்குகள் சிலவற்றில் மிகவும் வைராக்கியமானவர். தங்கத்தை அள்ளிக் கொடுத்தால் கூட ஞாயிறு அன்று கடை திறக்கமாட்டார். காலையில் கடையில் ஜெபம் செய்துவிட்டுதான் வியாபாரம் துவங்குவார். தாராளமாகத் காணிக்கை கொடுப்பார். மிஷனரி ஸ்தாபனங்களுக்கும் தாராளமாக வழங்குவார். பல நிலைகளில் அவர் ஒரு வைராக்கியமான கிறிஸ்தவராக அறியப்பட்டுள்ளார். ஆனால், வியாபாரம் செய்கிற விதத்தில் கிறிஸ்தவர்கள் அல்லாதவர்களிடத்தில் காணப்படும் உண்மை, நேர்மை கூட அவரிடம் காணப்படுவதில்லை. தன்னிடம் வேலை செய்கிறவர்களை அளவுக்கு அதிகமாக மிரட்டி நடத்துவார். அன்பாக நடந்து கொள்வது, அவருக்குப் பழக்கமில்லாத விஷயங்கள்.

சில மத ஒழுங்குகளில் கண்டிப்பாயிருப்பதும், சில நம்பிக்கைகளில் வைராக்கியமாயிருப்பதும் உண்மையான கிறிஸ்தவ வாழ்க்கைக்கு அடையாளங்கள் ஆகிவிடாது. நாம் எவ்வளவு பக்திப் பரவசமாக வாழ்கின்றோம் என்பதைவிட, நம்முடைய வாழ்க்கை யில் நம்முடைய குணங்களும், சுபாவங்களும் நடந்து கொள்ளும் விதங்களும் கிறிஸ்துவின்மேல் நாம் வைத்திருக்கின்ற பக்தியை எந்த அளவிற்குப் பிரதிபலிக்கின்றது என்பதே முக்கியம். நாம் சில ஒழுங்குகளில் எவ்வளவு வைராக்கியமாக இருக்கின்றோம் என்பதைவிட உண்மை, நேர்மை நிலைகளிலும், அன்பு, தயவு, தாழ்மை நிலைகளிலும், எந்த அளவிற்கு கிறிஸ்துவின் வார்த்தைகளுக்கேற்றவர்களாய் இருக்கிறோம் என்பதே முக்கியம்.

நாம் ஒருவரிலொருவர் அன்பா யிருப்பதுதான் நாம் கிறிஸ்துவின் சீடர்களா யிருப்பதின் அடையாளம் என்று இயேசு கூறினார். (யோ 13:35) அன்றைய பரிசேயர்கள் உண்மையிலேயே மிகுந்த தேவபக்தி உடையவர்கள் தான். ஜெபம், உபவாசம், காணிக்கை யாவற்றிலும் வைராக்கியமாயிருப்பார்கள். ஆனாலும், அவர்களிடம் தேவ அன்பும், நியாயமாக நடந்து கொள்ளுதலும் இல்லை என்று இயேசு குற்றஞ்சாட்டினார். (லூக் 11:42) நியாயமான செயல்பாடுகளும், அன்பான நடைமுறைகளும் இல்லாத பட்சத்தில் மார்க்க சம்பந்தமான எல்லாப் பக்திச் செயல்பாடுகளும் வீணானவைகளாக மாறிவிடுகின்றன.

ஏனென்றால், ஒருவர் தேவனோடு உண்மையான ஐக்கியம் இல்லாத நிலையில் கூட உபவாசம், ஜெபம், காணிக்கை, ஆராதனை என பல காரியங்களில் தீவிரமாக இருக்க முடியும். ஆனால், தேவனோடு உண்மையான உறவும், பிணைப்பும் இல்லாதபோது பிறரை உரிய விதமாக நேசிக்கவோ, குணம், சுபாவம், கொள்கை நிலைகளில் தெய்வீகத் தன்மைகளை வெளிப்படுத்தவோ முடியாது.

சிந்தனைக்கு...

இறை அன்பை ருசிப்பதில் முன்னோக்கிச் செல்கிறவர்கள் மனிதர்களை நேசிப்பதில் பின்தங்கிப் போகமாட்டார்கள்.

பிப்ரவரி 2
கர்த்தரைத் துதிப்பேன்

II நாளாகமம் 20:14-26

நான் இன்னும் அவரைத் துதிப்பேன்...
சங்கீதம் 42:5

- நான் எல்லோராலும் கைவிடப்பட்டுத் தனிமையில் விட்டுவிடப்பட்டிருப்பது உண்மைதான். ஆயினும், என் கர்த்தர் எனக்குத் துணையாயிருக்கின்றார் என்பதும் உண்மை. எனவே, நான் கர்த்தரைத் துதிக்கின்றேன்.
- என் பலம் யாவும் நீங்கிப் போய் என் நம்பிக்கைகள் நலிந்துபோய் விட்டது உண்மைதான். ஆயினும் கர்த்தரே என் நம்பிக்கையாயிருந்து என்னைத் தாங்குகின்றார். எனவே, நான் கர்த்தரைத் துதிக்கின்றேன்.
- என்னால் புரிந்துகொள்ள இயலாத துன்பங்கள் என்னைச் சூழ்ந்திருப்பது உண்மைதான். ஆயினும், என் மனநிலையைப் புரிந்துகொள்ளும் ஆண்டவர் என்னோடிருக்கின்றார். எனவே, நான் கர்த்தரைத் துதிக்கின்றேன்.
- என் வாழ்வாதாரங்கள் அற்றுப்போயின. என்னைத் தாங்கி நின்ற தூண்கள் யாவும் சாய்ந்து போயின. ஆயினும், என் ஆதாரமாக கர்த்தரை நான் ஏற்றுக் கொண்டதால் நான் விழுவதில்லை. எனவே, நான் கர்த்தரைத் துதிக்கின்றேன்.
- ஏன் என் ஜெபங்கள் கேட்கப்படவில்லை, ஏன் என் தேவன் இரங்கி எனக்கு உதவி செய்யவில்லை என்ற கேள்விகள் எனக்குள் எழுவது உண்மைதான். ஆயினும், கர்த்தர் ஒருபோதும் தவறு செய்ய இயலாது. எனவே, நான் கர்த்தரைத் துதிக்கின்றேன்.
- நான் சமாதானமான சூழ்நிலைகளில் வாழவில்லை என்பதும், நான் சந்தோஷ மான நிலமைகளில் வைக்கப்படவில்லை என்பதும் உண்மைதான். ஆயினும் எனக்குள் கர்த்தர் சமாதானத்தையும், சந்தோஷத்தையும் தருகிறார். எனவே, நான் கர்த்தரைத் துதிக்கின்றேன்.
- நான் கேட்டவைகள் எல்லாம் கிடைக்கவில்லை என்பதும் நான் எதிர்பார்த்தது எல்லாம் தரப்படவில்லை என்பதும், உண்மை தான். ஆயினும், அவைகளை ஏற்றுக் கொள்ளவும், அவைகளால் கவலைப்படாதிருக்கவும் நல்ல ஒரு இருதயத்தைத் தந்துள்ளார். எனவே, நான் கர்த்தரைத் துதிக்கின்றேன்.
- சிலருடைய அநீதிகளை கர்த்தர் தடுக்கவில்லை என்பதும் சிலரால் நான் கஷ்டப் படுவதை அவர் தவிர்க்கவில்லை என்பதும், உண்மைதான். ஆயினும், அவர் ஒரு நாள் என் நீதியை விளங்கப்பண்ணி, என் வழக்கை விசாரிப்பார் என்ற நல்ல நம்பிக்கை உள்ளது. எனவே நான் கர்த்தரைத் துதிக்கின்றேன்.

சிந்தனைக்கு...

பிரச்சனைகள் வாழ்க்கையில் இல்லையெனில், அந்த வாழ்க்கையே மனிதனுக்குப் பிரச்சனையாகிவிடுகிறது.

பிப்ரவரி 3

தன் தவறை உணராமல்

நீதிமொழிகள் 12:15-28

**மதியீனனுடைய வழி அவன் பார்வைக்குச் செம்மையாயிருக்கும்.
நீதிமொழிகள் 12:15**

விமானத்தில் பயணம் செய்துகொண்டிருந்த ஒரு பயணி தான் அமர்ந்திருந்த இடத்தில் துர்நாற்றம் வீசுவதை உணர்ந்தார். அதனைச் சகிக்க இயலாமல் எங்கிருந்து அந்த வாசனை வருகிறது என்று சக பயணிகளின் பக்கத்தில் போய் முகர்ந்து பார்த்தார். எங்கிருந்து வருகிறது என்று கண்டுபிடிக்க இயலாததால் விமானப் பணிப்பெண்ணை அழைத்து தனக்கு வேறெங்காவது சீட் ஒதுக்கித் தரக் கேட்டார். பின்பகுதியில் சீட் ஒன்று காலியாயிருந்ததால், அங்கு போய் அமர அனுமதிக்கப்பட்டார். அவர் அங்கிருந்து போனதும் முதலாவது அமர்ந்திருந்த இடத்தில் துர்வாசனை வீசுவது நின்றது. ஏனென்றால் அவருடைய ஷு-வும் சாக்சும் வியர்வையால் நிறைந்திருந்ததால் தான் அவ்விதம் துர்வாசனை வந்திருக்கிறது

சிலருடைய நிலைமை இதுதான். எந்த ஒரு பிரச்சினைக்கும், எந்த ஒரு தோல்விக்கும் அவர்கள் தங்களைக் காரணமாகப் பார்க்கமாட்டார்கள். மற்றவர்கள்தான் சரியில்லை, மற்றவர்களால்தான் பிரச்சினை வருகிறது. மற்றவர்களால்தான் மனக்கஷ்டம் நேரிடுகிறது என்று சிந்திப்பார்கள்.

ஆனால், எந்த ஒன்றுக்கும் நாம் மற்றவர்களையே காரணம் என எண்ணிவிடக் கூடாது. நம்மையும் நாம் சோதித்துப் பார்க்க வேண்டும். நாம் பிரச்சினைகளுக்கு ஏதாவது ஒரு விதத்தில் காரணமாகயில்லையா என்று யோசித்துப் பார்க்க வேண்டும். அநீதி, அக்கிரமம், துரோகம் ஆகிய துர்வாசனைகள் தன்னிடம் வீசுவதை தாவீது உணரவில்லை. ஆனால், யாரோ ஒருவர் அநீதி செய்ததாக நாத்தான் தீர்க்கன் சொன்னபோது, அதனைச் சகிக்க இயலாமல் தண்டனை வழங்க முன்வந்தான்.

சில குடும்பங்களில் சமாதானக் குறைவிற்கும், சந்தோஷமின்மைக்கும், போராட்டமான சூழ்நிலைகளுக்கும் மனைவிதான் காரணம் என்பான் கணவன். கணவன்தான் காரணம் என்பாள் மனைவி. ஆனால், இருவருமே அங்கு பிரச்சினைகளுக்கு காரணமாயிருப்பதுண்டு. தங்களைச் சுயபரிசோதனை செய்யாமையாலும், தங்களிடம் உள்ள தவறுகளை உணர மறப்பதாலும் இந்த நிலைமை ஏற்படுகிறது.

நம்மையும், நம்முடைய இருதயத்தையும், நம்முடைய குணங்களையும், நம்முடைய மனப்பான்மைகளையும் நாம் சற்று நேர்மையான மனதோடு தேவ சமுகத்தில் ஆராய்ந்தால், நம்மிடம் வீசும் துர்வாசனையை நாம் கண்டறிய முடியும்.

நம்மைக் குறித்து வேறு யாரும் சாட்சி தர தேவையில்லை. நம்மை நாமே சோதித்துப் பார்த்தால், நம்முடைய உண்மையான மனநிலை என்னவென்பதை நாமே அறியலாம்.

சிந்தனைக்கு...

பலவீனங்களால் தோல்வி வரும். அதனை உணர மறுப்பதால் தோல்விகள் நிரந்தரமாகும்.

பிப்ரவரி 4

நாமும் - தேவனும்

எண்ணாகமம் 13:1-33

நாங்கள் எங்கள் பார்வைக்கு வெட்டுக்கிளிகளைப் போல் இருந்தோம்...
எண்ணாகமம் 13 : 33

சில நேரங்களில் நாம் நமக்கு முன்பாக வரும் கஷ்டங்களையும், சோதனைகளையும், சிக்கல்களையும், பிரச்சினைகளையும் மிகப்பெரியவைகளாகப் பார்க்கின்றோம். உண்மையிலே அவைகள் பெரியவைகள் என்பது பொய்யல்ல. ஆனால், நாம் சராசரி மனிதனைப் போல பார்க்கின்றோம். பிரச்சினைகளை மலைகளைப் போல பார்க்கும் நம்முடைய கண்கள், நம்மையோ மிக அற்பமான ஒரு பூச்சியைப் போல பார்க் கின்றது. ஆனால், நாம் கர்த்தருடைய பிள்ளைகளானால் அங்கே பிரச்சினைகளுக்கு முன்பு “நான்” என்ற விதமாகப் பாராமல் பிரச்சினைகளுக்கு முன்பாக “நானும் என் தேவனும்” என்ற விதமாகவே பார்க்கவேண்டும். அதுதான் விசுவாசப் பார்வை.

அவ்விதமான ஒரு விசுவாசப் பார்வை இருந்த காரணத்தினால்தான் மகா அரக்கனாகிய கோலியாத்தை எதிர்த்து நிற்க தாவீது துணிந்தான். சவுல் கோலியாத்தின் உயரத்தையும், வாட்டசாட்டமான தோற்றத்தையும், பயங்கரமான ஆயுதங்களையும் பார்த்துப் பிரமித்தான். அங்கே அவன் தன்னை அற்பமாகப் பார்த்தான். எனவே, பயந்து கலங்கினான். சவுலோடு ஒப்பிடும்போது தாவீது மிகச் சாதாரணமானவன். ஆயினும், கோலியாத்தை வெல்ல முடியும் என்று அவன் நம்பினான். ஏனென்றால், கோலியாத்தை நானும் தேவனும் சேர்ந்து சந்திப்போம் என்ற விசுவாச சிந்தை அவனிடம் இருந்தது. எனவே, கோலியாத் அவனைவிட நூறு மடங்கு பலவானா யிருந்தபோதும், அவனால் அவனை எளிதாக மேற்கொள்ள முடிந்தது.

கானான் தேசத்தை வேவு பார்க்கச் சென்ற பன்னிரெண்டு பேரில், பத்துப் பேர் அந்த தேசத்தைக் கைப்பற்ற முடியாது எனக் கூறினர். அவர்கள் அத்தேச மக்களை பலவான்களாகவும், தங்களையோ அவர்களுக்கு முன்பாக வெட்டுக்கிளிகளாகவும் கண்டனர். தங்களை வெட்டுக்கிளிகளாகப் பார்த்தது சரிதான். ஆனால், தங்களோடு தேவன் இருக்கிறார் என்ற விசுவாசம் இருந்திருந்தால், அவர்கள் அந்த தேசத்தைக் கைப்பற்ற முடியும் எனக் கூறியிருப்பார்கள். ஆனால், யோசுவாவுக்கும், காலேப்பிற்கும் அந்த விசுவாசப் பார்வை இருந்தது. எனவே, கர்த்தர் நம்மோடே இருக்கிறார். பயப்படத் தேவையில்லை எனக் கூறினர் (எண்-14:9)

நாம் விசுவாசிகளாக மட்டுமல்ல. விசுவாசப் பார்வையுடையவர்களாகவும் விளங்க வேண்டும். பிரச்சினை மிகப்பெரியதாக இருக்கலாம். இருக்கட்டும். ஆனால், நாம் இங்கு தனியாக அல்ல. நாமும் தேவனுமாக இந்தப் பிரச்சினைகளுக்கு முன்பாக நிற்க முடியும். நாமும் தேவனுமாக இந்தச் சோதனை களைத் தைரியமாகச் சந்தித்து கடந்து போக முடியும். எதிரே இருக்கிற சோதனை மலையை மட்டும் பார்க்க வேண்டாம். நம்மோடிருக்கிற கன்மலையாகிய கர்த்தரையும் பார்ப்போம்.

சிந்தனைக்கு...

சவுல் போன்றவர்களின் பெரும் படையைவிட தாவீது போன்றவர்களின் சிறிய கற்களே தடையை உடைக்கிறது.

பிப்ரவரி 5

நல்லதை மட்டும்

11 நாளாகமம் 18:17-31

கர்த்தரைப் பகைக்கிறவர்களை நீர் சினேகிக்கலாமா
11 நாளாகமம் 19:2

ஒரு சிறுவன் ஆப்பிள் பழம் ஒன்றை வாங்கினான். ஆனால், அந்த ஆப்பிள் பழத்தின் முக்கால் பகுதியும் கெட்டுப் போயிருந்தது. இதை ஏன் வாங்கினாய். இது கெட்டுப் போய் இருக்கிறதே என்றார் தகப்பன். அதற்கு அவன் இந்த ஆப்பிளின் கால் பகுதிதானே எனக்குப் பங்காகக் கிடைக்கும். அந்த கால் பகுதி நன்றாய்த்தானே இருக்கிறது என்றான் அவன். ஆம், அவனுக்குச் சேர வேண்டிய கால் பகுதி நன்றாய் இருந்தால் போதும் என்பது அவனுடைய கணக்கு. சிலர் இப்படித்தான், ஒருவர் யாருக்கு எவ்வளவு மோசமானவர் என்பதைக் குறித்து கவலைப்படுவதில்லை. அவர்களுக்கு அவர் நன்றாயிருப்பது போதும். சிலருக்கு ஒருவருடைய நல்ல பகுதி மட்டும்தான் முக்கியம். அதனை அவர்கள் பயன்படுத்திக்கொள்வார்கள். அந்த நபரின் மோசமான பிறபகுதிகளினால் மற்றவர்கள் பாதிக்கப்படுவார்கள் என்பதில் அவர்களுக்குக் கவலையில்லை.

ஆகாப் ராஜாவின் வாழ்க்கைமுறை மோசமானது. அவனுடைய செயல்கள் தேவ விரோதமானவை. ஆனால், யோசபாத்திற்கு அவன் நல்ல நண்பன். யாருக்கு அவன் எப்படியிருந்தால் என்ன, எனக்கு அவன் நல்ல நண்பன் என்ற திருப்தி யோசபாத்திற்கு. ஆனால் ஆகாபின் ஐக்கியம் அவனுக்கு ஆபத்தான விளைவு களை ஏற்படுத்த வந்தது. தேவனுக்கு விரோதமாகச் செயல்படும் ஆகாமின் செயல்கள் தண்டனையை வரவழைத்தன. தேவன் யோசபாத்தின் நலமான சில செயல்களின் விளைவாக யோசபாத்தை தண்டிக்கவில்லை

சிலர் மற்றவர்களிடமுள்ள நல்லதை மட்டும் பார்க்க வேண்டும் என்பார்கள். இது நல்ல தோற்றமுடைய ஓர் மோசமான அறிவுரை ஆகும். நல்லதை மட்டுமல்ல, தீயதையும் பார்க்க வேண்டும் என்பதே சரியான கூற்று. ஏனென்றால், பலவித மான தீய அம்சங்களை உடைய ஒருவரிடமும் நல்ல சில அம்சங்களும் இருக்கும். அந்த நல்ல அம்சங்களை மட்டும் முக்கியமாக எண்ணினால், அவரிடமுள்ள தீய அம்சங்கள் நமக்குப் பாதிப்புகள் ஏற்படுத்தாமல் போகாது.

எந்த ஒரு மனிதனுக்கும் எதிராக எதையாவது ஒன்றைக் கேடாகச் செய்யும் சுபாவமுடைய ஒருவர், சபையில் ம ட்டும் மிக நல்ல பரிசுத்தவானாகச் செயல்படுவார். அந்த சபைப் பாஸ்டரும், சபையில் அவர் நல்ல ஒரு விசுவாசி. அதைத்தான் நாம் பார்க்க வேண்டும் என்று கூறி, சபையில் அவரை அதிகமாக அதிகாரம் செய்யவிட்டார். ஆனால் ஒரு நாள் அந்த பாஸ்டரும் அவரால் மிகுதியாகப் பாதிக்கப்பட்டு துக்க மடைய நேரிட்டது. ஆம். ஒருவர் நமக்கு மட்டும் நல்லவராயிருந்தால் போதாது. அவர் தேவனுக்கு முன்பாக எப்படியிருக்கின்றார் என்ற பார்வையே முக்கியமானது.

சிந்தனைக்கு...

பலர் புகழ்வதால் நீ சரியாக இருக்கிறாய் என்றோ
சிலர் இகழ்வதால் நீ சரியில்லை என்றோ கூற முடியாது.

பிப்ரவரி 6
பாவம் என்றால்...

யாக்கோபு 1:10-27

பாவம் பூரணமாகும் போது...
யாக்கோபு 1:15

ஒருவர் கால் தடுமாறியதால் ஒரு சிறிய குழியில் விழலாம் அல்லது அவர் ஒரு பெரிய குழியில் விழலாம். இப்போது இவர் சின்னக் குழியிலோ அல்லது பெரிய குழியிலோ விழுந்ததற்கு அடிப்படைக்காரணம் கால் தடுமாறியதுதான். ஒருவர் கவனமாக நடக்காததின் விளைவாக கீழே விழுந்து, லோசாக கையில் சிராய்ப்பு ஏற்படலாம். இல்லையேல் கை எலும்பே உடைந்து போகலாம். சிராய்ப்பு ஏற்பட்டிருந்தாலும், கை எலும்பு உடைந்து போயிருந்தாலும் அடிப்படைக் காரணம் கவனக் குறைவுதான்.

அதுபோலவே, ஒருவர் பொய்யைப் பேசி தவறியிருக்கலாம். இன்னொருவர் பாலியல் பாவத்தில் தவறியிருக்கலாம். ஒருவர் வாயினால் சண்டை போட்டு கோபத்தை வாரியிறைத்திருக்கலாம். இன்னொருவர் கட்டிப்புரண்டு சண்டையிட்டு கோபத்தின் அழுத்தத்தைக் காட்டியிருக்கலாம். ஆனால், வாயினால் சண்டை போடக் காரண மாயிருந்ததும் பாவம்தான். கட்டிப்புரண்டு சண்டைபோடச் செய்ததும் பாவம்தான். பாவம் என்பதை என்ன நிகழ்ந்தது என்ற அடிப்படையில் கணக்கிட முடியாது. ஒரு நிகழ்விற்கு அது தூண்டுதல் கொடுத்தது என்பதே முக்கியம்.

ஒரு மனிதன் கர்த்தருடைய ஐக்கியத்தில் இல்லாவிட்டால், பாவம் அந்த மனிதனை ஆளுகை செய்யும். பாவத்தின் ஆளுகையின் விளைவான செயல்கள் சாதாரணமாகவோ, கடுமையானதாகவோ இருக்க முடியும். ஆனால், அடிப்படைக் காரணம் பாவமே. எனவே, பொய் சொன்ன ஒருவரும் பாவிதான். பெரும் பொருள் மோசடி செய்தவரும் பாவிதான். ஆகையால், ஒரு தவறு எந்த அளவு கடுமையானது என்ற அடிப்படையில் பாராமல், அதற்குக் காரணமாயிருந்த பாவத்தைக் குறித்தே கவலைப்பட வேண்டும்.

சமுதாயத்தில் பாமரர்களின் சின்னச் சின்னத் தவறுகள் யாவும் கறுப்பு நிறத் தவறுகளாக எண்ணப்படுகிறது. ஆனால், கல்வி கற்றவர்களின் பெரிய தவறுகளோ வெள்ளை நிறத் தவறுகள் என்று எண்ணப்படுகிறது. தவறு செய்கின்றவர்களின் அந்தஸ்தின் அடிப்படையில் தவறுகளின் நிறங்கள் மாறியிருக்கலாம். ஆயினும், அவற்றின் தன்மையும், பயங்கரமும் ஒன்றுதான். எனவே, ஒரு சிலரைப் போல நாம் பயங்கரத்தன்மை உடைய தவறுகளையோ அல்லது மிக மோசமாகக் கருதப்படும் தவறுகளையோ செய்யவில்லை என்பதற்காக, நாம் பரிசுத்தவான்கள் என்று எண்ணி விட முடியாது. ஒரு சிறு தவறாயினும் அந்த தவறுக்கு தேவனோடு வாழாத பாவம்தான் காரணமாயிருக்கின்றது. ஒரு சின்ன தவறாயினும், தேவ ஆளுகை நம்மிடம் இல்லாததின் விளைவாகவே அது நிகழ்ந்தது என்பதை அறியவேண்டும்.

சிந்தனைக்கு...

சரியான சுபாவங்களைக் குறித்து நீ கவலைப்படாவிட்டால் சரியற்ற பாவங்களால் நீ கவலைப்பட நேரிடும்.

பிப்ரவரி 7

யார் ஆறுதல்?

சங்கீதம் 102:1-28

தனித்திருக்கும் குருவியைப் போல் இருக்கிறேன்...
சங்கீதம் 102 : 7

என்னுடைய ஊழியப் பயணத்தின் துவக்க காலங்களில் சில வேளை என்னுடைய வியாகுலங்கள் எனக்குள் தாங்கிக் கொள்வதற்கு முடியாதவையாகத் தோன்றியதுண்டு. அந்நேரங்களில் யாரிடமாவது என் மன வேதனையின் சூழ்நிலைகளைப் பகிர்ந்து கொண்டு சற்று ஆறுதலைப் பெற விரும்பியதுண்டு. ஆனால், அத்தகைய நபர் களை என்னால் கண்டுபிடிக்க முடியவில்லை. எனவே, மனதிற்குள் அடக்கிக் கொள்ளவும் முடியாமல், வெளிப்படுத்தவும் யாரும் இல்லாமல் மிகுதியாக அங்கலாய்த்த வேளை கள் உண்டு. ஆண்டவருடைய பாதத்தில் திரும்பத் திரும்பச் சொல்லி, சொல்லி ஆறுதல் தேடுவதைத் தவிர வேறு வழியேதும் இல்லாமல் போன வேளைகள் உண்டு. ஆனால், அதனால் கற்ற பாடமும், பெற்ற அனுபவமும்தான் இன்று அநேகருக்குப் பயனுள்ளதாக விளங்குகிறது.

எனவேதான் ஆறுதல் சொல்ல யாருமற்ற நேரத்திலும், ஆறுதலடைய முடியாதது போன்ற சூழ்நிலையிலும் கர்த்தர் நம்மை ஆற்றவும், தேற்றவும் போது மானவர் என்று திரும்பத் திரும்ப என்னால் கூறமுடிகிறது. "நீ கடந்து செல்லுகின்ற பாதை எவ்வளவு கசப்பானதாகவும், கண்ணீர் நிறைந்ததாகவும் இருந்தாலும் உன்னை என்னால் திடப்படுத்தி நிறுத்த முடியும். நான் மட்டுமே உனக்குப் போது மானவராக இருந்து உன்னைத் தாங்க முடியும்" என்ற உண்மையை போதிக்கவே தேவன் அத்தகைய சூழ்நிலைகள் வழியாக என்னைக் கடந்து போக வைத்தார்.

ஒருவேளை இன்று நீங்கள்கூட இது போன்றதொரு துயரமான பாதையைக் கடந்து வந்து கொண்டிருக்கலாம். குறைந்த பட்சம் என் மன சஞ்சலங்களையும், நொந்து போன உணர்வுகளையும் பகிர்ந்து கொள்ளக்கூட சரியான ஒருவர் இல்லையே என நீங்கள் அங்கலாய்க்கலாம். ஏன்தான் தேவன் இந்த அளவு என்னை ஆறுதலற்ற ஒரு சூழ்நிலையில் தள்ளி விட்டுவிட்டார் என உங்கள் உள்மனம் மௌனமாகக் கதறிக் கொண்டிருக்கலாம்.

ஆனால், ஒன்றுமட்டும் உண்மை. கர்த்தர் உங்களுக்குப் போதுமானவர். அவருடைய ஆறுதலும் தேறுதலும் உங்களுக்குப் போதுமானது என்றும், அவைதான் உங்களுக்குத் தேவையானதும் என்றும் அவர் எண்ணியிருக்கலாம். அவருடைய பாதத்தில்தான் நீங்கள் உண்மையான ஆறுதலையும், அன்பையும் உணர முடியும் என்பதால் அவர் இப்படி உங்களைத் தனியாக விட்டிருக்கலாம். ஆம். விசுவாசியுங்கள். அவருடைய பாதத்தில் உங்கள் ஆறுதலைத் தேடுங்கள். நிச்சயம் நீங்கள் ஆறுதலடைந்து நிமிர்ந்து நிற்பீர்கள்.

சிந்தனைக்கு...

அரைகுறை அன்பாளர்களின் ஆறுதலுக்காக ஏங்காதே, பூரண அன்பாளராம் கர்த்தரின் சமுகத்தை விட்டு ஒருபோதும் நீங்காதே.

பிப்ரவரி 8

தேவனுக்கேற்ற இலக்கு

எபிரெயர் 13 : 1 – 8

நீங்கள் பண ஆசை இல்லாதவர்களாய்....
எபிரெயர் 13 : 5

தனது குடும்பத்திற்காக நிறையச் சம்பாதிக்க வேண்டும் என்று ஆசைப்பட்ட ஒருவர் வெளிநாட்டிற்குப் போக விரும்பினார். அவர் விரும்பியபடி வெளிநாடு செல்லும் வாய்ப்பும் கிட்டியது. அங்கு நல்ல வேலையும் கிடைத்தது. கர்த்தர் தன்னுடைய முயற்சிகளை ஆசீர்வதித்துத் தனக்கு ஆதரவாயிருக்கின்றார் என்று எண்ணி அவர் மகிழ்ச்சியடைந்தார்.

ஆனால், செல்வநிலை அதிகரித்து வந்த சூழ்நிலையில், ஒழுக்கம் தொடர்பான விஷயங்களில் பிள்ளைகளின் வாழ்க்கைமுறை மோசமாக மாறியது. அது அவரை அதிகமாக விசனப்படுத்தியது. தன்னுடைய கையின் பிரயாசங்களை யெல்லாம் ஆசீர்வதித்த தேவன், பிள்ளைகளை ஏன் தவறாகப் போக விட்டுவிட்டார் என்ற வேதனை அவரை வருத்தப்படுத்தியது

ஒரு குடும்பத்தைச் சரியாக நடத்திச் செல்ல வேண்டும் என்பதைவிட, குடும் பத்திற்காக அதிகமாகச் சம்பாதிக்க வேண்டும் என்ற ஒரு இலக்கு சரியானதல்ல என்பதை இங்கே உணர வேண்டும். வாழ்க்கையில் எதற்கு அதிக முக்கியத்துவம் தர வேண்டும் என்பதில் நமக்குச் சரியான ஒரு சிந்தனை வேண்டும். நாம் நினைத்தபடி காரியங்கள் சாதகமாக நடப்பதாலும், முயற்சிகளில் வெற்றி காண்பதாலும் கர்த்தர் நம்முடைய இலக்குகளை ஆதரித்திருக்கின்றார் என்று அர்த்தம் அல்ல.

பண ஆசையும், மற்றவர்களைப் போல அந்தஸ்து நிலைகளை அடைய வேண்டும் என்ற ஆசையும் பலரைக் குடும்பத்தைவிட்டும், பிள்ளைகளைக் கண் காணித்து வளர்க்கும் பொறுப்புகளை விட்டும் பிரித்து விடுகிறது. பணத்தை இலக்காகக் கொண்ட ஒரு வாழ்க்கை ஆவிக்கேற்றது அல்ல. அப்படிப்பட்ட இலக்குகளின் விளைவாகக் குடும்பத்திலும், பிள்ளைகள் மத்தியிலும் ஏற்படும் விரும்பத்தகாத நிகழ்வுகளுக்கு தேவனைக் குறைகூறுவது சரியல்ல.

தேவனை விசுவாசிக்கின்றவர்களும், அவருடைய ஆசீர்வாதங்களைத் தேடு கின்றவர்களும் தேவனுக்கேற்றபடி சிந்திக்கவும், தேவனுக்குப் பிரியமான விதத்தில் இலக்குகளை அமைக்கவும் வேண்டும். சிலர் சபைகளைக் கட்டி எழுப்புவதிலும், பெரிய ஊழிய ஸ்தாபனங்களை உருவாக்குவதிலும் வெற்றிகண்டு குடும்பச் சூழ்நிலைகளிலும், பிள்ளைகளின் விஷயத்திலும் தோல்வி கண்டிருக்கின்றார்கள். குடும்ப வாழ்வைக் குறித்த தரிசனம் எதுவுமின்றி, ஏதோ சாதிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் மட்டும் செயல்படுவது அதற்கு முக்கியமான ஒரு காரணமாகும்.

சிந்தனைக்கு...

இறைவனுடைய காரியங்கள்மேல் உன் கவனம் சரியாயிருந்தால் உன் தேவைகள்மேல் அவருடைய கவனம் அதிகமாயிருக்கும்.

பிப்ரவரி 9
ஐக்கியமே அவரின் பதில்

யோவான் 14:12-23

அவனுக்கு என்னை வெளிப்படுத்துவேன்.
யோவான் 14:21

என்னுடைய ஆவிக்குரிய வாழ்க்கையின் துவக்க காலம் மிகுந்த சோதனைகளும் போராட்டங்களும் நிறைந்ததாக இருந்தது. அந்நாட்களில் எனக்குள் கேள்விகள் ஏராளமாய் எழும்பும். ஆண்டவரே எனக்கு ஏன் இப்படி நடந்து கொண்டிருக்கின்றது? நான் எதிர்பார்த்த பல நன்மைகளை ஏன் எனக்குத் தரவில்லை? இப்படியாகப் போய்க் கொண்டிருந்தால் என் நிலமை என்னவாகும்? என் நம்பிக்கைகள் யாவும் வீண்தானா? இவ்விதமாக பல கேள்விகள் எழும்பும். ஆனால், அவைகளுக்கு விடைகளோ கிடைப்பதில்லை.

ஆனால், இப்படிப்பட்ட நேரங்களில் கர்த்தருடைய பிரசன்னத்தை நான் அதிகமாக உணருவேன். அவருடைய சத்தியங்கள் எனக்குள் வெளிப்படும். அவருடைய அன்பின் தொடர்புகளை ஆவியில் அதிகமாக அடையாளம் காண்பேன். என் கேள்விகளுக்கு தேவப் பிரசன்னமே விடையாக இருக்கும். நான் கேட்கும் கேள்விகளுக்கு பதில்கள் இல்லாவிடினும், அவருடைய நிறைவான பிரசன்னம் உன்னோடு நான் இருக்கிறேன். இங்கே எல்லாம் என்னுடைய ஞானத்தின்படியும் திட்டத்தின்படியும், சரியாகத்தான் நடந்து கொண்டிருக்கிறது என்று தெளிவாகச் சொல்வதைப் போல் இருக்கும்.

நம்முடைய வாழ்க்கைச் சூழ்நிலைகளில் நமக்குள் எழும்பும் எல்லாக் கேள்விகளுக்கும் கர்த்தரிடமிருந்து விடை கிடைப்பது கடினம். ஆனால், அவர் நமக்குள் தம்முடைய ஐக்கியத்தை வெளிப்படுத்தும்போது எல்லாக் கேள்விகளின் ஆரவாரமும் அடங்கிப்போகும். நம்முடைய சூழ்நிலைகளின்மேல் கர்த்தர் அதிகாரம் செலுத்தி, எல்லாவற்றையும் சரியாகச் செய்து கொண்டிருக்கின்றார் என்பதற்கு, அவர் அருளும் பிரசன்னம் தகுந்த பதிலாயிருக்கிறது.

யோபுவின் துன்பங்களின் மத்தியில் ஏன் இப்படி? ஏன் இப்படி? அடுத்தது என்ன? என்பது போல ஏராளம் கேள்விகள் எழுந்தன. ஆயினும், கர்த்தரிடமிருந்து அவனுக்குப் பதில்கள் கிடைக்கவில்லை. ஆனால், அவர் அவனோடு பேசினார். பல கேள்விகளைக் கேட்டார். அதன் மூலம் யோபு, தேவன் தன்னோடு இருப்பதை உணர்ந்து கொண்டான். அந்த நம்பிக்கையில்தான் கேள்விகளை விட்டு விட்டு, நீர் சகலவற்றையும் செய்ய வல்லவர். நீர் செய்ய நினைத்தது தடைபடாது என்றான். ஆம், கர்த்தருடைய அன்பின் வெளிப்பாட்டையும், அவர் அருளும் சமாதானத்தையும், ஆவியில் தருகின்ற நம்பிக்கை உணர்வையும், அரவணைப்பானத் தொடுதலையும், நம்பிக்கைகளை உயிர்ப்பிக்கும் அவருடைய செயல்களையும் நாம் கர்த்தர் அருளும் பதில்களாக எடுத்துக்கொள்ள வேண்டும்.

சிந்தனைக்கு...

பிரச்சினைகளைச் சந்திக்கத் தயாராகி முன்வரும் வரை அதனை மேற்கொள்ளும் வழிகளை தேவன் காண்பிப்பதில்லை.

பிப்ரவரி 10

கடினமானவை - ஆனால்

லூக்கா 6:27-35

உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள்
லூக்கா 6:27

வியாதியைப் பரிசோதித்த மருத்துவர், அதற்கு உடனடியான ஒரு பெரிய சிகிட்சை தேவை என்றார். எவ்வளவு செலவாகும் என்று கேட்டபோது, ஐந்து லட்சம் செலவாகும் என்றார். ஐயோ! இவ்வளவு பெரிய தொகையா! என்று அதிர்ந்தார் வியாதியஸ்தனின் மனைவி. எத்தனை லட்சம் என்று பார்க்காதிருங்கள். உங்களின் கணவர் உயிர் வாழ வேண்டியது எவ்வளவு அவசியம் என்று பாருங்கள் என்றார் மருத்துவர்.

சில நேரங்களில் சில விஷயங்கள் மிகவும் கடினமானவைகள்தான். ஆனால், அவை எவ்வளவு கடினம் என்பதைவிட, அது எவ்வளவு அவசியம் என்பதைப் பார்க்க வேண்டிய தேவை உள்ளது. சிலர் இயேசுவின் போதனைகள் எவ்வளவு கடுமையாயிருக்கிறது என்றுதான் பார்க்கின்றார்கள். ஆனால், அதனுடைய அவசியத்தை விளங்கிக்கொண்டால், அந்த கடினத்தைக் குறித்த எண்ணம் நம்மைக் கடினப்படுத்தாது.

ஒரு கன்னத்தில் அறைந்தவனுக்கு மறு கன்னத்தைக் காட்டுவதா? கடனை வாங்கித் தராமல் போனவனை அப்படியே விட்டுவிடுவதா? சத்துருவை நேசிப்பதா? பகைக்கிறவனுக்கு நன்மை செய்வதா? இதுபோன்ற விஷயங்கள் மிக மிகக் கடினமானவைகள்தான். ஆனால், இவை நமக்கு எவ்வளவு பெரிய நன்மைகளைத் தருகின்றன என்பதைச் சிந்தித்துப் பாருங்கள். இன்றைய சமுதாயத்தில், பதிலுக்குப் பதிலாக எதையாவது செய்யத் தீவிரிக்கும் ஒரு மனநிலைதானே, இடை நிறுத்தம் இல்லாத ஏராளம் பிரச்சினைகளுக்கு வழி வகுக்கின்றன. மனிதன் பழிக்குப் பழியாக எதையாவது செய்ய விரும்பும் மனநிலையை மேற்கொண்டுவிட்டால், எத்தனையோ தீமைகள் வராமல் தடுக்கப்பட்டு விடும். இயேசு சொன்னவைகள் கடினமானவைதான். ஆனால், அவை தவிர்க்கப்பட்டால் பல தீமைகள் தடுக்கப்படாமல் போகும். கடினமான விஷயங்களைச் செய்ய முன்வந்தால் அமைதியையும், ஆனந்தத்தையும், நம்பிக்கையையும் இழக்காமல் என்றும் தலைநிமிர்ந்து நிற்கலாம்.

மிக நல்லவைகளுக்காக அதிகக் கடின பிரயாசங்களும் அவசியமே. ஆனால், கிறிஸ்து கடுமையானதைச் செய்ய மட்டும் சொல்லவில்லை. அவருடைய ஐக்கியத்தின் மூலம் கடினமானவைகளை இலகுவாக்கும் வழிகளையும் காட்டுகின்றார். நாம் பக்திமுயற்சி என்ற அடிப்படையில் செல்லாமல், இறை உறவின் அனுபவங்களில் ஆழமாகச் சென்றிட மனதைச் சாய்க்கும் போது, தேவ உறவினால் கடினமானவைகளை எளிதாக்கிக்கொள்ள இயலும்.

சிந்தனைக்கு...

உண்மையின் கசப்பை இன்று நீ ஏற்க மறுத்தால், பொய்யின் இனிமை நாளை உன் வாழ்வைக் கசப்பாக்கும்.

பிப்ரவரி 11
எதிர்பார்ப்பை உணர்ந்து

லூக்கா 18:35 –43

நான் உனக்கு என்ன செய்யவேண்டும் என்றிருக்கிறாய்...

லூக்கா 18 : 41

பல ஆண்டுகளுக்கு முன்பு, ஒருமுறை நான் பலவிதமான வாழ்க்கைப் போராட்டங்களினால் வருந்திக் கொண்டிருந்தபோது, ஒரு சபைப் போதகரிடம் சென்றேன். என் மனதில் இருந்த கேள்விகளையும், குழப்பங்களையும், கஷ்டங்களையும் அவரிடம் சொன்னேன். அவரோ எல்லாவற்றையும் கேட்ட பின்னர், ஒரு சிறு தொகையை என் சட்டை பையில் வைத்து என்னை அனுப்பி வைத்துவிட்டார். ஆனால், அந்தப் பண உதவியை நான் விரும்பவும் இல்லை. எதிர்பார்க்கவும் இல்லை. அவர் எனக்கு ஏதாவது ஆலோசனை சொல்வார் என்றும், நம்பிக்கையான சில வார்த்தைகளைக் கூறி மனத்தெளிவைத் தருவார் என்றும் எதிர்பார்த்த எனக்கு பெருத்த ஏமாற்றமாகிவிட்டது.

நம்மிடம் வருகின்ற இன்னொருவரின் அப்போதைய உண்மையான தேவை எது என உணராமல், எவ்வளவு பெரிய உதவிகள் செய்தாலும், அதனுடைய மதிப்பு உணரப்படுவதில்லை. தெருவோரத்தில் அமர்ந்து பிச்சை எடுக்கும் குருடனாகிய பர்திமேயு இயேசு அவ்வழியாக வருகின்றார் என்பதை அறிந்துகொண்டான். உடனே அவன் “தாவீதின் குமாரனே எனக்கு இரங்கும்” என்று கூக்குரலிட ஆரம்பித்தான். உடனேயே இயேசு அவனுக்கு இரங்கி பிச்சைகாரன்தானே என எண்ணி, ஏதோ சில காசுகளை பிச்சையாகப் போடவில்லை.

பொது ஜனங்களிடம் எதிர்பார்த்தது போன்ற ஒரு உபகாரத்தை அவரிடம் அவன் எதிர்பார்க்கவில்லை. அவன் இயேசுவிடம் வந்தபோது அவன் தன்னிடம் எதை எதிர்பார்க்கின்றான் என்பதை அறிய “நான் உனக்கு என்ன செய்ய வேண்டும் என்றிருக்கிறாய்?” என்று அவர் கேட்டார். பர்திமேயு அவரிடம் வித்தியாசமான ஒன்றை எதிர்பார்த்தான். அது பண உதவியோ, பொருள் உதவியோ அல்ல. தன்னைப் பிச்சைக்காரனாக மாற்றிய குருட்டு நிலையிலிருந்து விடுதலையாகி பார்வை பெற விரும்பினான். இயேசு அவனுடைய எதிர்பார்ப்பைக் கேட்டுத் தெரிந்துகொண்டு, அவன் எதிர்பார்த்த பார்வையை அவனுக்குக் கொடுத்து, அவனை உற்சாகப்படுத்தினார்.

பிறருக்கு எப்போதும் நம்முடைய பண உதவியும் பொருள் உதவியும் அல்ல. சில வேளை அவர்களுக்கு நம்முடைய அன்பான, ஆறுதலான வார்த்தைகள் தேவைப்படுகிறது. சில வேளை அவர்களுக்கு நல்ல ஆலோசனைகளும், வழி காட்டுதலும் தேவைப்படுகிறது. சில வேளை நம்முடைய அன்பான ஐக்கியம் அவர்களுக்குத் தேவைப்படுகிறது. இந்த எதிர்பார்ப்புகளை உணராமல் நாம் செய்கின்ற உதவிகள் உபயோகமற்றவை.

சிந்தனைக்கு...

உதவி என்பது எதையாவது செய்தல் அல்ல,
தேவையானதைச் செய்வது.

பிப்ரவரி 12

தேவை தேவ நம்பிக்கை

யோபு 13:1-28

அவர் என்னைக் கொன்றுபோட்டாலும், அவர் மேல் நம்பிக்கையாயிருப்பேன்.
யோபு 13:15

யோபு மிகப்பெரிய செல்வந்தன். ஒருநாள் அவன் தன்னுடைய செல்வங்கள், பிள்ளைகள், உடல்நலன் யாவற்றையும் இழந்தான். ஆயினும் அவன் இழக்காததும், இழந்து போக விரும்பாததுமான ஒன்று அவனுக்கு மீதம் இருந்தது. அந்த ஒன்று தான் அவ்வளவு பயங்கரமான துன்பக் கடலிலிருந்து அவனை மீட்டுக் கரைக்குக் கொண்டு வந்தது. அதுதான் தேவன்மேல் கொண்டிருந்த நம்பிக்கை. பலருடைய வாழ்க்கையில் எளிதாக இழக்கப்படுகின்றது இதுதான். ஆனால் யோபு அதைத்தான் அவ்வளவு பெரிய போராட்டங்களின் நடுவிலும் இழக்காமல் பாதுகாத்துக் கொண்டான்.

இவ்வளவும் நடந்து முடிந்தபின் பக்தி, நம்பிக்கை, இறைநாட்டம், பிரார்த்தனை கள் எல்லாம் எதற்காக? இதற்குமேல் இவைகளால் என்ன பிரயோஜனம் என்று எண்ணப்படத்தக்கதோர் சூழ்நிலையின் நடுவிலும் அவன் தேவ பக்தியையும், தேவ நம்பிக்கையையும் விடாப்பிடித்தனமாகப் பற்றிக்கொண்டிருந்தான். சிலர் தோல்விகள், ஏமாற்றங்கள், இழப்புகள் ஆகியவற்றைச் சந்தித்தால், அதற்கு மேல் பக்தி எதற்கு? தேவநம்பிக்கை எதற்கு? விண்ணப்பங்களும் வேண்டுதல்களும் எதற்கு என்று சிந்தித்து விரக்தியடைந்து விடுவார்கள்.

ஆனால் சில தோல்விகள், ஏமாற்றங்கள், இழப்புகள் ஏற்பட்டுவிட்ட நிலையில் அந்தப் பாரமான, கடினமான, கசப்பான சூழ்நிலையைச் சந்திக்கும் ஆற்றல் வேண்டுமே. மனத்துயர் மிகுந்த ஒரு காலகட்டத்தில் சுயபலமோ, மனித உறவுகளோ மனதிற்கு அமைதியையும், தைரியத்தையும் தந்து விடாதே. எனவே நாம் எதிர்பார்த்த விதமாக துன்பம் நிகழாமல் தேவன் தடுக்காமல் போனாலும், நிகழ்ந்துவிட்ட துன்பங்களைத் தாங்கிக்கொள்ளவும், தொடர்ந்து வாழ்க்கைப் பயணத்தை நம்பிக்கையோடு தொடரவும் தேவகிருபையும், தேவ ஆதரவும் மிக அவசியம். எனவே, எல்லா நேரங்களைவிட இந்த நெருக்கடியான சூழலில்தான் கர்த்தரின் ஐக்கியமும், ஆறுதலும், ஆதரவும் மிகவும் அவசியம். எனவேதான் யோபு, அவர் என்னைக் கொன்றுபோட்டாலும் அவர் மேலேயே நம்பிக்கையாயிருப்பேன் என்றான்.

ஆம். தேவகிருபை இனி தேவையில்லை என்று கூறத்தக்க ஒரு காலம் இல்லை. இனி கர்த்தர் என்ன செய்து எனக்கு உதவப் போகிறார் என்று கூறத்தக்க வேளை ஒருபோதும் இல்லை. சோதனையான வேளைகளிலும், பேரிழப்பின் நேரங்களிலும் அடுத்த அடியை எப்படி எடுத்துவைப்பது என்று தெரியாத வேளையிலும், கர்த்தரின் கிருபைதான் அதிக அவசியம். எனவே, எந்தச் சூழ்நிலையிலும் தேவ பக்தியும், தேவ நம்பிக்கையும் மிக மிக அவசியம் என்றுணர்ந்து அவற்றைத் தேட வேண்டும்.

சிந்தனைக்கு...

கர்த்தரின் உருக்கங்களை உணர்ந்து கொண்டவன் அவருடைய பாதையில் வரும் நெருக்கங்களால் நிலைகுலைவதில்லை.

பிப்ரவரி 13

பொறாமை

ஆதியாகமம் 26:12-30

பெலிஸ்தர் அவன் பேரில் பொறாமை கொண்டு...
ஆதியாகமம் 26:14

பசியால் வாடுகின்ற ஒருவனைக் கண்டால் நாம் பரிதாபப்படுவோம். துன்பத்தில் துவளும் ஒருவருடைய வேதனை நம்முடைய கண்களில் கண்ணீரை வரவழைக்கும். நோயினால் துன்புறும் ஒருவருக்காக நம்முடைய மனம் மிகவும் வேதனையடையும். ஆனால், நம்மைவிட இன்னொருவர் அதிக சந்தோஷமாயிருப்பதைக் கண்டால் அதைப் பார்த்து நாம் சந்தோஷப்பட முடியுமா? இன்னொருவர் ஒரு பெரிய வசதி நிலையை அடையும்போதும், பலரால் புகழப்படும் நிலையைக் காணும்போதும் அது நமக்கு மகிழ்ச்சியைத் தருமா?

இன்னொருவனின் துன்பத்தைக் கண்டு கண்ணீர்விட இயன்ற மனிதனுக்கு, இன்னொருவனின் நல்ல நிலமையைக் கண்டு சந்தோஷப்படுவது என்பது கடின மான விஷயமே. தம்பி ஒரு வீட்டைக் கட்டினால் அண்ணனுக்கு அது வருத்த மாயிருக்கிறது. ஒருவன் ஒரு காரை வாங்கினால் அவனுடைய நண்பனுக்கே அது கஷ்டமாயிருக்கிறது. அண்டை வீட்டு மாணவன் அதிக மார்க் வாங்கிப் பரிசு பெற்ற செய்தியைக் கேட்டு வாழ்த்துச் சொன்னாலும், இருதயமோ “என் வீட்டுப் பிள்ளைக்கு இது கிடைக்கவில்லையே” என்று வருந்துகிறது.

சவுல் ராஜாவின் கௌ ரவத்தைக் காப்பாற்றி ஒரு நாட்டையே காப்பாற்றியவன் தாவீது. ஆயினும், அந்த தாவீதிற்கு நாட்டு மக்களால் பாராட்டுக் கிடைக்கும்போது அதைத் தாங்கிக்கொள்ள முடியாமல் காய்மகாரத்தால் கஷ்டப்பட்டான் அவன். எனவே, தோளில் தூக்கி வைத்து கனப்படுத்த வேண்டிய தாவீதை, சவுல் காலில் போட்டு மிதிக்க விரும்பினான். காரணம் என்ன? பொறாமை. பல கெட்ட சுபாவங்கள் மனிதனை விட்டு வேகமாக வெளியேறும் வேளைகள் உண்டு. ஆயினும், பொறா மையோ நான் மட்டும் இங்கேயே இருந்து கொள்கிறேன் என்று சொல்லிப் போக மறுக்கும்.

ஆவிக்குரிய வாழ்க்கையில் மிகவும் போராடி அகற்ற வேண்டிய ஒரு இயற் கையான துர்க்குணம் பொறாமையே. தங்களுக்குக் கரிசனையோடு உதவி செய்ய வந்த தம்பியை யாக்கோபின் மக்கள் குழியில் தூக்கிப்போட்டார்களே. பொறாமையின் வலிமை எவ்வளவு என்பதை அது விளக்குகிறது. பொறாமை வலுவிழந்து போக வேண்டுமானால், அன்பு இருதயத்தில் வலிமை அடைய வேண்டும். ஏனென்றால், அன்பு கூரும் வலிமையில் குன்றியிருப்பதின் விளைவாகத்தான் பொறாமை வல் லமையாகச் செயல்படுகிறது. தேவ அன்பினால் உள்ளம் எந்த அளவு நிரம்புமோ, அந்த அளவிற்குதான் பொறாமை என்னும் பேய்க் குணத்தை வெளியேற்ற முடியும்.

சிந்தனைக்கு...

பிறருடைய வீழ்ச்சி உன்னைத் துக்கப்படுத்தலாம்
பிறருடைய எழுச்சி உன்னை மகிழ்விக்கிறதா என்று பார்.

பிப்ரவரி 14

சத்தமும், அமைதியும்

லூக்கா 10:25-37

நீயும் போய் அந்தப்படியே செய்...
லூக்கா 10 : 37

படித்தவர்களும், பெரியவர்களும் அந்த வீதி வழியாக அதிகமாகச் செல்வார்கள். அந்த வீதியில் யாரோ குப்பைகளைக் கொட்டிச் சென்றதால், எங்கும் அது சிதறியிருந்தது. அந்த வழியாக வந்த சிலர் எவ்வளவு பொறுப்பற்றவர்களாக இந்தியர்கள் உள்ளனர் என்றனர். "சிலர் அரசாங்கம் என்னதான் செய்து கொண்டிருக்கின்றதோ" என்றனர்." "சிலர் நகராட்சி நிர்வாகம் சரியில்லை. நீதிமன் றத்திற்குப் போனால்தான் சரிப்படும்" என்றனர். சிங்கப்பூரில் இப்படி யாராவது செய்தி ருந்தால் கம்பி எண்ண வேண்டியதுதான்" என்றனர் சிலர்.

விமர்சனங்களின் சத்தம் அங்கே அதிகமாகிக்கொண்டேயிருந்தது. குப்பையோ சிதறி, எங்கும் பரவிக் கொண்டிருந்தது. சற்று நேரத்தில் முதியவர் ஒருவர் வந்தார். அவர் எந்த விமர் சனமும் செய்யவில்லை. ஆனால், பொறுமையாகக் குப்பைகள் யாவற்றையும் அள்ளிக்கொண்டு குப்பைத்தொட்டியில் போட்டார். பலருடைய விமர்சன சத்தம் செய்யாத நல்ல செயலை, ஒருவருடைய அமைதியான செயல்பாடு செய்து முடித்தது.

குறைகளைக் கண்டு கூச்சலிடுவோர் பலர். குற்றங்களைக் கண்டு கொந் தளிப்போர் பலர். தவறானவைகளைக் கண்டு அவசர ஆத்திரத்துடன் அதிக ஆரவாரம் செய்வோர் பலர். ஆனால், நடந்துவிட்ட தவறைச் சரிசெய்ய என்ன செய்யலாம் என்று யோசிக்கின்றவர்களும், சரியானதைச் செய்து காட்ட முனைகின்றவர்களும் வெகு சிலரே. இந்நாட்களில் நான் எங்கு சென்றாலும் தவறான போலி ஊழியர்களுக் கெதிராக, ஆணித்தரமாக விமர்சனம் செய்கின்ற சிலரைப் பார்க்க முடிகிறது. தவறுகள் விஷயத்தில் மௌனம் சாதிக்காமல், தங்களின் எதிர்ப்புணர்வைக் காட்டுவது நல்லதே. அதே வேளையில் இவர்களிடமும் திருப்திகரமான நல்லதைப் பார்க்கமுடியவில்லை. வைராக்கியமாக விமர்சிக்கின்றவர்களாயிருந்தும், சரியானவற்றிற்கு இவர்களும் சாட்சியாக நிற்கவில்லை.

உண்மையை ஒருவரிடமும் பார்க்க இயலாவிட்டால் நம்மிடமாவது அதை உலகம் பார்க்க வேண்டும். சரியானதைச் செய்திடும் ஒருவரையும் பார்க்க இயலா விட்டால், உலகம் நம்மையாவது பார்த்துச் சந்தோஷப்படவேண்டும். இன்று ஒரு கூட்டம் தவறானவைகளைச் செய்கின்ற பரிசேயர்கள். மறுபுறம் அவர்களை விமர்சிக்க ஒரு கூட்டம். ஆனால், இவர்களும் பரிசேயர்களே, அவர்கள் விதிவிலகிய பரிசேயர்கள். இவர்களோ விவேகமில்லாத பரிசேயர்கள். ஆரவார விமர்சகர்களாக மட்டும் இராமல் அமைதியான செயல்பாட்டாளர்களாகவும் விளங்குவோம்.

சிந்தனைக்கு...

நல்லவராயிராமலே நன்மை செய்ய முடியும். ஆனால் நன்மை செய்யாமல் நல்லவராயிருக்க முடியாது.

பிப்ரவரி 15

அனுபவிக்கப்படாத வாழ்க்கை

லூக்கா 12:1-32

பொருளாசையைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள்.
லூக்கா 12:15

சிலர் அதிக வருவாயின் மேல் கொண்ட ஆசையினால் தங்களின் வாலிப மிடுக்கான காலங்களை வெளிநாடுகளிலே கழித்து விடுகிறார்கள். வயதுகள் கடந்து உடல் தளர்ந்து போன பின்னர் மனைவியோடும் பிள்ளைகளோடும் ஒன் றாக வாழ்கின்றனர். சிலர் தொழில் வியாபாரம் என்று இரவில் மிகவும் காலதாமதமாக வருவார்கள். காலையிலே மிகவும் சீக்கிரமாய்ப் போய் விடுவார்கள். மனைவியோடு பேசவோ, பகிர்ந்துகொள்ளவோ, பிள்ளைகளோடு விளையாடி மகிழவோ நேரமே யிருப்பதில்லை. நண்பர்களோடு பழக நேரமில்லை. உறவினர்களைச் சந்திக்க நேரமில்லை. பணம் சம்பாதிப்பதைத் தவிர வேறெதற்கும் நேரமேயில்லாத துர் பாக்கியமான நிலமை.

பொருளாசையும் பண ஆசையும் அநேகரைப் பணம் சம்பாதிக்கும் திறமை யான இயந்திரங்களாக மாற்றி வாழ்க்கையில் உணர்வுப்பூர்வமாக எதனையும் உரிய விதமாக அனுபவிக்கவிடாமல் செய்துவிடுகிறது. மனைவி எங்கே போய்விடு வாள், பிள்ளைகள் எங்கே போய் விடுவார்கள், உறவுகள் எங்கே போய் விடுவார்கள், ஆனால் நாலு காசு சம்பாதிக்கும் வாய்ப்பைச் சரியாகப் பயன்படுத்தாவிட்டால் பின்னர் அதுபோல வாய்ப்புக் கிட்டுமா என்று பலர் எண்ணுகின்றனர். யாரும் எங்கும் ஓடிவிடமாட்டார்கள். ஆனால் வயதுகளும், வயதுகள் சார்ந்த சில வாய்ப்புகளும், கடந்து போய்விட்டபிறகு அங்கே அதிக மகிழ்ச்சியடைய எதுவும் இராது என்பதையும் நினைக்கவேண்டும்.

வாழ்க்கைத் துணையுடன் நேரங்களைச் செலவிடுதல், சந்தோஷமாக எங்காவது போய்வருதல், பிள்ளைகளின் சிறு வயது செயல்பாடுகளைக்கவனித்தல், அவர் களோடு விளையாடி மகிழ்தல், உறவினர்களை, நல்ல நண்பர் களைச் சந்தித்து மகிழ்ந்து மற்றவர்களின் நல்ல நிகழ்வுகளிலே பங்கேற்றல், பிறரோடு பேசி மகிழ்ந்து அன்பைப் பகிர்ந்து கொள்ளுதல், வியாதிப்பட்டோரை விசாரித்தல், ஆவிக்குரிய நிகழ்ச்சிகளிலே பங்கேற்றல், தேவன் படைத்த இயற்கைச் சூழ் நிலையை ரசித்தல், நல்ல நூல்களைப் படித்தல், இறை ஐக்கியத்தை வளர்ப் பதற்குத் தேவையான நேரங்களைச் செலவிடுதல், துன்புறுவோரின் துயரத்தில் பங்கேற்றல், சமுதாய நிகழ்வுகளைக் கவனித்தல், போன்ற பல விஷயங்களை நாம் எளிதாகத் தவிர்க்க இயலும். எனக்கு எங்கே இதற்கெல்லாம் நேரம்? என்று சொல்லலாம். ஆனால், இவைகள் யாவும் ஒரு மனித வாழ்க்கையின் மகிழ்ச்சிக்கும், வாழ்க்கையை அர்த்தமாக்குவதற்கும், அவசியமானவைகள் என்பதை மறந்துவிடக்கூடாது.

சிந்தனைக்கு...

தேவன் தர விரும்பியவைகளை அடைந்திட அசதியாயிராதே.
அவர் தர விரும்பாதவைகளைப் பெற்றிடப் பிரயாசப்படாதே.

பிப்ரவரி 16

ஆராதனை சந்தோஷம்

ஆமோஸ் 5:21-27

உங்கள் ஆசரிப்பு நாட்களில் எனக்குப் பிரியமில்லை.
ஆமோஸ் 5:21

இந்நாட்களில் பல திருச்சபைகளின் ஆராதனை வேளைகளில் கூடிவருகின்ற ஜனங்கள் விடுதலையையும், ஆனந்தத்தையும் உணர்கின்றார்கள் என்பது உண்மைதான். சில திருச்சபைகளின் ஆராதனை வேளைகள் சகிக்க வேண்டிய ஒன்றாகத் தொடர்ந்த போதிலும், சில சபைகளின் ஆராதனை வேளைகள் மக்களைச் சந்தோஷப்படுத்துகின்றன என்பது உண்மையே. ஆனால் பிரச்சினை என்னவென்றால், சபை கூடி ஆராதிக்கும் வேளைகளில் அடைகின்ற ஆனந்த நிலைகளையும், விடுதலை உணர்வுகளையும் வாழ்க்கைப் பகுதிகளுக்குக் கொண்டு செல்ல இயலாமைதான்.

ஏனென்றால் இன்றைய பெரும்பாலான திருச்சபைகளில் சந்தோஷமாயிருப்பதைப் போல காண்பிப்பதற்கு ஜனங்கள் பழகியிருக்கின்றார்கள். ஆனால் சந்தோஷமாயிருப்பது எப்படி என்பதை அறிந்து பழகவில்லை. கேளிக்கை ஸ்தலங்களிலும், சினிமா அரங்குகளிலும், நகைச்சுவை மன்றங்களிலும் ஜனங்கள் மகிழ்ச்சியை உணர்வது இயற்கையானது. ஆனால், அவைகளில் உணர்ந்த மகிழ்ச்சியை வாழ்க்கைக்குச் சொந்தமாக்க முடியாது. அதுபோலவே சபைச் சூழ்நிலைகளும் ஆராதனை நிகழ்ச்சி தயாரிப்புகளும் நமக்குச் சற்று நேரம் சந்தோஷமாயிருக்க உத வக்கூடும். ஆயினும், அவைகளைச் சொந்தமாக்க முடியாது.

உண்மையான ஆவிக்குரிய சந்தோஷமும் விடுதலையும் ஆராதனைகளால் உருவாக்கப்படுகிறவைகள் அல்ல. அவைகள் ஆண்டவரோடுள்ள ஆழமான உறவினாலும், அர்ப்பணிப்புள்ள வாழ்க்கையினாலும், தேவ ஆவியின் நடத்துதலினாலும், தேவ உறவினை இருதயத்தில் வாஞ்சித்துத் தேடுவதினாலும் ஏற்படுகிறவைகளே. தனிப்பட்ட முறையில் தேவனோடு நெருங்கி ஜீவிக்கத் தாகங்கொண்டு செயல்படுகின்ற ஆவிக்குரிய வாழ்க்கையில்தான் கர்த்தரின் சந்தோஷம் உண்மையாகத் தோன்றும். அந்த சந்தோஷங்களின் பிரதிபலிப்புகள்தான் அன்பு, சமாதானம், தாழ்மை, இரக்கம், பொறுமை, சாந்தம், போன்ற நற்குணங்கள்.

ஆராதனை நேரங்களில் கோஷமிட்டும், கொண்டாடியும், குதூகலித்தும், ஆரவாரித்தும், அன்னிய பாஷையில் பேசியும் வாழ்க்கையில் வெறுப்பும், கசப்பும், கோபமும், பண ஆசையும், கபடும், தந்திரமும், பொய்யான அணுகுமுறைகளும், பொறுத்துக்கொள்ளாத மன நிலைகளும் தொடர்ந்தால், நாம் செய்வது போலித்தனமான ஒரு ஆராதனை என்பதே உண்மை.

சிந்தனைக்கு...

ஆலயத்தில் உணர்ந்த தேவனை இல்லத்தில் உணராவிட்டால் இன்னும் உன் இருதயம் தேவனற்றதே.

பிப்ரவரி 17

கர்த்தர் நடத்திச் செல்வார்

சங்கீதம் 71:1-24

அநேக இக்கட்டுகளையும், ஆபத்துக்களையும் காணும்படி செய்த...
சங்கீதம் 71:20

மேய்ப்பன் தன்னுடைய ஆடுகளை நடத்திச் செல்லுகின்ற பாதை எல்லா வேளைகளிலும் சுமுகமானதாகவோ, பசுமையான புல் வெளிகளாகவோ, சௌகரியமானவைகளாகவோ இராது. பலவிதமான சூழ்நிலைகள் வழியாக அவைகள் வழிநடத்திச் செல்லப்படும். ஆனால், ஒரு நம்பிக்கை என்னவென்றால், எந்த ஒரு சூழ்நிலை வழியாகவும் தன்னுடைய ஆடுகளை நடத்திச் செல்ல அவனால் முடியும்.

வாழ்க்கைப் பாதை நமக்கு எப்பொழுதும் ஒரே விதமாக இருப்பதில்லை. கரடுமுரடான, மேடுபள்ளங்களான, வளைவு நெளிவுகளான, இடர்மிகுந்ததான பாதைகளின் வழியாக நம்முடைய வாழ்க்கைப்பயணம் செல்லக்கூடும். நாம் விரும்பும் விதமான சூழ்நிலைகளைக் காணாமல், விரும்பாதவிதமான பாதைகளின் வழியாகப் போக நேரிடும். ஆயினும், நல்ல மேய்ப்பராகிய இயேசுவின் மந்தையின் ஆடுகளாக நாமிருந்தால் அவர் நம்மோடிருந்து கைவிடாமல் நடத்திச் செல்வார்.

கானானை நோக்கிப் பயணம் செய்த இஸ்ரவேல் ஜனங்களின் பிரயாணப் பாதைகள் சுமுகமானவைகள் அல்ல. சில குறைவுகள், சில தடைகள், சில போராட்டங்கள், சில எதிர்ப்புகள் ஆகியவைகள் வழியாகவே கடந்து சென்றன. ஆயினும், அவைகளினால் அவர்களுடைய பயணம் தடைபடாமலிருக்க கர்த்தர் அவர்களோடு நடந்தார். அவர் அவர்களை நடத்திச் சென்றார்.

அந்த ஜனங்கள் பலவித இன்னல்களைக் கண்டு அழிய நேரிட்டது, இடர்மிகுந்த சூழ்நிலைகளினால் அல்ல. அவர்களை வழி நடத்தும் தேவனுடைய சத்தத்திற்குச் செவி சாய்த்து செயல்படாமையினாலேயே அவர்கள் அழிந்தனர். ஆம், சோதனையோ, வேதனையோ, வியாதியோ, போராட்டமோ, நஷ்டமோ, கஷ்டமோ, எதிர்ப்போ, ஏளனமோ எதுவாயினும் நம்மை முடக்கிப்போட்டு விடுவதில்லை. ஆனால் நம்மை நடத்தும் மேய்ப்பனின் சத்தம் கேட்க நம்முடைய ஆவிக்குரிய காதுகள் உணர்வுள்ளவைகளாக இருக்க வேண்டும்.

அப்போஸ்தலனாகிய பவுல் ரோமாபுரியை நோக்கிச் செல்லும் கப்பலில் பயணம் செய்தபோது பலவிதமான எதிர் விசைகள் கப்பலைத் தாக்கின. அனைத்தும் அந்தப் பிரயாணத்திற்கு எதிராகவே இருந்தன. ஆயினும் அவைகளின் நடுவிலும் கர்த்தர் தம்முடைய சித்தத்தின்படி அந்தக் கப்பலை நடத்திக்கொண்டுதான் இருந்தார். அதனைப் பவுல் உணர்ந்து உற்சாகப்பட முடிந்தது. ஏனென்றால், அந்த இடர்மிகு சூழ்நிலையிலும் கர்த்தருடைய குரலை பவுலினால் கேட்க முடிந்தது. ஆம், நாம் சூழ்நிலைகளையே நோக்காமல், தேவ சத்தம் கேட்பதற்குக் கவனமாயிருந்தால், கர்த்தர் நம்மை நடத்துவதையும், தாங்குவதையும், தூக்கிச் சுமப்பதையும் நாம் அறிய முடியும்.

சிந்தனைக்கு...

தோல்விகள் தொடர் முயற்சிக்கு முட்டுக்கட்டையல்ல. இன்னும் நீ அதிகமாய்ப் பிரசாயசப்பட அது அவசியமாயிருக்கலாம்.

பிப்ரவரி 18
பிரதிஷ்டை

சங்கீதம் 84:1-12

உமது வாசஸ்தலங்கள் எவ்வளவு இன்பமானவைகள்
சங்கீதம் 84:1

கிறிஸ்தவர் ஒருவருடைய வீடு பிரதிஷ்டைக்காக தேவ ஊழியர் ஒருவர் வந்து பிரதிஷ்டை ஆராதனை நடத்தினார். வீட்டின் ஒவ்வொரு அறையிலும் தண்ணீரை இயேசுவின் இரத்தத்திற்கு அடையாளமாகத் தெளித்து எல்லா இடங்களிலும் தேவப் பிரசன்னம் நிரம்பும்படி ஜெபித்தார். ஜெபத்தின் இறுதி வேளையில் அந்த தேவ ஊழியர் "இதோ இந்த வீட்டின் ஒவ்வொரு அறையும் தேவப் பிரசன்னத்தினால் நிரம்புவதைக் காண்கிறேன். இந்த வீட்டில் தேவ மகிமை மேகம் போல என்றென்றும் தங்கியிருக்கப் போகிறது" என்று பரவசத்தோடு கூறினார்.

ஆனால், அவர் சொன்னது உண்மையாயிருக்க வாய்ப்பில்லை. ஏனென்றால், அந்த இல்லத்தைக் கட்டித் தங்கப் போகிற அந்த குடும்பத்தார் யாரும் அதுவரை இரட்சிப்பின் அனுபவத்தையோ, பரிசுத்த வாழ்வின் அனுபவத்தையோ தேடிப் பெறாதவர்கள். கர்த்தருக்காகத் தங்கள் வாழ்க்கையைப் பிரதிஷ்டை செய்து, கர்த்தருக்காக வாழ வேண்டிய அவசியத்தை உணராதவர்கள்.

தேவப் பிரசன்னம் என்பது தேவன் எங்கே தம்மை வெளிப்படுத்துகிறாரோ அதன் விளைவாக ஏற்படுகிற ஒரு தெய்வீக நிலையின் நிறைவாகும். தேவப் பிரசன்னம் மனிதர்கள் வழியாகத்தான் வெளிப்பட முடியும். ஏனென்றால், மனிதர்கள்தான் தேவன் தங்கியிருக்க விரும்புகின்ற ஆலயம். மனிதர்கள் தங்களின் இருதயத்தின் உட்பகுதிகளை கர்த்தருக்குத் திறந்து கொடுத்து தங்குவதற்கு அனுமதிக்க வேண்டும். அப்போதுதான் தேவன் தங்கியிருந்து தம்முடைய மகிமையையும், பிரசன்னத்தையும் வெளிப்படுத்த முடியும். அநேகர் தங்களுக்குள் தேவனைத் தங்கியிருக்கும்படி அழைக்க விரும்பாமல், தங்கள் வீட்டிலும், வியாபார ஸ்தலங்களிலும் அவருடைய பிரசன்னத்தைத் தங்க வைக்க விரும்புகிறார்கள். தங்களைக் கர்த்தருக்கு பிரதிஷ்டை பண்ணும் முன்பு, தங்கள் இல்லங்கள் பிரதிஷ்டை பண்ணப்பட வேண்டும் என எண்ணுகின்றனர். ஆனால், தேவன் கட்டிடங்களில் அல்ல, மனிதர்களிடமே தங்க விரும்புகிறார்.

சி ல ர் தேவ ஊழியர்கள் தங்கள் வீட்டில் வந்து தங்கினால் அது ஆசீர்வாத மாகயிருக்கும் என எண்ணுகின்றனர். நல்ல சிந்தைதான். அதே வேளையில் இவ்வித நற்சிந்தை யுடைய பலர், தங்கள் இருதயத்தை இன்னும் ஆண்டவருக்காக முழுமையாகத் திறந்து கொடுக்காதவர்களாக இருப்பது வருந்தத்தக்கது. நம்முடைய வீட்டிலாகிலும், வியாபார ஸ்தலத்திலாகிலும் தேவப் பிரசன்னம் தங்க வேண்டு மானால், அந்த இடங்களை அல்ல. அவர் தங்கியிருந்து செயல்பட விரும்பும் நம்முடைய வாழ்க்கையைத்தான் கர்த்தருக்காகப் பிரதிஷ்டை செய்யவேண்டும்.

சிந்தனைக்கு...

மனிதன் இறைவனுக்காகக் கட்டிய மாளிகையில் அவர் இல்லை. ஏனென்றால் அவர் தங்க விரும்பும் இடம் மனிதனின் மனக் குடிசையே.

பிப்ரவரி 19

குறைகளைச் சகித்தல்

I கொரிந்தியர் 13:1-13

அன்பு சகலத்தையும் சகிக்கும்....
I கொரிந்தியர் 13:7

குறைகளைக் காண்கின்ற கண்களும் நமக்கு வேண்டும். குறைகளைச் சகித்துக் கொள்கின்ற நல்ல பக்குவமான மனநிலையும் வேண்டும். தகப்பன் தன் பிள்ளை களிடம் குறை, குற்றம், தவறு ஆகியவற்றைக் காண்கின்ற போது அவைகளைக் காணாமல் கண்களை மூடுவதில்லை. அதற்குப் பதிலாக அவைகளைத் தகுதியாகச் சுட்டிக் காட்டி, அவர்கள் திருந்துவதற்கான வழியை உருவாக்கிக்கொடுக்கின்றான். அதே வேளையில், அந்தக் குறைவுகளையும் தவறுகளையும் அவன் கண்டிருந்தும், அவர்களை விலக்கித் தள்ளிவிடாமல் அன்புடன் சகித்து ஏற்றுக்கொள்கின்றான்.

தவறுகளைப் பாராமல் கண்களை மூடிக்கொள்ளும் அனுபவம் தவறுகள் வளர்வதற்கும், அந்தத் தவறுகளைச் செய்தவர்கள் அந்தத் தவறுகளின் விளைவாக நாசமாவதற்கும் வழி வகுக்கின்றது. ஒரு மனிதன் தன் மனைவியின் எந்தக் குறைவு களையும் பெரிதாக எண்ணக்கூடாது என்று முடிவு செய்திருந்தான். அவள் எவ்வளவு மோசமாக சமைத்துப் போட்டாலும், அந்தக் குறைவைப் பெரிதாக எண்ணாமல் “ஆகா-ரொம்ப அருமையான சமையல்” என்று புகழப் பழகியிருந்தான். ஆனால், அந்த வீட்டிற்கு வருகின்ற எவரும், இவள் இவ்வளவு மோசமாக சமைத்துப் போடுவதை இவன் எப்படித்தான் சாப்பிடுகிறானோ, என்று கூறிக் கொள்வார்கள்.

குறைவைக் குத்திக் காட்டுவதோ, சொல் லிக்காட்டி இழிவுபடுத்துவதோ தவறானது. ஆனால், நாத்தானைப் போல தேவனால் ஏவப்பட்டு சுட்டிக்காட்டிச் சரி செய்வதற்கான சூழ் நிலையை உருவாக்குவது தவறல்ல. நாம் பரிசேய மன நிலையோடு குற்றஞ்சாட்டா மல், பேதுருவின் குறைவைச் சுட்டிக்காட்டிய இயேசுவைப் போல அன்பினால் ஆளப்பட்டு, தவறுகளை உணர்த்துவது மிக அவசியம். ஆனால், சிலருக்கு பினகாசைப் போல தவறு கண்ட போதெல்லாம் குற்றச்சாட்டு என்னும் வாளை எடுத்துக்கொண்டு மற்றவர்களைக் காயப்படுத்த மட்டுமே தெரியும். ஆனால், காட்டிக் கொடுக்கப்போகிற யூதாசையும், மறுதலிக்கப் போகிற பேதுருவையும் முன் னறிந்திருந்தும் அவர்களை அன்பினால் ஏற்றுக்கொண்டு சகித்த இயேசுவைப் போல அரவணைக்கத் தெரியாது.

பிறருடைய தவறுகளைக் கண்டுகொள்ளாமலிருப்பதை, ஒரு தெய்வீகப் பண்பு என எண்ணி மௌனம் சாதிக்கும் சிலர் உண்டு . அந்த மனநிலையை உடையவர்கள் தங்களின் தனிப்பட்ட தவறுகளையும் கண்டுணரும் கண்கள் இல்லாதவர்களாகவே உள்ளனர். இது தவறுகளைப் பொறுத்துக்கொள்ளும் தெய்வீகப் பண்பு அல்ல. இது தவறுகளைக் குறித்த ஆவிக்குரிய நுண்ணுணர்வை இழந்துவிட்டதினால் ஏற்பட்ட ஒரு பாவத்தின் பிரதிபலிப்பாகும்.

சிந்தனைக்கு...

இகழ்ச்சிகள் உன்னைச் சீர்செய்து கொள்ள உதவலாம்.
புகழ்ச்சிகள் உன்னைச் சீர்க்கெட்டுப்போகச் செய்யலாம்

பிப்ரவரி 20

அனுபவங்களில்லாத கிறிஸ்தவம்

எபிரெயர் 5:7-14

போதகராயிருக்க வேண்டிய உங்களுக்கு...
எபிரெயர் 5:12

வாலிப வயதில் மும்பாய் பட்டிணத்திற்கு வந்த ஒருவர், முதிர் வயது வரையிலும் அங்கேயே வாழ்ந்தார். காலையில் பொய்சர் என்ற பகுதியிலிருந்து பஸ் எறி போரி வலி என்ற இரயில் நிலையத்திற்கு வருவார். அங்கிருந்து மின்சார ரயிலில் அந்தேரி என்ற இடத்திற்கு சென்று வேலை செய்வார். அவரைப் பொறுத்தவரையிலும் இவ்வளவுதான் மும்பாய். வேறெங்கும் போவதுமில்லை. வேறெதைக் குறித்தும் அவர் அறிய விரும்பு வதுமில்லை. மும்பாய் பட்டணத்தின் விபரங்களைக் கேட்டால் அவருக்கு எதுவும் சொல்லத் தெரியாது.

அநேகருடைய கிறிஸ்தவ வாழ்வின் அனுபவமும் இப்படியே. எத்தனை ஆண்டு கிறிஸ்தவர்களாயிருந்தாலும் ஒரு சில பக்தி அனுபவங்களைத் தவிர வேறொன்றும் அவர்களுக்குத் தெரியாது. காலையில் சிறு ஜெபம், சிறு வேதவாசிப்பு, ஞாயிறு சபைக்குச் செல்லுதல், காணிக்கை கொடுத்தல் என்பது போன்ற சில அனுபவங்களுக்கு அப்பால் எதுவும் தெரியாது.

சிலர் ஒன்றிரண்டு அனுபவங்களையே காலம் முழுவதும் வைத்திருந்து கர்த்தருக்குள் நித்திரையடைந்தார் என்ற பெயரைப் பெற்றுக்கொள்கின்றார்கள். நாட்கள் போகப்போக, காலங்கள் செல்லச் செல்ல நாம் வளர வேண்டும். வளர்ந்து பெருக வேண்டும். அனுபவங்களை அதிகமாகப் பெற வேண்டும். சபையில் செயல ராயிருந்த ஒருவரிடம் ஆபிரகாமின் அப்பா பெயர் என்ன என்று பேரன் கேட்டானாம். அதற்கு அவர் சின்ன வயசில் படிச்ச ஞாபகமிருக்கு இப்ப மறந்திருச்சு என்றாராம். (உங்கள் சபைச் செயலரிடம் இந்த கேள்வியைக் கேட்டால் அவர் மறவாமல் சரியாகச் சொல்லுவார் என்று விசுவாசிப்போம்).

கிறிஸ்தவ வாழ்க்கை என்றால் ஒரு பூஜை முறை அனுபவம் அல்ல. ஆனால், கிறிஸ்தவம் என்பது ஒரு வழிபாட்டு வாழ்க்கை அல்ல. அது தேவ உறவுடன் ஆரம் பித்து, தேவ ஐக்கியத்தோடு வளர்ந்து, தெய்வீக அனுபவங்களை அதிகமதிக மாய், பெற்றுக்கொண்டிருக்கின்ற ஒன்று. கிறிஸ்தவர்கள் எப்போதும் பாலுண்கின்ற குழந்தைகளாய் ஒரே வித அனுவத்தில் தொடரக் கூடாது. கனி கொடுக்கும் அனு பவத்தில் வளர்ந்து பெருக வேண்டும். ஆனால், இப்படியெல்லாம் எதுவும் நடக் காததற்குக் காரணம் என்ன? இரட்சிப்பின் அனுபவம் பெறுதல் என்ற முதல் படியைக் காணாமல், வெறும் வழிபாட்டு வாழ்விலே தொடர்வதாலேயாகும். வெறும் வழிபாட்டு அனுபவமுடையவர்களால் ஒருபோதும் ஆவிக்குரிய உயர்அனுபவங்களைப் பெற்று பிரகாசிக்க முடியாது.

சிந்தனைக்கு...

நீ வாழ்கின்ற விதம் தேவனைக் கனப்படுத்தாதபோது
நீ ஆராதிக்கும் விதம் தேவனை விசனப்படுத்தும்.

பிப்ரவரி 21

நேரமில்லை

லூக்கா 10:38-42

காலத்தைப் பிரயோஜனப்படுத்திக் கொள்ளுங்கள்.
எபேசியர் 5:16

மனிதன் சாப்பிட வேண்டும். அவன் சாப்பிடாவிட்டால் உயிர் வாழ முடியாது. அவன் தன் மனைவி, பிள்ளைகளைப் பராமரிக்க வேண்டும். குடும்பக் கடமை களை நிறைவேற்ற வேண்டும். இல்லையேல் அவன் சமாதானமாக வாழ முடியாது. இவைகளுக்கெல்லாம் நேரம் இல்லையென்று ஒருவன் சொன்னால் அவனை நாம் முட்டாள் என்றுதான் கூறுவோம். ஏனென்றால், வாழ்க்கையில் சில முக்கியமான விஷயங்களுக்கு "நேரமில்லை" என்று கூற முடியாது.

அதுபோலவே, ஒரு மனிதன் தேவன் ஒருவர் உண்டு என்று நம்பினால், அவருக்கு முன்பாக அவன் நிறைவேற்ற வேண்டிய சில முக்கிய விஷயங்கள் உண்டு. அவைகளுக்கு அவன் நேரமில்லை என்றால், அவனிடம் ஏதோ பிரச்சனை இருக்கிறதென்பதே பொருள். ஜெபிக்க நேரமில்லை. வேதத்தை தியானிக்க நேர மில்லை, ஆவிக்குரிய ஐக்கியங்களில் கலந்து கொண்டு கர்த்தரைக் கனப்படுத்த நேர மில்லை, தேவனுக்காக சில பணிகளைச் செய்ய நேரமில்லை, என்று நாம் சொல்வோ மென்றால் உண்மையில் "நேரமில்லை" என்பது அல்ல நம்முடைய பிரச்சினை, நேரங் களைச் சரியாக ஒழுங்குபடுத்தவில்லை அல்லது நேரங்களைச் சரியாகச் செலவழிக்க வில்லையென்பதே பிரச்சினையாகும்.

சிலர், இப்பொழுதெல்லாம் முன்பு போல இல்லை. காலம் வெகுவேகமா கப் போய் விடுகிறது என்பார்கள். ஆனால், காலம் எப்பொழுதும் போலத்தான் போகிறது. நாம் நேரங்களைச் சரியாகத் திட்டமிட்டுச் செயல்படாததாலும், பல வித மான உலகக் காரியங்களில் சிக்கி விடுவதாலும் நேரம் போவதைச் சரியாக உணராமல் போகின்றோம்.

தேவையற்ற காரியங்களைப் பேசுதல், செல்போன் அரட்டைகள், டி.வி. சீரியல் கள் போன்றவற்றால் அநேகர் பொன்னான நேரங்களை வீணாக்குகின்றார்கள். வாழ்க்கையில் மிக முக்கியமானவைகள் எவை என்பதை அறிந்து, அவைகளுக்கு நேரங்களில் முன்னுரிமை கொடுக்காவிட்டால், நாம் வாழ்நாள் முழுவதும் நேர மில்லை என்ற பிரச்சினையில் சிக்கிக்கொண்டுதானிருப்போம். வாழ்க்கையையும், பிற அலுவல்களையும் கர்த்தருக்கேற்ப ஒழுங்குபடுத்த நாம் தவறுகின்ற போதுதான், எப்போதும் கர்த்தருடைய காரியங்களுக்கு "நேரமில்லை" என்று சொல்ல நேரிடுகிறது. உலகப்பிரகாரமான வேலைகளுக்கெல்லாம் எப்படியாகிலும் நேரங்களைக் கண்டு பிடிக்கும் நாம், ஆவிக்குரிய காரியங்களுக்கு மட்டும் நேரத்தைப் பெற முடியாமல் போனால், அது நாம் இன்னும் ஆவிக்குரிய புதிய பிறப்பை அடையவில்லை என்பதே பொருள். தேவன் நமக்குப் போதுமான நேரங்களைத் தந்திருக்கிறார் என்பதே உண்மை.

சிந்தனைக்கு...

சந்தோஷத்தை தேடிச் சென்றால் அது தூரமாகும்.
இறைவனைத் தேடிச் சென்றாலோ அது உன் அருகே வரும்.

பிப்ரவரி 22
அன்பு இல்லாவிடில்

1 கொரிந்தியர் 13 : 1-13

அன்பு சகலத்தையும் தாங்கும் சகலத்தையும் சகிக்கும்...
1 கொரிந்தியர் 13 : 7

அவர்களுக்கு திருமணமாகி ஏழு ஆண்டுகளைக் கடந்து விட்டனர். முதல் ஐந்தாண்டு திருமண வாழ்க்கை அமைதியான நதியினிலே ஓடம் போல சலசலப் பின்றி அமைதியாகச் சென்றது. வாக்குவாதங்கள் இல்லை. ஈகோ யுத்தம் இல்லை. அவர்களின் சத்தத்தை அக்கம் பக்கத்தார் கேட்டதில்லை. ஒருவரையொருவர் குறை கூறிக் குற்றஞ்சாட்டி யாரிடமும் பேசினதில்லை. ஆனால், கடந்த இரண்டு வருடங்களாக அவர்களிடையே ஓயாத போர் நடைபெறுகிறது. அவர்கள் வீட்டில் நடப்பதை அவர்கள் போடும் சண்டையால் அக்கம் பக்கத்தவர்கள் அறி கின்றனர். கணவன் மேல் மனைவிக்கு குற்றச்சாட்டுகள். மனைவியைப் பற்றி குறை சொல்ல ஆரம்பித்தால் நிறுத்துவதற்கு கணவனுக்கு நீண்ட நேரம் ஆகும்.

எப்படி தீடீரென்று இத்தனை குறைகள் வந்தது? எப்படி இத்தனை குற்றச் சாட்டுகள் வந்தது? வேறொன்றுமில்லை அன்பு தணிந்து போய் விட்டது. மனைவி “நான் வேலைக்குப் போகிறேன்” என்றாள். கணவன் “வேண்டாம்” என்றான். இதுதான் ஆரம்பம். இதுதான் அவர்கள் ஒருவர் மேல் ஒருவர் வைத்த அன்பை வாபஸ் வாங்க வைத்தது. இதிலிருந்துதான் கணவன் செய்வதையெல்லாம் குற்றங்களாகக் காணும் கண்கள் மனைவிக்கு வந்தது. இதிலிருந்துதான் மனைவியின் ஒவ்வொரு நடவடிக்கையிலும் குறை காணும் மனம் கணவனுக்கு வந்தது.

இங்கே உண்மையான பிரச்சினை அவர்களின் நடவடிக்கைகளில் உள்ள குறைகள் அல்ல. அவர்கள் ஒருவர்மேல் ஒருவர் வைத்த அன்பில் பின் வாங்கி னார்கள். அன்பற்ற இதயங்களால் குறைகாணாமலும் இருக்க இயலாது. குறை கூறாமலும் இருக்க இயலாது. குறைகளைச் சகிக்கவும் இயலாது. இயேசுவின் வார்த்தைகளில் குறை இருக்கவில்லை. அவருடைய செயல்களில் குற்றம் இருக்க வில்லை. ஆனால், அவருடைய வார்த்தைகளிலும் செயகளிலும் ஆயிரம் குறைகளைக் கண்டிட பரிசேயர்களின் கண்கள் விரைந்தன.அவர் எதையாவது பேசினாலும், எதையாவது செய்தாலும் அவர்கள் காரணமில்லாமல் காயமடைந்தனர். ஏனென்றால், அவர்களிடம் அன்பு இல்லை.

இதயத்தில் அன்பிருந்தால் பிறரிடம் காணப்படும் சில குறைகள் உள்ளத்தை வருத்து வதில்லை. ஏற்றுக்கொள்ளவும், தாங்கிக்கொள்ளவும் அன்பு வலிமை தரும். இதயத்தில் அன்பில்லாவிட்டால் அற்பமான புல் போன்ற தவறும் ஓங்கி வளர்ந்த ஆலமரம் போல பெரிதாகத் தோன்றும். ஆம்.பெரும்பாலும் நாம் காயமடைய நேரிடுவது பிறரின் குறைவுளால் அல்ல. நமக்குள் அன்பில்லாமையே காரணம். அந்த அன்பினை நமக்குள் நிரப்ப தேவ கிருபையை விசேஷமாகத் தேடுவோம்.

சிந்தனைக்கு...

ஒருவனுடைய மகிழ்ச்சியின் எதிரி பெரும்பாலும் வெளியே அல்ல. அவனுக்குள்ளேயே இருக்கிறான்.

பிப்ரவரி 23

வித்தியாசமாக யோசி

1 சாமுவேல்-17 : 23-37

நான் போய், இந்தப் பெலிஸ்தனோடே யுத்தம்பண்ணுவேன்.
1 சாமுவேல் 17:32

பெரும்பாலும் நாம் தன்னிச்சையாகச் சிந்திக்கவும், யோசிக்கவும், பார்க்கவும் தயங்குகிறோம். மற்றவர்களின் எண்ண ஓட்டங்களோடும், சிந்தனை ஓட்டங்களோடும் நாம் இசைந்து செல்கின்றோம். மற்றவர்கள் சரி என்று நினைப்பதை நாமும் சரி என்று நினைக்கின்றோம். மற்றவர்கள் இது இப்படித்தான் என்றால் நாமும் அது அப்படித்தான் என்று எண்ணுகின்றோம். மற்றவர்கள் முடியும் என்றால் முடியும் என்போம். முடியாது என்றால் நாமும் முடியாது என்போம்.

பூமி தட்டையானது என்று நம்பிக்கொண்டிருந்த மக்களை பூமி உருண்டை யானது என்று நம்ப வைக்க நீண்ட காலம் ஆனது. ஆனால், எல்லோரும் யோசிப்பது போல நாம் யோசிக்காமல் வித்தியாசமாக யோசிக்க வேண்டிய தேவை உண்டு. கோலியாத் என்ற அரக்கன் இஸ்ரவேல் மக்களுக்கு எதிராக என்னை எவனாலும் வெல்ல இயலுமா? என்று சவால் விட்டான். அவனை வெல்ல முடியும் என்று அரசனாகிய சவுலும் எண்ணவில்லை. அவனுடைய பெரும்படையில் இடம்பெற்ற வீரர்களும் எண்ணவில்லை.

ஆனால், ஆடு மேய்க்கும் வேலையைச் செய்துகொண்டிருந்த தாவீது கோலியாத்தை வெல்ல முடியும் என்றான். அவன் வித்தியாசமாக யோசித்தான். மற்றவர்களின் எண்ணங்களோடு இசைந்து போகாமல், வித்தியாசமான ஒரு எண்ணத்தோடு வந்தான். உண்மையாக வாழ முடியாது. நேர்மையாகச் செயல்பட முடியாது, தாழ்மையாய் வாழ முடியாது, தூய்மையாய்ச் செயல்பட முடியாது என்பது போன்ற எண்ணங்களோடுதான் உலகம் ஓடிக்கொண்டிருக்கிறது. உலகத்திற்கு ஒத்தபடியே நாமும் எண்ணக்கூடாது.

நாம் தேவனோடிருந்தால் வெல்ல முடியாதவைகளை வெல்லலாம். கடக்க முடியாதவைகளைக் கடக்கலாம். மற்றவர்கள் முடியாது என்று சொல்வதை நாம் முடியும்படிச் செய்யலாம். நாம் சுய பலத்தையும், சுய நம்பிக்கையையும் சார்ந் திராமல் தேவ பலத்தையும், தேவன்மேல் வைக்கும் நம்பிக்கையையும் சார்ந்து கொண்டு செயல்படும் போது நம்மால் வித்தியாசமாக யோசித்து, வித்தியாசமாகச் செயல்பட முடியும்.

தேவனுடைய பார்வையில் ஒன்று தேவையானது, அவசியமானது என்று இருக்கும் போது, அதனை வாய்க்கும்படி செய்ய தேவன் வல்லவராயிருக்கின்றார். கோலியாத் வெல்லப்பட வேண்டியது அவசியம் என்று எண்ணிய தாவீது அதில் வெற்றி கண்டான்.

சிந்தனைக்கு...

சிறந்த சிந்தனைகள் உன்னை உயர்ந்த இடங்களுக்குக் கொண்டுசெல்லும் சிறகுகள்.

பிப்ரவரி 24

நம்பத்தக்கது எது?

ஏசாயா 54:1-17

மலைகள் விலகினாலும் பர்வதங்கள் நிலைபெயர்ந்தாலும் . . .
ஏசாயா 54:10

அமெரிக்காவிலுள்ள சில வங்கிகள் உலகப் பிரசித்தி பெற்றவை. அவற்றின் நம்பகத்தன்மை மலையளவாக இருந்தது. அந்த வங்கிகளில் ஏராளமான அமெரிக்க மக்கள் கண்ணை மூடிக்கொண்டு தங்களின் பணத்தை டிபாசிட் செய்தார்கள். அந்த வங்கிகளின் நம்பகத்தன்மையைக் குறித்து கேள்வி எழுந்ததில்லை. ஆனால் 2008ம் ஆண்டு அது போன்ற சில வங்கிகள் தாங்கள் தோல்வி அடைந்து விட்டதை உலகம் அறியச் செய்தது. அமெரிக்கர்கள் ஆடிப் போய்விட்டனர்.

இந்த உலகத்தில் எதுதான் நம்பத்தக்கது என்ற கேள்வி இன்று எங்கும் கேட்கப்படுகிறது. அசைக்கப்படாதவைகள் என்று கருதப்பட்டவைகள் அசைகின்றன. உடைக்கப்பட இயலாதவைகள் உடைகின்றன. எதுதான் நம்பத்தக்கது? நாம் எதையுமே நம்பாமல் இந்த உலகத்தில வாழ முடியாது. எந்த அஸ்திபாரமும் நம்மைத் தாங்கிட இயலாது என்றால் கால்களை எதன்மேல் வைத்து நிற்பது?

பணம் நமக்கு தேவை. அறிவு நமக்கு தேவை. திறமை நமக்கு தேவை. உறவுகள் நமக்கு தேவை. அரசாங்கம் நமக்கு தேவை. ஆனால், எதுவும் நிரந்தரமாகச் சாய்ந்து கொள்ளத் தகுதியானவைகள் அல்ல. கர்த்தர்மேல் வைக்கும் நம்பிக்கையைவிட நமக்கு அதிக நம்பிக்கைக்கு ஏதுவான ஆதாரங்கள் எதுவும் இல்லை. தகப்பனும் தாயும் பிள்ளைகளைக் கைவிடுவது என்பது அதிகமாகப் பார்க்க முடியாதது. ஆனாலும், அதுவும் ஆங்காங்கே நிகழுகின்றது. தாயும் தகப்பனும் கைவிட்டாலும் கர்த்தர் சேர்த்துக்கொள்வார் என்று தாவீது நம்பிக்கையோடு கூறினான்.

ஆம். நாம் இந்தப் பூமியிலே வாழும் நாட்கள் வரை நம்பிக்கையோடும், பதட்டமின்மையோடும் வாழ வேண்டும். ஸ்திரமற்றதோர் சூழ்நிலையில் நாம் அமைதியாக வாழ இயலாது. நேற்றும் இன்றும் என்றும் மாறாதவர் என்று வேதம் இயேசுவைக் குறித்துக் கூறுகிறது. அவருடைய அன்பு, அவருடைய வல்லமை, அவருடைய கரிசனை, அவருடைய வார்த்தை, அவர்மேல் வைக்கும் நம்பிக்கை என்றுமே மாறாமலிருக்கும். அவர் ஒருவரே என்றும் நம்பத் தகுந்தவர். அவரிடம் மட்டுமே நம்பகத்தன்மை என்றும் அசையாமலிருக்கும்.

இன்று செல்வம், கல்வி, உறவுகள் நமக்கு மலைகள் போலத் தோன்றலாம். ஆனால், இந்த மலைகளுக்கும் நிரந்தர உத்தரவாதம் இல்லை. இவை நம் மோடிருந்தால் அதற்காகச் சந்தோஷப்படுவோம். ஆனால், நாம் நிற்கும் பாறை கிறிஸ்துவே, வேறஸ்தி பாரம் மணலே என்றொரு பாடல் கூறுகின்றபடி இயேசு வோடு இணைந்து பிணைந்து சார்ந்திருக்க அதிகக் கவனம் செலுத்துவோம்.

சிந்தனைக்கு...

உலகம் உன்னைக் கீழே தள்ளினால் தளர்ந்துவிடாதே.
தேவனால் நீ தூக்கி நிறுத்தப்பட இது ஒரு சந்தர்ப்பம்.

பிப்ரவரி 25
பிள்ளையின் ஆசீர்வாதம்

கலாத்தியர் 4:1-9

இனி நீ அடிமையாயிராமல் புத்திரனாயிருக்கிறாய்.
கலாத்தியர் 4:7

இன்றைய கிறிஸ்தவ ஊழியர்கள், தேவனைச் ஜெபம் கேட்கும் ஒருவராகவே பலருக்கும் அடையாளம் காட்டுகின்றனர். இன்றைய கிறிஸ்தவர்கள், தேவனை ஜெபம் கேட்கும் ஒருவராகவே எப்போதும் பார்க்க விரும்புகின்றனர். கேட்பதும் பெறுவதுமே கிறிஸ்தவ வாழ்க்கையின் முக்கியச் செயல்பாடுகளாகப் புரிந்துகொள்ளப் பட்டுள்ளன. ஆகையால்தான், உண்மையான கிறிஸ்தவ மகிமையை சபைகளின் நடுவிலும், கிறிஸ்தவர்களின் நடுவிலும் அதிகமாகப் பார்க்க இயலவில்லை.

தேவைகளைக் கேட்பது நமது வேலை. அவற்றைத் தருவது தேவனுடைய வேலை என்ற விதமாக மட்டுமே ஆவிக்குரிய வாழ்க்கையைப் புரிந்துகொள்ளக் கூடாது. மனித வாழ்வைக் குறித்த தேவ நோக்கம் என்ன? நம்முடைய வாழ்வு தொடர்பான தேவனுடைய திட்டம் என்ன? நம்மைக் கொண்டு அவர் என்ன செய்ய விரும்புகின்றார்? என்றெல்லாம் நாம் சிந்திக்க வேண்டும்.

தேவன் நம்மை அவருக்கேற்ற விதமாக வனைந்து அவருடைய சித்தம் செயல்படத்தக்கதாக மாற்ற வேண்டும் . அவருடைய கையின் கருவியாகச் செயல் படுத்தப்படுவதற்கு ஏற்ற விதமாக நாம் சீர் செய்யப்படவேண்டும். தேவ ஆவியினால் தேவ சித்தத்திற்கேற்றபடி நடத்தப்படும் அனுபவம் நம்மில் ஏற்பட வேண்டும். தேவ சிந்தை இன்னதென்று அறிந்துணரும் ஆற்றல் உடையவர்களாக நாம் ம ாற வேண்டும். நாம் அழைக்கப்பட்ட அழைப்பு, வெறும் தேவைகளை மன்றாடிக் கேட்டுப் பெற்றுக்கொள்ளும் ஒரு பிச்சைக்கார ரீதியான அழைப்பு அல்ல.

தேவன் நம்மை அவருடைய பிள்ளைகளாக மறுபடியும் பிறக்க வைத்து, அவருடைய தெய்வீக மகிமையை நாம் பிறர் நடுவில் பிரதிபலித்துக் காட்ட வேண்டும் என்று விரும்புகின்றார். அநேகர் மேசையின் கீழே விழும் துணிக்கைகளுக்காகக் காத்திருக்கும் நாய்க் குட்டிகளாகத் தங்களைக் கர்த்தருக்கு முன்பாகப் பார்க்க விரும்புகின்றார்கள். ஆனால், தேவனோ நாம் பிள்ளைகளாக அவரோடு உட்கார வேண்டும் என்று விரும்புகின்றார்.

அநேகர் தாவீதின் குமாரனே எனக்கு இரங்கும், என்று கூப்பிட்டுக் கொண்டேயிருப்பதை விரும்புகின்றார்கள். ஆனால், பிள்ளைகளானால் சுதந்தரரு மாமே என்றும், நாம் அடிமைகளாயிராமல் பிள்ளைகளாயிருக்கின்றோம் என்றும் திருமறை கூறுவதை போதிய முக்கியத்துவம் கொடுத்துப் பார்க்கவில்லை.

பிள்ளைகளாக வாழ அழைக்கப்பட்ட நாம், வெறும் அப்பத்துணிக்கை ஆசீர் வாதங்களோடு திருப்தியடைந்து நின்றுவிடக்கூடாது.

சிந்தனைக்கு...

எதையோ எதிர்பார்த்துச் செய்வதில் அல்ல. தேவன் எதிர்பார்த்ததைச் செய்வதிலேயே பக்தி விளங்குகிறது.

பிப்ரவரி 26
அறிவு மட்டும் போதுமா?

சங்கீதம் 78:1-8

அவைகளைத் தங்கள் பிள்ளைகளுக்குஅறிவிக்கும்படி ...
சங்கீதம் 78.5

இன்றைய நவீன சமுதாயத்தில் நிம்மதியிழந்தோர்களும், வாழ்க்கை ஒளியினை யிழந்து இருளில் சிக்கிக்கொண்டவர்களும் ஏராளம். உடைந்த குடும்பங்களும், விவாகரத்துக்களும் ஏராளம். ஒழுக்கமின்மைகளும், கட்டுப்பாடின்மைகளும் ஏராளம். காரணம் என்ன? கல்வியின்மையா? அறிவின்மையா? ஞானமின்மை யா? இல்லவே இல்லை. நல்ல இதயமின்மையே காரணம். பண்புகளை வளர்க் காமல் அறிவினை மட்டும் வளர்த்து என்ன பயன்? இதயத்தைக் கட்டுக்கோப்பாக வைக்காமல், மூளையைக் கூர்மைப்படுத்தி என்ன பயன்? நல்ல வாழ்க்கைக்கு நல்ல இதயமே அவசியம்.

ஆளும் வளரணும், அறிவும் வளரணும் அதுதாண்டா வளர்ச்சி என்று ஒரு பழைய சினிமாப் பாடல் உண்டு. ஆனால், அறிவு வளர்ச்சியும், சரீர வளர்ச்சியும் இணைந்துவிட்டால் அது மட்டுமே வளர்ச்சி ஆகிவிடாது. அவனுடைய இதய நிலையும் போதிய வளர்ச்சிகளைக் காண வேண்டும்.

இன்றைய சமுதாயத்தில் அறிவு வளர்ச்சி அதிகம். குறிப்பாக வாலிப சமு தாயத்தினருக்கு அறிவு வளர்ச்சி நன்றாக உள்ளது. ஆனால், ஒழுங்குநிலை களில் அவர்கள் மிகவும் பின்தங்கியிருக்கிறார்கள். நல்ல கல்வியறிவும், ஞானமும் இருந்தாலும், இதயம் பண்படாதவரை அவைகள் ஒருமனிதனைச் சரியான பாதையில் நடத்திட இயலாதவைகளே.

பல பெற்றோர்கள் பிள்ளைகளின் அறிவு வளர்ச்சி நிலையில்தான் அதிகக் கவனம் செலுத்துகின்றார்களேயன்றி, அவர்களுடைய இதயம் பண்பட ஏதாவது செய்ய வேண்டும் என்ற உணர்வில்லாமலிருக்கிறார்கள். பிள்ளைகளின் மூளையைக் கூர்மைப்படுத்த அதிக முயற்சி செய்து, இதயத்தை இருள் அடைய விட்டு விடுகிறார்கள். ஆனால், ஒரு மனிதனுடைய சமாதானமான வாழ்க்கைக்கு, மூளையைவிட இதயநிலைதான், முக்கியப் பங்கு வகிக்கிறது என்பதை மறந்து விடக் கூடாது.

சாலொமோன் மிகுதியான அறிவும் ஞானமும் உடையவன். ஆனால், அவைகளைக் கொண்டு அவனால் ஒரு திருப்தியான வாழ்க்கையைக் காண முடியாமல், இறுதியில் எல்லாம் மாயை, எல்லாம் மாயை என்றான். ஏனென்றால், இதயத்தில் தேவ ஐக்கியம் இல்லை. அங்கே தேவனுடைய ஆளுகையோ, செயல் களோ இல்லை. எனவே பெற்றோர்கள் சிறு வயதிலிருந்து அறிவை மட்டுமே ஊட் டாமல், அவர்களின் இதயம் நற்பண்புகள் நிறைந்ததாக மாறும்படியாக, தேவ பக்திக்கேதுவான நற்போதனைகளை ஊட்டவும் அதிகச் சிரமம் எடுக்க வேண்டும்.

சிந்தனைக்கு...

கற்றுக்கொள்வதற்காக மட்டும் அல்ல.
கடைப்பிடிப்பதற்காக கற்பவனே சரியான மாணவன்.

பிப்ரவரி 27
துக்கங்களுக்கும் முடிவுண்டு

ஏசாயா 43:1-11

நீ தண்ணீர்களைக் கடக்கும்போது நான் உன்னோடு இருப்பேன்...
ஏசாயா 43:2

நம்முடைய குடும்பத்தில் ஒருவர் மரிப்பதை நாம் விரும்பமாட்டோம். நம்முடைய சரீரத்தில் ஒரு வியாதி வருவதை நாம் விரும்ப மாட்டோம். நம்முடைய வாழ்க்கையில் ஒரு சோதனை வருவதை நாம் விரும்பமாட்டோம். இவைகள் யாவும் வராமல் தேவன் நம்மைக் காக்க வேண்டும் என்பதே அவரிடத்தில் நமக்கிருக்கும் மிகப்பெரிய எதிர் பார்ப்புகளாயிருக்கும். நமக்கு மனப்பாதிப்பை ஏற்படுத்தும் எந்த ஒன்றையும் நாம் வெறுக்கவே செய்வோம்.

ஆனால் இவைகள் என்றாவது ஒரு நாள் நடைபெறவே செய்யும். நம்முடைய அபிலாஷைகள் யாவற்றையும் தேவன் நிறைவேற்றுவதை நாம் காண முடியாது. தேவன் நியமித்த இயற்கையான உலக இயக்கத்தில் இவைகள் யாவற்றையும் நாம் சந்தித்துதான் ஆகவேண்டும். மலை போன்ற விசுவாசங்கள் நமக்கிருந் தாலும், இயற்கை விதிகளின் இயக்கங்களில் நடைபெறுகின்ற பல துக்கமான விஷயங்கள் நடந்தே தீரும். தேவன் தம்மை நேசித்து நடக்கின்றவர்களுக்காக எப்பொழுதும் இயற்கை விதிகளைத் தடுத்து நிறுத்துவது இல்லை.எனவே, சில சூழ்நிலைகள் தேவனைப் பின்பற்றாதவர் களுக்கு வருவது போல நமக்கும் வரும்.

ஆனால், எது நடந்தாலும் எப்படி நடந்தாலும் தேவனைச் சார்ந்து நாம் வாழ் கின்றவர்களாயிருந்தால், தேவன் நம்மோடிருந்து தம்மைத் தாங்குவார். அழுகையின் சூழ்நிலைகளை அவர் தடுக்காமலிருந்தாலும், அழுகின்ற வேளையில் ஆறுதல் செய்ய அவர் மறப்பதில்லை. துக்கமே வராமல் அவர் தடுக்காதிருந்தாலும், துக்கப்படுகின்ற தம்முடைய விசுவாசிகளை அவர் துவண்டு போகாமல் தாங்கி நடத்திடத் தாமதிப்பதில்லை. அப்படி ஒன்று நிகழ்ந்தால் எப்படி என்னால் அதன் பின் வாழ முடியும்? அதுபோல ஒன்று நிகழ்ந்துவிட்டால் அதனை என்னால் எப்படித் தாங்க இயலும்? என்பது போன்ற கேள்விகள் மனதின் ஆழங்களில் தோன்றித் தோன்றி மறைகின்ற வேளைகள் உண்டு. ஆனால் கர்த்தர் நம்மோடிருந்தால் அவர் நம்மை எந்த நிலையிலும் நடத்துவார்.

கர்த்தருடைய திவ்ய பிரசன்னம் நம்முடைய எந்த வாழ்க்கைச் சூழ்நிலையின் நடுவிலும் நம்மைத் தேற்றி திடப்படுத்தி வலுவாக நிறுத்த வல்லமையானது. நெருக்கப்படுகின்ற வேளையிலும் நாம் ஒடுங்கிப் போகாதபடி தேவப் பிரசன்னம் நம்மைத் தாங்கும், கலக்கங்கள் ஏற்படுகின்ற நேரங்களிலும் மனம் முறிந்து போகாமல் தேவ சமுகம் நம்மைக் காத்துக்கொள்ளும். அந்த தேவப் பிரசன்னத்தில் வாழ்ந்திடக் கவனமாயிருப்போம்.

சிந்தனைக்கு...

தேவன் தர விரும்பியவைகளை அடைந்திட அசதியாயிராதே.
அவர் தர விரும்பாதவைகளைப் பெற்றிடப் பிரயாசப்படாதே.

பிப்ரவரி 28

எப்படி வாழ்ந்தாலும்

மத்தேயு 11:11-24

இதோ.. ஆயக்காரருக்கும் பாவிகளுக்கும் சிநேகிதன் .....
மத்தேயு 11:19

நான் பேசாமல் இருந்தேன்;
இவன் பேசத் தெரியாத ஊமை என்றனர்.
நான் பேசத் துவங்கினேன்; இவன் ஒரு வாயாடி என்றனர்.
நான் உணர்வுகளை அடக்கினேன்;
இவன் ஒரு மரக்கட்டை என்றனர்.
நான் தவறுகளைச் சுட்டிக்காட்டிட ஆரம்பித்தேன்;
இவன் ஒரு குறைகூறும் ஆவி உடையவன் என்றனர்.
நான் சிக்கனமாகச் செலவு செய்தேன்;
இவன் கஞ்சன் என்றனர்.
நான் தாராளமாகச் செலவு செய்தேன்;
இவன் ஒரு வீண்விரயக்காரன் என்றனர்.
நான் எளிமையாக உடுத்தினேன்;
இவன் வேஷமிடுகிறான் என்றனர்.
நான் நன்றாக உடுத்தினேன்;
இவன் ஆடம்பரக்காரன் என்றனர்.
நான் நல்லவர்களோடு மட்டும் பழகினேன்;
இவன் எல்லோரையும் நேசிக்கவில்லை என்றனர்.
நான் எல்லோரோடும் பழகினேன்;
இவன் கொள்கையில்லாதவன் என்றனர்.

ஆம்.இந்த பூமியில் நாம் எப்படி வாழ்ந்தாலும் சிலருடைய கண்கள் நம்மைத் தவறாகவே பார்க்கும். எல்லோருக்கும் பிரியமாக வாழ்வது இயலாத காரியம். நாம் எப்படி வாழவேண்டும் என்பதைத் தேவன் மட்டுமே நமக்குச் சரியாகச் சொல்ல முடியும். அவரின் பிரியத்தின்படி வாழ்வது மட்டும், நமக்குள் நல்ல திருப்தியைத் தரும். ஜனங்களை விட்டுச் சற்று விலகி சன்னியாசி போல வாழ்ந்த யோவானையும் பரிசேயர்கள் விமர்சித்தனர். ஜனங்களோடு நெருங்கிச் சாதாரணமாக வாழ்ந்த இயேசுவையும் பரிசேயர்கள் விமர்சித்தனர்.

மற்றவர்களின் மனநிலைகளுக்கு ஏற்றபடி அல்ல. நாம் தேவனுடைய மனநிலைகளுக்கேற்றபடி வாழப் பழகிக்கொண்டால், பிறரின் விமர்சனங்கள் நம்மை விசனப்படுத்தாது.

சிந்தனைக்கு...

விமர்சனங்களுக்கு விதிவிலக்காக இருக்க விரும்புகின்றவன், உண்மையின் விதிகளை விட்டு விலகித்தான் ஆகவேண்டும்.

பிப்ரவரி 29

ஏற்கெனவே கேட்டது

பிலிப்பியர் 3:1-14

எழுதினவைகளையே எழுதுவது எனக்கு வருத்தமல்ல.
பிலிப்பியர் 3:1

பாஸ்டர் ஒருவர் தன் சபையில் பிரசங்கம் பண்ணும் போதெல்லாம், அந்த சபையைச் சேர்ந்த ஒருவர் மிகவும் கவனமாக குறிப்பு எடுப்பார். எப்பொழுதெல்லாம் பாஸ்டர் ஏற்கெனவே சொன்ன கருத்துகளையோ, உதாரணங்களையோ திரும்பச் சொல்வதைக் கேட்டால், பாஸ்டர் ஏற்கெனவே சொன்னதைத்தான் இன்றும் சொன்னீர்கள் என்று கூறுவார். பாஸ்டருக்கு அது கொஞ்சம் மனக்கஷ்டமாயிருக்கும். ஒருநாள் அந்த நபர், ஏற்கெனவே பிரசங்கித்த ஒரு விஷயத்தை மறுபடியும் பாஸ்டர் பிரசங்கித்ததைக் கேட்டார். எனவே, பாஸ்டரிடம் சென்று சுட்டிக் காட்டினார். அதற்கு அந்த பாஸ்டர், பிரதர் இனி நான் பிரசங்கித்த சத்தியத்தை நீங்கள் பின்பற்ற ஆரம்பித்த பின்னரும் நான் அதைப் பிரசங்கித்தால் என்னிடம் சொல்லுங்கள் என்றார். அதற்குப் பின்பு அந்த நபர் பாஸ்டரிடம் வரவேயில்லை.

சில நேரங்களில் நாம் ஏற்கெனவே கேட்ட அறிவுரையையோ, கேட்ட சத்திய வார்த்தைகளையோ மறுபடியும் கேட்க நேரிடுகிறது. அப்போது இது என்ன அரைத்த மாவையே திரும்ப அரைக்கிறார்களே என்று சலித்துக்கொள்கின்றோம். ஆனால் நாம் கேட்டவைகளை, ஏற்கெனவே பின்பற்ற ஆரம்பித்து விட்டோமா என்பதே முக்கியம். யோசேப்பின் சகிப்புத் தன்மையைக் குறித்து திரும்பத் திரும்ப பிரசங்கம் கேட்டால் சலிப்பு வருவது இயற்கை. ஆனால், யோசேப்பைப் போல நமக்குள் சகிப்புத் தன்மை வந்துவிட்டதா என்பது முக்கியம். அப்படி வராத பட்சத்தில் இன்னும் சிலமுறை கேட்பது சலிப்பிற்குரியது அல்ல. அது அவசியம்.

ஏற்கெனவே அறிந்ததும், கேட்டதும்தானே என்று அல்ல. ஏற்கெனவே கடைப் பிடித்து வெற்றிகண்டதா என்பதே முக்கியம். சாப்பிட வாருங்கள் சாப்பிட வாருங்கள் என்று பலமுறை மனைவி அழைத்தபோது கணவனுக்கு ஆத்திரம் வந்தது. உனக்கு வேறு வேலையில்லையா என்று கத்தினான். ஆம். நீங்கள் சாப்பிட்டு முடித்தால் தான் பாத்திரங்களை கழுவிப் போட்டுவிட்டு அடுத்த வேலைக்குப் போக முடியும் என்றாள் மனைவி. ஆம். சாப்பிட்டு முடித்து விட்டிருந்தால் சாப்பிட வரும்படி மறுபடி அழைப்பு கொடுப்பது தவறுதான். சாப்பிடும் வரை அழைப்பு கொடுப்பது நியாயம்தான்.

எழுதினவைகளையே எழுதுவது எனக்கு வருத்தமல்ல. அது உங்களுக்கு நலமாயிருக்கும் என்று அப்போஸ்தலனாகிய பவுல் பிலிப்பி சபை மக்களுக்கு எழுதினான். ஆம். சில விஷயங்கள் திரும்பத் திரும்பச் சொல்லப்படுவது தவறு அல்ல. சில விஷயங்கள் திரும்பத் திரும்ப எழுதப்படுவது தவறு அல்ல. அவை நாம் ஏற்கெனவே கேட்டும் செயல்படாமல் போன விஷயங்கள் தொடர்பான ஞாபகமூட்டல்கள்.

சிந்தனைக்கு...

நீ என்ன செய்ய வேண்டும் என்பதை உணராதவரை தேவன் உன் வாழ்வில் எதையும் செய்யமுடியாது

மார்ச் 1

நாமே ஜெபிக்கலாம்

யோசுவா 1:1-9

நான் மோசேயோடே இருந்தது போல...
யோசுவா 1:5

பக்தியுள்ள ஒரு தாய் ஒவ்வொரு நாளும் தன் பிள்ளைகளைப் பள்ளிக்கூடத்திற்கு அனுப்பும் முன்பு, அவர்களைத் தேவன் பாதுகாத்து வழிநடத்தும்படி ஜெபித்து அனுப்புவாள். ஒருநாள் கடுமையான வியாதியின் விளைவாக அந்த தாயார் ஓரிரு நாளில் மரிப்பது உறுதியாகிவிட்டது. அந்த தாயார் மரிக்கும் முன்பு தன்னுடைய பிள்ளைகளைத் தன் பக்கம் அழைத்து, இனி உங்களுக்காகச் ஜெபிப்பதற்கு நான் இருக்கமாட்டேன். ஆனால் ஜெபத்தைக் கேட்பதற்குத் தேவன் என்றும் உங்களோடிருப்பார். எனவே, தினமும் ஜெபித்து அவருடைய உதவியைப் பெற மறந்து விடாதிருங்கள் என்று கூறினார்.

ஒரு தேவ ஊழியர் தன் சபை மக்களிடம் பேசும் போது, நீண்டகாலமாக உங்களுக்காக நிறைய ஜெபித்துவிட்டேன். இனி உங்களுக்காக நான் ஜெபிக்க மாட்டேன். ஏனென்றால், தேவனை நோக்கி நீங்கள் ஜெபிக்கும் ஜெபங்களே போதுமானவை என்றாராம். ஒரு தேவ ஊழியரின் ஜெப உதவியை அவ்வப்போது தேடும் பழக்கமுடைய ஒரு குடும்பத்தார், அவர் இறந்ததும், ஐயோ! இனி எங்கள் குடும்பத்திற்காக யார் ஜெபிப்பார்கள் என்று கதறி அழுதார்களாம். ஆனால், ஒரு உண்மையை நாம் உணர வேண்டும். நமக்காகச் ஜெபிக்க யாரும் தேவையில்லை. நாம் ஜெபித்தாலே போதும்.

ஒரு மகன், ஐயா இனி என் அப்பாவிடமிருந்து எனக்குத் தேவையானவைகளை யார் பெற்றுத் தருவார்? என்று கதறினால் அது அர்த்தமற்றது. தகப்பனிடம் நன்மையைப் பெற்றுத்தர யாரும் தேவையில்லை. பிள்ளை தகப்பனுக்கு நல்ல பிள்ளையாயிருந்தாலே போதும். நமக்காகச் ஜெபிக்க சிலர் இருந்தால் அது நல்லதே. ஆனால், நமக்காகச் ஜெபிக்க யாரும் இல்லாமல் போனாலும், நம்முடைய பிதாவாகிய தேவன், பிள்ளைகளாகிய நம்முடைய ஜெபத்தை மட்டுமே கேட்டுக்கூட, நமக்குத் தேவையான எல்லா நன்மைகளையும் தர முடியும்.

மோசே மரித்தபின்பு, யோசுவா எதையும் செய்ய இயலாதவனாகப் போய்விடவில்லை. மோசே மரித்துப்போனாலும், மோசேயின் தேவன் அங்கே உயிரோடிருந்து அவனை நடத்தினார். மோசேயுடன் இருந்தது போல தாம் அவனோடும் இருக்கப் போவதாக உறுதியளித்தார். ஆம். தேவன் என்றும் மரிப்பதில்லை. எனவே, எல்லா நேரங்களிலும் நம்மோடிருந்து நமக்கு உதவி செய்ய வல்லவரே. நமக்காகச் ஜெபிக்கின்ற சிலர் இருந்தால் கர்த்தருக்கு நன்றி சொல்வோம். ஆயினும், யாருடைய ஜெபத்தையும் சார்ந்தது அல்ல நமது ஆசீர்வாதம். நம்முடைய ஜெபங்கள் பிரசித்தி பெற்ற தேவ ஊழியனின் ஜெபத்தைவிட வலிமை குறைந்தது அல்ல.

சிந்தனைக்கு...

நடக்க வேண்டியதை நினைத்துக் கொண்டிருப்பதே நடந்து முடிந்த வேதனைகளை மறப்பதற்கான எளிய வழி.

மார்ச் 2

ஏமாற்றங்கள்

யோவான் 16:13-33

உங்கள் துக்கம் சந்தோஷமாக மாறும்
யோவான் 16:20

சில ஏமாற்றங்கள், சில தோல்விகள் உங்களை மிகுந்த சோர்வுக்குள்ளாக்கிவிடுவது உண்மைதான். சில நேரம் அவைகள் உங்களுடைய வாழ்க்கையை ஊனமாக்கி விடுவதும் உண்டு. ஆனா சில ஏமாற்றங்கள் இன்னும் சில நாட்கள் உங்களை வியாகுலப்படுத்திக் கொண்டிருக்கலாம். சில தோல்விகளின் காயங்கள் ஆறிட இன்னும் சில காலங்கள் ஆகலாம். ஆனால் ஏமாற்றங்களும், தோல்விகளும் நிரந்தரங்களல்ல. இந்த ஏமாற்றங்களுக்குப் பின்னால் நீங்கள் எதிர்பார்த்திராத சில நன்மைகள் உங்களுக்காக காத்திருக்கும். இந்த தோல்விகளுக்குப் பின்னால் உங்களை ஆச்சரியப்படுத்தும் சில வெற்றிகள் ஆயத்தமாயிருக்கலாம்

மோசேயின் முயற்சிகள் முதல் கட்டத்தில் ஏமாற்றங்களையே அளித்தன. அவனுடைய எண்ணங்கள் அவனுக்குத் தோல்வியையே கொடுத்தது. ஆனால் அவை அவன் போட்ட திட்டத்தின் தோல்விகளும் ஏமாற்றங்களும்தானேயன்றி தேவனுடைய திட்டத்திற்கு ஏற்பட்ட தோல்விகள் அல்ல.

யோசேப்பின் சகோதரர்களின் தீயதிட்டம் வென்று, யோசேப்பு தோல்வி கண்ட ஒரு மனிதனைப் போல மாறினான். ஆனால், அந்த தோல்வி ஏற்படுத்திய வியாகுலங்களைத் தொடர்ந்து தேவனால் அனுப்பப்பட்ட வெற்றிகள் வந்தன. அந்த வெற்றிகள் அவனுடைய வாழ்க்கையின் தோற்றங்களையும், அர்த்தங்களையும் மாற்றிவிட்டன. தேவனால் வருகின்ற மகிமையான வெற்றிகளுக்கு நேராக வந்து சேர்ந்திட சகோதரர்களால் வந்த தோல்விகள் வழிவகுத்தன.

பெரும்பாலும் உங்கள் வாழ்க்கையின்மேல் தேவன் வைத்துள்ள திட்டங்களின் வெற்றிகளை, உங்களுக்கு அளிப்பதற்காக உங்களின் சுய முயற்சி சார்ந்த திட்டங்கள் தோல்வியடைகின்றவரை அவர் காத்திருக்கின்றார். தாவீதின் சுய முயற்சிகள் சார்ந்த திட்டங்கள் யாவும் தோல்வியைக் கண்ட பின்னரே, தேவ திட்டம் சார்ந்த வெற்றியை அவன் கண்டடைந்தான்.

மோசேயைப் போலவோ, தாவீதைப் போலவோ, நீங்கள் எதையோ வாஞ்சித்து, விரும்பிச் சென்று ஏமாற்றங்களையே காண நேரிட்டிருக்கலாம். ஆனால், இந்த ஏமாற்றங்கள் ஏற்படுத்திய வியாகுல மனநிலையையும், கண்ணீரையும் வீணாக்கி விடாதிருங்கள். அந்த துக்கத்தையும் சோர்வையும் தேவனிடம் கொண்டு செல் லுங்கள். தன்னுடைய கடந்தகால தவறுகளை உணர்ந்து உண்மையாக தேவனைத் தேடுகின்ற யாவருக்காகவும், எதிர்பாராத ஒரு வெற்றி தேவதிட்டத்தின்படி இருப்பது நிச்சயம். அது வெளிப்படும்வரை காத்திருங்கள்.

சிந்தனைக்கு...

இறை நம்பிக்கையை இதயத்தில் வளர்த்துக்கொண்டால்
தன்னம்பிக்கையிழந்து ஒரு போதும் நீ தலை குனிவதில்லை.

மார்ச் 3

இயேசுவைப் பிரதிபலித்தல்

அப்போஸ்தலர் 1:1–11

எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள்..
அப்போஸ்தலர் 1:8

சபைக்குப் புதிதாக வந்த பாஸ்டருக்கு வரவேற்பு கொடுக்கப்பட்டது. அவரைப் பார்த்து சிறுவன் ஒருவன் தன் தாயிடம் “அம்மா... இவர்தான் இயேசு நாதரா?” என்று கேட்டான். அதற்கு அந்த தாய் “இவர் இயேசு அல்ல. ஆனால், இவர் இயேசுவைப் பற்றி நமக்குப் போதிக்கின்றவர். இவர் இயேசுவைப் போலவே வாழ்கின்றவர்” என்று கூறினார். சில வாரங்களுக்குப் பிறகு அந்தச் சிறுவன் தன் தாயிடம், “அம்மா.. இவர் இயேசுவைப் போல அல்ல. நம்முடைய டாடியைப் போலவே இருக்கிறார். அவர் என்னை ரொம்ப திட்டுகிறார். நான் ஏதாவது செய்தால் என்னிடம் ரொம்ப கோபப்படுகிறார்” என்றான்.

போதகர்கள் தங்களின் விசேஷ ஆன்மீக ஆடைகளுடன் தோன்றும்போது, ஜனங்களுக்கு ஒரு பெரிய எதிர்பார்ப்பு ஏற்படுகிறது. இயேசுவை நேரில் பார்க்க வாய்ப்பில்லை. ஆனால், போதகர்களிடம் அவருடைய சாயலை மக்கள் பார்க்க முடியும். ஏனென்றால், போதகர்கள் என்பவர்கள் இயேசுவைப் பிரதிபலித்துக் காட்ட வேண்டிய பொறுப்பில் உள்ளவர்கள். போதகர்கள் இயேசுவை விளம்பரம் செய்கிறவர்களாக மட்டுமல்ல. அவரைப் பிறருக்கு தாங்கள் வாழ்கின்ற விதத்தால் காண்பிக்கின்றவர்களாகவும் இருக்க வேண்டும்.

இயேசு சீடர்களை உலகமெங்கும் அனுப்பும்போது அவர்கள் நன்றாகப் பிரசங்கிக்கின்றவர்களாக மட்டும் அல்ல. அவர்கள் தமக்குச் சாட்சிகளாயிருக்க வேண்டும் என்றும் விரும்பினார். ஏனென்றால், கிறிஸ்துவின் சுவிசேஷம் என்பது வெறும் போதனைகள் அல்ல. அது வாழ்க்கையையும் உள்ளடக்கியது. சுவிசேஷம் அறிவிப்பது என்பது போதனையையும் வாழ்க்கை முறையையும் இணைத்துக் கொடுப்பதாகும். “நான் வாயினால் சொல்வதைக் கேளுங்கள். நான் வாழ்க்கையினால் வெளிப்படுத்துவதை பாருங்கள்” என்று சொல்ல வேண்டிய கடமை உண்டு.

நாம் இயேசுவைக் குறித்துச் சொன்ன விசேஷங்களை முதலாவது ஜனங்கள் தங்களிடத்தில் அல்ல. அவற்றை முதலாவது நம்மிடம்தான் பார்க்க விரும்புவார்கள். நம்முடைய வாழ்க்கை இயேசுவைப் பிரதிபலிக்கத் தவறும் போது நாம் சொன்ன சிறந்த விஷயங்கள் மற்றவர்களிடம் கிறிஸ்துவை உருவாக்குவதும் கடினம் ஆகிவிடும். ஆனால், அநேகர் போதகரிடம் இயேசு பிரதிபலிக்கின்றாரா என்பதை மட்டும் நன்றாகக் கவனிக்கின்றார்கள். ஆனால் போதகர்கள் மட்டும் அல்ல. இயேசுவை அறிந்த நாம் ஒவ்வொருவரும் ஒரு சிலருக்காவது இயேசுவைப் போதிக்க வேண்டிய கடமையில் உள்ளவர்கள். எனவே, நாம் ஒவ்வொருவரும் நம்மிடம் இயேசு பிரதிபலிப்பதை பிறர் காண இயலுமா என்று கேட்கத் தவறக்கூடாது.

சிந்தனைக்கு...

தேவனை அறிந்தவன் தன்னை அறிவான், அவனே இன்னொருவருக்குத் தேவனை அறிவிக்கத் தகுதியானவன்.

மார்ச் 4
கோபம் வேண்டாம்

யோனா 4 : 1– 11

நீ எரிச்சலாயிருக்கிறது நல்லதோ ?
யோனா 4:9

இன்னொருவர் செய்ததை, சொன்னதை, நடந்து கொண்டவிதத்தை நினைத்துப் பார்க்கிறோம். அங்கே அவரைக் கசந்து கொள்வதற்கும், அவர்மேல் கோப மடைவதற்கும், அவரைக் குறித்து எரிச்சலாயிருப்பதற்கும் நமக்குப் போதுமான காரணங்களும், நியாயங்களும் உண்டு. ஆனால் எரிச்சலடைவதினாலும், கசப் புணர்வோடு இருப்பதினாலும், மனவருத்தம் அடைவதினாலும் நமக்கு ஏதாவது நன்மை உண்டா? நிச்சயமாக இல்லை. ஆனால், நிச்சயம் தீமை உண்டு.

கோபம், எரிச்சல், கசப்பு, வைராக்கியம் பகைமையுணர்வு, பதிலுக்குப் பதில் செய்ய விரும்பும் மனோபாவம் ஆகியவற்றால் நாம் மனரீதியாகவும், உடல்ரீதி யாகவும் பாதிக்கப்படுவோம். இவைகளால் நம்முடைய முயற்சிகள், முன்னேற்றங்கள், சமாதானம், சந்தோஷம், ஆகியவை பாதிக்கப்படும். அப்படியானால் நாம் காணும் நியாயங்களும், சரியான காரணங்களும் நமக்கு நன்மையை அல்ல, தீமையையே கொண்டுவருகின்றது என்பது தெளிவாகிறது.

நினிவே மக்களின் பொல்லாத நடவடிக்கைகளின் விளைவாக யோனா தீர்க்கதரிசியின் உள்ளத்தில் கோபமும், எரிச்சலும், வருத்தமும் அவர்கள் தண் டிக்கப்பட வேண்டும் என்ற சிந்தையும் குடிகொண்டது. அவைகள் நியாயமான வைகளாக இருக்கலாம். ஆனால், அவைகளால் யோனாவுக்கு ஒன்றன்பின் ஒன்றாக மனக் கஷ்டத்திற்குரிய நிகழ்வுகளே வந்தன. தேவ சமுகத்தை விட்டு ஓடவும், மீனின் வயிற்றில் நெருக்கப்படவும், தொடர்ந்து அமைதியற்ற மனநிலையோடு செயல்படவும் அவைகள் வழி வகுத்தன. தேவன் அவனைச் சரிசெய்ய பலவிதங்களில் சிரமப்பட நேர்ந்தது.

பல நேரங்களிலும் நம்மிடம் உள்ள கோபம், எரிச்சல், கசப்பு, வெறுப்புணர்வு ஆகியவற்றிற்குப் போதுமான காரணங்கள் இருப்பதையே நாம் பார்க்கின்றோம். அவைகளால் நமக்கு ஏற்படுகின்ற தீங்குகளையும், தீவினைகளையும் நாம் கவனிப்பதில்லை. சில நேரங்களில் சிலரால் ஏற்பட்ட தீங்குகள் அற்பமானவைதான். ஆனால், அந்தத் தீங்குகளை மன்னிக்காததால் ஏற்படும் தீங்குகளோ ஏராளம்.

எனவே கோபம், கசப்பு, வெறுப்பு, விரோதம் ஆகியவற்றிற்கான காரணங்கள் எதுவானாலும் மனதில் கோபத்தையும், வெறுப்பையும் தங்க விடாமல் தடுக்க வேண்டியது அவசியம். தேவன் ஆகாத குணங்களை அப்புறப்படுத்த விரும்புகிறார். ஏனென்றால், அவைகளால் தீமையேயன்றி, நன்மை எதுவும் இல்லை.

சிந்தனைக்கு...

உன்னைத் தாழ்த்துவது தாழ்மையின் அடையாளம், பிறர் தாழ்த்தும் போது தாங்கிக் கொள்வதே அதன் நிரூபணம்

மார்ச் 5

வெற்றியும் தோல்வியும்

சங்கீதம் 34:1-22

நீதிமானுக்கு வரும் துன்பங்கள் அநேகமாயிருக்கும்.
சங்கீதம் 34:19

ஒரு மாணவன் தான் படித்த கல்லூரியில் ஒரு டாப் ஹுரோவாயிருந்தான். அவன் சிறந்த விளையாட்டு வீரன். அவன் ஒரு போட்டியில் கலந்து கொண்டால் அவனுக்குத் தான் வெற்றி என்று துவக்கத்திலேயே கூறி விடுவார்கள். ஏனென்றால், அவன் பங்கு பெற்ற அணி இதுவரை தோல்வி கண்டதில்லை. ஆனால், சற்றும் எதிர்பாராத விதமாக ஒரு முறை ஒரு போட்டியில் தோல்வியைச் சந்தித்தான். ஆனால், அந்த தோல்வியை அவனால் தாங்கிக்கொள்ள இயலாமல் மன உளைச்சலுடையவனாகி மாறிப் போனான். அது அவனுடைய முயற்சிகளுக்கு பெரும் தடையாகிப்போனது.

ஒருவன் பல வெற்றிகளைப் பெற்றிருந்தும் ஒரு தோல்வியைத் தாங்கிக் கொள்ள இயலாமல் போனால், அவன் வீரன் அல்ல. கோழையே. சிலர் தொட்டதில் எல்லாம் துலங்குவார்கள். நினைத்ததையெல்லாம் சாதிப்பார்கள். தடையேதும் இல்லாது முன்னேற்றத்தில் தொடருவார்கள். ஆனால், ஒரு சிறு விஷயத்தில் காண நேரிடும் தோல்வி அவர்களை உருக்குலைத்து விடும். அதற்குப் பின்னால் அவர் களால் எழுந்து நிற்பது மிகவும் கடினமான விஷயமே.

தோல்விகளைத் தாங்கிக்கொள்ளும் மனநிலை இல்லாதவர்கள், வெற்றி களைத் தக்கவைப்பது கடினம். வேதாகமத்தில் மிகப் பெரிய விஷயங்களைச் சாதித்த எவரும் தோல்விகளுக்கு விதிவிலக்காக இருந்ததில்லை. ஆபிரகாமாயினும், யோசேப்பாயினும், தாவீதாயினும் வெற்றி தோல்விகளை மாறி மாறிக் காண நேர்ந்த வர்களே. அரசியல் தலைவர் ஒருவர் தொடர்ந்து பலமுறை ஒரு தொகுதியில் ஜெயித்துக் கொண்டே வந்தார். ஆனால் ஒரு முறை தோல்வியைச் சந்தித்தார் . அதற்குப் பின் எந்த தேர்தலையும் சந்திக்க மன தைரியம் இல்லாதவராகிப் போனார்.

வெற்றியும் தோல்வியும் மாறி மாறி வந்தால் அதுவும் நல்லதே. அதனால் வெற்றியின் விலையையும் அறியலாம். தோல்வி தரும் பலனையும் அறியலாம். தேவன் சில தோல்விகளை நாம் காண்பதும் நல்லது என்றே அனுமதித்துள்ளார் என்ற உணர்வு தோன்றினால் மேன்மையே. ஏனென்றால், தோல்விகள் வாயிலாக பலனுள்ள பல நல்ல அனுபவங்களை நாம் பெற இயலும். நம்மைச் சரிசெய்து கொள்வதற்கும் இன்னும் நன்றாகவும், சரியாகவும் செயல்படுவதற்கும் அவை உதவி புரியும். எனவேதான், தேவ மனிதன் ஒருவன் நான் உபத்திரவப்பட்டது நல்லது என்று கூறினான். (சங் 119:71) எனவே வெற்றியின் காலங்களை மட்டுமே தேவ அருளின் காலமாக எண்ணக்கூடாது. தோல்வியின் காலங்களும் நாம் தேவனுக்கேற்ற நல்ல விஷயங்களில் பலப்படுவதற்காகத் தந்த நல்ல காலங்களே.

சிந்தனைக்கு...

பிரச்சினைகளற்ற வாழ்க்கையை அல்ல. பிரச்சினைகளினால் சோர்ந்து போகாத வாழ்க்கையைத்தான் தேவன் தருகிறார்.

மார்ச் 6

உலகச் சுவைகள்

கொலோசெயர் 3 : 1 -15

பூமியிலுள்ளவைகளையல்ல, மேலானவைகளையே நாடுங்கள் ...
கொலோசெயர் 3 : 2

சில சிறுவயதுப் பிள்ளைகள் சாக்லெட், இனிப்பு வகைகள், ஐஸ்கிரீம் போன்ற திண்பண்டங்களை அதிகமாக உண்பதால், நல்ல சத்துமிக்க உணவு வகை களை மிகவும் கட்டாயப்படுத்தித்தான் அவர்களை சாப்பிட வைக்க வேண்டும். சிலர் ஃபாஸ்ட் ஃபுட் அயிட்டங்களைச் சாப்பிட்டுப் பழகிப் போய், வேறு ஆரோக்கியமான உணவுகளை விரும்பாமல் போகின்றார்கள். நம்முடைய நாவை குறிப்பிட்ட சில உணவு வகைகளில் பழக்கி வைத்துவிட்ட பிறகு வேறு வகை உணவுகள் அதற்குச் சுவையாக இராது.

அதுபோல், சிலர் ஆவிக்குரியவர்கள் என்றும், இறை பக்தர்கள் என்றும் அறியப்பட்டிருக்கின்றார்கள். ஆனால், ஆவிக்குரிய விஷயங்களில் அவர்கள் போது மான ஆர்வத்துடன் இருப்பதில்லை. நல்ல வேத உண்மைகள், சத்தியத் தெளிவுமிக்க ஆவிக்குரிய செய்திகள், ஜெபம், தேவ ஐக்கியம் போன்றவற்றில் அவர்கள் அதிக ஆர்வமாயிருப்பதில்லை.

ஏனென்றால், அவர்கள் ஆவிக்குரியவர்களாயினும் பணம், பொருள், அந்தஸ்து, மனித உறவுகள், சுவையான உணவு, நவ நாகரீகத்தனமான உடைகள், ஆடம்பரம், தொலைக்காட்சி போன்றவைகள் வாயிலாக வரும் சந்தோஷங்களை அதி கமாக விரும்பி, அந்தச் சுவைகளோடு அதிகமாகப் பழகிவிட்டார்கள். மேற்கண்டது போன்றவைகள் வாயிலாகவே அவர்கள் சந்தோஷத்தைப் பெற்று பழகிக்கொண்டதால், தேவ உறவு, தேவப் பிரசன்னம், பரிசுத்த வாழ்வு, தேவனுடைய வார்த்தைகள், சத்திய வெளிப்பாடுகள் போன்றவைகள் அவர்களை அதிகமாகக் கவரவில்லை.

அவர்களுக்கு வேதம் வாசிப்பது சலிப்பாயிருக்கும். டி.வி. பார்ப்பதோ மிகவும் ஆனந்தமாயிருக்கும். அவர்களுக்கு ஜெபிப்பது கடினமாயிருக்கும். மொபைல் போனில் அரட்டை அடிப்பதோ மிகவும் பிரியமாயிருக்கும். அவர்களுக்கு ஜெபக் கூட்டம் ஆராதனையெல்லாம் சுமைகள் போல இருக்கும். திருமண வைபவம், பிறந்த நாள் கொண்டாட்டம் போன்றவை ரொம்ப ஜாலியாக இருக்கும். அவர்களுக்கு தேவ உறவைத் தேடுவது என்பது மருந்து சாப்பிடுவது போல இருக்கும். ஆம். உலக சந்தோஷங்களில் அதிக நாட்டமுடையவர்கள், உண்மையான தேவ சந்தோஷத்தைத் தேடும் உணர்வை இழந்துவிடுவார்கள். உண்மையான மறுபிறப்பின் அனுபவத்தைப் பெற்று பரிசுத்தாவியானவரால் இதயம் ஆவிக்கேற்றதாக மாற்றப்பட வேண்டும். அப்போதுதான் ஆவிக்குரிய விஷயங்களில் ஆர்வம் ஏற்பட்டு அவைகளை விரும்பித் தேடும் மனநிலை ஏற்படும்.

சிந்தனைக்கு...

நற்சிந்தனைகளுக்கு நெருங்கிய நண்பனாயிரு
தீய சிந்தனைகள் உன்னை விரோதித்து விலகிப் போகும்.

மார்ச் 7
யாருக்கு அதிகப் பங்கு?

மத்தேயு 26:38-44

அவர்கள் தம்மோடுகூட இருக்கவும்..
மாற்கு 3:14

வெளிநாட்டில் வேலை பார்த்த மூத்த மகன் மிகவும் யோக்கியமாக வாழ்கிறவன் என்றும், எல்லோராலும் நல்லவன் என்றும், பெயர் பெற்றவன். மாதா மாதம் தகப்பனுக்கென்று பலவிதப் பொருட்களை வாங்கி அனுப்பிக்கொண்டேயிருப்பான். ஆனால், பல ஆண்டுகளுக்குப் பின்பு அவன் சொந்த ஊருக்கு வந்தபோது அவன் அதிர்ச்சியடைந்தான். தகப்பனார் தன்னுடைய சொத்துக்களில் பெரும்பகுதியை இளைய மகன் பெயருக்கு உயில் எழுதியிருந்தார். இத்தனைக்கும் இளையமகன், மூத்த மகனைப் போல பலராலும் பாராட்டத்தக்க விதத்தில் வாழ்ந்தவன் அல்ல. இளைய மகனுக்கு அதிகமான சொத்துக்களை எழுதியதற்கு தகப்பன் சொன்ன காரணம், "என் இளைய மகன் எப்போதும் என்னோடிருந்தான்" என்பதாகும்.

நாம் மிகவும் யோக்கியமானவர்களாக இருக்கலாம். பலராலும் பாராட்டத்தக்க நற்குணங்கள் பல இருக்கலாம். தேவனுக்கேற்ற அபரிதமாக காணிக்கை கொடுக்கிறவர்களாக இருக்கலாம். ஆனாலும், நாம் நம்முடைய சுய நீதியை நம்பி, மேன்மை பாராட்டி தேவனுக்குத் தூரமாக நின்று கொண்டிருந்தால், தேவனுடைய அதிக ஆசீர்வாதத்தைப் பெறமுடியாது. தேவன் நம்மிடம் பிரதானமாக எதிர்பார்ப்பது ஐக்கியம். அவரோடு நாம் எப்பொழுதும் ஒன்றி இருக்கிற உறவையே அவர் விரும்புகிறார். கிறிஸ்தவம் என்பது சில சட்டதிட்டங்களைக் கடைப்பிடித்தலும் சில ஒழுங்குகளைக் கடைப்பிடித்தலும் மட்டுமே அல்ல.

மோசேயின் மூலம் சட்டதிட்டங்களைத் கொடுத்த தேவன், புதிய ஏற்பாட்டில் கிறிஸ்துவையே நமக்குத் தந்தார். அவரோடு நாம் நெருங்கிப்பழகி, ஐக்கியமாயிருப்பதுதான் கிறிஸ்தவம். அந்த ஐக்கியத்தின் விளைவாக ஏற்பட வேண்டியதே ஒழுங்குமிக்க பக்தி வாழ்க்கை. நாம் நல்லவர்களாக மட்டும் அல்ல. கர்த்தருடைய பிரசன்னத்தில் அவரோடு இணைந்து வாழும் அனுபவமும் வேண்டும். ஜெபம், தியானம் ஆகியவைகளில் அதிகமாக ஈடுபடும்போது ஐக்கியம் பெருகுகிறது.

நாம் கிறிஸ்தவ ஒழுங்குகளை மட்டும் ஏற்றுக்கொண்டவர்களாக அல்ல. கிறிஸ்துவின் உறவை ஏற்றுக்கொண்டவர்களாகவும் இருக்க வேண்டும். நம்மை நாமே சில கிறிஸ்தவ ஒழுங்குகளைப் பின்பற்றும்படி ஆயத்தப்படுத்திக்கொண்டு, பல நிலைகளில் நாம் சிறந்தவர்களாகத் தோன்ற முடியும். ஆயினும், தேவ ஐக்கியநிலை தினமும் அனுபவிக்கப்படாத நிலையில், அவைகள் பிறரோடு ஒப்பிட்டுப் பார்த்து நம்மை மேன்மையாக எண்ணி பெருமைப்படவே வழிவகுக்கும். அங்கே சிறந்த ஒழுங்குகள் இருக்கலாம். ஆயினும் அங்கே அன்பும், தாழ்மைப் பண்பும், ஏற்றுக் கொள்ளும் மனப்பான்மையும் மிகவும் குறைந்தேயிருக்கும்.

சிந்தனைக்கு...

எவ்வளவு சிறப்பாய் ஆராதிக்கிறாய் என்பதைவிட, இறைவனோடு எவ்வளவு ஐக்கியமாயிருக்கிறாய் என்பதை முதலில் பார்.

மார்ச் 8

யார் நண்பன்?

1 இராஜாக்கள் 21 : 17 – 29

என் பகைஞனே, என்னைக் கண்டுபிடித்தாயா?...
1 இராஜாக்கள் 21 : 20

பெரும்பாலும் ஒரு சராசரி மனிதன் யாரைத் தன்னுடைய அன்பிற்குரிய நல்ல நண்பனாக நினைக்கிறான்? என்று கவனித்துப் பார்த்தால் ஒரு மோச மான மனிதனையே. தன்னை அப்படியே ஏற்றுக்கொள்கின்ற, தன்னுடைய குறை களைக் கண்டு கொள்ளாத,தன்னுடைய தவறுகளுக்குத் துணை நிற்கின்ற ஒரு வனைத்தான் மனிதன் நல்ல நண்பன் என்று எண்ணுகின்றான்.

எனவேதான், சிலருடைய நல்ல நண்பர்கள் உண்மையாக நல்லவர்களாக இல்லை. நம்மை கண்டிக்கின்ற, நம்முடைய தவறான முடிவுகளை ஆதரிக்காத, நம்முடைய தவறான வழிகளைச் சுட்டிக்காட்டுகின்ற,நம்மை அப்படியே நம்பிவிட மறுக்கின்ற ஒருவரை நம்முடைய நல்ல நண்பராக ஏற்றுக்கொள்வது கடினம்தானே.

ஆனால், ஒருவர் நல்ல நண்பராக மட்டும் அல்ல. அவர் ஒரு நல்ல நபராகவும் இருக்க வேண்டும். ரெகொபெயாமுக்கு நல்ல நண்பர்கள் இருந்தனர். ஆனால், அவர்கள் நல்ல ஆட்கள் அல்ல. எனவே, அவர்களின் ஆலோசனைகள் அவனுக்குப் பாதகமாக மாறியது.

ஆகாப் தனக்கு ஆதரவாகப் பேசுகின்றவர்களையெல்லாம் நல்ல நண்பர்கள் என்று எண்ணினான். ஆனால் எலியா, மிகாயா போன்றவர்களைப் பகைவர்களாக எண்ணினான். ஏனென்றால், அவர்கள் துன்மார்க்கத்தை எதிர்த்து, உண்மைக்கு மட்டுமே உடன்படுகின்றவர்கள். அவனுக்கு ஆதரவாகப் பேசுகின்ற வர்களை நல்ல நண்பர்களாக எண்ணியதால், அவர்களுடைய ஆலோசனையே அவனுக்கு அழிவைக் கொண்டுவந்தது.

நாத்தான் தாவீதின் நண்பன்தான். ஆனாலும், தாவீதைப் பிரியப்படுத்திச் செயல்படுவதையே நல்ல நட்பு என்று எண்ணாதவன். எனவே , தாவீது தவறிய போது அதனை சத்தியத்தின் அடிப்படையில் கண்டித்தும் பேசினான். எனவே, தாவீது தவறை உணர்ந்து மனந்திரும்பி தேவ கிருபையைப் பெற்றான்.

நல்லவர்களுக்கு எப்பொழுதும் நண்பர்கள் குறைவு என்பது உண்மை தான். ஏனென்றால் தவறுகளோடும், தவறானவர்களோடும் அவர்களால் இசைந்து செல்ல இயலாதே. பலருடைய வாழ்க்கை நாசமாகக் காரணமாயிருந்தவர்கள் அவர்களின் மோசமான விரோதிகள் அல்ல; அவர்களின் நல்ல நண்பர்களே. ஏனென்றால், அவர்களுக்கு அவர்கள் நல்ல நண்பர்கள், ஆனால், மோசமான மனிதர்கள்.

சிந்தனைக்கு...

தவறைச் சுட்டிக்காட்டுகின்றவனுக்கு நீ விரோதியாகலாம்
ஆனாலும், அவனே நல்ல நண்பன் என்பதை அறியும் நாள் வரும்.

மார்ச் 9

தவறான முடிவுகள்

1 கொரிந்தியர் 5:1 – 13

அப்படியானால் நீங்கள் உலகத்தைவிட்டு நீங்கிப் போக வேண்டியதாயிருக்குமே 1 கொரிந்தியர் 5 : 10

வீட்டிற்குள் கொசு வருகிறது எனபதற்காக நண்பர் ஒருவர் வீட்டின் அனைத்து ஜன்னல்களையும் சாத்தி வைத்திருந்தார். கொசு வராமல் தடுக்க தேவையான நடவடிக்கை தவறல்ல. அதே நேரத்தில் அனைத்து ஜன்னல்களையும் அடைத்து வைப்பதால்,இயற்கை காற்று வீட்டிற்குள் வரவழியின்றி உடல்நலம் கெட்டு விடுமே.

பிறருக்கு நன்மை செய்யச் செல்லும் போது சில மனக்கஷ்டங்கள் ஏற்பட வாய்ப்புண்டு. பிறரோடு உறவுகளையும், ஐக்கியங்களையும் ஏற்படுத்தும் போது, சில கசப்புகளும், தேவையற்ற பிரச்சினைகளும் வருவது உண்மைதான். அதற்காக யாரோடும் உறவும் வேண்டாம், யாருக்கும் எந்த நன்மையும் செய்ய வேண்டாம் என முடிவு செய்து, நம்மை தனிமைப்படுத்திக்கொள்வது ஞானமான செயல் அல்ல.

இயேசு கிறிஸ்து பரிசுத்தராயிருந்தும், பலவித குணாதிசயக் குறைவுகளோடு வாழ்ந்த மக்களோடும் நெருங்கிப் பழகினார். குறைவுகளைக் கண்டு மனஞ்சலித்து தம்மை தனிமைப்படுத்திக் கொண்டதில்லை. மனித வாழ்க்கையில் பிறரோடு ஐக்கியங் கொள்வதும், பேசிப் பழகி வாழ்வதும், சில நன்மைகளைச் செய்வதும், மற்றவர்களின் பிரச்சினைகளில் சம்பந்தப்படுவதும் மிகவும் தேவையானவைகள். அவைகளால் சில கஷ்டங்களும்,சில சோர்வுகளும் ஏற்பட்டுவிட்டதே என்ற வருத்தத்தில், அவை களை விட்டு முற்றிலும் நம்மை விலக்கிக்கொள்வதால், நமக்கு பல பாதிப்புகள் உண்டு. பின்னர் அது மனித வாழ்க்கையே அர்த்தமற்றதாகிவிடும்.

மனிதர்களைக் குறித்து நாம் எச்சரிக்கையாயிருக்க வேண்டும். யார் யாரிடம் எப்படிப் பழக வேண்டும் என்ற வரையறைகளைக் கொண்டிருக்க வேண்டும். மனிதர்களோடுள்ள உறவுகளிலும், தொடர்புகளிலும் நல்ல பகுத்தறிவையும், ஞானத்தையும் கொண்டிருக்க வேண்டும். அதற்குப் பதிலாக மனிதக் கூட்டத்தை விட்டு விலகி வாழ்வதையே பிரச்சினைகளுக்குத் தீர்வு என எண்ணிவிடக் கூடாது. மனிதர்களை விட்டு விலகி வாழ்வதிலும் பிரச்சினை உண்டு.

ஒரு சில சபைகளில் ஏற்பட்ட அதிருப்திகளுக்காக, சபை ஐக்கியமே வேண்டாம் என விட்டவர்கள் உண்டு. சிலரால் ஏற்பட்ட மனக்கஷ்டத்தால் யாரோடும் உறவு வேண்டாம் என்று ஒதுங்கியவர்கள் உண்டு. சில ஊழியர்கள் உண்மையற்றவர் களாக இருந்ததைக் கண்டு, எந்த ஊழியரையும் ஏற்க மறுத்தவர்கள் உண்டு. ஆனால், அவர்கள் தனிமரங்களாகி பின்னாளில் வருத்தப்பட்டிருக்கின்றார்கள். ஆம், தவறைத் தவிர்ப்பதற்காக நல்லதையும் இழந்து போக வேண்டாம்.

சிந்தனைக்கு...

இறைவனைச் சார்ந்து நிற்கவேண்டிய கட்டாயத்தை உணர்ந்தால் மனிதரால் சோர்ந்து போகும் கஷ்டம் வராது.

மார்ச் 10
மற்றவர்களின் சுவை

1 கொரிந்தியர் 10:24-33

எவ்விதத்திலும் எல்லாருக்கும் பிரியமாய் நடக்கிறது போல...
1 கொரிந்தியர் 10:32

ஒரு முறை சாப்பிட மிக நன்றாக இருக்கிறதே என்று நான் ருசித்தறிந்த ஒரு இனிப்புப் பொருளைப் பிள்ளைகளுக்காக ஆசையோடு வாங்கி வந்தேன். ஆனால், அந்த இனிப்புப் பொருள் அவர்களைச் சற்றும் கவரவில்லை. நான் ஆசையோடு வாங்கி வந்த பொருளை அவர்கள் அற்பமாக ஒதுக்கி வைத்து விட்டார்கள். ஒரு சுவையான பொருளை ருசிக்கத் தெரியவில்லையே என்று நான் வருத்தப்பட்டேன். ஆனால், நன்கு சிந்தித்துப் பார்த்தபோது நான்தான் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை என்பதை விளங்கிக் கொண்டேன்.

எனக்குச் சுவையாயிருப்பது எல்லா நாவுக்கும் சுவையாயிராது. எனக்குப் பிரமாதமாகத் தெரிவது எல்லோருக்கும் பிரமாதமாகத் தெரியாது. எனவே, என் சுவையை மட்டுமே அடிப்படையாக வைத்துச் செயல்படாமல், மற்றவர்களுக்கு எது சுவையாயிருக்கும் என்று யோசிக்கும் தேவையும் உள்ளது.

உறவுகளுக்கு மத்தியில் எது அன்பு, எது மகிழ்ச்சி என்று நாமே முடிவு செய்து விடுவதல்ல. மற்றவர்கள் எதனை அன்பு என்று பார்க்கின்றார்கள்? எதை அவர்கள் மகிழ்ச்சியான விஷயமாகப் பார்க்கின்றார்கள்? எது அவர்களுக்குத் திருப்தியளிக்கின்றது? என்பவற்றை நாம் சிந்திக்க வேண்டும். மற்றவர்களின் மனநிலைக் கேற்றபடி நாம் வளைந்து போய் சமரசமாக வேண்டும் என்பதல்ல. மற்றவர்களின் நியாயமான உணர்வுகள், எண்ணங்கள், சுவைகள், விருப்பு வெறுப்புகள் ஆகியவற்றிற்கு நாம் சமநிலைப் பிரமாணத்தோடு மதிப்பளிக்க வேண்டும். அப்பொழுதுதான் அவர்களை நாம் உண்மையாக நேசிக்க முடியும். அப்போதுதான் அவர்களை மகிழ்விக்கும் தன்மையுடைய நற்காரியங்களைச் செய்ய முடியும்.

குடும்ப வாழ்க்கையில் நாம் அன்பு என்று சிந்தித்தது மற்றவருக்கு அன்பாகத் தெரிந்ததா? நாம் நல்லது என்று பார்த்தது அவராலும் அப்படிப் பார்க்கப்பட முடியுமா? நாம் மிகுந்த மகிழ்ச்சிக்குரியது என்று கணக்கிட்டது அவருக்கு உண்மையிலேயே மகிழ்ச்சியைத் தந்ததா? இவ்விதமாகச் சிந்தித்துச் செயல்பட்டால்தான் நம்முடைய அன்பும் நற்செயல்களும் மதிக்கப்படும். தேவன் எதை விரும்புகிறார்? தேவனுடைய பார்வையில் எது சரியாகத் தோன்றுகிறது? தேவன் எதனை அன்பு என்று அங்கீகரிக்கிறார்? நாம் நல்லது என்று செய்வதெல்லாம் அவர் பார்வையில் அப்படியே இருக்குமா? என்றெல்லாம் நாம் சிந்திக்கவேண்டும். தேவன் பிரியப்படும் விதமாகச் செயல்படப் பழகிவிட்டால், மற்றவர்களின் நியாயமான பிரியங்களையும் நாம் அறிந்து செயல்பட முடியும்.

சிந்தனைக்கு...

தீயதைக் கண்டிக்க யாராலும் கூடும்
நல்லதை மெச்சிடவோ சிலரால் மட்டுமே கூடும்

மார்ச் 11

பழைய ஆவி?

லூக்கா 9:51-62

நீங்கள் இன்ன ஆவியுள்ளவர்களென்பதை அறியீர்கள்...
லூக்கா 9:55

இரயிலில் இரவுப் பயண வேளையில் விளக்குகளைப் பயன்படுத்தியது தொடர்பாக இரண்டு பயணிகளிடையே வாக்குவாதம் ஏற்பட்டது. ஒரு பயணி மிக மிகக் கடுமையான வார்த்தைகளைப் பிரயோகித்து வாய்க்கு வந்தபடி தாறுமாறாகப் பேசினார். இன்னொரு பயணியோ அந்தக் கடுமையான வார்த்தைகளினால் எந்தப் பாதிப்பையும் அடையாதவர் போல மிக மிகக் கௌரவமான வார்த்தைகளைக் கண்ணியமாகப் பேசினார். அதைக் கவனித்துக்கொண்டிருந்த இன்னொரு பயணி, உங்களால் எப்படி அந்த முரடனின் மிக மோசமான வார்த்தைகளைக் கேட்டு விட்டு, அந்த மனிதனுக்குள் இருந்த ஆவி அவனை அவ்விதம் பேச வைத்தது. எனக்குள்ளிருந்த ஆவி இவ்விதம் என்னைப் பேச வைத்தது. வேறொன்றுமில்லை என்றார்.

சில நல்ல கிறிஸ்தவர்கள்கூட சற்று கோபமூட்டப்பட்டுவிட்டால் கிறிஸ்தவ ஆவியை விட்டு விட்டு, மனுஷ ஆவியின்படி செயல்பட முந்திவிடுகின்றார்கள். தேவ ஊழியர் ஒருவரை இன்னொருவர் சற்று எரிச்சலடையச் செய்தபோது "ஹலோ... ஒரு பாஸ்டர் என்பதற்காக நான் பொறுமையாயிருக்கிறேன், என் கோபத்தை கிளறி நான் யார் என்பதைக் காண்பிக்க வைக்காதிருங்கள்" என்றாராம்.

சிலர் இயேசுவைப் போல மிக மிகச் சாந்தமாகவும், பொறுமையாகவும் தெய்வீகக் குரலில் அமைதியாகப் பேசுகின்றார்கள். ஆனால், தங்களுக்குள் சற்று காயப்பட நேர்ந்து விட்டால் தங்களின் சுயரூபத்தைக் காட்ட முந்திவிடுகிறார்கள். ஒரு உண்மையான கிறிஸ்தவன் சுய ஆவியாலும் தேவ ஆவியாலும் ஆளப்பட முடியாது. இயேசுவை ஆண்டவராக ஏற்றுக்கொண்ட பிறகு பழைய மனிதனையும், பழைய சுய ஆவியையும் செயல்பட அனுமதிக்கக் கூடாது.

தேவனுடைய பிள்ளைகளுக்கு இரண்டு ஆவி இருக்கக் கூடாது. கோபமூட்டப்படும் சூழ்நிலையிலும், அதிகமாக அநீதியாகக் காயப்படுத்தப்படுகின்ற வேளையிலும் தேவன் தந்த பரிசுத்த ஆவியின் சாந்தத்தினால் அதனைச் சந்திக்க வேண்டும். சோதிக்கப்படும் வேளையில் பழைய ஆவியை செயல்பட அழைத்தால் இன்னும் நாம் சுயத்திற்குச் சாகவில்லை என்பதே அர்த்தம்.

சமாரியாவில் இயேசுவின் சீடர்கள் ஆத்திரமூட்டப்பட்டபோது, எலியாவின் ஆவியை நினைவுகூர்ந்து, அதுபோல செயல்பட விரும்பினார்கள். இயேசுவோ நீங்கள் இன்ன ஆவியை உடையவர்கள் என்பதை அறியீர்களா என்றார். ஆம், எந்த வேளையிலும் தேவ ஆவியால் மட்டுமே செயல்பட கவனமாயிருப்போம்.

சிந்தனைக்கு...

பழிவாங்க விரும்புகிறவன் ஏற்கனவே பட்ட காயத்தோடு இன்னுமொரு காயத்தையும் சேர்த்துக் கொள்கிறான்.

மார்ச் 12

உண்மையான தாழ்மை

லூக்கா 14:7 -14

தன்னைத்தான் தாழ்த்துகிறவன் ....
லூக்கா 14 : 11

தாழ்மையான வாழ்க்கையே தலைசிறந்த வாழ்க்கை. தாழ்மையுடன் வாழக் கற்றுக் கொண்டவன் உயர்வானவாழ்க்கையைப் பெற்றுக்கொள்ளத் தகுதி யானவனே. தன்னைத் தாழ்த்திக்கொண்டேயிருப்பவன், தேவனால் உயர்த்தப் பட்டுக்கொண்டே இருப்பான்.

ஆனால், தாழ்மையாய் தோன்றுவது என்பது வேறு. தாழ்மையாய் இருப்பது என்பது வேறு. தாழ்மையாய் பேசுவது என்பது வேறு, தாழ்மையுணர்வுடன் வாழ்வது என்பது வேறு, சிலருடைய தோற்றம், பேச்சு, செயல் யாவும் தாழ்மையைப் பிரதி பலிக்கும். ஆயினும், அவர்களின் ஆவியில் பெருமை கலந்திருக்கும். அவர்களின் வார்த்தைகள் அதனைக் காட்டிக் கொடுத்துவிடும். ஒருவர் தன்னுடைய தாழ்மையைக் குறித்தே அதிகம் பேசினால், அவர் தாழ்மையின் மூலம் பெருமையைத் தேடுகிறார் என்று அர்த்தம்.

சிலர் தங்களை ராஜாக்களைப் போல காண்பிக்க குறியாயிருப்பார்கள். ஆனால், வாயினால் தாங்கள் ஒன்றுக்கும் உதவாத குப்பை என்பார்கள். இது ஒரு மாயையான தாழ்மை. சிலர் தங்களை சன்னியாசிகள் போலத் தோன்றச் செய்வார்கள். ஆனால் ராஜாக்கள் போல நடத்தப்பட வேண்டும் என்று எதிர்பார்ப்பார்கள். இது வியாபாரத்தனம ான தாழ்மை. சிலர் ஜெப வேளைகளிலும், ஆராதனை வேளைகளிலும் தங்களை எதற்கும் தகுதியற்றவர்களாகச் சொல்வார்கள். ஆனால், யாராவது அவர்களைப் பாராட்டத் தவறிவிட்டால் அதனைத் தாங்கிக்கொள்ளமாட்டார்கள். இது மாய்மால பக்தியின் விளைவான தாழ்மை.

உண்மையான தாழ்மை என்பது, தேவனால் தனக்கு இருக்கும் புகழ்ச்சியை யும், கனத்தையும் உணர்ந்து, அதனுடைய விளைவாக பிறருடைய புகழ்ச்சியைத் தேட விரும்பாமையாகும். கர்த்தரின் மகிமையை ஏசாயா தீர்க்கன் கண்டபோது, தன்னை அவன் உண்மையிலேயே தாழ்மை நிலையில் உள்ள ஒருவனாகக் கண்டான். எனவே, தேவன் அவனை உயர்த்தினார்.

எல்லாவற்றைப் பார்க்கிலும் நம்மைத் தாழ்த்திக்கொள்வதுதான் கடினமான காரியம். ஆனால், தேவனோடு நம்முடைய உறவுகளும், நெருக்கங்களும் பெருகப் பெருக. நம்மைத் தாழ்த்திக் கொள்வதிலேயே நமக்கு ஒரு விசேஷமான மகிழ்ச்சி இருப்பதை உணரமுடியும். அதன் விளைவாக மனிதர்களுக்கு முன்பாகவும் நாம் தாழ்ந்து போகத் தயங்கமாட்டோம்.

சிந்தனைக்கு...

உண்மையை ஒத்துக்கொள்ளுதல் இன்று கசப்பாக இருக்கலாம். ஆனால், நாளை உன் வாழ்வு கசப்பாகி விடாதிருக்க அது அவசியம்.

மார்ச் 13

சுத்தமும், பரிசுத்தமும்

சங்கீதம் 26:1 -12

பரிசுத்தமாகுதலைத் தேவபயத்தோடே....
11 கொரிந்தியர் 7:1

சிலருடையவாழ்க்கை அவர்களைக் குறை கூற இயலாதபடி தவறுகளற்ற வாழ்க்கை யாகவே உள்ளது. ஆனால், அவர்களில் விசேஷமாகச் சொல்லும்படி எந்த நல்ல விஷயங்களும் நிறைவுதரும் காரியங்களும் இருப்பதில்லை.

ஒரு சாதாரணமான வீடு மிகவும் சுத்தமாகப் பராமரிக்கப்பட்டு வருகிறது. இதனை நாம் சுத்தமான வீடு என்று சொல்லலாம். ஆனாலும், அதனை மிகச்சிறந்த வீடு என்றோ, பிரமாதமான வீடு என்றோ சொல்ல முடியாது. அவ்விதம் சொல்ல வேண்டு மானால், அந்த வீடு மிகச் சிறப்பாகக் கட்டப்பட்டு விலை உயர்ந்த பொருட்களால் அலங்கரிக்கப்பட வேண்டும்.

அதுபோலவே நம்முடைய வாழ்க்கையில் குற்றங்களோ, தவறுகளோ, மோசமான செயல்களோ இல்லாமலிருந்தால், அதனை சுத்தமான வாழ்க்கை என்று சொல்ல முடியும். ஆனால், அதுவே பரிசுத்தமான வாழ்க்கை என்று அர்த்தமாகிவிடாது. அதுவே தேவனுக்கேற்ற மிகச் சிறந்த வாழ்க்கை என்றும் கூற முடியாது.

பரிசுத்தமான வாழ்க்கை என்றால் அங்கே சுத்தம் காணப்படுவதுடன், விசேஷ மான, மேன்மையான பல அம்சங்களும் காணப்பட வேண்டும். இயேசு வாழ்ந்தது போன்ற விசேஷமான, வேறுபட்ட தன்மைகளைக் கொண்ட வாழ்க்கைதான் பரிசுத்த வாழ்க்கை ஆகும்.

ஆம், சில தவறுகள் இல்லாமலிருக்கின்ற ஒரு நிலையாக மட்டும் இராமல், பிறர் கண்டு ஆச்சரியப்படத்தக்க விதத்தில் பல நிறைவுகள் உடையதாக விளங்க வேண்டியதே பரிசுத்த வாழ்க்கை. நம்மிடம் விசேஷமான சில குணாதிசயங்கள் வெளியரங்கமாக இல்லாவிடில் விசேஷமாக அறியப்பட முடியாது.

மற்றவர்களின் கவனத்தை ஈர்க்கின்ற அளவிற்கு நம்முடைய நற் குணங்கள் வெளியரங்கமாகும் போதுதான் கிறிஸ்தவ வாழ்க்கையின் பிரகாசம் பிறருக்குத் தெரியவரும். எனவே, ஒருவர் தவறற்றவராக மட்டுமல்ல. தயை நிறைந்தவராகவும் அவர் இருக்கவேண்டும். இதயச் சுத்தம் உள்ளவராக மட்டு மல்ல. இரக்கம் நிறைந்தவராகவும் இருக்க வேண்டும்.

நீதியுள்ளவராக மட்டுமல்ல. அநீதியைச் சகிக்கிறவராகவும் இருக்க வேண்டும். தீங்கு செய்யாமலிருப்பதோடு, பிறர் செய்யும் தீங்குளைத் தாங்கிக்கொள்கிறவராகவும் இருக்க வேண்டும். ஆம், தேவனால் மெச்சத்தகுந்த விசேஷமான தெய்வீக சுபாவங்களை உடைய வாழ்க்கையே பரிசுத்த வாழ்க்கை ஆகும்.

சிந்தனைக்கு...

உன்னோடு இறைவன் இருப்பதை இறைவனுடைய குணங்கள் உன்னோடிருப்பதை வைத்து அறியலாம்.

மார்ச் 14

பிரச்சனைகளைப் பாருங்கள்

நீதிமொழிகள் 28:1-13

தன் பாவங்களை மறைக்கிறவன் வாழ்வடையமாட்டான்.
நீதிமொழிகள் 28:13

சிலர் தங்கள் சரீரத்திலே பல நோவுகளை உணர்ந்தாலும், மருத்துவரிடம் போய் தங்கள் சரீரத்தைப் பரிசோதனை செய்ய விரும்பமாட்டார்கள். ஒருவேளை எதிர்மறையாகப் பயப்படத்தக்க செய்தியைக் கேட்க வேண்டி வந்துவிடுமோ என்ற அச்சமே காரணம். அதுபோலவே, அநேகர் தங்களின் உண்மை நிலையை உணரச் செய்யும் எதையும் விரும்புவதில்லை. தங்களுடைய பலவீனங்களையோ, பிரச்சனைகளையோ, குற்றங்களையோ, குறைவுகளையோ அவ்விதம் இருப்பதாகப் பார்க்க அவர்கள் விரும்புவதில்லை. தங்களிடம் உள்ள பிரச்சனைகளைக் கண்டறிவதால், உள்ளத்தில் உணர நேரிடுகின்ற வேதனையினைத் தவிர்க்கவே, தங்களின் கண்களை மூடிக்கொண்டிருப்பார்கள்.

மிகுதியாகக் கடன்பட்டிருந்த ஒரு சகோதரரிடம் தற்போது உங்களின் கடன் பிரச்சனை எப்படியிருக்கிறது என்று கேட்டபோது, அதை ஏன் ஞாபகப்படுத்துகிறீர்கள். நான் அதை இப்போது நினைப்பதே இல்லை என்றார். சில நேரங்களில் சில பிரச்சனைகளையே சிந்தித்துக்கொண்டிருந்தால் பிறகாரியங்களில் வெற்றி காண முடியாது என்பது உண்மைதான். அதே வேளையில் நம்முடைய பிரச்சினைகளைக் குறித்த ஒரு மறதி நிலையை ஏற்படுத்த விரும்புவது, தீர்வுகளைக் காண்பதற்கான வழிகளை அடைத்துவிடும்.

ஆவிக்குரிய புஸ்தகம் ஒன்றைப் படித்த சகோதரர் ஒருவர் இந்தப் புத்தகத்தை நான் படித்திருக்கக்கூடாது. இது என்னைப் பரிசுத்தத்தில் மிகவும் பின்தங்கியிருப்பதாகக் காட்டுகிறது என்றாராம். அவர் தன்னுடைய பரிசுத்தக் குறைவை நேரடியாகப் பார்க்க விரும்பவில்லை. ஆனால், தேவன் நம்முடைய ஒவ்வொரு குறைவுகளையும், தவறுகளையும், பலவீனங்களையும் தெளிவாகக் கண்டு கொள்ளும்படியாகவே தம்முடைய வார்த்தை என்னும் வெளிச்சத்தை வீசுகிறார். ஏனென்றால், அவைகளைப் பார்க்காதவரை அவைகளைச் சரிசெய்யும் வாய்ப்புகள் இல்லை.

ஏசாயா தீர்க்கத்தரிசியை தேவன் வல்லமையாக உபயோகிக்கும் முன்பு, அவன் இன்னும் தேவனால் சுத்திகரிக்கப்பட வேண்டிய ஒரு நிலமையில் இருப்பதை தேவன் ஒரு தரிசனத்தின் மூலம் வெளிப்படுத்தினார். ஏசாயா தன்னுடைய குறைவினை உணர்ந்து அறிக்கையிட்டான். எனவே, தேவன் அவனைச் சுத்திகரித்து தம்முடைய வல்லமையான ஊழியத்திற்காக அவனை மேலும் தகுதிப்படுத்தினார். நம்முடைய குறைவுகளை தேவன் காண்பிக்கின்றார். இல்லையென்றால் நம்மை நாம் ஆராய்ந்து அறியச் செய்கின்றார். அது நம்மைத் தள்ளி விடுவதற்காக அல்ல. நம்மை மேலும் தகுதிப்படுத்தி ஆசீர்வதிப்பதற்காகவே.

சிந்தனைக்கு...

இன்று மறைக்கும் தவறை ஒரு நாள் நீ உணரலாம்.
ஆயினும், அதனால் எந்தப் பயனும் வராமல் போகலாம்.

மார்ச் 15
மீட்பின் செய்தி

லூக்கா 9:46-62

ஜீவனை அழிக்கிறதற்கு அல்ல, இரட்சிக்கிறதற்கே வந்தார்.
லூக்கா 9:56

குடிப்பழக்கத்திற்கு அடிமையாகி, அடிதடிச் சண்டைகள் போட்டுக்கொண்டு, குடும்பத்தைச் சரியாக நடத்தாமல் எப்பொழுதும் பிரச்சினைகளின் மனிதனாக வாழ்ந்து கொண்டிருந்த ஒருவருக்கு, நற்செய்தியாளர் ஒருவர் சுவிசேஷம் சொன்னார். ஆனால், அந்த மனிதர் அந்த சுவிசேஷகரை அடித்து துரத்தி விட்டார். ஆனால், அதற்கு முக்கிய காரணம் அந்த மனிதனின் முரட்டு சுபாவம் அல்ல. அந்த சுவிஷேசகரின் முரட்டுத்தனமான சுவிசேஷம். அவர் சுவிஷேசம் என்ற பெயரில் அந்த மனிதனுக்கு சொன்னதெல்லாம் நீ ஒரு பாவி, துன்மார்க்கன். நீ மனந்திரும்பு, இல்லையென்றால் கர்த்தர் உன்னைக் கடுமையாகத் தண்டிப்பார் என்பதே.

அந்த சுவிசேஷகருக்கு அவரை எச்சரிப்பதுதான் நோக்கமேயன்றி, அவர் இரட் சிக்கப்படுவதற்கான பாதையைக் காட்டுவதல்ல. பலரிடம் யோவானைப் போல பாவிகளை எச்சரிக்க ஆர்வம் இருக்கிறதேயன்றி, இயேசுவைப் போல அவர்கள்மேல் பரிவு கொண்டு இரட்சிப்பின் அனுபவம் காணச் செய்யவேண்டும் என்ற தாகமில்லை. சமாரியர்கள் இயேசுவை ஏற்றுக்கொள்ள மறுத்தபோது யோவான் அவர்களுக்கு எதிராக எலியாவைப்போல அக்கினி வரவழைக்கவே விரும்பினான். ஆக்கினைத் தீர்ப்பே அவனுடைய விருப்பமாயிருந்தது. ஆனால், இயேசு அவர்களின் கருத்தை ஏற்கவில்லை. அழிப்பதற்காக அல்ல, இரட்சிப்பதற்காகவே தாம் வந்திருப்பதை அவர் விளக்கினார்.

லேகியோன் தீய ஆவிகளினால் பாதிக்கப்பட்டுப் பலருக்குத் தொல்லை யாயிருந்த போது பலர் அவனைக் கட்டிப்போடவும், விலங்கிடவும் செய்தனர். ஆனால், அவனை அடக்க முடியவில்லை. இயேசு அவனை அடக்க விரும்பாமல், அவனை அடக்கி ஆளுகின்ற தீய சக்திகளின் பிடியிலிருந்து அவனை விடுவிக்கவே விரும்பினார். எனவே யாருக்கும் அடங்காத அந்த முரட்டு மனிதன் தெளிந்த புத்தியுள்ள மனிதனாக மாறினான்.

பலர் தீயவர்களாக இருப்பதற்குக் காரணம் என்ன? அவர்களை அடிமைப் படுத்தியிருக்கின்ற பாவமும், அவர்களைத் தவறாக வழி நடத்தும் சாத்தானின் ஆவியுமே ஆகும். பிசாசின் கைப்பொம்மைகளாக மாற்றப்பட்டி ருக்கும் அவர்களின் சுபாவங்களும், செயல்களும் நம்மைக் கோபப்படுத்துவது இயல்பே. ஆயினும், கர்த்தரைப் போல நாமும் மனதுருக்கம் உள்ளவர்களாக அவர்களின் விடுதலைக் காக ஜெபிக்கவும் செயல்படவும் வேண்டும். முரட்டு சுபாவமுடையவர்கள் நியாயத் தீர்ப்பின் எச்சரிக்கை வார்த்தைகளை அசட்டை செய்வார்கள். ஆனால், அவர்கள் மீட்கப்படுவதற்கான அன்பின் வார்த்தைகளைக் கூறினாலோ, அமைதியாய்க் கேட்பார்கள். ஏனென்றால், தாங்கள் ஒரு தீய வல்லமையின் பிடியில் சிக்கி விடுதலை யடையும் வழி தெரியாமல் இருப்பதை அவர்கள் அறிவார்கள்.

சிந்தனைக்கு...

இறைபக்தி இன்னொருவரை வெறுக்க ஒருவனைத் தூண்டினால் அவனுடைய இறைவன் சாத்தானே.

மார்ச் 16

ராஜா வேடம்

11 கொரிந்தியர் 5 : 11 –21

ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுச் சிருஷ்டியாயிருக்கிறான்....
11 கொரிந்தியர் 5 : 17

ஒரு ராஜாவிற்கு ராஜ கம்பீரமான ஆடைகள் வேண்டும். இடுப்பில் பெரிய வாள் ஒன்று தொங்க வேண்டும். தலையில் ஒரு கீரிடம் இருக்க வேண்டும், கையில் ஒரு செங்கோல் இருக்க வேண்டும். அவன் ஒரு பிரமாண்டமான சிங்காசனத்தில் அமர்ந்து கர்ஜனைக் குரலோடு பேச வேண்டும். இவை யாவும் ராஜாவுக்குத் தேவையான விஷயங்கள். ஆனால், மேடையில் ராஜாவாகத் தோன்ற விரும்புகின்ற ஒருவனிடம்கூட இவைகள் யாவும் இருக்க முடியும். ஆயினும், அவன் ராஜா அல்ல. தனக்கு ராஜா போன்ற ஒரு தோற்றத்தைக் கொடுப்பதற்காக அவன் மேற்கண்ட யாவற்றையும் அணிகிறான்.

இதுபோலவே ஜெபம், வேத வாசிப்பு, சபை கூடுதல், காணிக்கை கொடுத்தல், ஊழியங்களில் ஈடுபடுதல், பலருக்கு நன்மை செய்தல் போன்றவை யாவும் ஒரு கிறிஸ்தவனிடம் அவசியம் காணப்பட வேண்டிய விஷயங்கள். ஆயினும், இவை யாவும் இருந்தும்கூட மேடை ராஜா போல் ஒருவர் உண்மையான கிறிஸ்தவர் அல்லாதவராக இருக்க முடியும். மேற்கண்ட யாவும் அவர் தன்னை ஒரு கிறிஸ்தவர் என்ற நிலையில் காண விரும்பியதால் மேலோட்டமாக ஏற்படுத்திக் கொண்டவைகளாக இருக்க முடியும். சிலர் பிறரிடமிருந்து நற்பெயர் பெறுவதற்காகவும், அவர்கள் தங்களை ஆவிக்குரியவர்கள் என்று நம்ப வேண்டும் என்பதற்காகவும், சில நற்சுபாவங்களை வெளிப்படுத்துகின்றனர். ஆனால், அவை தற்காலிகமானவை.

உண்மையான கிறிஸ்தவன் என்பவன் தனக்குத்தானே கிறிஸ்தவத் தோற்றங்களை உருவாக்கிக்கொள்பவன் அல்ல. அவன் கிறிஸ்துவினிடத்தில் வந்து தன்னை அவருக்கு அர்ப்பணித்ததால், கிறிஸ்தவன் என்ற ஒரு புதிய சிருஷ்டி யாக்கப்படுகிறான். அந்தச் சிருஷ்டியின் இயல்பான இயற்கையின் விளை வாகவே பிற பக்தி சாயலான காரியங்கள் யாவும் அவனிடம் உருவாகின்றன. அவனுடைய ஜெபமும், வேத வாசிப்பும், பக்தி வாழ்க்கையும் சபைப் பங்கேற்பும், காணிக்கையும் கிறிஸ்தவனாக இருப்பதற்காக அல்ல. அவன் கிறிஸ்தவனாக பிறந்திருப்பதாலேயே அவை உருவாகின்றன.

சிலரிடம் மெச்சத்தகுந்தவிதமான பல நல்ல ஆவிக்குரியச் செயல்கள் இருந்த போதிலும், அவர்களிடம் உண்மையான அன்பு, தாழ்மை, பணிவு, சகிப்புத்தன்மை போன்றவைகள் இருப்பதில்லை. ஏனென்றால் அவர்களிடம் காணப்படும் நற் செயல்கள் சொந்த முயற்சிகளினால்தானேயன்றி உண்மையான மறுபடியும் பிறத்தலின் அனுபவத்தின் விளைவானவைகள் அல்ல.

சிந்தனைக்கு...

கர்த்தர் உன்னோடு இருப்பது உண்மையென்றால், அவர் விரும்பாத விஷயங்கள் உனக்குத் தூரமாகவே இருக்கும்.

மார்ச் 17

அவர் போதுமானவர்

11 தீமோத்தேயு 4 : 7 - 22

கர்த்தரோ எனக்குத் துணையாக நின்று ...
11 தீமோத்தேயு 4 : 17

ஆம். இந்த உலக வாழ்க்கைப் பயணம் துன்பங்களும், போராட்டங்களும் நிறைந்தவைகள்தான். ஆனால், கர்த்தரைத் துணையாக ஏற்றுக்கொண்ட வாழ்வு ஒரு போதும் தனித்துவிடப்பட்ட வாழ்வாக மாறாது. எல்லாச் சூழ்நிலைகளிலும் தேவன் நமக்குத் துணையாக நின்று, எந்த நேரத்தில் எதைச் செய்து நம்மை ஊக்குவித்து நடத்தவேண்டுமோ, அதனைக் குறைவின்றிச் செய்வார். எதனை கிறிஸ்தவ வாழ்க்கை யின் வெற்றி என்று எடுத்துக்கொள்ளலாம்? இந்தக் கேள்வியை என்னிடம் கேட்டால், நான் விசுவாசிக்கும் இயேசு கிறிஸ்து இந்த உலக வாழ்க்கைப் பயணத்தில் கடைசி வரை எனக்குப் போதுமானவராயிருப்பார் என்ற நம்பிக்கையில் உறுதிப்படுதலே என்று சொல்லுவேன்.

போதுமானவராயிருப்பார் என்றால் நான் கேட்கும் யாவற்றையும் எனக்கு அவர் தந்து, என் தேவைகள் யாவற்றையும் குறைவின்றி சந்திப்பார் என்ற அர்த்தத்தில் அல்ல. இந்த உலக யாத்திரையின் கடைசி படி வரை நான் சந்திக்க நேடுகின்ற எல்லாச் சூழ்நிலைகளிலும் அவர் எனக்கு எதை செய்ய வேண்டுமோ அதைச் செய்வார் என்பதே அதன் பொருள். இந்த உலக யாத்திரையின் எல்லாச் சூழ்நிலைகளிலும் என்னை எந்தெந்த விதமாக நடத்திச் சென்று தம்முடைய நோக்கத்தை என்னில் நிறைவேற்ற வேண்டுமோ, அதை அவர் சரியாகச் செய்வார்.

நாளை நடப்பதெல்லாம் நல்லதாகவே இருக்கவேண்டும் என்பதுதான் என் ஆசை? ஆனால், அது அவ்விதமே நடைபெறும் என்று என்னால் நிச்சயமாக எதிர்பார்க்க முடியாது. நான் பசுமையை எதிர்பார்க்கின்றேன். ஆனால், அது ஒரு வேளை வறட்சியாக அமையலாம். நான் சுமுகமான ஒரு பாதையில் பிரயாணம் செய்ய விரும்புகிறேன். ஆனால், நாளை என் பிரயாணம் முன்பின் அறிந்திராத காடு மேடு வழியாகப் போகலாம். யார் அறிவார்?

ஆனால், கிறிஸ்து அந்தந்தச் சூழ்நிலை வரும்போது அங்கே எனக்குப் போது மானவராயிருந்து என்னை நடத்துவார். இன்று ஒருவேளை நான் கற்பனை செய்து பயப்படும் ஒரு பாதையில் நாளை நடக்க நேரிட்டால், அங்கேயும் கர்த்தர் கடந்து செல்ல ஒரு வழிகாட்டுவார் என்பதே என் நம்பிக்கை. இருள் வந்தால் அவர் ஒளியாகி, துன்பம் வந்தால் அவர் துணைவராகி, துக்கம் வந்தால் அவர் ஆறுதலாகி, குறைவு நேரிட்டால் அவர் நிறைவாகி, தனித்து விடப்பட்டால் அவர் தைரியமாகி. எப்படியாவது என்னை அக்கரை கொண்டுசேர்ப்பார். இந்த நம்பிக்கையில் உறுதிப் படுவதே என் அனுதின வாஞ்சை.

சிந்தனைக்கு...

நிலத்துடன் வேர் பிணைந்தால் மரம் நிமிர்ந்து நிற்கும்
இறைவனோடு இதயம் இணைந்தால் நம்பிக்கை நிலைத்து நிற்கும்.

மார்ச் 18

எதைச் செய்தாலும்

பிரசங்கி 9:1-18

செய்யும்படி உன் கைக்கு நேரிடுகிறது எதுவோ..
பிரசங்கி 9:10

என்னடைய நண்பன் ஒருவன் நல்ல தையல்கலைஞனாக இருந்தான். அவனிடம் துணிகள் தைப்பதற்கு அநேகர் வருவார்கள். அவன் திறமையான தையற் கலைஞனாக அறியப்பட்டிருந்த வேளையில் அவனுக்கு அந்தத் துறையில் ஒரு சலிப்புத் தட்டியது. வேறு சிலரைப் போல இதைவிட நல்லதோர் துறையை தான் தெரிந்து கொள்ளாமல் போனேனே என்று வருத்தப்பட்டான். எனவே, தையல் வேலைகளை விட்டுவிட்டு வியாபாரம் செய்யச் சென்றான். அவனுக்கு வியாபாரம் பொருத்தமில்லாத துறை என்பதையே அது தெரிய வைத்தது. நல்ல தையற் கலைஞனாக இருந்த அவன் மோசமான குழப்பத்தில் வீழ்ந்தான். அவனுடைய நல்ல அடையாளங்கள் மறைந்து போயின.

எது நமக்குப் பொருத்தமாய் வருமோ அதைத்தான் நாம் செய்ய வேண்டும். எதை நாம் செய்தாலும் அதைக் குறித்த நல்ல சிந்தையோடும் விருப்பத்தோடும் செய்ய வேண்டும். மற்றவர்கள் கொடி கட்டிப் பறக்கின்ற துறைகளைப் பார்த்து நாம் அக்கரைப் பச்சை மாடுகளைப் போல இருக்கக்கூடாது. நாம் செய்வதை அவர்களால் செய்ய இயலாது. அவர்கள் செய்வதில் நாம் நுழைந்தால் நம்மால் பிரகாசிக்க முடியாது. சச்சின் தெண்டுல்கர் வியாபாரம் செய்யப் போயிருந்தால் உலகத்தில் தெண்டுல்கரின் பெயர் யாருக்கும் தெரிந்திருக்காது. மைக்ரோ சாப்ட் பில்கேட்ஸ் கிரிக்கெட் விளையாடப் போயிருந்தால் உலகமெங்கும் அவர் தெரியும் நபராக மாறியிருக்கமாட்டார். உலகப் பிரசித்தி பெற்றது போர்டு கார் மட்டுமல்ல. சாதாரண கோழி பஜ்ஜி செய்யும் கே.எப்.சி. கம்பெனியும் உலகப் புகழ் பெற்றதுதான்.

எது நம்மால் முடிகிறதோ அதனை முழு பலத்தோடும், முழு மனதோடும் சந்தோஷமாகச் செய்ய வேண்டும். நாம் செய்வதைச் செய்ய எல்லோராலும் முடியாது. எல்லோரும் செய்வதை நாமும் செய்திட முடியாது. பராக் ஒபாமா அரசியலில் தான் இருக்க வேண்டும். வால் மார்ட் நிறுவனம் சில்லறை வர்த்தகத்தில்தான் இருக்க வேண்டும்.

சில வேளைகளில் கர்த்தர் நம்மை வேறு சிலர் அளவிற்கு பெரிய நிலைகளில் வைக்காமல் இருக்கலாம். ஆனால், நாம் வைக்கப்பட்ட இடத்தில் கர்த்தரைக் கனப்படுத்திச் செயல்பட்டால், அதனால் வரும் திருப்தியும், சந்தோஷமும் பெரியது. நான் ஒரு போதும் ஒரு பில்லி கிரகாமாக மாற முடியாது என்பது எனக்குத் தெரியும். ஆனால், நான் வைக்கப்பட்டுள்ள இந்த வட்டத்தில் எனக்குக் கிடைக்கும் நிறைவும், திருப்தியும், சந்தோஷமும் பில்லிகிரகாமைவிட குறைவானதல்ல.

சிந்தனைக்கு...

அடைய முடியாமல் போன ஒரு நன்மையைக் குறித்த ஒரு சோர்வு அடைந்துவிட்ட அநேக நன்மைகளைப் பயனற்றதாக்குகிறது.

மார்ச் 19

வாழ்ந்துகாட்டாவிடில்

நீதிமொழிகள் 4 :1-15

நான் என்னைத்தானே பரிசுத்தமாக்குகிறேன்... -
யோவான் 17 : 19

மாட்டுவண்டி ஓட்டுகின்ற ஒருவர் தன்னுடைய மகனை விமான ஓட்டியாக உயர்த்த இயலும். தன்னுடைய சொந்தப் பெயரைக்கூட எழுதத் தெரியாத கல்வியறிவற்ற ஒருவர் முயற்சியினால் தன்னுடைய மகனை ஐ.ஏ.எஸ் அதிகாரியாக்க முடியும். ஒரு ஏழை விவசாயி தன்னுடைய ஞானமான வாழ்க்கையாலும், திறமையாலும் தன்னுடைய மகனை ஒரு கோடீஸ்வரனாக்க முடியும். ஆனால், தலைகீழாக நின்றாலும் நல்லவராக வாழ்ந்து காட்டாத ஒருவர், தன்னுடைய மகனை நல்லவனாக மாற்ற இயலாது. நல்லவராக வாழ்ந்து முன்மாதிரியாக நில்லாத ஒருவர், ஆயிரம் உயர் நெறிகளை தன் மகனுக்குப் போதித்தாலும் அவனை நல்லவனாக்க இயலாது. ஏனென்றால், தந்தையின் போதனையைவிட தந்தையின் வாழ்க்கைத் தரம்தான் மகனுடைய வாழ்க்கைத் தரத்தை நிர்ணயிக்கும்.

ஒரு தகப்பனுக்குப் பிள்ளைகள் மிக நல்லவர்களாக மாற வேண்டும் என்ற உயர்ந்த தரிசனம் இருக்கலாம். ஒரு போதகருக்கு தன்னுடைய சபை மக்கள் நல்ல பரிசுத்தவான்களாக வேண்டும் என்ற தரிசனம் இருக்கலாம். ஆயினும், இவர்கள் தாங்கள் வாழ்கின்ற விதத்தினால் நல்லதோர் முன்மாதிரிகளாக விளங்காவிட்டால், அந்த தரிசனம் நிறைவேறாது. ஏனென்றால், மற்றவர்களை நம்முடைய நல்ல ஆசைகள் மாற்றிவிடாது. மற்றவர்களை நம்முடைய நல்ல தரிசனங்களும் போதனைகளும் மாற்றிவிடாது. நாம் நல்லதோர் வாழ்க்கைக்கு மாதிரிகளாக வாழும் போது, அதுதான் மற்றவர்களை அதிகமாகப் பாதிக்கும்.

அப்போஸ்தலனாகிய பவுல் நீங்களெல்லாரும் கிறிஸ்துவைப் பின்பற்றி வாழவேண்டும் என்று மட்டும் போதிக்கவில்லை. “நான் கிறிஸ்துவைப் பின்பற்று வதைப் போல” என்று கூறுகின்ற அளவிற்கு அவன் தன்னுடைய வாழ்க்கையை முன்மாதிரியுள்ள நல்ல வாழ்க்கையாக வைத்திருந்தான். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து தம்முடைய சீடர்கள் எப்படி மாற வேண்டும் என்ற தரிசனத்தைக் கொண் டிருந்தாரோ, அதற்கேற்றபடி அவர் தம்மை முன்மாதிரியாக நிறுத்தியிருந்தார்.

பல பெற்றோர்கள் தங்களின் பிள்ளைகள் தாவீதைப் போலவும், தானியேலைப் போலவும் மாற வேண்டும் என்று ஆசைபடுகின்றனர். ஆனால், அவர்களோ சவுலைப் போலவும், ஆகாபைப் போலவும் வாழ்கின்றார்கள். எனவே பிள்ளைகள் மாறவில்லை. பல போதகர்கள் தங்களின் சபை விசுவாசிகள் பேதுருக்களாகவும், பவுல்களாகவும் மாற வேண்டும் என்று ஆசைப்படுகின்றனர். ஆனால், இவர்களோ யூதாசுகளாக வாழ்கின்றனர். போதனையும் தரிசனமும் போதாது. நாம் வாழும் வாழ்க்கை முறை மற்றவர்களில் தாக்கம் ஏற்படுத்த வேண்டும்.

சிந்தனைக்கு...

இறை ஒளியை நீ உனக்குள் கண்டால்,
உன் ஒளியை உலகம் காணாமல் இராது.

மார்ச் 20

பக்தர்களா ? பிள்ளைகளா ?

ரோமர் 8 : 14 – 26

நாம் தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோமென்று ...
ரோமர் 8 : 16

நாம் ஜெபம் செய்கின்றோம்.வேதம் வாசிக்கின்றோம். காணிக்கை கொடுக்கின்றோம். தேவ ஊழியமும் செய்கின்றோம். இது போன்ற செயல்கள் நாம் தேவனை விசுவாசிப்பதையும், தேவனுக்கு நாம் முக்கியத்துவம் கொடுப்பதையும் உறுதிப்படுத்துவதற்குப் போதுமான அடையாளங்களாக உள்ளன. ஆனால், நாம் தேவனுடையப் பிள்ளைகளாக இருப்பதை உறுதிப்படுத்தும் சான்றுகள் எவைகள் என்பதே முக்கியம். நம்முடைய கடவுள் நம்பிக்கையை அல்லது கடவுள் பக்தியை நிரூபிக்க, நம்முடைய பக்தியான செயல்கள் போதுமானது.

ஆனால், நாம் கடவுளின் பிள்ளைகளாக வாழ்கின்றோம் என்பதற்கு நம்முடைய உயர்ந்த பண்புகள்தான் சான்றுகளாக விளங்கமுடியும். ஏனென்றால், இயேசுவின் காலத்துப் பரிசேயர்கள் பிசாசின் குணங்களாகிய வெறுப்பு, விரோதம், கசப்பு, பொறாமை, பெருமை, கபடு, சுயநலன் ஆகியவற்றை வெளிப்படுத்திக் கொண்டே, மறுபுறம் அவர்கள் மிகத் தீவிரமான தேவ பக்தியிலும் இருந்தார்கள். ஆனால், இயேசு அவர்களின் ஆன்மிக நிலைப்பாட்டை ஏற்றுக்கொள்ளாமல் நீங்கள் தேவனுடைய பிள்ளைகள் அல்ல என்றார்.

தேவன் நம்மை பக்தர்களாக அல்ல. அவருடைய பிள்ளைகளாகவே வாழ அழைக்கின்றார். நாம் எவ்வளவுதான் பக்தியான செயல்களைச் செய்திடக் கவனமாயிருந்தாலும், அது புலியைப் பார்த்து பூனை சூடு போட்ட கதைதான். நாம் பாவங்களை உணருதல், மனந்திரும்புதல், மறுபடியும் பிறத்தல், தேவ ஆவியினால் நிரப்பப்படுதல், ஆகிய அனுபவங்களைப் பெற்று, பிதாவாகிய தேவனுடைய இயல்புகளையும் தன்மைகளையும் நம்மிடம் பெறவேண்டும்.

நம்மிடம் தெய்வீக சுபாவங்கள் காணப்படுவதுதான் நாம் தேவனுடைய பிள்ளைகளாக வாழ்கின்றோம் என்பதற்கு சரியான சான்றுகளாக உள்ளன. அவைகள்தான் தேவனை நாம் கடவுளாக வழிபட்டுக் கொண்டிருக்கின்றோமா அல்லது தந்தையாக ஏற்றுக் கொண்டு பிள்ளைகளைப் போல பின்பற்றிக்கொண்டிருக்கின்றோமோ என்பதை தெளிவுபடுத்துகின்றது நாம் தேவ பக்தர்கள் என்ற நிலையைக் கடந்து தேவனுடைய பிள்ளைகள் என்ற உயரிய நிலையை அடைவதற்காகத்தான், இயேசு சிலுவையில் தம்மை அர்ப்பணித்து நமக்காக மரித்தார். நாம் குணமாற்றம் காணாத வெறும் பக்தர்களாக மட்டுமிருந்தால், இயேசுவின் மரணத்தினால் உருவாக்கப்பட்ட உயர்ந்த ஆசீர்வாதங்களை நாம் பெறவில்லை என்பதே பொருள்.

சிந்தனைக்கு...

பக்தியில்லாத துன்மார்க்கனைவிட பண்புகள் இல்லாத பக்திமான் அதிகக் கேடானவன்.

மார்ச் 21

தற்காலிக நிவாரணம்

எரேமியா 8:11-22

**ஏன் என் ஜனமாகிய குமாரத்தி சொஸ்தமடையாமற் போனாள்?
எரேமியா 8:22**

தலையில் மட்டும் அல்ல. வயிற்றில் கோளாறு இருந்தால்கூட தலைவேதனை வர வாய்ப்பு உண்டு. அதனை நாம் சோதித்து அறியாமல் தலைவேதனை மாத்தி ரைகளை வாங்கிச் சாப்பிட்டால் சுகம் கிடைக்கலாம். ஆனால், அது தற்காலிக மானது. மாத்திரையின் சக்தி நரம்பு மண்டலத்தை கொஞ்ச நேரம் உணர்ச்சி யற்றதாகச் செய்யும்போது, நாம் சுகம் பெற்றது போல உணரமுடியும், ஆனால் மாத்திரையின் சக்தி குறைந்ததும் மீண்டும் தலைவேதனை வரும். எனவே, நோயின் காரணம் எங்கேயிருக்கிறது என்பதை முதலாவது அறிய வேண்டியது அவசியம்.

பலர் சந்தோஷமின்மைக்கும், சமாதானமின்மைக்கும் உண்மையான காரணங்கள் என்னவென்பதை அறியாதிருக்கின்றனர். சில ஊழியர்களிடம் போய் ஜெபிப்பதாலோ, உபவாசக் கூட்டங்களில் கலந்து கொள்வதாலோ எல்லாம் சரியாகிவிடும் என்று நினைக்கின்றனர். இது தவறான சிந்தனை. அவ்விதமாகப் போகும் போது சமாதானமான ஒரு உணர்வைப் பெற முடியும். ஆனால், அது நீடிக்கும் தன்மையுடையது அல்ல. கொஞ்ச நேரம் கவலைகளை மறந்த நிலை இருக்கும். அவ்வளவுதான்.

முதலாவது நம்முடைய சமாதானமின்மைக்கும், சந்தோஷமின்மைக்கும் அடிப்படையான காரணம் என்னவென்பதை நாம் அறியவேண்டும். அந்த அடிப்படைக் காரணத்தை அறிந்துகொண்டு, அதற்கு என்ன செய்ய வேண்டுமோ அதனைச் செய்தாலொழிய, உண்மையான சமாதானம் வாழ்க்கையில் வராது. தேவனோடு நமக்குப் போதுமான நெருங்கிய உறவின்மைதான் சமாதான மின்மை க்கும் சந்தோஷமின்மைக்கும் காரணம் என்பதை நாம் மறுக்க முடியாது. நாம் நடந்து வந்த பாதைகளையும், வாழ்ந்து வந்த விதங்களையும் சிந்தித்துப் பார்க்க வேண்டும். நாம் கர்த்தரைப் பிரியப்படுத்தாமல் சுயத்தைப் பிரியப்படுத்தியே வாழ்ந்ததை உணரவேண்டும். அதனை உணர்ந்தவர்களாக முதலாவது தேவனோடு நெருங்கிய உறவுகொள்ளவும், ஆவிக்குரிய வாழ்க்கையில் ஆழ்ந்து செல்லவும் முன்வரவேண்டும்.

சிலர் தேவனை அறிந்து கொள்ளவும், அவருடைய வழிகளைத் தெரிந்து கொள்ளவும் வாய்ப்புப் பெற்றிருந்தும், தேவனுக்கு உகந்த ஒரு வாழ்க்கையை வாழ்ந்திடக் கவனமாயிருப்பதில்லை. தேவனுக்கேற்றபடி தங்களை வளைத்துக் கொள்ளாமல், சுயத்தின் கடினத்தன்மைக்கேற்றபடி செல்கின்றவர்கள் உண்டு. அங்கே அவர்களின் ஆன்மீக அறிவே அவர்களுக்குப் பாதகமாகிவிடுகிறது. ஏனென்றால், அவர்கள் அறிந்ததின்படியும், உணர்ந்ததின்படியும் வாழவில்லை.

சிந்தனைக்கு...

முதலில் அறிந்த உண்மையில் நிற்க இயலாதவனுக்கு அடுத்தகட்ட உண்மை விளங்காது.

மார்ச் 22

நற்குணங்களும் அலட்சியமும்

நீதிமொழிகள் 22: 1-19

நற்கீர்த்தியே தெரிந்து கொள்ளப்படத்தக்கது.
நீதிமொழிகள் 22 : 1

பணத்தையும், பொருளையும், அந்தஸ்துக்களையும் மேன்மையாக எண்ணி மதிக்கப் பழகிவிட்ட மனிதர்களின் நடுவில் வாழ்கின்றோம். அவர்கள் நம்முடைய நற்குணங்களையும், நல்ல நடத்தைகளையும் உயர்வாக எண்ணிப் போற்றுவார்கள் என்று எதிர்பார்க்க முடியாது. கவர்ச்சிக் காட்சிகளைக் கண்டு பழகின கண்களுக்குச் சிறந்த ஒரு ஓவியனின் கலைத்தன்மை மிக்க ஓவியம் அழகாகத் தோன்றாது. கட்டுப்பாட்டு உணர்வுகளை இழந்து மனம் போனபடி வாழ்வதையே நவீன நாகரீகமாக பார்த்துப் பழகிப் போன மனிதர்கள், நம்முடைய நல்ல ஒழுங்குகளுக்கும், கட்டுப்பாடு மிக்க பண்புள்ள வாழ்க்கைக்கும், அதிக மதிப்பெண்கள் தருவதற்கு வாய்ப்பில்லை.

பலத்தையும், திறமையையும், ஆடம்பரத்தையும் ஆசனம் போட்டு அமர வைத்து பழகிப் போய்விட்ட சமுதாயம் அன்பையும், தாழ்மையையும், உண்மை யையும், ஒழுக்கத்தையும் அலட்சியம் செய்கின்றது. அதனை எண்ணிப் பார்க்கும் போது இத்தனை சிரமங்களோடு நல்ல ஒரு வாழ்க்கையை வாழ்ந்து என்ன பயன்? என்ற ஒரு எண்ணம் ஏற்பட்டு விடுவது இயற்கை. நன்னடத்தைகளோடு வாழ்வதற்கும், நற்பண்புகளுடன் வாழ சிரமம் எடுப்பதற்கும் ஒரு உண்மை யான விலையோ, மதிப்போ மரியாதையோ, பரிசோ, பாராட்டோ கௌரவித்தலோ உடனடியாக இல்லாததால், ஆர்வங்களில் குன்றுவது இயல்பானதே.

உண்மையையும், ஒழுக்கத்தையும் இரண்டாம் இடத்திற்குத் தள்ளி விட்டி ருந்தால் யோசேப்பு சிறைவாசியாக மாறாமல், போத்திபாரின் வீட்டில் அரச குமாரனைப் போல வாழ்ந்திருப்பான். தேவ பயத்திற்கும், தெய்வீக நெறிகளுக்கும் முக்கியத்துவம் தராமல், சூழ்நிலைக்கேற்றபடி வளைந்திருந்தால் தாவீது கானகத்தில் அலைய நேரிட்டிருக்காது. அவன் சவுலின் சிங்காசனத்தில் விரைந்து போய் அமர்ந்து ஆட்சிபுரிந்திருப்பான். ஆனால் அவர்களின் உண்மையும், நேர்மையும், பொறுமையும் மனிதர்களால் அலட்சியப்படுத்தப்பட்ட போதிலும், ஒருநாள் அவைகள் தேவனுடமிருந்து மிகப் பெரிய பரிசைக் கொண்டுவந்தது.

பிறர் மதிக்காவிட்டாலும், நற்பண்புகளை பிறர் பெரிதாக எண்ணாவிட்டாலும் அவைகள் நமக்கு அவசியமற்றவைகள் அல்ல. அவைகளால் நமக்கு மன அமைதியும், மனநிறைவும், நல்ல பாதுகாப்புணர்வும், திருப்தியும் உண்டு. அவை களால் நமக்குத் தேவ கனமும், தேவனால் வரும் சந்தோஷமும் உண்டு. அவைகளே நமக்கு மேன்மையானவைகள்.

சிந்தனைக்கு...

உன்னுடைய செயல்களைப் பிறர் புகழ்கின்றார்களா என்பதையல்ல; அவைகள் புகழத்தக்கவைகளா என்று மட்டும் பார்.

மார்ச் 23

நன்றி மறந்தாலும்

சங்கீதம் 106 : 1-23

ஆனாலும்... தம்முடைய நாமத்தினிமித்தம் அவர்களை இரட்சித்தார்...
சங்கீதம் 106:8

கிறிஸ்தவ விசுவாசி ஒருவருடைய மனைவி நோய்வாய்ப்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தார். மருத்துவச் செலவைச் சந்திக்க வழி தெரியாமல் கணவர் வருந்துவதை அறிந்த இன்னொருவர் கணிசமான ஒரு தொகையை உதவியாகக் கொடுக்க முன்வந்தார். ஆனால், அவருடைய மனைவியோ போயும் போயும் அந்த மனிதருக்கா இவ்வளவு பெரிய தொகையை கொடுக்கின்றீர்கள். அந்த மனிதர் நன்றியுணர்வே இல்லாதவர். எத்தனையோ முறை நம்மிடம் உதவி பெற்றிருக்கின்றார். நம்முடைய ஏதாவது ஒரு கஷ்டத்தில் அவர் வந்து எட்டிப் பார்த்திருக்கிறாரா என்று படபடத்தார். ஆனால் கணவரோ, உதவி செய்வதற்கு அவருடைய நன்றி கெட்டதனத்தைப் பார்க்க அவசியமில்லை. தற்போது அவர்களின் துன்பமான சூழ்நிலையைப் பார்த்தால் போதும் என்றார்.

உதவி பெற்றவர்களிடம் நன்றி கெட்டத்தனம் காணப்படுவது மிகவும் மோசமானதோர் குணம். ஆனால், உதவி செய்ய விரும்புகின்றவர்கள் நன்றியுணர்வை எதிர் பார்த்துச் செய்வதும் சரியான குணம் அல்ல. நம்மிடம் உதவியை எதிர்பார்க்கும் நபருடைய குணாதிசயங்களின் அடிப்படையைப் பார்க்க ஆரம்பித்தால், பெரும்பாலும் நன்மை செய்வதற்கு வாய்ப்பே கிடைக்காது. ஒருவர் அடைகின்ற துன்பம், சந்தித்துள்ள நெருக்கடி, அவரிடம் காணப்படுகின்ற இல்லாமை, இயலாமை ஆகியவைதான் நாம் பார்க்க வேண்டிய விஷயங்கள்.

இஸ்ரவேல் ஜனங்களுக்கு தேவன் 40 வருடங்கள் வானத்திலிருந்து மன்னாவை அனுப்பி போஷித்தார். வழி தெரியாத அவர்களுக்கு வழிகாட்டினார். அவர்களுடைய ஆபத்தான சூழ்நிலைகளிலெல்லாம் அவர்களுக்கு ஆதரவாகச் செயல்பட்டார். ஆனால் அவர்களோ எதையும் எளிதாக மறக்கின்றவர்கள்.

அவர்களின் நல்ல குணங்களின் அடிப்படையில் மட்டும் தேவன் உதவுவதாக இருந்திருந்தால், ஒரு ஆண்டுகூட தேவன் உதவி செய்திருக்க முடியாது. மோசே அவர்களுக்காக இரவும் பகலும் அக்கறையோடு செயல்பட்டும் அவர்கள் அதனை நினைக்காமல், அவனை திரும்பத் திரும்ப விசனப்படுத்தினார்கள். ஆனாலும், மோசேயோ தேவ அன்பினால் மிகுந்த கரிசனையோடு அவர்களுக்காக தேவனிடம் மன்றாடுகின்றவனாயிருந்தான். நன்மை செய்கிறது என்பதும், பிறரைத் தாங்குவது என்பதும் மற்றவருடைய குணநிலையைப் பொறுத்தது அல்ல . அது நம்முடைய நல்ல குணநிலையைப் பொறுத்ததே ஆகும். அதற்கு தேவனிடமிருந்து மிகுந்த பிரதிபலன் உண்டு.

சிந்தனைக்கு...

அன்பை வார்த்தைகளினால் வர்ணித்துவிட முடியாது
ஆனால், வாழ்க்கையினால் அதனைச் சித்தரிக்க முடியும்.

மார்ச் 24

மனதில் செழிப்பு

சங்கீதம் 65:1-13

தேவ நதியினால் அதை மிகவும் செழிப்பாக்குகிறீர்...
சங்கீதம் 65 : 9

ஒரு மனிதன் தனக்கிருக்கும் மிகுதியான பணம், வீடுகள், வாகனங்கள், சமுதாய அந்தஸ்துக்கள், பலவித சௌகரியமான சூழ்நிலைகள் ஆகியவற்றைப் பார்த்து தன்னுடைய மனநிலையை சந்தோஷமுள்ளதாக்க விரும்பலாம் இவை யாவும் எனக்கு இருக்கிறதே என்ற எண்ணம் அவனுடைய மனதிற்குள் ஒரு விதமான செழிப்பினை உணர அவனுக்கு உதவலாம். ஆனால், தேவன் ஒரு மனிதனுடைய மனதைத் தொட்டு, அதனை தம்முடைய ஐக்கியத்தினால் ஆசீர்வதிக்கும் போது, அந்த மனிதனுடைய இருதயம் செழிப்புடையதாக மாறிவிடும். அந்த செழிப்பு அவனிடம் பணமோ, செல்வமோ, அந்தஸ்தோ பல சௌகரியங்களோ இல்லாத வேளையிலும் அவனை சந்தோஷப்படுத்துகின்றது.

மனம் செழிப்படையும் போது அங்கே அன்பு, சமாதானம், சந்தோஷம், நிறைவு, திருப்தி ஆகியவை ஏற்படும். அந்த மனதில் பலவித நற்குணங்கள் காணப்படும். இவ்விதமானதொரு மனநிலை தாவீதிடம் இருந்தது. அவனுடைய வெளிப்புறச் சூழ் நிலைகள் வெறுமையும், வறட்சியும் நிறைந்ததாக இருந்த வேளைகள் உண்டு. அவனுடைய சுற்றுப்புறச் சூழ்நிலைகளைப் பார்த்து மகிழ்ச்சி யடையும்படி அங்கே செழிப்பிற்குரிய எதுவும் இருக்கவில்லை ஆயினும் அவனுக்குள் அவன் செழிப்பை உணர்ந்து சந்தோஷமாயிருக்க முடிந்தது.

அந்த செழிப்பும் சந்தோஷமும் தேவனோடு அவன் ஏற்படுத்திக்கொண்ட நல்ல உறவினாலும் ஐக்கியத்தினாலும் ஏற்பட்டவை. தேவனைத் தனக்குள் தேடுகின்ற ஒரு ஆவிக்குரிய உணர்வு அவனுக்குள் இருந்தது. தேவனுக்குப் பிரியமாக வாழ வேண்டும் என்ற ஆசை அவனுக்குள் இருந்தது. தேவனைக் குறித்து இரவும் பகலும் சிந்திக்கும் பழக்கம் அவனுக்கிருந்தது. தேவனுடைய வார்த்தைகளின் மேன்மையை அறிந்து அந்த வார்த்தைகளைத் தியானிக்கும் அனுபவம் அவனுக்கிருந்தது. எனவே தேவ உறவையும், தேவ ஐக்கியத்தையும் அவனால் பெற்று அனுபவிக்க முடிந்தது. அந்த தேவ உறவினால் அவனுடைய இருதயம் செழிப்பாக்கப்பட்ட போது, அதனால் அவன் பெற்ற சந்தோஷம் மிகுதியானது. அது செல்வங்களின் திரட்சியினால் வருகின்ற மகிழ்ச்சியைவிட அதிகமாயிருந்தது.

ஆம், செழிப்பானதோர் சூழ்நிலை அல்ல. செழிப்பானதோர் மனநிலையே மிகவும் அவசியம். ஏராளமான செல்வங்களோடு வாழும் வாய்ப்புப் பெற்றிருந்த போதிலும் சாலொமோன் அவற்றினால் மனதிற்குள் சஞ்சலத்தையும் அதிருப்தியையுமே பெற முடிந்தது. ஆம். தேவ உறவினால் இருதயத்தைச் செழிப்பாக்க கவனமாயிருப்போம்.

சிந்தனைக்கு...

இதயத்திற்கு தேவன் எவ்வளவாய் தேவைப்படுகிறார் என்று உணர்ந்து நடக்கின்றவன் வாழ்க்கையின் தேவைகளை எளிதாகப் பெறுகிறான்.

மார்ச் 25

பத்து சதவிகிதத் தீமை

1 தெசலோனிக்கேயர் 5:14-28

பொல்லாங்காய்த் தோன்றுகிற எல்லாவற்றையும் விட்டு விலகுங்கள்...
1 தெசலோனிக்கேயர் 5:22

ஒரு உணவுப் பொருளில் 90 சதவிகிதம் நல்ல சத்துக்கள் இருக்கிறது. ஆனால், 10 சதவிகிதம் தீமை ஏற்படுத்தும் தன்மை உள்ளது. இப்போது அந்த உணவைச் சாப்பிடுகின்றவர் அந்த 90 சதவிகித நல்ல சத்தினால் ஆரோக்கியமடைவாரா அல்லது அந்த தீமைக்கேதுவான பத்து சதவிகிதத்தால் உடல் பாதிப்பை அடை வாரா? அந்தப் பத்து சதவிகிதக் கேடுதான் உடலைக் கெடுக்க முந்திவிடும். தண்ணீரில் பத்து சதவிகிதம்தான் மாசு உள்ளது. ஆயினும் அந்த பத்து சதவிகித மாசு உங்கள் சரீர நலனைக் கெடுக்கும்.

நவீனக் கண்டுபிடிப்புகள் நல்ல பல நன்மைகளை உடைய பல கருவிகளை நமக்குக் கொடுத்துள்ளது. தொலைக்காட்சிப் பெட்டியினால் எவ்வளவோ நல்ல பிரயோஜனங்களைப் பெறமுடியும். இண்டர் நெட்டினால் எவ்வளவோஅறிவை யும், ஞானத்தையும் பெருக்க முடியும். மொஃபைல் போனினால் எவ்வளவோ நல்ல வசதிகளையும், சௌகரியங்களையும் பெறமுடிகிறது. ஃபேஸ் புக், ஆர்குட், டிவிட்டர் போன்ற சமூக வலைத்தளங்களினால் எவ்வளவு எளிதாக கருத்துப் பரிமாற்றம் செய்யவும், ஒத்த கருத்துடையோரை அடையாளம் காணவும் முடிகிறது. ஆனால், இவை யாவற்றிலும் தீமைக்கேதுவான விஷயங்களும் உண்டு. 90 சதவிகித நன்மையைவிட பத்து சதவிகித தீமைக்கு நம்மை நாச மாக்கும் வலிமை அதிகம்.

90 சதவிகிதம் நல்ல விஷயங்கள் இருந்தும், பத்து சதவிகித தீமையின் தாக்கத்தை மேற்கொள்ள இயலாமல், இன்றைய சமுதாயம் சீரழிகிறது. மனிதனை எளிதில் நாசமாக்கும் நச்சுக் கருவிகளாக மொபைல் போன், இன்டர் நெட், டி.வி. போன்றவை விளங்குகின்றன. இவற்றை வேண்டாம் என்று விலக்கவும் இயலவில்லை. இவற்றை வைத்துக்கொண்டு பரிசுத்தமாக வாழவும் முடிய வில்லை என்பதே பலருடைய கருத்தாக உள்ளது. எத்தனையோ பக்திக் கேதுவான கிறிஸ்தவ நிகழ்ச்சிகள் டி.வி. வழியாக வந்தாலும், டிவியில் வருகின்ற ஒரு ஆகாத காட்சியை வேண்டாம் என்று வெறுக்க இயலாமல் என் மனம் அடிக்கடி கறைபடுகிறது என்று புலம்பினான் கிறிஸ்தவ வாலிபன் ஒருவன்.

தீமையின் திரித்துவமாக இன்றைய டி.வியும், இண்டர் நெட்டும், மொபைல் போனும் விளங்குகின்றன. யோர்தானின் வேகத்தினால் அடித்துக் கொண்டு போகப்படாமல், அதன் நடுவில் பாதை அமைத்து பாதுகாத்த தேவனுடைய திவ்ய பிரசன்னத்தை தினமும் தேடி அடையாவிட்டால், இவைகளினால் பாதிக்கப் படாமலிருப்பது மிகவும் கடினம்.

சிந்தனைக்கு...

தீயவைகள் உன்னிடம் தானாய்த் தோன்றும் ஆனால், நல்லவைகளை நீதான் தோற்றுவிக்க வேண்டும்

மார்ச் 26
நல்ல நாட்களில்

யோபு 19:13-29

அவரை நானே பார்ப்பேன்.
யோபு 19:27

துன்பம் வருகின்ற போது எனக்கு ஏன் இந்தத் துன்பம் என்று கேட்கின்றோம். ஆனால், ஆண்டவர் சந்தோஷங்களைக் காணச் செய்த காலங்களில் எனக்கு ஏன் இவ்வளவு சந்தோஷம் என்று கேட்டிருக்கமாட்டோம். சோதனைகளும் நெருக்கடிகளும் வரும் போது இதற்கெல்லாம் நான் என்ன பாவம் செய்தேன்? என்று கேட்கின்றோம். ஆனால், நலமான சூழ்நிலைகளில் நன்றாக வாழ்ந்த காலங்களில் இப்படிப்பட்ட நல்ல சூழ்நிலைகளுக்காக நான் என்ன நல்லதைச் செய்தேன்? என்று கேட்டிருக்கமாட்டோம்.

ஏதாவது ஒன்று வேதனை தரும் விதமாக நடந்து விட்டால், கடவுளே உனக்குக் கண் இல்லையா? என்று கேட்கின்றோம். ஆனால் சுகமாயிருந்த நாட்களில் இதே கண்களால் தேவன் நம்முடைய தவறுகளை யெல்லாம் பார்த்துக் கொண்டிருக்கின்றார் என்று சிந்தித்திருக்கமாட்டோம்.

ஆம், துன்பமான நிகழ்வுகளின் வேளைகளில் தேவனுடைய இரக்கம் எங்கே? என்று கேள்வி கேட்கின்றோம். அவர் அனுமதித்த அமைதியின் காலங்களிலோ அவர் காண்பித்த அன்பை எண்ணி நன்றியுடையவர்களாய் வாழாமல் போகின்றோம். நல்ல வசதியும் சௌகரியமான சூழ்நிலைகளும் தேவனைத்தேடும் உணர்வுகளை நம்மை விட்டு அகற்றும் தன்மையுடையவை. அதனை உணர்ந்து எல்லா நேரங் களிலும் தேவ தயவின் தேவையை அறிந்து வாழ வேண்டும்

யோபு செல்வ வளத்தின் மிகுதியிலும், சந்தோஷமான சூழ்நிலைகளிலும் வாழ்ந்த போது, தேவனை மறக்காமல் அவருக்கு முன்பாகப் பய பக்தியும் ஒழுங்கு முள்ள வாழ்க்கையை வாழ்ந்தான். இந்த நல்ல சூழ்நிலைகள் யாவும் அவர் தந்ததே என்ற உணர்வுடன் அவருக்கு முன்பு உத்தமனாக வாழ்ந்திடக் கவனமாயிருந்தான். எனவே, ஒரு நாள் எல்லா நல்ல சூழ்நிலைகளும் அவனை விட்டு எடுபட்டுப் போன பின்பும், அவனால் நிலைகுலைந்து போகாமல் தேவ நம்பிக்கை சார்ந்து நிற்க முடிந்தது.

எனவே அவரே கொடுத்தார். அவரே எடுத்துக் கொண்டார் என்று அவனால் நம்ப முடிந்தது. எல்லோரும் முடிந்துபோன ஒரு விஷயமாக அவனுடைய வாழ்க் கையை எண்ணியபோதும், என் மீட்பர் உயிரோடிருக்கிறார். அவரை நான் காண் பேன் என்று அவன் நம்பிக்கையோடு பேசினான். ஆம், நல்ல நாட்களில் தேவனை நினைத்து அவருக்குப் பிரியமாக வாழக் கவனமாயிருக்கவேண்டும். அப்பொழுது துன்ப நாட்களில் அவர் துணைநின்று தாங்கித் தேற்றி நடத்துவதை நாம் உணரமுடியும்.

சிந்தனைக்கு...

கசப்பான மருந்து உடலைச் சீர்செய்கிறது. கசப்பான கஷ்டங்கள் வாழ்க்கையைச் சீர் செய்கிறது.

மார்ச் 27

சரியான அளவீடுகள்

11 கொரிந்தியர் 10:1-18

தங்களைத் தாங்களே மெச்சிக் கொள்ளுகிற...
11 கொரிந்தியர் 10:12

வெளிநாடு செல்லுவதற்காக ஆயத்தப்பட்ட ஒருவர் தன்னுடைய பொருட்களை பெட்டிகளில் வைத்து எடை பார்த்தார். எல்லாம் விமான டிக்கட்டில் குறிக்கப்பட்ட அளவுகளில் இருந்தது. ஆனால், விமான நிலையம் சென்று பெட்டிகளை எடை பார்த்த போது, அளவுக்கு மிகவும் அதிகமாயிருந்தது கண்டுபிடிக்கப்பட்டு அதிகக் கட்டணம் கோரப்பட்டது. இவரோ நான் சரியாக எடைபோட்டுதான் கொண்டுவந்தேன் என்று சண்டைபோட்டார். உண்மை என்னவென்றல் அவருடைய வீட்டிலிருந்த எடை பார்க்கும் கருவி பழுதடைந்து சரியான எடையைக் காண்பிக்கும் தன்மையை இழந்திருந்தது அவருக்கு முதலில் தெரியவில்லை.

சிலர் தங்களின் பக்தியையும், விசுவாசத்தையும், ஆவிக்குரிய வாழ்க்கையையும் இப்படித்தான் தப்பாகக் கணக்கிட்டுக்கொண்டே, அதனையே சரி என்று எண்ணிக் கொள்கின்றனர். சிலர் தங்களின் ஜெபங்கள், உபவாசங்கள், ஆராதனைகள், காணிக்கைகள், ஊழியங்கள், பக்தி வைராக்கியங்கள் இவைகளைத்தான் கணக்கிட்டு தங்களின் இறைவாழ்க்கையின் நிலைமையைக் கணக்கிடுகின்றார்கள். ஆனால், மேற்கண்டவைகள் நம்முடைய ஆவிக்குரிய தரத்தையும் விசுவாசத்தின் அளவையும் சரியாகக் கணக்கிட்டுச் சொல்ல இயலாதவைகள். இந்த அளவீடுகளின் அடிப்படையில் தேவ ஆசீர்வாதங்களையும், தேவனுடைய செயல்பாடுகளையும் எதிர்பார்த்தால் ஏமாற்றமே மிஞ்சும்.

பலர் தேவன் தாங்கள் எதிர்பார்த்த நன்மைகளைத் தரவில்லை என்று உணரும்போது, மேற்கண்ட கணக்கீடுகளைத்தான் மனதில் கொண்டுவந்து மனஞ்சோர்ந்து போகின்றார்கள். தங்களின் பக்தி வாழ்க்கைக்கு தேவன் ஏன் பலனளிக்கவில்லை என்று யோசிக்கின்றார்கள். ஆனால் நாம் எதைக்கொண்டு நம்முடைய உண்மையான ஆவிக்குரிய தரத்தைக் கணக்கிட வேண்டும் என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும்.

தேவ உறவை எந்த அளவிற்கு ஆத்துமாவில் அடையாளங் காண்கின்றோம். தேவனுக்கேற்ற வகையில் நடக்க எந்த அளவிற்கு தாகமாயிருக்கின்றோம். தேவனுடைய பிரியத்தைப் பெறுவதற்காக எந்த அளவிற்கு நம்மைத் தாழ்த்திக் கொள்ள முடிகிறது? நம்முடைய சுபாபவங்களும், பண்புகளும் எந்த அளவிற்கு தேவ சாயலைப் பிரதிபலிக்கின்றன? எந்த அளவிற்கு தேவ சமாதானத்தையும் சந்தோஷத்தையும் நமக்குள் அனுபவிக்கின்றோம்? இவைகளே முக்கியமானவைகள். இவ்விதமாகவே நம்மை நாம் அளந்து பார்க்க வேண்டும்.

சிந்தனைக்கு...

கண்ணாடியில் உன் முகத்தைப் பார்த்தால் அழகு தெரியும்.
வேத வெளிச்சத்தில் உன் அகத்தைப் பார்த்தால் தவறு புரியும்.

மார்ச் 28

உயர்ந்த இலக்கை நோக்கி

பிலிப்பியர் 3:1-14

இலக்கை நோக்கித் தொடருகிறேன்.
பிலிப்பியர் 3:14

புலி வேட்டைக்குச் செல்கின்றவன், தான் செல்லும் பாதையில் குறுக்கே வரும் முயல்களையும், நரிகளையும் வேட்டையாடுவதற்குக் கவனத்தைத் திருப்பினால், புலி வேட்டை வெற்றி பெறாது. ஒரு பெரிய இலக்கை நோக்கிச் செல்லும் பாதையில் குறுக்கிடும் சிறு சிறு விஷயங்களையெல்லாம் மிகப் பெரிய விஷயங்களாக எண்ணி, அவைகள்மேல் நம்முடைய கவனத்தை வைத்தால், பெரிய இலக்குகளை நாம் எட்ட முடியாது.

தேவனுடைய மகிமையான திட்டத்தை நிறைவேற்றுவதற்கான கருவியாகத் தெரிந்து கொள்ளப்பட்டவன் ஆபிரகாம். ஆனால், அந்த இலக்கை நோக்கிய பாதையில் தீவிரமாகப் பயணம் செய்து கொண்டிருந்தபோது கவனத்தைத் திசை திருப்பும் சில காரியங்கள் நிகழ்ந்தன. லோத்துவிற்கும் ஆபிரகாமிற்கும் இடையே நீயா, நானா என்பது போன்ற ஒரு சூழ்நிலை வந்தது. ஆனால் ஆபிரகாம் நீ பெரியவனா, நான் பெரியவனா என்பதைப் பார்த்துவிடலாம் என்ற உணர்வோடு செயல்படவில்லை. அவன் கௌரவத்திற்கும், தன்னுடைய நியாயத்திற்கும் முக்கியத் துவம் தராமல், தேவன் நியமித்த இலக்கை நோக்கிய ஓட்டம் வேகம் குன்றிவிடக் கூடாது என்பதற்கே அதிக முக்கியத்துவம் கொடுத்தான். எனவே, அவன் தாழ்ந்து போகத் தன்னைத் தயார்படுத்திக்கொண்டு, லோத்துவிற்கு விட்டுக்கொடுத்தான்.

அதுபோல சாராள் ஆகாரைத் துரத்த விரும்பியதும், இஸ்மவேலை வெளி யேற்ற விரும்பியதும் ஆபிரகாமுக்கு விசனமாகவேயிருந்தன. ஆயினும் நீ நினைத்த படியா, நான் நினைத்தபடியா என்று போராட அவன் விரும்பவில்லை. தன்னுடைய உள் உணர்வு, தன்மானம் ஆகியவை காயப்படுகிறது என்று உணர்ந்த போதிலும், அவன் தாழ்ந்து போவதற்கே தேவனால் ஆலோசனை பெற்று விட்டுக் கொடுத்தான். ஒருவேளை இதுபோன்ற குறுக்கீடுகளுக்கு அதிக முக்கியத்துவம் தந்து, தன்னையும் தன்னுடைய விருப்பங்களையும் முன்னிலைப்படுத்த விரும்பி யிருந்தால் தேவன் நியமித்த உயர்ந்த இலக்கை அவன் எட்ட இயலாமல் போயிருப்பான்.

ஆவிக்குரிய வாழ்க்கையாகிலும் சரி, உலக வாழ்க்கையாயினும் சரி நாம் சாதனை படைக்க முன்னேறும்போது, சுய கௌரவம், சுய உணர்வுகள், சுய மன நிலைகள், ஆகியவற்றிற்கு எதிராகப் பல காரியங்கள் நேரிடும். சில அநீதி கள், சில புறக்கணிப்புகள், சில மனக்காயங்கள், சில கௌரவப் பிரச்சனைகள், ஆகியவைகள் அங்கே வரும். ஆனால் அங்கே நாம் அதிக கவனம் செலுத்தினால் அங்கே நம்முடைய ஒருமுகப்படுத்தப்பட்ட எண்ணங்கள் சிதறுவதோடு, பிரதான இலக்கின் தரிசனம் குன்றி, முன்னேறும் பலத்தையும் இழந்து விடுவோம்.

சிந்தனைக்கு...

பாடுகள் உன்னைப் புண்படுத்தும் போதுதான்
பண்புகளால் உன் மனம் பக்குவமடைகிறது.

மார்ச் 29

பகுத்தறிவு

ரோமர் 12 : 1 – 9

இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல்...
ரோமர் – 12 : 2

உடைகள் மூலம் உடலை மறைப்பதற்குப் பதிலாக, உடைகள் மூலமாக உடல் அமைப்புகளை உலகத்திற்குக் காண்பிப்பதுதான் இன்றைய ஸ்டைல், தலையில் தொப்பியை நேராக வைக்காமல் பின்புறம் திருப்பி வைப்பதுதான் நவீன ஸ்டைல். பெண்கள் வளர்க்க வேண்டிய தலைமுடியை வெட்டி, வெட்ட வேண்டிய நகத்தை நீள மாக வளர்க்கின்றார்கள். அதுதான் பேஷன் என்கிறார்கள். வாலிபன் தலைமுடியை படிய வைப்பதற்குப் பதிலாக முள்ளம்பன்றி போன்று முடியை பசைபோட்டு மேல் நோக்கி நிற்க வைக்கின்றான். அது லேட்டஸ்ட் ஸ்டைல் என்கிறான். சாயம் போய் தேய்ந்தது போன்ற ஜீன்சையும், கிழிந்து நூலாகத் தொங்கும் கால்சட்டையும் நவீன பேஷன் என்று சொல்லி அணிகின்றார்கள்.

இன்றைய உலகம் எது சரியோ அதற்கு முரணாகப் போவதையே பேஷன் என்கிறது. அது எப்படியிருக்க வேண்டுமோ அது அப்படியிருந்தால் அது பட்டிக் காட்டுத் தனம், வித்தியாசமாயிருக்க வேண்டும் என்ற எண்ணம் சரியான வழி களுக்கு எதிராகப் போக வைக்கிறது. இதுதான் இன்றைய பேஷன் என்பதை அல்ல. அது எந்த அளவிற்கு சரி என்று பார்க்க வேண்டும். எல்லோரும் இதைத் தானே நவீன நாகரீகம் என்கிறார்கள் என்பதையல்ல. இதில் அறிவுக்கேற்ற நாகரீகம் இருக்கிறதா என்பதைப் பார்க்க வேண்டும். அது ஒழுக்க விதிகளுக்கு முரண்பட்டுப் போகவில்லையா என்பதைக் கவனிக்க வேண்டும்.

இன்றைய உலகம் முரண்பட்டுப் போவதைத்தான் நாகரீகம் என்று அழைக் கின்றது. இன்றைய நவீன சமுதாயம் விதிகளுக்கு எதிராகச் செயல்படுவதையே லேட்டஸ்ட் ஸ்டைல் என்று சொல்கிறது, ஒழுக்கங்களை காற்றில் பறக்க விட்டு விட்டு, உலகத்தைக் கவரும் விதமாக எதையாவது செய்வதே எல்லாரும் விரும்பும் பேஷனாக உள்ளது. இங்கே நமக்கு பகுத்தறிவு வேண்டும். எது இன்றைய நாகரிகம் என்பதைவிட, எது சரியான நாகரீகம் என்று பார்க்க வேண்டும். எல்லோரையும் கவருகிறது என்பதற்காகவும், எல்லோரும் விரும்புகிறார்கள் என்பதற்காகவும் நாம் ஒன்றைப் பின்பற்றினால் அது பகுத்தறிவிழந்த ஒரு அனு பவம். உலகம் விவேகமாக வாழ்வதை விட வித்தியாசமாக வாழ்வதையே விரும்புகிறது.

இந்த முட்டாள்தனமான நாகரீகங்களின் தாக்கங்களால் நாம் தரமிழந்து போகாமல், எது சரி, எது தவறு என்பதற்கு முக்கியத்துவம் தர வேண்டும். எது உலகத்திற்குப் பிரியமாயிருக்கிறது என்பதைவிட, எது தேவனுக்குப் பிரியமா யிருக்கும் என்பதற்கு அதிக முக்கியத்துவம் தர வேண்டும்.

சிந்தனைக்கு...

சிந்திக்கும் முன்பு செயல்படுகிறவன் முட்டாளாகிறான்
சிந்தித்த பின்பும் செயல்படாதவன் சோம்பேறியாகிறான்

மார்ச் 30

அன்பும், மரியாதையும்

யோவான் 21:14-25

நீ என்னிடத்தில் அன்பாயிருக்கிறாயா?
யோவான் 21:16

ஒரு முக்கியமான நிகழ்ச்சிக்கு ஒரு நல்ல போதகரும் வந்திருந்தார். ஒரு மோசமான அரசியல் தலைவரும் வந்திருந்தார். நல்ல போதகரைக் கண்டதும் எல்லோரும் புன்னகைத்தனர். மோசமான அரசியல் தலைவரைப் பார்த்ததும் எல்லோரும் எழுந்து நின்றனர். அதைப் பார்த்த ஒருவர் அந்த நல்ல போதகரிடம் "ஒரு மோசமான அரசியல் தலைவரைக் கண்டதும் எல்லோரும் எழுந்து நின்று மரியாதை செலுத்தினார்களே, உங்களை அது போல ஏன் மதிக்கவில்லை என்று கேட்டார்.

எனக்கு அவர்கள் புன்னகையின் மூலம் அன்பைத் தெரிவித்தனர். அவருக்கு எழுந்து நின்று மரியாதையை செலுத்தினர். மரியாதையைவிட அன்பு பெரியது. நான் சாகும் வரை அன்பைப் பெற முடியும். இவர் சாகும் வரை மரியாதையைத் தக்கவைப்பது கடினம் என்றார்.

பணம், ஆள்பலம், அறிவுத்திறன், அதிகாரம், அந்தஸ்து, ஆகியவை பிறருடைய மரியாதையைக் கட்டாயப்படுத்திப் பெற்றுவிடும். ஆனால் நற்குணங்களும், நற்பண்புகளும், நன்நடத்தைகளும், நற்செயல்களும் உண்மையான அன்பைப் பெற்றுத்தரும். நம்முடைய வலிமையான பின்னணியால் மரியாதையைப் பெறுவதைவிட, நம்முடைய நற்குணப் பின்னணியால் அன்பைப் பெறுவதுதான் மேலானது. நமக்கு மரியாதையைத் தேடித் தரும் விஷயங்களையல்ல, நல்ல அன்பைத் தேடித் தரும் விஷயங்களைத்தான் நாம் தேட வேண்டும்.

ஹிட்லருக்கு முன்பாக ஒரு காலத்தில் ஜெர்மானிய மக்கள் பயந்து நடுங்கினார்கள். ஆனால், இன்று ஜெர்மானியர்களால் மதிக்கப்படும் தலைவர்களின் பட்டியலில் ஹிட்லரின் பெயர் இல்லை. மகாத்மா காந்தியை இந்திய மக்கள் நேசித்தனர். இன்றும் இந்திய மக்களின் அதிக மரியாதைக்குரிய தலைவர் மகாத்மா காந்தியே.

தேவனும் தமக்கு மரியாதை செலுத்தும் மக்களையல்ல. தம்மை உண்மையாய் நேசிக்கும் மக்களையே விரும்புகின்றார். மரியாதை தேவனுக்கு நல்லதோர் ஆராதனையைக் கொடுக்கும். உண்மையான அன்பே அவருடைய வழிகளில் நடந்து அவரைக் கனப்படுத்தத் தூண்டும்.

பேதுருவிடம் இயேசு, என்னை மதிக்கின்றாயா என்று கேட்காமல், என்னை நேசிக்கின்றாயா என்றுதான் கேட்டார். இன்றைய கிறிஸ்தவர்களில் அநேகர் இயேசுவுக்காக எழுந்து நின்று மரியாதை செலுத்துகின்றவர்கள். ஆனால், அன்பினால் தூண்டப்பட்ட புன்னகை அங்கே இல்லை

சிந்தனைக்கு...

கடவுளிடமிருந்து நீ எதையாவது பெற்றதுண்டானால்
மனிதர்கள் உன்னிடமிருந்து எதையாவது பெறும்படி செயல்படு.

மார்ச் 31
தவறான மாதிரி

1 பேதுரு 5:1-14

மந்தைக்கு மாதிரிகளாகவும் கண்காணிப்புச் செய்யுங்கள்.
1 பேதுரு 5:3

ஒரு மாணவன் தன்னுடைய சட்டையின் மேல் பக்கம் உள்ள இரண்டு பட்டன்களை போடாமலே வகுப்புக்கு வருவான். ஒரு நாள் ஆசிரியர், நீ ஏன் இப்படி ஒழுங்கில்லாமல் இரண்டு பட்டன்களை திறந்து போட்டுக்கொண்டிருக்கின்றாய் என்று கண்டிப்புடன் கேட்டார். அதற்கு அவன், என்னுடைய தந்தை அவ்விதமாக அணிவதைப் பார்த்து அதற்கு ஏதாவது நல்ல காரணம் இருக்கும் என்று எண்ணிவிட்டேன் என்றான். சில நேரங்களில், யாரோ ஒருவரின் தவறான சில நடைமுறைகள், மற்றவர்களுக்கு தவறான முன்மாதிரிகள் ஆவதோடு, அவை அவசியம் என்றும் சிந்திக்க வைத்து விடுகிறது.

பிறரிடமிருந்து நாம் கேட்கின்றவைகளைவிட, பிறரிடம் நாம் காண்கின்றவைகள் எளிதாக நம்மிடம் விளைவுகளை ஏற்படுத்தி விடுகிறது. நாம் வாழ்கின்ற விதமும், பேசுகின்ற விதமும், நடந்து கொள்ளும் விதமும் நம்மிடம் நெருக்கமாயிருக்கும் சிலரிடம், சில வேகமான தாக்கங்களை ஏற்படுத்தும் என்ற விழிப்புணர்வு நமக்கு வேண்டும். மேலும் பிறரிடம் காண நேரிடும் நல்லவைகள், மற்றவர்களிடம் அதிகப் பாதிப்புகளை ஏற்படுத்தாது. ஆனால், பிறரிடம் காண நேரிடும் தவறானவைகள் வேகமான தாக்கங்களை ஏற்படுத்திவிடும்.

ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து தம்முடைய சீடர்களை ஏதோ ஒரு இடத்தில் வரவைத்துப் போதிக்கவில்லை. அவர்களை அவர் தம்மோடிருக்கவும், தம்மோடு எல்லா இடங்களுக்கும் வரவும் செய்துதான் போதித்தார். அவர் என்ன போதித்தார்? என்பதை மட்டும் அவர்கள் அறியவில்லை. அவர் எப்படி வாழ்ந்தார் என்பதையும் அவர்கள் பார்த்தார்கள். அவரிடம் அவர்கள் தவறான எதையும் கண்டதில்லை. அதே விதமானதோர் சாட்சி அனுபவத்தோடு வாழ்ந்த மனிதன் அப்போஸ்தலனாகிய பவுல். எனவே என்னிடத்தில் கற்றும், அடைந்தும், கேட்டும், கண்டும் இருக்கிற என்று அவனால் எழுத முடிந்தது.

நல்ல போதனையாளர்களாக மட்டுமல்ல, நல்லவிதமாக வாழ்ந்து மற்றவர்களுக்கு மாதிரிகளாகின்ற நல்ல போதகர்களாகவும் இருக்க வேண்டும். நல்ல பல நன்மைகளை பிள்ளைகளுக்குச் செய்யும் பெற்றோராக மட்டுமல்ல. நல்லவர்களாக வாழ்ந்து காட்டும் பெற்றோர்களாகவும் இருக்க வேண்டும். நம்முடைய எந்த ஒரு நடவடிக்கையும் நம்மை நேசிக்கின்றவர்களுக்கோ, நமக்கு நெருக்கமாயிருக்கின்றவர்களுக்கோ, தவறானதோர் முன்மாதிரியாகிவிடக் கூடாது என்ற விழிப்புணர்வு வேண்டும். ஏனென்றால், நம்மிடமுள்ள நல்லவைகளை விட, தவறானவைகள் எளிதாக அவர்களைப் பாதித்துவிடும் என்ற விழிப்புணர்வு தேவை.

சிந்தனைக்கு...

பலர் புகழ்வதால் நீ சரியாக இருக்கிறாய் என்றோ, சிலர் இகழ்வதால் நீ சரியில்லை என்றோ கூற முடியாது.

ஏப்ரல் 1
தேவனுக்கு கனம்

மத்தேயு 5:1-16

பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப் படுத்தும்படி...
மத்தேயு 5:16

தன்னுடைய மகனின் திருமண வைபவத்தில் கலந்து கொள்ள தேவ ஊழியர் ஒருவரை விரும்பி அழைத்தார் ஒருவர். நீங்கள்தான் எங்களின் மிக முக்கியமான விருந்தினர், நீங்கள் வருவதுதான் எங்களுக்கு மிக மிகச் சந்தோஷமான விஷயம் என்றெல்லாம் பெரிய பெரிய வார்த்தைகளைப் பேசினார். தன்மேல் இவ்வளவு பெரிய மரியாதையை ஒருவர் வைத்திருக்கின்றாரே என்று ஆச்சரியப்பட்டார் தேவ ஊழியர். ஆனால், திருமண வைபவம் நடந்த போது இந்த தேவ ஊழியர் அவருக்கு மிக முக்கிய மான நபர் என்ற விஷயம் அங்கு வந்த யாருக்கும் தெரியாது. ஏனென்றால், அந்த நிகழ்ச்சியின் போது அந்த தேவ ஊழியர் அவருடைய முக்கியமான விருந்தினர் என்று பிறர் அறியும்படியாக அழைத்தவர் நடந்துகொள்ளவில்லை.

அநேகர் கர்த்தர்மேல் பெரியதோர் மரியாதையை வைத்திருக்கின்றனர். அவரை மிக மிகச் சிறப்பான வார்த்தைகளினால் புகழ்ந்து பேசி மரியாதை தருகின்றனர். "இயேசுவே எனக்கு எல்லோரையும்விட, எல்லாவற்றையும் விட நீர்தான் மிக மிக முக்கியமானவர்" என்றெல்லாம் கூறுகின்றனர். ஆனால், இயேசுதான் அவர்களுக்கு மிக மிக முக்கியமானவர் என்ற செய்தி வேறு யாருக்கும் தெரியாது. ஏனென்றால், இயேசுவைத்தான் அவர்கள் மிக முக்கியமானவராகவும், கனத்தி ற்குரியவராகவும் எண்ணுகின்றனர் என்பதை நிரூபிக்க அவர்களிடம் எதுவும் இல்லை.

உண்மையான மரியாதை என்பது ஒரு நபரிடம் போய் நாம் சொல்வது அல்ல. அவர்மேல் நாம் எவ்வளவு மரியாதை வைத்திருக்கின்றோம் என்பதை பிறர் பார்க்க வாய்ப்புக் கிடைக்க வேண்டும். இயேசுவை நாம் மிக முக்கியமாக எண்ணுவதை அவரிடமே சொல்வது அல்ல. அதனைப் பிறர் அறியும் விதமாக நாம் செயல்பட வேண்டும். அவரை நாம் போற்றிப் புகழ்ந்தால் அவருக்கு மட்டும்தான் தெரியும். ஆனால், மரியாதை என்பதும் கனம் என்பதும் பிறர் அறியும் விதமாகச் செய்வதாகும்.

நம்முடைய வாழ்க்கை முறையினால் நாம் இயேசுவைத்தான் மிக முக்கிய மானவராக எண்ணுகின்றோம் என்று பிறர் அறியச் செய்யவேண்டும். நம்முடைய சுபாவங்களையும் பணம், பொருள், புகழ், சுய கௌரவம், ஆடம்பரம் போன்ற விஷயங்களில் நம்முடைய நிலைப்பாடுகளையும் பார்க்க நேரிடுகின்றவர்கள் எல்லா வற்றையும்விட, இயேசுவைத்தான் மிக முக்கியமாக நாம் எண்ணுகின்றோம் என்பதை அறிய வேண்டும். நாம் சபையில் பாடி, துதித்து மகிமைப்படுத்துவதை விசுவாசிகள் மட்டும் பார்ப்பார்கள். நாம் வாழ்கின்ற விதத்தைத்தான் பிறர் பார்ப்பார்கள். அப்போது இயேசுவே நமக்கு மிக முக்கியம் என்பதை அவர்கள் புரிந்து கொள்ளும் விதமாக நாம் நடக்க வேண்டும்.

சிந்தனைக்கு...

இறை பக்தியை உன்வழிபாடுகளினால் அல்ல.
இறைவனுடைய வழிகளில் நீ நடப்பதினால் காண்பி.

ஏப்ரல் 2

தியாகமும் சந்தோஷமும்

பிலிப்பியர் 3:7 –17

அவருக்காக எல்லாவற்றையும் நஷ்டமென்று விட்டேன்...
பிலிப்பியர் 3 : 11

நான் சில கிறிஸ்தவர்களைப் பார்த்திருக்கின்றேன். அவர்கள் மிகவும் நல்லவர்கள். நல்ல பக்திமான்கள். தேவனுக்காக மிகவும் பக்தி வைராக்கியத்தோடு செயல்படுகின்றவர்கள். அவர்கள் தேவனுக்காக நல்ல வேலை, நல்ல தொழில், நல்ல வசதிகள், நல்ல அந்தஸ்துக்கள் என ஏராளமான விஷயங்களை மிகவும் தியாகத்துடன் இழக்கத் துணிந்திருக்கின்றார்கள். சாதாரண உணவு, சாதாரண உறைவிடம் என மிகவும் எளிமையாக வாழ்கின்றார்கள். ஆனால், அவர்களின் முகத்தில் ஒரு சந்தோஷப் பிரதிபலிப்பு இல்லை. அவர்களின் வார்த்தைகளில் பக்தி தெரிகிறது. ஆனால், ஒரு களிப்பின் தொனி இல்லை. அவர்கள் மிகவும் சீரியஸாகத் தோன்றுகின்றார்கள். ஆனால், குதூகலம் இல்லை. அவர்களைப் பார்த்தால் உலகத்தைத் துறந்தவர்கள் என யாரும் எண்ண இயலும். ஆயினும், இவர்களைப் போல நாமும் மாறவேண்டும் என்ற ஆசை வராது.

ஏனென்றால், தேவனுக்கு முன்பாக அதிக பக்தியாயிருக்க விரும்பும் இவர்கள் தங்களை அடக்கி ஒடுக்கி வாழ்கின்றார்கள். ஆனால், அதற்குப் பதிலாக தேவ உறவு தரும் விசேஷமான ஆவிக்குரிய சந்தோஷத்தை அவர்கள் அனுபவிக்கவில்லை. தேவனுக்காக இழக்க இழக்க ஒரு பெரிய சந்தோஷம் உள்ளத்தில் வரும். அந்த சந்தோஷத்தை தேவ ஆவியினால் இருதயத்தில் அனுபவிக்க அனுபவிக்க தேவனுக்காக இன்னும் அதிகமாக இழக்கவும் அர்ப்பணிக்கவும் ஆசைவரும்.

அங்கே அதனால் ஏற்படும் விளைவு ஒரு சன்னியாசித்தனமான வாழ்வு அல்ல. சந்தோஷமான வாழ்வு. அந்த வாழ்வு பிறரைக் கவரும். நமக்கும் இப்படிப்பட்ட சந்தோஷமான வாழ்வு அவசியம் என்று எண்ணும்படி பிறரைத் தூண்டும். கிறிஸ்துவுக்குள்ளான ஒரு பெரிய சந்தோஷத்தை அப்போஸ்தலனாகிய பவுல் அனு பவித்தான். அந்த சந்தோஷத்தின் பிரதிபலிப்பாக இயேசுவுக்காக லாபமான பல மேன்மைகளையும் அந்தஸ்துக்களையும் இழக்க முன்வந்தான். மேலும், எல்லோரையும் சந்தோஷமாயிருக்கும்படி அறிவுரை கூறினான்.

நம்முடைய வார்த்தையில், பார்வையில், செயல்களில் கிறிஸ்துவினால் வருகின்ற சந்தோஷத்தின் சாயல்கள் பிரதிபலிக்க வேண்டும். தன் கையிலிருந்த பத்து ரூபாயை இழந்து சிறுவன் ஒருவன் அழகான பலூன் ஒன்றை வாங்குகிறான். அவன் இழந்தது மட்டுமல்ல. அந்த இழப்பிற்குப் பதில் அவன் அந்தப் பலூனை விளையாடி எவ்வளவு சந்தோஷப்படுகிறான். ஆம், நாம் கர்த்தருக்காக இழந்தாலும், அர்ப்பணித்தாலும் அதற்குப் பதிலாக ஒரு பெரிய சந்தோஷத்தை அடைவதற்கும், அதனை பிறர் நடுவில் பிரதிபலித்துக் காட்டுவதற்கும் தீவிரமாயிருக்க வேண்டும்.

சிந்தனைக்கு...

உன் உபதேசம் சிறந்தது என்பதை பிறர் அறிய வேண்டுமானால்
உன் வாழ்க்கை சிறந்தது என்பதைப் பிறர் அறியச் செய்

ஏப்ரல் 3
வெறும் வழிபாடுகள்

ஆமோஸ் 5 :10-27

உன்பாட்டுகளின் இரைச்சலை என்னை விட்டு அகற்று...
ஆமோஸ் 5 : 23

ஆடிப் பாடி ஆராதித்தல் அனேகம் ஸ்தோத்திரங்களை உச்சரித்தல், பரமனின் பல்வேறு நாமங்களைச் சொல்லி பரவசத்தோடு துதித்தல், ஓங்கிய ஓசையுடன் உணர்ச்சிப் பூர்வமாகச் ஜெபித்தல், கைகளை உயர்த்தியும், அசைத்தும், தட்டியும் உற்சாக உணர்வுகளை வெளிப்படுத்துதல் - இவையாவும் உள் மனதில் உருவாகும் ஆவியின் எழுப்புதலான நிலையின் வெளிப்புற அடையாளங்களாகும். பரிசுத்த ஆவியினால் ஆட்கொள்ளப்பட்டு ஆனந்தமான நிலையை அகத்தில் அனுபவிக்கும் பரிசுத்தவான்களுக்கு இவ்வித அனுபவங்கள் உண்டு.

ஆனால், இன்று இவைகள் இயந்திரத்தனமான வெறும் வெளிப்புற வழி பாட்டு அம்சங்களாக வேகமாக மாறிக்கொண்டிருக்கின்றன. பெரும்பாலான இன்றைய ஆராதனைகளில் இதயத்தில் உள்ள ஆவியின் அனல் அல்ல. மாம்சத்தின் உணர்ச்சிகள்தான் வெளிப்படுகின்றன. உண்மையான பரிசுத்தவான்களின் பரவச மான பரிசுத்த அனுபவங்கள் இன்று, அனேகரால் காப்பியடிக்கப்பட்ட வெறும் உயிரற்ற சடங்காச்சார வழிபாட்டு முறைகளாக மாறிவருவது வேதனையான விஷயம்.

பழைய ஏற்பாட்டு யூதர்கள் பாவத்தைக் குறித்த எந்த உணர்வுமின்றி, பாவ நிவாரண பலி என்னும் சடங்கைச் செய்ததுபோல் இதுவும் ஆயிற்று. ஆடிப் பாடி ஆராதித்தும், அனுதின வாழ்க்கையில் கிறிஸ்துவின் பரிசுத்தம் வெளிப்படாமையும், ஆவியின் கனிகளற்ற முரண்பாடான வாழ்க்கையும் இதனைத் தெளிவுபடுத்துகின்றன. தேவனுக்கேற்றபடி நாம் மாறாமலும், தெய்வீக சுபாவங்களில் வாழாமலும் நாம் நடத்தும் ஆடல், பாடல் ஆராதனைகள் தேவனை மகிமைப்படுத்தாது. ஆனால், நிச்சயம் அவரைக் கோபப்படுத்தும். ஆம், உட்புறத்தில் உண்மையான தேவ தொடுதல் கள் இன்றி வெளிப்புறச் செயல்களால் தேவனை ஆராதிப்பது பலனற்றதே.

பலருக்கு இந்நாட்களில் ஆவிக்குரிய அனுபவம் என்பதே கைதட்டுதலும், கை அசைத்தலும், சத்தமாய் துதித்தலும் என்பதாக மாறிவிட்டது. மேற்கண்ட காரியங்களை வாஞ்சையுடன் செய்தவுடன் தாங்கள் பாரம்பரிய கிறிஸ்தவ வாழ்க்கையிலிருந்து பரிசுத்த வாழ்க்கைக்கு வந்துவிட்டதாக எண்ணுகின்றார்கள். உட்புறத்தில் ஆவியின் ஐக்கியம் இல்லாமலே, ஆவிக்குரியவர்கள் என்றால் இப்படித்தான் செய்யவேண்டும் என்பதற்காக அவ்விதம் செய்கின்றனர். இது புலியைப் பார்த்து பூனை சூடு போட்டது போலும், மயிலின் ஆட்டத்தைப் பார்த்து வான்கோழியும், சிறகு விரித்து ஆட ஆரம்பித்தது போலவும் உள்ளது. உணர்வுகளை உற்சாகமாக வெளிப்படுத்து வதில் தவறில்லை. ஆனால், உண்மையான உள்ளான அனுபவமில்லையேல் அவைகளால் எந்தப் பிரயோஜனமுமில்லை.

சிந்தனைக்கு...

உன்னுடைய இறைப்பற்றை இறைவனை நீ எப்படி ஆராதிக்கிறாய் என்பதில் அல்ல, எப்படி வாழ்கிறாய் என்பதிலேயே பார்க்கின்றார்.

ஏப்ரல் 4
விசுவாசச் சிறகுகள்

பிலிப்பியர் 3:12-21

பின்னானவைகளை மறந்து முன்னானவைகளை நாடி.........
பிலிப்பியர் 3:13

அந்த ஆற்றில் வெள்ளம் கரைபுரண்டு ஓடிக்கொண்டிருந்தது. அங்கே நான் பார்த்தபோது, சில பறவைகள் ஆனந்தமாக அங்குமிங்கும் பறந்து கொண்டிருந்தது. இந்த கரையிலிருந்து அந்த கரையை நோக்கிச் செல்வதும், தண்ணீரின் மேலே சாதாரணமாக பறப்பதும் பார்க்க பரவசமாகயிருந்தது. மனிதர்களால் கடக்க முடியாத இந்த ஆற்றை இந்த சாதாரணப் பறவைகள் எவ்வளவு சுலபமாக கடந்து செல்கின்றன. இந்த பெருவெள்ளத்தில் விழுந்தால் என்ன ஆகும் என்ற பயம் அவை களுக்கில்லையே. இதற்கு காரணம் என்? அதன் சிறகுகள்.

சிறகுகளைக் கொண்டு எளிதாகப் பறக்கும் சக்தி அவைகளுக்கிருப்பதால், கீழே ஓடும் பெருவெள்ளத்தைக் கண்டு அவைகளுக்குப் பயமில்லை. விசுவாசத்தால் நீதிமான் பிழைப்பான் என்று வேதம் சொல்கின்றது. விசுவாசம் வந்துவிட்டால் அவன் பெருவெள்ளம் போன்ற சூழ்நிலைகளைக் கண்டு கலங்காமல் மகிழ்ச்சியாக வாழ முடியும். விசுவாசச் சிறகுகள் வலுவடைந்தால் ஒருவன் எந்த உலகக் கவலைகளையும் கஷ்டங்களையும் கண்டு கலங்காமல் விசுவாசத்தில் உறுதியாக இருப்பான். மேலே பறக்க விசுவாசச் சிறகுகள் இருக்கும்போது, கீழே ஓடும் பயங்கரமான பலவித சோதனைப் பெருவெள்ளங்களுக்கு பயப்படத் தேவையில்லை.

பல நேரங்களில் நம்மை சமாதானத்துடன் அழைத்துச் செல்ல ஆயத்த மாயிருக்கும் இயேசுவின்மேல் பார்வையை வையாமல், கொந்தளிப்பான சூழ் நிலைகள்மேல் பார்வையை அதிகமாகப் பதித்து விடுதவால்தான், பலவிதமான கலக்கங்களும் கவலைகளும் நம்மைப் பற்றிக்கொண்டு விடுகின்றன. கானகத்தில் பயணம் செய்த இஸ்ரவேலர்கள் சூழ்ந்திருக்கும் இருளைப் பாராமல், தங்களுக்கு முன்பாகச் செல்லும் அக்கினி ஸ்தம்பத்தையே நோக்கிப் பார்த்து முன்னோக்கிச் செல்ல வேண்டியது அவசியமாயிருந்தது.

நம்மை அடித்துக்கொண்டு போய்விடுமோ என்று அஞ்சத்தக்க சில சோதனை களின் பெரு வெள்ளங்கள் நம்மை சுற்றிலும் ஓடிக்கொண்டிருக்கலாம். ஆனாலும், நம்முடைய பார்வை அவைகளின்மேல் அல்ல. தேவன் மேலேயே நம்முடைய பார்வை இருக்க வேண்டும். அதுதான் விசுவாசப் பார்வை. எந்தச் சூழ்நிலையின் நடுவிலும் தேவன் நம்மோடிருந்து நம்மைத் தாங்குவார் என்ற அந்த விசுவாசம் சோதனைகள்மேல் நம்மை ஜெயம் பெற வைக்கும். காற்று வேகமாக வீசி கடல் அலைகள் கொந்தளித்த நிலையில் பேதுரு இயேசுவின்மேல் பார்வையை வைத்த போது கொந்தளிக்கும் சூழ்நிலை அவனை ஒன்றும் செய்யவில்லை. பார்வையைத் திருப்பி சூழ்நிலையைக் கவனித்தபோதோ மூழ்கத் துவங்கினான்.

சிந்தனைக்கு...

பரீட்சைகள் உன்னை அழித்துவிடாது. ஆனால்,
உன்னை யார் என்று அடையாளம் காண்பித்துவிடும்.

ஏப்ரல் 5

கொண்டாட்டக் கிறிஸ்தவம்

லூக்கா 19:28-48

மிகுந்த சத்தத்தோடே தேவனைப் புகழ்ந்தார்கள்...
லூக்கா 19:38

இயேசு கழுதையின்மேல் இராஜா போல அமர்ந்து பவனியாகச் சென்றார். அந்த நாட்களில் இராஜாக்களும் கனத்திற்குரியவர்களும் கழுதையை வாகன மாகப் பயன்படுத்துவது பழக்கம். இந்த மதிப்பிற்குரிய பவனியில் ஏராளமானோர் வந்து இணைந்து கொண்டனர். ஆயிரக்கணக்கில் திரண்ட மக்கள் கூட்டம் மகிழ்ச்சி யும் உத்வேகமும் பொங்க, பலவிதங்களில் வாழ்த்திக் கோஷமிட்டனர். ஆனால், இவர்களெல்லாரும் தங்களுக்கு தாவீதைப் போல பொற்காலம் தருகின்ற ஒருவரை எதிர்பார்த்து வந்தவர்கள்.

இவர்கள் இயேசுவை உண்மையாகப் பின்பற்றி வாழ வந்த அர்ப்பணிப்பின் மனிதர்கள் அல்ல. இவர்கள் சந்தோஷமான ஒன்றோடு தங்களை இணைத்து தங்களுக்குச் சந்தோஷத்தைத் தேடியவர்கள், இவர்கள் இயேசுவின் பாதையில் நடக்கத் தங்களை ஒப்புவித்து வந்தவர்கள் அல்ல

இதுபோன்ற சந்தோஷ பவனிகளில் கோஷமிடவும் கொண்டாடவும் விரும்பு கின்ற மக்கள் கூட்டம் ஏராளம். ஆனால், இயேசுவோ ஒருவன் தம்மைப் பின்பற்றி வருவதற்குக் கோஷமிடுகின்றவர்களையும், கொண்டாட்டக்காரர்களையும், வாய் வாழ்த்துக்காரர்களையும் அல்ல. சுயத்தை வெறுக்கவும், சிலுவை சுமக்கவும் ஆயத்தம ானவர்களைத்தான் அவர் அழைத்தார்.

இன்று இயேசுவை இராஜாவாக எண்ணிக் கோஷமிடவும், ஆடிப்பாடி மகிழவும் அநேகர் உள்ளனர். ஆனால், சுயத்தை வெறுத்து சிலுவை சுமக்க வரு கின்றவர்கள்தான் மிகவும் குறைவு. இன்று கோஷமிடுகின்ற கொண்டாடுகின்ற கிறிஸ்தவத்தில் தான் அநேகர் ஆர்வமாயிருக்கின்றனர். ஆனால், சிலுவை சுமத்தல் இல்லாமலும், சுய வெறுப்பு இல்லாமலும், வெறும் ஆரவார கோஷங் களோடு வாழ்கிறவர்களிடம் கர்த்தர் மகிமைப்படவில்லை. அவர்கள் கர்த்தருக்காகச் சாட்சிகளாக இல்லை.

உண்மையான பக்தியையும், உண்மையான கிறிஸ்தவ அடையாளங் களையும் வெறும் ஆரவாரக் கொண்டாட்ட ஆராதனைகளில் பார்ப்பது சரியல்ல. நாம் எந்த அளவிற்கு நம்மைத் தாழ்த்தி தேவனுக்கு அர்ப்பணித்து, கிறிஸ்துவின் வழிகளில் நடக்கிறோமோ அதுதான் நம்முடைய கிறிஸ்தவ நிலைமையை அளவிடுகிறது. உண்மையாக சுயத்தை வெறுத்து, இயேசுவைப் பின்பற்றுவதற்குத் தங்களை அர்ப்பணித்தவர்கள், கொண்டாட்ட கிறிஸ்தவர்களைவிட அதிகமான மகிழ்ச்சியைத் தங்களிடம் காண்கின்றார்கள்.

சிந்தனைக்கு...

ஆவிக்குரிய வாழ்க்கை என்பது எவ்வளவு பரவசப்பட்டோம் என்பதிலல்ல. எவ்வளவு பரிசுத்தமானோம் என்பதிலேயே விளங்குகிறது.

ஏப்ரல் 6
பக்தி தொடரட்டும்

ஏசாயா 58:1-11

நாங்கள் உபவாசம் பண்ணும் போது நீர் நோக்காமலிருக்கிறது என்ன?
ஏசாயா 58 : 3

அவர் ஒரு கிறிஸ்தவர், லெந்து காலம் ஆரம்பித்த உடன் இவருடைய வாழ்க்கை முறையே மாறிவிடும். காவி கட்டிக் கொள்வார். முகச்சவரம் செய்யமாட்டார். காலில் செருப்பு அணிய மாட்டார். மதுபானம், சிகரெட், சினிமா எல்லாம் தூரமாகிவிடும். கறி, மீன், தொடமாட்டார். நண்பர்களோடு அரட்டை அடிப்பது இராது. அதிகமான நேரங்கள் அவரை ஆலயச் சூழ்நிலையில் காணலாம். ஆனால், ஈஸ்டர் வந்ததும் மறுபடியும் பழைய வாழ்க்கை முறைக்கு வந்து விடுவார். அவரைக் குறித்து அவருடைய நண்பர் சொல்வது மிகவும் வேடிக்கையானது. அவர்தான் ஈஸ்டரை சரியாகப் புரிந்து கொண்டு செயல்படுகிறார். ஏனென்றால், அதுவரை மரித்துப் போயிருந்த எல்லாத் தவறான பழக்கங்களும், குணங்களும் ஈஸ்டர் அன்று மறுபடியும் உயிரோடெழுந்து வந்துவிடுகிறது.

சிலருடைய 40 நாள் விசேஷ பக்தி, ஈஸ்டர் பண்டிகையன்று மரித்துப்போய் விடுகிறது. சிலருடைய வாழ்க்கை 40 நாட்களாக மரித்துப் போயிருந்த பாவச் செயல்களும், பாவப் பழக்க வழக்கங்களும், பாவ சுபாவங்களும் ஈஸ்டர் தினத்தன்று மறுபடியும் உயிரோடெழுந்து விடுகிறது. சாம்பல் புதனன்று காவிகளாகும் கட்டிய பலர் ஈஸ்டர் பண்டிகை அன்று மறுபடியும் பாவிகளாகி விடுகின்றனர்.

கொஞ்ச நாள் பக்தி வாழ்க்கையும், தற்காலிக ஆன்மிகச் செயல்பாடுகளும் ஒருவருக்கு கொஞ்சம் திருப்தியைத் தரலாம். ஆனால் அவை தேவனுக்கு விசனத்தையே தரும். தேவன் நம்முடைய வாழ்க்கையை சிலநாட்கள் மட்டுமே கவனிக்கின்றவர் அல்ல. அவர் எப்போதும் நம்மைக் கவனிக்கின்றார். அவர் சில இடங்களில் மட்டும் நாம் காண்பிக்கும் பக்திப் பாவனையான செயல்பாடுகளை அல்ல. எல்லா இடங்களிலும் நம்முடைய நடவடிக்கைகளைக் கவனிக்கின்றார்.

சில நாட்களில் நாம் விசேஷமான ஆவிக்குரிய பக்திச் செயல்களில் ஈடுபடுவது நல்லதே. சில நாட்களில் தேவனுடைய சமுகத்தை நாம் அதிகமாகத் தேடுவது நல்லதே. ஆனால், அவற்றால் ஏற்படுகின்ற ஆவிக்குரிய தாக்கங்கள் நம்மைத் தொடர்ந்து வரவேண்டும். லெந்துகாலத்தில் நாம் நம்மிடம் ஏற்படுத்தும் நல்ல மாற்றங்கள் அந்தக் காலகட்டத்திற்குப் பின்னரும் தொடராவிட்டால் அதனால் பயனில்லை. சிகிட்சை பெறும் நோயாளி ஆஸ்பத்திரியில் மட்டும் ஆரோக்கியமாக இருந்தால் போதாது, வீட்டிற்கு வந்த பின்னரும் அந்த ஆரோக்கியத்தை அனுபவிக்க வேண்டும். ஆம், எல்லாக் காலங்களிலும் நாம் எப்படியிருக்க வேண்டும் என்று தேவன் விரும்புகின்றாரோ அப்படி நாம் இருக்கின்றோமா? என்பதை அவர் கவனிக்கின்றார்.

சிந்தனைக்கு...

இறைவனுக்காக என்ன செய்துகொண்டிருக்கிறாய் என்பதை மட்டும் அல்ல, அவர் உனக்குள் என்ன செய்கிறார் என்பதையும் கவனி.

ஏப்ரல் 7
நல்லதைப் பாராட்டுகிறோமா !

தீத்து 1 : 7 – 16

அசுத்தமுள்ளவர்களுக்கு ஒன்றும் சுத்தமாயிராது...
தீத்து 1 : 15

போலிக் கிறிஸ்தவர்கள் எவ்வளவு பேர் என்று கணக்கெடுக்க சிலர் விரும்பு கின்றனர். ஆனால் எங்காவது ஒரு உண்மையான கிறிஸ்தவன் இருந்தால் அவனை கண்டு கொள்வதில்லை. ஒருவேளை காண நேர்ந்தாலும் அவனிடம் போலித்தனம் எங்காவது இருகிறதா என்பதையே அவர்களின் கண்கள் தேடுகிறது. சிலர் எங்கேயும் ஒரு நல்ல தேவ ஊழியர் இல்லை என்ற முடிவிலே சற்றும் மாற்றம் ஏற்படக்கூடாது என்ற எண்ணத்தில் உறுதியாக இருக்கின்றார்கள். எங்காவது ஒரு நல்ல ஊழியர் இருந்தால் அவரை நல்லவர் என்று ஏற்றுக்கொள்ள விரும்புவதில்லை.

நல்லவர்களை அடையாளங்காண நமக்கு நல்ல பண்பட்ட இருதயம் வேண்டும். தீயவர்களைச் சுட்டிக்காட்ட கூர்ந்து நோக்கும் மூளை இருந்தால் போதும். தீயவர் களைச் சுட்டிக்காட்டாமல் போவது ஒரு தீமையே. அதே வேளையில் நல்லவர்களை அங்கீகரிக் காமல் போவது அதைவிடப் பெரிய தீமை. தீயவர்கள் விமர்ச்சிக்கப்படும் அளவிற்கு நல்லவர்கள் பாராட்டப்படுவதில்லை. தீயவர்களின் தீய பண்புகள் உற்று நோக்கப்படும் அளவிற்கு நல்லவர்களின் நல்ல பண்புகள் கவனிக்கப்படு வதில்லை. எனவே, நல்லவர்கள் மேலும் மேலும் நல்லவர்களாக வாழ்வதற்குத் தேவையான ஊக்குவிசை கிடைக்கவில்லை.

மற்றவர்களின் முரண்பாடான ஜீவியம் நம்மைக் கோபப்படுத்துகின்ற அள விற்கு, மற்றவர்களின் நல்ல ஜீவியம் நமக்குள் சந்தோஷத்தைத் தராமல் போவதேன்? மற்றவர்களின் தவறான குணங்கள் அவர்களைப் பிசாசுகளாக பார்க்க நம்மைத் தூண்டுகின்றதே. ஆனால், மற்றவர்களின் நல்ல குணங்கள் அவர்களை தேவ னுடைய பிள்ளைகளாகப் பார்க்கும்படி ஏன் நம்மைத் தூண்டவில்லை?

பரிசேயர்களின் கண்கள் எங்கே குற்றம் இருக்கிறது, எங்கே குறை இருக்கிறது என்று தேடியது. ஆனால் எங்கே, யாரிடம் நல்லது இருக்கிறது என்று தேடுகிற ஆர்வம் அவர்களுக்கில்லை. ஏனென்றால், அவர்களிடம் நல்ல ஒரு வாழ்வைக் குறித்த ஓர் தரிசனமோ, நல்லதைக் கண்டு மகிழும் இருதயமோ இல்லை. அவர்களிடம் பக்தியான செயல்கள் பல இருந்தும் பரிசுத்தமான ஓர் இருதயம் இல்லை. அவர்கள் தேவனையும் அறியவில்லை. தேவனோடு வாழ்வதையும் தெரிந்து கொள்ளவில்லை. எனவே அவர்களிடம் அன்பு நிறைந்த ஒரு ஆவிக்குரிய ஜீவியம் இல்லை. ஆம், தீமைகளைக் கண்டு கொள்ளாமல் கண்களை மூடக்கூடாது. ஆனால், நல்லவை களை அடையாளங்கண்டு அதனால் மகிழவும் வேண்டும். உண்மையான ஆவிக்குரிய அனுபவத்திற்கு அது முக்கியமானதோர் அடையாளம்.

சிந்தனைக்கு...

உன்னிடம் காணாத உண்மையை பிறரிடம் காண விரும்பாதே
பிறரிடம் கண்ட உண்மையை உன்னிடம் காட்டாமல் போகாதே.

ஏப்ரல் 8
பேதுருவின் இதயம்

மத்தேயு 26:57-75

அந்த மனுஷனை அறியேன் என்று ஆணையிட்டு மறுதலித்தான்...
மத்தேயு 26:72

இயேசு கிறிஸ்துவை பேதுரு மறுதலித்த நிகழ்வு மிக அதிகமாகப் பேசப்படும் ஒன்றாகும். சில தேவ செய்தியாளர்கள் இந்த மறுதலிப்பு நிகழ்விற்கு அளவுக்கு அதிகமான முக்கியத்துவத்தைக் கொடுத்து விடுவதுண்டு. ஆனால், மறுதலிப்பு நிகழ்வு இயேசு கிறிஸ்துவினால் மிகப்பெரிய பாவமாக எண்ணப்பட்டு விமர் சிக்கப்படவில்லை மறுதலித்த செயலுக்காக இயேசு பேதுருவைக் கண்டிக்கவோ கடிந்து கொள்ளவோ செய்யாமல், அவனுக்காக பரிதவித்து அவனை ஏற்றுக் கொள்ளவே செய்தார். ஏனென்றால், மனிதன் செயல்களின் வடிவங்களைப் பார்க்கின்றான். தேவனோ மனதின் உண்மையான உணர்வுகளைப் பார்க்கின்றார். பேதுரு மறுதலித்த ஒவ்வொரு வேளையும் ஒருபுறம் அது வருந்தத்தக்க விஷய மாகத் தோன்றினாலும், இந்த மறுதலிப்பின் மறுபக்கத்தில் பேதுருவுக்கு இயேசுவின் மேலிருந்த மிகப்பெரிய பற்றையும், பாசத்தையும் பார்க்க முடிகிறது.

எல்லாச் சீடர்களையும் போல பேதுருவும் எங்காவது ஓடிப்போய் பிரச்சினையில் லாமல் தப்பியிருக்கலாம். அவன் திரும்பத் திரும்ப மறுதலிக்க வேண்டிய கட்டாயம் ஏன் ஏற்பட்டது? அந்தப் பரபரப்பான சூழ்நிலையை விட்டு தன்னைக் காப்பாற்றிக் கொள்ள ஓடிப் போகாததால்தானே. அவனுக்கு உயிர் தப்புவது முக்கிய நோக்க மாயிருக்க வில்லை. இயேசுவுக்கு என்ன நிகழப் போகிறது என்பதை அறிந்து கொள்ள அவனுக்கிருந்த அதிகப்படியான ஆர்வம் அவனை அங்கேயே சுற்றிச் சுற்றி வரச் செய்தது.

இயேசுவை அறியேன், அறியேன் என்று வாயினால் மேற்பூச்சாக சொல் லியாவது அவன் அங்கேயே இருக்க விரும்பினான். தன்னுடைய ஆண்டவரின் மேல் அவன் வைத்த அன்பு அவனை அவர் இருக்கும் இடம் நோக்கியே இழுத்துக் கொண்டிருந்தது. தன்னை இயேசுவோடு சம்பந்தமில்லாத ஒருவரைப் போலக் காண்பித்தாவது, இயேசுவின் துன்ப வேளையில் அங்கே இருப்பதற்கு அவன் வழி தேடினான் என்று சொல்லலாம். எனவேதான் உயிர்த்தெழுந்து வந்த இயேசு அவனுடைய மறுதலிப்புச் செயலைக்குறித்து எதுவும் பேசாமல், அவனுக்குத் தரிசனம் கொடுத்து அவனைச் சபையின் முக்கியத் தூணாக நிறுத்தினார்.

சில நேரங்களில் நாம் மற்றவர்களின் சில செயல்களின் தவறான வடிவங் களைப் பார்த்து, அவர்களை அன்பற்றவர்கள் என்றோ, தவறானவர்கள் என்றோ முடிவு செய்து விடுகிறோம். ஆனால், சில வேளைகளில் ஒருவரிடம் நாம் காண நேரிடும் செயல்கள் அவர்களின் உண்மையான இதய நிலையைப் பிரதிபலிப் பதில்லை. அவர்களின் செயல்கள் அவர்களை அன்பற்றவர்கள் போல நம்பச் செய்யும் போது, அவர்கள் அதிகமான அன்புடையவர்களாக இருக்க முடியும்.

சிந்தனைக்கு...

இறைவன் உன்னைப்பற்றி என்ன நினைப்பார் என்பதைச் சிந்தித்து செயல்படு. மனிதர்கள் என்ன நினைப்பார்கள் என்ற கவலைமறைந்துவிடும்.

ஏப்ரல் 9

மனமாற்றம் தராத துக்கம்

யோவேல் 2:12-32

உங்கள் வஸ்திரங்களையல்ல, உங்கள் இருதயங்களைக் கிழித்து.
யோவேல் 2:13

துக்க வெள்ளிக்கு முந்தின நாள் வியாகுல வியாழன் என்று அழைக்கப்படுகிறது. அந்த வியாகுல வியாழன் ஆராதனையில் விசேஷ தேவசெய்தியாளர் ஒருவர் கெத்செமெனே தோட்டத்தில் இயேசு அடைந்த மனத்துயர்களின் ஆழங்களை மிகவும் உணர்ச்சிகரமாகப் பேசினார். அவருடைய வார்த்தைகள் கல்லான உள்ளத்தைக் கூடக் கரைத்துவிடும் போல இருந்தது. அதைக் கேட்டுக் கொண்டிருந்த ஒருவர் தன்னை அடக்கிக் கொள்ள இயலாமல் கண்ணீர்விட்டு அழுதார். அந்த கண்ணீர் விடுதலைக் கண்ட சிலர் அவர் மனந்திரும்ப முன்வந்து விட்டதாக எண்ணிச் சந்தோஷப்பட்டனர். ஆனால், அவர் சோகமான செய்தியைக் கேட்டு மனவியாகுலம் அடைந்தாரேயன்றி மனந்திரும்புதலுக்கோ, பாவத்தைவிட்டு விலகுவதற்கோ முன் வரவில்லை.

லெந்துகாலம் என்று சொல்லப் படும் 40 நாட்களில் பல கிறிஸ்தவர்களின் வாழ்க்கை சுய வெறுப்பைப் பின்பற்றுவது போல தோன்றுகிறது. ஆனாலும், லெந்துகாலம் கடந்த பிறகு சுயத்தை மேற்கொள்ள விரும் பாத ஒரு வாழ்க்கைப் பாதையிலேயே தொடர்கின்றனர். வியாகுல வியாழன் அன்றும் துக்க வெள்ளி அன்றும் நடைபெறுகின்ற கூட்டங்களில் அநேகருடைய முகங்களில் துக்க சாயல் தெரிவது உண்மை. ஆயினும், இவைகள் யாவும் ஒரு தற்காலிக பக்தியுடைய ஒரு துக்கமாக இருக்கிறதேயன்றி, பாவத்திற்காகவோ, தங்களின் தவறுகளுக்காகவோ மனம் வருந்துவதை வெளிப்படுத்தும் துக்கங்களாக இல்லை.

கெத்செமெனேயில் இயேசு அனுபவித்த மனத்துயர்களையும், சிலுவையில் அவர் அடைந்த கஸ்திகளையும் எண்ணி, எண்ணி, இயேசுவுக்காக துக்கம் கொண்டாட கர்த்தர் நம்மை அழைக்கவில்லை. இவைகள் யாவும் நம்முடைய பாவங்களின் விளைவாகவும், நம்முடைய தேவனற்ற வாழ்க்கையின் விளைவாகவுமே இயேசு அனுபவிக்க நேர்ந்தது.

இப்போது நாம் நமக்காகவே துக்கப்பட வேண்டும். நம்முடைய பாவங்களுக்காகவே வியாகுலப்படவேண்டும். இயேசு நமக்காக இரத்தம் சிந்திப் பாவமன்னிப்பையும், பாவ விடுதலையை உருவாக்கியும் இன்னும் அவைகளை அடைவதற்கு ஏதுவாக மனந் திரும்பாத நிலையில் தொடர்வதை எண்ணியே அழவேண்டும். பழைய ஏற்பாட்டு கால யூதர்கள் ஒரு மத பக்திக்காக தேவ இரக்கம் தேடி சாம்பலை அள்ளித் தலையில் போட்டுக்கொள்வார்கள். இரட்டுடைகளை அணிந்து கொள்வார்கள். சட்டை களைக் கிழித்துக் கொள்வார்கள். ஆனால், தேவன் அவைகள் மேல் வெறுப்படைந்து சட்டைகளை அல்ல. பாவத்தைவிட்டு விலகாத கடினமான அவர்களின் இருதயத்தைக் கிழிக்கச் சொன்னார்.

சிந்தனைக்கு...

தேவன் வகுத்தப் பாதையில் நடவாதவனின் இறைவழிபாடுகள் தேவனை விசனப்படுத்துகின்றன.

ஏப்ரல் 10

சிலுவை

யோவான் 16:15-33

உங்கள் துக்கம் சந்தோஷமாக மாறும்.
யோவான் 16:20

இயேசு பூமியில் மனுஷ குமாரனாக உலாவிய நாட்களில் சிலுவை சுமத்தல் என்பது மிக மிகக் கேவலமான ஒரு தண்டனையின் ஒரு பகுதி. சிலுவைத் தண்டனை ஏற்றவனை தங்களுடைய உறவினன் என்று சொல்வதற்கே சம்பந்தப்பட்டவர்கள் வெட்கப்படுவார்கள். சுமார் 800 மைல் தூரம் பிரயாணம் செய்து எருசலேமில் பஸ்கா பண்டிகையை ஆசரிக்க வந்தவன் சிரேனா ஊரானாகிய சீமோன். ஆனால், அவன் இயேசுவின் பாரச் சிலுவையைத் தேவையில்லாமல் சுமக்க நேர்ந்தது. பண்டிகை கொண்டாட வந்த இடத்தில், பலவந்தமாக சிலுவை சுமக்க நேர்ந்தது. எத்தனை பரிதாபம். எவ்வளவு வெட்கப்பட்டிருப்பான். எவ்வளவு மனவேதனை அடைந்திருப்பான். ஒருவேளை அவன் யாரோ ஓர் குற்றவாளியின் சிலுவையை சும ந்து நானும் ஆயிரக்கணக்கானோரின் பார்வையில் குற்றவாளியைப் போலத் தோன்ற நேர்ந்ததே என்று அவன் சங்கடப்பட்டிருக்கக்கூடும். ஆனால் அவை யாவும் இயேசு உயிரோடு எழுந்து வரும் வரைதான்.

அவர் உயிரோடெழுந்தார் என்று சீடர்கள் எங்கும் பிரசித்தம் செய்தபோது, சிரேனே ஊரானாகிய சீமோன் தன்னை மிகவும் பாக்கியவானாகப் பார்த்திருப்பான். அன்று அவமானம் என எண்ணியது எவ்வளவு பெரிய ஆசீர்வாதம் என பரவசப்பட்டிருப்பான். உயிரோடெழுந்து வந்து உலகத்தை அசைக்கப் போகிறவரின் சிலுவையைச் சுமந்து சென்ற அந்த சம்பவம், அவனுடைய எதிர்காலத்தை அதிக மகிமையுடையதாக்கியிருக்கும்.

நாமும் கூட, இயேசுவின் பாதையில் செய்யாத தவறுகளுக்காக குற்றஞ் சாட்டப்படலாம். நியாயமில்லாமல் நிந்தைகளும், அவமானங்களும் நஷ்டங்களும் நமக்கு நேரிடலாம். நாம் தேவையில்லாமல் சிலுவை சுமக்கக் கட்டாயப்படுத்தப் படலாம். பலருடைய பார்வையில் ஒரு குற்றவாளியைப் போலத் தோன்றவும் நேரிடலாம். ஆனால் கலங்க வேண்டாம். இந்த சிலுவை இயேசுவின் பாதையில் வந்ததால் நாம் சுமக்க நேர்ந்த சிலுவை. இது இயேசுவுக்கு அருகாமையில் வந்ததின் விளைவாக நேரிட்டது.

இன்று இது நம்மை விசனப் படுத்தலாம். ஆனால், இதே சிலுவையின் நினைவு ஒரு நாள் நம்மை மிகுதியாகச் சந்தோஷப்படுத்தப் போகிறது. யோசேப்பு அவ்விதச் சிலுவையைசுமந்தான். அதுதான் மிகுந்த மகிழ்ச்சிக்கும் ஒரு நாள் காரணமாக மாறியது. கர்த்தருடைய வழியில் நடக்கையில் நமக்கு நேர்ந்த எந்த நிந்தையும், அவமானமும், தோல்வியும், ஏமாற்றமும், பழிச்சொல்லும் ஒரு நாள் சந்தோஷத்திற்கு ஏதுவாக மாறாமல் போகவே போகாது.

சிந்தனைக்கு...

துன்பங்களின் துணையுடன்தான் இன்பங்கள் வாழ்க்கையில் பெருகுகின்றன.

ஏப்ரல் 11

சிலுவை புனிதமா?

எபிரெயர் 13 : 8 -21

நாம் அவருடைய நிந்தையைச் சுமந்து...
எபிரெயர் 3:13

கிறிஸ்தவர்களாகிய நாம் ஒரு பக்தியுணர்வினால் சிலுவையைப் புனிதச் சின்னம் என்றும், தெய்வீக அடையாளம் என்றும் கூறுகின்றோம். ஆனால், உண்மை யின்படி பார்த்தால் சிலுவை ஒரு அவமானச் சின்னம். அது ஒரு கொடுமை யான வேதனையின் சின்னம். இயேசுவின் கால யூதர்கள் அதனை சாபத்தின் அடையாளமாகப் பார்த்தார்கள் (கலா-3:13). ஏனென்றால் மரத்தில் தொங்கி மரணம் அடைவது மிகப்பெரிய சாபமானது என்பதை மோசேயின் நியாயப் பிரமாணங்களில் பார்க்கின்றோம் (உபா. 21:23). ரோமர்களும், கிரேக்கர்களும், அதனை ஒரு அவ மானத்தின் அடையாளமாகவும், வேதனையின் அடையாளமாகவும் பார்த்தார்கள்.

அப்படிப்பட்ட சிலுவை அடையாளம் புனிதத்தின் அடையாளம் அல்ல. அது புனிதமானதாயிருந்தால், இயேசு சிலுவை சுமக்க நேர்ந்ததை அவமான மாக எண்ணாமல், புனிதமான விஷயமாகவே எண்ண நேரிட்டிருக்கும். சிலுவை என்பது இயேசுவிற்கு முன்பும் பின்பும் அவமானம், சாபம், வேதனை, ஆகியவற்றை நினைவுப்படுத்துகின்ற சின்னமே. ஆனால் புனிதத்தை உருவாக்கவும், புனிதர்களை உருவாக்கவும், இயேசு அவமானத்தையும், சாபத்தையும், வேதனையையும் ஏற்றுக் கொண்டார். புனித அனுபவத்தை நாம் அடைவதற்காக, இயேசு அவமானம்,சாபம், வேதனை ஆகிய கசப்பான அனுபவங்களை அனுபவிக்க நேர்ந்தது.

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து நம்முடைய பாவங்களுக்காக எப்படிப்பட்ட அவமானங்களையும், வேதனையையும் சகிக்க நேர்ந்தது என்பதை நினைவு படுத்த சிலுவை அடையாளம் நல்லதே. பாவம் என்பது அவமானம், சாபம், வேதனை இவற்றை விளைவுகளாகக் கொண்டுவரும் என்ற விழிப்புணர்வைப் பெற சிலுவை அடையாளம் நல்லதே. நம்முடைய பாவங்களுக்காக இயேசு சிலுவையின் மூலம் மிகப்பெரியதோர் விலையைக் கொடுத்திருக்கிறார் என்ற உண்மையை நாம் உணர்ந்து வாழ்ந்திட சிலுவையின் அடையாளம் நல்லதே.

ஆனால், சிலுவையைப் புனிதம் என்று எண்ணி அதனை நம்முடன் வைத் திருப்பதாலோ, நெற்றியிலே சிலுவையை வரைவதாலோ, ஆபரணங்களில் அந்த அடையாளங்களைப் பொறிப் பதாலோ, சிலுவை அடையாளங்களைத் தொடு வதாலோ, முத்தமிடுவதாலோ எந்த விசேஷ நன்மையும் இல்லை. சிலுவை யில் இயேசு அறையப்பட்டதின் பின்னணிகளை உணர்ந்து, நாம் மனந்திரும்பி வாழ்வதற்குப்பதிலாக, சிலுவை அடையாளங்களை அதிகமாக மதிப்பது ஒரு விதமான விக்கிரக ஆராதனையே.

சிந்தனைக்கு...

இயேசுவின் வாழ்க்கையை வாழ்ந்து காட்டுவதைத் தவிர அவரைக் காண்பிக்க மேன்மையான வழி இல்லை.

ஏப்ரல் 12
நீங்களும் தரிசிக்கலாம்

அப்போஸ்தலர் 1 : 1 -14

அவர்களுக்குத் தம்மை உயிரோடிருக்கிறவராகக் காண்பித்தார்...
அப்போஸ்தலர் 1 : 3

இயேசு உயிரோடெழுந்தார் என்ற செய்தி சீடர்கள் வாயிலாகக் காட்டுத் தீ போல பரவிய வேளையில், அநேகர் அவர் மெய்யாகவே உயிரோடெழுந்திருப்பார் என்று நம்பியிருக்கக் கூடும். ஆனாலும் அவர்கள் யாவரும் அவரை உயிரோடெழுந்தவராகக் காணவில்லை. அவரைக் கண்டவர்கள் இயேசுவின் சீடர்கள் மட்டுமே. மிகவும் நேசிக்கப்பட்ட ஒருவர் மரித்துப் போனபின், மறுபடியும் உயிரோடெழுந்து வந்தால் அவரைக் காண்பவர்கள் எப்படி ஆனந்தம் அடைவார்கள் என்பதைக் கற்பனை செய்து பாருங்கள். அவ்விதம் கற்பனை செய்து பார்க்க முடியாத அளவிற்கு, உயிரோடெழுந்து வந்த இயேசுவைப் பார்த்து, ஆனந்தக் கூத்தாடினவர்கள் இயேசுவின் சீடர்கள் மட்டுமே

ஏனென்றால் இ இயேசு தம்மை உயிரோடெழுந்தவராகக் காண்பித்தது தம்மை விரும்பியவர்களுக்கும், தம்மை நம்பியவர்களுக்கும் அல்ல. தம்மைப் பின்பற்றி வாழ்ந்தவர்களுக்கே அவர் தம்மை வெளிப்படுத்தினார். அவர்கள்தான் மகிழ்ந்தார்கள். கிறிஸ்தவ வாழ்க்கையின் முக்கியஅனுபவம் எது தெரியுமா? ஒருவரை உண்மை யான கிறிஸ்தவராக்குவது எது தெரியுமா? ஒருவருடைய வாழ்க்கையை மாற்றுவது எது தெரியுமா! இயேசுவை ஏற்றுக்கொண்டதல்ல. இயேசுவை விசுவாசித்தது அல்ல. இயேசுவை ஆராதித்தது அல்ல. இயேசுவின் போதனைகளைக் கடைப்பிடித்தது அல்ல. உயிரோடெழுந்த இயேசுவை அவருக்குள் தரிசிப்பதும், காண்பதுமே முக்கிய அனுபவமும், அவரை மாற்றும் அனுபவமுமாக இருக்கிறது.

இதனை எழுதுகிற நான் இயேசுவை ஒரு கனவிலோ, தரிசனத்திலோ ஒரு போதும் கண்டதில்லை. ஆனால் இந்த உலகத்தில் வேறெதையும் விட, எனக்குள் இயேசுவை நான் அதிக உறுதியுடன் உணர்ந்திருக்கிறேன். அது ஒரு நடந்து முடிந்த சம்பவம் அல்ல. அது ஒரு தொடர் நிகழ்வு. என் ஆத்துமாவில், என் ஆவியில், என் உணர்வில், என் உள்ளத்தில் நான் இயேசுவை அறிந்து, உணர்ந்து, அனுபவித்து நிச்சயித்ததின் விளைவுதான் என் ஊழியம். ஏனென்றால் இயேசு தம்மை எனக்குள் நான் தரிசிக்கவும், அறியவும் செய்தார்.

இந்த இயேசுவைக் காணும் அனுபவம் இல்லாமல் நாம் உயிருள்ள கிறிஸ்தவ அனுபவமுடையவர்களாக வாழ முடியாது. உயிர்தெழுதலின் பண்டிகையை இன்று கொண்டாடுகிறோம். இந்தக் கொண்டாட்டம் ஒரு சரித்திர நிகழ்வைக் குறித்த அறிவினால் மட்டும் அல்ல, நமக்குள் அவரை உயிரோடெழுந்தவராகக் காணும் அனுபவத்தோடும் கொண்டாடப்பட வேண்டும். அது எளியது. நீங்கள் அவரைப் பின்பற்றி வாழ உங்களை அர்ப்பணிக்கும் போது, உங்களுக்குள் அவரை நீங்கள் காண்பீர்கள்.

சிந்தனைக்கு...

தனக்குள் இயேசுவைக் காணாதவனின் வாழ்வில்
பிறர் இயேசுவின் மகிமையைக் காண முடியாது.

ஏப்ரல் 13
காணிக்கை

மல்கியா 1:1-14

உங்கள் கைகளிலுள்ள காணிக்கை எனக்கு உகந்ததல்ல...
மல்கியா 1 : 10

காணிக்கை அளித்து கர்த்தருடைய ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ளுங்கள் என்று சபைகளும், ஊழிய ஸ்தாபனங்களும் விசுவாசிகளை உற்சாகப்படுத்துகின்றன. இந்நாட்களில் காணிக்கை வழங்கல்தான் கர்த்தருடைய நன்மைகளைப் பெறுவதற்கான பிரதான வழியாகக் காண்பிக்கப்படுகிறது. எனவே, அநேகர் தாங்கள் எவ்விதம் வாழ்ந்தாலும், காணிக்கைகள் மூலமாக கர்த்தருடைய தயவினைத் தாராளமாகப் பெற முடியும் என எண்ணுகின்றனர். ஆனால், கர்த்தருக்குக் காணிக்கை வழங்கவும் ஒரு தகுதி வேண்டும் என்பதை வேதம் தெளிவுபடுத்துகின்றது. யார், எவர் என்று பார்க்காமலே கர்த்தர் காணிக்கையை ஏற்றுக்கொண்டு ஆசீர்வதிப்பார் என்று வேதம் சொல்லவில்லை. அப்படியிருந்தால் தேவன் காயீனின் காணிக்கையை ஏற்றுக்கொண்டு அவனை ஆசீர்வதித்திருப்பார். ஆனால், தேவனோ அவனுடைய காணிக்கையைப் புறக்கணித்தார். ஏனென்றால், அவன் தேவனுக்குப் பிரியமற்ற சுபாவமுடையனாயிருந்தான்.

ஏசாயா தீர்க்கதரிசியின் காலத்தில் இனி வீண் காணிக்கை களைக் கொண்டு வரவேண்டாம் என்று தேவன் சொன்னார். (ஏசாயா - 1:13) மல்கியா தீர்க்கதரிசியின் காலத்தில், உங்கள் கைகளில் உள்ள காணிக்கைகள் எனக்கு உகந்ததல்ல என்றும், இனி காணிக்கைகளை மதிக்கமாட்டேன், என்றும், அதை உங்கள் கைகளில் பிரியமாய் ஏற்றுக்கொள்ளமாட்டேன் என்றும் தேவன் கூறினார். (மல்கியா - 1:10; 2:13)

பலிபீடத்தில் உன் காணிக்கையை செலுத்தும் முன்பு, முதலாவது உன் சகோதரனிடத்தில் ஒப்புரவாகு என்று இயேசு கூறினார். (மத்-5:24) அனனியா-சப்பீராள் தம்பதியர் மிகப் பெரிய ஒரு தொகையை காணிக்கையாகச் செலுத்திய போதிலும், அந்த காணிக்கையின் அளவுக்கு முக்கியத்துவம் தராமல், அவர்களிடம் வெளிப்பட்ட ஒரு மாய்மாலத்திற்காக தேவன் அவர்களைத் தண்டித்தார். நாம் நீதியாய் காணிக்கை செலுத்தவேண்டும் என்றும், நம்முடைய காணிக்கை சுத்தமானதாக இருக்கவேண்டும் என்றும் வேதம் சொல்கிறது. (மல்-3:3, 1:11)

நாம் விரும்புகின்ற விதமாக வாழ்ந்துகொண்டு, கொடுக்கும் காணிக்கையின் மேல் தேவன் பிரியமாயிருக்க முடியாது. ஒருவேளை காணிக்கை என்ற ஒன்றை மட்டும் பார்த்து சபைகளும், ஊழியர்களும் நம்மைப் பாராட்டி மெச்சிக்கொள்ளலாம். ஆனால், தேவன் நம்மை மெச்ச வேண்டுமானால், நம்முடைய வாழ்க்கை அவருக்கேற்ற பரிசுத்தமும், தெய்வீக ஒழுங்குகளும் உடையவையாக இருக்க வேண்டும். தேவன் நாம் எவ்வளவு கொடுக்கின்றோம் என்பதைவிட, எப்படி வாழ்கின்றோம் என்பதற்கே முக்கியத்துவம் தருகிறார்.

சிந்தனைக்கு...

இறைவனை உன் வாயின் வார்த்தைகளால் அல்ல,
நீ வாழும் வாழ்க்கையினால் வெளிப்படுத்து.

ஏப்ரல் 14

எவ்வளவு கற்றாலும்

11 தீமோத்தேயு 3:1-17

எப்போதும் கற்றாலும்... உணராதவர்களாய்
11 தீமோத்தேயு 3:7

அமெரிக்காவில் உள்ள மிகப்பெரிய செல்வந்தர் ஒருவர் மரிக்கும் முன்பு உயிர் எழுதினார். உயிலில் தன் பேரன் எவ்வளவு காலம் கல்வி கற்கிறானோ அதுவரையிலும் ஒரு பெரிய தொகையை அவனுக்குக் கொடுத்துக்கொண்டிருக்க எழுதினார். பேரன் படிக்கத் துவங்கினான். ஆயுள் முழுவதும் சர்வகலாசாலைகளில் பலவிதப் படிப்புகளைப் படித்து பல பட்டங்களைப் பெற்றான். ஆனால், அந்தப் படிப்பைப் பயன்படுத்தி ஒரு நாள்கூட அவன் எந்த வேலையும் செய்யவில்லை. தாத்தாவின் உயிலின்படி பெருந்தொகையைப் பெற்றுக் கொண்டிருப்பதற்காக அவன் படித்துக் கொண்டேயிருந்தான்.

பல கிறிஸ்தவர்கள் இப்படியே இருக்கிறார்கள், அவர்கள் பிரசங்கங்கள் கேட்பதற்குக் குறைவில்லை. புத்தகங்கள் படிப்பதில் குறைவில்லை. நற்செய்திக்கூட்டங்கள், செமினார்கள், முகாம்கள் ஆகியவற்றிற்குச் சளைக்காமல் போய்க் கொண்டேயிருப்பார்கள். ஆனால், கேட்ட சத்தியத்தின்படி ஒருபோதும் வாழ்வதேயில்லை. வெறுமனே கேட்பதை அவர்கள் ஆவிக்குரிய அனுபவமாக நினைக் கிறார்கள். இது சரியான ஒரு அனுபவம் அல்ல. கேட்பதை, வாழ்க்கையில் அனுபவமாக்க முன்வரும்போதுதான் உண்மையான ஆசீர்வாதங்கள் வரத்து வங்குகின்றன.

பெரும்பாலான ஊழியர்களும் அப்படியே. காலம் முழுவதும் பிறருடைய உதவிகளில் படிக்கிறார்கள். பட்டங்களைக் குவிக்கிறார்கள். அவைகளையே தெய்வீக அனுபவமாக நினைக்கிறார்கள். ஆனால், சொந்த வாழ்க்கையில் அவர்களுடைய அனுபவங்கள் முரண்பாடாகவே இருக்கின்றன. தேவனைக் குறித்த அறிவு நிலைகளிலும், வேதாகமக் காரியங்களைக் குறித்த அறிவு நிலைகளிலும் நாம் அறிவாளிகளாகத் திகழ்வதற்காக வேதம் நமக்குத் தரப்படவில்லை. தெய்வீக சம்பந்தமான ஒவ்வொரு அறிவும் தேவனுக்கேற்ற நீதியான மாற்றங்களை நம்மிடத்தில் ஏற்படுத்த வேண்டும்.

நிக்கொதேமுவுக்கு வேத அறிவு மிகுதியாயிருந்தது. அவன் அநேகருக்குப் போதிக்கிற மனிதனாக விளங்கினான். ஆனாலும், அவனைப் பார்த்து ஆண்டவராகிய இயேசு "ஒருவன் மறுபடியும் பிறக்காவிட்டால் தேவனுடைய இராஜ்யத்தைக் காண மாட்டான்" என்றார். (யோவான்-3:3) ஆம், தேவ அறிவும், போதகத் திறனமும் நமக்கு தேவ ஆசீர்வாதங்களைப் பெறுவதற்கோ, தேவனுடைய இராஜ்யத்திற்குள் பிரவேசிக்கும் தகுதியடைவதற்கோ உதவி புரியாது. அவை நம்முடைய வாழ்க்கையில் செயல்படும் அனுபவங்களாக மாறவேண்டும். அந்த அனுபவங்கள்தான் தேவா சீர்வாதங்களுக்கு நம்மை தகுதிப்படுத்தும்.

சிந்தனைக்கு...

எவ்வளவு அறிந்து கொண்டோம் என்பதல்ல. எவ்வளவு அனுபவத்தில் கண்டோம் என்பதே முக்கியம்.

ஏப்ரல் 15
நினைவுகளில் ஒழுங்கு

பிலிப்பியர் 4:1-9

அவைகளையே சிந்தித்துக்கொண்டிருங்கள்.
பிலிப்பியர் 4:8

நம்முடைய நினைவுகள் எப்படியோ அப்படியே நம்முடைய இருதயத்தில் அமைதியின் நிலைமையும் இருக்கும். நினைவுகள் ஒழுங்குபடுத்தப்படுவதின் விளைவாகவே அமைதி தக்கவைக்கப்படுகின்றது. வெறுப்பான நினைவுகள், கசப்பான நினைவுகள், கோபமான நினைவுகள், வைராக்கிய நினைவுகள், பொறாமையான நினைவுகள், துக்கமான நினைவுகள் ஆகியவைகள் நமக்குள் அமைதி தங்குவதற்கான வாய்ப்பை அழிப்பவைகள். இதுபோன்ற நினைவுகள் கட்டுப்படுத்தப்படாத நிலை யில்,எத்தனைதான் இறைவேண்டல்கள் செய்தாலும், எத்தனைதான் அமைதி தேடல்களில் ஈடுபட்டாலும் பயன் ஏற்படாது.

வெறுப்பு, கசப்பு, கோபம், வைராக்கியம், சோகம் ஆகியவை நமக்குள் நினை வலைகளாகப் பரவிக் கொண்டிருக்கும்போது அமைதியின் காற்று அங்கே வீச முடியாது. இது போன்ற நினைவுகள் தோன்றுவதற்கு பல சரியான காரணங்கள் இருக்கலாம். நமக்குள் வெறுப்பு, கசப்பு, கோபம் தோன்றும் விதமாக பிறர் செயல் பட்டிருக்கலாம். ஆயினும், காரணங்கள் இருப்பதால், அமைதிக்குத் தடை ஏற்படுத்தும் நினைவுகளை தங்கவிடுவது நலமானதல்ல. தேவன் நமக்கு அமைதியை அல்லது மன சமாதானத்தை தரவிரும்புகின்றார். ஆயினும், இதுபோன்ற நினைவுகளை மேற்கொள்ளும் ஆற்றலை நமக்களித்து அதன் வாயிலாகவே அமைதியைச் செயல்படுத்துவார்.

தேவ உறவு நமக்குள் தேவ ஆவியின் செயல்பாடுகளைக் கொண்டுவரு கின்றது. தேவ ஆவியினால் நாம் அன்பின் நினைவுகளையும், சாந்தத்தின் நினைவு களையும், தாழ்மையின் நினைவுகளையும், மன்னிப்பின் நினைவுகளையும், சத்திய நினைவுகளையும் பெறமுடியும். இதுபோன்ற உயர்ந்த நினைவுகளுக்கு நாம் அதிக முக்கியத்துவம் தருகின்றபோது, அமைதிக்கு எதிரான கோப உணர்வுகளும், வெறுப்புணர்வுகளும், வைராக்கிய உணர்வுகளும் பலமிழக்க ஆரம்பிக்கின்றன. அதனுடைய விளைவாக இறை அமைதி இருதயத்தை ஆக்கிரமிக்கும் நிலை ஏற்படுகிறது.

தேவனை நினைக்க வேண்டும். தேவனுடைய வழிகளை நினைக்க வேண்டும். தேவனுடைய வார்த்தைகளை நினைக்க வேண்டும். தேவனுடைய நியாயங்களை நினைக்க வேண்டும். நம்முடைய நினைவுகளில் அன்பு, தாழ்மை, உண்மை, பொறுமை ஆகிய தன்மைகள் இருக்க வேண்டியதை நாம் முக்கியமாக எண்ணுகின்றபோது, எதிர்மறையான நினைவுகளின் வேகம் குறையும். தேவன் பிரியப்படும் விதமான நினைவுகளுக்கு முக்கியத்துவம் தருகின்றபோது, தேவ அமைதி நமக்குள் நிலைத்திருக்கும்.

சிந்தனைக்கு...

தேவ சத்தத்தை இதயத்தில் கேட்டுப்பழகாதவர்களால் அவருடைய சித்தத்தைப் புரிந்து கொள்ளுதல் இயலாது.

ஏப்ரல் 16

சாதனையா? சமாதானமா?

ஏசாயா 55:1-13

திருப்தி செய்யாத பொருளுக்காக........
ஏசாயா 55:2

குறிப்பிட்ட ஒருவர் சிறுவயதிலிருந்தே வாழ்க்கையில் உயர்நிலைக்கு வந்து சாதனை படைக்க வேண்டும் என்ற குறிக்கோளுடன் செயல்பட்டார். எனவே, வாலிபநாட்களில் வாழ்க்கையில் பெரிய வெற்றிகளை அடைவது எப்படி? மிகுதியாகப் பணம் சம்பாதிப்பது எப்படி? சாதனையாளர் ஆவது எப்படி? என்பது போன்ற தலைப்புகள் உடைய புத்தகங்களையே தெரிந்துகொண்டு வாசித்தார். அவைகள் மூலம் பெற்ற கருத்துக்கள், ஆலோசனைகள் மூலம் ஒரு நாள் பெரிய நிலைமைக்கு வந்துவிட்டார். ஆஸ்தியும், அந்தஸ்தும், சாதனைகளும் பெருகிவிட்டன.

ஆனால், நாளடைவில் அவர் சமாதானமற்றவராகவும், சந்தோஷமின்றி சோர்வு மிக்கவராகவும், மன உளைச்சலால் பாதிக்கப்பட்டு வாழ்க்கையில் பிடிப் பற்ற வராகவும் மாறிவிட்டார். காரணம் என்ன? பணம் சம்பாதிப்பது எப்படி? சாதனை படைப்பது எப்படி? என்றுதான் அவருடைய மனம் அதிகமாகச் சிந்தித்த தேயன்றி, சமாதானமாக வாழ்வது எப்படி? சோதனைகளைச் சகிப்பது எப்படி? அர்த்தமுடைய வாழ்க்கை வாழ்வது எப்படி? சந்தோஷத்தைக் கண்டடைவது எப்படி? என்றெல்லாம் அவர் யோசிக்கவில்லை. அநேகர் அதிக பண வலிமைதான் தங்களை சந்தோஷமுடையவர்களாக மாற்றும் என்று எண்ணுகின்றனர்.

ஒரு மனிதன் மூளையை நன்கு உபயோகித்து தன்னுடைய ஆற்றல்களை சரியாகச் செயல்படுத்தினால், சாதனைகளைப் படைக்க முடியும். ஆயினும், நம்முடைய இருதயத்தைச் சரியாகப் பண்படுத்தி வைத்தால்தான் சமாதானத்தையும் சந்தோஷத்தையும் பெற முடியும். எனவேதான் மனிதன் தேவ உறவையும், தேவ னுடைய வழிகளையும் தேட வேண்டிய தேவை ஏற்படுகிறது. ஏனென்றால், தேவனை வாழ்க்கையில் மையமாகக் கொண்டு, தேவனுடைய வழிகளில் நடக்கும் போதுதான் வாழ்க்கையில் சமாதானமும் சந்தோஷமும் ஏற்படுகிறது. இதைக் குறித்து தான் வேதாகமம் பேசுகிறது.

நாம் எவ்வளவு பணம், பொருள் வைத்திருக்கின்றோம் என்பதைவிட, நம்முடைய இருதயத்தில் எவ்வளவு சந்தோஷத்தையும், சமாதானத்தையும், திருப்தியையும், நிறைவையும் வைத்திருக்கின்றோம் என்பவைகளே மிகவும் முக்கியமானவை. நாம் பலர் நடுவில் பொருளாதார நிலையிலும் அந்தஸ்து நிலையிலும் எவ்வளவு உயரமாகத் தோன்றுகின்றோம் என்பதைவிட, பண்பு நிலைகளில் எந்த அளவு உயர்வாக எண்ணப்படும் நிலையில் உள்ளோம் என்பதே கவனிக்கத்தக்கது. ஆம். சாதனையான ஒரு வாழ்க்கையைவிட சமாதானமான ஒரு வாழ்க்கையை விரும்புவோம்.

சிந்தனைக்கு...

பிறருடைய அமைதிக்காக ஏதாவது செய்து கொண்டிரு. உன்னுடைய அமைதியைத் தக்க வைக்க அது சிறந்த வழி

ஏப்ரல் 17
நட்சத்திரங்கள் தோன்றும்

ரோமர் 8:18-39

சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று.
ரோமர் 8:28

கர்த்தர் பாடுகளையும், துன்பங்களையும் ஒருவருடைய வாழ்க்கையில் அனுமதிக்கிறார் என்றால் அதற்கொரு மேலான நோக்கம் இருக்க வேண்டும். நெருக்கத்தின் இருள் ஒருவருடைய வாழ்க்கையைச் சூழ்வதை அவர் கண்டும், அகற்றாதிருந்தால் அந்த இருளின் நடுவில் எதையோ தோன்றப் பண்ணப்போகின்றார் என்பதே பொருள். இருளின் வேளையை நீ சந்திக்க நேர்ந்தால் பயப்படாதே. அங்கே நட்சத்திரங்களைக் காண்பாய் என்றான் ஒரு தேவ பக்தன்.

கர்த்தர் ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தில் என்னுடைய வாழ்க்கையை முற்றிலுமாக இருள் சூழ்ந்தது போன்ற ஒரு நிலமைக்குக் கொண்டு சென்றார். அந்த இருள் என் இதயத்தை அதிகமாக விசனப்படுத்தியது. ஆனால், அந்த துன்ப இருளின் நாட்களில்தான் கர்த்தரின் நியாயங்கள், வழிநடத்துதல்கள், கர்த்தரின் செயல்படும் விதங்கள், அவருடைய அன்பின் வெளிப்பாடுகள், ஆறுதல்கள், வாழ்க்கைப் பாடங்கள் ஆகிய நட்சத்திரங்களை என் கண்கள் கண்டு களிகூர்ந்தன. அவைகள் என் இதயத்தை அதிகமாகக் கவர்ந்ததால் இருளும் ஒரு ஆசீர்வாதத்தின் பாதைதான் என உணர்ந்தேன். தாவீதின் வாழ்க்கையில் துன்ப இருள் சூழாமலிருந்திருந்தால், இத்தனை சங்கீதங்கள் வெளிவந்திருக்குமா? உள்ளம் உடைந்துபோய் அவன் எழுதிய சங்கீதங்கள் காலாகாலமாக வாழ்க்கை இருளில் தத்தளிக்கின்ற எத்தனையோ பேருக்கு ஆறுதலின் நட்சத்திரங்களாக பிரகாசித்து வருகின்றனவே.

ஜாண்பன்யன் என்ற தேவ பக்தனின் வாழ்க்கையை இருள் சூழ்ந்தது. அவன் சிறையிலடைக்கப்பட்டான். ஆனால் அந்த இருளில் தேவன் நட்சத்திரங்கள் தோன்றச் செய்தார். சிறையிலிருந்தபோது எழுதப்பட்ட மோட்ச பிரயாணம் இன்றும் எத்தனையோ பேருக்கு ஒளிவிளக்காய் பிரகாசிக்கிறது.

சில நேரங்களில் தேவன் தம்முடைய மகிமையான காரியங்களின்மேல் நம்முடைய முழுக்கவனத்தையும் இழுத்துக்கொள்வதற்கு இருள்மிகுந்த சூழ் நிலைகளை பயன்படுத்திக்கொள்கின்றார்.

பத்மு என்னும் தீவில் தனிமையாக்கப்பட்டான் யோவான். அந்த துன்ப இருளில் நடசத்திரங்களைத் தோன்றச் செய்தார் தேவன். அதன் விளைவாக அக்கால சபையினரை எழுந்து பிரகாசிக்கத் தூண்டிய வெளிப்படுத்தின விசேஷம் பிறந்தது. அது இன்று வரையும் நமக்கு முன் பிரகாசிக்கிறதே. ஆம், உண்மையான தேவனுடைய பிள்ளைகளே! இருளையல்ல, அங்கே தோன்றப்போகும் நடசத்திரங்களைப் பாருங்கள்.

சிந்தனைக்கு...

இன்பங்கள் தொடர்கதையல்ல என்பதை மனிதன் புரிந்தால்
துன்பங்கள் அவன் வாழ்வில் சிறுகதையாகவேயிருக்கும்.

ஏப்ரல் 18
அனுபவங்கள்

புலம்பல் 3:1-32

அவர் என்னை இருளிலே அழைத்து நடத்தி வந்தார்.
புலம்பல் 3:2

பலவருடங்களுக்கு முன்பு நான் தங்கியிருந்த அறையில் ஒருமுறை என்னிட மிருந்த 5000 ரூபாயை சரியாகப் பாதுகாப்பதற்காக பழைய செய்திதாள் களுக்குள் மறைத்து வைத்தேன். பின்னர் பணம் வைத்ததை மறந்துவிட்டு பணத்தோடு சேர்த்து செய்தித்தாளை பழைய பேப்பர்காரனுக்கு போட்டேன். எதையும் சரியான இடத்தில் சரியான விழிப்புணர்வுடன் பாதுகாக்க வேண்டும் என்பதைக் கற்றுக் கொண்டேன். அதற்குச் செலவு 5000 ரூபாய். நான் தங்கியிருந்த இடத்திலிருந்து இரயில் நிலையம் செல்ல 10 நிமிடம் போதும் என்ற கணக்கு நீண்ட காலம் சரியாயிருந்தது. ஆனால், ஒருநாள் அது பொய்த்தது. மேற்கொண்டு 2000 ரூபாய் செலவழித்துதான் பாண்டிச்சேரியிலிருந்து செல்ல முடிந்தது. போதிய கால அவகாசத்துடன் செல்ல வேண்டும் என்பதை சரியாகக் கற்றுக் கொள்ள 2000 ரூபாய் செலவானது.

வாழ்க்கையில் சில நேரங்கள் பெரிய ஒரு செலவு செய்துதான் சில அனுபவங் களைப் பெற முடிகிறது. ஒரு பெரிய செலவு செய்ய நேரிடும்போதுதான் அதற்குப் பின்பு மிகவும் ஜாக்கிரதையாய்ச் செயல்படத்தக்கதான ஒரு விழிப்புணர்வின் அனுபவம் கிடைக்கிறது. எளிதாகப் புரிந்துகொள்ள இயன்ற பல விஷயங்கள் வாழ்க்கையில் சரியான ஜாக்கிரதையுணர்வுகளை ஏற்படுத்தாமல் போகிறது. மனதை விசனப்படுத்தும் விதமாக ஒரு நஷ்டமோ, கஷ்டமோ ஏற்படும்போதுதான் என்றும் மனதில் நிலைத் திருக்கத்தக்கதான நல்ல பாடங்கள் கிடைக்கிறது. செலவு அதிகம்தான். ஆனால், அதிகமான ஒரு செலவு ஏற்படும்போது, பிற்காலத்தில் மிக மிக எச்சரிக்கையுடன் வாழ்ந்திடப் போதுமான தூண்டுதல் கிடைக்கிறது.

யாக்கோபின் வாழ்க்கையில் சில விஷயங்களை அவன் சாதாரணமாகவே கற்றுக் கொண்டு சரியாகச் செயல்பட்டிருக்க முடியும். ஆயினும், சில பாடங்களைக் கற்க வேண்டிய விதமாகக் கற்றுக்கொள்ள, ஒரு பெரிய விலையைக் கொடுக்க நேர்ந்தது. தேவனைச் சார்ந்து நிற்காமல், சுய சிந்தனைகளையும், யோசனைகளையும் சார்ந்து நிற்பது எவ்வளவு பிரச்சினைகளைக் கொண்டு வரும் என்ற உண்மையை, வாழ்நாள் முழுவதும் நினைக்கத்தக்க காரியங்கள் அவனுக்கு நிகழ்ந்தது.

தாவீதின் வாழ்க்கைப் பயணத்திலும் சில நேரங்களில் பெரிய விலையைக் கொடுத்துதான் சில எச்சரிக்கைப் பாடங்களையும், விழிப்புணர்வுக் கல்வியையும் பெற முடிந்திருக்கின்றன. அதிகச் செலவு செய்ய நேரிட்டாலும், அவற்றால் பிற்காலத்தில் நல்ல பலன்கள் கிடைத்தன. ஆம். சில பொருட்களுக்கு மட்டுமல்ல. சில நல்ல அனுபவங்களுக்கும் செலவு உண்டு. ஆனால், வாழ்நாள்முழுவதும் செலவு செய்து கொண்டிராமல், ஏற்கெனவே செலவு செய்து கற்ற பாடங்களை, மனதில் நிறுத்திச் செயல்படப் பழக வேண்டும்.

சிந்தனைக்கு...

நல்லவர்களின் வாழ்வில் தீமையும் நன்மையாகிறது
தீயவர்களின் வாழ்வில் நன்மையும் தீமையாகிறது.

ஏப்ரல் 19

கிறிஸ்தவ சாட்சி

அப்போஸ்தலர் 2:22-41

இதற்கு நாங்களெல்லாரும் சாட்சிகளாயிருக்கிறோம்
அப்போஸ்தலர் 2:32

இறையியல் கற்ற கிறிஸ்தவர் ஒருவர் பிற மதப்பிரமுகர் ஒருவரோடு மணிக் கணக்கில் வாதம் செய்தார். இயேசுதான் உண்மையான கடவுள், கிறிஸ்தவப் போதனைகள் தான் சரியானது என்பதை இறையியல் ரீதியாக மணிக்கணக்கில் தர்க்கம் செய்தார். வேதாகமத்தில் அப்படி எழுதியிருக்கிறது. இப்படியெழு யிருக்கிறது என்று ஏராளம் மேற்கோள்கள் காட்டினார். ஆனால், கிறிஸ்தவம் உண்மையானது என்பதை விளக்குவதற்கு தன்னுடைய வாழ்க்கையிலிருந்தோ, தன்னுடைய அனு பவங்களி லிருந்தோ ஒரு சிறு உதாரணத்தைக்கூட காட்டவில்லை. ஏனென்றால், அவர் இறையியல் அறிந்தவராயிருந்தும் இறைவனை அறிந்தவர் அல்ல.

இயேசு கிறிஸ்து கிறிஸ்தவத்தை பிரச்சாரம் செய்வதற்கு மட்டுமல்ல. நாம் அவருக்கு சாட்சிகளாயிருக்கும்படிக்கும் நம்மை அழைக்கின்றார். நாம் இறையியல் அறிவைக் கொண்டு போதிப்பது மட்டும் போதுமானதல்ல. தேவனை அறிந்த அறிவைக் கொண்டு சாட்சி பகரவும் வேண்டும். நம்முடைய போதனைத் திறனை விட, வாதம் புரியும் ஆற்றலைவிட, தர்க்கம் செய்யும் திறமையைவிட நம் வாழ்வில் இயேசுவால் ஏற்பட்ட பாதிப்புகள் மிகவும் முக்கியமானவை.

இயேசு உயிரோடெழுந்தார் என்ற உண்மையை பலருக்குப் பிரசங்கித்த அப்போஸ்தலர்கள் இதற்கு நாங்களும் சாட்சி என்றனர். நாம் சொல்வதை பிறர் மறுக்கலாம். நாம் நம்புவதை பிறர் மூடநம்பிக்கை என்று கூறலாம். ஆனால், நம்மிடம் ஆண்டவர் ஏற்படுத்திய மாற்றங்களும், நம்மிடம் ஏற்பட்ட நல்ல ஆவிக் குரிய அனுபவங்களும் பிறரால் எளிதில் மறுக்கக் கூடியவைகள் அல்ல. வாழ்க்கை அனுபவப் பின்னணிகள் இல்லாமல், கிறிஸ்தவத்தை நாம் பிறர் நம்புவதற்கேற்ற படி மாற்ற முடியாது.

கிறிஸ்துவைக் குறித்த உண்மைகள் மட்டுமே பிறர் இயேசுவை விசுவாசிப் பதற்கும் அவரை ஏற்றுக்கொள்வதற்கும் போதுமானவையல்ல. கிறிஸ்துவை நாம் பிறருக்கு நம்முடைய வாழ்க்கையின் சாட்சிகளால் காண்பிக்க வேண்டும். எங்கே பிறந்தார், வாழ்ந்தார், போதித்தார், பரலோகம் போய்விட்டார் என்ற தகவல்களை மட்டும் கூறுவது அல்ல. நம்மோடு அவர் வாழ்வதையும், நம்மிடம் அவர் செயல் படுவதையும், நாம் அவரால் கண்ட அனுபவங்களையும் அவர்கள் அறியச் செய்ய வேண்டும். அப்போதுதான் கிறிஸ்தவம் எவ்வளவு உண்மையானது என்பதை பிறர் அறிய முடியும். கிறிஸ்தவம் நம்மிடம் என்ன நல்ல பாதிப்புகளை ஏற்படுத்தியுள்ளது என்பதை முதலாவது பார்ப்போம்.

சிந்தனைக்கு...

இயேசுவின் ஆட்சி இதயத்திலிருந்தால் அவருக்கேற்ற சாட்சியும் மாட்சியும் வாழ்கையிலிருக்கும்.

ஏப்ரல் 20

கிருபையும் சத்தியமும்

சங்கீதம் 26:1-12

உம்முடைய சத்தியத்திலே நடந்து கொள்ளுகிறேன்...
சங்கீதம் 26:3

தேவனுடைய குணாதிசயங்களின் ஒரு பக்கத்தை மட்டும் பார்த்து, அதைச் சார்ந்தே நம்முடைய ஆவிக்குரிய விசுவாசங்களைக் கட்டி எழுப்புவது வலிமையற்ற ஆதாரங்களின்மேல் கட்டிடம் கட்டுவதற்குச் சமமாகும். ஏதாவது ஒரு பக்கத்தால் மட்டும் அதிகமாகக் கவர்ச்சிக்கப்பட்டு, மறுபக்கத்தைக் குறித்து கருத்தற்றவர்களாகப் போவது நலமானதல்ல. பெரும்பாலான ஆவிக்குரிய மக்கள் தேவனுடைய கிருபையின் பக்கத்தை மட்டுமே பார்த்து, அதுவே முழு தெய்வீக வெளிப்பாடு என நினைத்து விடுகின்றனர். தேவனுடைய அன்பு, கிருபை, இரக்கம், தயவு, மன்னிக்கும் மாட்சி, ஆறுதல் ஆகிய குணாதிசயங்களை மட்டுமே நாம் அதிகமாகப் பார்த்தால், உணர்ச்சிகரமான ஒரு ஆவிக்குரிய நிலையை அடையலாமேயன்றி, உண்மையான ஆன்மீகக் குறிகளை எட்ட முடியாது.

தேவனை வேதம் கிருபையுள்ளவர் என்று மட்டும் கூறாமல், சத்தியமுள்ளவர் என்றும் கூறுகிறது. ஒரு புறம் அன்பின் மதுரத்தைச் சுவைக்கும் நாம், மறுபுறம் அவருடைய உண்மையின் கசப்பினையும் ஏற்றுக்கொண்டாக வேண்டும். இஸ்ரவேல் மக்கள் மத்தியில் பல்வேறு அதிசயங்களைச் செய்து, கானானை நோக்கி நடத்தியது தேவனுடைய கிருபை. ஆனால், அவர்களின் பாவங்களையும், கீழ்ப்படியாமையும், அவிசுவாசத்தையும் பொறுத்துக்கொண்டு போகாமல், அவர்களைச் சிட்சித்தது அவருடைய சத்தியம். ஆடுகளுக்குப் பின்னாலே நடந்த தாவீதை அரியாசனத்திலே அமர்த்தி, அழகு பார்த்தது தேவனுடைய கிருபை. அந்த தாவீது தவறிழைத்தபோது கடுமையாகக் கண்டித்து தண்டித்தது அவருடைய நீதி சார்ந்த சத்தியம்.

இன்றைய கிறிஸ்தவ மக்கள் இயேசுவை வல்லவர், நல்லவர் மனதுருக்க மானவர், அற்புதர் என்ற நிலைகளில் பார்த்து அவருடைய நன்மைகளைத் தேடு கின்றனர். ஆனால் அவர் பரிசுத்தர் என்றும், அவர் நீதியின் விஷயத்தில் மிகவும் கடுமையானவர் என்றும் பார்த்து, அதற்கேற்ற ஒரு பரிசுத்த வாழ்வு வாழப் போதிய கவனம் செலுத்த வில்லை. தேவனை நாம் நீண்ட கோலைப் பிடித்து ஆடுகளுக்குப் பின்னால் செல்லும் மேய்ப்பராக மட்டும் பார்க்கக் கூடாது. அவரைச் சிங்காசனத்தில் அமர்ந்து நியாயந்தீர்க்கும் நியாயாதிபதியாகவும் பார்க்க வேண்டும்.

மேய்ப்பனற்ற ஆடுகளைப் போன்ற நிர்ப்பந்தமான நிலையில் இருந்த மக்க ளைப் பார்த்து, பரிதவித்த அதே இயேசு, எருசலேம் தேவாலயத்தில் பரிசுத்தத் திற்குக் குறைவான காரியங்களைக் கண்டபோது, மிகுந்த கோபத்துடன் சவுக்கை கையில் எடுத்தார் என்பதை நாம் மறக்கக்கூடாது.

சிந்தனைக்கு...

வாழ்க்கை முழுவதும் கற்றுக்கொண்டேயிரு. ஆயினும், உன் வாழ்க்கையை பிறர் கற்றுக்கொள்ள ஏதாவது செய்.

ஏப்ரல் 21

பாவம் நிறைந்த உலகத்தில்

எபிரெயர் 12:1-13

நம்மைச்சுற்றி நெருங்கிநிற்கிற பாவத்தையும்.
எபிரேயர் 12:1

எவ்வளவு பெரிய கடல். அந்தக் கடலின்மேல் செல்லும் கப்பல் கடலின் நீரினால் மூழ்காமல் செல்லுகிறதே. அவ்வளவு அதிகமான தண்ணீர் அந்தக் கப்பலுக்குள் புகுந்து அந்தக் கப்பலை மூழ்கடிக்க முடியவில்லையே, ஏன்? கடல் நீரின் அளவு மிகவும் அதிகமாயிருந்தாலும் கப்பல் அதற்கேற்றவிதமாக வடிவமைக்கப் பட்டிருப்பதால் கடலின் நீர் உள்ளே புகமுடியவில்லை.

பாவம் நிறைந்த உலகத்தில் வாழ்கின்றோம். எங்கும் பாவ வெள்ளங்கள் சூழ்ந்துள்ளன. எந்தப் பக்கம் திரும்பினாலும் பாவமான விஷயங்களின் காட்சிகளும், கவர்ச்சிகளும், கவர்ந்திழுக்கும் செயல்பாடுகளுமே சூழ்ந்திருக்கின்றன. ஆடம்பரம் நிறைந்த உலகம், ஆசாபாசங்கள் நிறைந்த உலகம். இச்சைகளை எளிதில் தூண்டும் காட்சிகள் நிறைந்த உலகம்.படோடாபங்களும் பல விதமான சுகபோக வாய்ப்புகளும் நிறைந்த உலகம்.படித்தவர்களும், படிக்காதவர்களும், ஏழைகளும், பணக்காரர்களும் உலகத்தின் கவர்ச்சிமிகு காரியங்களில் மயங்கி அதன் வழியே செல்கின்றனர். இத்தனை ஏராளமான கவர்ச்சிமிக்க காரியங்கள் நிறைந்த உலகத்தில் நாம் எப்படிப் பரிசுத்தமாக வாழ்ந்து காட்ட முடியும்? இத்தனை திரளாக பாவ மான விஷயங்கள் நெருங்கி நிற்கும் போது நாம் மட்டும் அவைகளால் இழுக்கப் படாமல் வாழ்வது சாத்தியமா?

இப்படி ஏராளமான கேள்விகள். ஆனால், கிறிஸ்துவின் ஐக்கியம் என்ற ஆவிக்குரிய கப்பலுக்குள் வந்துவிட்டால், அங்கே எதுவும் நம்மை நெருக்கி வீழ்த்தி விடாது. அனைத்து பாவக் கவர்ச்சிகளினாலும் பாதிக்கப்படாதபடி கிறிஸ்துவின் உறவு நமக்கு பாதுகாப்பைத் தருகிறது. இரட்சிப்பின் அனுபவம் என்பது நம்முடைய கவனத்தையும், பார்வையையும் கிறிஸ்துவின் அன்பிற்கு நேராகப் போக வைத்து விடுகிறது. கிறிஸ்துவை நோக்கி நம்முடைய முழுக் கவனத்தையும் இழுக்கும் இரட்சிப்பின் அனுபவத்தை நாம் பெறும் போது, கடல் போல பாவம் நம்மைச் சூழ்ந் திருந்தாலும் அவை நமக்குள் வந்துவிடாது.

இயேசு கிறிஸ்துவினால் வருகின்ற இரட்சிப்பின் அனுபவம், நம்முடைய வாழ்க்கையை பாவவெள்ளம் உள்ளே புகுந்துவிடாமலிருக்கும்படியாக வடிவமைக் கின்றது. எனவே, ஒவ்வொரு பாவமான விஷயத்தையும் நாம் தனித்தனியாகச் சந்தித்து மேற்கொள்ளத் தேவையில்லை. கிறிஸ்துவின் ஐக்கியம் என்னும் கப்பலுக்குள் நாம் வந்துவிடும்போது எல்லாப் பாவ விசைகளும் வலுவிழந்து போகும். நோவா பேழைக்குள் இருந்தான். பூமியோ வெள்ளத்தால் நிறைந்திருந்தது. அந்த வெள்ளத்தினால் எல்லாம் அழிந்தது. நோவாவின் கப்பலோ சேதமடையவில்லை.

சிந்தனைக்கு...

சோதனைக் காற்றுகள் உன்னைத் தாக்கும் போதுதான்
நீ பதரா, கோதுமை மணியா என்பது தெரியும்.

ஏப்ரல் 22
கடந்து வந்த பாதை

11 சாமுவேல் 22:1-25

விசாலமான இடத்திலே என்னைக் கொண்டு வந்து...
11 சாமு 22:20

தாவீதும் ஒரு நாள் உயர்ந்த நிலைக்கு வந்து சேர்ந்தான். சாலொமோனும் உயர்ந்த நிலைக்கு வந்து சேர்ந்தான். இரண்டு பேருமே மேன்மைக்குரிய வெற்றிகளைக் கண்டடைந்தனர். ஆனால், தாவீதின் வெற்றிக்கும் மேன்மைக்கும் பின்னால் கடந்துவந்த பாதை என்ற ஒன்று இருந்தது. அவன் பல தடைகளைக் கடந்து வந்தான். பல போராட்டங்களைச் சந்தித்துதான் உயர்வுகளைக் கண்டான். பலவிதமான மேடுபள்ளங்கள் வழியாகவும், கரடுமுரடான சூழ்நிலைகள் வழியாகவும், நடந்து பல அனுபவங்களைப் பெற்ற பின்புதான், ராஜா என்ற நிலைக்கு உயர்ந்தான்.

ஆனால், சாலொமோன் ராஜாவிற்கு பிள்ளை என்ற ஒரே ஒருதகுதி நிலையின் வாயிலாக உயர்ந்தவன். அவன் கடந்து வந்த பாதை சுமுகமானதும் சுகமானதும். அங்கே அவனுக்கு அனுபவங்கள் இல்லை. அவன் தேவனால் உயர்த்தப்பட்ட போதிலும் தேவனால் பல விதமான பாடுகளின் பாதையில் நடத்தப்பட்டு தேவனை அறிகிற அறிவையும், தேவ வழிநடத்துதல்களின் மேன்மைகளையும் கண்டதில்லை. எனவே, அவன் அடைந்த உயர் நிலைக்கு ஏற்றபடி தகுதியாய், செயல்படவில்லை. அது மட்டுமன்றி, அவனுடைய வாழ்க்கையின் மூலம் மிகச் சிறந்த பாடங்கள் எதையும் நாம் கற்க வாய்ப்பில்லை.

ஆனால், கடந்து வந்த பாதை தாவீதுக்கு கரடுமுரடானதாக இருந்ததால், அவன் பல நல்ல அனுபவப் பாடங்களை கற்றுக்கொண்டு அவைகளால் இறுதிவரை தனக்களிக்கப்பட்ட மேன்மையைக் காத்துக் கொண்டான். மேலும், இன்றளவும் தாவீது கடந்து வந்த பாதையில் கண்டுணர்ந்த காரியங்களும், அடைந்த அனுபவங்களும் அநேகருக்கு நல்ல பாடங்களாகவும், உயர்நிலை அடைவதற்கு உதவும் நல்ல ஊக்குவிப்புகளாகவும் விளங்குகின்றன.

மனிதன் எதையுமே எளிதான பாதையில் நடந்து சாதிக்க விரும்புகிறவன். ஆயினும், எளிதாகப் பெற்ற உயர்வுகளும், வெற்றிகளும் எளிதாக மனிதனை விட்டு விலகிப் போகவும் முடியும். எனவேதான், தேவன் நம்மை உயர்த்துவதில் மட்டுமே கவனமாயிராமல் அந்த உயர்வுகளைக் கடினமான பாதைகள் வழியாக நடத்தியே அடையச் செய்கின்றார். ஏனென்றால், நல்ல அனுபவங்களையும், பாடங்களையும் பெறாமலே சாதிக்க முடிகின்ற வெற்றிகள் வேறொரு வடிவத்தில், பலவிதத் தோல்வி களை வரவழைக்கும். நாம் கடந்து வந்த பாதையை நினைக்கும்போது அங்கே நாம் எவைகளைக் கற்றோம், பெற்றோம் என்ற சிந்தனைகள்தான் வெற்றிகளைத் தக்கவைக்கும் காப்பு வேலிகளாக மாறுகின்றன.

சிந்தனைக்கு...

துவக்கத்தில் நீ பெற்ற சில தோல்விகள், எதிர்கால வெற்றிகளைத் தக்கவைக்கும் முள்வேலிகள்.

ஏப்ரல் 23

வாரத்தில் ஒரு நாள்

கொலோசெயர் 3 : 12-25

நீங்கள் எதைச் செய்தாலும் ...
கொலோசெயர் 3:17

திரு. தேவபக்திநாதன் வெற்றிகரமான வியாபாரம் செய்கின்றவர். ஆயினும், ஞாயிறு அன்று எந்த ஒரு வியாபர நடவடிக்கைகளிலும் ஈடுபட மாட்டார். ஞாயிறு அன்று கோயில், ஆராதனை, சபை விவகாரம், ஊழியம் என்பது போன்ற காரியங்களிலேயே முழுமையாக ஈடுபட்டுக் கொண்டிருப்பார். அவருடைய பக்தி வைராக்கியத்தை பலர் மிகவும் பாராட்டுவார்கள்.

ஆனால், திரு. தேவபக்திநாதனிடம் பிற தினங்களில் எந்த ஒரு கிறிஸ்தவ வாசனையும் இராது. அவருடைய எந்த ஒரு குணமும், செயலும் அவர் ஒரு கிறிஸ்தவர் என்பதைச் சொல்லாது. அவர் வியாபாரம் செய்யும் விதத்திலும் சற்றும் ஒரு கிறிஸ்தவத் தன்மை இராது. ஆம், இவர் வாரத்தில் ஒரு நாள் மட்டும் கிறிஸ்தவராக வாழுகின்றவர்.

புராதானக் கிறிஸ்தவர்களாயினும் சரி, பெந்தெகொஸ்தே கிறிஸ்தவர்களாயினும் சரி, இன்று பெரும்பாலான கிறிஸ்தவர்கள் வாரத்தில் ஒருநாள் மட்டும் கிறிஸ்தவ வாழ்க்கையை வாழ்கின்றவர்கள். அநேகர் வாரத்திற்கு ஒருமுறை சபைக்கு வந்து ஆராதித்து, அல்லேலூயா கோஷம் போட்டு விட்டு, பிற தினங்களில் எல்லோரைப் போலவே வாழ்கின்றார்கள். இது பிற மத மக்களின் பக்திக் கொத்ததாக உள்ளது. அவர்களும் எங்கேயாவது ஒரு இடத்தில், என்றாவது ஒரு நாள் போய் சில வழிபாடுகளைச் செய்து, அதை பக்தி என எண்ணுகின்றார்கள்.

ஆனால், கிறிஸ்தவ பக்தி அப்படி இருக்கக் கூடாது. வாரத்தில் ஒரு நாளை கர்த்தருக்காக என்று ஒதுக்குவது சரியல்ல. ஒவ்வொரு நாளும் கர்த்தருக்காக ஒதுக்கப்பட வேண்டும். அனைத்து நாட்களிலும் ஆண்டவருக்கு மகிமை செலுத்தி வாழ்கின்ற ஒரு அனுபவம் நமக்கு வேண்டும். நாம் எங்கு பணிபுரிந்தாலும், எங்கு வியாபாரம் செய்தாலும் அங்கேயும் நாம் ஆண்டவருக்காக வாழ அழைக்கப் பட்டுள்ளோம். ஞாயிறு அன்று ஆராதிப்பது மட்டுமே போதாது.

ஒவ்வொரு நாளும் நம்முடைய குணங்களும், செயல்களும், நடத்தைகளும் தேவனைக் கனப்படுத்துகின்ற விதமாக இருக்க வேண்டும். துதிப்பதும், ஸ்தோத்தரிப்பதும், பாடுவதும், ஜெபிப்பதும், ஊழியம் செய்வதும் மட்டுமே தேவனை ஆராதிக்கும் முறைகளல்ல. எந்த ஒரு வேலையாயினும், தொழிலாயினும், வியாபாரமாயினும், குடும்பமாயினும், சமுதாய உறவுகளாயினும் அவைகள் மூலமாகவும் நாம் கர்த்தருக்கு ஆராதனை செலுத்த முடியும். அதுவே சரியான கிறிஸ்தவ வாழ்க்கை.

சிந்தனைக்கு...

நீ வாழ்கின்ற வாழ்க்கை இறைவனைப் பிரதிபலிக்காவிட்டால்
நீ செய்கின்ற வழிபாடு இறைவனுக்கு ஏற்றதல்ல.

ஏப்ரல் 24
கண்ணாடி எதற்கு?

யாக்கோபு 1 : 17-27

கண்ணாடியிலே தன் சுபாவ முகத்தைப் பார்க்கிற......
யாக்கோபு 1:23

நாம் எப்படித் தோன்றுகின்றோம் என்பதை அறிய அவ்வப்போது கண்ணாடியில் நம்மை பார்த்துக் கொள்கின்றோம். கண்ணாடியில் தங்களை அவ்வப் போது பார்த்துக் கொள்கின்றவர்களில் இரு பிரிவினர் உள்ளனர். முதல் பிரிவினர் கண் ணாடியில் பார்த்து தங்களைச் சரி செய்து கொள்கின்றவர்கள். கண்ணாடியைப் பார்க்கும் போது தலைமயிர் கலைந்திருந்தாலோ, ஆடை சரியாக இல்லாம லிருந்தாலோ, முகத்தில் வேர்வை வழிந்திருந்தாலோ அவர்கள் அவைகளைச் சரி செய்வார்கள். இன்னொரு பிரிவினரோ அப்படியல்ல. தங்களின் தோற்றத்தைப் பார்க்கும் ஆசை உண்டு. ஆனால், சரி செய்யும் பழக்கம் இல்லை. பார்ப்பதோடு சரி.

அநேகருக்கு தங்களின் உண்மை நிலையை அறியும் ஆவல் உண்டு. ஆனால், சரியில்லாத விஷயங்களைச் சரிசெய்யும் விருப்பமோ இல்லை. வேதாகமத்தை வாசிக்கின்ற சிலர் தாங்கள் தேவனுடைய பார்வையில் எவ்வளவு குறைவுபடுகிறோம் என்பதை அறிந்து கொள்கிறார்கள். சில பிரசங்கங்களைக் கேட்கும் போது தங் களை பாவிகளாக உணருகின்றார்கள். அதனையே அவர்கள் ஆவிக்குரிய பக்தி நிலையாக எண்ணுகின்றனர். ஆயினும், தங்களை மாற்றிக்கொள்ளவோ, சரி செய்துகொள்ளவோ அவர்கள் விரும்புவதில்லை.

சிலர் தேவ செய்திகளைக் கேட்டுவிட்டு கர்த்தர் தெளிவாகப் பேசினார், உணர்த்தினார், காண்பித்தார் என்றெல்லாம் கூறுவார்கள். அதனைத் தங்களுக்கு, கிடைத்த மிகப்பெரிய ஆவிக்குரிய அனுபவங்களாக எண்ணுவார்கள். ஆயினும், வாழ்க்கை மாற்றங்களோ, குணாதிசய மாற்றங்களோ ஏற்படாத நிலையில் இவ்வித ஏவுதல்களும் உணர்த்துதல்களும் கண்ணாடியைப் பார்க்கும் வெறும் அனுபவங்களேயன்றி வேறொன்றும் இல்லை. இதனால் பயன் ஏதும் இல்லை. சவுல் ராஜா தன் தவறுகளையும், குற்றங்களையும் சிலமுறை உணர்ந்ததுண்டு. ஆயினும் அவன் மனமாற்றங்களைக் காணவில்லை. நாத்தான் என்ற கண்ணாடி வாயிலாக தாவீது தன்னுடைய தவறான தோற்றத்தைக் காண நேரிட்டபோது, அவன் மனம் வருந்தி கண்ணீர்விட்டு அழுது வாழ்க்கை மாற்றம் கண்டான்.

அநேகர் வேதம் வாசிப்பதையும் பிரசங்கங்கள் கேட்பதையும் பக்தியான காரியங்கள் என எண்ணுகின்றனர். ஆனால் எதை வாசித்தோம், எதைக் கேட்டோம் என்றெல்லாம் சீரியஸாக சிந்திப்பதில்லை. ஆனால் வாசிப்பதும் கேட்பதுமே பக்தியாகிவிடாது. நம்மை அறியவும், அறிந்து உணர்ந்து திருந்தவுமே அவை களைச் செய்கின்றோம். தினமும் வேதாகமம் வாசிப்பதோ, தியானநூல் படிப்பதோ மட்டும் எந்த நன்மையையும் ஏற்படுத்தாது.

சிந்தனைக்கு...

உன் தவறைக் கண்டு கொள்ளாமல் போகிறவனைவிட கண்டித்து உணர்த்துகின்றவனே உண்மை நண்பன்.

ஏப்ரல் 25
நீங்களும் ஊழியரே

மத்தேயு 5:1-20

மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு....
மத்தேயு 5:16

ஆபிரகாம் நமக்கு அறிவுரைகள் எதையும் தரவில்லை. போதனைகள் எதையும் செய்யவில்லை. ஆனால், ஆபிரகாமின் வாழ்க்கை நம்மிடம் மிகுதியாகப் பேசுகின்றன. அவன் வாழ்ந்த விதம் நமக்கு ஏராளம் நற்போதனைகளை அளிக்கின்றது. ஆனால், சாலொமோன் நமக்கு எழுதித் தந்த அறிவுரைகள் ஏராளம். ஆனால், அவனுடைய வாழ்க்கையோ நமக்கு எந்த முன்மாதிரியையும் ஏற்படுத்தவில்லை. அவனுடைய வாழ்க்கை நாம் எப்படி வாழக்கூடாது என்று மட்டும் உணர்த்துகின்றது.

ஊரெல்லாம் போய் உபதேசம் செய்கிறவனைவிட, ஒரு சிலருக்கு முன்பாக உண்மையான ஒரு வாழ்க்கைக்கு மாதிரியாக விளங்குகிறவனே பெரிய ஊழியன். இயேசு இரட்சிக்கிறார், இயேசு மனிதனை மாற்றுகிறார் என்று மேடை மேடையாய் முழுங்குகிறவனைவிட, தான் வாழ்கின்ற வாழ்க்கை தரத்தினால் அவைகளை உண்மையென்று உறுதிப்படுத்துகிறவனே வல்லமையான ஊழியன். பேசத் தெரியாதவர்களுக்கு ஊழிய அழைப்பு இல்லை என்று எண்ணிவிடக் கூடாது. பிரசங்க ஆற்றல் இல்லாதவர்களுக்கு நற்செய்திப் பணி செய்யும் கிருபை இல்லை என நினைத்து விடக்கூடாது. வேதத்தை விளக்கும் ஆற்றல் இல்லாதவர்களுக்கு பிறருக்குப் போதிக்கும் வரம் இல்லை என்று கருதக்கூடாது.

பேசுவதற்கும், உபதேசிப்பதற்கும், வேத விளக்கம் கொடுப்பதற்கும் வாய் தேவை என்பது உண்மைதான். ஆனால் மனிதனுடைய வாய் மட்டுமல்ல. வாழ்க்கையும் பேசும் ஆற்றல் உள்ளது. சில நேரங்களில் வாயினால் பேசுவதால் வரும் விளைவுகளைவிட வாழும் விதத்தால் பேசுவது அதிக விளைவுகளை ஏற்படுத்தும். வாயினால் பேசப்படுவது காதுகளுக்குள் நுழைந்த விதமாக வெளியேறவும் முடியும். ஆனால், ஒருவர் தன்னுடைய வாழ்க்கையின் வாயிலாக பிறரை உணரச் செய்கின்ற உண்மைகள் அவர்களை ஏதாவது ஒரு விதத்தில் தொடாமல் வீணாய்ப் போகாது. வாயினால் பேசுவதை மதப்பிரச்சாரம் என்று புறக்கணிக்க முடியும். ஆனால், ஒருவர் தான் வாழ்கின்ற விதங்களால் பிறருக்குச் சொல்லும் செய்திகளை அவர்கள் எதிர்க்கவோ, அசட்டை செய்யவோ முடியாது.

பேசும் ஆற்றல் இல்லாதவர்களுக்கும் ஊழிய அழைப்பு உண்டு. அவர்கள் தங்கள் குணங்களால், பண்புகளால் செயல்படும் விதங்களால், அன்பு, தாழ்மை, பொறுமை, இரக்கம், தியாகம் போன்ற உன்னத சுபாவங்களால் பிறருக்கு இயேசுவால் ஏற்படும் வாழ்க்கை மாற்றங்களை ஆழமாக, அழுத்தமாக விளக்க முடியும். ஆம். நீங்களும் கர்த்தருக்கு ஊழியம் செய்ய அழைக்கப்பட்டவர்களே. உங்களுக்கு அளிக்கப்பட்ட ஊழிய அழைப்பை நிறைவேற்றுங்கள்.

சிந்தனைக்கு...

கிறிஸ்து வாழ்கிறார் என்பதை வாயினால் சொல்.
அவர் உன்னிடம் வாழ்கிறார் என்பதை வாழ்க்கையினால் சொல்.

ஏப்ரல் 26
பயணத்தின் பாதை

பிரசங்கி 1:1-18

எல்லாம் மாயையும், மனதுக்குச்சஞ்சலமுமாயிருக்கிறது...
பிரசங்கி 1:14

மிக மிக அருமையான சாலை, எந்த ஒரு அதிர்வையும் உணராமல் பயணம் செய்யலாம். மிக மிக அருமையான ஆடி சொகுசுக்கார். இந்த வாகனத்தில் ஒருவன் பயணம் செய்கின்றான். ஆனால், அவன் ஒரு பெரிய குற்றத்திற்காக சிறையிலடைக்கப்படவே கொண்டுபோகப்படுகின்றான். அவனுக்கு இது சுக மான சௌகரியமான பயணமா? சொகுசான காரில் அவன் சோர்வுடனே பயணம் செய்வான்.

இன்னொருவன் மிகமிக பழமையான, மோசமான ஒரு வாகனத்தில் பயணம் செய்கின்றான். அந்த சாலை மிகவும் மோசமாக உடைந்து நொறுங்கி கிடக்கின்றது. மிகமிக மோசமான பயணம், ஆனால்,அவன் சிறையிலிருந்து விடுதலையாகி தன் வீட்டுக்குப் போகிறான். இப்போது அவன் தன்னுடைய பயண நிலைமையை எண்ணி வருந்தமாட்டான். எப்படி பயணம் செய்கின்றோம் என்பதை விட எங்கே போகப்போகிறோம் என்பதே முக்கியம்.

ஆம், நாம் எந்த அளவிற்கு சுக சௌகரியமான சூழ்நிலையில் வாழ்கின்றோம் என்பதல்ல. நம்முடைய யாத்திரை எங்கே நம்மைக் கொண்டு போகிறது என்பதே முக்கியம். தாவீதின் வாழ்க்கைப் பயணம் பலவிதமான மேடு பள்ளங்கள் நிறைந்த போராட்டங்கள் என்ற பாதையிலேயே சென்றது. ஆயினும், அவன் உயர்ந்த இலக்கை நோக்கிச் சென்றதால், அவனால் விசுவாசத்தோடு நன்றாக இருக்க முடிந்தது. பல விதமான நெருக்கடிகள், பலவிதமான மன பாதிப்புகள், பலவிதமான அச்சுறுத்தல்கள். ஆயினும், அவற்றின் நடுவிலும் அவனால் இளைப்பாறுதலோடும் விசுவாசத் தோடும் செயல்பட முடிந்தது. பயணத்தின் பாதை பாடுகள் நிறைந்திருந்த போதி லும் ஒரு நல்ல தரிசனத்தை நோக்கிச் சென்றதால், அவன் சமாதானத்தோடும் சந்தோஷத்தோடும் வாழ்ந்தான்.

ஆனால், சாலொமோனின் வாழ்க்கை வாகனம் சென்ற பாதை அதிக ஆடம் பரமும் அதிக வசதிகளும் நிறைந்தவை. வாழ்க்கையில் சிறு சிறு கஷ்டங்களின் வேதனைகூட இல்லாமல் அதி சௌகரியமாகப் பயணித்தான். ஆயினும், உயர்ந்ததோர் தரிசனமும், தேவன் குறித்த இலக்கும் இல்லாததால், இறுதியில் அவன் எல்லாவற்றையும் மாயை என்றும், மனசஞ்சலம் என்றும் கண்டு புலம் பினான். ஆம், உயர்ந்த நோக்கங்களை நோக்கிச் செல்லும் பாதைகள் கரடு முரடானவை. ஆனாலும், அவை நம்முடைய அமைதியையும், ஆனந்தத்தையும் எடுத்துப் போடாது.

சிந்தனைக்கு...

தோல்விகள் உணர்த்திய உண்மைகள்தான்
வெற்றிகளைத் தக்க வைக்கும் தடுப்புச் சுவர்களாகின்றன.

ஏப்ரல் 27

நோக்கமில்லாமல்

1 கொரிந்தியர் 9:24-27

நான் நிச்சயமில்லாதவனாக ஓடேன்.
1 கொரிந்தியர் 9:26

கிராமத்திலிருந்து பட்டணத்திற்குப் புதிதாக வந்த மனிதன் ஒருவன், இரயில் நிலையம் சென்று தனக்கொரு இரயில் டிக்கெட் தரும்படி கேட்டான். டிக்கெட் வினியோகிப்பவர் உனக்கு எந்த ஊர் போகவேண்டும்? என்று கேட்டபோது நான் எந்த ஊருக்கும் போகவில்லை. நான் சில மணிநேரம் இரயிலில் பயணம் செய்ய வேண்டும். அதற்கேற்றாற்போல் எனக்கு ஒரு டிக்கெட் வேண்டும் என்று சொன்னானாம். இவனுக்கு ரயிலில் ஜாலியாக பயணம் செய்ய வேண்டும் என்ற ஆசையிருந்ததேயன்றி, எந்த ஊருக்கும் போகும் எண்ணம் இருக்கவில்லை. அநேகருடைய ஆவிக்குரிய யாத்திரையும் இவ்வண்ணமாகவே உள்ளன. அவர்களுடைய ஆன்மீக நிலைக்கு எந்த ஒரு குறிப்பிட்ட குறிக்கோளும் கிடையாது. அவர்கள் தாங்கள் எந்த நிலைக்கு வந்து சேரும்படி அழைக்கப்பட்டவர்கள் என்ற விழிப்புணர்வு இல்லாமலே, ஆவிக்குரிய விஷயங்களில் தீவிரமாக ஈடுபட்டுக் கொண்டிருப்பார்கள்.

சிலர், எந்த ஒரு ஆவிக்குரிய கூடுகை என்றாலும், ஆர்வமாய் பங்கு பெறுவார்கள். ஆனால் நோக்கமோ, சற்று நேரம் விடுதலையாக, சந்தோஷமாக, கவலைகளை மறந்து சமாதானமாக இருக்க வேண்டும் என்பதாகவே இருக்கும். இவர்களின் எதிர்பார்ப்பெல்லாம், குறிப்பிட்ட ஒரு ஆவிக்குரிய சூழ்நிலையில் தங்களை ஈடுபடுத்திக் கொள்வதால் வரும், சற்று நேர மன அமைதியின் அனுபவங்களே.

ஆனால், இவ்விதமான ஒரு ஆவிக்குரிய அணுகுமுறை, நம்மைத் தவறான ஒரு ஆன்மீகப் பாதையிலேயே நடத்தும். நாம் தேவனுடைய விருப்பங்களை நோக்கமாகக் கொண்டு செயல்படுகின்ற ஒரு குறிக்கோள் சார்ந்த வாழ்க்கையை நாட வேண்டும். ஆலயங்களையும், ஆராதனைகளையும், ஆவிக்குரிய கூடுகைகளையும் மன அமைதி பெறும் இடங்களாக எண்ணிச் செயல்படாமல், வலிமையான ஒரு அமைதியும், சந்தோஷமுமான ஒரு வாழ்க்கைக்கு நேராக நம்மை நடத்துகின்ற கருவிகளாகவே அவைகளை எடுத்துக்கொள்ள வேண்டும்.

நம்முடைய வாழ்க்கையில் தேவனுடைய நாமம் மகிமைப்பட வேண்டும். நம்முடைய வாழ்க்கையில் தேவனுடைய நோக்கங்கள் நிறைவேற வேண்டும். இந்தக் குறிக்கோள்கள் ஆவிக்குரிய வாழ்க்கையில் மிகவும் முக்கியமானவைகள். இவைகள்தான் கிறிஸ்தவ இலக்குகள். இந்த இலக்குகளை நோக்கி நம்முடைய ஆவிக்குரிய செயல்பாடுகள் இருக்க வேண்டும். அப்போதுதான் நம்முடைய ஆவிக்குரிய வாழ்க்கை அர்த்தமுடையதாகவும், தேவனுடைய மகிமை வெளிப்படுகிற ஒன்றாகவும் இருக்கும். அங்குதான் தேவன் நம்மை நடத்துவதை பார்க்க முடியும்.

சிந்தனைக்கு...

ஒரு பக்கத்தை மட்டும் பார்த்துக் குதிப்பான் மூடன்
மறுபக்கத்தைப் பார்க்கும் வரை பொறுத்திருப்பான் ஞானி.

ஏப்ரல் 28
கேட்டும் பலனில்லை

லூக்கா 8:1-15

வழியருகே விதைக்கப்பட்டவர்கள்.
லூக்கா 8:12

சிலருக்கு தேவனுடைய வார்ததைகளைக் கேட்கும் நல்ல ஆர்வம் உள்ளது. அவர்கள் தேவனுடைய வார்த்தைகளைக் கேட்கக் கிடைக்கும் வாய்ப்புகளை நன்கு பயன்படுத்திக்கொள்கின்றனர். ஆனால், அவர்கள் கேட்பதற்கு ஆர்வமாயிருந்தாலும், கேட்டதற்கேற்றபடி கனிகொடுக்கும் ஆர்மில்லாதவர்கள். அவர்கள் எவ்வளவோ வாஞ்சையாக தேவனுடைய நல்ல வார்த்தைகளைக் கேட்டும், எந்தக் கனிகளையும் கொடுக்கவில்லை. ஏனென்றால், அவர்களின் இருதயம் கேட்கும் தன்மை உடையதாயிருந்தபோதிலும், கேட்டவைகளைத் தக்கவைத்துப் பயன்படுத்தும் தன்மை கொண்டிருக்கவில்லை.

இவர்களின் இருதயம் இயேசு உவமையாகக் கூறிய வழியருகே விதைக்கப்பட்ட நிலம் வகையைச் சார்ந்தது. இந்த நிலத்திற்கு வேலியில்லை. இந்த நிலத்தில் விதைக்கப்பட்ட விதைகள் முளைத்து வளருவதற்கேற்ற பாதுகாப்பு இல்லை. அங்கே வழி ஒன்று இருக்கிறது. அந்த வழி தேவையில்லாத விஷயங்களுக்கும், சரியற்ற நபர்களுக்கும் திறந்தே உள்ளது. எனவே, அங்கு வருகின்றவர்களால் விதைகள் மிதிக்கப்பட்டு நாசமாக்கப்படுகின்றன.

சிலர் நன்றாகக் கேட்பார்கள். ஆனால், கேட்டவைகள் தங்களுக்குள் பலன் தரும்படியாக தொடர்ந்து, தங்களின் இருதயத்தை கவனமாக வைக்க எச்சரிக்கையாயிருக்கமாட்டார்கள். பிரசங்கம் கேட்ட உடன் அந்த கடமை முடிந்தது என்று எண்ணி, அடுத்ததாக டி.வி வழியாக வருகின்றவைகளையும், இண்டர்நெட் வழியாக வருகின்றவைகளையும், வாட்ஸ் ஆப், பேஸ்புக் போன்ற வலைத்தளங்கள் வழியாக வருகின்றவைகளையும், மனிதர்களிடமிருந்து கேட்கும் பல காரியங்களையும் உள்ளே தங்கு தடையில்லாமலும், பில்ட்டர் செய்யாமலும் உள்ளே வர விட்டு விடுகின்றனர். அவை உள்ளே சென்று ஏற்கெனவே கேட்ட வார்த்தைகளை மிதித்துப் பலன்தரவிடாமல் செய்து விடுகின்றன.

தேவனுடைய வார்த்தைகளைக் கேட்பதற்கு கவனம் செலுத்துகின்ற இருதயம் நல்லதுதான். ஆயினும், பலன் தருவதற்கு ஏதுவாக இருதயத்தைப் பாதுகாக்கும் நடவடிக்கைகள் இல்லாததால் பிரயோஜனமின்றிப் போகிறது. முதலாவது, தேவனுடைய வார்த்தைகளைக் கேட்டு பயன் பெற விரும்புகின்றவர்கள், தங்கள் இருதயத்திற்கு இரட்சிப்பு என்னும் வேலியைப் போட வேண்டும். இரண்டாவதாக, தாங்கள் தொடர்ந்து கேட்கப் போகிறவைகளும், சிந்திக்கப் போகிறவைகளும் ஏற்கெனவே கேட்டவைகளை அமுக்கிப் போடாதிருக்க விசேஷக் கவனம் செலுத்த வேண்டும்.

சிந்தனைக்கு...

இறைவன் இருக்க வேண்டிய இடத்தில் சுயம் இருந்தால், அமைதி இருக்க வேண்டிய இடத்தில் ஆர்ப்பாட்டமே இருக்கும்.

ஏப்ரல் 29

முதலாவது யார்?

மத்தேயு 7:1–14

மனுஷர் உங்களுக்கு எவைகளைச் செய்ய விரும்புகிறீர்களோ.
மத்தேயு 7:12

மனிதன் பொதுவாக தான் நேசிக்கப்பட வேண்டும் என்று எதிர்பார்க்கும் அளவிற்கு, மற்றவர்களை நேசிக்க முன்வருவதில்லை. தான் மதிக்கப்பட வேண்டும் என்ற உணர்வை அதிகமாகப் பற்றிக்கொண்டிருக்கும் அளவிற்கு மற்றவர்களை மதிக்க வேண்டிய தேவையை உணருவதில்லை. தன்னை நம்ப வேண்டும் என்று விரும்பும் அளவிற்கு, பிறரை நம்பவேண்டிய தேவையை அறிவதில்லை. தான் புரிந்து கொள்ளப்பட வேண்டும் என்று சிந்திக்கின்ற அளவிற்கு, பிறரைப் புரிந்து கொள்ள முன்வருவதில்லை.

என்னை நேசித்தால்தானே நான் நேசிக்க முடியும், என்னை ஏற்றுக் கொண்டால் தானே நான் மற்றவரை ஏற்றுக் கொள்ள முடியும், என்னிடம் வந்தால் தானே நான் அவரிடம் போகமுடியும், எனக்குச் செய்தால்தானே நான் மற்றவர் களுக்குச் செய்ய முடியும், இவ்விதமாக மற்றவர்கள் தனக்கு முதலாவது செய்தால் தான், தான் பதிலுக்குச் செய்ய முடியும் என்ற மனநிலையை வைத்துக் கொண்டிருக் கின்றவர்கள் பலர். என்னை அவர்கள் விசாரிக்கவில்லை என்று சொல்லுகின்ற பலர், தாங்கள் முந்திப் போய் விசாரிக்க முடியாது என்று சொல்லுகிறார்கள் என்று அர்த்தம். எனக்குச் செய்யாதவர்களுக்கு நான் எப்படிச் செய்ய முடியும் என்று சொல்லுகின்றவர்கள், எனக்குச் செய்யப்படுவதற்கு மட்டுமே பதில் செய்ய முடியும் என்று கூறுகின்றார்கள்.

ஒவ்வொருவரும் மற்றவரின் முதலாவது செயல்பாட்டிற்காகக் காத்திருந்தால், ஒருபோதும் முதலாவது நடைபெற வேண்டிய நல்ல செயல் நடைபெறாது. நீ பணம் கொடுத்தால்தான் பொருளைத் தருவேன் என்று வியாபாரியும், நீ பொருளைத் தந்தால்தான் பணத்தைக் கொடுப்பேன் என்று வாடிக்கையாளரும் கௌரவ யுத்தம் நடத்தினால், எந்த நல்லதும் நடக்காது. ஒருமுறை குடும்பக் கூடுகை ஒன்றில் கணவன் மனைவி இருவரில் யார் முதலாவது தாழ்ந்து போக வேண்டும் என்று என்னிடம் கேட்டார் ஒருவர். யார் கர்த்தரை அதிமாகப் பிரியப்படுத்த விரும்புகின்றார்களோ, அவர்கள்தான் முதலாவது தாழ்ந்து போக வேண்டும் என்று பதில் கொடுத்தேன்.

மற்றவர்கள் நமக்கு என்ன செய்ய வேண்டும் என்று நாம் விரும்புவோமோ, அதனை அவர்களுக்கு முதலாவது செய்ய வேண்டும் என்றார் இயேசு. இந்த மாபெரும் நற்போதனைக்கு முக்கியத்துவம் கொடுத்தால் எத்தனையோ குடும்பங்களில் சமாதானம் மிகுதியாக நிலவியிருக்கும். எத்தனையோ சபைகள் உடைந்து போகாமலிருந்திருக்கும். ஆம். மற்றவர்கள் செய்வதற்குப் பதிலாகச் செய்கின்ற இரண்டாம் இடத்தையே தெரிந்து கொள்ளாமல், முதலாவது நான் செயல் படுவேன், என்ற நிலைப்பாட்டோடு செயல்பட வேண்டும்.

சிந்தனைக்கு...

அன்பு எனக்கு என்ன கிடைக்கும் என்று கேளாது.
என்னால் பிறருக்கு ஏதாவது கிடைக்குமா என்றே கேட்கும்.

ஏப்ரல் 30

தேற்றிட யாருமில்லையோ!

சங்கீதம் 42:1-11

ஆத்துமாவே நீ ஏன் கலங்குகிறாய்...
சங்கீதம் 42:5

தேவனுடைய பிள்ளைகள் துன்பமான பாதைகளில் நடக்கும்போது, சிலவேளை அவர்கள் பிறருடைய ஆறுதலைப் பெறுவதில்லை. அவர்களைத் திடப்படுத்த யாரும் இருப்பதில்லை. நம்பிக்கையூட்டும் விதத்தில் நாலு வார்த்தைகள் சொல்ல நண்பர்களோ, உறவினர்களோ வருவதில்லை. ஆனாலும், அவர்கள் ஆறுதலை அனுபவிக்காமல் போவதில்லை. தேற்றுகின்ற மனிதர்களை அவர்கள் கண்கள் காண்பதில்லை. ஆனால், தங்களைத் தேற்றுகின்ற தேற்றரவாளராகிய தேவன் தங்களோடு இருப்பதை அகக்கண்கள் காணும்.

தாவீதின் வாழ்க்கையில் உபத்திரவத்தின் நாட்கள் வந்தன. அருகில் யாரும் இல்லாத அனாதையாகக் காடுகளிலும், குகைகளிலும் வாழ்ந்தான். கண்ணீரை உணவாக்கி கசப்பான காலங்களைக் கடந்தான். பலவிதமான சோர்வூட்டும் காரியங்கள் அவன் இதயத்தைக் கலக்கியது. ஒரு கணம் தாங்க முடியாத துயரத்தால் கதறத் துவங்குகின்றான். ஆனால், அங்கே தேற்றரவாளனாகிய தேவன் செயல்படுகிறார்.

கதறுகின்ற அவனே தன்னுடைய கண்ணீரைத் துடைக்கத் துவங்குகின்றான். கலங்குகின்ற இதயத்தைப் பார்த்து அவனே, “நீ ஏன் கலங்குகின்றாய்?” என்று கேட்கிறான். சோர்வுகளின் மத்தியிலும் நம்பிக்கையோடு “கர்த்தருக்காய் காத்திரு” என்று தனக்குத்தானே சொல்லித் திடப்படுகிறான். இந்த அற்புத அனுபவம் அவனால் அல்ல. அவனோடு ஐக்கியப்பட்டிருந்த ஆவியானவரால் வந்தது. ஆறுதல் கூறவும், உற்சாகமூட்டவும் யாருமில்லாத ஒரு வாழ்க்கைப் பகுதியில் பல ஆண்டுகள் நான் வைக்கப்பட்டிருந்தேன். ஆயினும், என்னை நானே ஆறுதல்படுத்திக்கொள்ளவும், வியாகுல வேளைகளில் என்னை நானே திடப்படுத்திக்கொள்ளவும் தக்கதாக, கர்த்தர் எனக்கு அருள் புரிந்ததை என் வாழ்க்கையில் கண்டுணர்ந்துள்ளேன்.

ஆம். நம்முடைய வாழ்க்கையின் எல்லாப் பகுதிகளிலும், எல்லாக் காலங்களிலும் நம்முடைய இதயத்திற்கு ஆறுதல் தருகின்றவர்களை நாம் கண்டுகொள்ள முடியாது. அப்படிச் சிலர் இருந்தாலும் அவர்களின் ஆறுதல் வார்த்தைகள் நம்மை ஆற்றித் தேற்றி திடப்படுத்தி விடமுடியும் என எதிர்பார்க்க முடியாது. கர்த்தரின் ஆறுதல் ஒன்றே எந்தச் சூழ்நிலையிலும் நமக்குத் தேவையான ஊக்குவிப்பையும், உற்சாகத்தையும் தர முடியும். எனவே, யாரும் இல்லாதவர்கள் போல நம்மை எண்ணி வருந்தாமல், நாம் எங்கு தனித்து நின்றாலும் நம்மை தம்முடைய ஆவியினால் தேற்றித் திடப்படுத்தும் தேவன் நம்மோடிருக்கிறார் என்ற துணிவோடு நிற்க வேண்டும்.

சிந்தனைக்கு...

இறைவனின் ஆறுதலை இதயத்தில் அனுபவித்தவர்கள் உலகத்தின் அன்பிற்காய் ஒரு போதும் ஏங்குவதில்லை.

மே 1

நன்மை செய்ய வேண்டும்

லூக்கா 3:6-17

இரண்டு அங்கிகளை உடையவன் இல்லாத வனுக்குக் கொடுக்கக் கடவன்...
லூக்கா 3:11

இரயில் பயணம் செய்து கொண்டிருந்த ஒரு பெண் தண்ணீர் தண்ணீர் என்று ஓயாமல் கேட்டுக் கொண்டிருந்த தன்னுடைய சிறுவயது மகனைப் பொறுத் திருக்கச் செய்ய முடியாமல் கஷ்டப்பட்டாள். அடுத்த ஸ்டேஷனில் வண்டி நிற்கும் வரை தண்ணீர் வாங்க முடியாது. அதுவரை மகனை அமைதிப்படுத்துவது அவளுக்குக் கடினமாயிருந்தது. ஆனால், அருகில் அமர்ந்திருந்த சக பயணி 3 தண்ணீர் பாட்டில்கள் வைத்திருந்தார். ஆனால் இந்த சின்னப் பையனுக்கு கொஞ்சம் தண்ணீர் கொடுத்து உதவுகின்ற தூண்டுதல் அவருக்கு வரவில்லை.

சிலர் மற்றவர்களின் வாழ்க்கையில் என்ன நிகழ்ந்தாலும் அதற்கும் தங்க ளுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என நினைக்கின்றனர். பிறருடைய கஷ்டமோ, வறுமையோ, வேதனையோ, அங்கலாய்ப்போ, நெருக்கடியோ அவர்களைச் சற்றும் தொடாது. பிறருடைய துன்பங்களை சற்றாகிலும் உணர்ந்து பார்க்கும் உணர்ச்சி சற்றும் இராது.

திருச்சபையாக நாம் கூடிவருவதின் முக்கியமானதோர் நோக்கம் பிறர் மேல் அன்பு காட்டவும், அவர்களுக்கு ஏதாவது நல்லதைச் செய்யவும் தேவையான தூண்டுதல்களைப் பெறுவதும் ஆகும். ஆனால், இன்றைய திருச்சபைகள் வெறும் ஆராதனை மையங்களாக மட்டும் செயல்படுகிறது. எனவே "வந்தோமா, கடவுளை ஆராதித்தோமோ, போனோமா" என்ற சிந்தையே பலரிடம் உள்ளது. மற்றவர்களின் வாழ்க்கையில் என்ன நிகழ்ந்தாலும் அது அவர்களின் பாடு என்ற எண்ணமே மேலோங்கியுள்ளது.

கிறிஸ்தவ மக்கள் ஆராதிப்பதற்காக மட்டும் அல்ல. ஒருவரோடொருவர் ஐக்கியம் கொள்வதற்காக உருவாக்கப்பட்ட சபையின் நோக்கமறிந்து வர வேண்டும். காணிக்கை தாராளம் மட்டும் போதாது. பிறருக்கு எதையாவது ஆக்கப் பூர்வமாகச் செய்து உதவுகின்ற சிந்தனை வேண்டும். பரிசுத்த ஆவியால் நடத்தப் படுகின்ற உண்மை கிறிஸ்தவர்களுக்கு கிறிஸ்துவுக்குள் இருந்த சிந்தை இருக்கும். அவர்கள் இயேசு கிறிஸ்துவைப் போல் நன்மை செய்கின்ற மனோபாவத்தை கிறிஸ்தவ குணமாகக் கொண்டிருப்பார்கள். நாம் நன்றாக உடுத்துக் கொண்டு நாலு பேரின் கவனத்தை ஈர்ப்பதில் அல்ல. ஒரு நல்ல உடை, உணவு, உறைவிடம் இல்லாதவர்களின் துயரநிலை நம்முடைய கவனத்தை ஈர்க்க வேண்டும். அதுதான் கிறிஸ்தவத்தை வாழ்ந்து காட்டுதல். அதுதான் உண்மைக் கிறிஸ்தவராயிருப்பதை அடையாளப்படுத்துதல்.

சிந்தனைக்கு...

மனித தயவு தேவை. ஆனாலும் தேவ தயவையே நம்பியிரு. அப்போது மனித தயவு தானாக வரும்.

மே 2

உண்மையை விடாமல்

கலாத்தியர் 6:1-10

நன்மை செய்கிறதில் சோர்ந்துப் போகாமல்....
கலாத்தியர் 6:9

நல்லவனுக்குக் காலம் இல்லை என்பது உலக நிலையில் பேரளவில் உண்மை தான். ஆனால் ஒருவன் நல்லவனாகவும் உண்மையுள்ளவனாகவும் இருப்பதோடு தேவனோடு நெருங்கிய உறவுடையவனாகவும் இருந்தால், அவனுக்கு ஒரு காலம் வராமல் போவதில்லை. அவனுக்கு உரிய உயர்வை தேவன் தராமல் போவதில்லை. ஆனால், பல வேளைகளில் நம்முடைய உண்மையான வாழ்க்கைக்கு உரிய பலனை அடையாமல் போகிறோம் ஏன்? உண்மையின் பாதையில் குறுக்கிடும் சோதனைகளால் சோர்ந்துப் போய் பின்வாங்கி விடுகிறோம். நன்மை செய்தும் நன்றி கெட்டவர்களையே சம்பாதிக்கும்போதும், உண்மையாய் வாழ்ந்தும் உபத்திர வத்தையே அனுபவிக்க நேரிடும்போதும் சலித்துப் போய் உண்மை என்ற நிலையை விட்டு விடுகிறோம்.

நாம் உண்மையை விரும்புகின்றவர்கள் என்பதும், நாம் உண்மைக் குத்தான் முதலிடம் கொடுப்பவர்கள் என்பதும் எப்பொழுது நிரூபணம் ஆகின்றது தெரியுமா? நம்முடைய உண்மை அலட்சியப்படுத்தப்படும்போதும், நம்முடைய உத்தமம் நமக்கு நஷ்டங்களையே கொண்டு வருகின்ற வேளையிலும், நாம் உண்மையை விட்டுவிடாமல் இருக்கின்ற போதுதான் அது வெளிப்படும். பலன் கிடையாத போதும் அதை விடாதிருக்கின்றவர்கள்தான் தங்களுடைய உண்மையைக் குறித்த நிலைப்பாடு உண்மையானது என்பதை விளங்கப் பண்ணுகின்றார்கள்.

உண்மையின் நிமித்தம் உடன் பிறப்புகளால் அநியாயமாய் விற்கப்பட்ட யோசேப்பு எகிப்திற்குச் சென்றும் அந்த உண்மையை விடவில்லை. எனவே, போத்திபாரினால் உயர்த்தப்பட்டான். ஆனால், அங்கு அவனுடைய உண்மைக்கு அவமானமும், அநீதியுமே பரிசாகக் கிடைத்தது. எனவே, சிறையிலடைக்கப்பட்டான். அங்கேயாவது போய் உண்மையை விட்டுவிட்டானா? இல்லை. எனவே, சிறைச் சாலையிலும் அவன் மற்றவர்களைக் கண்காணிக்கும் பொறுப்பினைப் பெற்றான். தேவன் ஒரு நாள் அந்த நாட்டிற்கே அவனை பதியாக்கினார். நமக்கும் அப்படியே செய்வார்.

உண்மை என்பதை ஒரு சில மனிதர்களுக்காக நாம் கடைபிடிப்போ மானால், விரைவிலேயே அதனை விட்டுவிடத்தக்க சூழ்நிலைகள் ஏற்படும். ஏனென்றால், மனிதர்கள் நம்முடைய உண்மைக்கு ஒரு பெரிய பதிலீட்டை செய்வார்கள் என்றோ, ஒரு கௌரவத்தை வழங்குவார்கள் என்றோ எதிர் பார்க்க முடியாது. ஆனால், நாம் தேவனுக்காக அந்த உண்மையில் உறுதியாயிருந்தால், ஒருபோதும் மனிதர்களின் குறுகிய மனநிலைகளைக் கண்டு நாம் சோர்ந்து போகும் நிலமை வராது.

சிந்தனைக்கு...

உண்மையைக் கண்ணாக எண்ணாதவனின் வாழ்க்கையை பொய்கள் புண்ணாக்கிக்கொண்டேயிருக்கும்.

மே 3

ஏன் ஜெபிக்கிறேன்?

1 தெசலோனிக்கேயர் 5:16-28

இடைவிடாமல் ஜெபம் பண்ணுங்கள்...
1 தெசலோனிக்கேயர் 5:17

தேவனுடைய உறவை உறுதிப்படுத்தவும், அப்படி ஒரு உறவு உண்மையாக உள்ளது என்பதை உணரவும் வேறு ஏதாவது சிறந்த வழி இருந்திருந்தால், ஜெபம் செய்யாமல் நான் என் ஜெப நேரங்களை மிச்சப்படுத்தியிருப்பேன்.

தேவனுடைய அன்பை அனுபவப்பூர்வமாக ருசிக்கவும், அதனால் என் ஆத்துமாவை இளைப்பாற்றவும் எனக்கு வேறு வழி இருந்திருந்தால், ஜெபங்களுக்காக என் நேரங்களைச் செலவு செய்வதை நான் தவிர்த்திருப்பேன்.

தேவனுடைய வல்லமையைப் பெற்றுக்கொள்வதற்கு ஜெபம் அல்லாமல் வேறு நல்ல வாய்ப்புகள் இருந்திருந்தால், என் ஜெப நேரங்களை நான் வேறு வேலைகளுக்காகச் செலவிட்டிருப்பேன்.

என் மனதின் பாரங்களையும் உள்ளத்தின் உணர்வுகளையும் யாரிடமாவது கொட்டித்தீர்த்து, அதனால் எனக்குள் ஒரு அமைதியையும், ஆறுதலையும், நம்பிக்கையையும் பெற்றுக்கொள்ள முடிந்திருந்தால், நான் ஜெபம், ஜெபம் என்று அதிக நேரங்கள் செலவாவதை தடுத்திருப்பேன்.

ஜெபிக்காமலே இந்த உலகத்திலே என்னைப் பரிசுத்தமாகக் காத்துக் கொண்டிட எளிய வழிகள் எனக்குத் தெரிந்திருந்தால், ஜெபம் ஒன்றும் முக்கியமான விஷயம் அல்ல என்று முடிவு செய்திருப்பேன்.

என்னை நான் ஆராய்ந்து பார்ப்பதற்கான தூண்டுதலைப் பெறவும், ஆராய்ந்து பார்த்து உண்மைநிலை உணரவும், ஜெபம் எனக்கு மற்றெல்லா வழிகளையும் விட சிறந்த வழியாக இல்லாமலிருந்திருந்தால், ஜெபத்திற்கு நான் அதிக முக்கியத்துவம் கொடுத்திருக்கமாட்டேன்.

நான் துவண்டு போகிற வேளையில் என்னைத் திடப்படுத்தவும், சோர்ந்து போகும் வேளையில் புது பலன் பெறவும், குழப்பமான வேளைகளில் தெளிவு பெறவும், தனிமை உணர்வினால் தாக்கப்படும்போது பாதுகாப்புணர்வைப் பெறவும் ஜெபத்தைத் தவிர வேறு ஏதாவது மார்க்கம் இருந்திருந்தால், நான் ஜெபிப்பதற்கு எந்தக் கரிசனையும் செலுத்தியிருக்கமாட்டேன்.

தேவன் அருளும் கற்பனைக் கெட்டாத சமாதானத்தையும், சந்தோஷத்தையும் எனக்குள் நிஜமாக அனுவிக்க ஜெபம் அவசியமில்லை, என நினைக்க ஏதாவது காரணங்கள் கிடைத்திருந்தால், நான் ஜெபிக்காத மனிதனாக இருந்திட துணிந்திருப்பேன்.

சிந்தனைக்கு...

சோதனைகள் உன்னை தொய்ந்து போகச் செய்தால், வேத வார்த்தைகளின்மேல் சாய்ந்து இளைப்பாறக் கற்றுக்கொள்.

மே 4

தீமையும் நன்மையாக

ஏசாயா - 43:1-20

நான் புதிய காரியத்தைச் செய்கிறேன்...
ஏசாயா - 43:19

இந்தியாவிற்கு சுவிசேஷத்தைச் சுமந்துவந்த மிஷனரிகளில் மிக முக்கியமானவர் வில்லியம் கேரி. அவர் இந்தியாவிற்கு வந்து இந்திய மொழிகளைக் கற்று, இந்தியர்களுக்கு சுவிசேஷத்தைக் கொடுத்தவர். துவக்கத்தில் அவர் வங்காள மொழியைக் கற்று அந்த மொழியில் புதிய ஏற்பாட்டு வேதாகமத்தை சுமார் பன்னீரெண்டு ஆண்டுகால கடும் பிரயாசத்தில் மொழி பெயர்ப்பு செய்தார். ஆனால், அச்சகத்தில் நடைபெற்ற தீ விபத்தில் அனைத்தும் எரிந்து போனது. ஆயினும், அவர் தன்னைத் திடப்படுத்திக் கொண்டு, மீண்டும் மொழிபெயர்ப்பு பணியில் இறங்கினார். இரண்டாவது மொழி பெயர்ப்பு முதல் மொழிபெயர்ப்பை விட மிகச் சிறப்பானதாகவும், தவறுகள் தவிர்க்கப்பட்டதாகவும் இருந்தது. ஒரு விபத்து ஒரு பெரிய பிரயாசத்தின் பலனை அழித்துப் போட்டது போலத் தோன்றினாலும், உண்மையில் சிறப்பான ஒன்று உருவாவதற்கே அது வழி வகுத்தது.

ஆம், தேவன் சில நஷ்டங்கள் வாயிலாகவும், சில லாபங்களை உருவாக்குகிறார். சில நேரங்களில் நமக்கு நிகழ்கின்ற சில காரியங்கள் எந்த விதத்திலும் நன்மையானது என்று பார்க்க முடியாத அளவிற்கு தீமையானவையே. ஆனால், நாம் கர்த்தரோடிருந்தால் அந்த தீமையின் நடுவிலும் தேவன் ஒரு நன்மையை உருவாக்குகிறார். நம்முடைய வாழ்க்கையின் எந்த ஒரு தோல்வியின் நடுவிலும், நஷ்டத்தின் நடுவிலும், ஏமாற்றத்தின் நடுவிலும், தேவனை உறுதியாகப் பற்றிக் கொண்டு வாழப் பழகிக்கொள்ள வேண்டும். அப்பொழுது அந்த தோல்விகளையும், நஷ்டங்களையும், ஏமாற்றங்களையும் தேவன் உபயோகித்து ஒரு ஆசீர்வாதமான ஒன்றை ஏற்படுத்த வல்லவராயிருக்கின்றார். நகோமிக்கு நிகழ்ந்தவைகள் யாவும் வேதனையானவைகளே. அவற்றை நன்மைகள் எனக் கூற முடியாது. ஆனால், அந்த தீமையான சூழல்களை தேவன் பக்குவமாக உபயோகித்து, ஒரு நன்மையான சூழலை உருவாக்கினார் என்பது எத்தனை ஆறுதலான விஷயம்.

சில குடும்பங்களில் ஏற்பட்ட வியாபாரத் தோல்வி, சில குடும்பங்களில் ஏற்பட்ட மரணங்கள், சில உறவு நிலைகளில் ஏற்பட்ட உடைவுகள், சிலருக்கு ஏற்பட்ட வேலையிழப்புகள், சில திருமண முயற்சிகளில் ஏற்பட்ட தோல்விகள், சிலரால் இழைக்கப்பட்ட மிக மோசமான அநீதிகள் போன்றவை அந்தந்தக் குடும்பங்களை கடுமையான வேதனைகளுக்குள் தள்ளியிருக்கின்றன. ஆனால், அவைகளின் நடுவில் கர்த்தரை உறுதியாகப் பற்றிக்கொண்டதால், கர்த்தர் கேடானவைகளின் நடுவிலும் செயல்பட்டு, முந்தி இருந்ததைவிட மிக மேன்மையான சூழ்நிலைகளை ஏற்படுத்தியிருக்கிறார்.

சிந்தனைக்கு...

துவக்கத்தில் நீ பெற்ற சில தோல்விகள், எதிர்கால வெற்றிகளைத் தக்க வைக்கும் முள் வேலிகள்.

மே 5

தங்க முலாம்

மத்தேயு 23:16-31

வெள்ளையடிக்கப்பட்ட கல்லறைகளுக்கு ஒப்பாயிருக்கிறீர்கள்.
மத்தேயு 23:27

நான் மும்பாய் பட்டிணத்தில் இருந்த நாட்களில் ஒருமுறை நான் அணிந்திருந்த தங்கச் செயின் குடிபோதையின் விளைவாக இரயிலில் பறிபோனது. உடனேயே நான் ஒரு கவரிங் செயினை வாங்கி அணிந்துகொண்டு பந்தாவை விடாமல் பற்றிக் கொண்டிருந்தேன். அந்த காலகட்டத்தில் நண்பன் ஒருவனுக்கு வெளிநாட்டு வேலை சம்பந்தமாக ஒரு அலுவலகம் போயிருந்தேன். அங்கே அந்த ஏஜண்ட் இப்பொழுதே பணம் கட்டினால் உடனேயே அவர் வெளிநாடு போகலாம் என்றார். உடனேயே பணம் கட்ட முடியாததால் அவன் செயின் மற்றும் மோதிரத்தை உடனேயே அடகு வைத்துக் கொடு என்றான். எனக்கு தர்ம சங்கடமாகிவிட்டது. அது விலைபெறாத கவரிங் செயின் ஆயிற்றே.

நான் கிறிஸ்தவ ஆவிக்குரிய உலகத்திற்கு வந்த துவக்கத்தில் பலரைப் பார்த்தேன். அவர்கள் அன்பு, தாழ்மை, உண்மை, பக்தி, தயவு என தெய்வீகக் குணங்களில் சிறந்து விளங்குவது போலத் தெரிந்தது. ஆனால், அவற்றை உண்மை என்று நம்பி அணுகியபோதோ, சரியான ஏமாற்றம் காத்திருந்தது. ஏனென்றால், தங்களை நல்ல கிறிஸ்தவர்கள் என்று காட்டிக்கொள்வதற்காக பலர் அப்படியாகக் காட்சியளித்தார்களேயன்றி, அவை அவர்களின் உண்மைக் குணங்கள் அல்ல.

நாம் நற்குணம் இல்லாதவர்களாக வாழ்ந்தால் அது வருத்தத்திற் குரிய விஷயமே. ஆனால், நற்குணங்கள் உள்ளவர்கள் போல வெறும் காட்சி தந்தால் அது மோசடியான ஒரு அனுபவம் ஆகும். நம்மிடம் எந்த நற்குணத் தோற்றத்தையும் பிறர் காணாதிருந்தால், பாவிகள் என்று எண்ணிக்கொண்டு போகலாம். ஆனால், இல்லாத குணங்களை இருப்பதைப் போல காண்பித்தால், அது நமக்கு மாய்மாலக்காரர்கள் என்ற பெயரையே பெற்றுத் தரும். இயேசு பாவி களுக்காக பரிதாபப்பட்டார். ஆனால், பரிசுத்தவான்களைப் போல தோற்ற மளித்துக் கொண்டு, பாவிகளைப் போல வாழ்ந்த பரிசேயர்களைப் பார்த்து கோப மடைந்தார். எனவேதான், வெள்ளையடிக்கப்பட்ட கல்லறைகள் என்றும், மாயக் காரர்கள் என்றும் அவர்களைத் திட்டினார்.

ஆவிக்குரிய சூழ்நிலைகளில் நாம் பாடுகின்ற விதம், ஆராதிக்கும் விதம், ஜெபிக்கும் விதம், சாட்சி சொல்லும் விதம், பேசுகின்ற விதம், பிறருடைய கண்களில் நம்மைச் சிறந்த கிறிஸ்தவப் பக்தர்களாகத் தோன்றச் செய்யும். ஆனால், அந்த நல்லெண்ணத்தோடும் தொடர்ந்து நம்முடைய வாழ்க்கையைக் கவனிக்க நேரிட்டால், அங்கே அவர்களை ஏமாற வைப்பது நல்லதல்ல. நம்முடைய உண்மையான உள்நிலை நிஜங்களை மறைத்து வெளிப்புற வெள்ளைத் தோற்றம் கொடுக்கும் பழக்கம், தேவ கோபத்தினை வரவழைக்கும்.

சிந்தனைக்கு...

பாவம் ஒரு பச்சோந்தி, நிறத்தை அதனால் மாற்ற முடியும். ஆனால் குணத்தை மாற்ற முடியாது.

மே 6

அழகான வடிவம்

ஏசாயா 48:10-22

இதோ, உன்னை புடமிட்டேன்...
ஏசாயா 48:10

கொல்லன் சாதாரண இரும்புத்துண்டை உலையில் வைத்துப் பழுக்கக் காய்ச்சி, சம்மட்டியால் அடி, அடியென்று அடிக்கின்றான். சூடாக்குவதும் அடிப்பதும், வளைப்பதும், வெட்டுவதும், உரசுவதும் என்று தொடர்ந்து ஏதேதோ செய்கின்றான். ஒருவேளை அந்த இரும்புத் துண்டிற்கு உயிரும், வாயும் இருந்தால் என்னை ஏன் இப்படித் தொடர்ந்து துன்புறுத்துகிறாய் என்று கண்ணீர் விட்டு அழுதுவிடும். ஆனால், கொல்லன் அவ்விதம் செய்வது மேலான ஒரு நோக்கத்திற்காக. அவ்விதம் செய்யாவிட்டால் அந்த இரும்புத்துண்டு எதற்கும் பயன்படாமல் எங்கேயோ கிடக்கும். இப்போதோ அது பலருக்குப் பயனுள்ளதாக மாறிவிட்டது.

எவ்வளவுதான் நற்போதனைகள் கேட்டாலும் அவைகள் மனிதனுக்குள் அதிகமான நற்பண்புகளை உருவாக்கிவிடுவதில்லை. ஏனென்றால் சில நற் பண்புகள் மனிதனுக்குள் ஏற்படுவதற்கு அவனுக்குள் சில உடை தல்களும், நொறுங்கு தல்களும் தேவைப்படுகின்றன. சில எதிர்மாறான சூழ்நிலைகள் வழியாகப் போக நேரிட்டு மனம் சற்று வேதனையடையும் வேளையில்தான் உயர்ந்த சுபாவங்கள் ஆழமாக வேர்விட ஆரம்பிக்கின்றன. தாழ்மை, பொறுமை, சாந்தம் போன்ற பண்பு கள் அவ்விதமே உருவாகின்றன.

நாம் இயேசுவிடம் வந்தால் நம்மிடமும் இவ்விதமாக அவர் செய்கின்றார். பலவிதங்களில் நம்மைப் புடமிட்டு வளைத்து, நெளித்து, தேய்த்து, மினுக்கி மிகுந்த ஆசீர் வாதமான ஒரு கருவியாக மாற்றுகின்றார். இல்லையேல் நாம் பலருக்கு ஆசீர்வாதமாக மாற முடியாது. இல்லையேல் நாம் ஒரு உயர்ந்த தெய்வீக அழகு நிலையை அடைய முடியாது. பல சோதனைகள் நெருக்கங்கள் வழியாக நாம் கஷ்டப்படுகிறோம் என்பதை விட, தேவனால் ஆசீர்வாதமான ஒரு கருவியாக உருமாற்றப்படுகிறோம் என்பதே உண்மை. பாடுகளின் பாதையில்தான் நம் முடைய குணநிலைகளும், சுபாவ நிலைகளும் சரியான வடிவத்தைப் பெறுகின்றன.

யோசேப்பு, தாவீது போன்றோரை தேவன் உயர்ந்த நிலைகளில் அமர்த்தி அநேகருக்கு ஆசீர்வாதமாக்குவதற்கு முன்பாக அவர்களைப் பலவிதமான துன்பங்களின் பாதையில் நடக்கவிட்டார். அங்கே அவர்கள் அகற்ற வேண் டிய ஆகாத சுபாவங்களை அகற்றவும், பெற்றுக்கொள்ளவேண்டிய புதிய சுபாவ நிலைகளை அடையவும் வழி ஏற்பட்டது. அங்கேதான் அவர்கள் தங்களைச் சார்ந்து நில்லாமல், தேவனைச் சார்ந்து நிற்கவும், தங்களின் உணர்வுகளைச் சார்ந்து செயல்படாமல் தேவனுடைய உணர்வுகளைச் சார்ந்து செயல்படவும் பழகினார்கள்.

சிந்தனைக்கு...

புரிந்துகொள்ள முடியாதது நாளைக்குப் புரிந்துவிடும்.
அதற்கு முன்பு புரிந்துகொண்டதை நிறைவேற்று.

மே 7

கடினம் ஏன்?

உபாகமம் 6:1-14

இஸ்ரவேலே நீ நன்றாயிருப்பதற்கும்.
உபாகமம் 6:3

பிள்ளைகள் எதிர்காலத்தில் நல்லதோர் நிலைக்கு வரவேண்டும் என்று பெற்றோர் விரும்புகின்றனர். எனவே, பிள்ளைகள் சிறுவயதுகளில் இருக்கும் போது அவர்களை நன்றாகப் படிக்க வைக்க அவர்கள் விரும்புகின்றனர். ஆனால், படிப்பதும் பள்ளிக் கூடம் போவதும் பிள்ளைகளுக்கு மிகவும் கடினமானவையாக இருக்கும். அவர்கள் படிப்பதையும் பள்ளிக்கூடம் போவதையும் பெற்றோர் தங்கள்மேல் சுமத்தின சுமை களாகவே எண்ணுவார்கள்.

தேவனும் நாம் அவருடைய கட்டளைகளின்படியும், நல்ல போதனைகளின் படியும் வாழ்வதற்கு நம்மை அழைக்கின்றார். எனவே நல்ல ஒழுங்குகள், நல்ல குணங்கள், நல்ல செயல்கள், நல்ல மன இயல்புகள், கட்டுப்பாடுகளை உடைய வாழ்க்கை முறை ஆகியவை நம்மிடம் எதிர்பார்க்கப்படுகின்றன. ஆனால், அவை எளிதாயிருப்பதில்லை. நற்குணங்களோடு வாழ்வதும், தவறானவைகள் விஷயத்தில் நாம் நம்மைக் கட்டுப்படுத்தி ஒழுங்குகளுக்கு உட்பட்டு வாழ்வதும் கடினமான விஷயங்களே. இது போன்ற சூழ்நிலைகளில் நாம் கடவுளுக்குப் பயந்து இவ்வளவு கட்டுப்பாடுகளோடு வாழவேண்டியிருக்கிறதே என்று சலிப்புடன் சிந்திக்கின்றோம்.

ஆனால், இவை யாவும் நாம் நன்றாயிருப்பதற்காகவும், நாம் நல்லதோர் வாழ்க்கை முறையில் சிறந்திருக்கவுமே என்பதை நினையாமல் போகின்றோம். நாம் மனநிலையிலும், குணநிலையிலும், ஒழுங்கு நிலையிலும் தேர்ச்சி பெற்றால்தான், நல்லதோர் வாழ்க்கையைக் காண முடியும் என்பதை யோசிக்காமல் போகின்றோம்.

சில தவறான விஷயங்களைத் தவிர்க்க சிலர் மிகவும் சிரமப்படுகின்றனர். இச்சைகளோடு சம்பந்தப்பட்ட சில விஷயங்களில் விலகியிருக்க சிலர் மிகவும் வருத்தப்படுகின்றனர். ஆனால், அதிகச் சிரமமாகவும் கடினமாகவும் உணர்வதற்கு முக்கிய காரணம், அவற்றைத் தங்களின் நலனுக்காக என்று எண்ணாமையே. தேவனுக்குப் பயப்படும் விஷயமாக அவற்றை எண்ணுவதால், அவற்றில் வெற்றி பெறுவது கடினமான விஷயங்களாகி விடுகிறது.

நாம் நற்குணங்களும், நல்ல ஒழுங்குகளும் உடையதோர் வாழ்க்கையை வாழவேண்டும், என்ற தரிசனமுடையவர்களாக வாழ வேண்டும். அவ்விதமான ஓர் வாழ்வுதான், சமாதானமும் சந்தோஷமும் நிறைந்த ஒரு ஆசீர்வாதமான வாழ் வாயிருக்கும் என்ற நம்பிக்கை வேண்டும். கடவுளுக்காக என்ற உணர்வைவிட, நம்முடைய நலனுக்காக என்ற உணர்வு இருந்தால்தான், சிரமங்களையும் கடினங் களையும் ஏற்க இயலும்.

சிந்தனைக்கு...

பயத்தினால் தேவனைப் பணிகிறவனையல்ல. அன்பினால் அவருடைய வழியில் நடக்கிறவனையே தேவன் விரும்புகிறார்.

மே 8
அன்பும் தீர்மானமும்

யோவான் 15:1-17

நான் உங்களில் அன்பாயிருக்கிறது போல...
போயாவன் 15:12

அன்பைக் குறித்த ஆழமான உணர்வுப்பூர்வமான தேவ செய்தி ஒன்றைக் கேட்க நேர்ந்த பெயர் கிறிஸ்தவர் ஒருவர் அன்றிலிருந்து தன் மனைவியை உண்மையாய், ஆழமாய் நேசிக்க வேண்டும் என்று தீர்மானம் செய்தார். தன் மனைவிக்கு அன்பினால் சில பொருட்களை வாங்கி கொடுத்தார். அன்பொழுகப் பேச ஆரம்பித்தார். திடீரென்று தன் கணவன் அன்பின் சிகரமாக மாறியதைக் கண்ட மனைவிக்கு சந்தோஷம் தாங்கவில்லை. ஆனால், அந்தச் சந்தோஷம் அதிக நாள் நீடிக்கவில்லை. பௌர்ணமி நிலவு கொஞ்சம் கொஞ்சமாக தேய்ந்து அமாவாசை ஆவது போல அவருடைய அன்பும் கரைந்து போய் இல்லை என்ற நிலைமைக்கு வந்துவிட்டது.

அன்பு காண்பிப்பது என்பதும் பிறரை உண்மையாக நேசிப்பது என்பதும் நாம் எடுக்கும் தீர்மானங்களைச் சார்ந்ததல்ல. சரீரத்திலே போதிய பலம் இல்லாத ஒருவன் இன்றிலிருந்து கடுமையாய் உழைக்கப் போகிறேன் என்று தீர்மானம் செய்து விடுவதால் அது சாத்தியதையாகிவிடுமா? முதலாவது சரீரத்தில் ஆரோக்கியம் பெற எதைச் செய்ய வேண்டுமோ அதைச் செய்ய வேண்டும். பின்னர்தான் உழைக்க முடியும்.

உண்மையான அன்பு என்பது தேவனிடத்திலிருந்து ஓடுகிற ஒரு ஜீவநதி. அந்தத் தேவனோடு நமக்கு ஒரு ஐக்கியம் ஏற்படும் போதுதான் அந்த அன்பாகிய ஜீவநதியின் தண்ணீர் நம்முடைய வறட்சியான இதயத்தில் பாய்ந்து நம்மை அன்பில் வளப்படுத்த முடியும். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவினால் நம்முடைய பாவங்கள் நீங்கி நாம் சுத்திகரிக்கப்படும்போதுதான் இந்த அனுபவம் நம்முடைய வாழ்க்கையில் ஏற்படும்.

நாடக நடிகன் ஒரு குறிப்பிட்ட சூழ்நிலைக்காக கொஞ்ச நேரம் குறிப்பிட்ட சில பண்புகளை வெளிப்படுத்திவிட்டு, மீண்டும் இயற்கையான பழைய நிலைக்குத் திரும்பி விடுவது போலவே, பலருடைய அன்பு காட்டும் அனுபவமும் உள்ளது. உண்மையான அன்பின் இணைப்பு ஆண்டவரால் நமக்குள் எற்படாவிடில் யாருக்கும் இதுவே நடக்கும்.

அன்பு காட்டுவது என்பது ஏரியில் படகோட்டுவது போல எப்போதும் எளிதான ஒன்றல்ல. சில நேரம் அது மலையேறும் அனுபவம் போன்றது. சில நேரம் புயலைச் சந்திப்பது போன்ற அனுபவம் அது. அதற்குத் தீர்மானம் மட்டும் போதாது. தேவ ஐக்கியமே அதனுடைய முக்கியமான தேவை.

சிந்தனைக்கு...

தேவ அன்பை தனக்குள் ருசிக்கும் அளவிற்குதான், இன்னொருவர்மேல் காட்டும் அன்பு உண்மையாயிருக்கும்.

மே 9

அதுவும் அன்பே

சங்கீதம் 103 : 1 – 13

ஆத்துமாவே கர்த்தரை ஸ்தோத்திரி.
சங்கீதம் 103 : 1

ஒரு பெண் தான் விரும்பிய ஒருவனை மணக்க ஆசைப்பட்டாள் ஆனால் அவளுடைய தந்தையோ அதற்குச் சம்மதியாமல் வேறு ஒரு இடத்தில் மாப்பிள்ளை பார்த்து திருமணம் செய்து வைத்தார். தன்னுடையவிருப்பத்தை நிறை வேற்றாத தன்னுடைய தந்தையை அவள் அன்பும் கரிசனையும் இல்லாத ஒருவராக எண்ணித் தனக்குள் வருத்தப்பட்டாள். ஆனால், சில வருடங்கள் சென்ற பிறகு விரும்பியவனின் தகாத வாழ்க்கையைப் பற்றி அவள் அறிந்து கொள்ள நேரிட்டது. அப்பொழுது தன்னுடைய தந்தை தனக்கு மிகவும் நல்ல காரியத்தையே செய்திருப்பதை உணர்ந்தாள். தகப்பனின் அன்பையும், கரிசனையையும் அவள் உணர்ந்துகொள்ளச் சிறிது காலம் தேவைப்பட்டது.

நம்முடைய வாழ்க்கையிலும் சில நேரங்களில் தேவனுடைய அன்பையும், கரிசனையையும் நாம் உணராமல், அவர் நாம் விரும்பியதைத் தராமல் வருத்தப் படுத்தி விட்டதைப் போல எண்ணுகிறோம். அன்புள்ள தேவன் ஏன் என் மன வாஞ்சையின்படி செய்யவில்லை? என்ற கேள்வி வந்துவிடுகிறது. ஆனால், சில விஷயங்களில் தேவ அன்பையும், அக்கறையையும் நம்மால் உடனடியாக உணர முடிவதில்லை. அதனை உணரக் கொஞ்சம் காலங்கள் ஆகும். ஆனாலும் தேவன் அன்புடனும் கரிசனையுடனும்தான் எல்லாவற்றையும் செய்திருக்கின்றார் என்று உணரும் காலங்கள் வராமல் போவதில்லை.

நாம் விரும்பியபடி ஒரு கல்வி வாய்ப்போ, வேலையோ, தொழிலோ, வாழ்க்கைத் துணையோ அமையாமல் போய்விடலாம். எவ்வளவோ ஜெபித்தும் இதய விருப்பங்கள் நிறைவேறாமல் போகலாம். எங்கே கர்த்தரின் அன்பு? என்ற கேள்வியும் எழலாம். ஆனால், வாய்க்காமல் போன சில விஷயங்கள்கூட தேவ அன்பின் விளைவான ஒரு நன்மையே என்பதைக் காண்பதற்கு கர்த்தர் ஒரு நாள் கண்களைத் திறப்பார்.

மோசேயின் வாழ்க்கையில் முதலாவது விரும்பியது அல்ல. விரும்பாததே நடந்தது. யோசேப்பின் வாழ்க்கையில் ஆசைப்பட்டது அல்ல. ஆசைப்படாததே நடந்தது. தாவீதின் வாழ்க்கையில் அவன் பிரியப்பட்டது அல்ல. பிரியப்படாததே நிகழ்ந்தது. ஆனால், அவைகளின் பின்னால் தேவ திட்டத்தின்படியான அன்பும் கரிசனையும் இருந்தது. பின்னாட்களில் அது வெளிப்பட்டது. கர்த்தர் யாவற்றையும் நலமான நோக்குடன் அன்பின் விளைவாகவே செய்திருக்கின்றார் என்பது உறுதிப்பட்டது.

சிந்தனைக்கு...

வாழ்க்கையை முழுமையாக இயேசுவிடம் ஒப்படைத்துவிட்டால் துன்பங்கள் நம்மைத் துக்கப்படுத்துவதில்லை.

மே 10

குடும்ப வாழ்வு

ரோமர் 15 :1 -9

ஒருவரையொருவர் ஏற்றுக்கொள்ளுங்கள்...
ரோமர் 15:7

குடும்ப வாழ்வை நன்றாக வாழ்வது தொடர்பாகவும், குடும்ப வாழ்வில் உள்ள பிரச்சினைகளைக் களைதல் தொடர்பாகவும் ஆன்மீகம் சாராத புத்தகங்கள் பல நல்ல நல்ல ஆலோசனைகளைத் தருவது உண்மை. அறிவுசார்ந்த பல நல்ல கட்டுரைகள் குடும்ப வாழ்வைக் குறித்த மிக நல்ல கருத்துக்களைத் தருகின்றன.

ஆனால், பிரச்சினை என்னவென்றால், குடும்ப வாழ்வு தொடர்பான ஆலோசனைகள் நன்றாயிருக்கின்றன. ஆனால், குடும்பத்தில் அவரவர்களின் மன உணர்வுகள் மேலோங்கியிருக்கும் சூழ்நிலைகளில் நல்ல அறிவுரைகளையும், யோசனைகளையும் ஏற்றுச் செயல்பட இயலவில்லை. நல்ல ஆலோசனைகளுக் கேற்றபடி மனதை மாற்றியும் திருத்தியும் செயல்பட முடியவில்லை

குடும்ப வாழ்க்கையில் உறவுகளைக் கட்டிக்காக்கவும், அவற்றால் மகிழ்ச்சியடையவும் பக்குவமான இருதயம் தேவை. சில மன இயல்புகள் மாற வேண்டும். சில மன உணர்வுகளின் கடினம் கரைய வேண்டும். மனதில் திருத்தங்கள் ஏற்படவேண்டும். உண்மையை ஏற்றுக்கொள்ளுதல், தவறை உணருதல், சிலவற்றைச் சகித்தல், சிலவற்றை விட்டுக்கொடுத்தல், போன்றவை அவசியம். இவற்றைச் செயல்படுத்த நல்ல ஆலோசனைகளும், புத்திமதிகளும் போதாது. இதற்கு அனுசரித்துச் செயல்படும் தன்மையுள்ள ஒரு இருதயம் தேவை.

எனவே, கடவுளின் ஆளுகையை இருதயத்தில் ஏற்று, கடவுளின் மேலாண்மைக்கு இசைந்து போகும்படி பழக்குவிக்கப்பட்ட இருதயம் தேவை. இவ்விதமான இருதயம் இல்லாத நிலையில், எத்தனை அறிவு சார்ந்த அறிவுரைகளையும், அனுபவம் சார்ந்த ஆலோசனைகளையும், மனவியல் சார்ந்த விளக்கங்களையும், தத்துவ ரீதியான கருத்துக்களையும் கொடுத்தாலும் நல்ல விளைவுகள் ஏற்படாது.

ஏனென்றால், இயற்கையான மனிதனுடைய இருதயம் அவன் விரும்பினாலும் நன்றாக சரியாகச் செயல்பட்டு ஒத்துழைக்காது. கடவுள் மட்டுமே இருதயத்தை இசைந்து போகச் செய்யமுடியும். கர்த்தருக்கு நம்மை அர்ப்பணித்து, அவருடைய ஆவியின் ஆளுகைக்கு நம்மை உட்படுத்தினால்தான், நம்மை அவர் பக்குவப் படுத்தமுடியும்.

நம்மையும் நம்முடைய மனநிலையையும் அவர் ஆளுகை செலுத்தி பக்குவப்படுத்தும் போதுதான், குடும்ப வாழ்வின் சந்தோஷத்திற்குத் தேவைப்படும் நற்குணங்களும், அனுசரிக்கும் ஆற்றல்களும் கிடைக்கும்.

சிந்தனைக்கு...

இறை உறவை இழந்துவிட்டு மனித உறவில் மயங்காதே. மனித உறவை இழிவு செய்வோர் இறை உறவை அடைவதில்லை. ஏற்கத் தயங்காதே.

மே 11

சொல்வது சரியா?

லூக்கா 10:25-37

நீயும் போய் அந்தப்படியே செய்.
லூக்கா 10:37

வாழ்க்கையில் சில விஷயங்கள் மிகவும் சரி என்று நாம் அறிந்திருப்போம். ஆனால், மற்றவர்கள் அவ்விதம் அறிவதில்லை. அவர்களுக்கு எவ்வளவுதான் விளக்கி விவரித்துப்பேசினாலும் அவர்களை நம்ப வைப்பது கடினமாகிவிடுகிறது. ஒரு குறிப்பிட்ட அளவைக்கடந்து நாம் யாரையும் சொல்லி விளக்கி நம்பவைத்து விடமுடியாது. ஆனால், அதற்காகச் சோர்ந்து போகத் தேவையில்லை. எதனைச் சரி என்று நம்பினோமோ அது சரி என்று இன்று மற்றவர்கள் ஏற்றுக்கொள்ளாவிட்டாலும், அதனைச் சரி என்று சாதிக்கும் வழிகளை நாம் விட்டு விடக்கூடாது.

சரி என்று சாதிப்பது வார்த்தைகளினால் அல்ல. எதைச் சரி என்று நம்பினோமோ அது சரியாயிருக்கிறது என்பதை நாம் வாழ்ந்து காட்ட வேண்டும். ஒருவர் ஒரு குறிப்பிட்ட வழியைக் காட்டி இதுதான் குறிப்பிட்ட இடத்தை அடைவதற்கான சரியானவழி என்று சொன்னால், அந்த வழியில் யார் நடக்க வராவிட்டாலும் அவர் முதலாவது நடக்க முன்வர வேண்டும். அந்த வழி தன்னைச் சரியான இடத்திற்கு சரியாகக் கொண்டு செல்வதை பிறர் பார்க்கச் செய்ய வேண்டும்.

சிலர் இதுதான் சரியான உபதேசம். இதுதான் சரியான சத்தியம். இதுதான் சரியான சபை என்றெல்லாம் மற்றவர்களை நம்ப வைக்கப் படாத பாடுபடுவார்கள். ஆனால் அந்த உபதேசமும், சத்தியமும் அவர்களை மிகச் சரியானவர்களாக மாற்றி யிருக்கிறது என்பதற்கு எந்த சாட்சியும் இராது. அலுவலகம் ஒன்றில் பணிபுரியும் கிறிஸ்தவர் ஒருவர், அங்குள்ள பலரிடம் கிறிஸ்துவினால் மட்டுமே இரட்சிப்பு என்று பலமுறை சொல்வார். ஒருநாள் அவர் ஒருவரிடம் இதைக் குறித்துச் சொன்ன போது, அவர் உங்கள் விளக்கங்கள் நன்றாயிருக்கிறது. ஆனால், நீங்கள் சரியாக இருப்பதை நான் பார்க்காத போது, நீங்கள் சரி என்று சொல்வதை என்னால் எப்படி நம்ப முடியும் என்றார்.

எனக்கு சிலரைத் தெரியும். எங்கு யாரைக் கண்டாலும் எங்க சபைதான் சரியான சபை. எங்க சபைப் போதனைகள்தான் சரியானவை என்று சாதிப்பார்கள். ஆனால், அவர்களிடம் அன்பையோ, தாழ்மையையோ, பொறுமையையோ, சாந்த குணத்தையோ, கபடமற்ற பேச்சையோ யாரும் பார்க்க முடியாது. அவர்கள் சொல்வது ஒருவேளை உண்மையாயிருக்கலாம். ஆனால், அவர்களின் சுபாவங் களும், வார்த்தைகளும், மனநிலை பிரதிபலிப்புகளும் அவர்கள் எதனாலும் சரியாக்கப் படவில்லை என்பதைக் காண்பித்தால் என்ன செய்ய முடியும். ஒருவர், தான் சரி என்று சொல்வதை யாராவது ஏற்காவிட்டால், பின்னர் அவரிடம் பேசவே மாட்டார். இப்படியிருக்க இவர் போதிப்பது சரி என்பதற்கு சான்று இல்லையே.

சிந்தனைக்கு...

இறைவனை எந்த அளவு நேசிக்கிறாய் என்பதை பிற மனிதர்களை எவ்வளவு நேசிக்கிறாய் என்பதால் அறியலாம்.

மே 12

எது ஆசீர்வாதம்

சங்கீதம் 4:1-8

அதிக சந்தோஷத்தை என் இருதயத்தில் தந்தீர்...
சங்கீதம்-4:7

வியாபாரம் செய்து வந்த ஒருவர் ஒரு காலகட்டத்தில் மனந்திரும்பி கிறிஸ்தவராக மாறினார். ஆழ்ந்த கிறிஸ்தவ அனுபவத்திற்கு வந்த அவர் தருணம் கிடைக்கும் போதெல்லாம் தவறாமல் கர்த்தர் தன்னை மிகுதியாக ஆசீர்வதித்திருப்பதாகச் சாட்சி கூறுவார். ஆனால், இவருடைய முந்தைய சூழ்நிலையையும், பிந்திய சூழ்நிலையையும் அறிந்திருந்த அவருடைய உறவினர்கள் சிலருக்கு ஆசீர் வாதத்தைக் குறித்த அவருடைய சாட்சி வெறும் வேடிக்கையாயிருந்தது. அவருடைய உறவினர் சிலர் அவரிடம் அதைக் குறித்துக் கேட்கவும் செய்தனர்.

நீங்கள் கிறிஸ்தவராகும் முன்பு பெரிய ஒரு கடையை நடத்தி வந்தீர்கள். ஒரு வசதியான வீட்டில் வாழ்ந்தீர்கள். வசதியான காரில் பிரயாணம் செய்தீர்கள். ஆனால், இன்றோ சாதாரண சின்னக் கடையை நடத்துகிறீர்கள். ஒரு சாதாரண வாடகை வீட்டில் இருக்கிறீர்கள். காரில் போய் வந்திருந்த நீங்கள் சாதாரண டி.வி.எஸ். மொபெட் வண்டியில் போகிறீர்கள். இந்த நிலையில் இயேசு ஆசீர்வதித்தார். இயேசு ஆசீர்வதித்தார் என்று சொல்கிறீர்களே, ஏன் இப்படிப் பொய் சொல்லி மதப் பிரச்சாரம் செய்கிறீர்கள் என்று கேட்டனர்.

அதற்கு அவர், நான் பொய் சொல்லவில்லை. உண்மையைத்தான் சொல் கிறேன். பெரிய வீடு, பெரிய கடை, நல்ல கார் இருந்ததெல்லாம் உண்மைதான். ஆனால், அன்று என் மனதில் நிம்மதியில்லை. உண்மையான சந்தோஷம் இல்லை. வாழ்க்கையில் உண்மையில்லை. நல்ல குணங்கள் இல்லை. குடும்பத்தில் அமைதி யில்லை. ஆனால், இன்று எனக்கு இவைகள் யாவற்றையும் இயேசு தந்திருக்கின்றார். சிறிய வீடு, சிறிய வியாபாரம், சிறிய வாகனம் என எல்லாம் சின்னதாயிருந்தாலும், என்றுமே இல்லாதிருந்த திருப்தியும், நம்பிக்கையும், சமாதானமும் இன்று எனக்கு இருக்கிறதே. அது ஆசீர்வாதம் இல்லையா, இதை நான் எல்லோருக்கும் சொல்ல வேண்டாமா, என்று பதிலளித்தார்.

ஆம், ஆசீர்வாதம் என்பது பொருளாதார நிலையில் எவ்வளவு வளமா யிருக்கிறோம் என்பதில் அல்ல. மனதில் எந்த அளவிற்கு நிறைவும், திருப்தி யுமாய் இருக்கிறோம் என்பதே அது. பெரிய வீடு, வசதியான கார், உயர்ந்த அந்தஸ்து, ஏராளமான பணம் ஆகியவற்றைப் பெற்றிருந்தும் நல்ல குணமும், சிறந்த பண்பும், மன அமைதியும், சந்தோஷமும் இல்லாவிடில் என்ன பிரயோஜனம்? செல்வ நிலையில் ஆசீர்வாதத்தைக் கணக்கிடுவது தவறு. மிகுந்த செல்வங்களின் நடுவில் சாலொமோன் மனநிறைவையும், மகிழ்ச்சியின் நிறைவையும் காண முடியவில் லை. ஆனால், தாவீது அற்பமான நிலையில் அவை யாவற்றையும் பெற்றிருந்தான்.

சிந்தனைக்கு...

உன் துன்பங்களை தேவனுடன் பகிர்ந்து கொள்.
உன் மகிழ்ச்சியை மனிதர்களோடு பங்கிட்டுக் கொள்.

மே 13
மாற்றத்தை விரும்பணும்

மத்தேயு 18:1-20

நீங்கள் மனந்திரும்பிப் பிள்ளைகளைப் போல்...
மத்தேயு 18:3

தேவ ஊழியர் ஒருவரின் பிரசங்கங்கள் சிலவற்றை சிலகாலம் கேட்ட ஒருவர் பின்னர் கேட்பதை நிறுத்திவிட்டார். அவருடைய பிரசங்கங்களை இப்பொழுது நீங்கள் ஏன் கேட்பதில்லை, என விசாரித்த போது அவர் எப்பொழுது பிரசங்கம் செய்தாலும், இன்னும் ஒரு மாற்றம் அவசியம் என்ற ரீதியிலேயே பிரசங்கிக்கின்றார். அது கேட்க நன்றாயில்லை என்று அவர் பதிலளித்தார்.

சிலர் தங்களிடம் இன்னும் மாற்றங்கள் தேவை என்று சிந்திக்கத் தூண்டும் வார்த்தைகளைக் கேட்க விரும்புவதில்லை. ஏனென்றால், தங்களிடம் உள்ள குறைவுகளை உணருவதும், அவைகளைச் சரிசெய்வதும் அவர்களுக்குக் கடின மான காரியங்கள். அவர்கள் நல்ல கருத்துக்களைக் கவனித்துக் கேட்க விரும்பு வார்கள். ஆனால், தங்களிடம் உள்ள நல்லதல்லாதவைகளை உணரவும், அவற்றைச் சரிசெய்யவும் விரும்பமாட்டார்கள்.

கிறிஸ்தவம் ஆன்மீக வாழ்விற்கு, ஆவிக்குரிய மறுபடியும் பிறத்தல் என்று அனுபவத்தை மிக முக்கியமாகக் காண்பிக்கின்றது. இந்த அனுபவம் ஒருவரிடம் ஏற்படும்போது, அவருக்கு மாற்றங்களை விரும்பும் ஆவிக்குரிய மனோபாவம் வந்துவிடுகிறது. எந்த வார்த்தை அல்லது எந்த சிந்தனை தனக்குள் ஒரு மாற்றத்தின் தேவையை வற்புறுத்துகிறதோ அதனை அவர் விரும்பி ஏற்கின்றார். ஏனென்றால், மறுபடியும் பிறத்தல் என்ற அனுபவம், தேவனுடைய பிள்ளையாக ஒருவரை மாற்றுகின்றது. தேவனுடைய பிள்ளையாக, தன்னை அடையாளம் காண இயன்றவர், இன்னும் இன்னும் தான் தேவனுடைய பிள்ளைக்கேற்ற அழகைப் பெற வேண்டும் என்ற ஆசையைப் பெறுகின்றார்.

ஆவிக்குரிய மறுபிறப்பின் அனுபவம் பெற்றவன், தனக்குள் இன்னும் ஓர் மாற்றம் அல்லது திருத்தம் அவசியம் என்று உணரும் விதமாக எதையாவது கேட்டால் மகிழ்ச்சியடைவான். ஏனென்றால், அது ஒரு ஆவிக்குரிய இயற்கைத் தன்மை, இயேசு கிறிஸ்துவின் ஐக்கியத்துடன் வாழ்கின்றவர்களை மனந்திரும்புதலுக்கேற்ற பிரசங்கங்கள் ஊக்குவிக்குமேயன்றி உற்சாகமிழக்கச் செய்யாது.

நாம் வாழும் வீட்டை இன்னும் நாம் அழகாக வைக்க விரும்பமாட்டோமா? நாம் அணியும் உடைகளை இன்னும் அழகாக அணிய வேண்டும் என்று விரும்ப மாட்டோமா? அப்படியானால் நம்முடைய தேவன் வாழ்கின்ற வீடாகிய நம்மை, இன்னும் அதிகமதிகமாக அழகாக்க விரும்ப வேண்டுமே. மாற்றங்களை மனதார ஏற்று உணர்கின்ற வாழ்வுதான் உண்மையான கிறிஸ்தவ வாழ்க்கை.

சிந்தனைக்கு...

நீரில்லாத நிலத்தில் விழுந்த விதைகள் பலனற்றவை,
இதய சுத்தமில்லாதவனின் இறை நம்பிக்கைகள் பயனற்றவை.

மே 14

பாவத்தை ஜெயிக்க...

1 கொரிந்தியர் 10:1-13

பாவத்திற்கு விரோதமாய்ப் போராடுகிறதில்.......
எபிரெயர் 12:4

சோதிக்கப்படுதலே பாவமாகிவிடாது. இச்சையான எண்ணங்களும், நினைவுகளும், யோசனைகளும், கற்பனைகளும், ஆசைகளும் சாத்தானால் நமக்குள் விதைக்கப்படுவது உண்டு. அவைகளையே நாம் பாவங்களாக எண்ணத் தேவையில்லை. அவைகளைச் சார்ந்து நாம் நம்மை பாவத்திற்குள் விழவிட்டுக் கொடுப்பதுதான் பாவம். ஒரு ஆடவன் ஒரு பெண்ணைப் பார்க்கும்போதும், ஒரு பெண் ஆடவனைப் பார்க்கும் போதும் எந்தவித திட்டமும் இல்லாமலே எதிர்பாலின இழுவை சார்ந்த ஒரு இயற்கையான விருப்ப உணர்வு ஏற்படுவது சகஜமே. அதைப் பாவமாக எண்ணிவிடக்கூடாது. ஆனால் அந்த விருப்பங்களைச் சார்ந்து செயல்பட மனதை விட்டுக் கொடுக்கும்போது பாவம் பிறக்கின்றது.

முதலாவது, எந்த ஒரு சோதனையும் வெல்லத்தக்க சோதனையே என்ற விசுவாசம் வேண்டும். ஏனென்றால், திராணிக்கு மிஞ்சின சோதனை நமக்கு வருவதில்லை, என்று, வேதம், சொல்கின்றது. (1 கொரி 10:13), இதுபோன்ற, சோதனையால் பலர் வீழ்ந்திருக்கலாம். ஆயினும், நாம் கர்த்தரோடிருப்பதால் அதனைச் ஜெயிக்க முடியும் என்ற நம்பிக்கை வேண்டும்.

இரண்டாவதாக, ஆயத்தம் வேண்டும். யோசேப்பு வென்றான் என்பதினால் நாம் வென்று விட முடியும் என எண்ணிவிடக்கூடாது. கர்த்தரோடு நெருங்கி வாழ்கின்ற ஒரு வலிமையான ஆவிக்குரிய அனுபவம் இருந்தால்தான், சோதனைகளைச் ஜெயிக்கும் ஆயத்தம் நமக்கிருக்கும்.

மூன்றாவதாக, பெரும்பாலான பாவ சோதனைகளுக்கு சூழ்நிலைகள் ஒரு காரணமாவதுண்டு. தேன் கூட்டின் அருகே நின்று கொண்டு தேனீக்களைத் துரத்துவது சரியல்ல. நாம் தேன் கூட்டைவிட்டு தூரமாகப் போகவேண்டும். தவிர்ப்பதற்கு வாய்ப்புள்ள சூழ்நிலைகளைத் தவிர்க்காமல், வென்று காட்டுகிறேன் என்று வீர வசனம் பேசக் கூடாது.

நான்காவதாக, போராடவேண்டும். பாவத்திற்கு விரோதமாகப் போராட நாம் முன்வர வேண்டும். நாம் எதிர்ப்புக் காட்டாமல் நின்று கொண்டிருந்தால் பூனை கூட நம்மை வீழ்த்தி விடும். எதிர்ப்புக் காட்டினால் புலிகூட புறமுதுகு காட்டி ஓடும். பாவத்திற்கு விரோதமாகப் போராடுவதுதான் நம் வாழ்வில் தேவையான பெரிய போராட்டம். ஏனென்றால், போராட முன் வந்தால்தான் தாவீதைப் போல தேவனால் பலப்படுத்தப்பட்ட வெற்றிகளைக் காணமுடியும். பவுலைப் போல நாமும் நல்லதொரு போராட்டத்தைப் போராடித்தான், வெற்றிக் கிரீடத்தை அடையவேண்டும்.

சிந்தனைக்கு...

தேவனின் தொடுதலை உணர நீ காட்டும் ஆர்வம்தான், உன்னைத் தொடமுடியாமல் சாத்தானை ஓட வைக்கும்.

மே 15

இழக்காவிடில்

பிலிப்பியர் 3-1 – 15

கிறிஸ்துவுக்காக, நஷ்டமென்று எண்ணினேன்.
பிலிப்பியர் 3 : 8

ஒரு மனிதன் கையில் ஒரு நல்ல மாம்பழத்தை வைத்திருந்தான். அப்போது அங்கே ஒரு தங்க மாம்பழத்தைக் கண்டான். உடனேயே, அதனையும் எடுத்துக் கொள்ள விரைந்தான்.ஆனால், கையிலிருந்த மாம்பழத்தை விட்டு விடாமலே அதையும் எடுக்க முயற்சி செய்தான். எவ்வளவோ முயற்சி செய்தும் இரண்டு மாம்பழங்களையும் ஒரே கையினால் எடுக்க அவனால் இயலவில்லை.

ஆம், தங்க மாம்பழம் அவனுக்கு வேண்டும்.ஆனால், சாதாரண மாம்பழத்தை விட்டுவிடாமலே அது வேண்டும். முடிவு இரண்டும் கையில் தங்கவில்லை. பலருடைய இறைவாழ்க்கையும், இப்படியேதான் உள்ளது. சிலர் உலக ரீதியான எந்த ஒரு நன்மைகளையும் இழக்காமல் அனுபவித்துக்கொண்டே, கர்த்தருடைய ஆசீர்வாதங்களையும் குறைவின்றிப் பெற விரும்புகின்றனர். உலக நிலையிலும் எல்லாம் வேண்டும். விண்ணுலக வாழ்வும் வேண்டும். ஆவிக்குரிய வாழ்க்கையும் வேண்டும். ஆனால், மண்ணுலக சுகங்களும் குறைவின்றி வேண்டும். இதன் விளைவாக, இரண்டு நிலை ஆசீர்வாதங்களும் முழுமையாக இல்லாமல் போகிறது.

ஒன்றிற்காக இன்னொன்றை இழக்க விரும்பாத வரையிலும், இறை வாழ்க்கை எதற்கும் பிரயோஜனமில்லாமல் போகும்.தன்னுடைய மாம்சீக இச்சைகள் எதற்கும் இல்லை என்று சொல்லாமலே, தேவனையும் பிரியப்படுத்த முயன்றான் சாலொமோன் ராஜா. உலக இன்பங்கள் அனைத்தையும் அனுபவித்துக்கொண்டே, இறை இன்பத்தையும் அனுபவிக்க அவன் முயன்றான். இறுதியில் இரண்டு நிலைகளிலும் அவன் அதிருப்தியையும், சலிப்பையும் கண்டான்.

தேவன் அருளுகின்ற சந்தோஷத்தினாலும், சமாதானத்தினாலும் நாம் நிறை வடைய வேண்டுமானால், அற்ப உலகச் சந்தோஷங்களின் நிறைவற்ற தன்மை களை உணர்ந்து, அவைகளை அற்பமாக எண்ணுகின்ற மனநிலை வேண்டும். இயேசு கிறிஸ்துவினால் வருகின்ற ஆசீர்வாதங்களுக்காகத் தன்னுடைய குலப் பெருமை, சமுதாயக் கனம், ஆகியவற்றை அற்பமாகவும், குப்பையாகவும் எண்ணு கின்ற மனநிலை பவுலுக்கிருந்தது.தேவனுடைய சந்தோஷங்களாலும், ஆசீர்வாதங் களாலும் நம்முடைய வாழ்க்கை திருப்தியடைய வேண்டுமானால், உலகப்பிரகார நிலையில் மாயையான சில சந்தோஷங்களையும், அந்தஸ்துக்களையும், சுபாவங் களையும், இழப்பதற்குநாமாக முன் வர வேண்டியது மிகவும் அவசியம். உலகப் பொருளின் மேலும், தேவன் மேலும் ஒரே நேரத்தில் நாம் பிரியம் வைத்து, வெற்றி பெற முடியாது. மண்ணுக்குரிய சிலவற்றை இழக்காம விண்ணுக்குரிய எதையும் பெற முடியாது.

சிந்தனைக்கு...

தனக்காகவே வாழ்கின்றவன் வாழ்க்கையை அர்த்தமற்றதாக்குகிறான், பிறருக்காக வாழ்கிறவன் வாழ்க்கைக்கு அர்த்தமாகிறான்

மே 16

இலவசம் வேண்டாம்

ஆதியாகமம் 23:1-20

நிலத்தின் விலையைத் தருகிறேன். வாங்கிக் கொள்ளும்.
ஆதியாகமம் 23:13

காவல்துறையில் பணிபுரியும் சிலரை நான் கவனித்திருக்கின்றேன். அவர்கள் பேருந்தில் ஏறினால் கட்டணம் கொடுக்கமாட்டார்கள். உணவகம் சென்றால் காசு கொடுக்கமாட்டார்கள். தேனீர் கடை, பழக் கடை என்று அவர்கள் எங்கு சென்றாலும் எல்லாம் தங்களுக்கு இலவசமாக கிடைக்க வேண்டும் என்றே எதிர்பார்ப்பார்கள். காவல் துறையைச் சார்ந்தவராயிட்டே, தங்களுக்கு ஏதாவது தொந்தரவு வந்து விடக்கூடாது என அஞ்சி அவர்களிடம் காசு கேட்கவும் மற்றவர்கள் பயப்படுவார்கள். கண்ணியமாகவும், கௌரவமாகவும் செயல்படும்படி எதிர்பார்க்கப்படுகிறவர்கள் இப்படி ஓசிப்பிரியர்களாக இருப்பது அந்தத் துறையின் மதிப்பையே கெடுக்கிறது.

இதேவிதமான ஒரு மனப்பான்மை பல தேவ ஊழியர்களிடமும் விசுவாசி களிடமும் உள்ளன. தாங்கள் தேவப்பணி செய்வதால் மற்றவர்கள் தங்களுக்கு எதையும் இலவசமாகத் தருவதுதான் நியாயம் என இவர்கள் எண்ணுகின்றார்கள். ஐயா நான் விசுவாச ஊழியம் செய்கிறேன். எனவே எனக்கு உங்கள் புத்தகங்களை இலவசமாக அனுப்பிக்கொடுங்கள் எனக்கேட்டு பல கடிதங்கள் எனக்கு வரும். விசுவாசத்தில் ஊழியம் செய்கின்றவர்கள் அந்த விசுவாசத்தால் கிரயம் செலுத்திப் பொருட்களைப் பெற விரும்புவது அதிக மேன்மையானது.

ஆபிரகாமிடத்தில் காணப்பட்ட நல்ல தெய்வீகக் குணாதிசயங்களில் ஒன்று எதையும் இலவசமாகப் பெற விரும்பாமையாகும். தன் மனைவி சாராள் மரித்த வேளையில் அவளை அடக்கம் பண்ண கல்லறைப் பூமியாக நிலத்தை இலவசமாகக் கொடுக்க முன்வந்தான் எப்பெரோன் என்பவன். ஆனால் எவ்வளவோ வற்புறுத்தியும் ஆபிரகாம் இலவசமாக அதனைப் பெற்றிடச் சம்மதிக்கவில்லை.

ஆம். தேவனுடைய ஊழியர்களாயினும், விசுவாசிகளாயினும் தங்களின் தேவன் பெரியவர் என்ற உணர்வுடன் அந்த தேவனுடைய நாமத்திற்கு கௌரவம் சேர்க்கும் படியாக நடந்து கொள்ள வேண்டும். நல்ல வாய்ப்பும் வசதியும் உடைய பல தேவ ஊழியர்கள்கூட எதையும் இலவசமாகவே பெற விரும்புவது வருத்தமான விஷயம். இதன் விளைவாக சிலர் ஊழியர்களை இழிவாக எண்ணும் நிலை உள்ளது.

தேவ ஊழியர்களாயினும் விசுவாசிகளாயினும் தங்களுக்கு பல குறைவுகள் இருந்தாலும், மனிதர்களின் தயவைக் கெஞ்சக்கூடாது. ஏனென்றால் நாம் தேவ னுடைய பிரதிநிதிகள். இல்லாமையில் இருந்தாலும் தேவனுடைய பெயரை நாம் தாழ்வாக உபயோகிக்ககூடாது. அவைகளைப் பெறுவதில் தவறில்லை. ஆயினும், தேவனை விசுவாசிக்கின்ற நாம் எதையும் இலவச மாக எதிர்பார்க்கவில்லை என்பது வெளிப்படும்படியாக நடந்துகொள்ள வேண்டும்.

சிந்தனைக்கு...

மனித தயவை வெறுத்துவிலகாதே.
அதனை விரும்பி ஓடவும் செய்யாதே.

மே 17

வார்த்தையே செல்வம்

11 தீமோத்தேயு 2:1-19

சத்திய வசனத்தை நிதானமாய்ப் பகுத்துப் போதிக்கிறவனாயும்... 11 தீமோத்தேயு 2:15

மிகச் சிறப்பாகப் பாடுகின்ற தாலந்தைப் பெற்றிருந்த ஒருவர், இசைக் கச்சேரி களை விட்டு, ஒரு சிறு கூட்டம் மக்களுக்கு வேதத்தைப் போதித்து வழிநடத்தும் பணிக்குச் சென்றார். அழகாகப் பாடி, ஆயிரக்கணக்கானோரை மகிழ்விக்கும் வாய்ப்பை அலட்சியப்படுத்திவிட்டு, ஐந்தாறு பேருக்கு போதகராயிருப்பதில் என்ன பிரயோஜனம் என்று கேட்டனர் அவருடைய நண்பர்கள். அதற்கு அவர் என்னுடைய அழகான பாடல்கள் யாரையும் விண்ணிற்குக் கொண்டு போக உதவாதே, ஆனால், என் வார்த்தைகளைக் கேட்பவர்கள் கொஞ்சமாயிருந்தாலும் அவர்கள் விண்ணகம் செல்ல அவை உதவுமே என்று பதிலளித்தாராம்.

மற்றவர்களை மகிழ்விக்க பலவழிகள் உண்டு. பல்லாயிரங்களைச் சந்தோஷப் படுத்த பலவித தாலந்துகள் உண்டு. ஆனால், அவை யாவும் உலகத்தோடு முடிந்து போகும். பணம், பொருள், அறிவு, சந்தோஷம், உதவி என பல விஷயங்களை உலக மக்களுக்குக் கொடுக்கலாம். ஆனால், அவை எல்லாம் உலகத்திற்கு அப்பால் அவர்களுக்கு உதவாது. ஆனால், தேவ வார்த்தைகள் ஒரு மனிதனை உன்னத வாழ்விற்குக் கொண்டு செல்ல இயலும்.

தேவனுடைய அழியாத வார்த்தைகளைப் போல மனுக்குலத்திற்கு அதிகப் பிரயோஜனமான வேறொன்றும் இல்லை. வானமும் பூமியும் அழிகின்ற நாளிலும் தேவன் உரைத்த வார்த்தைகள் அழியாமல் நிற்கும். அத்தகைய வார்த்தைகளை பிறருக்குக் கொடுப்பதைப்போல அதிகப் பயனுள்ள செயலோ,உ தவியோ வேறெதுவும் இருக்க முடியாது. மோசேயின் மூலமாக தேவன் இஸ்ரவேல் மக்களுக்கு 40 ஆண்டு கள் கொடுத்த அப்பம் அவர்களை வாழவைக்க இயலவில்லை. எனவேதான் தேவன், மனுஷன் அப்பத்தினால் மாத்திரமல்ல. தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகின்ற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான் என்றார். (உபாகமம் 8:3)

இறை அன்பினால் ஏராளம் உதவிகள் பிறருக்குச் செய்யலாம். இறை அன்பர் களை அழகான ஆராதனையில் நடத்தி மகிழ்விக்கலாம். அற்புதம், அதிசயம் என பல நிகழ்த்தி பலரைப் பரவசப்படச் செய்யலாம். அக்கினி, அபிஷேகம், அதிக வல்லமை என ஜனங்களை அதிகமாக உத்வேகப்படுத்தலாம். ஆயினும், அவர்களுக்கு அளிக்கப் படும் தேவ வார்த்தைகள்தான் அவர்களுக்கு நித்தியம் வரை உதவி செய்யும். ஒரு தேவ ஊழியன் எவ்வளவுதான் அற்புதம் செய்தாலும், எவ்வளவுதான் அபிஷேக வல்லமையை வெளிப்படுத்தினாலும், ஒரு மனிதனை நித்தியத்திற்குத் தகுதியாக்கும் சத்திய வார்த்தைகளைக் கொடுக்காவிட்டால், மற்றவை யாவும் பயனற்றவை.

சிந்தனைக்கு...

செல்வங்களின் பெருக்கம் அல்ல, இறைவனோடுள்ள நெருக்கமே உனக்கு உண்மையான மகிழ்ச்சியைத் தரும்.

மே 18

இரைச்சல்களின் நடுவில்

மத்தேயு 8:23-27

உடனே மிகுந்த அமைதல் உண்டாயிற்று - மத்தேயு 8:26

நவீன விஞ்ஞான உலகில் வெளியிலே எவ்வளவு சத்தங்கள் தொனித்தாலும், அவை உள்ளே நுழையாதபடி பல கட்டிடங்கள் கட்டப்படுகின்றன. வெளியே எவ்வளவு பேரிரைச்சல்கள் இருந்தாலும் அந்த கட்டத்திற்குள் அமைதியே நிலவும். அது போலவே தேவனுடைய ஐக்கியத்தோடு நாம் வாழும் போது ஆயிரந்தான் இரைச்சல் கள் நம்முடைய வாழ்க்கைப் பகுதிகளில் எழுந்தாலும் நம்முடைய உள்ளத்திற் குள்ளோ தெய்வீக அமைதி நிலவும்.

நம்முடைய வாழ்க்கைச் சூழ்நிலைகளில் சில சத்தங்கள் நம்மை கலங் கடிப்பவை. சில சத்தங்கள் நம்பிக்கை இழக்க வைப்பவை. சில சத்தங்கள் குழப்ப மடையச் செய்கின்றவை. சில சத்தங்கள் நம்மைச் சோர்ந்து போகச் செய்கின்றவை. ஆனால், இந்த எதிர்மாறான சத்தங்கள் தேவ ஆவியானவர் நம்மை நமக்குள் ஆளும் போது நம்மைப் பாதிப்பதில்லை. அவற்றை அவர் உள்ளே அனுமதிப்பதில்லை.

பவுல் அப்போஸ்தலன் கொந்தளிக்கும் கடலில், காற்றும் புயலும் வேகமாக மோதியடித்துக் கொண்டிருந்த ஒரு கப்பலில் பயணம் செய்தான். சூழ்நிலைகளின் பேரிரைச்சல் அந்தக் கப்பலில் பயணம் செய்து கொண்டிருந்த யாவருக்குள்ளும் பயத்தையும் பீதியையும், குழப்பத்தையும், நம்பிக்கையின்மையையும் ஏற்படுத்தி 14 நாட்கள் பட்டினியோடு இருக்கச் செய்துவிட்டது. ஆனால், அனைத்துப் பேரிசைச் சல்களின் நடுவிலும் அப்போஸ்தலனாகிய பவுலின் இருதயம் அமைதியாயிருந்தது. அந்த மிகுந்த சத்தங்களின் நடுவிலும் கர்த்தருடைய அமர்ந்த மெல்லிய சத்தத்தை அவன் அவனுக்குள் கேட்டான். எனவே, பயந்து நடுங்கிக் கொண்டிருந்த யாவரையும் அவனால் திடப்படுத்தவும் முடிந்தது (அப் 27:20-36).

இயேசு கிறிஸ்துவின் ஊழியக் காலங்களில் அவரை எதிர்த்தவர்களின் கோபசத்தங்களும், விமரிசனங்களும், போலியான குற்றச்சாட்டுகளும் பயமுறுத் தல்களும் ஓயாத பேரிரைச்சல்களாக ஒலித்துக் கொண்டிருந்தன. ஆயினும், கர்த்தர் ஒருபோதும் பதட்டப்பட்டதுமில்லை. வார்த்தைகளிலோ செயல்களிலோ நிதானம் இழந்து போனதுமில்லை. எல்லாச் சூழ்நிலைகளிலும் அவருடைய இருதயத்தில் சமாதானமும் தெளிவும் இருந்தது. எனவே, எந்தத் தடுமாற்றமும் இன்றி இறுதி வரை அவரால் எதையும் சரியாகப் பேசவும், எதையும் சரியாகச் செய்யவும் முடிந்தது. கர்த்தரின் அமர்ந்த மெல்லிய சத்தத்தை நாம் அனுதினமும் ஆத்துமாவில் கேட்க வாஞ்சிக்க வேண்டும். சூழ்நிலைகள் ஏற்படுத்தும் சத்தங்களை நாம் நிறுத்த முடியாது. ஆனால், நாம் தேவ உறவுடன் வாழும் போது அந்தச் சத்தங்கள் மேற்கொள்ள இயலாமல், தெய்வீக அமைதி நமக்குள் செயல்படும்.

சிந்தனைக்கு...

கவலைகளைக் கடவுள் சுமக்க விட்டுவிடு.
அவருடைய சமாதானம் உன்னைச் சுமக்கக் கட்டுப்படு.

மே 19
நாம் பாவிகளா ?

1 பேதுரு 2:1-12

பரிசுத்த ஜாதியாயும் அவருக்குச் சொந்தமான ஜனமாயும் இருக்கிறீர்கள்
1 பேதுரு 2 : 9

ஒருமுறை ஒரு ஆலயத்திற்குப் பிரசங்கம் செய்ய ஒருவர் வந்தாராம். அவர் பிரசங்கத்தை தொடங்கும் போது, "நான் ஒரு கேவலமான பாவி... ஆயினும் உங்களுக்குப் பிரசங்கிக்க கர்த்தர் என்னை அனுப்பியிருக்கிறார்" என்றாராம். அதைக் கேட்டுக் கொண்டிருந்த ஒருவர் "ஐயா உங்களை கர்த்தர் அனுப்பியதாக நீங்கள் சொல்வது நம்பத்தக்கதாக இல்லை. எங்களுக்குப் பிரசங்கிக்க ஒரு கேவல மான பாவியை கர்த்தர் அனுப்பியிருக்கிறார் என்பதை என்னால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை" என்றாராம்.

அநேகர் தங்களைப் பாவிகள் என்றும், தங்களை ஒன்றுக்கும் உதவாத குப்பைகள் என்றும் அறிக்கையிட்டுக்கொள்வதால், தேவனுடைய விசேஷக் கிருபை கிடைக்கும் என எண்ணுகின்றார்கள். சிலர் தங்களை பாவிகள் என்ற தாழ்நிலையில் அழைத்துக் கொள்வதால், தாங்கள் பாவிகள் என்ற நிலையில் செய்யும் பாவங்களை தேவன் சீரியஸாக எடுத்துக்கொள்ளமாட்டார் என நினைக்கின்றனர். அநேகர் தங்களைப் பாவிகள் என்று அழைத்துக் கொள்வதால்தான், தொடர்ந்து பாவிகளாக அவர்கள் இருக்கின்றார்கள்.

நம்மைப் பாவிகள் என்ற தாழ்நிலையிலிருந்து பரிசுத்தவான்கள் என்ற உயர்ரக நிலைக்குக் கொண்டு வரவே இயேசு கிறிஸ்து உலகத்தில் வந்தார். அவர் நம்மை பரிசுத்தவான்களாக்கியிருக்கும் போது, நாம் நம்மை பரிசுத்தவான்கள் என்ற தரிசனத்தோடே பார்க்க வேண்டும். கான்ஸ்டபிள் என்ற நிலையிலிருந்து இன்ஸ்பெக்டர் ஆக்கப்பட்ட ஒருவர், நான் வெறும் கான்ஸ்டபிள்தான் என்று கூறிக்கொண்டிருந்தால் அவர் இன்ஸ்பெக்டருக்கு ஏற்ற கடமையைச் சரியாக செய்ய முடியாது. குப்பைகளாகிய நம்மை கர்த்தர் விசுவாசத்தின் வாயிலாக விலையேறப் பெற்ற கற்களாக மாற்றியிருக்கின்றார். அந்த தரத்திற்கேற்ப நாம் நடக்க கவன மாயிருக்க வேண்டுமேயன்றி, குப்பை குப்பை எனக்கூறி நாம் குப்பைகளைப் போல வாழக் கூடாது.

நாம் கடந்தகால பாவிகளாக இருக்கலாம். ஆனால், இயேசு கிறிஸ்துவை நம் முடைய இரட்சகராகப் பெற்றதுண்டானால், இப்பொழுது நாம் பரிசுத்தவான்களே. வேதம் நம்மை தேவனுடைய சந்ததி என்றும், பரிசுத்த ஜாதி என்றும், அழைக்கின்றது. நாம் அந்த உயர்நிலைகளை உணர்ந்து அதற்கேற்ற பரிசுத்த தகுதிகளோடு வாழ்ந்து காட்ட முன்வரவேண்டும். அதற்குப் பதிலாக பாவி, பாவி என்று கூறுவதிலேயே திருப்தி கண்டால், ஒரு போதும் தேவ நோக்கத்தை எட்ட முடியாது.

சிந்தனைக்கு...

உயர்ந்த கருத்துகளால் உலகத்தைக் கவருவதைவிட
உயர்ந்த வாழ்க்கையால் ஒரு சிலரையாகிலும் கவருவதே சிறப்பு.

மே 20

மாயத் தோற்றங்கள்

11 சாமுவேல் 5:1-14

வேஷமாகவே மனுஷன் திரிகிறான்.......
சங்கீதம் 39:6

சில பெண்களை ஆலயத்திலோ, அலுவலகத்திலோ, பொது நிகழ்ச்சிகளிலோ பார்க்கும்போது உயரமாகத் தோன்றுவார்கள். ஆனால், அவர்களை வீட்டில் பார்க்க நேர்ந்தால் குட்டையாக இருப்பார்கள். தங்களின் உயரக் குறைவை மறைப் பதற்காக குதிகால் செருப்பு அணிவதால் இடத்திற்கேற்ப அவர்களின் உயரம் வேறுபட்டுத் தெரிகின்றது.

ஆனால், இதனால் யாருக்கும் எந்த பிரச்சினையும் இல்லை. ஆனால், அநேகர் இடத்திற்கு இடம், நேரத்திற்கு நேரம் தங்களின் குணாதிசய நிலைகளிலும், பண்பு நிலைகளிலும், வேறு வேறுவிதமாகத் தோன்றுவதுதான் பலருக்குப் பல பிரச்சினைகளை ஏற்படுத்துகின்றது. தாழ்மை என்ற பண்பின் முக்கியமான ஒரு அம்சம் நம்முடைய உண்மை நிலையை பிறர் கண்களுக்கு மறைக்காமல், இருக்கின்ற படியே வெளிப்படுதல் ஆகும். அதாவது நாம் உண்மையில் எப்படி இல்லையோ, அப்படி இருப்பதாக பிறருக்குக் காட்டிக் கொள்ள முயற்சி செய்யாமல் இருப்பது ஆகும். நாம் நல்லவர்களாகவோ, மோசமானவர்களாகவோ இருப்பது நம்மைச் சார்ந்த விஷயம். ஆனால், குறைந்தபட்சம் பிறர் நம்மை யார் என்று கண்டு கொள்வதற்கு அதிகச் சிரமம் கொடுக்கக்கூடாது.

சிலர் வாயினால் பொய் சொல்லி பிறரை ஏமாற்றுவதில்லை. ஆனால், அவர்களின் சில செயல்கள் மற்றவர்களுக்கு அவர்களைக் குறித்த நல்ல ஒரு எண்ணத்தையும், அபிப்பிராயத்தையும் ஏற்படுத்திவிடும். ஆனால், அவைகளை அடைப்படையாகக் கொண்டு அவர்களோடு தொடர்பு வைக்க நேர்ந்தால், அங்கே அவர்கள் எண்ணியதற்கு எதிராகவே காரியங்கள் இருக்கும். அங்கே அவர்கள் ஏமாற்றப்படுவார்கள். ஏனென்றால், அவர்களின் நல்ல தோற்றங்கள் உண்மை யானவை அல்ல, பொய்யானவைகள். அங்கே கணக்குகள் தப்பாகி விடுகின்றன.

அன்பாக இல்லாமலே ஒருவரிடம் அன்பாக இருப்பதுபோல காட்டுவதும், ஒருவரை விரும்பாமலே வாருங்கள் என விரும்பி அழைப்பதும், எந்த நன்மையும் செய்யும் சிந்தை இல்லாமலே, உயிரையே கொடுப்பதற்கும் தயார் என்பது போல பேசுவதும், பிறரின் நிலையைக் குறித்த எந்த அக்கறையும் இல்லாமலே, அதிக கரிசனையாளர்கள் போல் காண்பிப்பதும், கர்த்தருடைய வழியில் நடவாமலே எரிந்து பிரகாசிக்கும் விளக்குகள் போல காணப்பட விரும்புவதும், சுய ஆதாயம் நாடி ஊழியம் செய்துகொண்டே, இயேசுவுக்காக எல்லாம் இழக்கத் தயாரான தியாகிகள் போல அறியப்பட ஆவல் கொள்வதும் எவ்வளவு பெரிய மாய்மாலங்கள்.

சிந்தனைக்கு...

உண்மையை ஒளித்து வைக்க முடியாது. ஆனால் உண்மையைக் கண்டு கொஞ்ச நாள் ஒளிந்திருக்க முடியும்.

மே 21

பயன்படாத வேத அறிவு

மத்தேயு 7 :17-29

இவைகளின்படி செய்யாதிருக்கிறவன் எவனோ...
மத்தேயு 7:26

மெக்கானிக்கல் இன்ஜினியரிங் கற்ற ஒருவருக்கு ஒரு வாகனம் எப்படி இயங்கு கிறது என்பதும். அது மிகச் சரியாக இயங்க எது எப்படியெல்லாம் இருக்க வேண்டும் என்பதும் தெரியலாம். ஆனாலும், அவை யாவற்றையும் தெரிந்து வைத்துக் கொண்டு ஒரு வாகனத்தை ஓட்ட இயலாதவராக அவர் இருக்க முடியும்.

ஒரு வாகனத்தின் இயக்கங்களைக் குறித்த அறிவு மட்டும் போதாது. அதனை முறைப்படி இயக்கு வதற்கு அறிவு உதவி செய்து விடாது. அதனை இயக்கிப் பழகவேண்டும்.

இறையியல் கற்ற ஒருவர், யார் ஒரு வேத சம்பந்தமான விஷயம் சொன்னாலும், அவர் இதெல்லாம் நான் ஏற்கெனவே அறிந்த விஷயம் என்பார். ஆனால், ஆவிக் குரிய ரீதியான ஒரு சிறந்த பண்பையோ, சிறந்த செயலையோ அவரிடம் பார்க்க முடியாது. இவருடைய அறிவு இவருக்குப் பெருமையைக் கொடுத்திருந்தும் ஒரு நல்ல வாழ்க்கை வாழ்வதற்கு உதவி செய்யவில்லை.

அனுபவமாக்கப்படாத அறிவு பிரயோஜனமற்றது. வேத அறிவு என்பது நம்முடைய அறிவுத்திறனை அதிகரிப்பதற்காக அல்ல. நம்முடைய வாழ்க்கையை வேத வழியில் அழகாக வாழ்வதற்காக. சிலர் சாப்பாடு பரிமாறுவதற்காக அழ கழகான தட்டுகளையும், கோப்பைகளையும், டம்ளர்களையும் வித விதமாக வாங்கி கண்ணாடி போட்ட அலமாரியில் காட்சிப் பொருளாகவே வைத்திருப்பார்கள். அதில் யாருக்கும் உணவு பரிமாறமாட்டார்கள்.

அதுபோலவே பலருக்கு வேத அறிவு என்பது வெறும் காட்சியாக உள்ள தேயன்றி, எந்த மாட்சியும் அதனால் ஏற்படவில்லை. ஏனென்றால், மனந்திரும் புதல், இரட்சிப்பு, பரிசுத்த ஆவியின் ஐக்கியம் ஆகிய அடிப்படை கிறிஸ்தவ அனுப வங்களை உடையவர்களால் மட்டுமே வேத அறிவைப் பயன்படுத்த முடியும். மற்ற வர்கள் அதனைப் பெருமையாக எண்ணினாலும், அதனைப் பயன்படுத்தும் ஆர்வமோ, தாகமோ அவர்களுக்கு ஏற்படாது. சிலர் போதனைகளை நன்றாகவே கேட்பார்கள். ஆவிக்குரிய வேத அறிவைப் பெற அதிகப் பிரயாசம் எடுப்பார்கள். ஆயினும், அதன்படி வாழ விரும்பவும் மாட்டார்கள். அப்படியே வாழ விரும்பினாலும் அவர்களால் கூடாது.

இரட்சிப்பின் அனுபவம் பெற்று, பரிசுத்த ஆவியினால் இருதயத்தில் சத்திய தாகமும் பசியும் ஏற்பட்டால்தான் தேவனுடைய வழிகளில் நடக்கவும், சத்தியத்தின்படி வாழவும் வலிமை கிடைக்கும்.

சிந்தனைக்கு...

வேதாகமத்தை கையில் ஏந்துகிறவன் அல்ல.
வேதத்தை இதயத்தில் ஏந்துகின்றவனே கிறிஸ்தவன்.

மே 22

வார்த்தையில் மட்டும் உண்மை

மத்தேயு - 5:1-16

இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள்...
மத்தேயு - 5:8

ஒருமுறை கிறிஸ்தவ ஸ்தாபனம் ஒன்றில் முக்கியப் பதவியை வகித்த ஒருவர் அங்கே பல ஊழல்களைச் செய்தார். பலருக்கு அந்த விஷயம் தெரியாது. ஆனால், அந்த ஸ்தாபனத்தின் முக்கியமான பொறுப்பிலிருந்து நீக்கப்பட்டிருந்த ஒருவர் அவருடைய அத்தனை முறைகேடுகளையும் வெட்ட வெளிச்சத்திற்குக் கொண்டு வந்தார். ஆயினும், அவர் முறைகேடுகளின் மேலுள்ள வெறுப்பினால் அவ்விதம் செய்யாமல், தன்னைப் பதவி நீக்கம் செய்தவர் மேலுள்ள வெறுப்பினாலேயே அவ்விதம் செய்தார்.

உண்மையைப் பேசுகின்றவர்கள் யாவரும் உண்மையாளர்கள் அல்ல. நன்மைகளைச் செய்கின்றவர்கள் யாவரும் நல்லவர்களும் அல்ல. உண்மையற்ற வாழ்க்கை முறையைக் கடைபிடித்துக்கொண்டே ஒருவர் சில உண்மைகளைப் பேச முடியும். நல்ல இதயமுடையவராக இல்லாமலே மறைமுகமான நோக்கங் களுக்காக ஒருவர் சில நன்மைகளைச் செய்ய முடியும். எனவே, உண்மையான சில வார்த்தை களைக் கொண்டே, ஒருவர் உண்மையானவர் என்றும், நல்லவர் என்றும் கூற முடியாது.

அரசியல் தலைவர்கள் சிலவேளை பேசுவதும், சுட்டிக்காட்டுவதும், மிக, மிக உண்மையாக இருப்பதுண்டு. ஒரு அரசியல் தலைவரின் தவறுகளை, குறைகளை, குற்றங்களைக் குறித்து இன்னொரு அரசியல் தலைவர் சுட்டிக் காட்டுவதும், பேசு வதும் மிகச் சரியானவையாகவே இருப்பதுண்டு. ஆயினும், அந்த உண்மையை அவர் பேசுவது உண்மையைக் குறித்த ஒரு தாகத்தினால் அல்ல. மற்றவரைக் குறித்த உண்மை நிலைகளைக் குறித்துப் பேசுவதால் அரசியல் ரீதியாகத் தனக்கு ஆதாயம் வரும் என்பதாலேயே அவர் அவ்விதம் பேசுகிறார்.

நாம் உண்மைகளைப் பேசுகிறவர்களாக மட்டும் இராமல், உண்மையின் மேல் வாஞ்சை கொண்ட இதயமுடையவர்களாகவும் இருக்கவேண்டும். இயேசு கிறிஸ்து அக்காலப் பரிசேயர்களைக் குறித்தும், மதத் தலைவர்களைக் குறித்தும் பல உண்மைகளைப் பேசினார். அவர்களுடைய உண்மை நிலைகளை வெளிப் படுத்தி அவர் கண்டித்தார். அதே வேளையில் அவர் தமக்குள் உண்மை உடைய வராகவும், பரிசுத்தம் நிறைந்தவராகவும் இருந்தார். நாம் பிறர் சம்பந்தப்பட்ட சில உண்மை களைப் பேசும்போது, பலரும் நாம் சொல்வது நியாயம் தானே என்று கூறமுடியும். ஆனால், தேவன் இதயத்தைப் பார்க்கின்றார். நாம் மற்றவர்களைக் குறித்த உண்மைகளை அவர்களை மட்டம் தட்டும் ஒரு வாய்ப்பாக எண்ணிச் செயல்படுகின்றோமா? அல்லது உண்மையின் மேல் கொண்ட அன்பினால் நல்ல நோக்கத்தோடு செயல்படுகின்றோமா? என்பதை அவர் அறிவார்.

சிந்தனைக்கு...

உன்னை உற்று நோக்கும் உயர்வு வரும் வரை,
இறைவனை உற்று நோக்கும் கண்கள் தெளிவடைவதில்லை.

மே 23
எதிர்க்க வேண்டும்

எபிரெயர் 12 : 1 -13

பாவத்திற்கு விரோதமாய்ப் போராடுகிறதில்
எபிரெயர் 12 : 4

மோவாபியரும் அம்மோனியரும் இணைந்து பெரும்படையாக யோசபாத்திற்கு எதிராக வந்து கொண்டிருந்தனர். யோசபாத் அவர்களை எதிர்க்கும் வலுவின்றி தேவனை நோக்கி அபயமிட்டான். தேவன் ஒரு தீர்க்கதரிசியை அனுப்பி அந்த யுத்தம் அவனுடையதல்லவென்றும், அவனுக்காக தேவனே யுத்தம் செய்வார் என்றும் அறிவித்தார். ஆனாலும், அந்தப் பெருந்திரளான சேனையை எதிர்க்கும்படி அவர்களுக்கு எதிராக யோசபாத் செல்ல வேண்டும் என்ற கட்டளையை தேவன் கொடுத்தார் (11 நாளா – 20:17) யுத்தம் செய்யப் போகிறவர் தேவன்தான். ஆயினும், யோசபாத் விசுவாசத்துடன் யுத்தக் களத்திற்கு செல்ல வேண்டியது அவசியம்.

இதுபோலவே பாவ சக்திகளுக்கும், பிசாசானவனின் பொல்லாத செயல்களுக்கும், நம்மிடம் தோன்றும் தவறான சுபாவங்களுக்கும் எதிராக நமக்கு ஒரு போராட்டம் உண்டு. பாவத்தை எதிர்ப்பதும், தீய சுபாவங்களைப் புறம்பாக்குவதும் பலவீனர்களாகிய நமக்கு எளிதான விஷயங்கள் அல்ல. ஆனாலும், தேவன் அவைகளின்மேல் நாம் பூரண வெற்றியடைய வழிசெய்கின்றார்.

நாம் தவறான இயல்புகளையும், தேவனைப் பிரியப்படுத்தாத குணங்களையும், தேவனுக்கு உகந்ததல்லாத பழக்கங்களையும் மேற்கொள்ளப் பிரயாசப்பட வேண்டும். அப்போது தேவன் நம்மிடம் கிரியை செய்து, அவைகளை மேற்கொள்ளச் செய்வார்.

நாம் பலவீனர்களாயிருந்தால்கூட, அவைகளை எதிர்க்கவும், நம்மைவிட்டு விலக்கவும் மன ஆர்வத்தோடு நாம் முன்வர வேண்டும். விசுவாசத்துடன் நாம் அவைகளை எதிர்க்க முன்வரும்போதுதான், தேவன் நமக்காக யுத்தம் செய்து அவைகளைத் துரத்துவதைக் காண முடியும்.

வலிமை வாய்ந்த மீதியானியர்களை எதிர்த்துப் போரிட தேவன் கிதியோனைத் தெரிந்து கொண்டார். ஆனால், கிதியோனோ அதற்கு தான் எவ்விதத்திலும் தகுதியானவன் அல்ல என்று கண்டான். ஆயினும், தேவன் அவனுக்கு வெற்றி அளிக்கப் போவதாக வாக்களித்தார். எளிதாக அவன் மீதியானியர்களை ஜெயிக்க முடியும் என்றார். இங்கே மீதியானியர்களை வீழ்த்தி கிதியோனுக்கு வெற்றி அளிக்கப் போகின்றவர் தேவன்தான். ஆனால், கிதியோன் தனக்கிருக்கின்ற பலத்தோடு தேவ வார்த்தையை விசுவாசித்து புறப்பட்டுச் செல்ல வேண்டியது தேவையாயிருந்தது. அவ்விதம் அவன் சென்றபோது, கிதியோன் தன்னுடைய சக்திக்கு அப்பாற்பட்ட ஒரு மாபெரும் வெற்றியைக் காண முடிந்தது.

சிந்தனைக்கு...

உன் பலவீனம் எது என்பதைக் கண்டுபிடிக்கும்வரை
உன் பலம் எதுவரை என்பது கேள்விக்குறியாகவே இருக்கும்.

மே 24

யாருக்கு ஜெப பாரம்?

சங்கீதம் 27:1-14

கர்த்தாவே நான் கூப்பிடுகிற சத்தத்தை நீர் கேட்டு..
சங்கீதம்-27:7

யாருடைய சரீரத்தில் புண் இருக்கிறதோ அவருக்குத்தான் அந்தப் புண் மிகுதியாக நோகும். அவரால்தான் அதனுடைய வேதனையை முழுமையாக உணர முடியும். அந்தப் புண்ணின் வேதனையைக் குறித்து மற்றவர்களுக்கு எவ்வளவுதான் அறிவு இருந்தாலும், அவர்களுக்கு அது வலிக்காது. ஒரு சுமையைச் சுமக்கிறவரைவிட அதைப் பார்த்துக்கொண்டிருப்பவர் அந்தக் கஷ்டத்தை அதிகமாக உணர முடியாது.

நமக்கு வேதனைகளும், கஷ்டங்களும், பாரங்களும் இருந்தால் நம்மால் தான் அதனை உரிய விதமாக உணர முடியும். எனவே, நம்மால்தான் அதனை உரிய பார உணர்வுகளோடு தேவனுக்குத் தெரிவிக்க முடியும். நாம் உணருகின்ற அளவிற்கு பாரத்தை உணர்ந்து, எந்த ஊழியரும் ஜெபிக்க முடியாது. அன்னாளின் வேதனை அவளுக்குத்தான் தெரியும். எனவே, அந்த மிகுந்த பாரம் சுமக்கும் உணர்வோடு அவளால் தேவனிடம் கதறி, அழுது மன்றாடி ஜெபிக்க முடிந்தது. ஜெபிக்கும் பலத்தை இழந்த பிறகுகூட அவளுடைய உதடுகள் ஜெபத்தில் அசைந்துகொண்டிருந்தது.

பலர் நம்மைவிட நம்முடைய கஷ்டங்கள், பிரச்சினைகளுக்காக எதாவது ஒரு தேவ ஊழியர்தான் அதிக பாரத்தோடு, அதாவது விசன உணர்வோடு தேவனை நோக்கிச் ஜெபிக்க முடியும் என எண்ணுகின்றனர். ஆனால், அது தவறான ஒரு சிந்தனை. அதுபோல, தேவன் தங்களின் உருக்கமான மன்றாடுதலைக் கேட்டு மனதுருகுவதைவிட, ஏதாவது ஒரு ஊழியர் நம்முடைய கஷ்டங்களுக்காக உருகி ஜெபிப்பதைக் கண்டுதான், கர்த்தர் அதிகமாக மனதுருகுவார் என எண்ணுகின்றனர்.

ஆனால், துன்பப்படுகிற ஒருவரை நேரடியாகப் பார்ப்பதால் வரும் மன துருக்கத்தைவிட, அவருடைய துன்பத்தைக் குறித்து இன்னொருவர் கூறுவது அதிக மனதுருக்கத்தைப் பெற முடியாது. ஆம், நம்முடைய பாரங்களை நம்மை விட வேறு யாரும் அதிகமாக உணர முடியாது என்பதை அறிந்து, நாமே பாரத்துடன் ஜெபிக்கப் பழக வேண்டும். பாரத்தோடும் மன வேதனையோடும் நாம் செய்கின்ற ஜெபங்கள்தான், தேவ மனதுருக்கத்தை நமக்காக அதிகமாகக் கொண்டு வரும். தாவீது தன்னுடைய பலவித துன்பச் சுமைகளை உணர்ந்து, அதனால் ஏற்பட்ட மனநெருக்கத்தோடு தேவனை நோக்கி வேண்டுதல் செய்தவைகள்தான் ஏராள மான சங்கீதங்களாக மாறி, இன்று வரை கணக்கிலடங்காதோரை ஆறுதல் படுத்துகிறது. நமக்கும் தேவனுக்கும் நல்ல உறவும், ஐக்கியமும், அவருக்கு முன்பாகச் செவ்வையான ஒரு வாழ்க்கையும் வேண்டும். அப்படியிருந்தால் நம்முடைய சொந்த ஜெபங்களைவிட, எந்த தேவ ஊழியரின் ஜெபமும் அதிக வல்லமையாயிராது.

சிந்தனைக்கு...

போலிகளின் முகத்திரையைக் கிழிக்க மனிதன் அஞ்சுகிறான். ஏன்? அவனும் போலித்தனத்தில் மறைந்திருக்கின்றானே.

மே 25

சிறு குறைவு

மத்தேயு 25:1-13

அவர்களில் ஐந்து பேர் புத்தியில்லாதவர்கள்
மத்தேயு 25:2

இயேசு கிறிஸ்து கூறிய பத்துக் கன்னிகைகள் உவமையில் வருகின்ற ஐந்து கன்னிகைகள் மிகுந்த பரிதாபத்திற்குரியவர்கள். அவர்கள் மணவாளனைச் சந்திப்பதற்காக அதிகச் சிரமம் எடுத்தும், நீண்ட நேரம் காத்திருந்தும் இறுதியில் மணவாளனுடைய விருந்தின் மகிழ்ச்சிக்குத் தகுதியற்றுப் போனார்கள். அவர்கள் சற்று முன்ஜாக்கிரதையாக மற்ற ஐந்து கன்னிகைகளைப் போல இன்னும் கொஞ்சம் எண்ணெயைத் தயாராக வைத்திருந்தால், கடைசி நிமிடத்தில் பரிதாபமான ஏமாற்றத்தைக் கண்டிருக்க மாட்டார்கள். அவர்கள் பாவிகளோ, பக்தியற்றவர்களோ அல்ல. ஆனால், சிறு கவனக்குறைவால் மிகுந்த சந்தோஷத்திற்கான விருந்தில் பங்குபெற இயலாமல் போனார்கள்.

இறை வாழ்க்கையின் முக்கியமான நோக்கம் தேவன் அருளும் சந்தோஷத்தினை நமக்குள் பெற்று மகிழ்வதாகும். நம்முடைய ஒவ்வொரு ஆவிக்குரிய செயலின் இறுதி நோக்கமும் தெய்வீக சந்தோஷத்தினை நமக்குள் பெறுவதற்காகவே இருக்க வேண்டும். நாம் அந்தப் புத்தியற்ற ஐந்து கன்னிகைகளைப் போல, பலவித ஆவிக்குரிய சிரமங்களை மேற்கொண்டு செயல்பட்டும், இறுதியான நோக்கமாகிய ஆவிக்குரிய மகிழ்ச்சியைக் காணாமல் போனால் என்ன பிரயோஜனம்?

சிலர் கர்த்தருக்காக கடுமையாக உழைப்பார்கள். அவருடைய ஊழியத்தைச் செய்ய அதிகச் சிரமம் எடுப்பார்கள். ஆயினும் மனந்திரும்புதல், இரட்சிப்பு, தேவ ஐக்கியம் உணர்தல் ஆகிய அனுபவங்களைக் குறித்துச் சரியாகச் சிந்திக்க முன் வர மாட்டார்கள். எனவே, அவர்களிடம் மெச்சத்தக்க அநேக காரியங்கள் இருந்த போதிலும், பிரயாசங்களுக்குரிய தேவ அசீர்வாதங்களைப் பெறுவதில்லை. அநேகர் தங்களின் பலவித, பக்தியான நடவடிக்கைகளைக் கவனித்து, இதற்குமேல் என்ன தேவை என்ற உணர்வினால் மனந்திரும்புதல் என்ற விஷயத்தில் அசட்டையாக இருந்து விடுவார்கள். அதுவே இறை நன்மைகளைத் தடைசெய்து விடுகிறது.

ஏராளமான ஆவிக்குரிய மக்கள் பலவிதங்களில் பக்தியோடு செயல்பட்டும், அந்த தெய்வீக விருந்தின் சந்தோஷத்தினை அனுதின வாழ்வில் அடையாமலே போகின்றார்கள். காரணம் என்ன? ஏதோ ஒரு சிறு குறைவு, ஏதோ ஒரு சிறு கவனக் குறைவு அல்லது ஜாக்கிரதையின்மை. இன்னொருவர் விஷயத்தில் நாம் காண்பிக்கும் சிறு மனக்கசப்பு, ஏதாவது ஒன்றின்மேல் அதிக ஆசை, சுபாவ நிலைகளில் சில மாற்றங்களை ஏற்படுத்த விரும்பாமை போன்ற ஏதாவது ஒன்று கர்த்தருடைய சந்தோஷ விருந்திற்கு நம்மைத் தூரமாக்கி விட முடியும்.

சிந்தனைக்கு...

இறைவனை நோக்கிய அன்பின் வேகம் குறையும் போது உலகப் பொருட்களை நோக்கி ஆசையின் வேகம் அதிகமாகும்.

மே 26

கடந்தகால மகிமை

சங்கீதம் 90:1-17

நாங்கள் எங்கள் வாழ்நாளெல்லாம் களிகூர்ந்து மகிழும்படி....
சங்கீதம் 90:14

கடந்த காலத்தில் சீரும் சிறப்புமாக வாழ்ந்த ஒருவர் யாரைச் சந்திக்க நேர்ந்தாலும், ஒரு காலத்தில் நான் என்று பேசத் துவங்கி தன்னுடைய கடந்த கால சீர் சிறப்புகளைச் சொல்லி அங்கலாய்ப்பார். இதனுடைய விளைவாக அவர் தொடர்ந்து ஆக்கப் பூர்வமாக எதையும் செய்யாமல், கடந்த காலத்தைக் குறித்து கதை சொல்கிறவராக மாறிப்போனார்.

நாம் சிறுபிள்ளைகளாக வாழ்ந்த காலங்களை நினைக்கையில் அது ஒரு பொன்னான காலமாகவே தோன்றுகிறது. இளவயதின் நாட்களை எண்ணிப்பார்த்தால் ஆஹா..... அவைகள் எவ்வளவு பரவசமான நாட்கள் என்றுதான் எண்ணத் தோன்றுகிறது. ஆனால், கடந்து போன காலங்களின் பரவசங்களையே நினைத்துக் கொண்டிருந்தால், அடுத்துவரும் காலங்கள் ஆசீர்வாதமாய் இராது. வாழ்க்கை என்பது பல அத்தியாயங்களைக் கொண்ட ஒரு புத்தகம் போன்றது. அது ஒவ்வொரு அத்தியாயமாக கடந்து கொண்டேயிருக்கும். தற்போது படிக்கும் அத்தியாயத்தைவிட, படித்து முடித்த முந்தின அத்தியாயங்கள்தான் மிக நன்றாயிருந்தது என எண்ணினால் அடுத்துவரும் அத்தியாயங்களை அனுபவிக்க முடியாது. ஒரு புத்தகத்தின் அத்தியாயங்கள் போகப் போகத்தான் சுவையேறிக் கொண்டேயிருக்க வேண்டும்.

காவல்துறையில் உயர்பதவி வகித்த ஒருவர் ஓய்வுபெற்ற பின்பு, மன உளைச் சலடைந்து பலவித நோய்களை வரவழைத்துக் கொண்டார். காரணம் என்ன? அவர் கம்பீரமாய் பலருக்கு ஆணையிட்டு மிடுக்குடன் செயல்பட்ட கடந்தகாலத்தையே எண்ணிக்கொண்டிருந்தாரேயன்றி அடுத்தகட்டமாக தன்னுடைய காலங்களை அர்த்தப்பூர்வமாகச் செயல்படுத்த எதையும் செய்யவில்லை.

மோசேயின் கடந்த காலம் அரண்மனை வாழ்வு. ஆனால், மோசேயின் கடைசி நாள் வரை அவனுடைய வாழ்க்கை அர்த்தமும், வெற்றியும், மகிமையும் நிறைந்ததாகவே தொடர்ந்தது. அவன் தன்னுடைய எண்பதுகளில் தேசங்களை அசைக்கிறவனாயிருந்தான். அவன் முதுமையிலும் கனிகொடுக்கும் ஒரு மரமாகவே விளங்கினான். கர்த்தரோடுள்ள நெருங்கிய உறவு எப்போதும் நல்ல ஒரு வாழ்க்கை வாழும் உணர்வையே நமக்குத் தரும். பவுல், யோவான், பேதுரு போன்றோர் நீண்ட ஆயுளுடன் வாழ்ந்தவர்கள்தான். ஆயினும், கடைசிவரை அவர்கள் தாங்கள் வாழ்கின்ற வாழ்க்கை அர்த்தமுள்ளதாக கடந்து செல்வதையே கண்டார்கள். அவர்களுடைய வாழ்க்கையின் பிந்திய அத்தியாயங்கள் முந்தின அத்தியாயங் களைவிட அதிக நிறைவுடையதாக விளங்கின.

சிந்தனைக்கு...

நீ எத்தனை வெற்றிகளைப் பெற்றாய் என்பதையல்ல.
உன் வாழ்க்கையின் அர்த்தத்தை அறிந்தாயா என்பதைப்பார்.

மே 27

எதற்காக மனந்திரும்புதல்

மத்தேயு 3:1-2

மனந்திரும்புங்கள், பரலோகராஜ்யம் சமீபித்திருக்கிறது....
மத்தேயு 3:2

என்னுடைய சிறுவயதின் நாட்களில் காலையில் ஆற்றில் போய் குளித்துவிட்டு வந்தால்தான் காலை உணவு கிடைக்கும். எனக்கோ காலையில் குளிர்ந்த நீரில் குளிக்கப் பிடிக்காது. எனவே, சில வேளைகளில் கொஞ்சம் தண்ணீரைத் தலையில் தெளித்து ஈரமாக்கிக் கொண்டு குளித்துவிட்டதைப் போல நடித்து காலை உணவைப் பெற்றுக் கொள்வேன். இங்கே குளிக்க வேண்டியதன் அவசியத்தை நான் உணரவில்லை. ஆனால், காலை உணவுக்காக குளித்து விட்டதைப் போல நடித்துக் காட்டினேன்.

சிலருடைய மனந்திரும்புதலின் அனுபவமும் இப்படியாகவே உள்ளது. அவர்கள் பாவத்தால் பழுதுபட்ட தங்களுக்கு மனந்திரும்புதல் என்பது மிகப் பெரிய தேவை என்று உணருவதில்லை. தேவனுடைய நன்மைகளையும், ஆசீர்வாதங்களையும் பெறுவதற்கு மனந்திரும்புதல் ஒரு நிபந்தனை என்ற விதமாகவே அவர்கள் சிந்திகின்றனர். எனவே, அதனை ஒரு சடங்கு போலவும், நிபந்தனை நிறைவேற்றல் போலவும் எண்ணி, அதனை முழுமையாக உணராமல் அரை குறையாக மனந்திரும்புகிறார்கள்.

மனந்திரும்புதல் மூலமாகத்தான் தேவனுடைய ஆசீர்வாதங்களைப் பெற முடியும் என்பது உண்மைதான். ஆனால், நன்மைகளைப் பெறுவதற்காகவே மனந்திரும்புகிறோம் என்ற நிலை கூடாது. மனந்திரும்புதல் என்பது நமக்கு மிகவும் தேவையான ஒன்று. தேவன் நன்மைகள் தந்தாலும், தராமல் போனாலும் மனந்திரும்ப வேண்டியது நமக்கு மிக மிகத் தேவையானதொன்று. வியாதியால் பாதிக்கப்பட்ட ஒருவன் நான் அறுவை சிகிட்சைக்குச் சம்மதிக்க வேண்டுமானால், எனக்கு ஒரு பெருந்தொகையை டாக்டர் தரவேண்டும் என்று கேட்டால், அது விசித்திரமானதொன்றே. அதுபோலவே, மனந்திரும்ப வேண்டும் என்றால், தேவன் எனக்கு நன்மை செய்ய வேண்டும் என்று கேட்பதும்.

இயேசு இந்த பூமிக்கு வந்து நன்மைகள் பல செய்தார். நன்மை செய்கிறவராகச் சுற்றித் திரிந்தார். ஆயினும், இயேசு இந்த உலகத்திற்கு வந்த நோக்கம் வேறு. பாவிகளையே, மனந்திரும்ப அழைக்க வந்தேன் என்றார் அவர். (லூக்கா 5:32) அதற்காகவே இயேசு சிலுவைப்பாடுகள் ஏற்றார். ஏனென்றால், மனிதனுடைய மிகப் பெரிய தேவை மனந்திரும்புதலின் வாயிலாக வருகின்ற பாவ விடுதலை ஆகும். ஆம். இரட்சிப்பின் அனுபவம் பெற்று பாவவிடுதலை அடைதல்தான், நாம் தேவனிடம் தேட வேண்டிய மிகப்பெரிய ஆசீர்வாதம் ஆகும். இந்த ஆசீர்வாதம்தான் பிற அனைத்து ஆசீர்வாதங்களுக்கும் வாசலாக உள்ளது.

சிந்தனைக்கு...

இன்னொருவன் பிடியிலிருந்து உன்னை மீட்பது எளிது. உன்னிடமிருந்து உன்னை மீட்பதுதான் கடினம்.

மே 28

பிறர் தயவும் தேவை

யாக்கோபு - 4:1-10

கர்த்தருக்கு முன்பாகத் தாழ்மைப்படுங்கள்...
யாக்கோபு - 4:10

வயதான ஒருவர் கடைக்குச் சென்று பல பொருட்களை வாங்கினார். ஆனால், பொருட்கள் நிறைந்த அந்தப் பையினை அவரால் தூக்கிச் செல்ல இயலாமல் மிகவும் சிரமப்பட்டார். அவர் சிரமப்படுவதைப் பார்த்து வாலிபன் ஒருவன் உதவி செய்ய வந்தான். இந்தப் பையை நான் தூக்கி வருகிறேன் என்றான் அந்த முதியவரிடம். ஆனால், அவரோ வேண்டாம்... வேண்டாம்... எனக்கு உதவி தேவையில்லை... என்னால் முடியும் என்று கத்தினார். ஆனால், சற்று தூரம் சென்றதும் அந்தப் பாரமான பையினைத் தூக்கிச் செல்ல இயலாமல் தடுமாறி விழுந்துவிட்டார்.

இந்த முதியவரின் தன்னம்பிக்கை பாராட்டிற்குரியதுதான். அந்தத் தன் னம்பிக்கை சக்திக்கு அப்பாற்பட்டது. தனக்கு யாரும் உதவி செய்யத் தேவையில்லை என்ற ஒரு கர்வமான மனநிலையும், தன்னுடைய மிஞ்சின பலவீன நிலையை உணர்ந்து பிறருடைய உதவியை ஏற்காத தாழ்மையின்மையுமே அவரைத் தடு மாறி விழ வைத்தன.யாரையும் சார்ந்திருப்பது நல்லதல்ல. சொத்தக்காலில் நிற்க விரும்பாமல் எதற்கெடுத்தாலும் பிறர் தயவையே நம்பி ஓடுவது நல்லதல்ல. அதே வேளையில் மனித உதவிகளை அசட்டை செய்வதும் நல்ல தல்ல. நாம் யாருமே தனித்து நின்று அனைத்தையும் சாதிக்கும் திறன் படைத்தவர்கள் அல்ல. ஏதாவது ஒரு சூழ்நிலையில், ஏதாவது ஒரு பகுதியில் பிறருடைய தயவும் உதவியும் நமக்குத் தேவையே. அதனை அசட்டை செய்வது தாழ்மையின்மையின் விளைவான ஒரு சுய கர்வமே.

சில பிள்ளைகள் வயதான தங்களின் பெற்றோரை சுமைகளாக எண்ணித் தவிர்க்க விரும்புவது உண்மைதான். ஆனால், வயதான சில பெற்றோர்கள் கடைசிவரை என் மகளின் தயவிலே, மகனின் தயவிலே நான் வாழக்கூடாது என எண்ணி, தனிமையிலேயே முதிர் வயதின் காலங்களைச் சிரமத்தோடு கழிப்பது விவேகமானது அல்ல. சுய கௌரவத்திற்காக மகன் தயவு வேண்டாம், மகள் தயவு வேண்டாம், தேவ தயவு மட்டும் போதும் என்பது சரியான ஆவிக்குரிய நிலைப்பாடு அல்ல. சிலர் நான் யாரையும் சார்ந்திருக்க விரும்பவில்லை என்பதற்குப் பதிலாக, நான் யாருக்கும் தொந்தரவாயிருக்கவில்லை என்பார்கள்.

நாம் தேவனைச் சார்ந்து வாழ்வது உண்மையாயினும், சில நேரங்களில் நம்மைத் தாங்கவும், ஊக்குவிக்கவும், உற்சாகப்படுத்தவும், தேவன் சில மனிதர் களையே எழுப்புகிறார். அற்புதம் பல நிகழ்த்திய எலியா தீர்க்கன், ஆண்டவரின் கட்டளையை ஏற்று அனுதின உணவுக்காக ஒரு விதவையின் வீட்டிற்குச் சென்று தங்கியிருக்கத் தயங்கவில்லை. அற்புதம் செய்ய வல்லமை படைத்த இயேசு ஒரு சிறு வனிடமிருந்த அப்பத்தையும் மீனையும் பெற்றுக்கொள்ளத் தயங்கவில்லை.

சிந்தனைக்கு...

மனித தயவை வெறுத்து விலகாதே.
அதனை விரும்பி ஓடவும் செய்யாதே.

மே 29

தேவன் அன்பானவரா?

எபேசியர் 3:9-21

அறிவுக்கெட்டாத அந்த அன்பை அறிந்து கொள்ள...
எபேசியர் 3:19

தேவன் நம்மிடம் அன்பாயிருப்பது என்பது வேறு. தேவனுடைய அன்பினால் நாம் பயன் அடைவது என்பது வேறு. நாம் பாவிகளாயிருந்தாலும் தேவன் நம்மை நேசிக்கின்றார் என்பதே உண்மை. ஆனால், நாம் பாவிகளாயிருந்துகொண்டே அவருடைய அன்பினால் எந்த நன்மையையும் பெற முடியாது. கெட்ட குமாரன் உவமையில் நாம் பார்க்கும் தந்தை, மகன் தன்னை விட்டுத் தூரமாகிப் போய் துன்மார்க்கமாக வாழ்ந்த போதிலும், அவன்மேல் அவருக்கு நல்ல அன்பு இருந்திருக்கின்றது. இல்லையென்றால் மகனைத் தூரத்தில் கண்ட மாத்திரத்தில், ஓடிப் போய்க் கட்டி அணைத்து முத்தம் கொடுத்திருக்க முடியாது.

ஆயினும், தகப்பனை விட்டு விலகிச் சென்ற மகன், மறுபடியும் தகப்பனிடம் வந்த பின்புதான், அந்த அன்பை அனுபவிக்க முடிந்தது. மகன்மேல் அன்பான எண்ணங்களோடு அந்தத் தகப்பன் நீண்ட காலமாக இருந்தும், அந்த அன்பினால் அந்த மகன் பரவசமடைந்தது அவன் திரும்பி வந்த பிறகே.

நாம் எங்கிருந்தாலும் எப்படியிருந்தாலும் நம்மைக் குறித்து தேவன் அன்பான எண்ணங்களோடுதான் இருக்கின்றார். ஆனால், அந்த அன்பு அவருடைய ஆள்தத்துவத்தின் ஒரு தன்மை. அதைக் குறித்த அறிவு மட்டும் நமக்கு நன்மை தராது. வாழ்க்கையில் சில நேரங்களில் நாம் மனரீதியாக மிகுதியாக வருத்தப்பட்டுக் கொண்டிருக்க நேரிட்டது, அவர் நம்மை நேசிக்கவில்லை என்பதால் அல்ல. அந்த நேசத்தின் பலனை அனுபவிக்கும்படி நாம் அவருக்கு அருகாமையில் இல்லாமல் போனதே காரணம்.

சில நேரங்களில் தேவன் அன்பாயிருந்தால் இப்படியெல்லாம் நிகழுமா? இப்படியெல்லாம் நாம் விசனப்பட்டு வாழ நேரிடுமா? என்றெல்லாம் மனம் கேள்வி கேட்கின்றது. ஆனால், நாம் அவருக்கு அருகில் இருக்கின்றோமா? அவருடைய பிரசன்னத்தை உணரும் விதமாக அவருக்கு நெருக்கமாக வரப் பிரயாசப்படுகின்றோமா? நாம் ஐரோப்பிய குளிர் பிரதேசத்தில் நின்று கொண்டு அரேபியாவில் அதிக வெம்மை என்றால் எனக்கேன் குளிருகிறது என்று கேட்பது சரியாயிராது. சில நேரங்களில் நாம் அமைதியற்றவர்களாகவும், நம்பிக்கையற்றவர்களாகவும் சோர்ந்து போய் வாழ்வதற்கு உண்மையான காரணம் நம்முடைய பிரச்சினைகளல்ல. நாம் தேவனுடைய அன்பை ருசிக்கும் அளவிற்குத் தேவனுக்கு நெருக்கமானவர்களாக வாழவில்லை என்பதே உண்மை. தேவ பிரசன்னத்தை விட்டு ஏதோ ஒன்று நம்மைத் தூரமாக்கி வைத்திருக்கின்றது என்பதே உண்மை.

சிந்தனைக்கு...

இறைவனுக்கு நீ கொடுப்பதைப் பிறர் பார்க்க விரும்பாதே
இறைவன் உனக்குத் தந்ததைப் பிறர் பாராமல் மறைக்காதே.

மே 30

மகிழ வைத்து மகிழ்வோம்

ரோமர் 12:6-21

சந்தோஷப்படுகிறவர்களுடனே சந்தோஷப்படுங்கள்.
ரோமர் 12:15

மிகமிகச் சஞ்சலமான சூழ்நிலைகளில் பிறந்து வளர்ந்தவர் அவர். ஆனால், தன்னுடைய பிள்ளைகளை மிக மிகச் சந்தோஷமாக வைத்துக்கொள்ள அவர் அதிகக் கவனமாயிருந்தார். சிறு பிள்ளையாக இருந்தபோது, எல்லாப் பிள்ளைகளைப் போல சந்தோஷமாக ஓடியாடி விளையாடி மகிழும் வாய்ப்பைப் பெற்றவரல்ல அவர். ஆனால், தன்னுடைய பிள்ளைகள் விளையாடி மகிழ்வதற்காக அவர் ஏராளம் செலவிட்டார். நல்ல உணவு, நல்ல உடை, நல்ல வாகனம், நல்ல வீடு என தன்னுடைய சிறு வயது களிலே அவர் எதையும் அனுபவிக்க வாய்ப்புப் பெறாதவர். ஆனால், தன்னுடைய பிள்ளைகளுக்கு தரமான உணவு, தரமான உடை, தரமான வாகனங்கள் என எல்லாம் வாங்கிக் கொடுப்பார். தன்னுடைய சிறு வயதுகளில் தனக்குக் கிடைக்காமல் போன சந்தோஷங்களை எண்ணி எண்ணி, வெறுப்புணர்வுடன் வாழாமல் தனக்குக் கிடைக்காமல் போன சந்தோஷங்களைப் பிள்ளைகள் காணச் செய்து மகிழ்ந்தார்.

வாழ்க்கையில் நியாயமாகக் கிடைக்க வேண்டிய சந்தோஷங்களும், சௌகரியங் களும் நமக்குக் கிடைக்காமல் போயிருக்கலாம். அதற்காக ஒருவிதமான விரக்தி யுணர்வையும், வெறுப்புணர்வையும் நமக்குள் வளர்க்கக்கூடாது. நாம் மகிழ முடியாமல் போன இடத்தில் வேறு சிலரை மகிழவைக்கும் மனநிலை நமக்கு வேண்டும். நாம் காண முடி யாமல் போன நன்மைகளை வேறு சிலர் கண்டு மகிழ நாம் உதவி செய்ய வேண்டும். நாம் அடைய முடியாமல் போன சந்தோஷ சூழ்நிலைகளை எண்ணி, மற்றவர்களும் சந்தோஷமற்றவர்களாக வாழட்டும் என எண்ணக்கூடாது. நாம் மகிழுவதைவிட மற்றவர்கள் நம்மால் மகிழ முடிந்தால், அதிக மகிழ்ச்சி அதனால் உண்டு.

நாம் சிரித்து மகிழ முடியாமல் போன இடத்தில் வேறு சிலர் சிரித்து மகிழ்ந்தால் அதைப் பார்த்து மகிழ்வது ஒரு பெரிய நிறைவைத் தரும். நாம் விசனமடைந்து வேதனை யடைந்தது போல மற்றவர்கள் விசனமடையாமல், சந்தோஷமாக இருப்பதைக் கண்டால், அதனைப் பார்த்து நாம் மகிழ வேண்டும். அதனால் நமக்கு ஒரு பெரிய திருப்தி கிட்டும்.

சிலர் தாங்களும் மகிழ்வதில்லை. பிறர் மகிழ்வதைப் பொறுப்பதுமில்லை. சிலர் தாங்கள் வருத்தப்பட்ட இடங்களில் பிறர் வாழ்ந்திருப்பதைக் கண்டு துக்கிப்பார்கள். நான் காணாததை பிறர் காணக்கூடாது. நான் அடையாததை பிறரும் அடையக் கூடாது. நான் சாதிக்க முடியாமல் போனதை, பிறரும் சாதிக்கக் கூடாது என்று எண்ணு கின்றவர்கள் அந்த மனநிலைகளால் மேலும் மேலும் துக்கமடைய முடியுமேயன்றி சந்தோஷத்தைக் காண முடியாது.

சிந்தனைக்கு...

பிறர் நலத்தைக் குறித்துச் சிந்திப்பவன் தன் நலத்தைக் குறித்து தனியாகச் சிந்திக்கத் தேவையில்லை.

மே 31
நல்ல ஒழுங்குகள் ஆனால்

ரோமர் 15:1-7

பலவீனருடைய பலவீனங்களைத் தாங்க வேண்டும்.
ரோமர்-15:1

குறிப்பிட்ட ஒருவர் நேரம் என்ற விஷயத்தில் மிகவும் சரியாகச் செயல்படுகிறவர். ஒரு நேரத்தை அவர் குறிப்பிட்டால் அந்த நேரம் சற்றும் தவறாமல் வருவார். ஒரு விஷயத்தைச் செய்வேன் என்றால் சற்றும் பின்வாங்காமல் செய்வார். எந்தப் பொறுப்பை எடுத்துக்கொண்டாலும் எதிர்பார்ப்பதைவிட மிகவும் நன்றாக அதனைச் செய்வார். இவரிடமுள்ள இந்த நல்ல ஒழுங்குகள் பலரால் பாராட்டப்படுகின்றன.

ஆனால், இவரிடமுள்ள மெச்சத்தகுந்த நல்ல ஒழுங்குகள் இவருடைய குடும்பத்திலும், உறவினர்கள் நடுவிலும் பல பிரச்சினைகளை ஏற்படுத்து கின்றது என்பதை நம்புவதற்குக் கடினமாக இல்லையா? இவர் பணிபுரியும் அலுவல கத்தில் இவரை யாரும் உண்மையாக விரும்புவதில்லை என்பது உங்களுக்கு ஆச்சரி யத்தை ஏற்படுத்தவில்லையா? இவருடைய பிள்ளைகள் தங்களின் தந்தையின் நல்ல ஒழுங்குமிக்க வாழ்க்கைக்காக பெருமைப்படாமல், இவரை ஒரு ஹிட்லர் என்று கூறு கின்றார்கள் என்பது விந்தையாக இருக்கின்றதா?

ஆம், இவர் நல்லவர். ஒழுங்கு தவறாதவர். ஆனால், இவர் யாராவது சற்று நேரம் தவறிவிட்டால் பொறுத்துக் கொள்ளவேமாட்டார். யாராவது சொன்னபடி செய்யாமல் போனால், அவர்களை வெறுத்து தள்ளி விடுவார். யாராவது சற்று சரியாக எதை யாவது செய்யாமல் போனால், அவர்களைச் சகிக்கவே மாட்டார். தன்னுடைய நல்ல ஒழுங்குகள் மற்றவர்களிடம் காணப்படாமல் போனால், அது மனைவியானாலும், பிள்ளைகளானாலும், பெற்றோர்களானாலும், நண்பர்களானாலும் விரோதிகளைப் போலவே பார்ப்பார்.

ஆம். சிலருடைய நல்ல ஒழுங்குகளும் நல்ல சில செயல்களும், அவர்களை மோசமான மனிதர்களாக மாற்றிவிடுவது விந்தையான விஷயம். இதுதான் சுயநீதி யினால் ஏற்படும் அராஜகம். தங்களைப் போல ஒழுங்குமிக்கவர்களாக மற்றவர்கள் இல்லாமல் போனால் வெறுத்துத்தள்ளி விடுவது. ஒரு சாடிஸ்ட் மனநிலையாகும். நம்மிடம் உள்ளதுபோல நல்ல ஒழுங்குகளை பிறரிடமும் எதிர்பார்ப்பது நல்ல விஷயமே. அதே வேளையில் பிறருடைய குறைவு களையும், பலவீனங்களையும், பூரணமின்மைகளையும் சகிக்கவும், பொறுக்கவும் தக்க இருதயம் தேவை. குணங்களிலும், பண்புகளிலும், செயல்களிலும் பரி பூரணராயிருந்த இயேசு கிறிஸ்து தம்முடைய சீடர்களின் குறைவுகளையும் பலவீனங் களையும் பொறுத்துக் கொள்ளவும், தாங்கிக் கொள்ளவும் செய்தார். ஏனென்றால், அவரிடமிருந்தது தேவ நீதி. அதனால் அன்பும் இரக்கமும் அவரிடம் மிகுதியாக இருந்தது.

சிந்தனைக்கு...

வாழ்க்கையில் வளைந்து போக நீ பழகாவிட்டால்,
வாழ்வை உடைந்து போய் ஊனமடையச் செய்துவிடுவாய்.

ஜூன் 1

மனிதர்களை நோகாமல்

1 பேதுரு 2:11-25

பாடுபடும்போது பயமுறுத்தாமலும்...
1 பேதுரு 2:23

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து பல காலகட்டங்களில் பரிசேயர்களையும், சதுசேயர்களையும், கடுமையான வார்த்தைகளால் கண்டனம் செய்ததுண்டு. அவர்களைப் பார்த்து மாயக்காரரே, மதிகேடரே, பொல்லாதவர்களே, வெள்ளை யடிக்கப்பட்ட கல்லறைகளே என்றெல்லாம் கடுமையாகப் பேசியது உண்டு. ஆனால், சிலுவையின் கொடிய பாடுகளின் வேளையில் அவருடைய வாய் யாரையும் கண்டனம் செய்யவோ கடிந்து கொள்ளவோயில்லை. அவர்களின் அக்கிரமச் செய்கைகளையும், அநீதிகளையும் பார்த்து அவர்கள்மேல் கோபக்கனலைக் கக்கவில்லை. அவர்களின் கொடுஞ்செயல்களைப் பார்த்து அவர்களைச் சபிக்கவோ, சாபமிடவோ, எச்சரிக்கவோயில்லை.

அதற்குப் பதிலாக அவர்கள்மேல் கரிசனை கொண்டு “பிதாவே இவர்களை மன்னியும் தாங்கள் செய்வது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே” என்று பிரார்த்தனை செய்தார். வேடதாரியான யூதாஸைப் பார்த்து “மாயக்காரனே” என்று சொல்லியிருக்கலாம். ஆனால், அவரோ சினேகிதனே என்றார். இந்தப் பொறுமை யான அணுகுமுறைக்குக் காரணம் என்ன? தமக்கு நேரிட்டவைகளுக்காக அவர் மனிதர்களைப் பார்த்து எரிச்சலடைவதற்குப் பதிலாக இவை யாவும் தேவனால் அனுமதிக்கப்பட்டு தேவ சித்தத்தின் ஒரு பகுதியாகவே நிகழ்கிறது என்று அவர் நம்பினார். அநீதியான காரியங்களை அவர்கள் செய்திருந்த போதிலும், அவர்கள் அவ்விதம் செய்வதற்குத் தேவன் அவர்களுக்கு அனும கொடுத்திருக்கின்றார் என்பதை அவர் தெளிவாக உணர்ந்திருந்தார்.

எல்லாம் தேவனுடைய திட்டத்தின் நிறைவேறுதலுக்கு ஏதுவாகவே நடை பெறுகிறது என அவர் நம்பினதால், அவர் அவர்கள்மேல் கோபாவேசமடைய வில்லை. நான் இவ்விதமான நிந்தையும் பாடுகளும் நிறைந்த ஒரு சூழ்நிலை வழியாகக் கடந்து செல்ல வேண்டும் என்பது தேவனுடைய சித்தத்தின் ஒரு பகுதியாக இருக்கும் போது இந்த மனிதர்களை நினைத்து நொந்து என்ன பயன்? என அவர் நினைத்து அனைத்தையும் பொறுமையாகச் சகித்தார்.

ஆம், சில நேரங்களில் மனிதர்களின் பொறாமையும், எரிச்சலும், அக்கிரம சிந்தையும் நமக்கெதிராகச் செயல்படுவதை தேவன் தடுக்காமல் அனுமதிக் கின்றார். ஏனென்றால் அவைகள் மூலம் சில நன்மைகள் இறுதியில் ஏற்பட வாய்ப்புண்டு என்று தேவன் அறிந்திருக்கின்றார். எனவே, அவைகளை விசுவாசத்தின் விளைவாகப் பொறுமையாகச் சகிப்பதே மிகவும் அவசியமானது.

சிந்தனைக்கு...

நண்பன் பக்கத்து வீட்டில் இருந்தால் நம்பிக்கை வளரும், பகைவன் பக்கத்து வீட்டில் இருந்தால் பக்குவம் பெருகும்.

ஜூன் 2

போதனைகளும் தேவ உறவும்

மத்தேயு 3:1 -12

மனந்திரும்புதலுக்கு ஏற்ற கனிகளைக் கொடுங்கள்...
மத்தேயு 3:8

ஆபிரகாமிடம் உயர்ந்த குணாதிசயங்கள் இருந்தன. ஆபிரகாம் தன்னுடைய வாழ்க்கையின் ஒவ்வொரு பகுதியிலும் நல்ல பண்பு நிலைகளுக்கும், உயர்ந்த வித மான வாழ்க்கை முறைக்கும் சிறந்த மாதிரியாக விளங்கினான். அன்பு, தாழ்மை, மன்னித்தல், பரிவு, ஆக்கப்பூர்வ உதவி, பொருளாசைக்குச் சாயாமை, பொறுமை, அர்ப்பணிப்பு, கீழ்ப்படிவு ஆகிய உயர்குணங்கள்ஆபிரகாமின் வாழ்க்கையில் நிறைவாக இருந்தன.

இவ்விதமான குணாதிசயங்களைப் போதிக்கும் போதகர்கள் அந்த நாட்களில் இல்லை. உயர்ந்த நெறி முறைகளைச் சொல்லிக் கொடுக்க அங்கு யாரும் இல்லை. வேதாகமமோ, போதனைப் புத்தகங்களோ அந்த நாட்களில் இல்லை. அப்படியானால் ஆபிரகாமிடம் உயர்குணங்கள் எப்படி வந்தன?

அவைகள் தேவ உறவினால் ஏற்பட்ட தாக்கங்கள். தேவனோடு நெருங்கிய ஐக்கியமுடையவனாக வாழ்ந்ததின் விளைவாக ஆபிரகாமின் இருதயம் மாற்றம் பெற்று உயர்ந்த குணங்களை உடையதாக மாறியது. ஆனால், இந்நாட்களில் போதகர்கள் ஏராளம். போதனைகள் ஏராளம். வேதாகமங்கள் ஏராளம். போதனை களைக் கற்றறிகின்றவர்களும் ஏராளம். ஆனால், உயர்ந்த சுபாவங்களின்படி வாழ்கின்றவர்களோ அபூர்வம்.

காரணம் என்ன? மனிதனிடம் உயர்குணங்களை உருவாக்குவதற்கு போதனைகள் மட்டும் போதாது. ஆயிரந்தான் நெறிமுறைகளைக் கற்றறிந்தாலும், அதன்படி வாழ்வது என்பது வித்தியாசமான ஒரு அனுபவம். தேவன் தம்முடைய உறவின் மூலமாகவும், நெருங்கிய ஐக்கியத்தின் முலமாகவும்தான் மனிதனுக்குள் உயர்ந்த குணங்களையும், சிறந்த பண்புகளையும் உருவாக்குகின்றார்.

போதனைகள் இல்லாமல்கூட ஒரு மனிதன் தேவ உறவின் விளைவாக சிறந்த பண்பு நிலைகள் உடையவனாக மாற முடியும், ஆனாலும், தேவ உறவு இல்லா விடில் எத்தனைதான் போதனைகளைப் பெற்று தெளிவடைந்தாலும் உண்மையான நிறைவான மாற்றங்கள் ஏற்படாது.

அநேகர் வேத வசனங்களோடும், வேதப் போதனைகளோடும் நெருக்கமா யிருந்தாலும்,உண்மையான மனந்திரும்புதலின் வாயிலாக தேவனோடு நெருங்கி வரவில்லை. எனவே, அவர்களிடம் ஆவிக்குரிய கனிகள் இல்லை.

சிந்தனைக்கு...

தீமையைவிட்டு விலகி ஓட விரும்பினால்,
முதலில் நன்மையை நோக்கி விரைந்து ஓடப்பழகு.

ஜுன் 3

வேதம் ஏன் விளங்கவில்லை?

லூக்கா 24:25-53

வேத வாக்கியங்களை அறிந்து கொள்ளும்படி ...
லூக்கா 24:45

சில நேரங்களில் பலவருட விசுவாசிகள் சிலரோடு நான் பேச நேரிடும் போது அவர்களுக்கு வேத சத்தியங்களும், தேவனைக் குறித்த காரியங்களும் இன்னும் ஓரளவுகூட புரியாமல் இருப்பதைக் கண்டு ஆச்சரியப்படுவேன். அவர்கள் வேதவசனங்களை மிக மிகத் தவறாக விளங்கிக்கொண்டிருப்பதைக் கண்டு நான் பலவேளைகளில் நினைத்தது என்னவென்றால், இவர்களுக்கு சத்தியத்தை யாரும் சரியாகப் போதிக்கவில்லை என்றுதான். ஆனால், தேவ சமுகத்தில் இந்த வேத அறிவின் குறைவுகளைச் சிந்தித்தபோது ஆவியானவர் எனக்கு உணர்த்திய காரணங்கள் வித்தியாசமாக இருந்தது.

அவர்களின் அடிப்படை பிரச்சினை, வேதத்தை சரியாக விளக்கி யாரும் போதிக்காததோ, வேதத்தைப் புரிந்துகொள்ளும் அறிவு குறைவாக இருப்பதோ அல்ல. அவர்கள் இன்னம் தங்களை சரியாக, முழுமையாக கிறிஸ்துவுக்கு அர்ப் பணித்து, சத்தியத்தின் வெளிச்சத்தைக் காணவில்லை. அவர்களுடைய மனக் கண்கள் இன்னும் குருட்டுத் தன்மையிலிருந்து திறக்கப்படவில்லை. ஆவிக்கேற்ற விதமாக காரியங்களை நிதானிப்பதற்குத் தேவையான பரிசுத்த ஆவியின் செயல்பாடு அவர்களுக்குள் இன்னும் ஏற்படவில்லை. அவர்கள் மாம்சீகக் கண்களோடும் மனந்திரும்பாத இதயத்தோடும், வேதாகமத்தையும், வேதாகம உண்மைகளையும் அணுகுவதால், அவர்களுக்கு இன்னும் தெளிவு கிடைக்காமலிருக்கிறது.

அன்றைய பரிசேயர்களும், சதுசேயர்களும் வேத ஆகமங்களோடு மிகுதியாகப் பழகியிருந்தும் அவைகளின் உண்மையான உட்பொருளை அவர்களால் விளங்கிக் கொள்ளாமல் மூளைக்கேற்றபடி விளக்கம் அளித்தனர். ஏனென்றால், வேதத்தை சரியாகப் புரிந்து கொள்வதற்குத் தேவையான சத்திய வெளிச்சத்தின் வாழ்க்கைக்கு அவர்கள் வரவில்லை. வேதத்தை விளங்கிக் கொள்ளும் திறன் மூளையறிவினாலோ, கல்வியறிவினாலோ அல்லாமல், தேவனுடைய பரிசுத்த ஆவியின் கிரியையினாலேயே வருகிறது என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும்.

பரிசுத்தாவியினால் நிரம்பி ஒருவர் ஆழமான சத்தியங்களை மிகத் தெளிவாக விளங்கக் காண்பித்தாலும், அதனைக் கேட்கின்ற நபருக்கு பரிசுத்த ஆவியின் அனுபவம் இல்லாவிட்டால் அதனை சரியாக விளங்கிக்கொள்ள இயலாது. எனவே வேதவிளக்கங்கள் கேட்க வந்த நிக்கெதேமுக்கு இயேசு விளக்கங்கள் தராமல் ஒருவன் மறுபடியும் பிறந்தால்தான் தேவனுடைய இராஜ்யத்தைக் காண முடியும் என்றார். (யோவான் 3:3)

சிந்தனைக்கு...

புதிதாக எதையாவது அறிய விரும்பும் முன்பு ஏற்கெனவே அறிந்ததின்படி செயல்பட்டாயா என்று பார்

ஜுன் 4

நான் நம்பவில்லை

நீதிமொழிகள் 17 : 1-15

நீதிமானைக் குற்றவாளியாக்குகிறவனுமாகிய
நீதிமொழிகள் 17:15

சில கணவன் மனைவியருக்கிடையில் நம்பிக்கைக் காற்று வீசுவதில்லை. ஒருவரை யொருவர் நம்புவதற்கான அடையாளங்களை ஒருவருக்கொருவர் வார்த்தை களிலோ செயல்களிலோ பார்க்க முடிவதில்லை. மனைவியின் பார்வை, வார்த்தை, செயல்படும் விதம் யாவுமே கணவனை நான் நம்பவில்லை என்பதையே சொல் லிக்கொண்டிருக்கும். அவ்விதமாகவே சில பெற்றோர்கள் தங்களின் அனைத்து நடவடிக்கைகளின் மூலமாகவும், பிள்ளைகளுக்குக் கொடுக்கும் ஒரே செய்தி "உன்னை நான் நம்பவில்லை, உன்னை நான் சந்தேகிக்கின்றேன்" என்பதே.

கண்ணை மூடிக்கொண்டு எதையும் நம்பக் கூடாது. அதே வேளையில் நம்பிக்கையின்மையையே வாழ்க்கைமுறை ஆக்கிவிடக் கூடாது. சிலர் நாம் மற்ற வர்களை நம்பிவிட்டதாக காட்டிக் கொண்டால் நம்மை ஏமாற்றிவிடுவார்கள் என சிந்திக் கின்றனர். உன்னை நான் நம்பவில்லை, நம்பவில்லை என்பது போலக் காட்டிக் கொண்டால் மற்றவர் ஜாக்கிரதையாயிருப்பார் என்று நினைக்கின்றனர்.

நம்முடைய நம்பிக்கையின்மை நம்மைச் சந்தேக வியாதியினால் மிகுதியாய் பலமிழக்க வைக்கும். அதுவே நம்மால் சந்தேகிக்கப்படுகின்றவர்கள் தங்களின் நம்பகத் தன்மையை இழக்கவும் வழிவகுக்கும். நம்மால் நம்பப்படாதவர்கள் நம்மிடம் அவர்களுக்கு என்றுமே நற்பெயர் கிடைக்காது என்ற விரக்தியினால் தவறிப் போக வாய்ப்புண்டு. சந்தேகிக்கும் உணர்வோடேயே வாழ்கின்றவர்களால் மற்றவர்கள் தங்களின் நல்ல உறுதிப்பாட்டில் தளருவார்கள். உன்னை நான் நம்புகின்றேன். உன்னை நான் நம்புகின்றேன் என்ற விதமாக நம்முடைய அணுகு முறை இருந்தால், வழிவிலகத் தூண்டப்படுகின்றவர்கள்கூட தங்களை நம்பகத் தன்மை யுடைவர்களாக நிறுத்திக்கொள்ள அதிகக் கவனமாயிருப்பார்கள்.

நம்பாதவர்களுக்கு முன்னால் நல்லவர்களாக வாழ்ந்து காட்டும் வைராக்கியம் தளரும். நம்புகின்றவர்களுக்கு முன்னால் தீயவர்கள்கூட அந்த நல்ல பேருக்காகத் தங்களைச் சரியாக நிறுத்திக் காட்டத் தூண்டப்படுவார்கள். அடிமையான யோசேப்பை போத்திபார் அதிகமாக நம்பினான். அதனை உணர்ந்து செயல்பட்ட யோசேப்பு அந்த நம்பிக்கைக்குச் சேதம் வராமல் வாழ்ந்திட மிகவும் கரிசனை யாயிருந்தான். எனவே, எளிதாக வெல்ல முடியாத ஒரு பயங்கரமான பாலியல் சோதனையை, இளைஞ னாகிய அவன் எளிதாக மேற்கொண்டான். ஏனென்றால், தன்னை நம்பினவனுக்கு நம்பிக்கைத் துரோகம் செய்யக் கூடாது என்ற உணர்வு மேலோங்கியிருந்தது. சந்தேகக் கண்கள் சந்தோஷத்தின் எதிரிகள். நம்பிக்கையான நாவு மகிழ்ச்சியின் நண்பன்.

சிந்தனைக்கு...

உண்மையில் நிலைத்திருப்பதைத் தவிர பொய்யைப் பொய்யாக்குவதற்கான சிறந்த வழி இல்லை.

ஜூன் 5

கலியாண வஸ்திரம்

மத்தேயு 22:1-14

நீ கலியாண வஸ்திரமில்லாதவனாய் இங்கே எப்படி வந்தாய்?
மத்தேயு 2:12

ஒரு சபையில் எழுப்புதல் கூட்டம் நடைபெற்றது. எழுப்புதல் பிரசங்கியார், மனந்திரும்புதல், இரட்சிப்பு, கனி கொடுத்தல் போன்ற அனுபவங்களை அடையாமல், சபைகளில் விசுவாசிகள் என்ற பெயரில் அங்கமாயிருப்பதை ஒரு பெரிய பாவம் என்று பிரசங்கித்தார். அவருடைய பிரசங்கம் சபையாரைப் பெரிதாக அசைக்கவில்லை. ஆனால், அந்த சபையின் போதகர், அந்தப் பிரசங்கியாரிடம் தனியாக வந்து, “ஐயா... மனந்திரும்பாமலே சபைஉறுப்பினராகத் தொடருவது பாவமென்றால், பதினைந்து வருடமாக அவ்வித அனுபவம் எதுவுமின்றி இந்த சபையின் போதகராக நான் தொடருகின்றேனே... அது எவ்வளவு பெரிய பாவமாயிருக்கும். என்னை கர்த்தர் மன்னிப்பாரா?” என்று மனஸ்தாபத்துடன் கூறினார்.

தேவன் நம்முடைய ஆவிக்குரிய வாழ்க்கையில் முதலாவது எதிர்பார்ப்பது, மனந்திரும்புதல், இரட்சிப்பு, கனிகொடுத்தல் போன்ற அனுபவங்களையே. அவைகளைக் குறித்த கவலையும், விழிப்புணர்வும் இல்லாமலே பல வருடங்களாக நாம் சபை உறுப்பினராக இருப்பதோ, கமிட்டி உறுப்பினராக இருப்பதோ, போதிக்கின்ற பதவியை வகிப்பதோ, தேவனைக் கனப்படுத்தும் செயல்களாகயிராமல் கர்த்தரைத் தொடர்ந்து கோபப்படுத்தும் செயல்களாகவேயிருக்கும் சிலுவையில் இயேசு இரத்தத்தைச் சிந்தி உருவாக்கிய இரட்சிப்பின் அனுபவத்தை முக்கியப் படுத்தாமல் நாம் செய்யும் எல்லா நல்ல செயல்களும் வீணானவையே.

இயேசு கிறிஸ்து கூறிய உவமை ஒன்றில், திருமண விருந்து நடத்திய ஒருவன் எளிய நிலையிலுள்ள அநேகரை விரும்பி அழைத்து ஏற்றுக்கொண்டான். ஆயினும், கல்யாண வஸ்திரம் தரிப்பதற்குக் கவலையின்றி, அசட்டையாக யிருந்த மனிதனைக் கடுமையாகக் கண்டித்ததோடு, அவனைப் புறம்பான இருளில் தள்ளவும் உத்தரவிட்டான். அநேகர் ஆலயங்களுக்கு ஒழுங்காகச் செல்வதையும், திருவிருந்தில் பங்கு கொள்ளக் கவனமாயிருப்பதையும், சபைக் கமிட்டிகளி உறுப்பினர்களாகி சபைக்காக உழைப்பதையும், கர்த்தருக்குக் கொடுக்கின்ற மரியாதையாகவும் ஆசீர்வாதமான விஷயங்களாகவும் எண்ணித் தங்களுக்குள் திருப்தி கொள்ளுகின்றனர்.

ஆனால், இரட்சிப்பின் நிச்சயம் பெறுதல். கர்த்தருக்குப் பிரியமாக வாழ்தல் போன்ற அனுபவங்களாகிய கலியாண வஸ்திரத்தை அசட்டை செய்துகொண்டே, மேற்கண்ட காரியங்களில் தொடருவது தேவனைக் கனப்படுத்துகின்ற காரியங்கள் அல்ல. அடிப்படைத் தகுதியான மனந்திரும்புதல் இல்லாத நிலையில் மற்ற யாவையும் வீணானவையே.

சிந்தனைக்கு...

எவ்வளவு காலம் கிறிஸ்தவர்களாக இருக்கிறோம் என்பதல்ல.
எந்த அளவு அவரைப் பின்பற்றுக்கிறோம் என்பதே முக்கியம்.

ஜூன் 6

நாம் நாய்க்குட்டிகளா?

ரோமர் 8 : 14 -30

பிள்ளைகளானால் சுதந்திரருமாமே ...
ரோமர் 8 : 17

தேவனே... உம்முடைய மேசையிலிருந்து விழும் துணிக்கைகளுக்காக காத்துக் கிடக்கும் நாய்க் குட்டிகளாகிய எங்களுக்கு இரங்கும். இது ஒருவர் ஜெபிக்கும் போதெல்லாம் உபயோகிக்கும் வாக்கியம். அவ்விதமாக நம்மைத் தாழ்த்தினால் தான் தேவன் நமக்கு இரங்குவார் என்பது அவரது சிந்தனை. நம்மைத் தாழ்த்துதல் மிகவும் தேவைதான். அதே வேளையில் தேவன் நம்மை நாய்க் குட்டிகளாக அல்ல. தம்முடைய பிள்ளைகள் என்ற நிலையிலேயே அழைக்கின்றார் என்ற உன்னத உண்மையை உணர்ந்து இயங்குதல் மிக, மிக அவசியம்.

அனேகர் தேவனோடு தங்களுக்குள்ள உறவை நல்ல ஒரு கோணத்தில் பார்ப்பதில்லை. தேவனை ஒரு கடினமான எஜமான் போலவும், தங்களை வாசலிலே காத்துக் கிடக்கும் வேலைக்காரர்களைப் போலவும் பார்க்கிறார்கள். இது சரியான பார்வை அல்ல. பரிசுத்தாவி யானவர் நமக்குள் எதைப் பேசுகின்றார்? “நீ தேவனுடைய பிள்ளையாக இருக்கிறாய்” என்று பேசுகின்றார். (ரோமர் - 8:15)

அப்படியிருக்கையில் தேவனுடைய பிள்ளை என்ற நிலையில் உரிமையோடு தேவனை அணுகுதல் மிகவும் அவசியமல்லவா. தேவனிடம் உரிமை பாராட்டி வேண்டுதல் செய்வது தேவையல்லவா. ஆம் அதைத்தான் பிதா விரும்புவார். அதே வேளையில் பிள்ளை என்ற உரிமையுடன் நாம் அணுகும்போது, பிதா என்ற உரிமையில் அவர் நம்மை தம்முடைய விருப்பத்திற்கு நடத்த விரும்புவதை முழுமையாக ஏற்கவும் வேண்டும். நாம் பிள்ளைகள் என்ற நிலையை உணர்ந்து அவருடைய பிரியத்திற்கேற்ப நடக்கும் போதுதான், அப்பா என்ற உரிமையோடு கூப்பிட்டு நம்பிக்கையோடு கேட்கின்ற உறவின் உணர்வுகளும் பெருகும். அது இல்லையேல் அன்னிய உணர்வுகள் இதயத்தை ஆட்கொண்டு, நாய்குட்டிகள் என்ற நிலமைக்கு நம்மைத் தள்ளிவிடும்.

சிலர் எப்போதுமே ஜெபங்களில் தங்களைப் பாவி, பாவி என்றும் குப்பை, தூசி என்றுமே குறிப்பிடுவார்கள். அவ்விதம் செய்வதை அவர்கள் தாழ்மையென எண்ணுகின்றனர். ஆனால், உண்மையில் அது தாழ்மை அல்ல. அவர்களால் தங்களைத் தேவனுடைய பிள்ளைகளாகவோ, பரிசுத்த வாழ்க்கை வாழ்கின்ற வர்களாகவோ பார்க்க முடிவதில்லை. உண்மையான மனந்திரும்புதலைக் கண்டவர் களுக்கு தாங்கள் தேவனுடைய பிள்ளைகள் என்ற வெளிப்பாடு நிச்சயம் இருக்கும். அவர்கள் தேவன் தங்களுக்கு கிருபையாகத் தந்த உயர்நிலையை உணராமல், தங்களை அற்பர்களாக எண்ணுவதில் அதிக ஆர்வம் காட்டமாட்டார்கள்.

சிந்தனைக்கு...

இறைவனிடம் நீ எந்த அளவிற்கு கற்றுக்கொள்வாயோ அந்த அளவுதான் நீ அவரிடமிருந்து பெற்றுக்கொள்ளவும் முடியும்.

ஜூன் 7

பொழுதுபோக்கு

சங்கீதம் 1:1-6

இரவும் பகலும் தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான்...
சங்கீதம் 1:2

மணிக்கணக்கில் உட்கார்ந்து நண்பர்களோடு கேரம்போர்டு விளையாடும் ஆவிக்குரிய ஒருவரிடம், இது சரியல்ல என்றபோது, இதிலென்ன பாவம் இருக்கிறது என்று வாதிட்டார்.தினமும் பல மணி நேரங்களை கிரிக்கெட் மற்றும் வினாடி வினாப் போட்டி என்று டி.விக்கு முன்பாகச் செலவிடும் விசுவாசியிடம், ஆவிக்குரியவர்களுக்கு இது உகந்ததல்ல என்ற போது, கிரிக்கெட் மேட்ச் பார்ப்பது தவறா? வினாடி வினா நிகழ்ச்சி பார்ப்பது தவறா? என்று வாதாடினார்.

இந்த உலகத்தில் பல விஷயங்கள் தவறோ குற்றமோ பாவமோ அல்ல. ஆனால், அவைகளின் விஷயத்தில் தகுந்த வரையறையும் கட்டுப்பாடும் இல்லாவிடில் கிறிஸ்தவ வாழ்க்கையை அவை பாதிக்கும். வேதம் சில காரியங்களைப் பாவம் என்று சொல்கிறது. சில காரியங்களை பாரம் என்று சொல்கின்றது. பாவங்களை மட்டுமல்ல பாரங்களையும் தள்ளிவிட வேண்டும் என்று வேதம் ஆலோசனை தருகிறது. (எபிரெயர் - 12:1) பாரங்கள் என்பவை நல்ல விஷயங்களாகக்கூட இருக்க முடியும். ஆனால், அவை நம்முடைய ஆவிக்குரிய பயணத்தின் வேகத்தைக் குறைந்து போகச் செய்ய முடியும்.

சில பொழுதுபோக்குகள், விளையாட்டுகள் போன்றவை வேண்டாம் என்று விலக்கப்பட வேண்டிய பாவங்கள் அல்ல. ஆனால், அவைகள் மேல் நாம் கொள்ளும் அதிகமான ஈடுபாடுகள் நம்முடைய ஆவிக்குரிய ஈடுபாட்டின் வேகத்தை மட்டுப்படுத்துவதோடு, சில வேளை அவைகளைச் சீர்குலைக் கவும் செய்யும். ஆக, எந்தெந்த விஷயங்கள் தேவனோடு நம்முடைய இதயத்தைச் சரியாகப் பிணைப்பதற்கு அல்லது தேவ ஐக்கியத்தினை உள்ளத்தில் உணர்வதற்கு இடையூறு செய்யும் தன்மையுடையதாயிருக்கின்றதோ, அவைகளின் விஷயத்தில் நாம் சரியான கட்டுப்பாட்டு எல்லைகளைக் கொண்டிருக்க வேண்டும்.

ரோம் நகரம் எரிகின்ற போது நீரோ மன்னன் பிடில் வாசித்துக் கொண்டிருந்தானாம். பிடில் வாசிப்பது தவறோ பாவமோ அல்ல. ஆனால், எரிகின்ற நகரத்தைக் காப்பாற்றும் கடமையைக் குறித்துக் கவலையற்றுப்போய், பிடில் வாசித்தானே அதுதான் தவறு. ஒரு உண்மையான கிறிஸ்தவனுக்கு பல மேலான கடமைகள் உண்டு. அவைகளை நினையாமல் அவன் பொழுதை வீணாக்கினால் அது பாவமாக மாறும். நேரங்களைத் தேவ சமுகத்தில் ஜெபம், தியானம் என்று செலவழித்தால் அது அவனைப் பிரகாசிக்கச் செய்யும். நேரங்களைக் கர்த்தரின் காரியங்களுக்காகச் செலவழித்தால், அது அவனுடைய உலக வாழ்க்கையை அர்த்தமுடையதாக்கும்.

சிந்தனைக்கு...

காலத்தின் அருமையை நீ அறியும் நாள் நிச்சயம் வரும். ஆனால், அதுவரை உனக்காக காலங்கள் நிற்பதில்லை.

ஜூன் 8

பயன்படாத வாழ்வு

யோபு 2:9-13

தேவனைத் தூஷித்து ஜீவனை விடும் என்றாள் ....
யோபு 2:9

ஒரு மனிதன் தன்னுடைய கடைக்கு முன்பாக ஒரு விளம்பரப் பலகையை வைத்திருந்தான். உங்களிடம் பயன்படாமலிருக்கும் எந்தப் பொருளையும் என்னிடம் கொண்டு வாருங்கள். அதனை உங்களுக்குப் பயனுள்ளதாக்கித் தரு கின்றேன் என்று அதில் எழுதியிருந்தது. அந்த மனிதனிடம் எதற்கும் பிரயோஜன மற்ற எந்தப் பொருளைக் கொடுத்தாலும், அதனை ஒரு நல்ல பயனுள்ள பொருளாக மாற்றிவிடும் கலைத்திறனும் ஞானமும் இருந்தது.

ஒருநாள் வாழ்க்கையில் விரக்தியடைந்த வாலிபன் ஒருவன் அவனிடம் வந்தான். ஐயா, என்னை எதற்கும் பிரயோஜனமில்லாதவன் என்று என் பெற்றோர் கூறிவிட்டனர். என்னை நீர் பிரயோஜனமுள்ளவனாக மாற்ற இயலுமா? என்று கேட்டான். அதற்கு அந்த மனிதன் பொருட்களைத்தான் என்னால் பயனுள்ளதாக்க இயலும். உன்னைப் போன்றவர்களை பயன்படுத்த கடவுளால்தான் முடியும். நீ போய் பிரார்த்தனை செய் என்று பதிலளித்தான்.

ஆம், தேவன் மட்டும்தான் பயன்பாடற்றுப் போன ஒரு மனித வாழ்வை பயன்மிக்கதாக மாற்றமுடியும். யாருக்கும் வேண்டாம் என்று வீசப்படும் வாழ்க்கை தனை அவரால்தான் எல்லோருக்கும் பயனுள்ளதாக மாற்ற இயலும். இதை எழுதிக் கொண்டிருக்கின்ற என் வாழ்வை நான் எதற்கும் பயன்பாடற்றதாகக் கண்டு கசந்து போன காலங்கள் இருந்தது. ஆனால், அற்புதக் கலைஞராகிய தேவன் இந்தப் பயனிழந்துபோன வாழ்வை, இன்று பயன்மிக்கதாக மாற்றியிருக்கின்றாரே.

யோபு அனைத்தையும் இழந்து போனான். ஆஸ்தி, அந்தஸ்து, ஆரோக்கியம் யாவும்போய் விட்டது. அவனுடைய பயன்பாடிழந்த பரிதாப நிலைமையைப் பார்த்து, அவனுடைய சொந்த மனைவியே உயிரைவிட்டுவிட ஆலோசனை கொடுத்தாள். ஆனால், அந்த மனிதனோ தேவனை நோக்கிப் புலம்பினான். அந்தப் பயனிழந்து போன வாழ்வைத் தேவன் தொட்டுத் துலக்கி, புதிய வடிவத்தில் மிகுந்த ஆசீர்வாத முள்ளதாக்கினாரே.

என்னால் என்ன பயன்? இனி என் வாழ்வினால் என்ன பிரயோஜனம்? என்ற கேள்விகள் அடிக்கடி உங்களுக்குள் வருகிறதா? விசுவாசக் கண்களால் உற்றுப் பாருங்கள். உங்களின் அருகில் ஒருவர் நிற்கின்றார். இந்த வாழ்வை என்னிடம் அர்ப்பணித்துவிடு. அதைப் பயனுள்ளதாக்கிக் காட்டுகிறேன் என்கிறார். அவர்தான் உங்களை மீட்கப் வந்த இயேசு கிறிஸ்து. அவரிடம் உங்களை ஒப்படையுங்கள். அவர் உங்களை ஆசீர்வாதமாக்குவார்.

சிந்தனைக்கு...

நாம் நம்பிய ஆதாரங்கள் அசையும் போதுதான் நம் நம்பிக்கையை வைக்க வேண்டிய ஆதாரம் எதுவென்பது தெரியும்.

ஜூன் 9

நற்செயலும், நற்பண்பும்

லூக்கா 16:1-15

மனுஷருக்குள்ளே மேன்மையாக எண்ணப்படுகிறது.
லூக்கா 16:15

அனாதைகளுக்கு வாழ்வு அளிப்பது தொடர்பான சமூக இயக்கத்திற்கு அவர் ஒரு காரியதரிசி. பல அனாதை இல்லங்களை அமைத்து அவைகளை நிர்வகிக்கும் இயக்குனர் அவர். வெளிநாட்டு ஸ்தாபனங்களை அணுகி அனாதை ஆசீரமங்களுக்கு உதவி பெறுவதில் அவர் திறமையானவர். மனித நேய பணிகளுக்காக அரசாங்கத்தாலும், சேவை இயக்கங்களாலும் பல பட்டங்களையும், பாராட்டுக்களையும் பெற்றவர். ஆனால், வயது முதிர்ந்த தன்னுடைய பெற்றோருக்குச் செய்ய வேண்டிய கடமையைச் செய்யாதவர். வறுமையில் வாடும் தன் சகோதரர்களின் சுகநலனை விசாரிக்க மனதற்றவர்.

நாம் எந்தெந்த விதங்களில் நற்செயல்கள் செய்கின்றோம் என்பதைவிட, அவைகளுக்கேற்ற நல்ல மனோபாவங்கள் நமக்கு உண்டா என்பது மிக முக்கியம். நற்பண்புகளை பின்னணியாகக் கொண்டிராத எந்த ஒரு நற்செயலும் சுய நலம் சார்ந்ததாகவும், மறைவான ஆதாயங்களை நோக்கமாகக் கொண்டதாகவுமே இருக்கும். அவ்வித நற்செயல்கள் மனிதர்களின் பாராட்டினைப் பெற்றுத் தந்தாலும், தேவன் அவைகளை அருவருப்பாகவே பார்க்கின்றார்.

ஆம், இன்று அன்பு சார்ந்த நற்பணிகளைச் செய்கின்ற பலரின் தனிப்பட்ட வாழ்க்கை வட்டத்தில், அன்பின் வாசனை சற்றும் இல்லை. ஜனங்களின் பிரச்சினைகளுக்காக இரங்கி சமூக நல ஸ்தாபனங்களை நடத்துகிற பலரிடம், இரக்க உணர்வு இதயத்தில் இல்லை. பரிசுத்தத்தைக் குறித்தும், ஆத்தும ஆதாயத்தைக் குறித்தும் பிரமாதமாகப் பேசுகின்ற பலரால், பெரிய ஊழிய ஸ்தாபனங்களை உருவாக்க முடிகிறது. ஜனங்களுக்கு நடுவில் பெரிய ஊழியர்களாகப் பிரபலமடைய முடிகிறது. ஆனால், அவர்களின் தனிப்பட்ட வாழ்க்கைகளோ பரிசுத்தத்தை அறியாதவைகளாகவும், பொருளாதாயங்களை நோக்கமாகக் கொண்டவைகளாகவும் இருக்கின்றன.

மனிதர்கள் நாம் பேசுவதைக் கேட்பார்கள். தேவனோ நம்முடைய உள்ளத்தில் உள்ளது என்ன என்பதைப் பார்ப்பார். மனிதர்கள் நம்முடைய செயல்களைப் பார்த்து மெச்சுவார்கள். தேவனோ அவைகளுக்கு அடிப்படையாக இருக்க வேண்டிய உண்மையான பண்பு நிலைகள் இல்லாததைக் கண்டு விசனப்படுவார். நம்முடைய நற்செயல்கள் பலருடைய பாராட்டுகளைப் பெறுகின்ற அதே வேளையில், நற்குணங்கள் இல்லாத இதய நிலைகளை தேவன் பார்த்து, தம்முடைய கோபத்தையே நம்மேல் பொழிவார்.

சிந்தனைக்கு...

தீயவைகள் உன்னிடம் தானாய் தோன்றும். ஆனால், நல்லவைகளை நீதான் தோற்றுவிக்க வேண்டும்.

ஜுன் 10

ஏன் எரிச்சல்?

யோனா 4:1-11

நான் உயிரோடிருக்கிறதைப் பார்க்கிலும் சாகிறது நலமாயிருக்கும்...
யோனா 4:8

யோனாவின் புத்தகம் 2-ம் அதிகாரத்தைப் படித்துப் பாருங்கள். (1) அவர் கர்த்தரை நோக்கிச் ஜெபிக்கின்ற மனிதன் (2) கர்த்தர் தன்னுடைய சத்தத்தைக் கேட்டதாகச் சொல்லுகின்ற மனிதன் (3) நெருக்கங்களின் மத்தியிலும் தேவன்மேல் கொண்ட நம்பிக்கையை அறிக்கையிடும் மனிதன் (4) தேவன் தன்னைப் பெரிய ஆபத்திலிருந்து விடுவித்ததாகச் சாட்சி கூறுகின்ற மனிதன் (5) தேவன் அருளும் கிருபையை போக்கடிக்கின்றவர்களை விமர்சிக்கின்ற மனிதன் (6) இரட்சிப்பு கர்த்தருடையது என்பதை உறுதிப்படுத்திக் கொண்ட மனிதன் (7) தேவனுடைய அதிசயமானதோர் செயலின் வாயிலாக உயிர் பிழைத்த மனிதன்

இவை யாவும் யோனா எத்தனை எத்தனை ஆவிக்குரிய அனுபவங்களை உடைய ஒருவனாயிருந்தான் என்பதை விளக்கிச் சொல்கிறது. அதே வேளையில், இவ்வளவு இறைத் தொடர்பு அனுபவங்களையும், சாட்சிகளையும் உடைய ஒரு மனிதன், எரிச்சலோடே வாழ்ந்து கொண்டிருந்தான். இவ்வளவு இறை அனுபவங் களை உடைய ஒருமனிதன் வாழ்வதைவிட சாவதே நல்லது என்று சொல்லிக் கொண்டிருந்தான்.

தேவனோடு தனக்கு ஏற்பட்ட நல்ல பல அனுபவங்களைப் பட்டியலிடுகின்ற ஒரு மனிதன், நிம்மதியற்றவனாகவும், எரிச்சலினால் எரிந்து கொண்டு வாழ விரும்பாத விரக்திமிக்கவனாகவும் வாழ்ந்தான். எத்தனை முரண்பாடான ஒரு செய்தி. எத்தனை அதிர்ச்சியான செய்தி. காரணம் என்ன? இத்தனை ஆன்மீக அனுபவங் களுள்ள ஒரு மனிதன் எவ்வளவு சமாதானத்தோடும், எவ்வளவு சந்தோஷத்தோடும் வாழ வேண்டும். ஆனால், யோனாவுக்கு ஏன் இப்படி ஒரு துர்பாக்கியமான நிலமை? நாம் தேவனிடமிருந்து நன்மை பெற்ற சாட்சியை உடையவர்களாயிருக்கலாம். நாம் தேவன் பேசினதாகவும், உணர்த்தியதாகவும், வழிநடத்தியதாகவும் கூறலாம். ஆயினும், இவற்றால் மட்டும் மனஅமைதியும், மனகிழ்ச்சியும், மன நிறைவும் வந்துவிடாது. ஆவிக்குரிய வாழ்க்கையின்மிக முக்கிய அம்சம், தேவனுடைய சிந்தை யோடும், மனதோடும் ஒத்துப் போகுதல் ஆகும்.

யோனா பலவிதங்களில் ஆன்மிக அனுபவங்கள் பெற்றிருந்தும், தேவனுடைய மன விருப்பங்களோடு இசைந்துபோக இயலவில்லை. மன்னிப்பு, அன்பு, பொறுமை போன்ற உயர்குணங்களை தேவன் விரும்பினார். ஆனால், பாவிகள் விஷயத்தில் இதுபோன்ற அணுகுமுறையை அவன் விரும்பவில்லை. எனவே, தேவ சமுக எல்லைக்குள் இருந்தும், தேவ அமைதிக்குத் தூரமாகவேயிருந்தான்.

சிந்தனைக்கு...

இறைவன் உன்னிடம் இருக்கிறார் என்பதைவிட அவர் உன்னிடம் என்ன செய்கிறார் என்பதே முக்கியம்.

ஜுன் 11

பூரண நிலை

மத்தேயு 22:35-40

உன்னிடத்தில் நீ அன்பு கூருவது போலப் பிறரிடத்திலும் அன்பு கூருவாயாக... மத்தேயு 22:39

சில கடினமான உபதேச முறைகளினால் சந்தோஷமான பலவித உலகக் காரியங்களை வெறுத்து விடுகின்ற சிலரை நான் கவனித்திருக்கின்றேன். அவர்கள் கிறிஸ்துவை மகிமைப்படுத்தும் என்ற எண்ணத்தில் தங்களைத் தாங்களே சிலுவையில் அறைந்து கொள்கின்றார்கள். அந்த செயல்கள் அவர்கள் ஆன்மிகத்திற்காக மிகவும் சிரமமான ஒரு வாழ்க்கை முறையை தெரிந்துகொண்டார்கள் என்பதை விளக்கும். ஆயினும் அவர்கள் தங்களைப் போல பிறரும் அவ்விதம் தங்களை வருத்திக் கொள்ளாவிட்டால் அவர்களை அற்பமாக எண்ணி ஒதுக்கி விடுவார்கள். அன்பை சற்றும் காண்பிக்க மாட்டார்கள்

ஆனால், ஆவிக்குரிய வாழ்க்கையின் பூரண நிலை என்பது கண்டிப்பான உபதேசங்களால் நம்முடைய சரீரப்பிரகாரமான வாழ்க்கையை அடக்கி ஒடுக்கி, கசக்கிப் பிழிந்து கொண்டேயிருப்பதல்ல. கடினமான பக்தி நியமங்களால் நம்மை அதிகமாக வெறுத்து கடவுளுக்காக அதிகமாக உழைப்பதுதான் பூரணநிலை என்று அனேகர் எண்ணுகின்றனர். ஆனால், உண்மையான ஆன்மீக வாழ்வின் முழுமை நிலை என்பது ஒரு மனிதன் மற்றவர்களை அதிகமாக நேசிக்கின்ற மிகுந்த மனப்பக்குவ நிலையை அடைதலாகும். இயேசு சொன்ன பிரதானமான கட்டளைகள் இரண்டுமே அன்பையே நோக்கமாக கொண்டிருப்பதை நாம் கவனிக்க வேண்டும்.

கர்த்தரோடு நெருங்கிப் பழகி, அவருடைய உணர்வுகளையும் விருப்பங்களையும் சரியான முறையில் அறிந்து அன்பில் பெருகுகின்ற அனுபவமே பூரணத்தின் படிக்கற்கள். அதுதான் மற்றவர்களை ஏற்றுக்கொள்கின்ற, தாங்கிக்கொள்கின்ற நேசிக்கின்ற பக்குவமான இதயநிலைக்கு நம்மை அழைத்துச் செல்லும். தேவனோடு அதிகமாக நெருங்கிச் சேருகின்ற ஒருவர், மனிதர்கள் விஷயத்தில் தன்னைத் தாழ்த்திக் கொள்ளவும், விட்டுக் கொடுக்கவும், இயன்ற ஒரு ஒருவராக பக்குவ மடைகின்றார்.

ஏனென்றால் இன்னொருவரை ஏற்றுக்கொள்வதற்கும், ஐக்கியங் கொள்வதற்கும் தடைகளாக அவர்களிடமிருந்து வெளிப்படும் சில அன்பற்ற போக்குகளை பொருட்படுத்தாமல் செயபடுவதுதான் அன்பாகும். மற்றபடி நாம் அதிகமாக நம்மை வருத்தலாம். அதிகமாக தேவனுக்காக வருந்தி உழைக்கலாம். ஆனால், அவைகளின் தூண்டுகோல் வெறும், பயமும், பக்தியுமாகவே இருக்கும். அது பிறரை ஏற்றுக் கொள்ளும் பக்குவத்தைத் தராது. அன்பில் நம்மை பெருகச் செய்யாத எல்லாப் பக்தி சிரமங்களும் வீணானவையே.

சிந்தனைக்கு...

நற்குணங்களோடு இணைந்திராதவனின் இதயம் இறைவனை விட்டு வெகுதூரம் விலகியேயிருக்கிறது.

ஜூன் 12

ஆச்சரியம்

மாற்கு 6:1-6

இவைகள் இவனுக்கு எங்கேயிருந்து வந்தது.
மாற்கு 6:2

பாடல் போட்டி ஒன்று நடந்த அரங்கத்தில் ஒவ்வொருவராய் பாட வந்தபோது எல்லோரும் மிகுதியாய் கரகோஷம் செய்தார்கள். அந்த வரிசையில் சாதாரண தோற்றங்கொண்ட ஒரு பெண் பாட வந்தேபோது, கூடியிருந்தவர்கள் அதிகமாக கரகோஷம் செய்யத் தூண்டப்படவில்லை. இவள் ஓர் சாதாரணக் குடும்பத்துப் பெண், ஏதோ ஆர்வக் கோளாறினால் பாடவருகிறாள் என்று நினைத்தார்கள். ஆனால், அவள் பாடிய பாடலைக் கேட்ட பின்னர், வேறு யாருக்கும் செய்யாத அளவிற்கு நீண்ட நேரம் கூட்டத்தினர் கரகோஷம் செய்தனர். இந்தச் சாதாரணமான பெண்ணிடம் இவ்வளவு அசாதாரணமான ஒரு இனிய குரல் வளமா! என்று எல்லோரும் ஆச்சரியப்பட்டனர்.

சிலர் தங்களின் அழகான, மிடுக்கான தோற்றங்களினால் பலருடைய நன்மதிப் பையும், நல்ல எண்ணத்தையும் உடனேயே பெற முடியும். சிலரோ தங்களிடமிருந்து மறுக்க முடியாத, அசட்டை செய்யக் கடினமான சில நல்ல விஷயங்களை வெளிப்படுத் தித்தான் பிறருடைய நல்ல எண்ணத்தைப் பெற முடியும். இயேசு கிறிஸ்துவைப் பார்த்த மாத்திரத்தில் அவர் யாருடைய நன்மதிப்பையும், கனத்தையும் பெற்றுவிடவில்லை. ஆனால், அவருடைய வல்லமையையும், மகிமையான வார்த்தைகளையும், மேன்மை யான வாழ்க்கை முறைமையையும் காண நேர்ந்த போது, பலரை அவை ஆச்சரியப் படுத்தின. இவர் இவ்வளவு பெரிய ஒரு ஆளாகயிருக்கின்றாரே என்று சமுதாயத்தைச் சிந்திக்கத் தூண்டியது. அந்த ஆச்சரியம்தானே இவர் தச்சன் அல்லவா, மரியாளின் குமாரன் அல்லவா என்று பலரை எண்ண வைத்தது.

கர்த்தருடைய பிள்ளைகள் எல்லோரும் பார்த்த உடனேயே பரிசுத்தவான்கள் என்று எண்ண இயன்றவர்களாயிருக்க வாய்ப்பில்லை. தேவ ஐக்கியத்தில் வாழ்கின்ற வர்களின் தோற்றம், பார்த்ததும் பரவசம் அடையும் விதமாக இருக்கும் என்று கூற இயலாது. நாம் தோற்றங்களால் அல்ல. கனிகளினால் அறியப்பட வேண்டும். நம்மிட மிருந்து வெளிப்படும் நல்ல குணங்களும், நல்ல பண்புகளும், நல்ல செயல்களும் மற்றவர்களை ஆச்சரியப்படுத்த வேண்டும்.

சில சூழ்நிலைகளில் நாம் நடந்து கொள்ளும் விதங்களும், பேசுகின்ற விதங் களும், செயல்படுகின்ற விதங்களும் மற்றவர்களுக்கு ஒரு விதமான அதிர்ச்சியைக் கொடுக்கவேண்டும். இவர்களிடம் இவ்வளவு நல்ல விஷயங்கள் இருக்கிறதே என்று ஆச்சரியப்படவேண்டும். ஆம். நல்ல தோற்றங்கள் பலரை ஏமாறச் செய்யக்கூடும். நல்ல விதமான செயல்பாடுகளோ பலரை ஆச்சரியப்படுத்தும்.

சிந்தனைக்கு...

உள்ளத்தில் உண்மையிருந்தால்,
வெளியில் தேவனால் உனக்குக் கனமும் இருக்கும்.

ஜீன் 13

சும்மாயிருங்கள்

யாத்திராகமம் 14:1-18

கர்த்தர் உங்களுக்குச் செய்யும் இரட்சிப்பைப் பாருங்கள்.
யாத்திராகமம் 14:13

ஏதையாவது ஒன்றைச் செய்து அதன்மூலமாக வாழ்வின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண வாய்ப்பு எதுவும் இல்லாமல் போகும் வேளை உண்டு. ஏதாவது ஒரு வழியில் போய் பிரச்சினைகளின் தாக்குதல்களிலிருந்து தப்பித்துக் கொள்ளலாம் என்று எண்ணும்போது, அங்கு எந்த ஒரு வழியும் இல்லாமல் போகும் வேளைகள் உண்டு. சும்மாயிருப்பதைத்தவிர பயன்தரும் விதமான எதையும் செய்ய வாய்ப் பில்லாத வேளைகள் உண்டு. ஆனால் இது மோசமானதோர் வேளை அல்ல. இது, நீ இனி பெரிதாகச் செய்வதற்கு ஒன்றுமில்லை. அமைதியாயிருந்து ஆண்டவர் என்ன செய்கின்றார் என்பதைக் கவனி என்று சொல்லுகின்ற ஒரு வேளையாயிருக்கும்.

தேவன் ஏதாகிலும் செய்தால் உண்டு. இல்லையென்றால் அத்தியாயம் முடிந்தது என்றுதான் அர்த்தம் என்று நினைக்கின்ற வேளை கொஞ்சம் பதட்டமான வேளைதான். ஆனால், நம்மால் என்ன செய்ய முடியும்? எலியாவைப் போல, “போதும் ஆண்டவரே, என் ஆத்துமாவை எடுத்துக்கொள்ளும்” என்று நாம் சொல்லலாம். ஆனால் இந்த விதமான விண்ணப்பத்தில் தேவன் பிரியப்படுவதில்லை என்பதைத்தான் எலியா வின் சம்பவம் உறுதிப்படுத்துகிறது.

ஆனால், இன்னொன்றை நாம் செய்யலாம். எதையும் செய்ய இயலாமல் போனதோர் நேரத்தில் அமர்ந்திருந்து, நானே தேவன் என்று அறியுங்கள் என்று தேவன் சொன்ன வார்த்தைகளை நினைவு கூரலாம். நீங்கள் சும்மாயிருந்து, தேவன் உங்களுக்குச் செய்யப்போகும் இரட்சிப்பைப் பாருங்கள் என்று மோசே சொன்னது போல, நாமும் நமக்குள் நம்பிக்கையுடன் சொல்லலாம். நம்முடைய பெலன் பெரிதாக ஒன்றையும் செய்ய இயலாத ஒரு நேரத்தில், முற்றிலுமாக அனைத் தையும் ஆண்டவரின் பாதத்தில் வைத்து விட்டு, அமைதியாயிருப்பதால் ஒரு பெரிய விடுதலையைக் காண இயலும்.

ஆம். தேவனை உண்மையாய்த் தேடுகின்றவர்களுக்கு அனைத்துப் பாதைகளும் அடைபட்டதுபோல தோன்றும் வேளையில், அவர் ஒரு பாதையைக் காட்டித்தானே ஆக வேண்டும். செங்கடல் வழியாக ஒரு பாதை இருந்ததையும், யோர் தானைக் கடக்க ஒருபாதை இருந்ததையும், எரிகோவைக் கடந்து செல்ல ஒரு பாதை இருந்ததையும், முதலாவது யாருடைய கண்கள் கண்டது? இனி ஒரு வழி இல்லை என்ற நிலையைக் கண்ட பின்னர்தான், தேவன் அவற்றைக் காண்பித்தார். ஆம். வழி ஒன்று நிச்சயம் தேவனுடைய பார்வையில் இருக்கும். அது வெளிவரும் வரை காத்திருப்பதே மேன்மையானது.

சிந்தனைக்கு...

தொடர்தோல்விகள் மனிதனை துக்கத்தில் ஆழ்த்துகின்றன
தொடர் வெற்றிகளோ பெருமைக்குள் வீழ்த்துகின்றன

ஜூன் 14

புரியாத விஷயங்கள்

1 கொரிந்தியர் 13:1-13

அன்பு சகலத்தையும் விசுவாசிக்கும், நம்பும்...
1 கொரிந்தியர் 13:7

தன்னுடைய மறுமனையாட்டியாகிய ஆகாரையும், தன்னால் நேசிக்கப்பட்ட இஸ்மவேலையும் தனியாகப் பிரித்துவிட தேவன் ஆலோசனை சொன்னபோது, அதனை ஆபிரகாமினால் நிச்சயம் புரிந்து கொண்டிருக்கவே முடியாது. தேவன் எதற்காக இப்படி ஒரு ஆலோசனையைத் தருகிறார் என்றுதான் அவன் எண்ணியிருப்பான். ஆனால் அவன் அதற்கு கீழ்ப்படிந்தான். தன்னால் அதனைப் புரிந்துக் கொள்ள இயலாவிட்டாலும், தேவன் நல்லதை நினைத்தே, அவ்விதம் கூறியிருப்பார் என்ற ஆவிக்கேற்ற சிந்தை அவனுக்கிருந்ததால் அவன் விசுவாசத்தோடு கீழ்ப்படிந்தான்.

தேவன் நம்முடைய வாழ்க்கையில் செய்கின்ற சில காரியங்களை, அனுமதிக்கின்ற சில வருத்தமான சூழ்நிலைகளை, கொடுக்கின்ற சில ஆலோசனைகளை நம்முடைய மாம்சீக அறிவினாலோ, புத்தியினாலோ உடனடியாகப் புரிந்து கொள்ளவே இயலாது. ஏனென்றால் அவைகள் தேவனுடைய ஞானத்தின்படி, தேவனுடைய ஆவிக்கேற்ற சிந்தையின்படி ஏற்படுவதாகும். தேவனுடைய நினைவுகளை, நம்முடைய சிந்தனைத் திறனால் விளங்கிக் கொள்வது கூடாத காரியம்.

நமக்கு முன்பாக வருகின்ற சில சூழ்நிலைகளை நாம் புரிந்துகொள்ள இயலாததினாலேயே நாம் அதிகமாக மனதில் துன்புறுகின்றோம். நாம் ஏற்றுக் கொள்ளத் தக்கதான பதில்கள் இல்லாததால் ஏன் இவைகள் இப்படி நேரிடுகிறது? என்று மனப்போராட்டம் அடைகின்றோம். தேவனுடைய நினைவுகளையும், சிந்தனை களையும், நாம் முழுமையாகப் புரிந்து கொள்ள முடியாது என்ற உணர்வோடு கர்த்தரை விசுவாசித்து அவைகளை ஏற்றுக் கொண்டால் ஒரு பெரிய பகுதி பாரம் விலகிப் போய் மனம் இலகுவாகிவிடும்.

யோசேப்பு நீதிமானாயிருந்தான். ஆயினும், அவனுக்கெதிராக அவனுடைய சகோதரர்கள் எழும்பியபோது தேவன் அதனை அனுமதித்தார். போத்திபாரின் வீட்டில் அநியாயமாக அவன் தண்டிக்கப்பட நேர்ந்தபோதும் தேவன் அதனைத் தடுக்காமல் அனுமதித்தார். யோசேப்பின் வாழ்க்கையில் தேவதிட்டம் உரிய வேளையில் நிறைவேறவே தேவன் அவைகளை அனுமதித்தார் என்பது பின்னர்தான் தெரிய வந்தது. ஆம், இன்று புரிந்து கொள்ள இயலாமல் இருப்பதை ஒரு நாள் நிச்சயம் புரிந்து கொள்வோம். அதுவரையிலும் தேவன் எதையாவது செய்யச் சொன்னால் அங்கே ஒரு நல்ல நியாயம் இருக்கும் என்ற விசுவாசத்தோடு செயல்படுதலே அவசியம்.

சிந்தனைக்கு...

நடக்க வேண்டியதை நினைத்துக் கொண்டிருப்பதே நடந்து முடிந்த வேதனைகளை மறப்பதற்கான எளிய வழி.

ஜூன் 15

கேட்கவும் வேண்டும்

11 தீமோத்தேயு 3:1-17

வேதத்தைக் கேளாதபடி தன்னுடைய செவியை ...
நீதிமொழிகள் 28:9

பல ஆண்டுகளுக்கு முன்பு ஒரு பேருந்தில் நான் இரண்டு மணி நேரம் பிரயாணம் செய்ய நேரிட்டது. அந்த இரண்டு மணி நேரமும் என்னுடைய முன்னிருக்கையில் அமர்ந்திருந்தவர் தன்னுடைய நண்பரோடு தொடர்ந்து பல விஷயங்களை பேசிக் கொண்டே வந்தார். ஆனால், அந்த நண்பர் இவர் பேசுவதைக் கேட்டு தலை யசைத்துக் கொண்டிருந்ததைத் தவிர, மற்றவர் பதிலுக்கு எதையும் பேசவில்லை.

சிலருடைய ஜெப வாழ்க்கையும் இப்படியே இருக்கின்றது. இவர்கள் தேவனி டத்தில் ஜெபநிலையில் பேசிக்கொண்டிருக்கின்றார்களேயன்றி, தேவன் தங்களோடுப் பேசுவதற்கு எந்த வாய்ப்பும் தருவதில்லை. இவர்கள் தங்களின் தேவைகளையும், விருப்பங்களையும் தேவனிடம் சொல்லிக்கொண்டிருக்கின்றார்களேயன்றி, தேவன் தம்முடைய விருப்பங்களையும், எதிர்பார்ப்புகளையும் வெளிப்படுத்த விரும்புவதைக் குறித்து சிந்திப்பதில்லை.

ஆனால், உண்மையான ஜெபம் என்பது தேவனிடம் பேசுவது மட்டுமல்லாமல், தேவன் பேசுவதைக் கேட்பதையும் உள்ளடக்கியதாகும். தேவன் பிரதானமாக தம்முடைய வேதத்தின் மூலமாகவும், தேவ செய்திகள் மூலமாகவும் நம்மோடு தம்முடைய எண்ணங்களையும், உணர்வுகளையும் பகிர்ந்து கொள்கின்றார். எனவே, ஜெபிப்பதற்குக் கொடுக்கின்ற அளவு முக்கியத்துவத்தை வேதத்தைப் படிப்பதற்கும், சிந்திப்பதற்கும் கொடுக்க வேண்டும்.

அதன் வழியாகத்தான் தேவன் நமக்கு எதைத் தெரியப்படுத்த விரும்புகிறார் என்பதைப் புரிந்து கொள்ள முடியும். அப்போதுதான் தேவன் தம்முடைய எண்ணங்களையும், நியாயங்களையும், ஆலோசனைகளையும் நமக்கு அறிவித்து நாம் கேட்டவைகளைப் பெறுவதற்கான வழிகளைக் காண்பிக்க முடியும். எனவே நாம் தேவனை நோக்கிப் பேசுகின்ற அனுபவத்தை மட்டுமே முக்கியமாக எண்ணாமல், அவர் பேசுவதைக் கேட்பதற்கும் அதிகக் கவனம் செலுத்த வேண்டும். நம் ஜெபங்கள் கேட்கப்பட வேண்டுமானால், தேவனுடைய பேச்சுகளுக்கு நாம் செவிசாய்க்க விழிப்பாயிருக்க வேண்டும்.

இந்நாட்களில் தேவ ஊழியர்களின் ஜெபங்களை அதிகமாக நாடும் பலர், அவர்களிடம் தாங்கள் அறிவதற்கான நல்ல சத்தியங்கள் உண்டோ என்று சந்தித்து அவைகளை நாடுவதில்லை. எனவே சத்தியத்தைப் பேசும் ஊழியர்களை ஜனங்கள் அலட்சியம் செய்துவிட்டு, தங்களுக்காகச் ஜெபிக்கும் ஊழியர்களையே நாடிச் செல்கின்றார்கள்.

சிந்தனைக்கு...

சோதனைகள் உன்னை, தொய்ந்து போகச் செய்தால், வேத வார்த்தைகளின்மேல் சாய்ந்து இளைப்பாறக் கற்றுக்கொள்.

ஜூன் 16
நம்மைச் சரிசெய்வோம்

கலாத்தியர் 2:11 -21

அவன் மேல் குற்றஞ்சுமந்ததினால்
கலாத்தியர் 2 : 11

கார் தயாரிக்கும் கம்பெனி ஒன்றில் புதிதாக வேலைக்குச் சேர்ந்தார் ஒருவர். மெக்கானிக்கல் இன்ஜினியரான அவருக்குத் திறமைக்குறைவு. எனவே, பணியிடத்தில் சிலர் அவரைக் கிண்டலும் கேலியும் செய்தனர். தினமும் தான் இழிவுபடுவதை அவரால் உணரமுடிந்தது. ஆனாலும், அந்த இழிவைச் சகித்துக் கொண்டார். அவருடைய நண்பர் ஒருவர் அதனை அறிந்து உன்னை இழிவு செய்கின்றவர்களை நீ ஏன் முதலாளியிடம் புகார் செய்யவில்லை என்று கேட்டார். அதற்கு அந்த இன்ஜினியர் என்றுடைய திறமைக் குறைவுதான் அவர்கள் என்னை இழிவுப்படுத்தத் தூண்டுகிறது. இழிவுக்கான காரணம் என்னிடம் உள்ளது. அதை நீக்குவதற்கு நான் முயற்சி செய்கின்றேன். புகார் செய்து பயனில்லை என்று பதிலளித்தார்.

சில நேரங்களில் சிலர் நம்மை அற்பமாக எண்ணுகின்றார்கள். நம்மை நம்ப மறுக்கின்றார்கள். நம்மைக் குற்றங்சாட்டுகிறார்கள். நம்மைக் குறித்து இழிவாகப் பேசுகின்றார்கள். நம்மைக் குறித்து தவறான கருத்துடையவர்களாக இருக்கின்றனர். அதுபோன்ற நேரங்களில் அவர்களை எதிர்க்கவும், அவர்களோடு மோதவும், அவர்களைத் தடுக்கவுமே நம்முடைய மனம் விரும்புகிறது. ஆனால், சில நேரங்களில் இவைகளுக்கான காரணங்கள் நம்மிடமே உள்ளன. அவைகளை உணர்ந்து, அதற்கேற்ற காரியங்களைச் செய்யாமல், மற்றவர்களின் செயலால் வருத்தப்படுவதிலோ, பதிலுக்குப் பதில் செய்வதிலோ பயனில்லை.

நம்மிடம் உள்ள தவறுகளைக் களைய விரும்பாமல், குறை கூறுகின்றவர் களை வெறுப்பது நல்லதல்ல. நம்மை நாம் மேன்மையாக நிறுத்துவதற்குக் கவனம் செலுத்தாமல், பிறர் அற்பமாக எண்ணுகின்றார்களே என்று கவலைப்பட்டுக் கொண்டே காலம் கழிப்பதில் பயனில்லை. நாம் நம்மை நம்பிக்கைத் தன்மை யுடையவர்களாக நிறுத்துவதற்கு ஆர்வம் கொள்ளாமல் பிறர் நம்மை நம்ப வில்லையே என்று வருந்துவதினால் நன்மைவராது.

பிறர் நம்மை தாழ்வாக எண்ணுவதற்கும், மோசமாகப் பேசுவதற்கும், நம்ப மறுப்பதற்கும் நம்மிடம் என்ன காரணங்கள் இருக்கிறது என்று ஆராய்ந்து பார்க்க வேண்டும். நம்மை நாம் சரிசெய்தால், பிறர் நம்மைக் குறை கூற வாய்ப்புக் கிடைக்காமல் போகும். ஆண்டவராகிய இயேசுவைப் போல, நாம் நம்முடைய வாழ்க் கையைத் தேவனுக்கு முன்பாகச் சரியாக வைக்க கவனமாயிருந்தால் பிறருடைய அவதூறுகளோ, ஏளனங்களோ, குறை கூறல்களோ நம்மைப் பாதிக்காது.

சிந்தனைக்கு...

உண்மைக்கு உன் இதயத்தில் உரிய இடம் கொடு,
இல்லையென்றால் பொய்க்கு உன் வாழ்வு புகலிடமாகிவிடும்.

ஜூன் 17
அர்ப்பணிக்க ஆயத்தம்

ஆதியாகமம் 22:1-13

ஆபிரகாம் ஒரு பலிபீடத்தை உண்டாக்கி - ஆதியாகமம் 22 : 9

தன்னுடைய ஒரே மகனைப் பலியிட தேவன் ஆபிரகாமுக்குச் சொன்னபோது, ஆபிரகாம் மகனைப் பலியிடுவதற்குத் தயங்கவில்லை. இவ்வளவு பெரியதோர் அர்ப்பணிப்பின் அனுபவம் ஆபிரகாமிற்கு ஏற்பட்டதற்குக் காரணம் என்ன? ஆபிரகாமின் வலிமையான பக்தியா? இந்த அர்ப்பண ஆயத்தம் ஆபிரகாமின் பக்தியின் ஆழத்தை மட்டுமல்ல. தேவன் அவனை எந்த அளவிற்கு ஆழமான ஒரு அர்ப்பணத்திற்கு ஏற்றவனாக அவனைப் பண்படுத்தி வைத்திருந்தார் என்பதையும் நாம் அறியச் செய்கின்றது.

ஆபிரகாமை நீண்டதோர் ஆவிக்குரிய பயணத்தில் பழக்குவித்துதான் இப்படிப்பட்டதோர் பரிட்சையில் அவனைத் தேவன் வெற்றி பெறச் செய்தார். எந்த அளவிற்கு ஆபிரகாம் தேவனோடு பழகி அவரை நல்லவர் என்று கண்டறிந்திருந்தான் என்பதற்கு இது அடையாளம். தேவன் எதைச் சொன்னாலும் அதை நல்லதாகவே சொல்வார் என்று பலவித அனுபவங்கள் வாயிலாக அவன் அறிந்து கொண்டதின் நிமித்தமே ஆழமான அர்ப்பணிப்புக்கு அவன் ஆயத்தமாயிருந்தான்.

தேவன் முதலாவது நம்மைப் பலவிதச் சூழ்நிலைகள் வழியாக நடத்திச் சென்று தம்மை நாம் அறியச் செய்கின்றார். நாம் பலவித அனுபவங்களின் வாயிலாக தேவன் நல்லவர் என்பதை நமக்குள் நாம் அறிந்து உறுதிப்படுத்திடச் செய்கின்றார். தேவனோடு நமக்கு ஏற்படுகின்ற அனுபவங்கள்தான், பின்னாளில் தேவனுக்காக எந்தப் பெரிய தியாகங்களையும் செய்திட நம்மை ஆயத்தப்படுத்துகின்றது. நமக்குள் நாம் தேவனோடுள்ள தொடர்புகளினால் பலப்படுவதின் அடிப்படையில்தான், நம்மை ஆழமான அர்ப்பணங்களுக்கு தேவன் அழைக்கின்றார். பெரிய அர்ப்பணிப்புகளுக்கு நேராக தேவன் நம்மை அழைத்துச் செல்லும் முன்பு, அவர் நமக்கு அதற்கேற்ற பக்குவங்களை ஏற்படுத்துகின்றார்.

சிலர் உணர்ச்சிவசப்பட்டு கர்த்தருக்காகப் பெரிய பெரிய காரியங்களைச் செய்திட தீர்மானம் செய்வார்கள். ஆனால், நடைமுறைப்படுத்த வேண்டிய சூழ்நிலையில் முடியாமல் பின்வாங்கிப் போவார்கள். ஏனென்றால், தேவனோடு நெருங்கியதொரு ஐக்கியத்தின் வாழ்க்கைக்கு அர்ப்பணித்து ஆவிக்குரிய அனுபவங்களைப் பெறும் முன்னரே, பெரிய செயல்களுக்கு அர்ப்பணிக்கத் துணிவதாகும். ஆம், ஆபிரகாமைப் போல எதையும் தேவனுக்காக இழக்கத் துணிய வேண்டுமானால், முதலாவது ஆபிரகாமைப் போல நமக்கு நீண்டதோர் ஆவிக்குரிய பயணம் அவசியம்.

சிந்தனைக்கு...

தியாகம் இல்லாத கிறிஸ்தவனும், வீரம் இல்லாத போர்ச் சேவகனும் எதையும் சாதிக்கமாட்டான்.

ஜூன் 18

திறமையும் உண்மையும்

லூக்கா 16:1 -16

அநீதியுள்ள உக்கிராணக்காரன் புத்தியாய்ச் செய்தான்...
லூக்கா 16 : 8

பெரிய கடை நடத்தும் ஒருவருக்கு மேனேஜர் ஒருவர் தேவைப்பட்டார். அதற்காக நல்ல திறமையும் அனுபவமும் உடைய ஒருவரை நண்பர் ஒருவர் அவருக்கு அறிமுகம் செய்தார். ஆனாலும், அந்தக் கடை முதலாளி அவரை மேனேஜராக வைப்பதற்கு மிகவும் தயங்கினார். ஏனென்றால், அதற்கு முன்னால் அவரிடம் மேனேஜராக இருந்தவர், நல்ல திறமையும் அனுபவமும் உடையவர், ஆனால், அந்த மேனேஜர் அந்த திறமையைப் பயன்படுத்தி அந்த கடையில் ஏராளம் மோசடிகளைச் செய்திருந்தார்.

ஆம், திறமையும் அனுபவமும் மிகவும் முக்கியமானவைகளே, ஆனால், திறமையைவிட நம்பகத்தன்மை என்பது மிக மிக முக்கியமானது. யோசேப்பு திறமையானவன் மட்டுமல்ல. நல்ல நம்பகத்தன்மை உடையவன், எனவே, போத்தி பார் தன்னுடைய உடமைகள் யாவற்றையும் முழு நம்பிக்கையோடு அவனிடம் ஒப்படைத்தான்.

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து உக்கிராணக்காரன் ஒருவனைக் குறித்த உவமையைக் கூறினார். அவன் மிகவும் திறமையானவன். ஆனால், உண்மை யற்றவன்.எனவே, அவன் தன்னுடைய முதலாளியினால் வேலை நீக்கம் செய்யப் பட்டான்.ஆம், திறமை, புத்திசாலித்தனம், அனுபவம் ஆகியவற்றோடு உண்மையும் உத்தமமும் இணையாவிட்டால், ஒரு பாத்திரம் நல்ல பாலில் ஒருதுளி விஷத்தைக் கலப்பது போலாகும்.

இந்நாட்களில் பல திருச்சபைத் தலைவர்கள் நல்ல திறமையும், செயலார்வமும், சாதனை படைக்கும் விசேஷ ஆற்றல்களும் உடையவர்கள். அவர்கள் நன்றாக யோசிக்கின்றார்கள், நன்றாகத் திட்டமிடுகின்றார்கள், நன்றாகச் செயல்படுகின்றார்கள். ஆயினும், அவைகளோடு உண்மையும் உத்தமும், நேர்மையும் இணையாததால், அவர்களின் திறமைமிக்க செயல்பாடுகள் அவர்களுக்கு அவப்பெயரையும், தேவனுக்கு அவகீர்த்தியையும் கொண்டுவருகின்றன.

கர்த்தர் நாம் நல்ல திறமையாளர்களாகவும், நல்ல செயல்திறன் உடை யவர்களாகவுமே இருக்க விரும்புகின்றார். ஆனால், அவைகளோடு அவர் உண்மை யும், நேர்மையும், பரிசுத்தமான நோக்கங்களும் இணைந்திருக்க வேண்டும் என்று விரும்புகின்றார். தேவன் பலவீனர்களைப் பலப்படுத்த முடியும். திறனற்றவர்களை திறனுடையவர்களாக மாற்ற முடியும்.ஆனால், உண்மையும், நல்ல நோக்கமும் இல்லாதவர்களை உதறித்தள்ளத்தான் முடியும்.

சிந்தனைக்கு...

எத்தனை பேரை கிறிஸ்தவத்தில் சேர்த்தோம் என்பதைவிட, எந்த அளவு கிறிஸ்துவோடு நாம் சேர்ந்திருக்கிறோம் என்பதே முக்கியம்.

ஜீன் 19

மனித நேயம்

1 கொரிந்தியர் 13:1-13

அன்பு எனக்கிராவிட்டால் ...
1 கொரிந்தியர் 13 : 2

திருவாளர் தயாள சீலன் மனிதநேயத்திற்காகப் பாடுபடும் மாபெரும் மனிதராக பலரால் அறியப்பட்டவர். பல சமூக நல அமைப்புகளை உருவாக்கி நலிவடைந்த மக்களுக்காக சேவை செய்கிறவர். மனித நேய சேவைகளுக்காகப் பல விருதுகளைப் பெற்றவர். ஆனால், அவரை நன்கு அறிந்தவர்களும், அவரிடம் பணிபுரியும் ஊழியர்களும் அவரைக் குறித்து கொடுக்கும் சாட்சி என்ன தெரியுமா? அவர் மற்றவர்களை மதிக்கத் தெரியாதவர். அலட்சியமாகப் பேசுகிறவர். அன்பான வார்த்தை களைப் பேசி அறியாதவர். மிகவும் கோபக்காரர்.

அன்பு, இரக்கம், தாழ்மை போன்ற அடிப்படைக் குணங்கள் நம்மிடம் இல்லாதபோதே, ஒரு விருப்பத்தின் அல்லது ஆர்வத்தின் அடிப்படையில் பல சமூக சேவைகளை நாம் செய்ய முடியும். ஆனாலும், அவை தேவனுடைய பார்வையில் மேன்மையானவைகள் அல்ல. ஒரு அமைப்பு ரீதியான சேவை மனப்பான்மை அல்ல. தனிப்பட்ட முறையில் மற்றவர்களுக்காக நம்முடைய கரிசனை, அன்பு, பரிவு போன்றவை எவ்வளவு என்பதை நாம் உணர வேண்டும்.

எளியோர்களுக்காக பல சேவைகளைச் செய்கின்ற ஒருவர், ஒருமுறை தன்னுடைய கார் டிரைவரை அற்ப காரணத்திற்காக மிக இழிவாகப் பேசி, பலர் நடுவில் அவமானப்படுத்தியதைக் கண்டு நான் வருத்தப்பட்டேன். மற்றவர்களை நேசிக்கும் அடிப்படை சுபாவம் இல்லாமலே, மனித நேய மகான்களாக சிலர் பிரபலம் அடைவது எவ்வளவு எளிது என்று புரிந்து கொண்டேன்.

ஒரு அமைப்பைச் சேர்ந்தவர்களுக்கு அல்லது ஒரு கூட்டம் மக்களுக்காக நாம் பல நன்மைகள் செய்ய முன் வந்தாலும், ஒரு தனிமனிதன் விஷயத்தில் அவனுக்கு நாம் கொடுக்கும் முக்கியத்துவம், காண்பிக்கின்ற கரிசனை எவ்வளவு என்பதே முக்கியம்.இன்னொரு தனிமனிதனை நாம் மனிதனாக ஏற்றுக்கொண்டு, அவனை நாம் எப்படி நடத்துகின்றோம் என்பதில்தான், நம்முடைய உண்மையான மனநிலை வெளிப்படுகிறது.

அன்பினை அடித்தளமாகக் கொள்ளாத எந்த நலமான செயல்களையும் தேவன் அங்கீகரிக்கமாட்டார். முதலாவது, ஒருவர் தேவனோடு ஐக்கியமாகி உண்மை யான அன்பு, இரக்கம், தாழ்மை, தியாக உணர்வு ஆகிய குணங்களில் பக்குவப்பட வேண்டும். அவைகளின் தூண்டுதல்களால்தான் சேவை செய்யச் செல்ல வேண்டும். நம்முடைய செயல்களில் மட்டுமல்ல, நம்முடைய சுபாவ ரீதியான நடைமுறைகளிலும் மக்கள் அன்பைப் பார்க்க வேண்டும்.

சிந்தனைக்கு...

எதைச் செய்கிறாய் என்பதல்ல.
எதற்காக அதைச் செய்கிறாய் என்பதை அறிந்து செய்.

ஜீன் 20

தவறான கணிப்பு

அப்போஸ்தலர் 28:1-9

இந்த மனுஷன் கொலை பாதகன்...
அப்போஸ்தலர் 28:4

கற்பாறையைப் பார்த்துப் பேசுவதற்குப் பதிலாக, பொறுமையிழந்து கோலினால் அடித்த மோசேயின் செயலைப் பார்க்கையில் அவன் ஒரு கோபக்கார மனிதன் என்றுதான் எண்ணத்தோன்றும். ஆனால், அவன் சாந்த குணத்திற்காக தேவனால் விசேஷ சாட்சி பெற்றவன். எகிப்திற்குச் சென்ற ஆபிரகாம் பொய்யான தகவல் கொடுத்து தன்னைக் காப்பாற்ற முயற்சித்தான். அந்தச் செயல் அவன் தேவன்மேல் விசுவாசம் இல்லாத மனிதன் என்ற தோற்றத்தைக் கொடுக்க முடியும். ஆனால், ஆபிரகாம் தேவனால் விசுவாசத்திற்காக விசேஷமாய் பாராட்டப்பட்டவன்.

சில நேரங்களில் மற்றவர்களிடம் நாம் காண நேரிடும் ஒரே ஒரு செயலைப் பார்த்து, அதன் அடிப்படையில் அவருக்கு ஒரு முத்திரையைக் குத்திவிடுகிறோம். ஒரு நல்ல செயலைப் பார்த்து நல்லவர் என்றும், ஒரு தகாத செயலைப் பார்த்துத் தகாதவர் என்றும் முடிவு செய்து விடுகிறோம். சராசரியாக அவர் எப்படி என்பதைப் பார்த்து முடிவு செய்யவிடாமல், ஒரே ஒரு செயல் நமக்குத் தவறான புரிந்துகொள்ளு தலைக் கொடுத்துவிடுகிறது. மெலித்தா என்ற தீவில் பவுலின் கையை ஒரு விஷப்பூச்சி கவ்வியபோது, அந்த ஊரார் அவனைப் படுபாதகன் என்று முடிவு செய்தார்கள். அந்த விஷப்பூச்சி ஆச்சரியகரமாகக் கீழே விழுவதைப் பார்த்ததும் அவனை தேவன் என்று அறிக்கையிட்டார்கள்.

மனிதர்களை நல்லவர்கள் என்று முடிவு செய்வதிலோ, அல்லது தீயவர்கள் என்று முடிவு செய்வதிலோ, ஒரு பானைச் சோற் றுக்கு ஒரு சோறு பதம் என்ற பழ மொழி பொருந்தாது. தவறான மனிதனிடத்தில் ஒரு நல்ல செயலை நாம் காண முடியும். அதற்காக அவன் நல்லவனல்ல. நல்ல மனிதனிடத்தில் ஒரு தீய காரியத்தை நாம் பார்க்க முடியும். அதற்காக அவன் தீயவனல்ல. யாரையுமே நன்றாக கவனித்துதான் ஒரு முடிவுக்கு வரவேண்டும்.

சில நேரங்களின் அன்பற்ற ஒரு மன நிலையின் விளைவாகக்கூட மற்ற வர்களை விரைந்து நியாயந்தீர்க்கும் கட்டாயம் நேரிட்டு விடுகிறது. இயேசுவைக் குறித்த ஒரு வெறுப்புணர்வுடன் செயல்பட்டவர்கள் பரிசேயர்களும் சதுசேயர்களும். எனவே, அவர் ஓய்வு நாளில் ஒரு நோயாளியைக் குணமாக்கியதும், இவர் தேவனிடத்தி லிருந்து வந்தவரானால் எப்படி ஓய்வு நாள் கட்டளையை மீறுவார் என்று கேட்க ஆரம் பித்துவிட்டனர். ஏனென்றால், அன்பற்ற அவர்களின் மனநிலை எங்கே அவரைத் தவறானவராகக் காண்பிக்க ஒரு வாய்ப்புக் கிடைக்காதா என்று அவர்களைத் தேட வைத்துவிட்டது.

சிந்தனைக்கு...

ஒரு பக்கத்தை மட்டும் பார்த்துக் குதிப்பான் மூடன்,
மறுபக்கத்தைப் பார்க்கும் வரை பொறுத்திருப்பான் ஞானி.

ஜூன் 21

சூழ்நிலைப் பக்தி

ஓசியா 6:1-11

உங்கள் பக்தி காலையில் காணும் மேகத்தைப் போலவும்...
ஓசியா 6:4

குறிப்பிட்ட ஒருவர் 4 நாள், 5நாள் கூட குளிக்காமல் இருப்பார். அணிந்த ஆடையை நாலைந்து நாட்கள்கூட கழற்றாமல் அழுக்கோடு அணிந்திருப்பார். ஆனால், அவர் குளிக்கச் சென்றாலோ இரண்டு மணி நேரம் குளியலறையிலேயே இருப்பார். தோல் தேய்ந்து போகிற அளவிற்கு திரும்பத் திரும்ப உடலைத் தேய்த்துத் தேய்த்துச் சுத்தப்படுத்துவார்.

சில பக்திமான்களின் நிலைமையும் இதுதான். ஆராதனை சூழ்நிலைகளிலும், ஜெபக்கூட்ட சூழ்நிலைகளிலும், தேவ செய்தி கேட்கும் சூழ்நிலைகளிலும் அவர்கள் தங்களிடமுள்ள பாவங்களை அளவுக்கதிகமாக உணர்ந்து மனம் வருந்துவார்கள். அந்தப் பாவங்கள் அகலுவதற்காக ஆண்டவரை நோக்கி அளவுக்கதிகமாக கெஞ்சி மன்றாடுவார்கள். தங்களைப் புழுவாகவும், பூச்சியாகவும், தூசியாகவும் எண்ணித் தங்களை அளவுக்கு மிஞ்சித் தாழ்த்துவார்கள்.

ஆனால், அதுபோன்ற சூழ்நிலைகளைக் கடந்து வந்துவிட்டால் வார்த்தை களிலே, எண்ணங்களிலே, குணங்களிலே, செயல்களிலே எத்தனைதான் பாவ அழுக்குகள் நிறைந்திருந்தாலும் பாவ உணர்வே வராது. எத்தனைதான் குறைவுகள் இருந்தாலும் அது அவர்களுக்கு மிக மிகச் சாதாரணமாயிருக்கும்.

சிலர் தங்களிடம் எவ்வளவுதான் நோய்க்கூறுகள் இருந்தாலும் தங்களை நோயாளியாக எண்ணவே மாட்டார்கள். மருத்துவர் பரிசோதித்து இனிக் குணப்படுத்த முடியாது என்று சொல்லும்வரை தங்களைச் சுகதேகிகளாகவே எண்ணுவார்கள். சிலர் தங்களின் தவறுகளையும், பாவங்களையும், குற்றங்குறைகளையும் கற்பாறையை உடைப்பது போல பிரசங்கங்கள் செய்யப்படும் இடங்களில் மட்டுமே உணருவார்கள். அங்கு மனம் வருந்துவார்கள். கண்ணீர்விட்டு அழுவார்கள். கெஞ்சி மன்றாடி பாவ மன்னிப்புக் கேட்பார்கள். ஆயினும், இதுபோன்ற உணர்வுகள் யாவும் சில சூழ்நிலை களில் மட்டுமே செயல்படும்.

அக்காலப் பரிசேயர்களும் இப்படித்தான். அவர்கள் தங்களின் பாவங்களுக்காக மார்பில் அடித்துக்கொள்வார்கள். சட்டைகளைக் கிழித்துக் கொள்வார்கள். சாம் பலிலே புரளுவார்கள். இரட்டுடுத்திக்கொண்டு புலம்புவார்கள். ஆனால், பக்திச் சூழ் நிலைகளை விட்டுச் சற்றுத் தூரம் வந்துவிட்டால் எவ்வளவு பாவம் செய்தாலும், அதைக் குறித்த உணர்ச்சியற்றவர்களாகவேயிருப்பார்கள். நாம் எங்கிருந்தாலும் வேத வார்த்தைகளின் வெளிச்சத்தில் நம்முடைய பாவங்களை உணர்ந்து, பரிசுத்த மாக வாழ்வதற்கான வழிகளைத் தேட வேண்டும்.

சிந்தனைக்கு...

பொய்யைவிட்டுப் பிரிந்து வர விரும்பாதவன்
உண்மையை உரிய முறையில் புரிந்து கொள்ளமாட்டான்.

ஜூன் 22

குற்றம் தேடட்டும்

தானியேல் 6 :1-28

அவன்மேல் சுமத்த யாதொரு குற்றமும் குறைவும் காணப்படவில்லை...
தானியேல் 6:4

ஒருமுறை பொய்யான தவறான தகவல்களை நம்பி வருமான வரி இலாகா அதிகாரிகள் தொழில் நடத்தும் ஒருவருடைய வீட்டையும், அலுவலகத்தையும் அக்குவேறு, ஆணி வேறாக சோதனை போட்டார்கள். தான் இவ்வளவு உண்மையும், நேர்மையுமாய் வரி விஷயங்களில் நடந்து கொண்டும், தன் வீட்டைச் சோதனையிடும் நிலை வந்ததே என அவர் சற்று வருத்தப்பட்டார். ஆனால், அந்தச் சோதனையின் விளைவு அவருக்கே சாதகமாக அமைந்தது.

சோதனையிட்ட அதிகாரிகள் அவர் கணக்கு வழக்குகளை மிகவும் சரியாக வைத்திருப்பதைக் கண்டு ஆச்சரியப்பட்டனர். எனவே, இனி யார் என்ன பொய்த் தகவல் கொடுத்தாலும், அவர் விஷயத்தில் அதிகாரிகள் சந்தேகப்படாத நிலைமை ஏற்பட்டது. பாபிலோன் அரண்மனையில் தேவ மனிதனாகிய தானியேலின் வளர்ச்சி அபரிதமாயிருந்தது. அவனுடைய அதிவேக உயர்வைக் கண்டு உள்ளத்தில் பொருமிய பிரதானிகள், அவனைக் குற்றவாளியாக்கி, அவனுடைய உயர்வைத் தடுக்க விரும்பினார்கள். எனவே, தீவீரமாக அவனிடம் குறைதேடும் வேலையைச் செய்தார்கள். ஆனால், அவர்களால் இயலவில்லை. அந்தக் குற்றந்தேடிய செயல் ஒரு விதத்தில் தானியேலின் குற்றமற்ற வாழ்க்கை நிலை வெளியரங்கமாவதற்கே வழிவகுத்தது. குற்றந்தேடிய அவர்கள் அவனைக் குற்றமற்றவனாகவே காண நேர்ந்தது.

நாம் நல்லவர்களாயிருந்தும், நம்மை மோசமானவர்களாகக் காண்பிக்க விரும்பும் பொல்லாத பொறாமைக்காரர்கள் இருக்கவே செய்வார்கள். அவர்கள் நம்மை குறைத்துக் காண்பிக்க வேண்டி, நம்மிடம் குறை கண்டு பிடிக்க கூர்மையா யிருப்பார்கள். ஆனாலும், நாம் சரியாக இருந்தால், அது இயலாத காரியமே. மாறாக நம்முடைய தவறற்ற வாழ்க்கை நிலை வெளியரங்கமாகவே அது வழிவகுக்கும்.

தேவனுடைய பிள்ளைகள் திறந்த புத்தகமாக இருக்க வேண்டும். நம்மிடம் உண்மையாகக் குற்றம் இல்லையேல், ஒருவரும் எளிதாக நம்மைக் குற்றவாளியாக்கி விட முடியாது என்ற நம்பிக்கையோடிருக்க வேண்டும். இயேசுவிடம் யூத மதத் தலைவர்கள் எப்படியாவது குற்றங்காண வேண்டும் என்ற ஆசையில் சுற்றிச் சுற்றி வந்தார்கள். ஆனால், அவரிடம் அவர்களால் குற்றங்காண முடியாமல் போய் விட்டது. நாலுபேர் நம்மை உற்றுப் பார்த்துக்கொண்டிருந்தால்தான், நம் முடைய உண்மை நிலையும் நாலு பேருக்குத் தெரிய முடியும். நம்முடைய உண்மையில் நிலைத்தி ருப்பதே அவதூறுகளைப் பொய்யாக்கும் உண்மை வழியாகும்.

சிந்தனைக்கு...

உண்மையில் நிலைத்திருப்பதைத் தவிர பொய்யைப் பொய்யாக்குவதற்கான சிறந்த வழி இல்லை.

ஜூன் 23

அற்புதமும் அமைதியும்

1 கொரிந்தியர் 10:1-13

அப்படியிருந்தும் அவர்களில் தேவன் பிரியமாயிருந்ததில்லை...... 1 கொரிந்தியர் 10:5

தேவனுடைய அற்புதங்களை நம் வாழ்க்கையில் பெறுவது என்பது வேறு. தேவனுடைய பிரியத்தை நாம் பெறுவது என்பது வேறு. தேவனுடைய நன்மைகளை வாழ்க்கையில் பெறுவது என்பது வேறு. அவரால் வரும் இளைப்பாறுதலை வாழ்க்கையில் அனுபவிப்பது என்பது வேறு. கானானை நோக்கிப் பயணம் செய்த எபிரெய மக்கள் தேவனுடைய ஏராளமான அற்புதமான செயல்களின் பலன்களைப் பெற்றவர்கள். ஆயினும் அவர்களால் தேவனுடையப் பிரியத்தைப் பெற முடிய வில்லை. ஏனென்றால், அற்புதங்களைக் காணும் வாய்ப்பைப் பெற்ற அந்த மக்கள் தேவனுக்குப் பிரியமாக வாழ்வதற்கு கவனம் செலுத்தவில்லை.

தேவன் பல்வேறு காரணங்களுக்காக நம்முடைய வாழ்க்கைப் பகுதியில் அற்புதமான காரியங்களைச் செய்து நம்மை ஆதரித்திருக்க முடியும். ஆயினும் அவருடைய விசேஷ ஆசீர்வாதமாகிய இளைப்பாறுதல் அல்லது இதய அமைதி நமக்கு உண்டா என்பதே முக்கியம். துன்மார்க்கமாக வாழ்ந்த ஆகாப் ராஜாகூட தேவனுடைய அற்புதங்களைக் கண்டவன்தான். ஆயினும், அவன் தேவனுடைய பிரியத்தையோ, அமைதியையோ பெற முடியவில்லை. ஏனென்றால் அவன் தேவனைப் பிரியப் படுத்தி வாழ்வதற்கு முன்வரவில்லை.

சில அற்புதங்கள் தேவனுடைய மனதுருக்கத்தின் விளைவாக நமக்கு நடக்கலாம். சில அற்புதங்கள் மூலமாக நாம் தேவனுக்குப் பிரியமாக வாழ்வதற்கு நம்மை அர்பபணிப்பதற்கான வாய்ப்பினை தேவன் தரலாம். தேவன் நமக்கு அருளும் ஒவ்வொரு நன்மையும் நாம் அவருடைய சித்தத்திற்கு இசைந்த வாழ்க்கை வாழ்வதற்கான தூண்டுதல்களாக இருக்க முடியும். எனவே பிரியமாக வாழ்வதற்கு நாம் தயாராகாவிட்டால், அவரால் வரும் இளைப்பாறுதலைக் காண இயலாது.

அற்புதங்களைக் கண்டும் இளைப்பாறுலைக் காணாமல் போன எபிரெய மக்கள் போல, இந்நாட்களிலும் பலர் உள்ளனர் என்பது உண்மை. கர்த்தர் செய்த நன்மைகளுக்காக அவர்கள் சபை சபையாக மேடை மேடையாகச் சாட்சி சொன்ன போதிலும், கர்த்தருடைய வழிகளில் நடந்து சாட்சிகளாக விளங்கவில்லை. எனவே அவர்களின் வாழ்க்கையில் தேவனுடைய விசேஷ ஆசீர்வாதங்களாகிய மன அமைதியும், சந்தோஷமும் நிறைவும் இல்லை. ஏனென்றால், பாவிகள்கூட சில வேளை எபிரெயர்களைப் போல அற்புதங்களைக் காண முடியும். ஆனால், தேவனோடு நெருங்கி வாழ்ந்து அவருடைய பிரியத்தைப் பெற்றிட வாஞ்சிக்கின்ற வர்களால் மட்டுமே, தெய்வீக இளைப்பாறுதலைப் பெற முடியும்.

சிந்தனைக்கு...

தேவன் தரவிரும்பியவைகளை முதலில் நீ பெற விரும்பு. அப்போது நீ பெற விரும்புகிறவைகளை அவர் தர விரும்புவார்.

ஜூன் 24

யார் யாருக்காக?

அப்போஸ்தலர் 9:1-16

ஆண்டவரே நான் என்ன செய்யச்சித்தமாயிருக்கிறீர்.
அப்போஸ்தலர் 9:6

தன்னுடைய தொழிற்கூடத்தில் முதலாளி தன்னுடைய வேலைக்காக வேலையாள் ஒருவனை நியமித்துள்ளான். அவனுக்கு மாதச் சம்பளம் வழங்கப்படுகிறது. இப்போது இந்த வேலையாள், இதோ பாருங்கள், இந்தக் கம்பெனி எனக்கு வேலை தருவதற்காகவே உள்ளது. இந்த முதலாளி எனக்குச் சம்பளம் தருவதற்காகவே இருக்கிறார். மொத்தத்தில் என் குடும்பம் வருவாய் பெற்று நலமாக வாழவே இந்தக் கம்பெனியும் முதலாளியும் உள்ளார் என்று கூறுகின்றான்.

இது சரியான கூற்றா? இல்லை. இந்த வேலையாள்தான் தொழிற்கூடத்திற்காக இருக்கின்றான். முதலாளியின் வேலைக்காகவே இவன் இருக்கிறான். ஆம், தொழிலாளிக்காக அல்ல முதலாளி. முதலாளிக்காகவே தொழிலாளி. ஆவிக்குரிய நம்பிக்கை உடையவர்கள் ஆன்மிகத்தின் அடிப்படைக் கோட்பாட்டை அறிந்திருக்க வேண்டும். நமக்காகவே தேவன், நம்மை ஆசீர்வதிக்கவே தேவன், நம்முடைய வாழ்க்கையில் உதவிடவே தேவன் என்ற விதமான சிந்தனை சரியானது அல்ல. நாம் அவரைத் தேடிச் செல்லவில்லை. அவரே நம்மைத் தேடிவந்தார். நம்முடைய வேலைக்காக அவர் இல்லை. அவருடைய வேலைக்காகவே நாம் இருக்கிறோம். நம்முடைய திட்டங்களை நிறைவேற்ற அல்ல தேவன். அவருடைய திட்டங்களை நிறைவேற்றவே நாம் உள்ளோம். எனவே, எல்லா விதத்திலும் தேவன் படைத்த பூமியில் அவருடைய நோக்கங்களுக்காகவே நாம் உள்ளோம்.

நான் அவருக்காக உள்ளேன். என்னிடம் அவர் எதிர்பார்ப்பது என்ன? நான் என்ன செய்ய வேண்டும்? என் வாழ்வின்மேல் அவருடைய நோக்கம் என்ன? தேவனை மையமாகக் கொண்ட இவ்விதமான கேள்விகள்தான் முதலிடத்தைப் பிடிக்க வேண்டும். நாம் தேவனை நமக்காக உபயோகிப்பதிலேயே முழுக்கவனம் செலுத்துவதால், அவர் தம்முடைய நோக்கங்களை நம் வாழ்க்கையில் செயல்படுத்த முடியவில்லை. எனவேதான் அவருடைய ஆசீர்வாதங்கள் முழுமையாக வருவதும் தடைபட்டுப் போகிறது.

நான் கர்த்தரின் சித்தம் செய்வதற்காக உள்ளேன். அவருடைய பூமியில் நான் அவருடைய வேலைக்காகவே உள்ளேன். அவர் எதைச் சொன்னாலும் நான் செய்ய வேண்டும். அவருக்குக் கீழ்ப்படிவதும் அவர் காட்டுகிற பாதையில் நடப்பதுமே என் கடமை. அவர் என்னுடைய உபயோகத்திற்காக அல்ல. நான்தான் அவருடைய உபயோகத்திற்காக உள்ளேன். நான் கர்த்தருக்காக உள்ளேன் என்ற வெளிப்பாடுடன் வாழ்கிறவர்களுக்கு, கர்த்தர் முழுமையாக அவர்களுக்காகச் செயல்படுவதை மிகுதியாகக் காண முடியும்.

சிந்தனைக்கு...

இறைச் சத்தத்திற்கு இணங்காத இதயத்திற்கு
இறைச்சித்தம் ஒருபோதும் தெரிவதில்லை.

ஜூன் 25

இந்தச் சிங்கம் கடிக்காது

தானியேல் 6:13-28

சிங்கங்கள் என்னைச் சேதப்படுத்தாதபடிக்கு....
தானியேல் 6:22

தேவனுடைய தாசனாகிய தானியேல் சிங்கக் கெபிக்குள் போடப்பட்டான். ஆனாலும், கொடிய சிங்கங்களால் அவனுக்கு எந்தச் சேதமும் ஏற்படவில்லை. சிங்கங்கள் அவனைச் சேதப்படுத்த இயலாதபடி தேவன் அவைகளின வாய்களைக் கட்டியிருந்தார். நம்முடைய வாழ்க்கையிலும்கூட கெர்ஜிக்கிற சிங்கம் போல சாத்தான் நம்மைச் சுற்றி வரலாம். எதிராளிகள் சிங்கங்களைப் போல நம்மைச் சூழ்ந்திருக்கலாம். பலவிதப் பிரச்சினைகளும், கஷ்டங்களும் சிங்கங்களைப் போல நமக்கு முன்பாக நின்று கொண்டிருக்கலாம். தேவனுடைய பிள்ளைகளாக இருந்தால் அவைகளைக் கண்டு நாம் மிரண்டு விடக்கூடாது.

என்னுடைய வாழ்க்கையில் இதுபோன்ற பலவிதப் பயங்கரச் சிங்கங்களை பல நிலைகளில் கண்டு ஒரு கணம் பயந்திருக்கின்றேன். ஆனால், அவைகள் தேவனால் வாய்கட்டப்பட்ட கடிக்க இயலாத சிங்கங்களாக இருந்ததைக் கண்டு கர்த்தரை அதிகமாகத் துதித்திருக்கின்றேன். சிங்கக் கெபிக்குள் தானியேல் தள்ளப்படுவதை தேவன் தடுக்கவில்லை. ஏனென்றால், உண்மையான தேவனை உறுதியாகப் பற்றிக் கொண்டிருக்கும் ஒரு மனிதனை எந்தக் கொடிய சிங்கமும் சேதப்படுத்த இயலாது என்பதை அந்த தேசமே அறிய வேண்டும் என்பது தேவனின் விருப்பமாயிருந்தது.

வாழ்க்கைப் பகுதிகளில் நம்மைப் பயமுறுத்தும் பலவிதச் சிங்கங்களைக் கண்டு கலங்கித் தவிக்காமல், கர்த்தர்மேல் நம் பார்வையை வைத்து, அவரோடுள்ள ஐக்கிய நிலைகளை அதிகம் தேடும் போது, அங்கே நாம் காக்கப்படுவதைக் காண முடியும். சில நேரங்களில் நாம் தேவன்மேல் வைக்க வேண்டிய பார்வையை இந்தச் சிங்கங்கள் மேலேயே வைத்துவிடுகிறோம். எனவே, அவைகளின் கர்ஜனைகள் நம்மைப் பயப்படுத்தி விடுகிறது.

பேதுருவின் பார்வை இயேசுவின்மேல் இருந்தபோது காற்றும் கொந்தளிக்கும் கடலும் அவனை ஒன்றும் செய்ய முடியவில்லை. ஆனால், காற்றையும் கடலையும் கவனிக்க ஆரம்பித்ததும், அவைகள் அவனை மேற்கொள்ள ஆரம்பித்தன. சில நேரங்களில் சாத்தான் நம்முடைய கஷ்டங்கள், பிரச்சினைகள் மேலேயே நம்முடைய முழுக் கவனத்தையும் இழுத்து விடுகிறான். எனவே, தேவன்மேல் நம் பார்வையை வைத்துப் பிரச்சினைகளுக்குத் தீர்வு தேடுவதற்குப் பதிலாக, பிரச்சினைகளால் பாதிக்கப்பட்டுவிடுகிறோம்.பிரச்சனைகளைக் கண்டு கலங்காமல், கர்த்தரை நம்பி யிருங்கள். இந்தச் சிங்கங்கள் உங்களைக் கடிக்காது.

சிந்தனைக்கு...

தோல்வியடையும் போதெல்லாம் பிறரைக் காரணம் காட்டினால், நீ தொடர்ந்து தோல்வியடைய பலர் வந்து கொண்டிருப்பார்கள்.

ஜூன் 26

மாதிரி அவசியம்

1 கொரிந்தியர் 11 : 1 –16

நான் கிறிஸ்துவைப் பின்பற்றுகிறதுபோல ....
1 கொரிந்தியர் 11 : 1

தேவ பக்தியுடைய ஒருவர் வாலிபன் ஒருவனைச் சந்திக்கும் போதெல்லாம், இயேசுவினால் வருகின்ற இரட்சிப்பைக் குறித்தும், அதனால் ஏற்படும் மேன்மை யான வாழ்க்கையைக் குறித்தும் பேசுவார். இயேசுவை ஏற்றுக்கொள்ள வேண்டிய தின் அவசியத்தை நன்றாக எடுத்துக் கூறுவார். ஆனாலும், அவனிடம் எந்த மாற்றமும் இல்லை. அவரைப் பார்க்கும் போதெல்லாம் "நான் இயேசுவை ஏற்றுக் கொள்வேன் என்று மட்டும்" சொல்வான்.

ஒருநாள் அவர் அவனிடம் நான் பலமுறை உன்னிடம் பேசிவிட்டேன். நீ எப்பொழுதுதான் இயேசுவை உன் இரட்சகராய் ஏற்றுக்கொள்வாய்? என்று கேட்டார். அதற்கு அவன் "இயேசுவினால் வருகின்ற மேன்மையான வாழ்க்கையை வாழ்கின்ற ஒருவரை பார்த்த உடன் ஏற்றுக்கொள்வேன்" என்றான். அந்தப் பதில் அவரைச் சிந்திக்கத் தூண்டியது அந்த வாலிபன் இயேசுவை ஏற்றுக்கொள்ளாததற்கு தான் இன்னும் மேன்மையான ஒரு வாழ்க்கையை வாழாதது தான் காரணமோ என்று சிந்திக்க ஆரம்பித்தார்.

இயேசுவினால் வருகின்ற மேன்மையும் சிறப்பு மிக்க வாழ்க்கை வாயினால் மட்டும் அறிவிக்கப்பட்டால் போதாது. அது நாம் வாழ்கின்ற முறையினாலும் அறிவிக்கப்பட வேண்டும். அன்பு, சமாதானம், தாழ்மை, சந்தோஷம், பொறுமை என்று பேசுகின்ற நம்முடைய வார்த்தைகள் மட்டுமே பிறருடைய இரட்சிப்பிற்குப் போதுமானதல்ல.

இரட்சிப்பைக் குறித்து பேசுவது மட்டுமல்ல, இரட்சிக்கப்பட்ட வாழ்க்கை எவ்வளவு சிறப்பாயிருக்கும் என்பதை பிறர் அறியும் விதமாக வாழ்ந்து காட்ட வேண்டும். பரிசுத்தமான ஒரு வாழ்க்கையைக் குறித்து பேசுகின்ற நம்மிடம், பரிசுத்த பிரதி பலிப்புகளை பிறர் பார்க்க வேண்டும்.

ஜவுளிக்கடையில் புடவை விற்கிறவர்கள்கூட ஒரு புடவையைப் பொம்மை ஒன்றிற்குச் சுற்றிவிட்டு, அந்தப் புடவையைக் கட்டினால் எப்படியிருக்கும் என்று காண்பிக்கின்றார்கள். வாயினால் இயேசுவின் மகிமைகளை கூறுகின்றனர். ஆனால், வாழ்க்கையிலோ எந்தச் சிறப்பையும் காண்பிப்பதில்லை.

அப்போஸ்தலனாகிய பவுல் மிகச் சிறந்த பிரசங்கி. ஆனாலும், கிறிஸ்துவை வாழ்க்கையில் பின்பற்றி ஒரு மாதிரி மனிதராக வாழ்ந்தவர். (1 கொரி – 11 : 1) எனவே தான், தன்னைப் போல மாறும்படி பிறரையும் அழைக்க முடிந்தது.

சிந்தனைக்கு...

இயேசுவின் கருத்துக்களைக் கடைப்பிடிப்பதல்ல.
இயேசுவின் கரங்களைப் பிடித்து நடப்பதே கிறிஸ்தவம்.

ஜூன் 27

அறியாமை

ஓசியா 4: 1-19, 11

என் ஜனங்கள் அறிவில்லாமையினால் சங்காரமாகிறார்கள்.
ஓசியா 4:6

பரிட்சை எழுதப்போகின்ற பிள்ளைகளுக்காக விசேஷப் பிரார்த்தனைக் கூட்டம் ஒன்று சென்னையில் சமீபத்தில் நடைபெற்றது. ஆயிரக்கணக்கான மாணவர்கள் அங்கு பெற்றோர்களாலும் பள்ளிக்கூடம் மற்றும் கல்லூரி ஆசிரியர்களாலும் அழைத்து வரப்பட்டனர். இவர்களில் அநேகர் மிகத் தூரத்து மாநிலங்களிலிருந்தும் வந்திருந்தனர். எவ்வளவோ பணம், நேரம், சிரமம் இதற்காகத் தேவைப்பட்டது, எதற்காக வென்றால், பிரபலமான ஒரு தேவ ஊழியர் நடத்தும் பிரார்த்தனை நிகழ்ச்சியில் கலந்து கொண்டால், பிள்ளைகள் நல்ல மார்க்குகள் வாங்குவார்கள் என்ற நம்பிக்கை.

இப்படி வெகுதூரம் பயணம் செய்து ஒரு பிரார்த்தனை நிகழ்ச்சியில் கலந்து கொண்டால், கடவுள் விசேஷ அருள் புரிவார் என்ற நம்பிக்கைக்கு வேதத்தில் ஆதாரம் உண்டா? இதற்கு இரண்டு காரணங்கள். **ஒன்று,** அறியாமை. ஜனங்கள் எங்காவது போய் ஒரு நன்மை கிடைக்குமா என்று யோசிக்கின்றார்கள். ஆனால், அவ்வித நம்பிக்கையை வேதம் எங்காவது அங்கீகரிக்கின்றதா என்பதையெல்லாம் அவர்கள் பார்ப்பதில்லை. ஏனென்றால், அவர்களுக்கு சத்தியத்தைக் குறித்த ஆர்வமும் இல் லை. சுயநலம், எங்காவது போய் நன்மை தேடத் தூண்டுகிறது. எனவே, மனிதர்களின் கள்ளமும் கபடமும் கலந்த, சுய ஆதாய நோக்குடைய விளம்பரங்களின் வலையில் இவர்கள் விழுந்து விடுகின்றார்கள்.

இரண்டாவது, இக்கால கிறிஸ்தவர்கள் பொய்களை எளிதாக நம்புகின்றார்கள். ஏனென்றால், அவர்களுக்கு சத்தியம் இன்னதென்ற தெளிவு இல்லை. ஒருவர் சொல்வது வேத வெளிச்சத்தில் சரியா தவறா என்று பகுத்துணர்கின்ற ஆவிக்குரிய அறிவு இல்லை. இவர்கள் எவ்வளவு கற்றாலும் எதையும் அறியாதவர்களாய் தங்களை பொய்களால் மயக்குகின்றவர்களின் கண்ணிகளில் எளிதாகச் சிக்கி விடுகின்றார்கள்.

நமக்கு நன்மை செய்கின்றவர் இயேசு. அவருடைய நன்மைகளைப் பெற்றிட நாம் எங்கெங்கோ போகத் தேவையில்லை. அவர் நமக்கு அருகே இருக்கின்றார். அவரை நம்புவது உண்மையென்றால், நாம் இருக்குமிடத்திலேயே அந்த நன்மை யைப் பிரார்த்தனை மூலமாகக் கேட்கலாமே. நாம் தேவனை அறியவில்லை. அவரோடு ஐக்கியமில்லை. அவர் நம்முடைய பிரார்த்தனையைக் கேட்பார் என்ற விசுவாசம் இல்லை. அப்படியிருந்தால் நாம் பெற்ற பிள்ளைகளுக்காக நாமே மன்றாடலாமே. நாம் ஏன் இங்கே அங்கே என்று ஓடுகின்றோம்? நாம் தேவனையும் அவருடைய வல்லமையையும் தனிப்பட்ட முறையில் அறியவில்லை. எனவே, ஆண்ட வரைத் தேடாமல் ஆண்டவருடைய ஊழியரை நம்பி வெகுதூரம்செல்கின்றோம்.

சிந்தனைக்கு...

இறைவனின் விதிகளை மதித்து வாழ இயலாததால் சாத்தானின் சதிவலைகளில் மயங்கி விழ நேரிடும்.

ஜூன் 28

சிந்தியுங்கள்

எபேசியர் 5:1-21

ஆவியின் கனி சகல நற்குணத்திலும் விளங்கும்.
எபேசியர் 5:9

நீங்கள் வாரம் தவறாமல் ஆராதனைக்கு, செல்லுகின்றீர்கள். ஆனால், உங்களின் ஆராதனையை தேவன் விரும்புகிறாரா என்று சிந்தியுங்கள். நீங்கள் நன்றாகப் பாடுகிறீர்கள். பலத்த சத்தமாய்த் துதிக்கின்றீர்கள். ஆரவாரமாய் ஆராதிக்கின்றீர்கள். பரலோகத்தை பூமியில் பார்த்துவிட்டதைப் போலப் பரவசப்படுகின்றீர்கள். உங்கள் துதியின் வேளையிலே, உங்களின் ஆராதனை ஆரவாரங்களுக்கு நடுவிலே பரிசுத்த ஆவியானவர் அசைவாடுவதாக எண்ணி ஆர்ப்பரிக்கின்றீர்கள். ஆனால், கொஞ்சம் சுயநிலைக்கு வாருங்கள். கொஞ்சம் யோசிக்க நேரம் கொடுங்கள். பரவச உணர்வுகளின்உற்சாக நிறைவுகளுக்கு மத்தியிலும் கொஞ்சம் சிந்தியுங்கள்.

இவைகள் தேவனுக்கு மகிமை செலுத்துவதற்குப் போதுமானவைகளா? இப்படிப்பட்ட ஆராதனைச் செயல்பாடுகள் தேவனைப் பிரியப்படுத்தி விடுமா? இவை களைத்தான் உங்கள் வாழ்க்கையில் தேவன் பிரதானமாக எதிர்பார்க்கின்றாரா? நாம் துதிக்கின்றோம் துதிக்கின்றோம் என பலமுறை சொன்னாலும் அவைகளே தேவனுக்கு உகந்த துதிகளாகிவிடாது. நாம் மகிமை மகிமை என ஆயிரம் முறைச் சொன்னாலும் அதனால் தேவனுக்கு மகிமை கிடைத்து விடாது. தேவன் வார்த்தைகளில் மயங்கு கிறவரல்ல. புகழோசைகளில் உணர்ச்சி வசப்படுகிறவரல்ல. உங்கள் வாயி லிருந்து வருகிறவைகளை அப்படியே விரும்பி ஏற்றுக் கொள்கின்றவர் அல்ல. உங்களின் ஆராதனையை குறைசொல்வதற்காக இவைகள் எழுதப்படவில்லை. உங்கள் ஆராதனைகள் அர்த்தமற்றதாகத் தொடர்ந்து அதற்குரிய பலன்கள் கிடைக்காமல் போய்விடக் கூடாது என்ற ஆதங்கத்தின் விளைவே இந்த வார்த்தைகள்.

கர்த்தர் உங்களின் ஆரவார ஆராதனையில் அல்ல. உங்களின் சத்தியம் சார்ந்த வாழ்க்கை முறையினாலேயே மகிமைப்படுகிறார். ஆராதனை நேரங்களை அல்ல. வாழ்க்கையின் சாரங்களைக் கவனியுங்கள். கர்த்தருக்கு உகந்த ஒரு வாழ்க்கைதான் தேவன் விரும்பி ஏற்கின்ற ஆராதனை. பாடுங்கள் துதியுங்கள் பரவசமாகுங்கள். அது மகிழ்ச்சியானது. விட்டுவிடாதிருங்கள். ஆனால், வாழ்க்கை முறையைக் கவனியுங்கள். நன்கு கவனியுங்கள்.

உங்களின் வாழ்க்கை அன்பு, தாழ்மை, பொறுமை, சாந்தம், தயவு, இரக்கம் போன்றவற்றைக் கனிகளாக வெளிப்படுத்தும் வாழ்க்கையா? உங்கள் வாழ்க்கை நடைமுறைகளின்மேல் தேவன் பிரியமாயிருப்பார் என நம்ப முடிந்த ஒரு வாழ்க் கையா? சிந்தியுங்கள். இல்லையேல் ஆராதனையை சற்று நிறுத்திவிட்டு சற்று அமைதியாய் உட்கார்ந்து உங்களை ஆராய்ந்து பாருங்கள்.

சிந்தனைக்கு...

உண்மையைப் புரிந்துகொள்ள அல்ல. அதனை ஏற்றுக்கொள்ளத்தான் மனிதன் சிரமப்படுகிறான்.

ஜூன் 29

அறிவா, அனுபவமா?

மத்தேயு 3:1-17

ஆபிரகாம் எங்களுக்குத் தகப்பன் என்று..
மத்தேயு 3:9

என்னுடைய புத்தகங்களை அதிகமாகப் படித்து பயனடைந்த ஒருவர், சென்னையைச் சேர்ந்த ஒருவருக்கு ஒரு புத்தகத்தைக் கொடுத்து, இது நல்ல புத்தகம் படித்துப் பாருங்கள் என்றார். உடனே அவர், சாம்சன் பால் புத்தகத்தை எனக்கு நீங்கள் அறிமுகம் செய்கின்றீர்களா. அவரை நான் 25 வருடமாக அறிவேன். உங்களுக்கு அவரை இன்றுதான் தெரியும். எனக்கோ அவரை ஊழியம் செய்ய ஆரம்பித்த காலத்திலிருந்தே தெரியும் என்றார். உடனேயே அவர் சாம்சன் பால் எழுதின புத்தகங்களைக் குறித்த உங்களின் கருத்து என்ன என்று கேட்டார். அதற்கு அந்த புதுச்சேரிக்காரர் புத்தகமா, அவருடைய புத்தகம் எதையும் இதுவரை நான் படித்ததே இல்லை என்றார்.

பல கிறிஸ்தவர்களின் நிலைமையும் இதுதான். அவர்களிடம் போய் இயேசு கிறிஸ்துவைப்பற்றி எதையாவது சொன்னால் திருநெல்வேலிக்கே அல்வாவா என்று கேட்பார்கள். ஏனென்றால் அவர்கள் பரம்பரை பரம்பரையாகக் கிறிஸ்தவர்கள். இயேசுவை நன்றாகவே தெரியும். சுவிசேஷம், நன்றாகத் தெரியும். வேத அறிவு ஏராளம் உண்டு. அவர்கள் கோயில் கட்டியவர்கள், மணிக்கூண்டு எழுப்பிய முன்னோடிகள், மிஷனரிகளை அனுப்பியவர்கள். அவர்களிடமே போய் இயேசுவைப் பற்றி பேசினால், வேடிக்கை தானே மிஞ்சும்.

ஆனால் இரட்சிப்பை பெற்றிருக்கின்றீர்களா? மறுபடியும் பிறந்த ஆவிக்குரிய அனுபவம் உண்டா? பரிசுத்த ஆவியின் நடத்துதலை அறிவீர்களா? பரிசுத்த வாழ்வில் ஜெயிக்கின்றீர்களா? இயேசுவின் மகிமையை நற்குணங்களால் பிரதி பலிக்கின்றீர்களா? உண்மை, நேர்மை, அன்பு, தாழ்மை போன்றவற்றில் உயர்ந்து நிற்கின்றீர்களா? என்பது போன்ற கேள்விகளுக்கோ அவர்களிடம் பதிலும் இல்லை. அந்த அனுபங்களும் இல்லை.

பிஷப் அசரியா எங்க ஊரில்தான் பிறந்தார்? கால்டுவெல் ஐயர் எங்க ஊரில் தான் ஊழியம் செய்தார். ரிங்கல்தௌவே கட்டின ஆலயம்தான் எங்க ஆலயம். ராக்லாந்து எங்க தாத்தாவிற்கு நண்பர் என்றெல்லாம் பழம்பெருமை பேசுகின்ற பலர் உண்டு. ஆனால், அவர்களெல்லாம் தங்களின் வாழ்க்கையில் கண்டு அனுபவித்து சாட்சி பகர்ந்த இயேசுவை நீங்கள் ஏற்றுக்கொண்டீர்களா? என்று கேட்டால் கேள்வி யின் அர்த்தமே புரியாது. இயேசுவைக் குறித்த அறிவு அல்ல. கிறிஸ்தவத்தைக் குறித்த அறிவு அல்ல. சபை வரலாறுகளைக் குறித்த அறிவு அல்ல. இயேசுவை நமக்குள் வாழ்கின்றவராக அறிந்து கொண்டோமா என்பதே முக்கியம்.

சிந்தனைக்கு...

இறைவனுக்காக எவ்வளவு செய்கிறாய் என்பதல்ல அவர் எதிர்பார்ப்பதைச் செய்கிறாயா என்பதே முக்கியம்.

ஜூன் 30

யாருக்காகச் செய்கின்றீர்கள் ?

சங்கீதம் 81:1-16

நீ எனக்குச் செவிகொடுத்தால் நலமாயிருக்கும்
சங்கீதம் 81:8

சிறு பிள்ளைகள் கீழ்ப்படிகின்றனர். சில ஒழுங்குகளைப் பின்பற்றுகின்றனர். சில வேலைகளைச் செய்கின்றனர். பள்ளிக்கூடப் பாடங்களைப் படிக்கின்றனர். பெற்றோர் விரும்பியபடியே நன்றாக குளித்துவிட்டு வந்து சாப்பிடுகின்றனர். இவை யாவும் நல்ல விஷயங்கள். இவை யாவற்றையும் தங்களின் பெற்றோருக்காகவே பிள்ளைகள் செய்கின்றனர். பெற்றோரைப் பிரியப்படுத்துவதற்காகவோ அல்லது பெற்றோரின் கோபத்தை தவிர்ப்பதற்காகவோ அவர்கள் அவ்விதம் செய்கின்றனர். ஆனால், இவை யாவும் அந்தப் பிள்ளைகளின் நலனிற்காகவே. அவற்றால் பயன் அடைகின்றவர்கள் அவர்களே. அவர்கள் வளர்ந்து வரும் போது இவை யாவற்றையும் பெற்றோருக்காக அல்ல. தங்களின் சொந்த நன்மைக்காகவே செய்கின்றனர்.

நாம் நல்லதை நினைக்க வேண்டும். நல்ல சுபாவங்களோடு வாழ வேண்டும். நல்ல செயல்களைச் செய்ய வேண்டும். தீமையை விட்டு விலகவும், நல்லதை நாடிச் செல்லவும் பழக வேண்டும். இவை யாவற்றையும் நாம் தேவனுக்காகவும், இயேசுவுக்காகவும் செய்வதாக நாம் எண்ணுவது பக்திரீதியான சிந்தனை. ஆனால், நாம் ஆவிக்குரிய வாழ்க்கையில் வளர வளர இவை யாவும் நமக்கு அவசியம் என்பதையும், இவற்றால் நமக்குத்தான் நல்லது என்பதையும் உணர வேண்டும். ஏதோ, கர்த்தருக்கு நல்லதைச் செய்வதாக நினைத்துக் கொண்டு, இவற்றின் உண்மை யான தேவைகளை நாம் அறியாமல் போகக் கூடாது.

கோபத்தைத் தவிர்த்தீர்கள், பொறுமையாய் நடந்து கொண்டீர்கள், விரோ தத்தை விட்டு விட்டீர்கள். தவறுகளைச் செய்யவில்லை, நல்லதைச் செய்தீர்கள். இவை யாவும் கர்த்தருடைய பார்வையில் சந்தோஷமான நல்ல விஷயங்களே. ஆயினும், இவை யாவும் உங்களுக்குத்தான் மிகுந்த நல்லதைச் செய்கின்றன.

இவற்றால் நீங்கள் நல்ல ஒரு வாழ்க்கையை வாழ்கின்ற திருப்தியைப் பெறுகின்றீர்கள். இவற்றால் உங்களுக்கு அமைதியும் சந்தோஷமும் ஏற்படுகிறது. உங்களுக்குக் குற்ற மனசாட்சியின் உறுத்துதல் இல்லை. உங்களுக்கு நல்ல மனித உறவும், ஐக்கியமும் கிடைக்கிறது. தேவனிடம் நெருங்கிச் செல்ல விசேஷத் தைரியம் கிடைக் கிறது. எனவேதான் இப்படிப்பட்ட ஓர் நல்ல வாழ்க்கையை வாழ கர்த்தர் அழைத்தார். இவற்றையெல்லாம் கர்த்தருக்காகச் சுமக்க வேண்டிய பாரங்களாக எண்ணாதிருங்கள். இவை யாவும் உங்கள் வாழ்வின் நன்மைக்காக நீங்கள் நிறைவேற்ற வேண்டிய கடினமான கடமைகள். இவற்றை தேவ கிருபையோடு செய்யும் போது அதுவே ஒரு பெரிய ஆசீர்வாதமே.

சிந்தனைக்கு...

இறைவனின் விதிகளை மதித்து வாழத் தயங்கினால்
சாத்தானின் சதி வழிகளில் மயங்கி விழ நேரிடும்.

ஜூலை 1
பாவ உணர்வு

1 யோவான் 1:1-10

அவர் ஒளியிலிருக்கிறது போல நாமும் ஒளியிலே நடந்தால்...
1 யோவான் 1:7

நண்பர் ஒருவருக்கு அவ்வப்போது வயிற்றுவலி வந்தது. அவருடைய மனைவியும், சில நண்பர்களும் வயிற்றில் ஏதோ பிரச்சினை இருகிறது. அதற்குரிய சரியான மருத்தவரை அணுகி சிகிட்சை பெற அவரை வற்புறுத்தினார்கள். அவரோ அந்த ஆலோசனைகளை அலட்சியம் செய்தார். வயிற்று வலி வரும்போது சில வலி நிவாரணிகளை உபயோகித்து காலங்கடத்திக் கொண்டிருந்தார். சிகிட்சை பெறவில்லை. ஒரு முறை வயிற்றுவலி அதிகமாகவே மருத்துவரை அணுகினார். ஸ்கேன் செய்து பார்த்தபோது அவருடைய வயிற்றில் கட்டி ஒன்று பெரிதாக வளர்ந்திருக்கிறது. அதனை கம்ப்யூட்டர் திரையில் பார்த்த அவர் பயந்துபோய் உடனடியாக மேல்சிகிட்சைக்கு ஆயத்தமானார்.

அவருடைய வயிற்றில் பிரச்சினை இருப்பது அவருக்கு நீண்டகாலமாகத் தெரியும். ஆயினும், ஸ்கேன் பண்ணிப் பார்த்தபோதுதான் உடனடியாக நிவாரணம் பெறும் தூண்டுதல் அவருக்குக் கிடைத்தது. நம்முடைய பாவங்களை நாம் அறிவோம். நம்முடைய தவறுகளை அறிவோம். நம்முடைய மோசமான குணங்களும், மனநிலைகளும் நாம் அறியாததல்ல. ஆனால், அவற்றைச் சரிசெய்யும் ஒரு விசேஷத் தூண்டுதல் இல்லை. எனவே, அவற்றோடு வாழப் பழகிவிடுகின்றோம்.

ஆனால், நம்முடைய பாவங்களை வெளியரங்கமாக்கும் இயேசுவாகிய வெளிச்சத்தில், அந்த அசிங்கத் தோற்றத்தைக் காண நேரிட்டால், நாம் அமைதியாயிருக்க இயலாது. தான் அசுத்த உதடுகளை உடைய மனிதன் என்பதை ஏசாயா தீர்க்கன் அறியாமலிருந்திருக்க வாய்ப்பில்லை. ஆனால், தேவனுடைய மகிமையின் வெளிச்சம் அதனை வெளியரங்கப்படுத்தியபோது, அவன் அதைக் கண்டு வெறுப்புற்று ஐயோ! அதமானேன் என்று கூச்சலிட்டான். அதனால் தேவன் அவனுயை பாவத்தை அகற்றினார்.

நாம் இயேசுவை இரட்சகராக நமக்குள் பெற்றுக்கொண்டது உண்மையென்றால், ஒளியாகிய அவருக்கு முன்பாக நம்முடைய பாவ சுபாவங்களும், செயல்களும் வெளியரங்கமாக்கப்படும். அப்பொழுது முன்பு போல நாம் சாதாரணமாக இருக்க முடியாது. நாம் அந்தப் பாவ நிலைமையைக் கண்டு, அதனை அருவறுத்து, அது அகலுவதற்காக தேவனை நோக்கி மான்றாடுவோம். அப்போது அந்தப் பாவங்கள் நம்மை விட்டு விலக்கப்படும். இயேசுவாகிய ஒளியோடு நாம் ஐக்கியமாகும் போது, அந்த ஒளியில் உண்மைகள் மறையாது. நாமும் மறைந்து கொள்ள இயலாது.

சிந்தனைக்கு...

இறைவனை அறிந்தவன் தன்னை அறிவான், அவனே இறைவனைப் பிறருக்கு அறிவிக்கத் தகுதியானவன்.

ஜுலை 2

பயிற்சி அவசியம்

பிலிப்பியர் 2:1-16

இரட்சிப்பு நிறைவேறப் பிரயாசப்படுங்கள்
பிலிப்பியர் 2 : 12

வசதிமிக்க ஒரு பணக்கார மனிதரை எனக்குத் தெரியும். அவர் எப்போதும் எதையாவது தின்றுகொண்டேயிருப்பார். அவர் மிகவும் பருமனாக இருப்பார். ஆனால், அவரால் ஒரு சிறு வேலையைக்கூட பத்து நிமிடம் தொடர்ந்து செய்ய முடியாது. அவர் எந்த ஒரு வேலையையும் பிறர் மூலம்தான் செய்வார். மிகுதியான ஆகாரத்தால் உடல் குண்டாயிருக்கிறதேயன்றி, எதையாவது செய்யத்தக்க அளவில் ஆரோக்கிய மாக இல்லை. ஏனென்றால், ஆகாரத்துக்குத் தக்கபடி எந்த உடற்பயிற்சியும் இல்லை.

ஆவிக்குரிய வாழ்க்கையில் பலருடைய நிலை இதுதான். ஆவிக்குரிய விஷ யங்களில் அதிகமாக ஈடுபாடு உண்டு. ஏராளமான பிரசங்கங்களை கேட்பதினாலும், அநேகம் புத்தகங்களைப் படிப்பதினாலும் அடைந்த வேத அறிவு மிகவும் அதி கம். ஆயினும், வாழ்க்கையில் ஆவிக்கேற்ற நற்குணங்களோ, மேன்மை யான சுபாவங்களோ இல்லை.

நாம் கேட்கும் பிரசங்கங்கள், படிக்கும் ஆவிக்குரிய புத்தகங்கள், பங்கெடுக்கும் தியானங்கள், யாவுமே நம்மிடம் சில ஆவிக்குரிய வளர்ச்சிகளையும், அனுபவங் களையும் ஏற்படுத்துவதற்காகவே. அவைகள், நம்மிடம் ஏற்படவேண்டும் என்ற விசேஷ விழிப்புணர்வு இல்லையேல், அவைகளால் நமக்குப் பயன் ஏதுமில்லை. வேத அறிவு மூளையில் சேகரித்து வைப்பதற்காக அல்ல. அது இதயத்தில் செயல்பட்டு, பண்புகளையும், நல்ல தன்மைகளையும் உருவாக்குவதற்கே.

வேத அறிவின் திரட்சியினால் எந்தப் பயனும் இல்லை. அதனை வாழ்க்கையில் சுபாவரீதியாகவும், செயல்ரீதியாகவும் வெளிப்படுத்தும் பயிற்சிகள் அவசியம். கேட்பதி லும், படிப்பதிலும் விசேஷமில்லை. அதற்கேற்ப செயல்படும் விதமாக நம்மை பயிற்சிக்க வேண்டும். தேவன் விரும்புகிற பிரகாரம் வாழ்வதற்கு முன்வந்து, தெய்வீக விருப்பங்களைச் செயல்படுத்த பிரயாசப்பட வேண்டும். அப்போதுதான், ஆவிக்குரிய வாழ்க்கை ஆரோக்கியமாகவும் பலமாகவும் விளங்கும்.

சிலருக்கு வேத அறிவு மிகுதியாக உண்டு. ஆனால், பரிசுத்தாவியானவரால் வழி நடத்தப்படும் அனுபவத்தைத் தருகின்ற உண்மையான இரட்சிப்பின் அனுபவம் இல்லை. எனவே, வேத அறிவினால் வாழ்க்கையில் மாற்றங்கள் ஏற்படவில்லை. பரிசுத்தாவியினால் மறுபடியும் பிறந்து தேவனுடைய பிள்ளை என்ற ஆவிக்குரிய அந்தஸ்தின் நிலையை அடையும்போதுதான், படித்த, கேட்ட தேவ வார்த்தைகளைச் செயல்படுத்தும் ஆர்வம் உருவாகும்.

சிந்தனைக்கு...

எத்தனை புத்தகங்கள் படித்தவன் என்பதையல்ல. எத்தனை பேர் படிக்கத்தக்க புத்தகமாய் இருக்கிறாய் என்பதைப் பார்.

ஜூலை 3

சுமையும் வேகமும்

எபிரெயர் 12:1--17

பாரமான யாவற்றையும் தள்ளிவிட்டு...
எபிரெயர் 12:1

நம்முடைய நோக்கம் தேவ நோக்கம் சார்ந்ததாகவும், நம்முடைய தரிசனங்கள் ஆவிக்கேற்றதாகவும் இருந்தால், அங்கே வாழ்வு சார்ந்த கவலைகளுக்கோ தேவையற்ற மன அழுத்தங்களுக்கோ இடமிருப்பதில்லை. தேவன் விரும்புகின்ற உயர்ந்த நோக்கத்தின்மேல் பார்வையை வைத்து நாம் ஓடுவதற்கு தீவிரப்படும் போது, நம்முடைய வாழ்வு சார்ந்த அனைத்து தேவைகளுக்கும், சூழ்நிலை களுக்கும் கர்த்தர் போதுமானவராகவேயிருப்பார். அந்த விசுவாசம் நமக்குள் வந்துவிட்டால் நம்முடைய ஆவிக்குரிய ஓட்டம் தொய்வின்றி விறுவிறுப்போடு தொடர்வது நிச்சயம்.

நோயினால் பாதிக்கப்பட்ட ஒரு மனிதனால் வேகமாக நடந்து செல்ல இயலாது. அதுபோல அதிகமான சுமைகளை தன்மேல் சுமத்திக் கொண்ட மனிதனும் வேகமாக நடந்து செல்ல இயலாது. பாவம் என்பது மனிதனைப் பலவீனப்படுத்தும் ஒரு நோய் ஆகும். இந்த நோயினால் பாதிக்கப்பட்ட ஒரு மனிதன் ஒருபோதும் ஆவிக்குரிய வாழ்க்கையில் முன்னோக்கிச் செல்ல இயலாது. பாவமான விஷயங்களை விட்டு தன்னை விலக்கிக் கொள்ளாத மனிதன் ஒரு பரிசுத்த கொள்கை சார்ந்த வாழ்க்கை இலக்கை எட்டுதல் இயலாத காரியம்.

ஆனால், நாம் நோயற்றவர்களாக இருந்தும் பலவிதமான உலகப்பிரகார மான காரியங்களால் நம்மை பாரப்படுத்திக் கொண்டால், அப்போதும் நாம் இலக்குகளை எட்ட முடியாது. பணம், பொருள், அந்தஸ்து போன்ற வாழ்வு சார்ந்த காரியங்களைக் குறித்த அதிகமான கவலைகளும், ஆதங்கங்களும் நம்மேல் அதிகமான சுமைகளாக வந்து ஏறிவிட முடியும். உன்னத நோக்கங்களைவிட, உலகம் சார்ந்த நோக்கங்களே நம்மை அதிகமாக ஆட்கொள்ளுமானால், அவைகள் பெரிய சுமைகளாக மாறி, நம்முடைய வேகங்களைக் குறைத்து விடும்.

எனவேதான் இயேசுவை நோக்கிய நம்முடைய பரிசுத்த ஓட்டத்தின்போது, பாவங்களை மட்டுமல்ல, பாரங்களையும் தள்ளிவிட்டு ஓடவேண்டும் என்று வேதம் கூறுகின்றது. அநேகர் ஆவிக்குரிய யாத்திரையில் தங்களை அர்ப்பணித்து, ஈடுபடுத்திய பிறகும், அந்த யாத்திரையில் வேகமான ஒரு பயணமின்றி, எப்போதும் பின்தங்கியேயிருக்கின்றார்கள். ஏனென்றால், அவர்கள் இருதயத்தில் பலவித ஆசைகளும் வளமான வாழ்க்கையைக் குறித்து அதிகமான எதிர்பார்ப்புகளும், பலவிதங்களில் சுமைகளாகக் குவிந்து, அவர்களை வெற்றியான ஒரு பரிசுத்த வாழ்க்கையில் மிகவும் மந்தமானவர்களாக மாற்றிவிடுகிறது. அவைகளை விட்டு விடாதவரையிலும் பயணம் வேகமடையாது.

சிந்தனைக்கு...

நாளையதின துன்பங்களை விட அதைக் குறித்த இன்றையக் கற்பனைகள் அதிகத் துன்பமானவை.

ஜீலை 4

அர்த்தங்களை அலட்சியம் செய்துவிட்டு

ஆமோஸ் 5:18 - 27

உங்கள் பண்டிகைகளைப் பகைத்து வெறுக்கிறேன்
ஆமோஸ் 5 : 21

அந்தத் திருச்சபையில் மிகுதியாகப் படித்தவர்கள் ஏராளம் உண்டு. பெரும்பாலான சபை உறுப்பினர்கள் மருத்துவர்களாகவும், பொறியியல் வல்லுனர்களாகவும், உயர் அதிகாரிகளாகவும், கல்லூரிப் பேராசிரியர்களுமாக இருந்தனர்.அவர்கள் ஒருவாரகாலம் மிக விமரிசையாக கிறிஸ்துமஸ் பண்டிகையைக் கொண்டாடினார்கள். ஆனால், அந்தத் திருச்சபைக் குருவானவர் அந்தத் திருச்சபை மக்களின் தேவ பக்தியற்ற வாழ்க்கை முறைகளை நன்கு அறிந்தவர். எனவே, அவர்களின் சத்தியம் சாராத கிறிஸ்துமஸ் கொண்டாட்டங்களைக் கண்டு அதிருப்தியுற்று, கிறிஸ்துமஸ் பண்டிகை கொண்டாடுகிற நீங்கள் யாவரும் முட்டாள்தனமாகச் செயல்படுகின்றீர்கள் என்பதை அறிந்திருக்கிறீர்களா? என்று கேட்டுவிட்டார்.

சபையாருக்கு மிகுந்த கோபம் வந்து விட்டது. எங்களை முட்டாள்கள் என்று எபபடிச் சொல்லலாம் என்று வாக்குவாதம் செய்தனர். சபை குருவானவரோ, நீங்கள் எவ்வளவுதான் படித்திருந்தாலும், அது முட்டாள்தனம்தான் என்றார். நீங்கள் இயேசுவினால் பெறவேண்டிய பாவ மன்னிப்பையோ, இரட்சிப்பையோ பெறவில்லை. அவருடைய போதனைகளின்படி வாழவில்லை. அவருடைய வழிகளில் நடக்கவில்லை. அவரால் எந்தப் பயனையும் அடையாத நீங்கள், அவர் பிறந்தததை எண்ணிக் கொண்டாடுவது, முட்டாள்தனமில்லையா என்று விளக்கம் கொடுத்தார். அன்றிலிருந்து, அவர்களால் அந்தக் குருவானவருக்கு சிலுவைப் பாடுகள் ஆரம்பமாயிற்று.

இயேசு கிறிஸ்து பக்திமிக்க பரிசேயர்களைப் பார்த்து மதிகேடர்களே என்றார். எருசலேமில் பஸ்கா பண்டிகையைக் கொண்டாடிய யூதர்களைப் பார்த்து, இயேசு கண்ணீர்விட்டார். கலாத்திய திருச்சபை மக்களைப் பார்த்து புத்தியில்லாத கலாத்தியர்களே! என்றான் அப்போஸ்தலனாகிய பவுல். (கலா-3:1)

ஆம், நாம் அர்த்தம் உணராமல், தேவ நோக்கம் அறியாமல், உண்மையான பலனைப் பெறாமல் செய்கின்ற எந்த ஒரு ஆன்மீகச் செயலும் முட்டாள்தனமான விஷயங்களே. நம்முடைய பாவங்களிலிருந்து நம்மை மீட்பதற்காகவும், நம்மைத் தேவனுடைய பிள்ளைகளாக மாற்றி தேவ நன்மைகளைப் பெறச் செய்யவும்தானே, இயேசு பூமியில் பிறந்தார். அந்த நோக்கங்களை அலட்சியம் செய்துவிட்டு, கிறிஸ்துமஸ் என்ற பெயரில் நன்றாக உண்போம், நன்றாக உடுப்போம், ஆடுவோம், பாடுவோம், தினுசு தினுசாக கேளிக்கை நிகழ்ச்சிகள் நடத்துவோம் என்ற விதமாகச் செயல்பட்டால், அது முட்டாள்தனம்தானே.

சிந்தனைக்கு...

மனிதன் தன்னைத்தானே ஏமாற்றிக்கொள்ளும் அளவிற்குப் பிறரால் ஏமாற்றப்படுவதில்லை.

ஜூலை 5

பிரிக்க இயலாதது

அப்போஸ்தலர் 7:51-60

அவனோ, முழங்காற்படியிட்டு...
அப்போஸ்தலர் 7:60

இயேசு கிறிஸ்து கை கால்கள் ஆணி அடிக்கப்பட்டவராய், உடலெல்லாம் கடுமையாக காயப்படுத்தப்பட்டவராக, சிலுவையில் தொங்கிக் கொண்டிருந்தார். ஆனால், தாங்கொணா வேதனையிலும் ஜெபித்துக்கொண்டே அவர் உயிரைவிட்டார். உடலெல்லாம் கற்களால் காயப்படுத்தப்பட்டு மரணத்தின் வாயிலை நெருங்கிக் கொண்டிருந்தான் ஸ்தேவான். ஆனாலும், முழங்காற்படியிட்டு ஜெபித்துக்கொண்டே அவன் மரித்தான்.

உண்மையான தேவனுடைய பிள்ளைகளுடைய ஓர் ஒப்பற்ற அடையாளம், அவர்களை விட்டுப் பிரிக்க முடியாத ஜெப அனுபவம்தான். எத்தனை பாடுகள் அவர்களைச் சூழ்ந்து கொண்டாலும், எத்தனை சோதனைகள் அவர்களை நெருக்கினாலும், அவர்களை விட்டு ஜெபிக்கிற அனுபவத்தைப் பிரிக்கவே முடியாது. அதுதான் அவர்கள் தேவனால் பிறந்து, தேவனுடைய ஆவியைப் பெற்ற பிள்ளைகள் என்பதின் நிச்சயமான ஒரு அடையாளம்.

கெர்ஜிக்கும் அனேகம் சிங்கங்களுக்கு நடுவில் விழுந்து சாகப் போகிறாயா? அல்லது உன்னுடைய ஜெப அனுபவத்தை விட்டு விலகி சுகமாக வாழப் போகிறாயா? என்ற கேள்விகள் தானியேலுக்கு முன்பாக வந்தது. ஆனால், தானியேலோ சிங்கத்தின் கெபிக்குப் போக முடிவு செய்தான். பயங்கரமான அந்தச் சூழ்நிலைகூட அவனுடைய ஜெபப் பழக்கத்தை அவனை விட்டுப் பிரிக்க இயலவில்லை. ஏனென்றால், அவனுக்குள் தேவனுடைய ஆவி இருந்தது. அவன் தேவனுக்குரியவன். சோதனைகள், சோர்வுகள், ஏமாற்றங்கள் பெருகும்போது ஜெப ஈடுபாடுகளின்மேல் உள்ள ஆர்வங்கள் சற்று பலமிழக்கும் என்பது உண்மைதான். ஆனாலும், அந்தச் சோர்வினைச் சார்ந்து நில்லாமல், விசுவாசத்தைச் சார்ந்து நின்று, ஜெபத்தில் நம்மை ஈடுபடுத்தும் போது, விசேஷமான ஒரு தெய்வீக வல்லமை நமக்குள் செயல்பட்டு, நம்மை பலப்படுத்தும் என்பது உண்மை.

தன்னுடைய துன்பக் காலங்களில் தேவனை நோக்கிப் புலம்பித் தீர்த்தவைகள்தான் தாவீதின் சங்கீதங்கள். சங்கீதங்களை தாவீதின் ஜெபங்கள் என்றாலும் பொருத்தமாகவேயிருக்கும். வாழ்க்கையின் துயர் மிகு நிலைகளில், தன் மனதில் இருந்த உணர்வுகள் யாவற்றையும் தேவனுடைய பாதத்தில் கொட்டித் தீர்க்கும் பழக்கம் அவனுக்கிருந்ததால்தான், அவன் எல்லாச் சூழ்நிலைகளிலும் தேவனால் ஆறுதலையும், சமாதானத்தையும், தைரியத்தையும் பெற்று வெற்றியாக நிற்க முடிந்தது.

சிந்தனைக்கு...

இறைவனின் நேசத்தை இழப்பது நிரந்தர நஷ்டம். இறைவனுக்காக பிறரின் நேசத்தை இழப்பது தற்காலிகக் கஷ்டம்.

ஜூலை 6
கடவுள் யார்?

ஏசாயா 29:13-24,

தங்கள் உதடுகளினால் என்னைக் கனம் பண்ணுகிறார்கள்
ஏசாயா 29:13

ஒருவர் தேவன் காண்பிக்கும் நல்ல வழிகளைப் பின்பற்றவில்லை. தன்னுடைய வியாபாரத்தில் நல்ல சம்பாத்தியம் கிடைப்பதற்காக தவறான குறுக்கு வழிகளைப் பின்பற்றுகின்றார். இவருக்கு இவருடைய வியாபாரம்தான் கடவுள். இவர் நம்புவது இயேசுவைத்தான். இவர் செல்லுவது சபைக்குத்தான். இவர் ஆராதிப்பது இயேசுவைத்தான். ஆனாலும், இவருடைய கடவுள் வியாபாரம் என்பதுதான் உண்மை. ஏனென்றால், நாம் மனதால் யாரை நம்புகின்றோம் என்பது அல்ல. வாயினால் யாரைத் துதிக்கின்றோம் என்பது அல்ல. எதற்கு அதிக முக்கியத்தும் தருகிறோம் என்பதுதான், நாம் உண்மையில் வழிபடும் கடவுள் யார் என்பதை அடையாளம் காட்டுகிறது

நம்முடைய ஆலயப் போக்குவரவுகள் அல்ல. நாம் பாடும் பாடல்களும் துதிகளும் அல்ல. நாம் சொல்லும் விசுவாசப் பிரமாணங்கள் அல்ல. நாம் செய்கின்ற ஊழியமும் அல்ல. நாம் எதற்கு அதிக முக்கியத்துவம் தந்து அதற்காகப் பின்பற்றுகின்ற வழிகள் எவைகள் என்பதே முக்கியம். நாம் தேவனை நம்பி ஆராதிக்கின்றோம். ஆனால், தேவனுடைய வழிகளை ஏற்றுக்கொண்டு அவைகளில் நடக்கவில்லை. நாம் பணம், பொருள், வசதி, அந்தஸ்து, பதவி இவைகளுக்கு அதிக முக்கியத்துவம் தருகின்றோம். அவைகளை அடைவதற்காகத் தேவனுடைய நியாயங்களுக்கும் வழிகளுக்கும் பொருந்தாத தவறான வழிகளைப் பின்பற்றுகின்றோம். அங்கே நம்முடைய கடவுள் பணமும், வசதியும் அந்தஸ்தும்தான்.

நாம் இயேசுவை விசுவாசிப்பதாகக் கூறிக்கொள்கின்றோம். அவருடைய வழிகளே மிகச் சிறந்தவை என்று போற்றுகின்றோம். அவருடைய நீதி நியாயங்கள் அடங்கிய வேதாகமத்தை மிக அதிக கனத்திற்குரியதாக எண்ணுகின்றோம். ஆனால், நடைமுறை வாழ்க்கையிலோ அவைகளின் அடிப்படையில் வாழவில்லை.

பணம், பொருள், அந்தஸ்து, புகழ் தொடர்பான ஆசைகளின் அழுத்தங்கள் உலகத்திற்கேற்ற வழிகளையும், தேவனுடைய சத்தியத்திற்கு உகந்ததல்லாத பாதைகளையும் தெரிந்துகொள்ள நம்மை ஏவுகிறது. அப்படியானால், நாம் தேவனைக் கனப்படுத்துவதாக எண்ணினாலும், அது தேவனுக்குக் கனம் அல்ல. அது ஒரு கனவீனமே. ஆம். நீங்கள் யாரைத் தெய்வமாக எண்ணி ஆராதனை செய்கிறீர்கள் என்பதை யல்ல. எதை முக்கியமாக எண்ணி எந்த வழிகளில் நடக்கின்றீர்கள் என்பதைக் கவனியுங்கள்.

சிந்தனைக்கு...

பணத்தினால் தன்னை அதிகமாகப் பாதுகாக்க விரும்புகின்றவன் எப்போதும் ஆபத்திலேயே இருக்கிறான்.

ஜூலை 7

குற்றம் சாட்டும் தகுதி

யோவான் 8:1-11

உங்களில் பாவமில்லாதவன்
யோவான் 8:7

அலுவலகம் ஒன்றில் பணிபுரிகின்ற ஒருவர் ஏற்கனவே திருமணமானவர். ஆனாலும், தன்னுடைய அலுவலகத்தில் பணிபுரிந்த ஒரு பெண் மீது அவருக்கு தவறான ஒரு பார்வை இருந்தது. ஒரு முறை அவரது தவறான போக்கைக் கண்டறிந்த பிற அலுவலக ஊழியர்கள், அவரைக் குறித்து மேனேஜரிடம் புகார் செய்து, அவருடைய வேலை பறிபோவதற்குக் காரணமானார்கள். இங்கே இந்த திருமணமான மனிதனின் தவறான போக்கு கடுமையான கண்டிப்பிற்குரியதே. ஆனால், இவர் மீது புகார் கொடுத்து அவரை மிக மிக மோசமான மனிதனாகக் காட்டியவர்களும் யோக்கியர்கள் அல்ல. அவர்கள் வேறு பல குற்றங்களில் அகப்பட்டு முறைகேடானவர்களாக அறியப்பட்டவர்களே.

விபச்சாரப் பாவத்தில் பிடிபட்ட பெண்ணை இயேசுவிடம் கொண்டுவந்து, மோசேயின் சட்டதிட்டங்களின்படி அவள் கல்லெறிந்து கொல்லப்பட வேண்டியதை சுட்டிக் காட்டினார்கள் யூதர்கள். உங்களில் பாவமில்லாதவன் முதலாவது கல் லெறியலாம் என்றார் இயேசு. எல்லாரும் மனசாட்சியால் கடிந்துகொள்ளப்பட்டு கற்களைப் போட்டுவிட்டு வந்த வழியாகத் திரும்பிச் சென்றனர்.

பாருங்கள், உங்களில் விபச்சார பாவம் இல்லாதவன் என்று சொல்லாமல், உங்களில் பாவமில்லாதவன் என்று இயேசு சொன்னார். ஆம், அவர்கள் அவள் செய்தது போன்ற ஒரு பாவத்தைச் செய்யாதவர்களாக இருக்கலாம். ஆனால் பொய், புரட்டு, வஞ்சகம், அநீதி, ஏமாற்று, பொய்சாட்சி, பொருளாசை போன்ற வேறு ஏதாவது சில பாவங்களை உடையவர்களாக இருப்பார்கள். பாவம் எந்த வடிவத்திலிருந்தாலும் பாவமே. ஒருவகைப் பாவத்தில் வாழ்ந்துகொண்டு இன்னொரு வகைப் பாவத்திற்கு தண்டனை வழங்க யாருக்கும் தகுதியில்லை என்பதை அங்கே இயேசு விளக்கினார்.

நாம் செய்யாத விதமான ஒரு தவறை இன்னொருவர் செய்யும்போது, நாம் நீதிமான்கள் போலவும், அவர் மகாபாவியைப் போலவும் நமக்குத் தெரிகின்றார். ஆனால், வேறுவிதமான பல பாவச்சேறுகளில் நாம் அமுக்காகி இருப்பதை உணராமல், மற்றவர்களைக் குற்றம் சாட்டுவோம். பொய்பேசித் திரியும் ஒருவர் திருடுகின்றவனை குற்றம் சாட்ட நியாயம் இல்லை. தந்திரமாகப் பிறரை ஏமாற்றிப் பிழைப்பவர்கள், பாலுணர்வு பாவம் புரிந்தவரை நியாயந்தீர்க்கத் தகுதியில்லை. மாய்மாலமாக வாழ்கின்றவர் அநீதி செய்கிறவரை குறைகூற அருகதை இல்லை. தவறு எந்த விதத்தில் இருந்தாலும் தவிர்க்கின்ற ஒருவர்தான், பிறருடைய தவறு களை தட்டிக்கேட்கத் தகுதி வாய்ந்தவர்.

சிந்தனைக்கு...

பிறர் தவறைக் கண்டறிந்து குற்றஞ்சாட்டுமுன்பு
உன் தவறை உணர்ந்து குற்றம் நீங்க மறவாதே.

ஜுலை 8

பிரிந்து சென்று

லூக்கா 5:1-16

அவரோ வனாந்திரத்தில் தனித்துப் போய்.....
லூக்கா 5:16

ஜெபம்தான் ஆவிக்குரிய வாழ்க்கையின் உயிர் மூச்சு. ஏனென்றால்,ஜெபம் என்பது நாம் தேவனுடன் ஐக்கியமாயிருப்பதை உண்மையாக்கும் ஒரு அனுபவம். எனவே அதனைத் தவிர்க்கக் கூடாது. எங்கு போனாலும், எந்த சூழ்நிலையிலும் தேவனோடுப் பேசவும், தேவனோடு நம்முடைய காரியங்களைப் பகிர்ந்து கொள்ளவும் நாம் மிகவும் கரிசனையாயிருக்க வேண்டும். ஜெபத்தில் பலவீனமாக இருப்பவர்கள் ஆவிக்குரிய அனுபவத்தில் நிறைவாக இருக்க முடியாது. ஜெபத்தை எளிதாகத் தவிர்ப்பவர்கள், விசவாச வாழ்க்கையை விடாமல் பற்றிக்கொண்டிருக்க முடியாது.

லூக்கா 5-ம் அத்தியாயம் 15, 16 வசனங்களை கவனமாகப் படித்துப் பாருங்கள். அங்கே இயேசு கிறிஸ்து பரபரப்பான ஊழியத்தில் ஈடுபட்டிருக்கின்றார். வசனங்களைக் கேட்பதற்காகவும், அற்புத, அடையாளங்களைக் காண்பதற் காகவும் ஏராளமான மக்கள் அவரைச் சூழ்ந்திருக்கின்றார்கள். ஆனால், அவரோ அந்த வட்டத்தை விட்டு தனியாகத் தம்மை பிரித்துக் கொண்டு வனாந்தரத்தில் போய் தனியாகச் ஜெபிக்கச் சென்றார். நாம் எந்த அவசர வேலைகளின் நடுவில் இருந்தாலும், ஜெபத்தை மிக முக்கியமாக எண்ணி அதற்காக நம்மை தனியாகப் பிரித்துக்கொள்ள வேண்டிய தேவையை இந்த சம்பவம் நமக்கு வற்புறுத்து கின்றது. நம்முடைய தனிப்பட்ட வாழ்க்கையோடு சம்பந்தப்பட்ட அலுவல்களாயினும் சரி, ஊழிய அலுவல்களாயினும் சரி, தேவனோடு தனித்திருப்பதற்கு நம்மை பிரித்துக்கொள்ள வேண்டியது மிகவும் தேவையாயிருக்கின்றது.

சில நேரங்களில் நம்மைச் சுற்றிலும் சிலர் இருக்கும்போது ஜெப வேளைகளை எளிதாக நழுவிச் செல்ல விட்டுவிடுகிறோம். ஊழியம் முழுவீச்சில் நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது, ஜெபங்களை சாதாரணமாகத் தவிர்த்து விடுகிறோம். நம்முடைய ஜெப ஆர்வமற்ற சேம்பேறித்தன மனநிலைகளுக்கு சாக்குப் போக்காக சூழ்நிலைகளை எடுத்துக்கொள்கின்றோம். ஆனால், ஏதாவது ஒன்றை மிக முக்கிய மானதாக எண்ணும்போது, சூழ்நிலைகள் எப்படியிருந்தாலும் அதற்கென்று ஒரு ஆர்வமான நடவடிக்கையை எடுத்துத்தான் ஆகவேண்டும்.

நம்முடைய வீட்டிற்கு விருந்தினர்கள் வரும்போது நம்முடைய ஜெப நேரங்களில் நாம் உறுதியாயிருப்பதை அவர்கள் பார்க்க முடிகிறதா? எத்தனைபேர் நம்மை சுற்றிலும் சூழ்ந்திருந்தாலும் நமக்குத் தேவனுடைய ஐக்கியம்தான் மிக முக்கியமானது என்ற உணர்வு நமக்கு வேண்டும். அந்த உணர்வைப் போராடி தக்க வைக்கா விடில் ஆவிக்குரிய வாழ்க்கை வலுவிழந்தும், வாசமிழந்தும் போவதைத் தவிர்க்க முடியாது.

சிந்தனைக்கு...

ஜெபம் நம்மை தேவனுக்குக் காண்பிக்கிறது.
வேத தியானம் தேவனை நமக்கு காண்பிக்கிறது.

ஜூலை 9
வல்லவரும் ஆலோசகரும்

லூக்கா 11:1-10

உம்முடைய சித்தம் செய்யப்படுவதாக............
லூக்கா 11:2

அநேகர் தேவனுடைய வல்லமையைத் தேடுகின்றவர்களாக இருக்கின்றார்களேயன்றி, தேவ சித்தத்தைத் தேடுகிறவர்களாகயில்லை. தங்களுக்காக எதை வேண்டுமானாலும் தேவன் சாதித்துத் தரமுடியும் என்று விசுவாசித்து, தங்களுடைய காரியத்தை நிறைவேற்ற ஆசைப்படுகின்றார்கள். ஆனால், தங்களுடைய வாழ்க்கையிலே தங்களின் விருப்பங்களின் மத்தியில் தேவ சித்தம் எது என்பதை அறிய விரும்புவதில்லை. சிலநேரங்களில் நம்முடைய மனவிருப்பங்கள் விஷயத்தில் தேவன் ஏன், எதற்கு எப்படி என்று கேள்வி கேட்காமல் அப்படியே ஆசீர்வதிக்க வேண்டும் என்று நாம் ஆசைப்படுகின்றோம். ஆனால் தேவனை அவருடைய வல்லமைக்காக மட்டுமன்றி, ஆலேசானைகளுக்காகவும் தேட வேண்டும். எதையாவது தேவனிடமிருந்து பெற்றுவிட வேண்டும் என்று தீவிரப்படும் முன்பு, எது தங்களுக்கு நலமானது என்று தேவன் நினைக்கின்றார் என்பதையும் அறிந்து கொள்ள முற்படவேண்டும்.

ஒரு மருந்துக் கடையில் சென்று ஒரு குறிப்பிட்ட மருந்தைக் கேட்டுப்பெற்றுக் கொள்ள முடியும். ஆனால், ஒரு மருத்துவரிடம் போனால் குறிப்பிட்ட விதமான மருந்தைத் தரும்படி கேட்க முடியாது. அவர் நம்முடைய சரீர நிலையைச் சோதித்து, அதற்குரிய மருந்துகளைத் தருவதற்கு அவரை நாம் அனுமதித்தாக வேண்டும். வெளிநாடு போக விரும்பிய ஒருவர் அது நிறைவேறும் என விசுவாசித்தார். அதற்காக ஜெபித்தார். உபவாசித்தார். ஆயினும், வெளிநாடு போகும் விஷயத்தில் கர்த்தருடைய சித்தம் என்னவென்பதை அறிய விரும்பவில்லை. அவர் விசுவாசித்தபடி நடவாமல் போனபோது அதிகமாக மனவருத்தமடைந்தார்.

படிப்பு, வேலை, திருமணம், வியாபாரம் எதுவாயினும் தேவனே இதனை ஆசீர்வதியும் என்று கேட்கும் முன்பு, இந்த விஷயத்தில் உம்முடைய சித்தம் எதுவாயினும், அதனை வெளிப்படுத்தும் என்றும் கேட்க வேண்டும். தேவன் வல்லமையாளர் மட்டும் அல்ல. அவர் நம்முடைய ஆலோசகரும்கூட. அவருடைய ஆலோசனையைத் தேடுகின்றவர்களுக்கே அவருடைய வல்லமையும் வெளிப்படும்.

எங்கே தேவனுடைய ஆலோசனைகள், முக்கியமாக எண்ணப்பட்டுத் தேடப்படுகிறதோ அங்கேதான் தேவன் தம்முடைய பலத்தையும் பராக்கிரமத்தை வெளிப்படுத்துகிறார். மீதியானியர்களை எதிர்க்க வேண்டிய விஷயத்தில் கிதியோன் தேவ ஆலோசனையை கரிசனையாகக் கேட்டுப் பெற்றுக் கொண்டான். எனவே, ஒரு சிறு கூட்டமாக மீதியானியர்களை அவர்கள் எதிர்க்கச் சென்ற போதிலும், தேவன் அவர்களுக்காக நின்று தம்முடைய வல்லமையினால் மாபெரும் வெற்றியைக் கொடுத்தார்.

சிந்தனைக்கு...

இறைவனைத் தங்களுக்குள் காணும் கண்களை உடையவர்கள் இறை சித்தத்தை கேட்கும் காதில்லாதவர்களாக இருப்பதில்லை

ஜுலை 10

25-வது சுற்றில்

எபிரெயர் 10:32-39

உங்கள் தைரியத்தை விட்டு விடாதிருங்கள்...
எபிரெயர் 10:35

1992-ம் ஆண்டு சியோல் நகரில் உலக ஜுனியர் தடகளப் போட்டி நடந்து கொண்டிருந்தது. 25 சுற்றுகளில் 10,000 மீட்டர் ஓட வேண்டும். கென்யாவின் ஜோஸ்பட் மசூக்காவும், எத்தியோப்பியாவின் கெப்ரசெலாசியும் ஓடிக் கொண் டிருந்தனர். கெப்ரெ செலாசியால் 24 சுற்றுகளிலும் மசூக்காவை முந்தி ஓட முடிய வில்லை. ஆனால் 25-வது சுற்றில் இன்னும் 400அடிகள் மட்டும் மிஞ்சிய நிலையில் கெப்ரெசெலாசி மசூக்காவை முந்தி ஓடி தங்கப் பதக்கம் வென்றார். 24 சுற்றுகளில் கிடைக்க வாய்பில்லாதிருந்த வெற்றி 25-வது சுற்றில் கிடைத்தது.

மனந்தளராமை, இடையில் நின்றுவிடாமை, இறுதிவரை ஓடிப்பார்ப்பதில் சோர்ந்துவிடாமை போன்றவை வாழ்க்கையில் வெற்றிப் பயணங்களுக்கு மிகவும் முக்கியமானவை. தேவ கிருபையாலும், தேவ பலத்தாலும் நாம் உயர்ந்த இலக்குகளை எட்ட முடியும், தேவன் எதனை முக்கியம் என்றாரோ அதனை நாம் நிச்சயம் எட்ட முடியும். தேவன் அடைய முடியும் என்று சொன்னதை நாம் நிச்சயம் அடைய முடியும். ஆனால், அவை முதல் சுற்றிலேயே வந்து விடும் என்று கூற முடியாது. ஒருவேளை கெப்ரெசெலாசியைப் போல பல ரவுண்டுகள் நம்பிக்கையிழக்காமல் ஓட வேண்டியது அவசியம். சிலவேளை அது நடப்பதற்கு இனி வாய்ப்பே இல்லை என்று எண்ணத்தக்க நிலைமைக்கு வந்த பின்னர்கூட நடக்கமுடியும்.

ஒரு குழந்தைக்காக, நம்பிக்கையோடும் விசுவாசத்தோடும் எத்தனை ஆண்டு கள்தான் காத்திருப்பது, என்று யோசிக்கத்தக்க நிலையை ஆபிரகாம் அடைந்தான். ஆனால், அது நடக்கவே செய்தது. எத்தனை முறைதான் இந்தப் பார்வோனிடம் போய் விடுதலைக்காகப் போராட முடியும் என்று மோசே சோர்ந்து போவதற்கு வாய்ப்பிருந்தது. ஆயினும், தேவனால் நடத்தப்பட்ட மோசே தேவன் சொன்ன படியே சாதித்தான்.

இதற்குமேல் இனி இல்லை என்ற புள்ளிக்கு வந்த பின்னரும் வெற்றிக்கான வாய்ப்பைப் பெறமுடியும். தேவனால்தான் வெற்றிகள் வருகின்றது என்பது உண்மையாயினும் தளராத விசுவாசம், குன்றாத முயற்சி, குறையாத வேகம் ஆகியவற்றின் துணையோடுதான் அது வந்து சேரும். உண்மை, ஒழுக்கம், கட்டுப் பாடு, கொள்கை, உயர்ந்த நற்குணங்கள், பொறுமை ஆகிய விஷயங்களில்கூட வெற்றி என்பது முதல் ரவுண்டிலே வந்துவிடாது. ஆனால், வராமலும் போகாது. ஏனென்றால், தேவன் அது முடியும் என்று சொல்லியிருக்கின்றார். எனவே, அடையும் வரை ஓடுவதே அதன் எல்லை.

சிந்தனைக்கு...

வெற்றி உன்னைத் தேடிவராது. ஆனால் நீ தேடினால் வராமலும் போகாது.

ஜுலை 11

சிரமமும் சந்தோஷமும்

அப்போஸ்தலர் 20 : 17-28

அவைகளில் ஒன்றையுங் குறித்துக் கவலைப்படேன்.
அப்போஸ்தலர் 20 : 24

ஆப்பிரிக்க நாடுகள் ஒன்றிற்கு மிஷனரியாகச் சென்ற ஒருவர் பலவிதமான அசௌகரியங்களுக்கு நடுவிலும், குறைவுகள் மத்தியிலும் சிரமத்தோடு ஊழியம் செய்தார். சொந்த நாட்டிற்குத் திரும்பிச் சென்று சௌகரியமான சூழ்நிலை களில் வாழ்வதற்கு வாய்ப்பிருந்தும், அந்த ஆப்பிரிக்க நாட்டில் சிரமங்களோடு ஊழியம் செய்வதையே தெரிந்து கொண்டார். ஒருமுறை அவரிடம் ஒருவர் "நீங்கள் மிக மிகத் தியாகமான ஓர் பணியைச் செய்கிறீர்கள்" என்றார். அதற்கு அவர், "அப்படி இருக்கலாம். ஆனாலும், நான் ஒரு சுயநலத்தின் பின்னணியில்தான் இதைச் செய்கிறேன்" என்றார். ஆச்சரியப்பட்ட மற்றவர் "சுயநலமா?" என்று கேட்டார்.

"ஆம். சுயநலம்தான். இவ்விதம் சிரமமாகப் பணி செய்வதால் எனக்குள் மிகுதி யான ஒரு சந்தோஷமும், திருப்தியும், சமாதானமும் கிடைக்கிறது. அவைகளை விட்டுவிட மனமின்றிதான் இவ்விதம் தொடர்ந்து பணி செய்கிறேன் என்றார்" அந்த மிஷனரி.

கர்த்தருக்காக உண்மையும் உத்தமுமாய் வாழ்வது சிரமமானதுதான். கர்த்தருடைய பணியைச் செய்வது சிரமமானதுதான். விட்டு விலகாமல் வாழ்வது சிரமமானதுதான். ஆனால், இவைகளுக்குப் பின்னால் ஒரு பெரிய சந்தோஷமும், நிறைவும், திருப்தியும், சமாதானமும் உள்ளது. அவைகள் இல்லையென்றால் யாரும் கர்த்தருக்காகத் தொடர்ந்து வாழவோ, ஊழியம் செய்யவோ முடியாது.

ஆண்டவராகிய இயேசுவும், அப்போஸ்தலனாகிய பவுலும் மிகவும் சிரம மும், கடுமையுமான ஒரு தேவப் பணியையே செய்தனர். ஆயினும், அவைகள் அவர்களுக்குள் மிகப் பெரிய சந்தோஷத்தைக் கொடுத்தன. அவர்கள் தங்கள் சிரமமான பணிகளின் நடுவில் ஆறுதல், சமாதானம், திருப்தி. நம்பிக்கையுணர்வு ஆகியவற்றை அனுபவித்தனர். அப்போஸ்தலனாகிய பவுல் தன்னுடைய ஊழியச் சூழ்நிலைகள் எவ்வளவு சிரமங்கள் நிறைந்தது என்பதை விவரித்தாலும், அவைகளின் நடுவில் தான் சந்தோஷத்தோடு அவைகளைச் செய்ததையும் விவரிக்காமலிருக்க வில்லை.

கர்த்தருடைய வார்த்தைகளின்படி வாழ்கின்றபோதும், அவருக்காக ஊழியம் செய்யும்போதும் உலகம் தர முடியாத ஒரு பெரிய சந்தோஷமும் மன நிறைவும் உண்டு. அவைகளை அனுபவித்துப் பழகியவர்கள் சிரமங்களை ஒரு பொருட்டாக எடுத்துக்கொள்வதில்லை. ஏனென்றால், கர்த்தருக்காக வாழ்கின்றவர்களோடு கர்த்தரும் வாழ்கின்றார்.

சிந்தனைக்கு...

உன் வாழ்விற்காக தேவனைத் தேடுவது அல்ல
தேவனுக்காக நீ வாழ்வதே ஆன்மிகம்

ஜுலை 12

மனித உறவுகள் அவசியம்

ஏசாயா 60:1-13

எல்லாரும் உன்னிடத்திற்கு வருகிறார்கள்........
ஏசாயா 60:4

நாம் எந்த மனிதர்களையும் சார்ந்து நிற்கக்கூடாது. யாருடைய உதவியையும் நம்பி வாழக்கூடாது, நம்முடைய முதுகெலும்பு என்று தனிப்பட்ட யாரும் நமக்கு இருக்கக்கூடாது. இவ்விதமாக நான் அடிக்கடி எழுதுவதும், பேசுவதும் உ ண்டு. இதனுடைய நோக்கம் தேவன் ஒருவரே எக்காலத்திலும் சார்ந்திருக்கத்தக்கவர் என்பதையும், மனிதர்களைச் சார்ந்திருப்பது எந்த நேரத்திலும் நம்மை விழ வைத்துவிடக்கூடும் என்பதையும் வலியுறுத்துவதற்காகவே.

அதேவேளையில் எனக்கு தேவன் மட்டுமே போதும், தேவ கிருபை மட்டுமே போதும் என்ற உணர்வோடு மனிதர்களையும் அவர்களின் தயவுகளையும் அசட்டை செய்வது தவறான ஒரு நிலைப்பாடு என்பதையும் வற்புறுத்தத் தவறுவதில்லை. சகாயம் பெறுவது என்பது வேறு. சார்ந்து நிற்பது என்பது வேறு. நாம் எவ்வளவு உயர்நிலையிலும், தன்னிறைவு நிலையிலும் இருந்தாலும் இந்த உலகத்தில் வாழ்கின்ற காலம் வரை நமக்கு மனித உறவுகளும், அவர்களுடைய தயவுகளும் ஏதாவது ஒரு வடிவத்தில் அவசியமே.

நாம் தேவனை மட்டும் சார்ந்து நின்றாலும், தேவன் நம்மை தாங்குகின்ற ஆதரிக்கின்ற வேலைகளை மனிதர்கள் மூலமாகவே செய்கின்றார். எலியா தேவனை மட்டும் சார்ந்து நிற்கப் பழகியவன்தான். ஆனால் எலியா ஆதரிக்கப்பட்ட ஒரு சாரிபாத் விதவை தேவைப்பட்டாள். தாவீது தேவனை மட்டுமே தன்னுடைய துணையாகக் கொண்டு விசுவாசத்தோடு வாழ்ந்தவன். ஆயினும், அவன் அநேகரோடு ஐக்கியம் கொண்டு தனக்கு உதவியாக ஒரு கூட்டத்தை ஏற்படுத்திக் கொண்டவன். ஆனால், அவன் அவர்களையே நம்பியிருக்கவில்லை. சிக்லாக் என்ற இடத்தில் அவனோடிருந்தவர்கள் அவனுக்கெதிராக எழுந்த நேரத்திலும் அவன் நிலைகுலையவில்லை. அதற்குப் பதிலாக கர்த்தருக்குள் தன்னைத் திடப்படுத்திக் கொண்டான். ஆம். மனிதர்களோடு அவன் இருந்தான். ஆயினும், தேவனையே சார்ந்து நின்றான்.

மனித உறவுகளுக்கும் நாம் போதிய முக்கியத்துவத்தைக் கொடுக்க வேண்டும். ஒரு திருமணமாயினும், வேறு பல நல்ல காரியங்களாயினும், ஒரு கஷ்ட நஷ்டம ாயினும் நோய்வாய்படும் நேரமாயினும் நமக்கென்று நாலு பேர் நிற்பதைக் காணும் போது அது ஒரு அவசியமான வலிமையே. சிலர் நல்ல மாதவருவாய் இருந்தாலே போதும், எனக்கு யார் தயவும் வேண்டாம் என்று தங்களை தனி உலகமாக மாற்றிக்கொள்வார்கள். இயேசுவோடு நடக்க பன்னிரெண்டு பேர் இருந்தனர். நம்மோடு நடக்கவும் சிலர் வேண்டும்.

சிந்தனைக்கு...

மனிதர்களைச் சார்ந்திருப்பது நல்லதல்ல.
ஆனாலும் அவர்களோடு சேர்ந்திருப்பது தீயதல்ல.

ஜுலை 13

கேள், செயல்படு

11 சாமுவேல் 6:1-4

அவர்கள் தேவனுடைய பெட்டியை ஏற்றி.....
11 சாமுவேல் 6:4

சிலர் எதையும் கேட்க விரும்புவதில்லை. எல்லாவற்றையும் செயலில் காட்ட வேண்டும் என்பதே அவர்களின் கொள்கை. சிலர் மிகுதியாகக் கேட்டறிய விரும்புவார்கள். ஆனால், எதையும் செயல்படுத்திக் காட்ட முன்வரமாட்டார்கள். சபைக்குச் சென்று வந்த விசுவாசி ஒருவர், தான் அன்று சபையில் கேட்ட பொறுமையைக் குறித்த நல்ல பிரசங்கத்தைக் குறித்து குடும்பத்தாரோடு பேச ஆரம்பித்தார். ஆனால், யாரும் அவர் சொல்வதை செவிகொடுத்துக் கேட்கவில்லை. எனவே, பொறுமையிழந்த அவர் கன்னா பின்னா என்று கடுங்கோபத்தில் கத்த ஆரம்பித்தார்.

நன்றாகச் செயல்பட, நன்றாக முதலில் கேட்க வேண்டும். நன்றாகக் கேட்டவற்றை நன்றாகச் செயலில் காட்ட வேண்டும். சிலருக்கு கேட்டுக் கொண்டேயிருப்பதுதான் பக்தி. எங்கே பிரசங்கம், எங்கே வேத விளக்கம் என்று அவர்கள் இடைவிடாமல் கேட்டுக் கொண்டேயிருப்பார்கள். ஆனால், அவர்கள் தாங்கள் கேட்டதை செயல்களில் பிரதி பலித்துக் காட்டுவதைப் பற்றி நினைப்பதேயில்லை. சிலர் எதையும் கேட்டுத் தெரிந்து கொள்வதில்லை. இவர்களுக்கு செயல்தான் முக்கியம். ஆனால், இவர்கள் தங்களின் செயல்களால் தங்களுக்குள் திருப்திபட்டுக்கொண்டபோதிலும், அவற்றால் தேவன் மகிமைப்படவில்லை என்பதை அறிவதில்லை.

தேவனுடைய உடன்படிக்கைப் பெட்டியை எருசலேமுக்குக் கொண்டு வர, தாவீது விரும்பினான். நல்ல சிந்தனைதான். நல்ல ஆசைதான். ஆனால், அது தொடர்பான தேவனுடைய நியமங்கள் எதையும் அவன் கேட்டுத் தெரிந்து கொள்ள விரும்ப வில்லை. செயல்படுவதில் அதிக அவசரமும், ஆர்வமும் காட்டினான். ஆனால், மிகுந்த ஆர்வத்தோடும், ஆசையோடும் செயல்பட்ட அவனுக்கு துக்கமும், விசனமுமே விளைவாகக் கிடைத்தது. ஏனென்றால், எதையும் சரியாகக் கேட்காமல் செயல்பட முந்தினால் அப்படித்தான். செயலில் வேகம் காட்டிய அவன், அது தொடர்பான வேத நியமங்களைக் கேட்கும் விவேகத்தை மறந்து போனான்.

சில விசுவாசிகள் வாரி வாரி ஊழியங்களுக்கு வழங்குவார்கள். இரவு பகல் பாராமல் ஊழியம் ஊழியம் என்று ஓடுவார்கள். ஆனால் எதை எப்படிச் செய்ய வேண்டும்? யாருக்குச் செய்ய வேண்டும்? எந்த அடிப்படையில் செய்ய வேண்டும் என்று வேத வார்த்தைகளைக் கவனித்துக் கேட்பதில்லை. எனவே, நல்ல காரியங்கள் பல செய்தும் விளைவோ, மன வருத்தமும், மனச்சோர்வுமே. சில பாஸ்டர்கள் அதிநவீன ஊழிய இயந்திரங்கள். சில நற்செய்தியாளர்கள் இடைவிடாமல் இயங்கும் பிரசங்க இயந்திரங்கள். ஆனால், வேத வழிகளும், தேவ நடத்துதல்களும் தெரியாமல் செயல்படுவதிலேயே முனைப்புக் காட்டுவதால், தேவன் அவர்களால் மகிமைப் படுவதில்லை.

சிந்தனைக்கு...

கர்த்தருக்காகச் சாக விரும்புவது பக்தி.
கர்த்தருக்காக வாழ விரும்புவது புத்தி.

ஜூலை 14
பயம் ஏன்?
சங்கீதம் 46:1-11

பூமி நிலை மாறினாலும் நாம் பயப்படோம்.
சங்கீதம் 46: 2,3

இரவில் ஒரு காட்டுப்பாதை வழியாக ஒரு வாலிபன் தனியாக செல்ல நேர்ந்தது. அங்கே பயம் அவனைப் பற்றிக் கொண்டது. காற்று வீசும் போது ஏற்படும் சத்தமும், மரங்களின் அசைவும், சூழ்ந்திருந்த இருளும் அவனை மிகுதியாகக் கலங்கடித்து விட்டது. ஆனால் இன்னொரு நாள் அதே வாலிபன் அதே காட்டுப் பாதையில் அதே இருளின் நடுவே அதேவித சலசலப்புகளின் நடுவில் போகிறான். ஆனால், அவனிடம் பயம் இல்லை. பதட்டம் இல்லை. மிக ஜாலியாக நடந்து செல்கின்றான். எப்படி அவன் பயத்தை வென்று தைரியத்தைப் பெற்றுக் கொண்டான்? வேறொன்று மில்லை. அவன் தனிமையாய் நடந்தான். இன்றோ தன்னுடைய வலிமை வாய்ந்த உற்ற நண்பனோடு நடக்கின்றான். அதுதான் விஷயம்.

அப்படியானால் இருள் அல்ல. காட்டுப்பாதை அல்ல. மரங்களின் சலசலப்பல்ல. தனிமையாக நடப்பதுதான் பிரச்சினை. அதுதான் பயத்தைக் கொண்டு வருகின்றது. அதுதான் பதட்டத்தை ஏற்படுத்துகின்றது. பூமியே நிலை பெயர்ந்தாலும் நாங்கள் பயப்படமாட்டோம் என்றான் ஒரு வேதாகமக் கால தேவ பக்தன். ஏன்? ரொம்ப தைரியசாலிகளோ? அதுவல்ல காரணம். அவர்கள் சேனைகளின் கர்த்தர் தங்க ளோடிருக்கின்ற நிச்சயத்தை உடையவர்கள். அந்த ஐக்கியத்தைக் குறித்த நிச்சயம் மிக பயங்கரமான நிலமைகள் ஏற்பட்டால்கூட பயப்படமாட்டோம் என்ற நம் பிக்கையைக் கொடுத்தது.

நாம் அமைதியாகவும் மனரம்மியமாகவும் வாழ்ந்திட சூழ்நிலைகள் மாற வேண்டும் என நினைக்கின்றோம். இல்லையேல் பயத்தை நம்மைவிட்டு துரத்த ஏதாவது செய்ய வேண்டும் என நினைக்கின்றோம். ஆனால் இந்த உலக வாழ்க்கை யில் நாம் விரும்பியவிதமான அமைதிக்கேற்ற சூழ்நிலைகள் அமையும் என எதிர்பார்க்க முடியாது. சில நேரங்களில் வாழ்க்கையில் இருள் போன்ற சூழ்நிலை களும், சலசலப்புகளும் தவிர்க்க முடியாதவைகள். அங்கே சுயமனவலிமை சார்ந்து பயத்தை விரட்டி விடவோ, பதட்டத்தைத் துரத்தி விடவோ முடியாது. நாம் இந்த சூழ்நிலையில் தனிமையாக இல்லை, தகுந்த ஒரு துணையோடு இருக்கின்றோம் என்ற நம்பிக்கைக்கு ஏதுவானவைகளைச் செய்வதே உரிய தீர்வு.

கர்த்தரோடு நம்மை இணைத்துக்கொள்வதும், அவருடைய ஐக்கியத்தை நமக்குள் உறுதிபடுத்திக்கொள்வதுமே நாம் செய்யவேண்டியவைகள். அப்போது நாமும் நான் மரண இருளின் பள்ளத்தாக்கில் நடந்தாலும் பொல்லாப்பிற்குப் பயப்படேன் தேவரீர் என்னோட கூட இருக்கிறீர் என்று சொன்ன தாவீதைப் போல தைரியமாய்ச் சொல்ல முடியும்.

சிந்தனைக்கு...

பிரச்சினைகள் ஒரு நாய் போன்றது. அது பயந்து ஓடுகிறவனை வேகமாக துரத்தும்.

ஜுலை 15

குற்ற உணர்வு

யோனா 1:1-17

தன்தன் தேவனை நோக்கி வேண்டுதல் செய்து ...
யோனா 1:5

யோனா சென்ற கப்பலை பெருங்காற்று தாக்கியது. உயிருக்கு ஆபத்துவரப் போகிறதோ என்ற அச்சத்தினால் கப்பலில் பயணம் செய்த யாவரும் இறை வேண்டல் செய்தார்கள். அவர்களின் மத நம்பிக்கைகள் சரியாயிராவிட்டாலும் கடவுளை நோக்கி பிரார்த்தனை செய்வது என்ற எண்ணமாவது அவர்களுக்கு இருந்தது. ஆனால், சரியான தேவ பக்தியாளனாகிய யோனாவோ பிரார்த்தனை செய்திட முன்வரவில்லை. பிரார்த்தனையில் அதிக நம்பிக்கை வைத்து இறைவேண்டல் செய்ய வேண்டியவன் சும்மா இருந்தான். சாவதற்கும் துணிந்த அவன் இறை வேண்டல் செய்யவோ முன்வரவில்லை.

ஏனென்றால், குற்ற மனசாட்சி தேவனை நோக்கிப் பார்க்க விடாமல் அவனைத் தயங்கி நிற்க வைத்தது. தேவனுக்குக் கீழ்ப்படியாமல் வழிவிலகிச் செல்கின்ற அவனால் தேவனை நோக்கி நம்பிக்கையோடு பார்க்க இயலவில்லை. எந்த முகத்தோடு தேவனை நோக்கி மன்றாடுவது என்ற எண்ணம் அவனுக்கு ஏற்பட்டிருக்கும். தேவன் சொல்லாத ஒரு திசையை நோக்கிப் பயணம் செய்யும் போது, அவருடைய உதவியை எப்படிப் பெற முடியும் என்ற கேள்வி அவனுக்குள் வந்திருக்கும்.

ஆம், தேவனோடுள்ள உறவுகளில் நாம் சரியாக இல்லையென்றால் ஆபத்தான வேளைகளில் தைரியத்தோடு அவரை நோக்கிப் பார்க்க நம்மால் முடியாது. தேவன் விதித்த வழிகளை விட்டு விலகிச் சென்று கொண்டிருக்கும் போது, வாழ்க்கையில் சோதனைக் காற்று வீசினாலும் நம்பிக்கையோடு ஆண்டவரை நோக்கிப் பார்க்க மனம் இடம் தராது. தேவன் நமக்கு உதவி செய்ய ஆயத்தமாயிருந்தாலும், நமக் குள்ளிருக்கும் குற்ற உணர்வுகள் அவரை நம்புவதற்கான உணர்வுகளை நாச மாக்கிவிடும்.

நம்முடைய வாழ்க்கை தேவனுக்கு முன்பாக குற்றமற்றது என்ற நம்பிக்கை கிடைக்கின்ற அளவிற்கு நாம் தேவனோடு நெருங்கி வாழ வேண்டும். அப்போது எந்தச் சோதனை வந்தாலும் மனதிற்குள் கர்த்தர் பார்த்துக்கொள்வார். கர்த்தர் கைவிடமாட்டார் என்பது போன்ற நம்பிக்கை வலிமையாயிருக்கும். ஆனால், குற்ற உணர்வும் மேற்கொள்ளப்பட வேண்டிய ஒன்று. பத்சேபாள் விஷயத்தில் தாவீதை அதிகமாகத் துன்புறுத்தியது குற்ற உணர்வுதான். எனவே, தேவனிடம் கெஞ்சி மன்றாடி தனக்குள் சுத்த இருதயத்தை ஏற்படுத்த ஜெபித்தான். அதன் விளைவாகவே 51-ம் சங்கீதம் பிறந்தது.

சிந்தனைக்கு...

தவறை உணர்கின்றவன் வெற்றிக்கு அஸ்திபாரமிடுகிறான்,
திருத்திக் கொள்கிறவனோ அதைக் கட்டி எழுப்புகின்றான்.

ஜூலை 16

தேவனை அறிதல்

11 தீமோத்தேயு 1:1-14

நான் விசுவாசித்திருக்கிறவர் இன்னார் என்று அறிவேன்.
11 தீமோத்தேயு 1:12

இனிவரப் போகும் காலங்கள் எப்படிப்பட்டவை என நிச்சயமாகக் கூற இயலாது. கிறிஸ்தவப் போதனைகளும், வேதாகம சம்பவங்களும் கற்பனையானவை என்றும், கிறிஸ்தவம் ஒரு கற்பனை மார்க்கம் என்றும் மிகத் திறமையாக வாதத் திறமையால் விளக்கிக் கூற பலர் எழும்பலாம். வேதாகமம் பொய்யானது என்று வெகு ஜனங்களை நம்பவைக்க இயன்ற பலர் எழும்பலாம். வேதாகம உண்மைகளும் சம்பவங்களும் உண்மைதான் என்று இறையியல் ரீதியாக விளக்கிக் கூறி நிரூபிக்க இயலாத காலம் வரலாம். வேதாகம விஷயங்கள் உண்மையானவை என்று நிரூபித்துக் கூற இயலாமல் போகும் ஒரு காலம் வந்து, எல்லோரும் கிறிஸ்தவம் கற்பனையானது என்று முடிவுக்கு வரும்போது, நான் எவ்விதமாக அந்த நேரத்தில் இருப்பேன் என்ற கேள்வி எனக்குள் வந்தது.

அந்த வேளையிலும் நான் கிறிஸ்தவம் உண்மை என்றும், கிறிஸ்து ஒரு கற்பனைக் கடவுள் அல்ல என்றும் உறுதியாகச் சொல்வேன். வேதாகம உண்மைகளை இறையியல் ரீதியாக விவரித்து விளக்கி நிரூபிக்க என்னால் இயலாமல் போகலாம். ஆனால், வேதாகமம் கூறுகின்ற கிறிஸ்து எனக்குள் இருப்பதையும், வேதாகம சத்தியங்களின் அடிப்படையில் என்னை நடத்துவதையும் நான் அறிவேன். அதனை யாரால் பொய் என்று காட்ட இயலும். மூளை என்ற ஒன்றே கிடையாது என்று ஒருவர் சாதித்துக் காட்டலாம். ஆனால், எனக்குள் இருக்கின்ற மூளையை நான் அறிவேனே. அந்த மூளை இருப்பதனால் நடைபெறும் நல்ல விளைவுகளையும் நான் அறிவேனே. எனவே, மூளை என்பது வெறும் கற்பனை என்று ஒருவர் கூறிச் சாதித்தாலும், எனக்குள்ளிருக்கும் ஒரு உண்மையை நான் ஆயிரம் முறை சொல்ல முடியுமே.

அதுபோலவே, முழு வேதாகம உண்மைகளையும் கற்பனை என நிரூபிக்க இயன்ற சிலர் வந்தால்கூட, வேதாகமம் கூறுகின்ற கர்த்தரைக் குறித்த உண்மையை ஒருவருடைய உள்ளத்தை விட்டுப் பிரிக்க முடியாது. கர்த்தரை ஒரு மனிதன் அறிவுப்பூர்வமாக அறிவது அல்ல. மனிதன் கர்த்தரை தனக்குள் இருப்பவராக, தனக்குள் செயல்படுகின்றவராக, தம்மைத் தனக்கு வெளிப்படுத்துகின்றவராகக் காண முடியும். தேவனை அறிந்த ஒரு மனிதனை அந்த அறிவைவிட்டுப் பிரிக்க முடியாது. கிறிஸ்துவைக் குறித்த உண்மைகளை வேதாகம அறிவுரீதியாக விளக்கவும், விவரிக்கவும் முடியாத காலம் வரலாம். ஆனால், வேதாகமம் கூறுகின்ற கர்த்தரைக் குறித்த தனிப்பட்ட அறிவினை உண்மை என்று உறுதியாகக் கூற இயலும்.

சிந்தனைக்கு...

தேவனோடு நடக்க நீ ஆயத்தமாயிருந்தால்
உன்னோடு அவர் நடப்பதை உணர்ந்து கொள்வாய்.

ஜூலை 17
கோபம் மட்டுமல்ல

எபேசியர் 4:17-32

நீங்கள் கோபங்கொண்டாலும்...
எபேசியர் 4:26

நான் தொடர்ந்து கர்த்தருடைய வார்த்தைகளைப் பிரசங்கித்த ஒரு சிறு கூட்டம் விசுவாசிகள் உண்டு. ஒரு நாள் அவர்களிடம் "இதுவரையிலும் நீங்கள் கேட்ட போதனையினால் உங்களிடம் ஏற்பட்ட மாற்றங்கள் என்னவென்று சொல்ல முடியுமா?" என்று கேட்டேன். சிலர் எழுந்து தங்களிடம் ஏற்பட்ட மாற்றங்களைக் குறித்துச் சாட்சியாகச் சொன்னார்கள். அந்த சாட்சிகள் மிக நல்ல சாட்சிகள். ஆனாலும், எனக்குப் பெரிய திருப்தி வரவில்லை.

ஏனென்றால், அவர்களில் பலரும் கோபம் என்ற விஷயத்தில் ஏற்பட்ட மாற்றங்களையே அதிகமாகச் சொன்னார்கள். கோபம் என்ற சுபாவம் பல தீமைகளுக்குக் காரணமாயிருப்பது உண்மை. ஆயினும், பெரும்பாலும் கோபம் மட்டுமே பெரிய பாவமாக அநேகரால் அடையாளங் காணப்படுகிறது.கோபம் என்பது மனிதனுக்கு மிகவும் அவசியமான ஒரு குணமே. கோபம் இல்லாதவன் நல்லது கெட்டதுகளைக் குறித்த உணர்ச்சியற்றுப் போய்விடுவான். ஆனால், கோபம் எல்லைகளைத் தாண்டினால் பல தீமைகளை விளைவாகக் கொடுக்கும்.

சிலர் எளிதாகக் கோபமடையமாட்டார்கள். தங்கள் வாயினாலோ, வார்த்தையினாலோ கோபத்தை வெளிப்படுத்தமாட்டார்கள். ஆனால், அந்தக் கோபத்தை மறைமுகமாக வேறு பல வழிகளில் மௌனமாக வெளிப்படுத்தி, மற்றவர்களை வித்தியாசமான விதங்களில் விசனப்படுத்துவார்கள். கோபம் மட்டுமே பாவம் என எண்ணக் கூடாது. தாழ்மையின்மை பாவம்தான். பண ஆசை பாவம்தான். பொருளாசை பாவம்தான். ஆடம்பரம் பாவம்தான். தீமைக்கு எதிரான சிந்தனை இல்லாமை பாவம்தான். சத்தியத்திற்கு உரிய முக்கியத்துவம் தராமை பாவம்தான். பிறருக்குச் சில உதவிகளைச் செய்யாமை பாவம்தான். கோபப்படாவிட்டாலும் மனதிற்குள் அடக்கி, மௌனமாகக் கசந்து கொண்டிருப்பது பாவம்தான். பிறர் எளிதாகக் கோபமடையும் விதமாகப் பேசுவதும், செயல்படுவதும் பாவம்தான்.

ஆம், கிறிஸ்தவ வாழ்க்கையின் வல்லமையை, கோபத்தை மேற்கொள்வதற்காக மட்டுமே பார்க்கக் கூடாது. கோபத்தினால் கன்மலையை அடித்தான் மோசே. அதை தேவன் விரும்பவில்லை. ஆனால், சாந்த குணத்திற்காகப் பாராட்டப்பட்ட ஒருவனை, கோபமடைய வைத்த இஸ்ரவேல் ஜனங்கள் செய்ததும் பெரிய பாவமே. கோபத்தை மட்டுமே ஆவிக்குரிய வாழ்க்கையின் அளவு கோலாக எண்ணாமல், உண்மை, நேர்மை, நியாயம், மனப்பக்குவம், நன்மை செய்தல் ஆகிய எல்லாப் பக்கங்களையும் பார்க்க வேண்டும்.

சிந்தனைக்கு...

வேதமும் தியானமும் உனக்குத் தூரமாயிருந்தால்
பயமும் கவலையும் உன் பக்கத்தில் இருக்கும்.

ஜூலை 18

பாவத்தை மறைக்காமல்

1 யோவான் 1:1–10

நமக்குப் பாவமில்லையென்போமானால்...
1 யோவான் 1:8

நண்பர் ஒருவருக்கு சர்க்கரை நோய் வந்தது. ஆனால், தனக்கு சர்க்கரை நோய் இருப்பதைப் பிறர் அறிந்து கொள்வதை அவர் விரும்பவில்லை. எனவே, எந்த மருத்துவ சிகிட்சைக்கும் போகவில்லை. உணவுப் பழக்கத்தில் எந்த மாற்றத்தையும் செய்யவில்லை. ஒரு முறை அவருடைய காலில் ஒரு சிறு காயம் ஏற்பட்டது. அவர் ஒரு களிம்பைத் தடவி அதனை சரி செய்ய முயன்றார். அந்தப் புண்ணோ ஆறாமல் பெரிதாகி, இறுதியில் மருத்துவமனை செல்ல நேரிட்டது. எல்லாருக்கும் அவருடைய சர்க்கரை நோய் விஷயம் தெரிந்து போய்விட்டது.

சிலர் பாவத்திலிருந்து எந்த விடுதலையையும் அடையாதவர்களாகவே இருப்பார்கள். ஆனால், தங்களின் பாவ நிலமை யாருக்கும் தெரியக் கூடாது என்று எண்ணி, மனந்திரும்பியவர்கள் போலும், பரிசுத்தமாக வாழ்கின்றவர்கள் போலும் தங்களை காட்டிக்கொள்ள அதிகக் கவனமாயிருப்பார்கள். சாதாரணச் சூழ்நிலைகளில் அவர்கள் எந்தக் குறையும் இல்லாத பரிசுத்த ஜனங்களாகவே காணப்படுவார்கள். ஆனாலும், அவர்களின் உள்ளான பாவநிலை, அதிக நாள் மறைந்திராது. அவர்களின் பரிசுத்த வேடம் திடீரென்று கலைந்துபோகும்.

பிரச்சினை வராதவரை நன்றாகயிருக்கும். ஆனால், சோதனைகள் வரும் போதும், யாராவது அவர்களின் உணர்வுகளைச் சீண்டும் விதமாக நடந்து கொள்ளும்போதும், இச்சையைத் தூண்டத்தக்க நேரங்கள் வரும் போதும், அவர்களின் மறைவான பாவ நிலமை வெளியரங்கமாகும். ஆம், நாம் நம்முடைய மனந்திரும்பாத பாவ நிலையை அதிகமாக அடக்கி மறைத்து வைக்க முடியாது. சூழ்நிலை மாறும்போது கோபமும், எரிச்சலும், பொறாமையும், பேராசையும், வைராக்கியமும் நம்முடைய உள் நோயைக் காட்டிக் கொடுத்துவிடும். யூதாஸ் நீண்ட காலம் இயேசுவின் சீடனாகவே இருந்தான். ஆயினும், அவன் பொருளாசைக்கு அடிமையாயிருந்தான். நீண்டகாலம் அது மறைந்திருந்த போதிலும், நேரம் வந்த போது அது வெளியரங்கமாகியது.

சிலர் தங்களின் பாவ நிலைகளை மறைப்பார்களேயன்றி அவைகளை மாற்றுவதற்கு உரிய ஆவிக்குரிய வழிகளைத் தேடமாட்டார்கள். அவர்கள் ஜெபம், ஆராதனை, ஊழியம், காணிக்கை, எனப் பல ஆவிக்குரிய செயல்களினால் தங்களுடைய உள்ளான பாவ நிலமையை மறைப்பார்கள். ஆயினும், உண்மையான மனந்திரும்புதலின் மூலமாகவும், இரட்சிப்பின் அனுபவத்தைத் தேடுவதின் வாயிலாகவும் பாவத்தின் கட்டிலிருந்து வெளியே வரமாட்டார்கள்.

சிந்தனைக்கு...

உன்னை நல்லவனாகக் காண்பிப்பது எளிது. உன்னிடம் நல்லவைகளைக் காண்பிப்பதுதான் அரிது. அரிதானதைச் செய்

ஜுலை 19
சுபாவங்களே காரணம்
யாக்கோபு 4:1-10

உங்கள் அவயவங்களில் போர் செய்கிற இச்சைகளினாலல்லவா.
யாக்கோபு 4:1

பெரும்பாலும் மனிதன் வாழ்க்கையில் சந்திக்க நேரிடும் பல துன்பங்களுக்கு மூல காரணம் அவனிடம் உள்ள தவறான சுபாவங்களே. மனிதன் தன்னுடைய வாழ்க்கையில் காண நேரிடும் விசனம் மிக்க பல பிரச்சினைகளின் உண்மையான காரணங்களை நேர்மையாகச் சோதித்துப் பார்க்க வேண்டும். அப்படிச் சோதித்துப் பார்த்தால், தான் அடைந்த வேதனைகளுக்கான காரணங்களில், தன்னுடைய தவறான சுபாவங்களுக்கு மிகப் பெரிய பங்கு இருப்பதைக் கண்டறிய முடியும். கோபம், வெறுப்பு, விரோதம், மேட்டிமை, பொறாமை, பண ஆசை, பொருளாசை, இச்சையடக்கமின்மை போன்ற பல தீய சுபாவங்கள்தான் ஏராளமான சோதனை களின் உண்மையான காரணங்களாக உள்ளது.

பெரும்பாலும் மனிதன் வந்துவிட்ட பிரச்சினைகளுக்குத் தீர்வு காண விரும்பு கின்றானேயன்றி, பிரச்சினைகளின் காரணங்களை உள்ளபடியே அறிந்து கொள்ள விரும்பவில்லை. எனவே, சில பிரச்சினைகளுக்கும், சோதனைகளுக்கும் தீர்வு கண்டபோதிலும்கூட, மீண்டும் மீண்டும் பிரச்சினைகள் வருகின்றன. சிலரிடம் சுபாவக் குறைவுகளைக் குறித்தும், குணநிலைக் கேடுகளைக் குறித்தும் விளக்கிச் சொன்னால், அவர்கள் அதனைப் பெரிதாக எடுத்துக்கொள்வதில்லை. சரியற்ற சுபாவங்கள் இருப்பது சாதாரண விஷயம்தான். மனிதன் அப்படித்தான் இருப்பான் என்று அவர்கள் எண்ணுகின்றனர்.

சரியற்ற சுபாவங்களும், தவறான குணங்களும் இருப்பதை ஒருவர் சாதாரண விஷயமாக எடுத்துக்கொள்ளக்கூடும். ஆனால், அவற்றை அப்படியே வைத்துக் கொண்டு வாழ்க்கைப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண வாய்ப்பில்லையே. தேவ ஊழியர் ஒரு சபையில் ஒரு மணிநேரம் பேசினார். ஆனால், அவை மனித சுபாவங் களின் கேடுபாடுகளைக் குறித்ததாயிருந்தது. அதைக் கேட்டுக் கொண்டிருந்த ஒருவர் ஐயா மனிதர்கள் என்றால் அப்படித்தான் இருப்பார்கள். நீங்கள் தேவ வல்லமை, தேவ அன்பு, தேவ கிருபை ஆகியவற்றைக் குறித்து பேசியிருக்கலாமே என்றார். சுபாவங்கள் சரியற்றதாயிருக்கும்போது எவ்வளவுதான் தேவ வல்லமை வெளிப்பட்டாலும், எவ்வளவுதான் தேவ அன்பைக் குறித்துப் பிரசங்கம் கேட்டாலும் பயனொன்றுமில்லையே.

கானானை நோக்கிச் சென்ற இஸ்ரவேல் ஜனங்களின் நடுவில் தேவ அன்பும், வல்லமையும் மிக அதிகமாக வெளிப்பட்டது. ஆயினும், அவற்றால் அவர்கள் பயனடையவில்லையே. அவர்கள் கானகத்திலே மிகுந்த போராட்டங்களையும், சோதனைகளையும் காண நேர்ந்ததற்குக் காரணம், நற்சுபாவங்களின்மையே.

சிந்தனைக்கு...

பாடுகள் உன்னைப் புண்படுத்தும் போதுதான்
பண்புகளால் உன் மனம் பக்குவமடைகிறது.

ஜூலை 20

உண்மை

வெளிப்படுத்தின விசேஷம் 2:1-10

ஆகிலும் நீ மரணபரியந்தம் உண்மையாயிரு.
வெளி 2:10

- ❑ உன்னுடைய உண்மையை நோக்கி ஒருவரும் ஓடிவர வில்லையே என்று வருந்தாதே. அந்த உண்மையை விட்டு நீயும் ஓடிப்போய் விடாமல் உறுதியாயிரு.
- ❑ உனக்குள்ளிருந்து எழுந்து கொண்டிருக்கும் உண்மையின் சத்தம் சின்னதாயிருக்கலாம். ஆனாலும், உன்னைச் சுற்றிலும் ஒலித்துக் கொண்டிருக்கும் பேரிரைச்சல்களால் அது அடங்கிப் போகாமல் பார்த்துக்கொள்.
- ❑ உண்மை என்பது ஒரு அபூர்வமான விதை. அது எல்லோருடைய இதய நிலத்திலும் முளைக்காது. எனவே, நீ விதைத்த இடமெல்லாம் உண்மை முளைக்கவில்லையே என்று வருந்தாதே.
- ❑ உண்மையின்மேல் கொண்ட அன்பினால் நீ தனித்து நிற்கத் தயாராகும் வரை, அந்த உண்மை அநேகரை உன் பக்கம் இழுத்துக்கொள்ளாது.
- ❑ உன்னுடைய உண்மையை உளமாற ரசிக்க ஊரில் யாரும் இல்லாவிட்டாலும், உன்னை அழைத்த தேவன் அதைத்தான் மிகவும் விரும்பி ரசிக்கின்றார் என்பதை மறவாதே.
- ❑ உண்மையை இழந்து ஓராயிரம் நண்பர்களைப் பெறுவதைவிட, உண்மையை உறுதியாகப் பிடித்துக் கொண்டதால் இருக்கின்ற சில நண்பர்களை இழந்தாலும், அது மேன்மையானதே.
- ❑ உண்மையற்ற உலகத்தின் நடுவில் வாழ்வதற்காக வெட்கப்படத்தேவையில்லை. உண்மையற்ற இருதயத்தோடு வாழ்வதுதான் வெட்கத்திற்குரியது.
- ❑ உன்னுடைய உண்மையை ஒருவரும் நம்பவில்லையே என்று வேதனைப் படாதே. உனக்கு அதன்மேல் உள்ள நம்பிக்கை முழுமையாயிருந்தால் வேதனைப்பட ஒன்றுமில்லை.
- ❑ உண்மை அநேகரை வாழவைக்கும் வலிமையுள்ளது. ஆனாலும், அதற்கு வீசிகரிக்கும் கவர்ச்சியில்லை. எனவே, யாரும் எளிதாக அதை நோக்கி இழுக்கப்படுவதில்லை.
- ❑ உண்மையற்றவைகளை சாப்பிட்டுப் பழகிப் போன நாவுகள், உண்மையின் ருசியை உடனடியாக உணர்ந்து கொள்ளாது.
- ❑ உலகம் ஒருபோதும் உண்மையை உடனடியாக ஏற்றுக்கொண்டதில்லை. சில நேரம் அது உண்மையைச் சொன்னவன் மறைவது வரை அமைதியாய் இருந்துவிடுகிறது.
- ❑ உனக்குள் இருப்பது உண்மையிலேயே உண்மையாயிருந்தால், அது உன்னை விட்டுப் போவதும் கடினம். அதை விட்டு நீ போவதும் கடினம்.

சிந்தனைக்கு...

உலகமெல்லாம் போய் நல்லதைச் சொல்வதைவிட நாலுபேருக்கு நடுவில் நல்லவனாய் வாழ்வதே பெருமை.

ஜுலை 21

புகழ்ச்சி யாருக்கு?

அப்போஸ்தலர் 3:1-16

நீங்கள் எங்களை நோக்கிப் பார்க்கிறதென்ன?
அப்போஸ்தலர் 3:12

ஒருமுறை கஷ்ட நிலையில் இருந்த ஒரு மனிதனுக்கு கிறிஸ்தவ விசுவாசி ஒருவர் இரங்கி ஒரு நல்ல உதவியைச் செய்தார். உடனேயே அந்த மனிதன் ஐயா நீங்க சாதாரண மனுஷன் அல்ல. நீங்க ஒரு தெய்வம் மாதிரி என்று அவரைப் புகழந்தான். அதற்கு அந்த விசுவாசி நான் மட்டும் இயேசுவை என் ஆண்டவராக ஏற்றுக் கொள்ளாதிருந்திருந்தால் ஒரு நாலணாகூட உனக்குத் தந்திருக்கமாட்டேன். இப்போது நான் செய்த உதவி அந்த இயேசு எனக்குள் ஏற்படுத்தின அன்பினாலேயே. எனவே நீ புகழ நினைத்தால் அந்த இயேசுவையே புகழ வேண்டும் என்று கூறினார்.

நாம் இயேசுவை ஏற்றுக்கொண்டவர்களானால், உலகத்தில் பலரிடம் இல்லாத சில நற்குணங்களும், நற்செயல்களும் நம்மிடம் இருக்க முடியும். ஆனால், அவைகளை இயற்கையாக இருந்தவைகளா அல்லது இயேசுவோடுள்ள ஐக்கியத்தால் ஏற்பட்டதா என்பதைக் குறித்து அறிந்தவர்களாகயிருக்க வேண்டும். நம்முடைய நல்ல பண்புகளும், செயல்களும் இயேசுவால் வந்தவைகளாயின், அவைகளுக்காக நாம் புகழப்படும்போது அந்தப் புகழ்ச்சி இயேசுவுக்கே உரியது என்ற உணர்வோடு அதற்கேற்ப நடந்து கொள்ள வேண்டும்.

ஒருமுறை இரயில் நிலையத்தில் டிக்கெட் வாங்கிய பிறகு டிக்கெட் வழங்கியவர் தவறுதலாக எனக்கு பாக்கித் தொகை அதிகமாகத் தந்துவிட்டார். அதை கணக்கிட்டுப் பார்த்து நான் திருப்பிக் கொடுத்துவிட்டேன். அங்கு எனக்கு நல்ல பாராட்டு கிட்டியது. ஆயினும், அந்த பாராட்டு எனக்குரியதல்ல என்பதை உணர்ந்தேன். ஏனென்றால் இயேசு என் வாழ்க்கையையும் மனநிலைகளையும் மாற்றாதிருந்திருந்தால் நான் அந்த தொகையைத் திருப்பிக் கொடுக்காமல் கொண்டுபோயிருப்பேன்.

எருசலேம் தேவாலயத்தில் ஒரு சப்பாணியை பேதுருவும், யோவானும் அற்புதகரமாக குணமாக்கியபோது, எல்லா மனிதர்களுடைய பார்வையும் அவர்கள் மேல் பதிந்தது. ஆனால், அவர்களோ அவர்களின் பார்வையை இயேசுவை நோக்கி திருப்ப உடனேயே பிரயாசப்பட்டனர். இது எங்களுடைய சக்தியாலோ, பக்தியாலோ நடந்ததல்ல. இது இயேசுவால் நடந்தது என்பதை அவர்களுக்கு அறிவிக்க மிகவும் அவசரப்பட்டார்கள். இயேசுவுக்குச் சேர வேண்டிய புகழ்ச்சியை தாங்கள் ஏற்பது மிகவும் தவறானது என்ற உணர்வோடு, தங்களை மிகவும் சாதாரணமாக்கிப் பேச கொஞ்சமும் தாமதிக்கவில்லை.

சிந்தனைக்கு...

நல்லவன் என்ற பெயரை எளிதாகப் பெறலாம்,
நேர்மையானவன் என்ற நிலையில் நிலைப்பதுதான் கடினம்.

ஜூலை 22

பணம் பாவமா?

1 தீமோத்தேயு 6:1-12

பண ஆசை எல்லாத் தீமைக்கும் வேராயிருக்கிறது.
1 தீமோத்தேயு 6:10

ஆபிரகாம் செல்வச் சீமானாயிருந்த போதிலும், அவன் தேவனுக்குப் பிரியமாக வாழ்வதில் குறைவுபடவில்லை. யோபு மிகப்பெரிய ஆஸ்திக்காரனாயிருந்தும், தேவ பக்தியில்லாதவனாயிருக்கவில்லை. தாவீது, அரசன் என்ற நிலைக்கு உயர்ந்து, செல்வச் சிறப்புகளைக் கண்ட போதிலும், தேவனைத் தேடுகின்ற அனுபவங்களை இழந்து விடவில்லை. ஆனால், சாலொமோன் இராஜா செல்வ மிகுதியின் நடுவில், தேவ பக்தி அனுபவத்தை இழந்து போனான்.

ஒருவரிடத்தில் செல்வங்கள் அதிகமாயிருப்பதோ, பணம் ஏராளமாயிருப் பதோ பாவமல்ல. பணமும், பொருளும் ஒரு மனிதனுக்கு தேவனோடுள்ள நல்ல உறவையும், ஐக்கியத்தையும் பாதிக்காத வரை அவை நல்லவையே. ஆனால், பணமும், செல்வமும், அதிகமாகும்போது ஒரு மனிதனுக்கு தேவன் மேலுள்ள சார்பு நிலையையும், தேவ ஐக்கியத்தை முக்கியப்படுத்தும் மனநிலை யையும் மிகுதியாய் நாசமாக்கும் வல்லமை அதிகமாக உண்டு என்பது உண்மை. பணம் சிலரை தேவனுடைய ஐக்கியத்திற்குள் வரவிடாமல் தடுத்து விடுகிறது. பணம் சிலரை தேவ ஐக்கியத்தை விட்டுப் பிரித்துக் கொண்டு போய்விடுகிறது. எனவே, இதுபோன்ற பாதிப்புகளுக்கு இடம் தராமல் ஆபிரகாமைப் போலவும், யோபுவைப் போலவும் விதிவிலக்காக வாழ்வதற்கு இயன்றவர்கள் வெகு சிலரே.

பண ஆசை எல்லாத் தீமைக்கும் வேராயிருக்கிறது என்று வேதம் தருகின்ற எச்சரிப்பை சாதாரணமாக எடுத்துக் கொள்ளக்கூடாது. தேவ உறவின் சுவையையும், தேவனுக்காக தேவனுடைய வழிகளில் நடப்பதின் விளைவான சந்தோஷத்தையும், அனுபவித்துப் பழகாமல் வெறும் பக்தியில் மட்டும் மகிழ்கின்றவர்களை, பணம் எளிதாக அடிமையாக்கிவிடும். தேவன் அருளுகின்ற ஆசீர்வாதம் என்பதை பிரதானமாக தேவ ஐக்கியத்தின் மூலம் அடையாளம் கண்டவர்கள் மட்டுமே பணம் பெருகினாலும், பொருள் பெருகினாலும் இறைஉறவில் இடைவெளி ஏற்படாமல் பார்த்துக் கொள்ள இயன்றவராயிருப்பார்கள்.

ஆபிரகாம் தேவ உறவில் வாழ்ந்து அதிலிருந்து கிடைக்கும் சந்தோஷத்தை அடையாளம் காண இயன்றவனாயிருந்தான். எனவே, பெரிய பணக்காரனாயிருந்தும் அன்பிலும், தாழ்மையிலும், உண்மையிலும் ஒருபோதும் அவன் தடம் புரளவில்லை. அரண்மனை போன்ற வீட்டைக் கட்டி சொகுசுடன் இராஜா போல வாழ்வதற்கு அவனுக்கு வாய்ப்பிருந்தும், அவன் பிள்ளைகளுடன் கூடாரங்களில் குடியிருப்பதையே தெரிந்து கொண்டான். ஏனென்றால், தேவ உறவில் வாழ்வதைவிட, அதிக சௌகரியத்தில் வாழ்வது அதிக மகிழ்ச்சி தரும் என்று அவன் நம்பவில்லை.

சிந்தனைக்கு...

எல்லாவற்றையும் தனக்காகவே வைத்துக்கொள்கிறவனுக்காக இறைவன் எதையும் வைத்திருக்கவில்லை.

ஜூலை 23
மன்னிப்பின் அவசியம்

எபேசியர்-1:1-13

இவருடைய இரத்தத்தினாலே பாவமன்னிப்பாகிய மீட்பு
எபேசியர்-1:7

பல திருச்சபைகளில் தாங்கள் நடத்தும் வழிபாட்டின் ஒரு பகுதியாக பாவ அறிக்கை செய்யப்பட சபையார் அழைக்கப்படுவார்கள். சபையாரும் தங்களைப் பாவிகள் என்று அறிக்கை செய்வதோடு, தங்கள் பாவங்களை தேவன் மன்னிக்கும்படி இறை வேண்டல் செய்வார்கள். ஆனால், அவர்கள் தங்கள் பாவங்களைக் குறித்து சற்றும் மனம் வருந்தாமலே அதைச் செய்வார்கள். தேவன் தங்களை மன்னிக்க வேண்டும் என்று எதிர்பார்க்காமலே மன்னிப்பு கேட்பார்கள். அவர்கள் திரும்பிச் செல்லும்போது பாவ மன்னிப்பு பெற்ற சந்தோஷத்தோடும் செல்வதில்லை. அடுத்த வாரம் வரும்போது மன்னிக்கப்பட்ட நிச்சயத்துடன் வராமல் மறுபடியும் பாவிகள் என்ற நிலைமையை தக்கவைத்துக் கொண்டே வருவார்கள். பாவ அறிக்கைகளும் தொடரும். பாவ மன்னிப்பிற்கான மன்றாடல்களும் தொடரும். பாவிகளாகவே வாழ்வதும் வழக்கம் போல் தொடரும்.

ஏனென்றால், இவையாவும் மத சம்பிரதாயங்களாகப் பின்பற்றப்படுகின்றது. அங்கே உண்மையாக மனம் உணர்ந்த அனுபவங்கள் இல்லை. உண்மையான மன்னிப்பின் சந்தோஷம் மிக மிகப் பெரியது. அதனை அடைய உண்மையான மனந்திரும்புதல் வேண்டும். உண்மையான மனந்திரும்புதல் ஏற்பட பாவத்தின் பாரத்தை உண்மையாக ஆத்துமாவில் உணர வேண்டும். பாவி என்று கடமைக் காகச் சொல்வது அல்ல. பாவி என்ற நிலைமையை வெறுத்து அது அகல வேண்டும் என்ற ஆசை உருவாக வேண்டும். பாவத்தோடு வாழ்வதற்குப் பழகிக்கொண்ட அனுபவத்தோடு அதனைக் குறித்த மன உறுத்தல் இல்லாமல், மன்னிப்பிற்காக இறைவேண்டல் செய்வது தேவனைப் பரிகாசம் செய்வதற்கு ஒப்பானது.

தேவனிடத்தில் எதைக் கேட்கின்றோமோ அதைக் குறித்த ஒரு எதிர்ப்பாப்பு வேண்டும். கர்த்தரிடம் மன்னிப்பைக் கேட்கும்போது அதை எதிர்ப்பார்த்துக் கேட்க வேண்டும். அடுத்த வாரம் சபைக்கு வரும்போது இந்த வாரம் பெற்ற மன்னிப்பின் நிச்சயத்தோடு வரவேண்டும். பாவி என்று மறுபடியும் அறிக்கை செய்வதற்கு ஏதுவாக பாவத்தை விடாமல் பற்றிக்கொண்டு வாரந்தோறும் வரக்கூடாது.

பாவமன்னிப்பு என்பது விலையேறப் பெற்றது. அதனை நாம் பெற்றுக் கொள்வதற்காக கர்த்தராகிய இயேசு கிறிஸ்து இரத்தம் சிந்தினார். இரத்தம் சிந்தி உருவாக்கப்பட்ட மன்னிப்பினை நாம் விழிப்புணர்வில்லாமல் வழிபாட்டுக் கடமை க்காகக் கேட்கக் கூடாது. பாவத்தை உணராமலேயே மன்னிப்புக் கேட்பது நல்லதல்ல. அநேகர் கர்த்தர் அருளும் மன்னிப்பு என்பதை நமக்காக கர்த்தர் அருளும் மிகப்பெரிய ஈவு என்று எண்ணுவதில்லை. அது ஏதோ கர்த்தரைப் பிரியப்படுத்துவதற்காக நாம் செய்ய வேண்டிய ஒன்று என்ற எண்ணமே அவர்களிடம் உள்ளது. தாயின் வற்புறுத்தலுக்காக குழந்தை மனவிருப்பமின்றிச் சாப்பிடுவது போல, நாம் உண்மை யாக விரும்பாமல் கர்த்தருக்காக மன்னிப்புக் கேட்பது சரியான வழி அல்ல.

சிந்தனைக்கு...

இறை வழியில் நடவாதவர்களின் இறை பக்திச் செயல்கள் எதையும் இறைவன் ஏற்பதுமில்லை, நினைப்பதுமில்லை.

ஜூலை 24

நல்லதை நினைக்கனும்

11 நாளாகம்–19:1–11

நன்மையான காரியங்கள் உம்மிடத்திலே காணப்பட்டது உண்டு
11 நாளாகமம் 19:3

ஒரு வெண்மையும் தூய்மையுமான சுவர். ஆனால், அதில் ஒரு சிறு கறுப்பு புள்ளி. இப்போது ஒருவருடைய கவனமும், பார்வையும், அந்தச் சிறு கறுப்புப் புள்ளியை நோக்கித்தான் ஈர்க்கப்படும். அதுபோலவே நம்முடைய வாழ்க்கையின் பல பகுதிகள் எந்தக் குற்றமும் குறைவும் இல்லாமல் தூய்மையுடன் காக்கப்படலாம். ஆனால், அங்கே ஒரு சிறு தவறோ குறைவோ காணப்படுமாயின், எல்லோருடைய கவனமும் பார்வையும் அதன்மேல்தான் விழும். இது ஒருவிதமான பலவீனமான அம்சமாக இருந்தாலும், அதுதான் மனித இயற்கை. எனவே, வாழ்க்கையில் பல நிலைகளில் நாம் வெண்மையாக இருந்தாலும், கறுப்புப் புள்ளிகளுக்கு இடம் கொடாமல் கவனமாயிருக்க வேண்டும்.

அதுபோலவே ஒருவருடைய வாழ்வின் எல்லாப் பகுதிகளும் நன்றாயிருக்கும். ஆயினும், மனித பலவீனத்தினாலோ, சூழ்நிலையினாலோ, கவனக்குறை வினாலோ, ஒரு சிறு மதியீனத்தினாலோ, அவரிடம் ஒரு தவறோ, குற்றமோ சேர்ந்து கொள்ளக் கூடும். அப்போது நம் கண்கள் முதலாவது அதைத்தான் பார்க்கும். அதனுடைய அடிப்படையில் அவரைக் குறித்து தீர்ப்பு எழுத நம்முடைய மனம் அவசரப்படும். அதனை ஆதாரமாகக் காட்டி அந்த நபரை பாவி போல காண்பிப்பது நமக்கு நியாயமாகத் தோன்றலாம்.

ஆனால், தேவனை அறிந்தவர்கள் இங்கே பலவீனமான சிந்தையோடு செயல்படக்கூடாது. ஒருவரிடமுள்ள சிறு தவறைப் பார்த்து, அவரைத் தவறான ஒருவராக முடிவு செய்திட மனம் வேகப்படும்போது, அவருடைய பிற பகுதிகளைக் கவனிக்கத் தவறக்கூடாது. அங்கே ஒரு பானைச் சோற்றிற்கு ஒரு சோறு பதம் என்ற அளவுகோலைப் பயன்படுத்தக்கூடாது. இங்கே ஆவிக்குரியவர்கள் எல்லோரையும் போல எதையும் மதிப்பீடு செய்யாமல், சரியான அளவுகோலைப் பயன்படுத்த வேண்டிய அவசியத்தை உணர வேண்டும்.

பேதுரு உண்மையும் உத்தமமுள்ள ஒரு இயேசுவின் சீடன். இயேசுவுக்காக உயிரைக் கொடுப்பதற்குக்கூட விரும்பினவன். அவனுக்கு என்ன நேர்ந்தாலும் அவரோடு இருக்க ஆசைப்பட்டவன். ஆனால், சூழ்நிலையின் நிர்ப்பந்தங்கள் ஆசைப்பட்டபடி வீரதீரமாகச் செயல்பட முடியாமல் தடுத்துவிட்டது. எனவே, இயேசுவை மறுதலிக்க நேர்ந்தது. அவனை வேண்டாம் என்று சொல்லவும், தம்மைப் பின்பற்றத் தகுதியற்றவன் என்று சொல்லவும் இந்த ஒன்றையே கர்த்தர் காரண மாக்கியிருக்கலாம். ஆனால், இயேசு அவ்விதம் செய்யவில்லை. அவனுடைய வாழ்வின் பிறபகுதிகளையும் அவர் கவனிக்கத் தவறவில்லை. எபேசு சபையின் குறைபாடுகளைக் கோடிட்டுக் காட்டிய இயேசு கிறிஸ்து, அந்த சபையில் காணப்பட்ட நல்ல விஷயங்களைக் காணத் தவறவில்லை.

சிந்தனைக்கு...

பிறரிடம் உள்ள நல்லவைகளை உன் கண்கள் காணாவிட்டால்
உன்னிடம் உள்ள தவறுகளைத்தான் பிறர் கண்கள் காணும்

ஜூலை 25

தேவையா, ஆசையா?

நீதிமொழிகள் 30:7-23

எனக்கு அளந்து என்னைப் போஷித்தருளும்
நீதிமொழிகள் 30:9

தங்களுக்கு உண்மையில் தேவையில்லாத பொருட்களின் மேலும் ஆசையை உருவாக்கி, அவற்றை வாங்கத் தூண்டுவது இக்கால வியாபார நிறுவனங்களின் வியாபார யுக்தி. ஆயிரம் ரூபாய் விலையுள்ள ஆக்ஸ்போர்டு டிக்ஷ்னரி 500 ரூபாய்க்கு விற்பதைப் பார்த்த ஒருவர் உடனேயே அதனை வாங்கினார். ஆனால், அவருக்கு டிக்ஷ்னரி உபயோகிக்கும் பழக்கம் முன்பும் இல்லை பின்பும் இல்லை, இவர் தனக்குத் தேவைப்படாத ஒரு பொருளை அதிகத் தள்ளுபடி கிடைக்கிறதே என்ற காரணத்திற்காகவே வாங்கினார்.

இன்று மனிதன் ஆசைப்படும் பல விஷயங்கள் அவனுக்குத் தேவையான வையும் அல்ல. அவற்றால் அவனுக்கு எந்தப் பயனும் இல்லை. உலகமும் பிசாசும் மனிதனுக்குள் பலவழிகளில் ஆசைகளைத் தூண்டி விடுகின்றன. அந்த ஆசை களின் விளைவாக மனிதன் தனக்குத் தேவையற்ற, பயன்தராமல் போகின்றவை யான பலவற்றிற்காக அதிகமாகப் பிரயாசப்படுகின்றான்.

இருசக்கர வாகனத்தையே எதற்கும் பயன்படுத்துகின்ற ஒருவர் விலை உயர்ந்த கார் ஒன்றை வாங்கினார். ஆனால், அது காட்சிப் பொருளாக வீட்டிற்கு முன்பாக நிற்கின்றதேயன்றி, அதனை அவர் பயன்படுத்துவதேயில்லை. பல விஷ யங்கள் நமக்குள் ஆசையை உருவாக்கும். ஆனால், அவை நமக்கு மிக அவசிய மானவையல்ல. தேவைகளுக்காக மனிதன் ஓடுவதைவிட, ஆசைகளுக்காகவே இரவும் பகலும் அதிகமாக ஓடுகின்றான்.

எல்லாப் பொருட்களுக்கும் ஒரு பயன்பாடு நிச்சயம் உண்டு. ஆனால், எல்லாப் பயன்பாடுகளும் நமக்கு மிக அவசியமானவையல்ல. தேவன் நம்முடைய தேவைகளைத் தருவதற்குப் போதுமானவரே. ஆனால், நாம் ஆசைகளை யெல்லாம் அடைவதிலேயே குறியாயிருந்தால், தேவன் நமக்கு நன்மை செய்தாலும் நாம் திருப்தியடைய மாட்டோம். தேவனே நான் ஆசைப்படுகின்றவைகளை அல்ல தேவையானவைகளையே எனக்குத் தாரும் என்ற விண்ணப்பம் அவசியம்.

சிலநேரங்களில்தேவன்நமக்குஅளவில்லாமல்தருவதில்அல்ல.அளந்துஅவசிய மானவற்றைத் தருவதில்தான் அதிக ஆசீர்வாதமும் நன்மையும் உள்ளன. நமக்கு எவை எவை மிகவும் தேவை என அறிந்துகொண்டால், அவசியமற்ற ஆசைகளின் சுமையை நாம் சுமக்கத் தேவையில்லை.

சிந்தனைக்கு...

மனதில் மறைந்திருக்கும் மலையளவு அன்பைவிட, வாயினால் வெளிப்படும் கடுகளவு அன்பே இன்னொருவருக்குப் பயன் தரும்.

ஜுலை 26
தேவசித்தம் அறிவது எப்படி?
சங்கீதம் 25:1-22

கர்த்தாவே உம்முடைய வழிகளை எனக்குத் தெரிவியும்.
சங்கீதம் 25:4

கர்த்தருக்கு பிரியமானபடி நாம் செயல்பட வேண்டுமானால், அவருடைய சித்தம் எது என்பது நமக்கு தெரியவேண்டும். அந்த சித்தம் இன்னது என்று தேவனால் வெளிப்படுத்தப்படாவிட்டால் அதை நாம் அறியவும் இயலாது. அநேகர் தங்கள் வாழ்க்கைப் பகுதிகளில் முக்கிய முடிவுகளை எடுக்கும் முன்பு, அந்த விஷயங்களில் கர்த்தருடைய சித்தம் எது என்பதை அறிய ஆவலாயிருக்கின்றனர். எனக்கு ஜெபக்குறிப்புகள் அனுப்புகின்ற சிலர் தங்கள் பிரச்சனைகளையோ, பிற காரியங்களையோ எழுதிவிட்டு இந்த விஷயத்தில் தேவசித்தம் என்னவென்பதை வெளிப்படுத்துங்கள் என்றே எழுதுகின்றனர். ஆயினும் பலர் தேவசித்தம் அறிய தீவிரப்பட்டும் அது அவர்களுக்கு வெளிப்படவில்லை.

காரணம் என்ன? அவர்கள் தங்கள் வாழ்க்கையின் குறிப்பிட்ட சில காரியங்களில் மட்டுமே தேவ சித்தத்தை அறிய விரும்புகின்றனர். ஆனால் வேதா கமம் முழுவதும் தேவன் நம்முடைய வாழ்க்கையில் அவருடைய சித்தங்கள் இன்னதென்பதை அதிகமாக வெளிப்படுத்தியுள்ளார். நாம் மனந்திரும்ப வேண்டும், நாம் பரிசுத்தமாக வாழவேண்டும், நாம் பிறருக்கு நன்மை செய்ய வேண்டும், நாம் ஜெபிக்க வேண்டும், நாம் உண்மையோடு வாழவேண்டும், நாம் மன்னிக்க வேண்டும், இப்படி ஏராளமான தேவவிருப்பங்கள் நம்முடைய வாழ்க்கையில் நிறைவேற வேண்டும் என தேவன் தெளிவாக எழுதி, அறிவித்துள்ளார்.

வேதம் என்ன சொல்கின்றது? கர்த்தருக்கு பயப்படுகிற மனுனுக்குத் தான் அவர் தாம் தெரிந்து கொள்ளும் வழியைப் போதிப்பார். (சங் 25:12) அதாவது அவர் வெளிப்படுத்திய விருப்பங்களுக்கு கீழ்ப்படிந்து நடக்கின்ற மனிதனுக்குத் தான் அவர் தமது சித்தத்தை அறிவிப்பார். ஏற்னெவே நாம் செய்து நிறைவேற்றியிருக்க வேண்டிய தேவனுடைய விருப்பங்களைக் குறித்து போதிய கவனம் செலுத்தாத நிலையில், நம்முடைய விருப்பங்கள் சார்ந்த விஷயங்களில் தேவன் தம்முடைய சித்தத்தை வெளிப்படுத்தமாட்டார். ஒருவேளை நம்முடைய விருப்பங்கள் சார்ந்து தேவசித்தம் தேடிச் செல்லும் போது ஏற்கெனவே நான் வெளிப்படுத்திய என்னுடைய விருப்பங்களை நீ நிறைவேற்றினாயா? என்று கேட்டால் நாம் என்ன பதிலைக் கொடுக்க முடியும்? ஆம், வேதத்தில் வெளிப்படுத்தப்பட்டுள் ள தேவ சித்தங்களுக்கு நாம் கீழ்படிவதின் வாயிலாகத்தான் வாழ்க்கையோடு சம்பந்தப்பட்ட காரியங்களில் தேவன் தமது சித்தத்தை வெளிப்படுத்துவார்.

சிந்தனைக்கு...

எதிர்காலம் எப்படியிருக்கும் என்று கவலைப்படாதே நிகழ்காலத்தில் நீ எப்படியிருக்கிறாய் என்பதைக் கவனி.

ஜுலை 27
தேவையற்ற பயம்

1 சாமுவேல் 18:6-30

சவுல் தாவீதுக்குப் பயந்து...
1 சாமுவேல் 18:12

பல ஆண்டுகளுக்கு முன்பு இந்தியாவில் பிரதமராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒருவர். பதவியில் அமர்ந்த அடுத்த கணமே, தன்னுடைய கட்சியைச் சேர்ந்த முக்கிய தலைவர் ஒருவரை கட்சியை விட்டு வெளியேற்றினார். காரணம் என்ன? தன்னுடைய பதவிக்கு அந்த நபரால் பிரச்சினை ஏற்படக்கூடும் என்ற பயம். இன்று ஏராளமான மக்களை படாத பாடுபடுத்தி விசனப்படுத்தும் ஒரு விஷயம் அவர்களுக்குள் தோன்றும் தேவையற்ற பயம் ஆகும். சில சூழ்நிலைகளைக் கவனித்து, தங்களுக்கு எதாவது கேடு வந்து விடுமோ, என்ற பயத்தினால் பாதிக்கப்படுவோர் ஏராளம்.

இந்த தேவையற்ற பயமே அவர்களை தவறான முடிவுகளுக்குள் நடத்தி, வாழ்க்கையை வீணாக்கி விடுகிறது. இந்த தேவையற்ற பயங்களுக்கு முக்கியக் காரணம் மனிதன் தேவனை நம்பி அவரைச் சார்ந்திராமல், தன்னுடைய சுய திறமையையும், ஞானத்தையும் அதிகமாக நம்பியிருப்பதுதான். தாவீதிற்கு ஏற்பட்ட திடீர் பிரபலத்தைக் கண்டு சவுல் பயந்தான். அந்தப் பயமே அவனைப் பலவீனப்படுத்தி பாழ்படுத்தியது. தன் தேச மக்கள் எருசலேம் கோயிலுக்குப் போனால் யூதா தேச மன்னன் அவர்களை தன் பக்கம் இழுத்து விடுவான் என்று பயந்தான் யெரொபெயாம். அந்த பயம் மாம்சீக யோசனைகளில் அவனைத் தஞ்சம் புக வைத்தது. முடிவு. தேவ கோபம் அவன்மேல் பாய்ந்தது. தங்கள் சபையை யாராவது உடைத்து விடுவார்களோ, விசுவாசிகளை இழுத்து விடுவார்களோ, என்று பயப்படும் பாஸ்டர்கள் இன்று ஏராளம். எனவே மாம்சீக பிராயத்தனங்களால் அதைத் தடுக்கத் தயாராகிறார்கள்.

லோத்துவினால் தன்னுடைய உயர்வுகள் தடுக்கப்படும் என்றோ, பாதிக்கப் படும் என்றோ ஆபிரகாம் எண்ணியிருந்தால், லோத்துவின் சிறகுகளைவெட்டி விட ஆபிரகாம் தீவிரமாயிருந்திருப்பான். ஆனால், ஆபிரகாமோ வித்தியாசமாகச் சிந்தித்தான். தேவன் தன்னை உயர்த்த சித்தமாயிருக்கையில் லோத்துவால் அது பாதிக்கப்பட முடியாது என்று நம்பினான். தேவன் தன்னை ஆசீர்வதிக்க விரும்பும் போது எந்த மனித எண்ணமும் அதற்குத் தடையாயிருக்க முடியாது என்று அவன் விசுவாசித்தான். எனவே, லோத்து விஷயத்தில் அவன் நிதானமிழக்காமல், எந்தப் பதட்டமும் கொள்ளாமல் அமைதியாயிருந்தான்.

நாம் உண்மையாகத் தேவனைச் சார்ந்திருந்தால் பயம் நம்மைப் பாதிக்காது, நம்முடைய உயர்வுகளும், சாதனைகளும் தேவனைச் சார்ந்த விசுவாசத்தினால் வந்தி ருந்தால், பயம் நம்மைப் பாதிக்காது. ஏனென்றால், தேவனால் வந்த உயர்வுகளை மனிதனால் மாற்ற முடியாது. அவர் தந்ததை ஒருவரும் பிடுங்க முடியாது.

சிந்தனைக்கு...

தேவனைச் சார்ந்து நிற்கப் பழகிக் கொண்டவனை சூழ்நிலைகள் சோர்ந்து போகச் செய்ய முடியாது.

ஜூலை 28
தீர்மானம்

தானியேல் 1:1-21

தன் இருதயத்தில் தீர்மானம் பண்ணிக்கொண்டு ...
தானியேல் 1 : 8

வாலிபன் ஒருவன் பாஸ்டர் ஒருவரிடம் வந்தான். "ஐயா ஒரு பெரிய தவறை நான் செய்து விடுவேனோ என்ற அச்சம் என்னை தினமும் கலங்கடிக்கிறது" என்று கூறினான். "தவறை இன்னும் செய்யவில்லையே. எனவே தவறு எதுவும் செய்ய மாட்டேன் என்று தீர்மானம் செய்துகொள் என்றார் பாஸ்டர். அந்த வாலிபனோ "ஏற்கனவே பலமுறை நான் தீர்மானம் செய்துவிட்டேன். ஆனால், என்னுடைய தீர்மானங்கள் யாவும் என் பலவீனத்தையே எனக்கு வெளிப்படுத்துகின்றன" என்றான்.

ஒரு சரியான தீர்மானத்தோடு வாழ்வது நல்லதுதான். ஆனால், அநேகர் தீர்மானங்கள் எடுப்பதின் மூலம் சில தவறுகளைத் தவிர்த்துவிட முடியும் என்றும், சில நல்ல விஷயங்களைச் செய்துவிட முடியும் என எண்ணுகின்றனர். ஆனால், மனித இச்சைகளும் உணர்ச்சிகளும், ஆசையின் வேகங்களும், குணநிலை இயற்கைகளும், நாம் எடுக்கும் தீர்மானங்களைவிட மிகவும் வலியானவையாக இருக்கின்றது. எனவே, சுயத்தில் உள்ள பிரச்சினைகளைத் தடை செய்ய சுயம் சார்ந்த தீர்மானங்கள் போதுமானவைகள் அல்ல. அவைகள் நாம் நம்முடைய சுய பலத்தையும், மன வலிமையையும் அதிகமாக நம்பிவிடுவதின் அடையாள மாகவும் மாறிவிடுகிறது. பரிசுத்த ஆவியின் பலத்தோடும், விசுவாசத்தோடும், தேவ சார்பு நிலையோடும் சாதிக்க வேண்டியதை, நாமே சாதிக்க முடியும் என்று நம்மை யறியாமலே நாம் எண்ணிவிடுகிறோம்.

பாபிலோன் அரண்மனை உணவினை உண்ணக்கூடாது என்று தானியேல் மனதில் தீர்மானித்தான். ஆனால், அந்த தீர்மானம் எடுக்கும் முன்பே அவன் தேவ னோடு நெருங்கி வாழ்கின்ற ஒரு மனிதனாக இருந்தான். எனவே அவனால் ஒரு தீர் மானத்தை எடுக்கவும், அதில் உறுதியாக நிற்கவும் முடிந்தது. சோதனை வரும்போது தீர்மானத்தின்படி நிற்கத்தக்க அளவிற்கு தேவ ஐக்கியத்தை அனுபவித்து, ஆவிக் குரிய வல்லமையுடையவர்களாக இருக்கின்றோமா என்பதே முக்கியம்.

மேலும், நாம் தவறான சில விஷயங்களைத் தவிர்க்கவேண்டுமானால், மிகச் சரியான நல்ல விஷயங்களோடு நம்முடைய மனதை அதிகமாக ஈடு படுத்திக்கொள்ளவேண்டும். எனவேதான், அப்போஸ்தலனாகிய பவுல் உண்மை, ஒழுக்கம், கற்பு, நற்கீர்த்தி, நீதி ஆகியவைகளோடு மனதைப் பிணைக்க வேண்டிய அவசியத்தை பிலிப்பி சபை மக்களுக்கு எடுத்துக் கூறினான். (பிலிப்பியர்- 4 : 8) ஆம், மேன்மையான நோக்கம் சார்ந்த விஷயங்களில் நாம் தீவிரமாயிருக்கும் போது, தீய விஷயங்கள்மேல் உள்ள நாட்டங்கள் வலுவிழக்கும்.

சிந்தனைக்கு...

தீயவைகள் உன்னிடம் தானாய் தோன்றும். ஆனால் நல்லவைகளை நீதான் தோற்றுவிக்க வேண்டும்.

ஜூலை 29

ஆராய்தல் அவசியம்

எபேசியர் 4:11-24

தந்திரமுள்ள போதகமாகிய பலவித காற்றினாலே
எபேசியர் 4:14

கண்ணை மூடிக்கொண்டு ஒரு கருத்தின் உண்மையை ஆராயாமல் அப்படியே ஏற்றுக்கொள்வதும் தவறு. ஒரு கருத்துச் சொல்லப்படும்போது அதனைக் குறித்த சரியான புரிந்துகொள்ளுதலுக்கு மனதைச் சற்றும் சாய்க்கு முன்னரே, கண்ணை மூடிக்கொண்டு அதை எதிர்ப்பதும் தவறு. ஒரு பொய் சொல்லப்படும் போது அது எளிதாக நம்புவதற்கு ஏற்றதாயிருக்கும். ஒரு உண்மை சொல்லப்படும் போது அதனை நம்புவதற்கு மிகவும் சிரமமாயிருக்கும். எனவேதான், ஒரு உண்மை சொல்லப்படும் போது சிலர் அப்படியா, நிஜமாகவா என்று மிகுந்த ஆச்சரியத்தோடு கேட்பார்கள்.

ஒரு பொய்யை ஒரே ஒரு முறை சொல்லி ஆயிரம் பேரை நம்ப வைக்க முடியும். ஆனால், ஒரு உண்மையை ஆயிரம் முறை சொன்னால்தான் ஒருவரையாவது நம்ப வைக்கமுடியும். அதனால்தான் பெரும்பாலும் மனிதர்கள் உண்மையைப் பேசு வதை விட, பொய்களையே அதிகமாகப் பேசுகின்றனர். சரித்திரத்தைப் பார்க்கும்போது சில நேரங்களில், சிலர் கண்டு பிடித்த உண்மைகளை ஜனங்கள் உண்மை என்று ஏற்றுக்கொள்வதற்குள் நூற்றுக்கணக்கான ஆண்டுகள் கடந்து போயிருக்கிறது. விஞ்ஞான ரீதியாக பூமியைக் குறித்து கலிலேயா சொன்னதும் உண்மை. கோப்பர் நிக்கஸ் சொன்னதும் உண்மை. ஆனால், அவர்கள் கண்டறிந்த உண்மையை உலகம் சரிதான் என்று ஏற்றுக்கொள்ள நீண்ட காலம் தேவைப்பட்டது.

கவர்ச்சிகரமாக ஒரு பொய்யை ஒருவர் உண்மைபோல பேசிவிட்டு மேடை யிலிருந்து இறங்கும் முன்பு, அதனை அப்படியே கண்ணை மூடிக்கொண்டு நம்பு கின்ற ஒரு கூட்டம் உருவாகிவிடுகிறது. ஆனால் உண்மையை உண்மையாகப் பேசுகின்ற ஒருவர், சொன்னது உண்மைதான் என உலகம் உணர்ந்து கொள் வதற்குள், ஒரு தலைமுறையே கடந்து போய்விடுகிறது.

இன்றைய கிறிஸ்தவர்கள் நடுவில் அறிவாளிகளும், ஞானம் மிக்கவர்களும், சிந்தனையாளர்களும், ஆராய்ச்சியாளர்களும் ஏராளம் உண்டு. ஆயினும், இறை நம்பிக்கை என்ற பகுதியில் வரும்போது, அநேகர் எதையும் கண்மூடித்தனமாக நம்புகின்றவர்களாகவே உள்ளனர். கள்ளத் தீர்க்க தரிசிகளும், கள்ளப் போதகர்களும், பெருகிப் போன இந்த நாட்களில், அவர்கள் சொல்லும் பொய்யான விஷயங்களை சிலர் சற்றும் ஆய்வு செய்வதில்லை. சில பொய்களைக் கண்டறிய ஆவிக்குரிய ஞானம் அல்ல. சிறிய அளவு காமன்சென்ஸ் இருந்தாலே போதும். அதுகூட அநேகரிடம் இல்லை. கண்களை மூடிக்கொண்டு ஒன்றை ஏற்பதையும் அல்லது எதிர்ப்பதையும் ஆன்மிக, பக்தியின் அடையாளமாக எண்ணுவது தவறு.

சிந்தனைக்கு...

விசுவாசத்தைப் பற்றி பேசுகிறவனையல்ல
விசுவாசத்தில் வாழ்பவனையே நோக்கிப்பார்.

ஜீலை 30

தேவனை அறிவோம்

ஓசியா 6:1-11

அப்பொழுது நாம் அறிவடைந்து கர்த்தரை அறியும்படி தொடர்ந்து போவோம்.. ஓசியா 6:3

யாத்திராகமம் புத்தகத்தை தேவனுடைய வெளிப்படுத்தலின் புத்தகம் என்று கூறலாம். எகிப்திலிருந்து துவங்கிய இஸ்ரவேல் மக்களின் பயணம் கானான் தேசத்திற்கு வந்து சேரும் வரை, தேவன் தம்மை பல்வேறு விதங்களில் அவர்களுக்கு வெளிப்படுத்திக் காட்டினார். தேவன் அவர்களை கானான் தேசத்திற்குக் கொண்டு சேர்க்கும் முன்பு தம்மை அவர்கள் பல நிலைகளில் அறிந்து கொள்ள வேண்டும் என்று விரும்பினார். கானக யாத்திரையில் அவர் நிகழ்த்திய செயல்கள், அவர் பேசிய வார்த்தைகள், யாவுமே அவருடைய குணாதிசயங்களையும், தன்மைகளையும் மிகுதியாக வெளிப்படுத்து கின்றவைகளாகவே இருந்தன.

ஏனென்றால், அவரைக் குறித்த சரியான அறிவினைப் பெற்றிருந்தால்தான், அவர்கள் அவர்மேல் உறுதியான விசுவாசத்தை வைத்து, அவருக்குப் பிரியமான முறைகளில் வாழக் கவனமாயிருந்து அவரின் ஆசீர்வாதங்களைப் பெற முடியும். ஆனால், இஸ்ரவேல் ஜனங்கள் அவரை அறிகின்ற விஷயத்தில் சரியான உணர்வுடையவர்களாக இருக்கவில்லை. அவருடைய குணாதிசய நிலைகளைக் குறித்து அவ்வளவு சீரியஸான ஒரு சிந்தனையை அவர்கள் பெறவில்லை. அவர்களின் கண்கள் எப்போதும் தங்களுக்குத் தேவையான நன்மைகளைப் பெறுவதிலேயே பதிக்கப்பட்டிருந்ததால், அவரை அறிகின்ற அறிவில் மிகவும் பின்தங்கியே இருந்தார்கள். அதன் விளைவாக அவர்கள் ஒருபோதும் தேவனுக்குப் பிரியமானவர்களாக வாழ்ந்து அவரைக் கனப்படுத்தவில்லை.

பெரும்பாலான விசுவாசிகள் கர்த்தருடைய நன்மைகளுக்காக விசுவாசித்தல், ஜெபித்தல், உபவாசித்தல் என்ற நிலைகளில் ஆழமாக இருக்கின்றார்களேயன்றி, கர்த்தரை அறியும் நிலையில் குன்றியேயிருக்கின்றார்கள். எனவே எதனால், எப்படி கர்த்தரைக் கனப்படுத்துவது என்று அறியாதிருக்கின்றார்கள். நாம் ஒருவருடைய விருப்பு, வெறுப்பு, குணம் தன்மை போன்றவற்றை சரியாக அறியாதிருந்தால் ஒருபோதும் அவருக்கு முன்பாக நாம் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பதை அறிய முடியாது.

ஆம், ஆவிக்குரிய வாழ்க்கையில் வேறெந்த ஒன்றையும்விட, தேவனை அறிகின்ற அறிவிற்காகத்தான் நாம் அதிக முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். பரிசுத்த ஆவி வழங்கப்படுவதின் முக்கியமான நோக்கங்களுள் ஒன்று, தேவனை அறிதல் ஆகும். தேவ ஆவியின் மூலமாக தேவனுடைய குணாதிசயங்களையும், அவருடைய தன்மைகளையும் நாம் நமக்குள் அதிகமாக அறிந்து கொள்ள இயலும்.

சிந்தனைக்கு...

உன்னைக் குறித்து நீ சரியாக அறியாதவரை இறைவனைக் குறித்த உன் அறிவு உபயோகமற்றது.

ஜூலை 31

உணர்வுகளை இழந்தால்

எபிரெயர் 3:1 -19

பாவத்தின் வஞ்சனையினாலே கடினப்பட்டு...
எபிரெயர் 3 : 13

மீனவர்கள் நெருக்கமாக வாழும் கடலோரப் பகுதிகளில் மீன் நாற்றம் அதிகமாக இருப்பது இயற்கையானது. அந்தப் பகுதிகளில், புதிதாக யாராவது வந்தால் அந்த நாற்றத்தை சகித்துக்கொள்ளக் கஷ்டப்படுவார்கள். ஆனால், அங்கே வாழ்கின்ற மக்களுக்கு அது ஒரு பிரச்சினையாக இருப்பது இல்லை. ஆம், எந்த ஒரு மோசமான சூழ்நிலையிலும் தொடர்ந்து வாழ நேரிடும்போது எல்லாம் சர்வசாதாரணமாகி விடுகிறது.

ஒரு மனிதன் ஆகாத வழிகளில், செல்லத்துவங்கும் போது, அவனுடைய மனமே அவனைக் குற்றவாளி யாகத் தீர்க்கும். மனச்சாட்சியின் உறுத்தல்களால் மன அமைதியை இழப்பான். ஆனால், அதே பாதையில் தொடர்ந்து அவன் செல்லும்போது அந்தத் தவறுகளை உணர்கின்ற உணர்வு போய்விடும். மனசாட்சியின் உறுத்தல்கள் நின்று விடும்.அப்போது தவறுகளிலேயே அவன் வாழ்ந்தாலும் அதனால் அவன் மனநிலைகளில் கஷ்டப்படமாட்டான். ஆனால், தவறை உணர முடியாமல் கடினமாகிப் போன அவனுடைய மனநிலையின் விளைவால், அவன் போகப் போக பலவிதக்கேடான குழிகளில் விழுந்து மிகுந்த கஷ்டமடைவான்.

நம்முடைய தவறுகளை ஆவியானவர் கண்டித்து உணர்த்துவது உண்மை. ஆனாலும், கீழ்ப்படிந்து விலகிவர மறுக்கும்போது, தவறுகளைச் சுட்டிக்காட்டும் பணியை ஆவியானவர் நிறுத்திவிடுவார். அப்போது தவறுகளின் நடுவிலும் எல்லாம் சாதாரணமாயிருக்கும். எவ்வளவோ முறை எச்சரித்தும், தேவனுடைய வார்த்தைகளின்படி நடவாமல், மனம் போனபோக்கில் செயல்பட்ட இஸ்ரவேலர்களை தேவன் ஒருநாள் அவர்களின் மனக்கடினத்தின்படி செயல்பட விட்டுவிட்டார். ஆனால் அதுவே இஸ்ரவேலர்களின் வீழ்ச்சிக்கு வழிவகுத்தது.

சிலர் தவறாகப் பேசுகின்றனர். சில காரியங்களை தவறாகச் செய்கின்றனர். சில குணநிலைகளில் தவறாகத் தொடருகின்றனர். ஆனாலும், அவர்கள் தங்களுக்குள் அவைகள் தவறு என உணர்ந்தும் உணர்வுகள் இல்லாமல் இருக்கின்றனர். எனவே, அவைகள் பெரிய தவறுகள் இல்லையென்றும் அவைகள் சாதாரண விஷயங்கள் எனவும், எண்ணிவிடுகின்றனர். குற்ற உணர்வுகளை இழந்துவிட்ட காரணத்தால் நம்முடைய பேச்சுகளும், செயல்களும் குற்றமற்றவை என எண்ணிவிடக்கூடாது. பலமுறை கண்டித்தும், உணர்த்தியும் அவ்விதத் தவறுகளில் தொடர்ந்தால், பாவத்தைக் கண்டித்துணர்த்தும் பரிசுத்த ஆவியின் கிரியை அங்கே நிறுத்தப்பட்டு விட்டது என்பதே பொருள்.

சிந்தனைக்கு...

ஆவியின் ஆளுகைக்கு நீ அடிமையாயிருந்தால்,
பாவத்தின் இழுவைக்கு நீ விடுதலையாயிருப்பாய்.

ஆகஸ்ட் 1
பலன் எதிர்பாராமல்

மத்தேயு 6:1-15

பிதா தாமே உனக்கு வெளியரங்கமாய்ப் பலனளிப்பார்.
மத்தேயு 6:4

மருத்துவமனை ஒன்றில் சிகிட்சை பெற்றுக் கொண்டிருந்த நோயாளி ஒருவர், தன்னை மிகவும் அக்கறையோடு கவனித்ததற்காக மருத்துவரை மிகவும் மெச்சினார். அதற்கு அந்த மருத்துவர் நான் என் கடமையைத்தான் செய்தேன் என்றார். அதற்கு அந்த நோயாளி நீங்கள் மருத்துவம் மட்டும் பார்க்கவில்லை. என்னிடம் மிகவும் அன்புடன் பேசிப்பழகி எனக்கு ஆறுதலாயிருந்தீர்களே என்றார். அதற்கு அந்த மருத்துவர் அது என்னுடைய பணிக்கு தேவையான மிக முக்கியமான கடமைகளில் ஒன்றல்லவா என்றார்.

வாழ்க்கையில் நாம் செய்யும் சில நல்ல செயல்களையும், நாம் வெளிப்படுத்தும் நல்ல சுபாவங்களையும் பார்த்து ஏதோ மிக மிக அபூர்வமான விஷயங்களைச் செய்வதாக நாம் எண்ணிவிடுகின்றோம். எனவே, அதற்காக நாம் மற்றவர்களின் நன்றியுணர்வுகளையும், பாராட்டுகளையும், அதிகமாக எதிர்பார்க்கின்றோம். நாம் செய்கின்ற ஒவ்வொரு செயல்களுக்கும் புகழுரைகள் தேவை என எண்ணுகின்றோம்.

ஆனால், நாம் நல்லது செய்வதும், நற்குணங்களை வெளிப்படுத்துவதும் நம்முடைய நியாயமான கடமைகளில் ஒரு பகுதியே. அது நாம் உண்மையில் மனிதர்கள் என்பதை அடையாளப்படுத்துவதற்கு அவசியமானவையே. மனிதன் தன்னை மனிதன் என்று அடையாளங்காட்ட அவனுக்கு மிகத் தேவையானவைகள் நற்குணங்கள். அதனை நாம் வெளிப்படுத்தாவிட்டால், நாம் மனிதப் போர்வையில் இருந்தாலும் மனிதர்கள் அல்ல.

நாம் அன்பு காட்டுவதற்காக மற்றவர்கள் பரிசு தரத் தேவையில்லை. நாம் நன்மை செய்வதற்காக யாரும் பாராட்டு விழா நடத்தத் தேவையில்லை. நாம் நீதி நேர்மையாய் நடந்து கொண்டதற்காக யாரும் புகழ்ந்து கொட்டத் தேவையில்லை. ஏனென்றால், இது போன்ற நற்குணங்களை வெளிப்படுத்தும்போது அதனால் நமக்குள்ளே ஒரு மகிழ்ச்சி கிடைக்கிறது. தேவனும் நாம் செயல்பட வேண்டிய விதமாகச் செயல்படுவதால் நம்மை ஆசீர்வதிக்கின்றார்.

சூரியன் பிரகாசிக்க வேண்டும். காற்று வீச வேண்டும். மரங்கள் கனி தர வேண்டும். மனிதன் கடவுளின் சாயலை வெளிப்படுத்த வேண்டும். இவை கடமைகள். பாராட்டுதல்களுக்காக நடக்கின்றவைகள் அல்ல. நாம் எதையாவது எதிர்பார்த்து நல்லதைச் செய்தால் நல்லதைச் செய்யும் இயற்கைப் பண்பு நமக்கு இல்லை என்று அர்த்தம். நாம் எதையாவது எதிர்பார்த்து நற்பண்புடையவர்களாக நடந்துகொண்டால், அவை இயற்கையாக நடைபெறாமல் செயற்கையாக நடைபெறுகின்றது என அர்த்தம் ஆகும்.

சிந்தனைக்கு...

நற்குணங்களை பாராட்ட பலர் இல்லையே என்று வருந்தாதே நல்லவர்கள் இங்கே வெகு சிலரே உள்ளனர் என்பதை மறவாதே.

ஆகஸ்ட் 2

ஐக்கியமே முக்கியம்

எபிரெயர் 1 : 6 -19

விசுவாசத்தினாலே ஆபிரகாம்...
எபிரெயர் 11 : 8

ஆபிரகாமின் நாட்களில் விசுவாசத்தைக்குறித்த புத்தகங்களோ, விசுவாசத்தில் வளர்வது எப்படி என்பதை விளக்கும் பிரசங்கங்களோ கிடையாது. ஆனால், ஆபிரகாம் விசுவாசத்தில் வல்லவனாக விளங்கினான். தாவீது, நெகேமியா போன்றோர் காலத்தில் வல்லமையாகச் ஜெபிப்பது எப்படி என்பது போன்ற புத்தகங்களோ, கருத்தரங்குகளோ கிடையாது. ஆனால், அவர்கள் மாபெரும் ஜெப வீரர்களாக நின்றார்கள்.

இந்நாட்களில் ஆவிக்குரிய அனுபவங்களைப் பெறுவதற்கான வழிமுறைகளைக் கூறும் சொற்பொழிவுகளும், புத்தகங்களும் கணக்கிலடங்காதவை. ஆனாலும், அனுபவங்கள் அபூர்வமாகவே உள்ளன. அறிவுப்பூர்வமாக ஏராளமான ஆவிக்குரிய விஷயங்களைக் கற்பதாலோ, அறிவதாலோ மட்டும் அனுபவங்கள் உருவாகிவிடாது. ஏராளமான விளக்கங்களை அறிந்துகொள்வதால் மட்டும் ஆவிக்குரிய அனுபவங்கள் தோன்றிவிடாது. இறையியல் வழிமுறைகளினால் நம்முடைய ஆவிக்குரிய அறிவு நிலைகள் வளரலாம். ஆனாலும், அந்த அறிவு நிலைகள் அனுபவங்களாக மாற வேண்டுமானால், தேவனோடுள்ள உறவு நிலைகள் ஆழமாக வேண்டும். உறவை உணராத நிலையில் அறிவுகள் பயனற்றது.

ஆபிரகாம், தாவீது போன்றோர் அதிக விளக்கங்களை அறியவில்லை. ஆனாலும், அவர்களிடம் அனுபவங்கள் தோன்றின. ஏனென்றால், அறிவுப் பூர்வமாக அநேகமான விஷயங்களைக் கற்பதினால் அல்ல: ஆவிக்குரிய பிரகாரமாக தேவனோடு நெருங்கி வாழ்வதினாலேயே அனுபவங்கள் ஏற்படுகின்றன. தேவ ஐக்கிய நிலையும், தேவனுக்காக வாழ்கின்ற விழிப்புணர்வுமிக்க வாழ்க்கையும் தான் ஆபிரகாம், தாவீது போன்றோரை விசுவாச வீரர்களாகவும், ஜெப வீரர்களாகவும் மாற்றியது.

ஆபிரகாமின் வாழ்க்கை நற்குணங்களாலும், உயர்ந்த தெய்வீகப் பண்புகளினாலும் அழகுபடுத்தப்பட்ட ஒரு வாழ்க்கை என்பது உண்மை. ஆனால், அந்த நற்குணங்களும், பண்புகளும் பல போதனைகளைக் கேட்டதின் விளைவோ, இறையியல் அறிவைப் பெற்றதின் விளைவோ அல்ல, அவைகள் தேவனோடு பழகிவந்ததின் பிரதிவிளைவுகளே. கர்த்தரோடு உண்மையான ஐக்கியம் ஏற்படாத நிலையில், அனுபவங்களைக் குறித்து ஆயிரந்தான் நாம் அறிந்தாலும் கற்றாலும், அவைகளால் பயன் இல்லை. உண்மையாக நம்மை ஒப்புக்கொடுத்த ஒரு ஆவிக்குரிய நிலைதான் விசுவாசம், ஜெபம், பரிசுத்தம், அன்பு ஆகிய தெய்வீக அனுபவங்களை நமக்குள் ஏற்படுத்துகிறது.

சிந்தனைக்கு...

தேவ உறவு வலிமையாக இல்லாத நிலையில், தேவனைக் குறித்த வலிமையான விசுவாசம் விளைவுகளைத் தராது.

ஆகஸ்ட் 3
எவ்விடத்திலும்

ரோமர் 2:11 -29

நியாயப் பிரமாணத்தைக்குறித்து மேன்மை பாராட்டுகிற நீ...
ரோமர் 2 : 23

ஒருவர் வீடு ஒன்றைக் கட்டுவதற்காக டவுன் பிளானிங் அலுவலகம் சென்ற போது குறிப்பிட்ட ஒரு அனுமதியைப் பெற்றிட சில ஆயிரங்களை லஞ்சமாகக் கொடுக்க நேர்ந்தது. அதனைக் கொடுத்து அனுமதியைப் பெற்றுக் கொண்டார். அதே மனிதரிடம் ஒரு பிச்சைக்காரன் வந்து “ஐயா சாமி” என்றான் உடனேயே அவர் “போடா சோம்பேறி வேலை செய்து சாப்பிடுங்கடா என்று திட்டித் துரத்தினார். உடன் வந்திருந்த நண்பரிடம் பிச்சைக்காரனை ஊக்குவிப்பது தவறு என்றார். பிச்சை கொடுப்பது பிச்சை எடுத்தலை ஊக்குவிக்கும் செயல் என்று அறிந்திருந்த இந்த மனிதரால், லஞ்சம் கொடுப்பதால் லஞ்சம் வாங்கும் பழக்கம் ஊக்குவிக்கப்படும் என்று உணர்ந்து செயல்படத் தெரியவில்லையே.

சில சிந்தனைகள், கொள்கைகள் நல்லவையே. ஆனால், அவை எல்லா இடங்களிலும் எல்லா விஷயங்களிலும் பின்பற்றப்பட வேண்டும். நகை போடுவது வேதம் கண்டிக்கும் ஆடம்பரத்தின் அடையாளம் என்று சில கிறிஸ்தவர்கள் நம்புகின்றனர். ஆனால், வீடுகட்டும் போதும், வீட்டிற்குள் ஏராளம் ஆடம்பரப் பொருட்களைக் கொண்டுவரும் போதும், மிகவும் ஆடம்பரமான காரில் போகும் போதும், மிக ஆடம்பரமாக வைபவங்கள் நடத்தும் போதும், மிக ஆடம்பரமாக உடுக்கும் போதும் அந்த ஆடம்பர எதிர்ப்பு கொள்கை ஏன் வரவில்லை?

சிலர் நகை விஷயத்தில் தாழ்மையைப் பின்பற்றுகின்றனர். ஆனால், வேறு எல்லாப் பகுதியிலும் பெருமையாகவே வாழ்கின்றனர். குணாதிசயங்களில் தாழ்மைப் பண்பை வெளிப்படுத்த அவர்களுக்குத் தெரியவில்லை. மதுபானம் சிலரை அடிமைப் படுத்துகின்றன. ஆகாத சில பழக்கங்கள் சிலரை அடிமைப்படுத்துகின்றது. இதனை நாம் வெறுக்கின்றோம். போதைக்கும், ஆகாத பழக்க வழக்கங்களுக்கும் அடிமையாயிருப்பதைப் பார்த்து எரிச்சலடைகின்றோம்.

ஆனால், நம்மில் பலரைத் தொலைக்காட்சி அடிமையாக்கியிருக்கிறதே. சீரியல்கள் அடிமையாக்கியிருக்கிறதே. விளையாட்டுப் போட்டிகள் அடிமையாக்கி யிருக்கிறதே. அரட்டை அடித்தல், தேவையில்லா டெலிபோன் உரையாடல்கள் அடிமை யாக்கியிருக்கிறதே. பண ஆசையும், பொருளாசையும் அடிமையாக்கியிருக்கிறதே அவைகளை நாம் ஏன் தகாத காரியங்களாக எண்ணவில்லை.போதை என்பது மதுபானத்தால் மட்டுமல்ல. டி.வி. விளையாட்டு, பணம், அரட்டை போன்ற வற்றினாலும் வருகிறது. இந்த விதமான போதைகளுக்கும் நாம் எச்சரிக்கையா யிருக்க வேண்டும்.

சிந்தனைக்கு...

உன் பலவீனம் எது என்பதைக் கண்டுபிடிக்கும் வரை
உன் பலம் எதுவரை என்பது கேள்விக்குறியாகவே இருக்கும்

ஆகஸ்ட் 4
ஏன் வெட்கம்?

எரேமியா 2:21-37

அசீரியாவினால் வெட்கிப் போனது போல........
எரேமியா 2:36

சமீபத்தில் ஒரு சகோதரி தன்னுடைய மன வருத்தங்களைக் குறித்து என்னிடம் பகிர்ந்துகொண்டபோது திரும்பத் திரும்பக் கூறின ஒரு விஷயம், கர்த்தர் என்னை விரும்பாதவர்களுக்கு முன்னாலும் விரோதிக்கிறவர்களுக்கு முன்னாலும் அதிகமாக வெட்கப்படுத்துகிறார் என்பதாகும்.

தேவன் நம்மை குறிப்பிட்ட ஒரு பாதையில் நடத்தும்போது சில நேரங்களில் நமக்கு எதிராக இருக்கிறவர்களுக்கு முன்னால் வெட்கப்படத்தக்க விதமாக சில காரியங்கள் நேரிடுவது உண்மைதான். தாவீதும், யோசேப்பும் அவ்விதப் பாதையைக் கடக்க நேரிட்டது. ஆனால், அது தற்காலிகமானது. நிச்சயம் ஒரு நாள் யாருக்கு முன்னால் வெட்கப்பட நேர்ந்ததோ, அவர்களுக்கு முன்பாக நிமிர்ந்து நிற்கத் தேவன் செய்வார். ஆனால், வெட்கப்படத்தக்கதாக காரியங்கள் நடப்பது வேறு காரணங்களாலும் இருக்க முடியும். இஸ்ரவேல் மக்களுடைய வரலாற்றைக் கவனிக்கும்போது, இதனை நாம் காண்கிறோம். வழி தவறிச் சென்ற ஜனங்களை தம்முடைய வழியில் கொண்டு வருவதற்கேதுவாக தேவன் அவர்களை அவர்களுடைய எதிரிகளுக்கு முன்னால் வெட்கப்படத்தக்க சூழ்நிலைகளை அனு மதித்தார். தம்முடைய ஜனங்களைத் தண்டிக்கவும், திருத்தவும் அவ்வித வழியை அவர் கடைப்பிடித்தார்.

ஏலியின் காலத்தில் இஸ்ரவேலர்கள் மிகுந்த விசுவாசத்துடன் உடன்படிக் கையைப் பெட்டியை போர்க்களத்தில் கொண்டுவந்தனர். தேவன் முற்காலங்களில் செய்ததைப் போல இப்பொழுதும் பெலிஸ்தியரை முறியடித்து வெற்றிதருவார் என எதிர்பார்த்தார்கள். ஆனால், அங்கே அவர்கள் தோல்வியைச் சந்தித்தார்கள். பெலிஸ்தியர்களின் முன்னால் வெட்கப்பட்டுப் போனார்கள். காரணம் என்ன? அவர்கள் தேவனைக் கனப்படுத்தி வாழத் தவறிப்போனார்கள்.

தேவனுக்குப் பிரியமாக அவருடைய வழியிலே அவருடைய மக்கள் நடவாத போது, அது தேவனுடைய மகிமையை அவமாக்குகிறது. எனவே, யாருக்கு முன்னால் நம்மை தலைநிமிர்ந்து நிற்க வைத்திருக்கவேண்டுமோ, அங்கே தேவன் நம்மை தலைகுனிய விட்டுவிடுகிறார். பகைவர்கள் நம்மை பரிகசிக்கும் அளவுக்கு காரியங்கள் அமைந்தால், முதலில் தேவனுக்கு நாம் நல்ல நண்பர்களாக வாழ்கின்றோமோ என்ற சோதித்துப் பார்த்து, நம்முடைய தவறுகளை உணர்ந்து, தேவனுக்கு முன்பாக நம்மைத் தாழ்த்திக்கொள்ள வேண்டும். அப்போது மறுபடியும் தேவன் நம் தலையை உயர்த்துவார்.

சிந்தனைக்கு...

இறைவனின் விதிகளை மதித்து வாழத் தயங்கினால்
சாத்தானின் சதிவழிகளில் மயங்கிவிழ நேரிடும்.

ஆகஸ்ட் 5
பிறரின் வீழ்ச்சியில்

நீதிமொழிகள் 24:15-34

உன் சத்துரு விழும்போது சந்தோஷப்படாதே...
நீதிமொழிகள் 24:17

தென்னை மரத்திலிருந்து கீழே விழுந்த காய்ந்த ஓலையைப் பார்த்து, பச்சை ஓலை கேலி செய்து சிரித்ததாம். அதைக்கண்ட குருவி ஒன்று அந்தப் பச்சை ஓலையைப் பார்த்து வேடிக்கையாகச் சிரித்ததாம். என்னைப் பார்த்து ஏன் சிரிக்கிறாய்? என்று கேட்டதாம் பச்சை ஓலை. சற்று முன்பு கீழே விழுந்த காய்ந்த ஓலை பச்சையாக இருக்கும் போது காய்ந்த ஓலைகள் விழும் போதெல்லாம் கைகொட்டிச் சிரித்து வந்தது. இன்று பரிதாபமாக விழுந்துவிட்டது. அதைப்பார்த்து உனக்குச் சிரிப்பு வந்தது. நாளைக்கு நீயும் விழப் போகிறாய் என்பதை நினைத்த போது எனக்கும் சிரிப்பு வந்துவிட்டது என்றதாம் அந்தக் குருவி.

இன்னொருவருடைய வீழ்ச்சி நம்முடைய மனதிற்குள் ஒரு குஷியை உரு வாக்குமாயின் அது நம்முடைய மனிதாபிமானமற்ற தன்மையையே காண பிக்கும். இன்று இன்னொருவருக்கு நிகழ்வது நாளைக்கு நமக்குக்கூட நடக்க முடியும். தாவீதின் பரம விரோதிதான் சவுல் அரசன். ஆனால், அந்த சவுலுக்கு ஏற்பட்ட வீழ்ச்சி தாவீதின் மனதில் களிப்பை உருவாக்கவில்லை. அக்கிரமக்காரன் அழிந்தான் என்று அவன் ஆரவாரம் செய்யாமல், அவனுக்காக அங்கலாய்த்துக் கண்ணீர்விட்டான். அது தேவ பக்தியின் முதிர்ச்சி.

பிறருக்கு நேர்ந்த கஷ்டங்கள் அவர்களுடைய அக்கிரமப்போக்கிற்கு நியா யமான பலன்தான் என்று எண்ணத்தக்க சூழ்நிலை இருந்தால்கூட, கஷ்டம் யாருக்கு வந்தாலும் அதற்காகப் பரிதவிக்க வேண்டுமேயன்றி அதைப் பார்த்துச் சந்தோஷப்படக்கூடாது. அது தேவன் விரும்பாத செயலேயாகும். சிலர் பிறர் கஷ்டப் பட நேரிடும் காலங்களில் அவன் செய்த தவறுகளின் பலனை அனுபவிக்கின்றான், நாம் என்ன செய்ய முடியும் என எண்ணி, அவர்களின் இக்கட்டான நிலைகளைப் பாராமல் கண்ணை மூடி விடுகிறார்கள். ஆனால், ஏன் அவனுக்குத் துன்பம் என்ற ஆராய்ச்சி அல்ல. அந்த நேரத்தில் நாம் நம்மால் இயன்ற ஒரு ஆறுதலின் செயலைச் செய்வதே தேவனுக்குப் பிரியமாயிருக்கும்.

ஆபிரகாமின் உறவை அசட்டை செய்து தனி வழி தேடி அவனை விட்டுப் பிரிந்து சென்றவன் லோத்து. ஒரு நாள் அவனுக்கு இக்கட்டு நேரிட்டது. அவன் அந்நிய அரசனால் சிறைபிடிக்கப்பட்டான்.ஆபிரகாம் அதனால் வருத்தமடைந் தானேயன்றி, சந்தோஷப்படவில்லை. அவனவன் செய்த தவறுக்குத் தகுந்த பலனை அனுபவிக்கின்றான் என்று எண்ணாமல், பாச உணர்வோடு ஓடோடிப் போய் அவனை மீட்பதற்கு உரிய நட வடிக்கைகளை எடுத்தான்.

சிந்தனைக்கு...

இறைவன் உனக்கு எதையாவது செய்யவேண்டுமானால்
மனிதனுக்கு நீ என்ன செய்யவேண்டும் என்பதை அறிந்திரு.

ஆகஸ்ட் 6

வெளியே தெரியட்டும்

யோவான் 13:21-38

மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு.......
மத்தேயு 5:16

நீங்கள் ஒரு மரத்தைப் பார்க்கின்றீர்கள். அந்த மரத்தில் எந்த ஒரு கனியும் இல்லை. ஆனால், இன்னொருவர் உங்களிடம் இந்த மரத்தில் நல்ல கனிகளைக் காணமுடியவில்லையே என்று தவறாக நினைக்காதீர்கள். இதனுடைய கனிகளை வெளியே பார்க்க முடியாவிட்டாலும் இது மிகச்சிறந்த ஒரு கனிமரம் என்று கூறுகிறார். உங்களால் அவருடைய கருத்தைச் சரியானது என்று ஏற்க இயலுமா? மரம் நல்லதென்றால் அங்கே நல்ல கனிகளும் வெளியரங்கமாகக் காணப்படும். நம்மில் அநேகர் மிகவும் நல்ல கிறிஸ்தவர்கள். நாம் அடிக்கடி யார் என்னைப் பற்றி என்ன நினைத்தால் என்ன, கர்த்தர் என்னை அறிவார், என் உள்ளம் அவருக்குத் தெரியும், என் மனசாட்சிக்கு நான் சுத்தமாகயிருக்கின்றேன் என்றெல்லாம் பேசி நமக்கு நாமே ஆறுதல் ஏற்படுத்திக்கொள்கின்றோம்.

மேற்கண்ட எண்ணங்கள் தவறல்ல. ஆனால், நம் உள்ளத்தின் நிலமை கர்த்தருக்கு மட்டுமோ நம்முடைய மனசாட்சிக்கு மட்டுமோ தெரிகின்ற ஒன்றாக இருந்தால் மட்டும் போதாது. பிறர் நம்மிடம் நம்முடைய நல்ல இதயத்தின் பிரதிபலிப்பு களைக் காண்பதற்கு ஏதாவது வேண்டும்.

இயேசுவை இருதயத்தில் ஏற்றுக்கொண்டவர்களுக்கு அவர் தம்மை வெளிப்படுத்துகிறார். (யோவான் 14:21) அவ்விதம் கர்த்தர் ஒருவருக்குள் தம்மை வெளிப்படுத்தும் போது அந்த அனுபவம் அவருக்குள் மட்டுமே அறியப்படுவதில்லை. அவர் வழியாக பிறர் கர்த்தருடைய மகிமையைப் பார்ப்பார்கள். என்னைக் கண்டவன் என் பிதாவைக் கண்டான் என்றார் இயேசு. நம்மை காண்கிறவர்களுக்கு நம்மிடம் இயேசுவின் மகிமை காணப்பட வேண்டும். அதுவே ஆவிக்குரிய வாழ்க்கை.

கனிதரும் வாழ்க்கை அல்லது நற்குண வாழ்க்கை என்பது கர்த்தர் மட்டும் பார்ப்பதற்காக அல்ல. மனிதர்கள் அதைப் பார்க்க வேண்டும். எனவேதான் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து உங்கள் வெளிச்சம் அவர்களுக்கு முன்பாகப் பிரகாசிக்கக்கடவது என்றார். நீங்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருந்தால் அதன் மூலம் எல்லோரும் உங்களை என் சீடர்கள் என்று அறிந்து கொள்வார்கள் என்றார் இயேசு. (யோ 13:35) இதனுடைய பொருள் என்ன? நாம் ஒருவரிலொருவர் அன்பாயிருந்தால் அதனை நிச்சயம் பிறரால் பார்க்க முடியும் என்பதே. அன்போ, பொறுமையோ, தாழ்மையோ, இரக்கமோ, தயவோ, சாந்தமோ எதுவாயினும் அவைகள் இதயத்திற்குள் மட்டுமே அறியப்பட முடியும் என்பது அல்ல. அவைகள் அகத்தில் இருந்தால் நிச்சயம் வெளியே தெரியும்.

சிந்தனைக்கு...

அகத்தின் அழகை முகத்தில் பார்க்கலாம். ஆனாலும், முகத்தின் அழகை அகத்தின் அழகு என்று எண்ணாதே.

ஆகஸ்ட் 7
சகிப்பதும் அவசியம்

1 பேதுரு 2:14-25

உபத்திரவங்களைப் பொறுமையாய்ச் சகித்தால்..........
1 பேதுரு 2:19

வியாபார குழுமம் ஒன்றில் பணிபுரிந்த ஒருவர் நீதியும், நேர்மையும், தேவபக்தியும் உடையவர். ஆனால், புதிதாக நியமிக்கப்பட்டு வந்த மேலதிகாரி இவருடைய குணங்களுக்கு முற்றிலும் எதிரான குணங்களை உடையவர். இவர் ஒரு கிறிஸ்தவ பக்தியாளர் என்பதை அறிந்ததிலிருந்தே அந்த மேலதிகாரி அவர்மேல் காய்மகாரங்கொண்டு பலவிதங்களில் அவருக்கு நேரடியாகவும், மறைமுகமாகவும் வருத்தமூட்டிக் கொண்டிருந்தார். இதனால் மனம் நொந்துபோன அவர் அந்த மேலதிகாரி மாற்றல் ஆகிப்போக வேண்டும் அல்லது தனக்காகிலும் இடமாற்றம் கிடைக்க வேண்டும் என்று விசுவாசத்தோடு ஜெபித்தார். ஆனால், அப்படி எதுவும் நடக்கவில்லை. இதனால் மனமுடைந்த அவர் தனது வேலையை ராஜினாமா செய்துவிட்டு வேறொரு கம்பெனியில் சேர்ந்தார். ஆனால், அது முதலாவது இடத்தைவிட அதிக பாதகமான இடமாக இருந்தது.

நீதியும், நேர்மையும், பக்தியும் உடையவர்களுக்கு, இந்த தீமையான உலகம் ரோஜாமலர் இதழ்களை தூவிக்கொண்டிருக்கும் என்று எதிர்பார்க்க முடியாது. நீதியும், பக்தியும் உண்மையும் சோதனைகளைச் சந்திக்க நேரிடும் என்பது இயற்கையான விஷயம். தேவனும் இவ்வித நற்குணங்களுடைய மனிதர்களுக்கு உடனடித் தீர்வுகளை ஏற்படுத்தி அவர்களுக்குச் சௌகரியங்களை கட்டளையிடுவார் என்று கூற முடியாது.

ஏனென்றால், நேர்மையாளர்களும் உண்மையாளர்களும் தங்களுக்கெதிராக எழுகின்ற எதிர்மாறான சூழ்நிலைகளை, ஏற்றுக்கொள்ளவும் சந்திக்கவும் பக்குவமடைய வேண்டும் என்று தேவன் விரும்புகின்றார். அதுபோன்ற சூழ்நிலைகளில் தான் தேவனுடைய நாமம் மகிமைப்படுவதற்கான வாய்ப்புகள் ஏற்படுகின்றன.

தாவீது நீதிமான். உண்மையான தேவ பக்தன். ஆனால், அவனுக்கெதிராக சவுலின் அநீதியின் ஆயுதங்கள் செயல்பட்டன. ஆனால், பொறுமையுடனும், தாழ்மையுடனும், சகிப்புத்தன்மையுடனும், தேவன் ஒரு நாள் நீதி செய்வார் என்ற விசுவாசத்துடனும் அவைகளைச் சந்திக்கும்படியாகவே தேவன் அவனை வழிநடத்தினார். எனவே, ஒரு குறிப்பிட்ட காலம் வரை தாவீதுக்கு எதிராக வந்த அக்கிரமச் செயல்களை அவர் தடுக்கவில்லை. ஏனென்றால், ஒரு உயர்வை அவனுக்குக் கொடுக்கும் முன்பு அதற்கு அவன் தகுதியாகும்படியாக, அவனை அவர் அந்த சோதனைகள் வாயிலாகப் பட்டை தீட்டப்பட்ட வைரமாக மாற்ற விரும்பினார்.

சிந்தனைக்கு...

தீமை செய்தவனுக்கு தீமை செய்ய நினைத்தால்
நீயும் அவனும் ஒரே இனம் என்பது தெளிவாகிவிடும்.

ஆகஸ்ட் 8
பக்தி முயற்சிகள்

லூக்கா 11:38-42

நீங்கள் பாத்திரங்களின் வெளிப்புறத்தைச் சுத்தமாக்குகிறீர்கள்...
லூக்கா 11:39

பக்தி முயற்சிகள் பெரும்பாலும் நம்முடைய உட்புறத்தை அப்படியே இருக்க விட்டு வெளிப்புறத்தை மட்டும் சுத்தம் செய்து கொண்டிருக்கும். சில நேரங்களில் பரிசுத்த வாழ்க்கை என்றதும் நம்முடைய வெளிப்புறச் செயல்களையும், குணங்களையும், நடத்தைகளையும் செவ்வையாக்குவதிலேயே நாம் அதிகக் கவனம் செலுத்துகின்றோம். எனவே, நாம் ஆவிக்குரியவர்கள் அல்லது பரிசுத்த மானவர்கள் அல்லது தேவனுக்குக் கீழ்ப்படிகின்றவர்கள் என்ற ஒரு தோற்றம் ஏற்படும் விதமாக நாம் நல்ல குணங்களைக் காட்டி நல்ல செயல்களைச் செய் கின்றோம். இப்போது புறம்பாக நம்மைப் பார்க்கின்றவர்கள் ஓரளவிற்கு நம்மைப் பரிசுத்தமாக வாழ்கின்றவர்கள் போலப் பார்க்க முடியும். ஆனால், உட்புறங்களை ஆராய்ந்து பார்க்கும் தேவன் நம்மைப் பார்க்கையில், அங்கே நாம் இன்னும், அசுத்தமானவர்களாகவே இருக்கின்றோம்.

நாம் பொறுமையாக இருப்போம். ஆனால், நீடிய பொறுமை தேவைப்படும் போது தோல்வியடைவோம். நாம் சாந்தமாகப் பேசுவோம், செயல்படுவோம். ஆனால், நீடிய சாந்தம் தேவைப்படும் சோதனையான வேளையில் ஆத்திர உணர்வுக்கு அடிமையாகிவிடுவோம். நாம் அன்பாகப் பேசுவோம், செயல்படுவோம், ஆனால், சில தீமைகளை வருத்தங்களைச் சகித்து, அந்த அன்பில் நிலை நிற்க வேண்டிய தேவை ஏற்படும்போது அன்பை உதறிவிடுவோம்.

இவ்விதமாக நம்முடைய உள்நிலைகளைச் சீர்செய்யாமல், வெளிப்புறங்களை மட்டும் வெண்மையாக்குவது நம்முடைய மனதின் அமைதியைப் பாதிக்கக்கூடும். ஏனென்றால், நம்மில் இயற்கையாகத் தோன்றாதவைகளைச் செயற்கையாக சுய பலத்தாலும், மனக் கட்டுப்பாட்டினாலும் நாம் தோன்றப்பண்ணுவதற்கு முயற்சி செய்வதால், அது நமக்குக் கடினமான வேலையாகிவிடுகிறது. அது மனதிற்குப் பாரத்தையும், குற்ற உணர்வுகளையும் ஏற்படுத்துகிறது.

நாம் மாறுதலை முதலாவது எதிர்பார்க்க வேண்டிய இடம் உள்ளான இருதயம். கர்த்தரோடு சரியான உறவை ஏற்படுத்தி, உள்ளான நிலைகளை அவர் பரிசுத்த மாக்குவதைக் காணவேண்டும். பாவ இருதயம் நீக்கப்பட்டு, பரிசுத்த இருதயம் உள்ளே தோன்றும்போது, அதன் விளைவாக இயல்பாக ஏற்படுவதே வெளியே தெரியும் பரிசுத்த வாழ்க்கை. பானையைப் பரிசுத்தப்படுத்தினால்தான், அகப்பையில் வருவது சுத்தமாயிருக்கும். பானையை அப்படியே வைத்துக்கொண்டு அகப் பையை மட்டும் கழுவிக் கொண்டிருப்பது வீண் வேலை அல்லவா!

சிந்தனைக்கு...

கிறிஸ்து வாழ்கிறார் என்பதை வாயினால் சொல். அவர் உன்னிடம் வாழ்கிறார் என்பதை வாழ்க்கையினால் சொல்.

ஆகஸ்ட் 9
பலவீனம் ஒரு பலம்

1 கொரிந்தியர் 1:18-31

உலகத்தில் பலவீனமானவைகளைத் தெரிந்து கொண்டார்....
1 கொரிந்தியர் 1:27

நிர்வாகத்திறன், கல்வித்திறன், இசைஞானம், பாடும் தாலந்து, பேச்சாற்றல், பொருளாதார வசதி போன்றவைகளைக் கர்த்தரிடம் ஒப்புவித்து, அவைகளை தேவநாமம் மகிமைப்படும் விதமாக உபயோகிக்கும்படி நாம் அர்ப்பணிக்கலாம். இது நல்ல அனுபவம். கர்த்தர் அவைகளை மிக ஆசீர்வாதமாகப் பயன்படுத்துவார் என்று விசுவாசிக்கலாம்.

ஆயினும், இவைகள் யாவற்றையும்விட, ஒரு மனிதனுடைய பல வீனங்களைத் தேவன் மிக வல்லமையான காரியங்களுக்காக உபயோகிக்க முடியும் என்பது ஆச்சரியமான ஒரு விஷயம். நம்முடைய பலமான காரியங்களைவிட, நம்முடைய பலவீனங்களில்தான் தேவன் தம்முடைய பலத்தை பரிபூரணமாக விளங்கப்பண்ணுகிறார். (11 கொரி 12:9)

அப்படியானால் நம்மிடத்தில் பலத்திற்கும், மேன்மைக்கு உரிய காரியங்கள் இல்லையே என்று கவலைப்படத் தேவையில்லை. எதுவும் இல்லாவிடினும் பலவீனம் என்ற ஒன்று இருக்கிறதே. அது போதும். அதைக் கொண்டே தேவ ஆசீர்வாதங்களைப் பெற்றுவிடலாம். ஒரு காலகட்டத்தில் மோசேயிடம் அறிவு, ஞானம், இளமை, வேகம், துடிதுடிப்பு, அரண்மனைப் பின்னணி, சாதனை புரியும் ஆற்றல் யாவும் இருந்தன. அவைகளை அவன் தேவனுக்காகப் பயன்படுத்த விரும்பினான். ஆயினும், அந்த எண்ணம் தேவ ஆதரவை உடனே ஈர்க்கவில்லை.

ஆனால், ஒருநாள் பலம் என்று எண்ணத்தக்க சிறப்பம்சங்கள் யாவற்றையும் இழந்து ஒரு சாதாரண மேய்ப்பனாக நின்றான். நான் எம்மாத்திரம் என்று சொல்லத்தக்க பலவீனமான ஒரு நிலையை அடைந்தான். (யாத் 3:11) ஆனால், அந்த பலவீன நிலையைத்தான் தேவன் விரும்பி ஏற்றுக்கொண்டு அதன் மூலம் மிகப்பெரிய அற்புதமான காரியங்களைச் செய்தார். மோசேயை மிக வல்லமையாகச் செயல்படுத்துவதற்கு, தேவன் அவனுடைய பலத்திற்குரிய அம்சங்களையல்ல. பலவீனமான ஒரு நிலையையே எதிர்பார்த்திருந்தார்.

ஏனென்றால், தன் பலவீனத்தை உணர்ந்த மனிதன் தன் சுயபலத்தைச் சாராமல் தேவனைச் சார்ந்து நிற்பான். தன் பலவீனத்தைத் தெரிந்துகொண்ட மனிதன் தன்னைக் குறித்து மேன்மைபாராட்டாமல் தேவனைக் குறித்தே மேன்மை பாராட்டுவான். தன் பலவீனங்களைக் குறித்த அறிவுடையவன் தன்னுடைய வழிகளில் காரியங்களை சாதிக்க விரும்பாமல், தேவனுடைய வழிகளையே நம்பி யிருப்பான்.

சிந்தனைக்கு...

தோல்விக்குப் பின்வரும் வெற்றி மனிதனிடம் நிலைக்கிறது
வெற்றிக்குப் பின்வரும் தோல்வி மனிதனை நிலைகுலைய வைக்கிறது.

ஆகஸ்ட் 10

தேட வேண்டியது எது?

நியாயாதிபதிகள் 6:14-24

நான் உன்னோடே கூட இருப்பேன்.
நியாயாதிபதிகள் 6:16

ஒரு நாள் காலை வேளை ஜெபத்தில் ஆண்டவரே இந்த உலகத்தில் நான் அதிகக் கரிசனையோடு தேடவேண்டியது எது? என்று கேட்டேன். என் இருதயத்தில் ஆண்டவர் தந்த பதில் மிகவும் எளிமையானது. நான் உன்னோடிருக்கின்ற நிச்சயத்தில் தெளிவாக இருக்கும் அனுபவத்தையே தேடு என்றார். தேவனே நீர் என்னோடிருக்கிற நிச்சயத்தை தினமும் எனக்குத் தாரும் என்ற விண்ணப்பம்தான் என்னால் அதிகமாக ஏறெடுக்கப்படுகின்ற விண்ணப்பம் என்பதும் உண்மை.

ஏதோ, கர்த்தர் நம்மோடிருக்கின்றார் என்ற பொதுவான நம்பிக்கையல்ல. ஏதோ, கர்த்தர் நம்மோடிருக்கின்றார் என்ற விசுவாசம் அல்ல. அது நமக்குள் உண்மையாக உறுதி செய்யப்பட வேண்டும். தேவன் நம்மோடிருப்பதை நம்முடைய ஆத்துமாவில் சந்தேகமின்றி நிச்சயப்படுத்திக்கொள்ளும்படி கர்த்தர் நமக்கு ஏதாவது செய்ய வேண்டும். இந்த நிச்சய உணர்வுதான் நமக்கு அரணும், கோட்டையும், ஆபத்து நேரங்களில் அசைக்கப்படாத ஆத்தும நங்கூரமாகவும் இருக்கிறது.

கிதியோன் தன்னோடு பேசுவது தேவன்தான் என்பதை உறுதிப்படுத்த அதிகக் கரிசனையாயிருந்தான். எனவே, அதற்காக அவன் தேவனுக்கு முன்பாக இரண்டு சோதனைகளை வைத்தான். அதனை அவிசுவாசம் எனக் கூற முடியாது. அது தன்னோடு தேவன் இருப்பதை நிச்சயப்படுத்திக்கொள்ளுகின்ற ஒரு அனுபவம். அந்த நிச்சயத்தோடு சென்றுதான் கிதியோன் தனக்கு எதிராக எழுந்த எல்லா எதிர்ப்புகளையும், நிலைகுலையாமல் நின்று சந்தித்தான்.

தாவீது, தேவன் தன்னோடிருக்கிறார் என்ற பொதுவான மத நம்பிக்கை சார்ந்த விசுவாசத்தைக் கொண்டிருக்கவில்லை. அவன் அனுதின வாழ்வில் ஆண்டவரோடு பழகி, கர்த்தர் தன்னோடிருப்பதை மிக நிச்சயமாக அறிந்திருந்தான். எனவேதான் ஒரு நாள், அரக்கனாகிய கோலியாத்தைச் சந்திக்க வேண்டிய ஒரு சூழ்நிலை வந்தபோது, அவன் அச்சமடையாமல் தைரியமாய் அவனை எதிர்த்தான்.

தேவன் நம்மோடிருப்பது நமக்கு உறுதிப்படும்போது, தேவனிடம் நாம் எதிர்பார்ப்பது எல்லாம் நமக்காக அங்கே இருக்கும். ஏனென்றால், அனைத்து ஆசீர்வாதங்களுக்கும் அடிப்படை ஆதாரம் தேவ உறவும் ஐக்கியமுமே. கானகத்தில் பயணம் செய்த இஸ்ரவேலர்களின் நடுவில் தேவன் இருந்தார். அந்த உண்மை அக்கினி ஸ்தம்பத்தினாலும், மேக ஸ்தம்பத்தினாலும் அனுதினமும் உறுதிப்பட்டது. அங்கே தேவன் அவர்களுக்குப் போதுமானவராகயிருந்தார்.

சிந்தனைக்கு...

இறைவனுக்கு முன்பாக உன்னை யார் என்று கண்டுகொண்டால் உனக்கு முன்பாக பிறர் தங்களை யார் என்று கண்டுகொள்வார்கள்.

ஆகஸ்ட் 11
பலனை எதிர்பார்த்து

உபாகமம் 16:11-22

கர்த்தருடைய சந்நிதியில் வெறுங்கையோடே வராமல்...
உபாகமம் 16:17

பாரிஸ் நகரத்தின் தெரு ஒன்றில் நோயுற்ற மனிதன் ஒருவன் பிறருடைய உதவியை எதிர்பார்த்து அமர்ந்திருந்தான். அந்த வழியாக வந்த ஜான் ஸ்டீவ் என்பவன் பரிதாபப்பட்டு ஐந்து ஈரோ நோட்டைக் கொடுத்தான். சற்று தூரம் சென்றதும் இன்னொரு மனிதன் அவனை நிறுத்தி “நீங்கள் செய்த நற்செயலுக்கு பரிசு” என்று கூறி ஐம்பது ஈரோ நோட்டை அவனிடம் கொடுத்தார். ஜான் ஸ்டீவுக்கு மிகுந்த ஆச்சரியம்.

மறுநாள் ஜான் ஸ்டீவ் அதே வழியாக வந்தான். அதே நோயாளியைப் பார்த்தான். அவனுக்கு 100 ஈரோ நோட்டைக் கொடுத்தான். சற்று தூரம் சென்றபோது முந்தின நாள் 50 ஈரோ தந்தவனைப் பார்த்தான். ஆனால், பரிசு எதுவும் தரவில்லை. நான் இன்று 100 ஈரோ கொடுத்தேன் என்றான் ஜான் ஸ்டீவ். அதற்கு அந்த மனிதன் “நேற்று நீ செய்தது உதவி. இன்று நீ செய்தது வியாபாரம்” முந்தின நாளைப் போல ஐந்து மடங்காக தான் கொடுத்தது திரும்பி வரும் என்று நம்பின ஸ்டீவ் ஏமாந்தான்.

கர்த்தருக்கு நாம் என்ன செய்கின்றோமோ அதற்கு பன்மடங்காகப் பலன்கள் உண்டு. கர்த்தருடைய நாமத்தில் யாருக்கு நாம் எந்த நன்மையைச் செய்தாலும் அதற்குப் பன்மடங்கான பலன் வரும். ஆனால், பலன் பெறவேண்டும் என்ற எதிர்பார்ப்போடு செய்தால் பலன்வராது. காணிக்கையானாலும், உதவியானாலும், ஈகையானாலும் அதனுடைய பின்னால் தியாக சிந்தையும், அர்ப்பண ஆர்வமும் வேண்டும். எதையாவது பெற வேண்டும் என்ற நோக்கில் செய்தால் அது வியாபார சிந்தை ஆகிவிடும். இன்றைய கிறிஸ்தவப் பத்திரிகைகளில் விசித்திரமான விளம் பரங்கள் வருகின்றன. ஊழிய ஸ்தாபனம் ஒன்றிற்கு ஆயிரம் ரூபாய் காணிக்கை கொடுத்த ஒருவருக்கு வியாபாரத்தில் ஒரு லட்சம் ரூபாய் லாபம் கிடைத்தது. இதனைச் சாட்சியாக விளம்பரம் செய்யப்பட்ட பத்திரிகையில் இது போன்று நீங்களும் ஆசீர்வதிக்கப்பட விரும்புகின்றீர்களா என்ற வாசகமும் இடம் பெறுகிறது.

இதைப் பார்க்கின்றவர்களுக்கு இப்படிக் காணிக்கை கொடுத்து அதிக பலன் அடையும் ஆசை வராதா? ஆனால், அந்த நோக்குடன் காணிக்கை கொடுத்தால் அது காணிக்கை அல்ல வியாபார முதலீடு. இது ஆவிக்குரியதல்ல. ஆனால், இப்படி வியாபாரம் செய்யவே சில கிறிஸ்தவ ஸ்தாபனங்கள் ஜனங்களுக்கு அழைப்புக் கொடுக்கின்றன. நம்முடைய நற்செயலுக்கும். உதாரத்துவமான பண்புகளுக்கும் கர்த்தர் பலன் தருவார் என்ற நம்பிக்கை மிகவும் அவசியம். அதே வேளையில் ஆதாய எதிர்பார்ப்பாகவும், சுய லாபச் செயலாகவும் அது மாறிவிடக்கூடாது.

சிந்தனைக்கு...

நோக்கங்களில் தூய்மையாயிருப்பவன்
எதிர்ப்புகளால் சோர்ந்து போகாதிருக்கிறான்.

ஆகஸ்ட் 12
ஐக்கியத்தில் பிரச்சினை

ஆதியாகமம் 13:1-18

அவர்கள் ஒருவரை ஒருவர் விட்டுப் பிரிந்தார்கள்.
ஆதியாகமம் 13:11

கணவன் மனைவி இணைந்து குடும்பமாக வாழும்போது எல்லோருக்கும் அது இன்பமான சவாரியாக இல்லை என்பது உண்மைதான். குடும்பம் என்ற அமைப்பில் ஏராளம் பிரச்சினைகளைச் சந்திக்க நேரிடுவது உண்மைதான். ஆயினும், கணவனை விட்டு விலகி வாழும் வாழ்க்கை சௌகரியமானதல்ல. மனைவியை விட்டுப் பிரிந்து தனித்து வாழத் துணிந்து விடுவது மன நிம்மதி தருவது இல்லை.

காலில் ஒரு புண் வந்தால் வலிக்கத்தான் செய்யும். கையில் ஒரு வீக்கம் வந்தால் கஷ்டமாகத்தான் இருக்கும். அதற்காகப் புண் ஏற்படக் காரணமாயிருக்கும் காலை வெட்டி விடுவது நலமாயிராது. வீக்கம் தரும் கை இனி வேண்டாம் என்று அகற்றி விடுவது நல்ல முடிவாகயிராது. இவளால் எனக்கு நிம்மதியே இல்லை என்று கூறிக்கொண்டு வாழும் கணவர்கள், அந்த மனைவி இறந்த பின்பு நிம்மதியைப் பெறவில்லை. மாறாக நடைபிணம் போல ஆகிவிடுகின்றனர். இவனால் எனக்குச் சந்தோஷமே யில்லை என்று கூறிக்கொண்டே வாழும் மனைவிகள் பலர், கணவன் மரித்த பின்பு சந்தோஷத்தைத் திருப்பிப் பெறவில்லை. மாறாக அனைத்தையும் இழந்தது போல ஆகிவிடுகின்றார்கள்.

ஐக்கியங்களுக்கு நடுவிலே, உறவுகளுக்கு மத்தியிலே, மனைவியாகுலம் தருகின்ற சில பிரச்சினைகள் காணப்படலாம். ஆயினும் ஐக்கியமற்ற வாழ்வும், உறவுகளைத் தவிர்க்கும் வாழ்வும் அவற்றிற்குச் சரியான மாற்றுவழிகள் அல்ல. சிலவற்றைச் சகிக்கவும், சிலவற்றைப் பொறுக்கவும் தேவனிடம் கிருபை கேட்க வேண்டுமேயன்றி, உறவுகளற்ற வாழ்க்கையைத் தீர்வாக எடுத்துக்கொள்ளக்கூடாது. குடும்பங்களிலே சபைகளிலே ஐக்கியங்கள் சில பிரச்சினைகளைத் தந்ததும், சிலர் தங்களைத் தனிமைப்படுத்துவதையே சரியான தீர்வாகக் காண்கின்றனர். ஆனால், அம்முடிவு ஆரோக்கியமான தீர்வு அல்ல.

உறவுகளைக் கட்டிக்காக்க மிகப் பெரிய ஆற்றல் அவசியம். ஐக்கியங்களில் இணைந்திருக்க அதிகமான பொறுமை தேவை. ஆனால் உறவு, ஐக்கியம் ஆகிய வற்றைத் தவிர்த்து தனிமரமாக்கும் நடவடிக்கை மிகமிக வேதனையானதும், விவேகமற்றதுமே. தேவ மனிதனாகிய ஆபிரகாமுக்கும் ஐக்கியம் என்ற பகுதியில், பல சோதனைகள் இருந்தன. சாந்த குணத்தை உயர்த்திப் பிடித்த தேவ மனிதனாகிய பவுலுக்கும், பிறரோடுள்ள ஐக்கியத்தில் ஏராளம் சவால்கள் இருந்தன. ஆயினும், பிரச்சினைகளுக்குத் தேவனைச் சார்ந்து தீர்வுகளைத் தேடினார்களேயன்றி, உறவும் ஐக்கியமும் வேண்டவே வேண்டாம் என்று உதறிவிட்டுப் போகவில்லை.

சிந்தனைக்கு...

தவறான சுபாவத்திற்குப் பதிலாக நீயும் தவறான சுபாவத்தைக் காட்டினால் இன்னும் சரியான சுபாவத்தை நீ காணவில்லை என்பதே பொருள்.

ஆகஸ்ட் 13
யார் அன்பானவர்கள்?

1 யோவான் 4:7-21

அன்பில்லாதவன் தேவனை அறியான்.
1 யோவான் 4:8

சில கணவன்மார்கள் தங்கள் மனைவிகளிடம் மிகவும் அன்பாக இருப்பார்கள். என் கணவர் மிகவும் அன்பானவர் என்ற மனைவிகளின் சாட்சிகளையும் பெற்றிருப்பார்கள். ஆயினும், அதற்காக அவர்கள் அன்பானவர்கள் என்று அர்த்தமல்ல. மனைவிகளை மிகுதியாக நேசிக்கும் பல கணவன்மார்கள், அந்த நேசத்தில் ஆயிரத்தில் ஒரு பகுதியைக்கூட, தங்களின் பெற்றோரிடமோ, சகோதரர்களிடமோ, பிறரிடமோ காண்பிப்பதில்லை. தங்களின் பிள்ளைகளை உயிரைப் போல நேசிக்கும் பல பெற்றோர்கள், மற்றவர்களையோ சற்றும் மனிதாபிமானத்தோடு நேசிக்க மாட்டார்கள். எனவே அவர்களின் அன்பை உண்மையான அன்பு என்று கூற முடியாது.

எல்லா மனிதர்களுக்குள்ளும் அன்பு உண்டு. ஆனால், அந்த அன்பினால் எல்லோரையும் நேசிக்க இயலாது. அது பெரும்பாலும் சுய நலம் சார்ந்தது. மனைவியிடமோ, கணவனிடமோ, நண்பர்களிடமோ, பெற்றோரிடமோ அன்பாயிருக்கக் கூடுமானால் நாம் அன்பானவர்கள் என்று எண்ணிவிடக் கூடாது. தேவனிடம் அன்பாயிருக்கின்றவர்கள்தான் எல்லோரிடமும் அன்பாயிருப்பார்கள். அவர்கள்தான் தங்களின் சுயநலம் மற்றும் சுயவிருப்பம் ஆகிய எல்லைகளைக் கடந்து, எல்லாரையும் நேசிக்கக் கூடியவர்களாக மாற முடியும். ஏனென்றால், தேவனால் நேசிக்கப்படுவதை உண்மையாக உணர்ந்து கொண்டவர்கள்தான், தேவனை நேசிக்கக இயன்றவர்களாயிருப்பார்கள். அவர்களின் உள்ளத்தில் தேவ அன்பு ஊற்றப்பட்டிருக்கும்.

சிலர் தேவனை மிகுதியாக நேசிப்பதாகக் கூறுவார்கள். அதன் விளைவாக அவரை நன்றாக ஆராதிக்கவும், அவருடைய பணிகளுக்குத் தாராளமாகக் காணிக்கைகள் வழங்கவும் செய்வார்கள். ஆனால், மற்றவர்கள்மேல் உண்மையான அன்போ, கரிசனையோ, விருப்பமோ அவர்களுக்கு இராது. ஏனென்றால் அவர்கள் தேவனை நேசிப்பது என்பது மத நம்பிக்கையின் விளைவான ஒன்றே அன்றி, உண்மையாக தேவனோடு நெருங்கிப்பழகி அவருடைய அன்பினை அனுபவிக்கும் வாய்ப்பைப் பெற்றதினால் அல்ல. இயேசுவின் நாட்களில் யூதர்களிடம் மத நம்பிக்கை சார்ந்த இறை வைராக்கியம் இருந்தது. தேவனுக்காக மரிக்கவும் தயார் என்ற அளவிற்கு அன்பு இருந்தது. ஆயினும், அவர்கள் பிறரை நேசிக்க இயலாதவர்கள். அவர்களிடம் உண்மையான தேவ அன்பு இல்லை என்பதை இயேசு சுட்டிக்காட்டினார். (யோவான்-5:42)

சிந்தனைக்கு...

இறைவனின் நேசத்தை இதயத்தில் அனுபவித்தவன் இன்னொருவரை நேசிக்க இயலாதவனாய் இருப்பதில்லை.

ஆகஸ்ட் 14

சாலொமோனின் அனுபவம்

பிரசங்கி 2:1-17

எல்லாம் மாயையும் மனதுக்குச் சஞ்சலமுமாயிருக்கிறது ...
பிரசங்கி 2 : 17

சாலொமோன் எழுதிய நீதிமொழிகளைவிட சாலொமோனுடைய வாழ்க்கை அனுபவங்கள் மூலம் நாம் கற்றுக்கொள்ள இயன்ற பாடங்கள் ஏராளம். திரண்ட செல்வம், சௌகரியங்கள், ஆடம்பர வாழ்க்கை, உயர்ந்த அந்தஸ்து, அதிகாரம், உயர்பதவி போன்ற விஷயங்களை நான் அனுபவித்து அறிந்தவன் அல்ல. ஆனால், இவற்றால் நமக்குத் தேவையான அளவிற்கு சமாதானமோ, சந்தோஷமோ, நிறைவோ வந்து விடாது என்று நான் போதித்துக் கொண்டிருக்கின்றேன்.

ஆனால் சாலொமோன் இவை யாவற்றையும் வாழ்க்கையில் மிகுதியாக அனுபவித்துக் கண்டவன். அவற்றால் என்ன கிடைக்கும் என்பதை அவன் அறியாதவன் அல்ல. ஆனால், அவ்விதம் அனுபவித்துக் கண்ட அவன் கண்டுபிடித்த உண்மை என்ன? அவை யாவும் மாயைகளே. அவை யாவற்றாலும் இறுதியில் மனதுக்குச் சஞ்சலமே.

இன்றும் ஏராளம் பக்தியாளர்கள் தேவ ஆசீர்வாதங்களைப் பணம், பொருள், ஆஸ்தி, அந்தஸ்து, ஆகியவற்றின் வடிவங்களிலே காண விரும்புகின்றனர். ஆனால், அவற்றை தேவனிடமிருந்து மிகுதியாகப் பெற்று அனுபவித்த சாலொமோன், அவற்றை அர்த்தமற்றவை என்றும் மாயை என்றுமே சொல்லுகின்றான். ஒருவர் ஒரு உணவு விடுதி சென்று எல்லா அயிட்டங்களையும் சாப்பிட்டுப் பார்த்து விட்டு, அவை தரமற்றவை என்றும் சுவையற்றவை என்றும், கண்டு கூறினால் நாம் அந்த உணவகத்தை விரும்பக்கூடாது.

உனக்கு நான் ஏராளம் பணம், பொருள், ஆஸ்தி, அந்தஸ்து, அதிகாரம் தந்தாலும், அதனால் உனக்கு என்ன கிடைக்கும் என்பதை சாலொமோனிடம் கேட்டுத் தெரிந்துகொள், என்று தேவன் சொல்வது போல பிரசங்கி புத்தகம் உள்ளது. எனவே வாழ்வை அதிக ஆசீர்வாதமாக்கிக்கொள்வதற்கு பணம், பொருள், அந்தஸ்துக் களையே நாடிச் செல்லும் நம்முடைய மனப்பாங்கில் மாற்றம் வர வேண்டும்.

சாலொமோனைப் போல ஏராளம் பொன்னையும் பொருளையும் வைத்திருந்த ஆபிரகாம், சாலொமோனைப் போல விரக்தியில் புலம்பவில்லை. ஏனென்றால், அவன் தனக்கிருந்த செல்வங்களினால் அல்ல. தேவ உறவினாலும், தேவனுக் கேற்றதோர் வாழ்க்கை முறையினாலுமே தன்னை மகிழ்ச்சியாக்கிப் பழகியிருந்தான். தேவ உறவையும், தேவனுக்கிசைந்த வாழ்க்கையையும், தேவ உறவினால் வருகின்ற மனமகிழ்வையும், நிறைவையும் நாம் ஆசீர்வாதங்களாகக் காண்கின்ற அனுபவங்கள் வேண்டும்.

சிந்தனைக்கு...

பண்படாத நிலத்தில் விதைகள் வீணாகப் போகும்,
பக்குவப்படாதவன் வாழ்வில் நன்மைகள் விருதாவாய்ப் போகும்.

ஆகஸ்ட் 15

சுதந்திரம்

சங்கீதம் 119:1-16

உமது கட்டளைகளை நாங்கள் கருத்தாய்க் கைக்கொள்ளும்படி...
சங்கீதம் 119 :4

வெளிநாடுகளில் காரை ஓட்டுகின்றவர்களும், காரில் பயணம் செய்கின்றவர்களும், பாதுகாப்புக் காரணங்களுக்காகக் கண்டிப்பாக பெல்ட் அணிந்துகொள்ள வேண்டும். ஆனால், இந்தியாவில் பலர் இதுபோன்ற கட்டுப்பாட்டை விரும்புவதில்லை. பெல்ட் அணியாமல் சுதந்திரமாகப் பயணம் செய்வதையே அவர்கள் விரும்புகிறார்கள். எனவே, ஏதாவது விபத்து நேரிடுகின்ற சூழ்நிலை ஏற்பட்டால், பயணம் செய்கின்றவர்கள் படுகாயமடைவதைத் தவிர்க்க முடியாமல் போகிறது.

சுதந்திரம் மனிதனுக்குத் தேவைதான். ஆனால், எங்கும் சுதந்திரம், எதிலும் சுதந்திரம் என்று கட்டுப்பாடுகள் எதையுமே ஏற்காமல் வாழ்ந்தால், அந்த சுதந்திரம் நமக்கு ஆபத்துகளையே வரவழைக்கும். அமெரிக்கா போன்ற மேலை நாடுகளில் தனிமனித சுதந்திரம் என்பது அதிகமாக வற்புறுத்தப்படுகிறது. எந்த ஒரு கட்டுப்பாடும் இல்லாமல், தாங்கள் வாழ விரும்புகிறது போல வாழ்ந்து, அனுபவிக்க விரும்புகிறது போல் அனுபவிக்கத் தங்களுக்கு, முழு சுதந்திரம் வேண்டும் என்று அவர்கள் கேட்கின்றனர். இந்நாட்களில் இவ்விதமான ஒரு சுதந்திர தாகம் உலகமெங்கும் பரவி இதன் விளைவாக மனிதன் மன அமைதி இல்லாதவனாகவும், மனநிறைவைப் பெறாதவனாகவும் அலைகின்ற நிலை உள்ளது.

கர்த்தருடைய வார்த்தைகளும், வசனங்களும், நெறிமுறை சார்ந்த கட்டளைகளும், நம்முடைய மன சுதந்திரத்திற்கு எதிரானவை போலவே தோன்றும். எனவே, அவைகளால் நாம் கட்டுப்பட விரும்பாமல் போகலாம். ஆனால், அவ்விதம் கட்டுப்படவில்லையேல் எதிர்மாறான சூழ்நிலைகள் வரும்போது, வாழ்க்கை பலவிதங்களில் காயமடைந்து, மிகுந்த வேதனைகளை உருவாக்கும்.

சாலொமோன் ராஜா தனக்குக் கிடைத்த மிகுதியான ஆசீர்வாதச் சூழ்நிலைகளின் நடுவில் தனக்கு எந்தக் கட்டுப்பாடுகளையும் விதிக்காமல் சுகம் அனுபவிப்பதிலேயே குறியாகயிருந்தான். தன் இருதயம் இச்சித்த எதையும் இல்லை என்று சொல்லாத தன் நிலையை எண்ணி பெருமைப்பட்டுக் கொண்டான். ஆயிரம் பேரைத் திருமணம் செய்யும் அளவிற்கு மனக்கட்டுப்பாடற்ற அவல நிலைக்கு அவன் சென்றான். அதன் விளைவாக அவனுடைய வாழ்க்கை தேவனுடைய கோபத்திற்கு உட்பட்டது. ஆம், நம்முடைய வாழ்க்கைப் பயணங்களில் கர்த்தருடைய வசனங்களாலும், கட்டளைகளாலும் நாம் கட்டப்பட வேண்டியது மிக அவசியம். இல்லையேல் பலவிதத் தீமைகளும், குழப்பங்களும், மன அமைதியை அழிக்கும் காரியங்களும் நம் விஷயத்தில் கட்டவிழ்ந்த நிலையில் வந்து செயல்படும்.

சிந்தனைக்கு...

உன்னை நீ உரிய முறையில் அறியும் வரை உலகத்தைக் குறித்த உன் அறிவு மிகவும் குறைவானதே.

ஆகஸ்ட் 16
மாற்றத்திற்கு சாட்சி

1 யோவான் 2:1-17

அவரை அறிந்திருக்கிறேனென்று சொல்லியும்...
1 யோவான் 2:4

இறைப்பணியாளர் ஒருவர் எழுதிய பல புத்தகங்களை இலக்கிய ஆர்வம் கொண்ட ஒரு அமைப்பினர் விரும்பிப் படித்தனர். அவருடைய புத்தகத்தின் கருத்துக்கள் மிகவும் சிறந்தவை என்பதை அவர்கள் கண்டுகொண்டனர். எனவே, அந்தப் புத்தகங்கள் அனைத்துப் பிரிவு மக்களுக்கும் விரிவாகப் போய்ச் சேரும் விதமாக, அவற்றைப் பெரிய அளவில் அச்சிட்டு வெளியிட விரும்பினார்கள். ஒருநாள் அவர்கள் அந்த இறைப்பணியாளரைச் சந்தித்தனர். "உங்களின் கருத்துக்கள் மனித இனத்திற்கு மிகவும் பிரயோஜனமானவை. எனவே, நாங்கள் மிகுதியாக இதனை வினியோகம் செய்ய விரும்புகிறோம். அதற்கு நாங்கள் என்ன செய்ய வேண்டும்" என்று கேட்டனர்.

அவர்களுக்குப் பதிலளித்த அவர், எனக்கு நீங்கள் எதுவும் செய்ய வேண்டாம். ஆனால், என்னுடைய நல்ல கருத்துகளால் உங்கள் வாழ்வில் ஏற்பட்ட நல்ல மாற்றங்களைச் சொல்லுங்கள் என்றார். ஆனால், அதற்குப் பதிலளிக்க அவர்களிடம் எதுவும் இல்லை. சிலர் நல்ல விஷயங்களை அடையாளம் காணுகின்றனர். நல்ல கருத்துக்களால் கவரப்படுகின்றனர். நல்ல போதனைகளால் தொடப்படுகின்றனர். அவற்றை எல்லோரும் அறிய வேண்டுமே என்று ஆதங்கப்படுகின்றனர். ஆனால், அவற்றால் ஏற்படவேண்டிய நல்ல மாற்றங்களோ அவர்களிடம் இல்லை. அவர்கள் நல்லதை அடையாளம் கண்டு கொண்டார்கள். ஆனால், அந்த நல்லதைக் கொண்டு தங்களை நல்லவர்களாக்கிக்கொள்ள முன்வரவில்லை.

இயேசுவின் போதனைகள் ஈடு இணையற்றவை. இதனைப் பலர் அறியணுமே என்று நாம் ஆசைப்படலாம். ஆனால், இந்த போதனைகளால் நமக்கு ஏற்பட்ட உயர்ந்த மாற்றங்களை அனுபவமாகக் காண்பிக்க இயலாவிட்டால் என்ன பிரயோஜனம்? இயேசுவினால் வரும் இரட்சிப்பை எல்லோரும் பெற வேண்டுமே என்று ஆசைப்படுகிறோம். ஆனால், இயேசுவினால் வருகின்ற இரட்சிப்பின் அனுபவம், நம்மை எந்த அளவிற்குச் சிறந்த மனிதர்களாக மாற்றியுள்ளது என்பதை, நாம் சாட்சியாகக் காண்பிக்காவிட்டால் என்ன பிரயோஜனம்.

அதிரடி வெண்மை ஏற்படுத்தும் சலவை சோப்பைக் குறித்து பிரமாதமாக விளம்பரம் செய்கின்றவன், அழுக்கேறிய சட்டையோடு வந்தால் அவனுடைய விளம்பரத்தை யார் நம்புவார்கள்? இயேசுவை இரட்சகராக ஏற்றுக்கொள்கின்றவர்களின் எண்ணிக்கை மிகுதியாகாமல் போவதற்கு, சுவிசேஷம் அறிவிக்கப்படாமையே முக்கியக் காரணமல்ல. இயசுவை ஏற்றுக்கொண்டவர்கள் அதற்கேற்ற விதமானதோர் உயர்ந்த வாழ்வை வாழ்ந்து காட்டாததே முக்கியக் காரணம்.

சிந்தனைக்கு...

இறைவன் ஒளியாயிருக்கிறார் என்பதில் யாருக்கும் சந்தேகமில்லை. நீ யாருக்கு ஒளியாயிருக்கிறாய் என்பதே கேள்வி.

ஆகஸ்ட் 17
எண்ணங்கள் மாறவேண்டும்

அப்போஸ்தலர் 9:17-29

அவர்கள் அவனைச் சீஷனென்று நம்பாமல்...
அப்போஸ்தலர் 9:26

நீங்கள் ஒருவரை அன்பற்றவர் என்று உறுதியாக நம்பிவிட்ட பிறகு, அவர் உங்களை நேசிப்பார் என்றோ, அவர் உங்களை நேசிக்க வேண்டும் என்றோ, எண்ணினால் அது நடக்காத காரியம். சில நேரங்களில் சிலரிடம் நாம் விரும்பியவைகளைக் காண முடியாமல் போய்விடுகிறது. எவ்வளவுதான் ஜெபித்தாலும், அவரிடமிருந்து நல்லதைப் பெற முடியாமல் போகிறது. இதற்கு முக்கியக் காரணம், அவர் மாறுதலைக் காண இயலாத கடினமானவர் என்று நாம் எண்ணலாம். ஆனால், சில வேளைகளில் அவர் மாறவில்லை என்பது அல்ல உண்மை. அவரிடம் மாற்றம் காணமுடியும் என்று நாம் நம்பவில்லை. அவரைக் குறித்த நம்முடைய எண்ணத்தை மாற்ற விரும்பாமல் நாம் உறுதியாயிருப்பதால், அவரிடம் மாற்றம் ஏற்பட்டாலும் நம்முடைய கண்கள் அதனை அங்கீகரிப்பதில்லை.

மிகவும் கோபக்காரராகவும், அன்பற்றவராகவும் மனைவியால் அறியப்பட்டிருந்த ஒரு கணவருக்காக பாஸ்டர் ஒருவர் அதிகமாகச் ஜெபித்தார். அவரிடம் அடிக்கடி பேசி அவருடைய மனமாற்றத்திற்கு முயற்சி செய்தார். குறிப்பிட்ட காலத்திற்குப் பிறகு அந்த பாஸ்டர் அந்த கணவரிடம் கணிசமான மாற்றங்களைக் கவனித்தார். ஆனால், அவருடைய மனைவியோ, இல்லை பாஸ்டர் அவர் அப்படியேதான் இருக்கின்றார். அவர் மாறவேமாட்டார் என்றே சொல்லிக் கொண்டிருந்தாள். பாஸ்டர் மாற்றத்தைக் கண்டார். மனைவியோ காணவில்லை.

காரணம் என்ன? அந்தக் கணவரிடம் மாற்றங்கள் ஏற்பட்டது உண்மை. ஆனால், அந்த மனைவியோ, அவரைக் குறித்த பழைய எண்ணத்தை மாற்ற விரும்பவில்லை. எவ்வளவுதான் அந்த மனிதன் மாறினாலும், ஏதோ ஒரு பழைய விதமான காரியத்தைப் பார்த்துவிட்டு, நீ அப்படியேதான் இருக்கிறாய். நீ ஒரு கல். நீ மாறவேமாட்டாய் என்று சொல்லிவிடுவாள்.

மற்றவர்களிடம் மாற்றங்கள் ஏற்பட எதிர்பார்ப்புகள் மட்டும் போதாது. நம்முடைய கடினமான எண்ணங்களும் மாறவேண்டும். மாற்றங்களின் அடையாளங்களை அங்கீகரிக்காத நம்முடைய மனநிலையும் மாறவேண்டும். நாம் எதிர்பார்த்த விதமாக மாறவில்லை என்பதற்காக, மாற்றங்களே நிகழவில்லை என்று கூறி விடுவது தவறானது. ஒரு பெரிய மாற்றத்திற்கு ஆரம்பமாக ஒரு சிறிய மாற்றம்தான் முதலில் வரும். அதனை மதிக்கவும் ஒத்துக்கொள்ளவும் வேண்டும். மற்றவர் களைக் கடினமான கல் என்று நாம் நமக்குள் கற்பனை செய்துவிட்ட பிறகு அந்தக் கல் கரைந்தாலும், நம்முடைய மனதிற்குள் உறுதியாகிவிட்ட எண்ணமோ கரையாது.

சிந்தனைக்கு...

தீயவர்களை வெறுக்கத் தெரிந்தவன் அல்ல
நல்லவர்களை நேசிக்கத் தெரிந்தவனே மனிதன்.

ஆகஸ்ட் 18

உண்மையை அடக்காதே

யோவான் 12 :35-50

பரிசேயர்நிமித்தம் அதை அறிக்கை பண்ணாதிருந்தார்கள்...
யோவான் 12 : 42

கோப்பர்னிக்கஸ் சில நூற்றாண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த ஒரு கிறிஸ்தவ மதப் போதகர். போதகர் மட்டுமின்றி இவர் ஒரு தலைசிறந்த விண்வெளி ஆராய்ச்சியாளர். இவர் விண்வெளி சம்பந்தப்பட்ட பல உண்மைகளைக் கண்டுபிடித்தார். ஆனால், அவைகள் அந்தக்கால மதத் தலைவர்களின் நம்பிக்கைகளுக்கும் கருத்துகளுக்கும் எதிராக இருந்தன. அவர்களின் கடும் கோபத்தின் விளைவுகளைச் சந்திக்க விரும்பாத கோப்பர்னிக்கஸ், தான் கண்டுபிடித்த உண்மைகளை முழுமையாக வெளியிடாமல் மறைத்து வைத்துவிட்டார். ஆனால், இன்றைய விண்வெளி ஆராய்ச்சியாளர்கள் யாவரும், கோப்பர்னிக்கஸின் விண்வெளி சம்பந்தப்பட்ட அக்காலக் கருத்துகளை உண்மையென்று நிரூபிக்கின்றனர்.

உண்மைகளைக் கண்டுபிடிப்பது மட்டுமல்ல. அவற்றை உண்மைகள் என்று வெளிப்படுத்த ஒரு விசேஷத் தைரியம் வேண்டும். ஒருவேளை அதனால் பலருடைய எதிர்ப்புகளையும், ஏளனங்களையும் சம்பாதிக்க நேரிடலாம். ஆனாலும், உண்மை அதனுடைய காலத்தில் வெளிப்பட்டு அதற்குரிய புகழ்ச்சியைப் பெறாமல் போகாது. இயேசு தேவனிடத்திலிருந்து வந்தவர் என்பதை பரிசேயர்கள் சங்கத்தில் பலர் நம்பினார்கள். (யோவா ான் -3:2) நிக்கொதேமு அதில் முதன்மையானவன். ஆனாலும், நம்பிய உண்மையை உறுதியுடன் அறிக்கையிட அவனால் முடியவில்லை.

இயேசுவை மேசியா என்று நம்பிய மரியாள் அவர் உயிரோடிருக்கும் போதே பரிமளத் தைலத்தைப் பூசினாள். எனவே, இன்றும் அவளுடைய நற்செயலின் வாசனை உலகமெங்கும் வீசுகிறது. ஆனால், நிக்கொதேமு அவளைவிட அதிக விலைகொடுத்து ஏராளமான வாசனைத் தைலத்தை இயேசுவுக்காகக் கொண்டு வந்தான். ஆனாலும், அவருடைய மரண சரீரத்திற்குத்தான் அதைச் செய்ய முடிந்தது.

பலருக்கு தேவன் உண்மைகளை வெளிப்படுத்தாமலில்லை. உண்மைகளைக் குறித்த வெளிப்பாடுகள் அவர்களுக்கு உண்டு. ஆயினும், அதனை மறைக்காமல் பேசினால் சிலருக்கு அது வருத்தமாயிருக்குமே, சிலர் தங்களை வெறுத்து விடுவார்களே, சிலரால் வரும் சில ஆதாயங்களை இழக்க நேரிடுமே என்ற எண்ணங் களால் அறிந்த உண்மையை தங்களுக்குள்ளேயே அடக்கிக் கொள்கின்றார்கள். ஆனால், அந்த மறைக்கப்பட்ட உண்மைகள் அவர்களின் அமைதியைக் கெடுத்து, தொந்தரவு செய்து கொண்டேயிருக்கும். அறிந்த உண்மையை வெளிப்படுத்த விரும்பாதவர்கள், பின்னாளில் பொய்களை உண்மையென்று நம்பி, மோசம் போகின்ற சூழ்நிலைகளும் ஏற்படும்.

சிந்தனைக்கு...

உண்மையோடு ஒத்துப்போ, இல்லையென்றால் ஒதுங்கிப்போ. இடையில் நிற்காதே.

ஆகஸ்ட் 19
துன்பமும் தேவையே

1 பேதுரு 1:1-13

துன்பப்பட வேண்டியது அவசியமானதால்.
1 பேதுரு - 1:6

ஒரு நோயாளியின் மனதிலோ, சரீரத்திலோ எந்த ஒரு வருத்தத்தையும் ஏற்படுத்தக் கூடாதென்று ஒரு மருத்துவர் விரும்பினால், அந்த நோயாளி ஒரு போதும் ஆரோக்கிய மடைய முடியாது. சில மருந்துகளைச் சாப்பிடுவதும், சில சிகிட்சைகளுக்கு உட்படுவதும், நோயாளிக்கு வருத்தமான விஷயங்கள் தான். ஆயினும் ஆரோக்கியத்திற்காக அந்த வருத்தங்களை ஏற்றுக் கொண்டுதான் ஆக வேண்டும்.

தேவன் நமக்கு எந்த ஒரு சிறு கஷ்டமும் வரக்கூடாது என்று எண்ணினால், நாம் ஒருபோதும் ஆவிக்குரிய ஆரோக்கிய நிலையை அடையவும் முடியாது. கர்த்தருடைய நோக்கங்கள் நம்முடைய வாழ்க்கையில் நிறைவேறவும் முடியாது. ஆனால், தேவன் நம்முடைய வாழ்க்கையை சில துன்பங்கள், கஷ்டங்களின் வாயிலாகத்தான் பரிசுத்தமானதாகவும், பிறருக்குப் பயனுள்ளதாகவும் மாற்ற முடியும்.

ஏனென்றால், ஜென்ம சுபாவமுடைய நம்முடைய எண்ணங்களும், நினைவுகளும் உணர்வுகளும், சில பாடுகளின் வழியாக நடப்பதின் மூலமாகத் தான் கர்த்தருக்கேற்றபடி மாற்றியமைக்கப்படுகிறது. வெறும் போதனைகளும், உபதேசங்களும், வலியுறுத்தல்களும் சத்தியத்தினைக் குறித்த உணர்வுகளை நமக்குத் தரமுடியும். ஆயினும், அவைகள் நம்மை முழுமையாக மாற்றிவிடுவதில்லை.

சாலொமோன் ராஜா அவ்விதம் பாடுகளின் பாதையில் நடக்க நேரிடவில்லை. அவன் வளவாழ்வின் நன்மைகளை முழுமையாக அனுபவித்தான். ஆனால், அவனுடைய வாழ்க்கை மேன்மைமிக்கதாக மாறவில்லை. வளவாழ்வின் சூழ்நிலைகள் அவனிடம் உயர் குணங்களும், உன்னதப் பண்புகளும் ஏற்படாமல் தடைசெய்துவிட்டன. அவன் மிகுந்த ஞானமுடையவனாக விளங்கிய போதிலும், பிறர் பின்பற்றத்தக்க சிறந்த குணாதிசயங்கள் அவனிடம் ஏற்படவில்லை.

எனவேதான் ஆபிரகாம், யாக்கோபு,யோசசேப்பு, தாவீது போன்றோரை தேவன் முதலாவது பாடுகளின் பாதையில் நடத்தினார். எனவேதான், தேனும், பாலும் பாய்கிற கானானைக் குறித்து தேவன் இஸ்ரவேல் மக்களுக்கு வாக்குக் கொடுத்திருந்த போதிலும், பாடுகள் நிறைந்த காட்டுப் பாதை வழியாக அவர்களை நடத்திச் சேர்த்தார். எனவேதான் சில துன்பங்களை அகற்றும்படி நாம் மன்றாடும் மன்றாட்டுகள் நியாயமானதாக இருந்தபோதிலும், அவைகள் மூலம் நாம் தேவனுக்கேற்றபடி சீர் செய்யப்படுவதும், அவைகளின் மூலம் தேவனை அறிகிற அறிவினை அடைவதும் தேவை யாக இருப்பதால், அவைகளை தேவன் அனுமதிக்கிறார்.

சிந்தனைக்கு...

ஒருவன் எத்தனை முறை விழுந்தான் என்பதை அல்ல,
அவன் எத்தனை முறை எழுந்தான் என்பதைப் பார்.

ஆகஸ்ட் 20

கர்த்தருடைய கண்கள்

சங்கீதம் 139 :1 24

என் உட்காருதலையும் என் எழுந்திருக்குதலையும் நீர் அறிந்திருக்கிறீர்...
சங்கீதம் 139 : 2

குடும்பப் பெண் ஒருத்திக்கு இன்னொரு பெண்ணிடமிருந்து தொலைபேசி அழைப்பு வந்தது. அந்தப் பெண் “உன்னுடைய கணவன் நல்லவனா?” என்று கேட்டாள். அதற்கு அந்த குடும்பப் பெண் “ஆம் – அவர் மிகவும் நல்லவர்” என்று பதிலளித்தாள். அவன் உன்னை ஒரு போதும் ஏமாற்றியதில்லையா? என்று கேட்டாள் அவள். என் கணவர் ஒரு போதும் என்னை ஏமாற்றியதில்லை என்றாள் குடும்பப் பெண். உன் கணவனைப் பற்றி இந்த அளவிற்கு நம்பிக்கையாக எப்படி கூறமுடிகிறது? என்று கேட்டாள் அவள். என்னிடம் எதையுமே என்றுமே மறைக்கும் பழக்கமில்லாத என் கணவனைப் பற்றி எனக்குத் தெரியாதா! என்றாள் குடும்பப் பெண். அது சரி நீ ஏன் இந்தக் காலை வேளையில் இந்தக் கேள்விகளைக் கேட்கிறாய்? என்று கேட்டாள் குடும்பப் பெண். வேறொன்று மில்லை. கடந்த பத்து ஆண்டு காலமாக உன் கணவன் என்னோடு பழகிக் கொண் டிருந்தான். இப்போது சில மாதமாக அவன் வேறொரு பென்னோடு பழகு கிறான் என்றாள் அவள்.

சிலர் போலித்தனம் பண்ணி ஆயுட்காலம் முழுவதும் வாழ்ந்தாலும், அநேகருக்கு முன்பாக தங்களை உத்தம புத்திரர்களாகத் தோன்றச் செய்வதில் வெற்றி காண்கின்றார்கள். சிலர் ஆகாபுகளைப் போல அயோக்கியமாக வாழ்ந் தாலும், அநேகர் அவர்களை, பரிசுத்தமான எலியாக்கள் என்று எண்ணி ஏம றாறு வதில் தொடர்கின்றார்கள். சிலருக்கு ஏமாற்றி வாழ்வதில் சாத்தானின் விசேஷ வரம் வல்லமையாக வேலை செய்கின்றது. சிலருடைய வெளி வேடங்களை சிலர் ஒரு போதும் அடையாளங்காண இயலாமல் போகிறது.

யோசேப்பு நினைத்திருந்தால் போத்திபாரின் மனைவி விஷயத்தில் உண்மை தவறிவிட்டுக்கூட, உத்தமன் போல நடித்துக் காட்டியிருக்கலாம். ஒரு புறம் பாவக் கறை பிடித்துக்கொண்டே, மறுபுறம் பரிசுத்தவான் போல தன்னைத் தோன்ற வைத்திருக்கலாம். ஆனால், தேவனுடைய பார்வைக்கு எதுவும் மறைவாயிராது என்று யோசேப்பு அறிந்திருந்தான். கர்த்தர் தன்னைக் கவனிக்கின்றவர் என்று நல்ல ஆவிக்குரிய அறிவு அவனுக்கிருந்ததால் அவன் மனிதனுக்காக அல்ல, தேவனுக்காக நல்லவனாக வாழ்வதில் விடாப்பிடியாக இருந்தான். தேவன் தன்னைப் பார்க்கின்றார் என்ற உணர்வை உடையவன்தான் உண்மையான பரிசுத்தவான். அந்த அறிவு மாய்மாலத்திற்கும் மாயையான உலகத்தின் வஞ்சக வலைகளுக்கும் அவனைத் தப்புவிக்கிறது.

சிந்தனைக்கு...

தேவன் உன்னைப் பற்றி என்ன நினைப்பார் என்பதைச் சிந்தித்துச் செயல்படு, மனிதர்கள் என்ன நினைப்பார்கள் என்ற கவலை மறந்துவிடும்.

ஆகஸ்ட் 21

வசனப் பலகை

யாக்கோபு 1:16-27

திருவசனத்தைக் கேட்கிறவர்களாய் மாத்திரமல்ல........
யாக்கோபு 1:22

ஒருமுறை கிறிஸ்தவ பிரமுகர் ஒருவர் வீட்டிற்குச் செல்ல நேர்ந்தது. அவருடைய வீட்டில் நான் பரிசுத்தர், ஆகையால், நீங்களும் பரிசுத்தராயிருங்கள் என்ற வேத வசனம் எழுதப்பட்ட பலகை காண்போர் கவனத்தை ஈர்க்கும் விதமாக நன்றாக, சுவரில் மாட்டப்பட்டிருந்தது. ஆனால், அந்த வீட்டின் சூழ்நிலை அங்கிருந்தவர்களின் நடை, உடை, பாவனை, பழக்கவழக்கங்கள், பேச்சு போன்றவை இந்த வசனப் பலகைக்கும், இவர்களுக்கும் என்ன சம்பந்தம் என்று கேட்கும் விதமாக இருந்தன. உலகத்தின் தன்மைகளுக்கு இசைந்து வாழ்கின்ற அவர்கள், இவ்விதமாக வேத வசனப் பலகையை வீட்டில் வைத்திருப்பது ஒரு ஆசீர்வாதம் என எண்ணியிருக்கக் கூடும்.

அநேகர் வேத வசனங்களை வீடெங்கிலும் எழுதி வைப்பதும், வசனப் பலகைகள் வாங்கி வைப்பதும், வசன ஸ்டிக்கர்களை உபயோகப்படுத்துவதும், ஏராளமான வேத வசனங்களை மனப்பாடமாகத் தெரிந்து வைத்திருப்பதும் பெரிய ஆசீர்வாதமான விஷயங்கள் என்றே எண்ணுகின்றார்கள். உண்மையிலேயே இவை யாவும் அசீர்வாதமானவைதான். ஆனால், ஒரு உண்மையையும் மறவாமல் மனதில் கொள்ள வேண்டும். எந்த அளவிற்கு வேத வசனங்களை நாம் மதிக்கவும் மேன்மை யாக எண்ணவும் செய்கின்றோமோ, அந்த அளவிற்கு தேவனுக்கேற்ற விதமான ஒரு வாழ்க்கை முறை நம்மிடம் எதிர்பார்க்கப்படுகிறது.

ஏனென்றால், வேத வசனங்கள் வெறும் மந்திரங்கள் அல்ல. வேதாகமம் ஒரு மந்திரப் புத்தகமும் அல்ல. வேதாகமம் தேவனுடைய இருதயத்தையும் அவருடைய விருப்பங்களையும் அவருடைய வழிநடத்துதல்களையும் ஆலோசனைகளையும் நாம் அறிந்து கொள்வதற்காக கொடுக்கப்பட்டது. அதனை எவ்வளவாய் அறிந்து வைத்திருக்கின்றோம் என்பதில் அல்ல. அவைகள் மூலம் எந்த அளவிற்கு தேவ னையும் அவருடைய வழிகளையும் அறிந்து அவருக்கேற்ற விதமாக வாழ் கின்றோம் என்பதே முக்கியம். வேதம் ஒரு கண்ணாடி. இதன் வழியாக நாம் நம்மை யார் என்று அறிந்து கொள்ளவும், எந்த விதமான மாறுதல்கள் அவசியம் என்பதைப் புரிந்து கொள்ளவும் முன்வரவேண்டும்.

வேதத்தைப் படிக்காத, சிந்தியாத, முக்கியப்படுத்தாத மக்களைவிட, அவை களை அறிந்து மிக முக்கியமாக எண்ணுகின்ற நாம் நம்மை மிகவும் மெச்சத்தக்க வர்கள் என எண்ணுவதில் தவறில்லை. ஆனால், வேத வசனங்களை அறியாத மதியாத மக்களைவிட, அவைகளை அறிந்திருந்தும் மதித்திருந்தும் அவைகளின் படி வாழாத நிலை, மிகவும் தேவ கோபத்திற்குரியது என்பதை மறந்துவிடக்கூடாது.

சிந்தனைக்கு...

இறைவன் இருக்க வேண்டிய இடத்தில் சுயம் இருந்தால்
அமைதி இருக்க வேண்டிய இடத்தில் ஆர்ப்பாட்டமே இருக்கும்.

ஆகஸ்ட் 22

சுத்தமும் அழகும்

கலாத்தியர் 5:13-26

ஆவியின் கனியோ அன்பு, சந்தோஷம், சமாதானம்..
கலாத்தியர் 5:22

ஒருவர் தன்னுடைய வீட்டை மிகவும் சுத்தமாக வைத்திருக்கின்றார். அவருடைய வீட்டிற்கு வருகின்ற யாரும் அங்கே சுத்தமில்லாத சூழ்நிலையைப் பார்க்கவே முடியாது. வீட்டை மிகவும் சுத்தமாக வைத்திருப்பவர் என்ற சாட்சி அவருக்கு உண்டு. ஆனால், அந்த வீட்டின் காட்சி யாருக்கும் மனரம்மியத்தைத் தராது. ஏனென்றால், அவர் மிகவும் சிக்கனமானவர். அவசியமான பொருட்களைக் கூட வாங்கமாட்டார். ஒரு அழகுப்பொருள் அங்கு கிடையாது. கர்ட்டன், ஸ்கிரின் என்று எதுவும் அங்கு கிடையாது. எனவே, அங்கே வருகிறர்களுக்கு அங்கே அவர்களைக் கவர்ந்திட ஒன்றும் இல்லை.

ஆம், அது சுத்தமான வீடு. ஆனால், அழகான வீடு அல்ல. சில கிறிஸ்தவர்கள் உண்மையில் மிகவும் சுத்தமான கிறிஸ்தவர்கள். அவர்களிடம் யாரும் எந்தக் குற்றத்தையோ தவறையோ பார்க்க முடியாது. வேதம் கண்டிக்கும் எந்தப் பாவத்தை யும் அவர்கள் செய்யமாட்டார்கள். அது போன்ற தவறுகளை வேறு கிறிஸ்தவர் களிடம் பார்த்தால் பொறுத்துக் கொள்ளமாட்டார்கள். ஆயினும், இவர்கள்அழகான ஆவிக்குரிய கிறிஸ்தவர்கள் அல்ல. ஏனென்றால், இவர்களின் அன்பான செயல் களை யாரும் பார்க்கவில்லை. இவர்கள் மற்றவர்களைச் சந்தோஷப்படுத்தும் மனநிலையோடு செயல்படுவதை யாரும் பார்க்கவில்லை. இவர்களிடம் தயவான சிந்தை உண்டு என்பது யாருக்கும் தெரியாது. இவர்களிடம் தாழ்மையும், சாந்தமும், நீடிய பொறுமையும், பிறரைத் தூக்கிவிடும் பண்பும் இருப்பதை யாரும் பார்க்கவில்லை.

இவர்கள் தங்களின் ஆவிக்குரிய வஸ்திரத்தில் கறையேதும் படிய இடம் தரவில்லை. ஆனால், அந்த வஸ்திரத்தில் எந்த நிறமோ, சித்திர வேலைப்பாடுகளோ இல்லை. அதாவது ஆவிக்குரிய அழகை வெளிப்படுத்தும் மிகச் சிறந்த தெய்வீகக் குணங்கள் இல்லை. ஆவிக்குரிய வாழ்க்கை என்பது கெட்ட பழங்களைத் தராத மரம் அல்ல. அது நல்ல பழங்களை ஏராளமாகத் தருகின்ற மரம். ஆவிக்குரிய வாழ்க்கை என்பது, பிறருடைய கவனத்தைக் கவரும் விதமான ஏராளம் அன்பு சார்ந்த நற்குணங்களைக் கொண்டது.

வெறுப்புடன் பேசவில்லை. ஆனால், அன்புடன் பேசுகின்றோமா? யார் பொருளையும் எடுத்துக் கொள்ளவில்லை. ஆனால், யாருக்கு என்ன கொடுக் கின்றோம்? பெருமையாக நடந்து கொள்ளவில்லை. ஆனால், தாழ்மை சோதிக்கப் பட்டால் பிரகாசிக்கிறதா? யாரையும் நாம் தள்ளிவிடவில்லை. ஆனால், எத்தனை பேரைத் தூக்கிவிடுகிறோம்? இவ்விதமாகவும் சிந்திக்க வேண்டும்.

சிந்தனைக்கு...

உயர்ந்த கொள்கைகளில் உறுதியாயிருப்பவன்
தான் செய்யும் செயல்களில் சிறப்பாயிருப்பான்

ஆகஸ்ட் 23

கர்த்தருடைய பந்தி

1 கொரிந்தியர் 11:20-31

எவன் அபாத்திரமாய்க் கர்த்தருடைய அப்பத்தைப் புசித்து...
1 கொரிந்தியர் 11:27

சில திருச்சபை திருவிருந்து வேளைகளை நான் கவனித்திருக்கின்றேன். கர்த்தருடைய பந்தி உங்களுக்காக ஆயத்தமாயிருக்கிறது என்ற அறிவிப்பை குருவானவர் கொடுத்ததும் வரிசையாகப் போய் நிற்கும் பலரை நான் அறிந்திருக்கின்றேன். அவர்களில் சிலருக்கு இரட்சிப்பு என்றால் என்னவென்றே தெரியாது. அவர்களில் சிலருக்கு மனந்திரும்புதல் என்றால் என்னவென்று தெரியாது. அவர்களில் சிலர் மதுபானப் பழக்கமுடையவர்கள், அவர்களில் சிலர் ஆலயக் காணிக்கைகளை அச்சமின்றித் திருடுகிறவர்கள், அவர்களில் சிலர் கால முழுவதும் தனித் தனிப் பிரிவுகளாக நின்று சண்டையிடும் கலாச்சாரத்தில் ஊறிப் போனவர்கள், அவர்களில் சிலர் மனைவிக்குத் துரோகம் செய்தவர்கள், அவர்களில சிலர் கணவர்களுக்கு உண்மையற்றவர்கள், அவர்களில் சிலர் அநியாயமாகச் சம்பாதிக்கின்றவர்கள், அவர்களில் சிலர் லஞ்ச லாவண்யங்களில் பழகிப் போனவர்கள். இப்படியே சொல்லிக்கொண்டே போகலாம். ஆனால், இவர்கள் யாவரும் கிறிஸ்த வர்கள் என்ற பெயருடன் வாழ்கின்றவர்கள்.

ஆனால், திருவிருந்து அல்லது கம்யூனியன் என்று அழைக்கப்படும் கர்த்தருடைய பந்தியில், யார் கலந்து கொள்ள வேண்டும் என்பதை வேத வார்த்தைகள் சொல்லாமலில்லை. ஏதோ இறை நம்பிக்கை சார்ந்த ஒரு அனுசரிப்பில் பங்குபெற்றால் அது ஓர் ஆசீர்வாதம் என நம்பித்தான் எல்லோரும் பங்கு பெறுகின்றார்கள். ஆனால், அதில் கலந்து கொள்கின்றவர்கள் அபாத்திரராக இருக்கக்கூடாது என்று பவுல் எச்சரிப்பதை வேதாகமத்தில் பார்க்கின்றோம்.

கடந்த காலத்தில் நாம் எப்படிப்பட்ட மோசமான பாவிகளாகவும் இருந்திருக்கலாம். அது கர்த்தருடைய பந்திக்குத் தடை அல்ல. ஆனால், கர்த்தருடைய பந்தியில் பங்குபெறும்போது, பாவ மன்னிப்பைப் பெற்ற நிச்சயத்தையும், இரட்சிக்கப்பட்ட நிச்சயத்தையும், தேவனுடைய பிள்ளைகளாக மறுபடியும் பிறந்த நிச்சயத்தையும் பெற்றிருக்க வேண்டும்.

கர்த்தராகிய இயேசுவின் இரத்தத்தால் கழுவப்பட்டு பரிசுத்தமாக்கப்பட்டவர்கள் தான் கர்த்தரின் பந்தியில் கலந்துகொள்ள வேண்டும். தேவ உறவில் வாழ்கின்ற அனுபவமும், தேவ சித்தம் செய்யும் அனுபவத்தை விரும்பிச் செயல்படுகிறவர்கள்தான் கர்த்தருடைய பந்தியில் கலந்து கொள்ள வேண்டும். கிறிஸ்துவோடு ஐக்கியமும், அந்த ஐக்கியத்தின் பின்பலத்தோடு மற்றவர்களோடு நல்ல ஐக்கியம் உடையவர்கள்தான், கர்த்தருடைய பந்தியில் கலந்து கொள்ள வேண்டும்.

சிந்தனைக்கு...

உண்மையில் நிலைத்திருப்பதைத் தவிர
பொய்யைப் பொய்யாக்குவதற்கான சிறந்த வழி இல்லை.

ஆகஸ்ட் 24

அவசர முடிவுகள்

1 சாமுவேல் 13:1–14

அவன் சர்வாங்க தகன பலியிட்டு முடிகிறபோது...
1 சாமுவேல் 13:10

தன்னுடைய கைப்பையை எங்கோ வைத்துவிட்டு வந்ததை உணர்ந்தாள் ஒரு பெண். தன்னிடமிருந்து பிற உடமைகளையெல்லாம் இரயில் நிலையத்தில் இருந்த பெண்ணிடம் கொடுத்துவிட்டு கைப்பையை தேடச் சென்றாள். சற்று நேரத்தில் அதை தேடிக் கண்டுபிடித்தாள். ஆனால், அதற்குள் பிற உடமைகளைப் பார்த்துக்கொள்வதாகப் பொறுப்பெடுத்த பெண் அவற்றோடு எங்கோ தலை மறைவாகிவிட்டாள்.

சில நேரங்களில் ஒரு பிரச்சினைக்குத் தீர்வு காண நாம் எடுக்கும் அவசரக் கால முயற்சிகள் பல பிரச்சினைகளுக்கு வழிவகுத்து விடுகிறது. சிலர் தங்களின் குடும்பப் பிரச்சினைகளுக்கு மாய்மாலப் பாஸ்டர்களின் ஆலோசனைகளைத் தேடி அவற்றைத் தீர்க்க முடியாத பிரச்சினைகளாக்கி விடுகிறார்கள். பிசாசுகளின் பிடியிலிருந்து விடுதலை பெறுவதற்காக பிரார்த்தனை நாடுகின்ற சிலர், போலி ஊழியர்களின் வஞ்சக வலையில் சிக்கி விடுகின்றார்கள்.

ஏதோ ஒரு பிரச்சினை ஏற்படுத்திய நெருக்கடி, தவறானவர்களையும் தவறான தீர்வுகளையும். தவறான வழிகளையும் நம்ப வைத்து நாசம் செய்து விடுகிறது. ஆம், எந்தச் சூழ்நிலையிலும் பதட்டங்களுக்கும் அவசரமான முடிவு களுக்கும் இடம் தராமல், தேவனுடைய வழிகளில் தீர்வுகளைத் தேடக் கவன மாயிருக்க வேண்டும். பெலிஸ்தியர்கள் தன்னைத் தோற்கடித்து விடுவார்களோ என்ற அச்சத்தின் விளைவான பதட்டத்தினால், சவுல் சாமுவேலுக்குப் பதி லாக தானே பலியிட்டான். அதன் விளைவாக தேவனுடைய ஆதரவை இழந்து போனான். இன்னொரு தருணத்தில் குறிசொல்லும் பெண்ணை நாடி தன்னுடைய பிரச்சினைகளுக்குத் தீர்வு தேடினான். ஆனால், அதனால் தேவ கோபம் அவன் மேல் வந்தது.

தன்னுடைய வாழ்வின் பிரச்சினை தொடர்பாக வரம் பெற்ற ஊழியர் ஒருவரிடம் தீர்க்கதரிசனம் கேட்கச் சென்றார் ஒருவர். அன்று கர்த்தர் வெளிப்படுத்தினார் என்று அவர் சொன்ன விஷயம் இவருக்குச் சரியாகத் தோன்றியது. எனவே அவர் வல்லமை மிக்க தீர்க்கதரிசி என்று நம்பி அவரிடம் அடிக்கடி சென்றார். அவர் கர்த்தர் பேசினார் கர்த்தர் பேசினார் என்று கூறி இவரிடமிருந்து பணத்தையும் நகை களையும் மிகுதியாக வாங்கி ஏமாற்றி விட்டார். எந்த ஒன்றையும் தேவ சமுகத்தில் வைத்து தேவன் தருகின்ற ஆலோசனைகளைப் பெற அதிகக் கவனம் செலுத்த வேண்டும். யார்மேல் நம்பிக்கை வைத்தாலும், அது வேத வார்த்தைகள் அடிப் படையிலான சரியான நம்பிக்கையா என்று கவனிக்க வேண்டும்.

ஜீவ நீரோடை — சிந்தனைக்கு...

தோல்வியின் காரணத்தை உன்னிடம் தேடிப்பார்.
வெற்றியின் இரகசியத்திற்காக தேவனை நாடிச்செல்.

ஆகஸ்ட் 25
பாவம் பெருகினாலும்

லூக்கா 17:20-37

நோவாவின் நாட்களில் நடந்தது போலவும்
லூக்கா 17:26

நாம் மிக மிக மோசமானதொரு காலத்தில் மிக மிகக் கேடானதொரு உலகத்தில் வாழ்கின்றோம். பாவம் செய்யத் தூண்டுகின்ற விஷயங்கள் மிக வல்லமையாகச் செயல்படுகின்றன. பாவத்தைத் தவிர்க்கும் வாய்ப்புகள் மிகவும் குறைவாக உள்ளன. சரியானதொரு வாழ்க்கைப் பாதையில் பயணம் செய்வது முடியாத காரியம் என்பது போன்றதொரு சூழ்நிலை உருவாகியிருக்கின்றது. முன்பெல்லாம் தவறான விஷயங்களை நோக்கிச் செல்லாமல், கால்களைக் கட்டுப்படுத்த வேண்டிய தேவை இருந்தது. இன்று எதையும் தேடிச் செல்லத் தேவையில்லை. நாம் தேடாமலே எல்லாத் தவறான விஷயங்களும் நம்மைத் தேடி வந்து சூழ்ந்து நிற்கின்றன.

பாலியியல் சம்பந்தமான தவறான இன்பங்களுக்கான வாய்ப்புகள் வாலிபர் களையும் பெரியவர்களையும் சுற்றிச் சுற்றி வந்து "பயன்படுத்திக் கொள், பயன்படுத்தி க்கொள்" என்று கூறுகின்றது. எல்லாம் எளிதாகிவிட்டது. எல்லாம் சாதாரணமாகி விட்டது. ஒரு கிளிக் தூரத்தில்தான் இன்று அனைத்துப் பாவமான விஷயங்களும் நின்று கொண்டிருக்கின்றது.

அப்படியானால் இந்தப் பொல்லாத காலங்கள் எதை நமக்குச் சொல்லுகின்றது? நாம் நல்லதொரு வாழ்க்கையை வாழவே முடியாது என்று சொல்வதாகச் சிலர் கூறுகின்றனர். ஆன்மிக நம்பிக்கை சார்ந்து தூய வாழ்க்கை வாழ்வது என்பது நடைமுறைப்படுத்த இயலாத விஷயம் என்று சிலர் கூறுகின்றனர். ஆனால், உண்மையில் இந்தக் காலங்கள் நமக்குச் சொல்வது இவைகளையல்ல. உனக்குத் தேவ உறவு அதிகமாகத் தேவைப்படுகிறது. உனக்குத் தேவ கிருபையின் தேவை அதிகமாயிருக்கின்றது. நீ தேவ பலத்தை விசுவாசித்து இன்னும் கடுமையாக நல்ல தொரு போராட்டத்தைப் போராட வேண்டியுள்ளது. இவைதான் இந்த நாட்கள் கூறுகின்ற செய்திகள்.

தேவன் எக்காலங்களிலும் நம்மைச் சரியாக வாழவைக்க வல்லவராயிருக் கின்றார். பாவங்கள் எத்தனைதான் பரவி நின்றாலும் அவர் நம்மைப் பாதுகாக்கப் போதுமானவராயிருக்கின்றார். தேவனை விசுவாசிக்கின்றவர்கள் பாவத்தின் வல்லமை யை அல்ல. தேவ வல்லமையின் மிகுதியையே பார்க்க வேண்டும். பாவத்தின் வலிமை யை அதிகமாகப் பார்க்கப் பார்க்க, தேவ கிருபையின் வலிமையையும் நாம் அதிக மாக விசுவாசிக்க வேண்டும். சரியான தரிசனம், முழுமையான தேவ சார்பு, போது மான விசுவாசம் ஆகியவை இருந்தால் நோவாவின் நாட்களில் நாம் வாழ்ந்தாலும் நோவாவைப் போல தூய்மையிழக்காமல் வாழ இயலும்.

சிந்தனைக்கு...

இயலாதவைகளைக் குறித்துக் கவலைப்படாதே.
இயன்றவைகளைச் செய்யக் கவலையற்றிராதே.

ஆகஸ்ட் 26

நியாயமா? நோக்கமா?

ஏசாயா 53 : 1 - 12

அவர் தம்முடைய வாயைத் திறவாதிருந்தார்....
ஏசாயா 53: 7

குறிப்பிட்ட ஒரு ஊருக்குச் செல்லும் பேருந்து மிகவும் காலதாமதமாகி வந்தது. பேருந்து வந்து நின்றதும் நீண்ட நேரம் காத்திருந்த பயணிகள் அவசர அவசரமாக முண்டியடித்துக்கொண்டு பேருந்துக்குள் செல்ல முற்பட்டனர். அவ்விதம் முண்டியடித்துக் கொண்டு ஏறின இரண்டு ஆட்களுக்கிடையில் வாக்குவாதம் ஏற்பட்டது. இரண்டு பேரும் விட்டுக் கொடுக்கவும் இல்லை. தாழ்ந்து போகவும் இல்லை. வாக்குவாதம் தொடர்ந்து கைகலப்பாக மாறியது. அதற்குள் அவர்கள் இருவரையும் கை விட்டு விட்டு பேருந்து போய்விட்டது. விட்டுக் கொடுக்காத மனநிலையின் விளைவாக அவ்வளவு நேரம் காத்திருந்த அவர்கள், போக வேண்டிய ஊருக்குப் போகமுடியாமல் போய்விட்டது.

அவரவர் தங்கள் தங்கள் பக்கத்தில்தான் நியாயம் உள்ளது என்று சாதித்துக் காட்ட முற்படுவதின் விளைவாகத்தான் பல குடும்பங்கள் சீரழிகின்றன. பல நல்ல உறவுகள் உடைகின்றன. பல ஐக்கியங்கள் நோக்கங்களில் தோல்வி அடைகின்றன. சில நேரங்களில் நம்முடைய பக்கத்தில்தான் நியாயம் இருக்கும். ஆயினும், அந்த நியாயங்களுக்காகவே நாம் போராடிக்கொண்டிருந்தால் நோக்கங்களை ஒரு போதும் எட்ட முடியாது.

பல குடும்ப உறவுகள் கலகலத்துப் போவதின் காரணம், தங்கள் பக்கம்தான் நியாயம் இருக்கின்றது என்ற எண்ணத்தை அளவுக்கதிகமாகச் சார்ந்து கொள்வது தான். சில நேரங்களில் நல்ல நியாங்களைவிட நல்ல நோக்கங்கள் மிக முக்கியமானவை. கணவன் அல்லது மனைவி கொஞ்சம் நியாயங்களை விட்டுக்கொடுத்திருந்தால், எத்தனையோ குடும்பங்கள் விவாகரத்துகளைத் தவிர்த்திருக்க முடியும். கொஞ்சம் தாழ்ந்து போயிருந்தால், எத்தனையோ நல்ல அமைப்புகள் வீணாக உடைந்து பயனற்றுப் போவதைத் தவிர்த்திருக்க முடியும்.

லோத்துவிடத்திலும், சாராளிடத்திலும் ஆபிரகாம் தன்னுடைய நியாயத்திற்காகப் போராடாமல், தன்னைத் தாழ்த்தி இறங்கி வந்தான். எனவே, தேவ நோக்கம் ஆபிரகாமின் இறை வாழ்க்கையிலும், குடும்ப வாழ்க்கையிலும் சற்றும் குறையாமல் நிறைவேறியது. தேவன் ஆபிரகாமின் வாழ்க்கையை எல்லா நிலையிலும் உயர்த்தினார்.

தாவீதின் தளபதியாயிருந்த யோவாப் தன்னுடைய சகோதரன் கொலையுண்ட விஷயத்தில் தன்னுடைய நியாயத்தையே சார்ந்து கொண்டிருந்தான். அந்த விட்டுக்கொடுக்காத மனநிலையின் விளைவாக மிகுதியாய் உயர்த்தப்பட்டிருந்தும் கனப்படும் வாய்ப்பை அவன் இழந்து போனான்.

சிந்தனைக்கு...

உன்னிடமுள்ள நல்லதை பிறர் பார்க்கும் வரை பொறுமையாயிரு
தீயதையோ பிறர் பார்க்கும் முன் அகற்றிட அவசரமாயிரு.

ஆகஸ்ட் 27
மனம் மாறவில்லையே

ரோமர் 2:12-29

புறம்பாக யூதனானவன் யூதனல்ல...
ரோமர் 2:28

இந்தியாவிலிருந்து அமெரிக்கா சென்று சில ஆண்டுகள் தங்கியிருந்த ஒருவரை, அவருடைய உறவினர் ஒருவர் பார்க்கச் சென்றார். அங்கே அவர் முற்றிலும் மாறியிருந்தார். அமெரிக்கரமாக உடுத்திருந்தார். அமெரிக்க உணவுகளை விரும்பி உண்டார். அமெரிக்க கலாச்சார பாதிப்புகள் அவரிடம் ஏராளம் காணப்பட்டன. அவரைக் குறித்து அவருடைய உறவினர் சொன்ன ஒரு விஷயம் வேடிக்கையானது. ஏறக்குறைய அவர் ஒரு அமெரிக்கரைப் போலவே மாறிவிட்டார். ஆனால், இந்தியா விலிருந்து சென்றபோது அவரிடமிருந்த மனநிலை மட்டும் சற்றும் மாறாமல் அப்படியே இருக்கிறது. கோபம், எரிச்சல், பொறாமை, பொருளாசை, நான் என்ற அகம்பாவம், பிறரை மதியாமை, போன்ற தீய குணங்கள் சற்றும் மாறவில்லை.

சிலருடைய ஆவிக்குரிய வாழ்க்கையும் இப்படியே இருக்கின்றது. இரட்சிக்கப் பட்டு கிறிஸ்தவ சபையில் அங்கமான பின்பு மாற்றங்கள் பல நடைபெற்றுள்ளன. பக்தியான பல பழக்கங்களும், தோற்றங்களும் வந்திருக்கின்றன. ஜெபம், ஆராதனை, வேத வாசிப்பு, நல்ல சில செயல்கள், ஊழியம், விசுவாச அறிக்கை கள் என பல ஆவிக்குரிய புதியதோற்றங்கள் ஏற்பட்டுள்ளன. ஆயினும், வருத்தமான விஷயம் என்னவென்றால், இரட்சிக்கப்படாத காலத்தில் இருந்த சுயமும், அதைச்சார்ந்த தவறான மனநிலைகளும், இன்னும் மாற்றம் பெற வேயில்லை.

ஆனால், உள்நிலை மாற்றம் ஒரு கிறிஸ்தவனுடைய வாழ்க்கையில் நிகழ்ந் திருக்க வேண்டிய முக்கியமான நிகழ்வாகும். உள்நிலையில் மாறாமல் வெளி நிலையில் எவ்வளவுதான் மாறினாலும், தோற்றம், காட்சிகளை உருவாக்கினாலும் அது பாத்திரத்தின் வெளிப்புறத்தை மட்டும் கழுவுகின்ற ஒரு அனுபவமே. வெளிப் புறக்காட்சி அல்ல. உட்புற மாட்சி தேவை. நம்மை நாம் பக்திக் காரியங்களோடு இணைத்து, பக்தியாக வாழ்கின்றது போன்ற ஒரு காட்சியை ஏற்படுத்திக்கொள்வது எளிதானது. ஆனால், பரிசுத்த ஆவியினால் குணநிலைகளிலும் பண்பு நிலை களிலும் கர்த்தருக்கேற்ற மாற்றங்களைக் காண்பதுமே மிகவும் அவசியம்.

மிக மிகப் பக்தியாகத் தோன்றுகின்ற சிலருடைய வாழ்க்கையில், சில சூழ்நிலை களில் அவர்களின் உண்மையான மனநிலைகள் வெளிப்படுகின்றன. அவை கள் மிகவும் பாவ சாயலானவைகள். ஏனென்றால், அவர்கள் இன்னும் உள்ளான மாற்றம் காணும் சரியான ஆவிக்குரிய அனுபவத்திற்கு வந்து சேரவில்லை. உள்நிலையில் உண்மையான மாற்றங்களைக் காணாத நிலையில், வெளிநிலை யில் நாம் காண்பிக்கும் நல்ல தோற்றங்கள் நிலைத்திருப்பதில்லை

சிந்தனைக்கு...

உன்னுடைய முயற்சிகள் ஒரேயடியாக மாற்றங்களை ஏற்படுத்தாவிட்டாலும் ஒரு சில மாற்றங்களையாவது ஏற்படுத்தவே செய்யும்.

ஆகஸ்ட் 28

கிறிஸ்தவன்

மத்தேயு 5:1-16

மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு...
மத்தேயு 5:16

அலுவலகம் ஒன்றில் பணிபுரிந்த ஒருவருடைய பணம் திருடப்பட்டிருந்தது. யார் இதைச் செய்திருப்பார்கள் என்ற சந்தேகக் கேள்வி எழும்பியது. அங்கே இருந்த கிறிஸ்தவ பியூன் செய்திருக்கலாம் என்ற சந்தேகம் பலப்பட்டது. ஆனால், அதைக் கேள்விப்பட்ட மேனேஜர் அங்கு வந்தார். அவர் கிறிஸ்தவர் அல்ல. ஆனால், கிறிஸ்தவ பியூன் சந்தேகிக்கப்படுவதை அறிந்து, அவனை வீணாகச் சந்தேகிக்காதிருங்கள். அவன் ஒரு கிறிஸ்தவன். கிறிஸ்தவன் திருடியிருக்க முடியாது என்றார்.

இந்த வார்த்தை அந்த பியூனின் இருதயத்தை உடைத்தது. கிறிஸ்தவரல்லாத ஒருவர் கிறிஸ்தவர்கள்மேல் வைத்திருந்த நம்பிக்கையை, நான் துரோகம் செய்து விட்டேனே, என்று நொந்து போனான். குற்ற மனசாட்சியினால் பாதிக்கப்பட்ட பியூன் மேனேஜரிடம் போய் ஐயா மன்னியுங்கள். உண்மையில் திருடியது நான்தான் என்றான். ஆயினும், அந்த மானேஜர் கோபமடையாமல் நீ ஒரு கிறிஸ்தவனா யிருந்ததால் தவறை ஒத்துக் கொண்டாய். கிறிஸ்தவன் தவறை மறைக்கமாட்டான் என்றார்.

சிலர் கிறிஸ்தவர்கள் அல்ல. ஆனால், கிறிஸ்தவர்கள் என்றால் பெரிய மதிப்பையும், மரியாதையும் வைத்திருப்பவர்கள் அவர்கள். கிறிஸ்தவர்கள் என்றால் அவர்கள் எல்லோரையும்போல் அல்ல என்று சிந்திப்பவர்கள். அங்குதான் நம்முடைய பொறுப்பு அதிகமாகிறது. ஒரு கிறிஸ்தவன் சாட்சியற்று நடக்கும்போது அது ஒரு நம்பிக்கைத் துரோகம். போக்குவரத்து விதிகளை மீறியதற்காக சிலரை அழைத்து எச்சரித்து அனுப்பிய அதிகாரி, ஒருவனை மட்டும் எச்சரித்ததோடு அபராதமும் செலுத்த வைத்தார். கிறிஸ்தவன் என்ற காழ்ப்புணர்ச்சியினால்தானே எனக்கு அபராதம் விதிக் கிறீர்கள் என்று கேட்டான் அவன். கிறிஸ்தவர்கள் சட்டதிட்டங்களை அறிந்து அதற்குக் கீழ்ப்படிகின்ற போதனைகளைக் கேட்பவர்கள். சட்ட ஒழுங்கை மதிக்க வேண்டிய நீயே தவறு செய்ததால்தான் அபராதம் என்று பதிலளித்தார் கிறிஸ்தவரல்லாத அந்த அதிகாரி.

தவறுகளைத் தவிர்க்க வேண்டியது கிறிஸ்தவர்களின் கடமை. தவறிவிட்டால் தவறுகளுக்காக மனம் வருந்துவது கிறிஸ்தவர்களின் அடையாளம். திருநெல்வேலி, நாகர்கோயில், தூத்துக்குடி போன்ற தென் தமிழக நகரங்களில் கிறிஸ்தவர்கள் ஏராளம் உண்டு. ஆனால், செய்தி பத்திரிகைகளில் இந்த நகரங்களில் நிகழும் குற்றச் செயல்களை வாசிக்க நேரிடும்போது பல பெயர்கள் கிறிஸ்தவப் பெயர்கள். கிறிஸ் தவப் பெயர்களை சூடிக்கொண்டு தலைநிமிர்ந்து நிற்க வேண்டியவர்கள், கிரிமினல் செயல்களால் தலைகுனிந்து போகும் நிலை வேதனையானது.

சிந்தனைக்கு...

இறைவன் ஒளியாயிருக்கிறார் என்பதில் யாருக்கும் சந்தேகமில்லை
நீ யாருக்கு ஒளியாயிருக்கிறாய் என்பதே கேள்வி.

ஆகஸ்ட் 29
ஏன் பலன்கள் இல்லை?

ரோமர் 4:1–25

பாவியை நீதிமானாக்குகிறவரிடத்தில் விசுவாசம் வைக்கிறவனாயிருந்தால்...
ரோமர் 4:5

அது ஒரு அரசாங்கத்திற்குச் சொந்தமான பூங்கா. அங்கே ஒருவர் காலையிலிருந்து மாலை வரை பூங்காவிற்குத் தேவையான பராமரிப்பு பணிகளைச் செய்கின்றார். செடி கொடிகளை ஒழுங்குபடுத்தி வெட்டி விடுகிறார். தண்ணீர் பாய்ச்சுகின்றார். பூங்காவைச் சுத்தம் பண்ணுகின்றார். இவ்விதம் நாள் முழுதும் செய்கின்றார். ஆனால், இந்த பராமரிப்புப் பணிக்காக அவருக்கு எதுவும் ஊதியமாகக் கிடைக்கவில்லை. ஏன் இது அநியாயம் இல்லையா? உழைப்பிற்கு ஊதியம் தரவேண்டாமா? ஆனால், அவர் அந்த பூங்காவைப் பராமரிக்க நியமிக்கப்பட்ட ஊழியரே அல்ல. அவர் தன்னிச்சையாக வந்து அவ்விதம் வேலை செய்கிறார். அவருக்கு ஊதியம் தர அரசாங்கத்தில் நியமம் எதுவுமில்லை.

சிலருடைய பக்தி வாழ்க்கையும் இப்படியே இருக்கின்றது. அவர்கள் ஆலயம் வருகின்றார்கள். ஆராதனை செய்கின்றார்கள். காணிக்கை அளிக்கின்றார்கள். பக்தியான பல செயல்களைச் செய்கின்றனர். பலவித தர்ம காரியங்களில் ஈடுபடுகின்றார்கள். ஆயினும், இத்தகைய நற்செயல்களுக்கும், பக்தி காரியங்களுக்கும் உரிய பலன்கள் அவர்களுக்கு கிட்டவில்லை. இது அவர்களுக்கு தாங்கள் வாழும் பக்தி வாழ்க்கையின்மேல் சலிப்பை ஏற்படுத்துகின்றது. அவர்களின் ஆசீர்வதிக்கப் படாத நிலை மற்றவர்களுக்கும் தேவ பக்தியின்மேல் ஆர்வம் ஏற்படுவதற்குத் தடையாக உள்ளது.

ஆனால், பலருடைய பக்தியான வாழ்க்கை அந்த பூங்காவில் பணிபுரிந்தவனின் நிலமைக்கு ஒப்பாகவே உள்ளது. அவர்கள் முதலாவது தேவனோடு ஒரு உறவு ஏற்படுவதற்கு என்ன செய்ய வேண்டுமோ அதைக் குறித்து சீரியஸாக சிந்திக்கவில்லை. ஆசீர்வாதங்களைப் பலனாகப் பெற்றுத் தருகின்ற ஒரு தேவ பக்தியின் வாழ்க்கைக்கு சில நியமங்கள் உள்ளன. நம்முடைய விருப்பத்தில் பக்தியான சில காரியங்களைச் செய்துவிட்டு பலன் எதிர்பார்க்க முடியாது. ஏனென்றால், தன் கிரியைகளைச் சார்ந்த தேவ பக்தியால் யாரும் தேவ அங்கீகாரத்தையோ, ஆசீர்வாதத்தையோ பெற முடியாது.

தன்னைப் பாவி என்று உணர்தல், அதற்காக மன வருத்தம் கொள்ளுதல், இயேசுவை இரட்சகராக விசுவாசித்தல், சரியான தெளிவோடு இரட்சிப்பை விசுவாசித்துப் பெறுதல், பரிசுத்த ஆவியானவரின் ஐக்கியத்தை விசுவாசித்து நிச்சயப்படுத்துதல், தேவ வழிநடத்துதலை நாடுதல் போன்ற ஆவிக்குரிய நியமங்களை விழிப்புணர்வோடு பின்பற்றிச் செயல்படவேண்டும். அப்போது தான் அதுதேவனுடைய அங்கீகரிப்பினைப் பெற்ற ஆவிக்குரிய வாழக்கையாக மாறும்.

சிந்தனைக்கு...

இறைவனின் எதிர்பார்ப்புகளுக்கு நீ ஏற்றவனாயிரு. அதுவே இறைவனிடம் நீ எதிர்பார்ப்பவைகளை பெறுவதற்கான வழி.

ஆகஸ்ட் 30
பாடங்கள்

எபிரெயர் 11:32-40

விசுவாசத்தி ய னாலே அவர்கள் ராஜ்யங்களை ஜெயித்தார்கள்.
எபிரெயர் 11:33

நாம் பிறருடைய தோல்விகளிலிருந்து நிறையப் பாடங்கள் கற்றுக்கொள்ள வேண்டும். ஆயினும், நம்முடைய வெற்றிகளிலிருந்து மட்டுமே பிறருக்கு நல்ல பாடங்கள் கற்றுக்கொள்ள வாய்ப்பளிக்க வேண்டும். பெரிய வெற்றிகளைப் பெற்ற சிலர் தோல்வியடைந்தவர்களிடமிருந்து நல்ல பல பாடங்களைக் கற்றவர்களே. அந்தப் பாடங்கள் எப்படி வெற்றி பெறுவது என்பது தொடர்பாக நல்ல பாடங்களைப் பிறருக்குக் கொடுக்கச் செய்திருக்கிறது.

தாவீது ஒழுக்கம் என்ற விஷயத்தில் காணநேர்ந்த தோல்வி, நமக்குப் பல எச்சரிப்புமிக்க பாடங்களைக் கற்றுத்தருகின்றன. ஒரு வெற்றியாளனுக்கு வெகு அருகிலேயே தோல்வி கண்ணுக்குப் புலப்படாமலும், சத்தமில்லாமலும் படுத்திருக்கும் என்பதை தாவீதின் தோல்வி கற்றுக்கொடுக்கின்றது. ஒரு வெற்றியாளன் வெற்றிக் கொடி நாட்ட பல மைல்கள் செல்ல நேரிடும். ஆனால், தோல்வி என்பது இருக்கின்ற இடத்திற்கு அருகிலேயே இருந்துகொண்டிருக்க முடியும்.

யோசேப்பு நமக்கு பல நல்ல பாடங்களைக் கற்றுக்கொடுக்கின்றான். ஆனால், யோசேப்பின் தோல்விகளிலிருந்து அல்ல. யோசேப்பின் வெற்றிகளிலிருந்து தரிசனமும், தேவ ஐக்கியமும் உடைய மனிதனைத் தோல்வி எவ்வளவுதான் மடக்கிப் பிடிக்க நினைத்தாலும், அவனைச் ஜெயிப்பது கடினம் என்பது யோசேப்பின் வெற்றியிலிருந்து நாம் கற்கும் முக்கியமான பாடம். என்னுடைய தனிமை நிலைமை என்னைப் பாவம் செய்ய வைத்துவிட்டது, என்னுடைய வாலிப வேகம் என்னை விழவைத்துவிட்டது, அதிகமான கட்டாயத்தை உணர்ந்ததால் வழுவிப் போக நேர்ந்தது. தவிர்ப்பதற்கு வழிகள் இல்லாமல் போய்விட்டது என்றெல்லாம் பாவத்திற்குச் சாக்குப் போக்குச் சொல்ல விரைகின்றவர்களுக்கு, யோசேப்பின் வெற்றி சவால் விடுகிறது.

இன்று நம் நடுவில் தோல்வியாளர்கள் அநேகர். பண ஆசை, பொருளாசை, புகழாசை, உலக மோகம், ஆடம்பரம், பாலியல் மோகங்கள் என காற்றுகள் வீசும் போது சாய்ந்து விடுவோர் பலர். அவர்களால் பலருக்கு நல்ல எச்சரிக்கை கிடைக்கின்றது. ஆனால், எச்சரிக்கை மட்டுமே வெற்றியடையப் போதாது. நம்பிக்கையூட்டும் வெற்றியாளர்கள் வேண்டும். நாம்தான் அதற்காக எழும்ப வேண்டும். பணஆசை ஜெயிக்க முடியாததல்ல. பாலியல் அரக்கன் மேற்கொள்ளப்பட இயலாதவன் அல்ல. ஆடம்பரங்கள் தவிர்க்க முடியாததல்ல. உலக மோகங்கள் வீழ்த்த முடியாதவைகள் அல்ல என்று நாம்தான் நிச்சயப்படுத்த வேண்டும்

சிந்தனைக்கு...

உன்னிடமிருந்து கற்றுக்கொள்ளப் பிறருக்கு ஏதாவது கிடைக்காவிட்டால் நீ இறைவனிடமிருந்து எதைப் பெற்றுக்கொண்டாய் என்பதைச் சிந்தித்துப்பார்.

ஆகஸ்ட் 31
தினசரி அனுபவம்

மத்தேயு 6:5-18

எங்களுக்கு வேண்டிய ஆகாரத்தை இன்று எங்களுக்குத் தாரும்.
மத்தேயு 6:11

மோட்டர் பைக் மெக்கானிக் ஒருவரை சில நாட்களில் பார்க்கும் போது இரவும் பகலும் வேலை செய்து கொண்டிருப்பார். சாப்பாடு, தூக்கம், ஓய்வு எதையும் முக்கிய மாக எண்ணாமல் உழைப்பதைப் பார்க்கும்போது, இவரைப் போன்ற கடுமையான உழைப்பாளிகள்தான் இந்தியாவுக்கு வேண்டும் என எண்ணத் தோன்றும். ஆனால், இவருடைய கடுமையான உழைப்பினால் இவருக்கு எந்த விசேஷ லாபமும் இல்லை. ஏனென்றால், இவர் வேறு சில நாட்களில் சரியான சோம்பேறியாக இருப்பார். சிறுவேலைகூட செய்யாமல் டி.வி. பார்த்துக் கொண்டும், அரட்டை அடித்துக் கொண்டும், அரசியல் பேசிக்கொண்டும் இருப்பார்.

இவரைப் போன்ற ஆவிக்குரியவர்களும் பலர் உண்டு. அவர்கள் சராசரி வாழ்வில் போதுமான அளவு ஜெபித்து, வேதம் வாசித்து, சத்தியங்களைக் கேட்டு வலிமையான விசுவாசிகளாக வாழமாட்டார்கள். ஆனால், பிரச்சினைகள், நெருக்கங்கள் ஏற்படும் போது எங்கே உபவாசக் கூட்டம். எங்கே இரவு ஜெபம், எங்கே வல்லமை முகாம் என ஆவிக்குரிய ஈடுபாடுகளில் படுபிசியாக இருப்பார்கள்.

நாம் நாலு நாட்கள் பட்டினி கிடந்துவிட்டு, மூன்று நாட்கள் எவ்வளவுதான் சத்துமிக்க உணவு சாப்பிட்டாலும், அதனால் ஆரோக்கியம் வந்து விடாது. ஜெபம், வேத வாசிப்பு, வேத சிந்தனை, தேவனைத் தேடும் ஆர்வம், இவை யாவும் குறிப்பிட்ட சில நாட்களில் அல்ல, அவை சராசரி அனுபவங்களாக எப்போதும் காணப்பட வேண்டும். தினமும் தேவனைத் தேடி, தினமும் அவருடைய ஐக்கியத்தை அனுபவித்து, தினமும் அவருடைய வழிகளில் நடந்தால்தான் ஆவிக்குரிய வல்லமையும், ஆசீர்வாதங்களும் நம்முடைய வாழ்க்கையில் சீராகக் காணப்படும்.

சிலர் ஞாயிறு அன்று மட்டும் அக்கினி ஜுவாலைகளாக விளங்குவார்கள். பிற தினங்களில் அனைந்து குளிர்ந்துபோய் கிடப்பதைக் குறித்துக் கவலைப் படமாட்டார்கள். சிலர் படிக்கும்போது பல மணி நேரங்கள் ஒன்றாக வேத புத்தகத் தையும், பிற ஆவிக்குரிய புத்தகங்கனையும் படிப்பார்கள். பிற நேரங்களில் மருந்துக்குகூட நான்கு வசனம் படிக்கமாட்டார்கள். என்னுடைய தினசரி தியான நூலை சிலர் ஒரே நேரத்தில் ஒரேயடியாக ஒன்றிரண்டு மாதங்களைச் சேர்த்துப் படித்து விடுவார்கள். ஆனால், மற்ற நேரத்தில் மறந்தே போவார்கள். இது பத்து நாள் குடிக்க வேண்டிய காப்பியை ஒன்றாய் குடிக்கும் அனுபவம். ஆம், சீரான ஒழுங்கும் கிரமுமான ஒரு ஆவிக்குரிய அனுபவம் வேண்டும். ஒவ்வொரு நாளுக்கும் தேவ கிருபையும் தேவ வல்லமையும் தேவை. அதனைத் தினமும் தேடுவோம்.

சிந்தனைக்கு...

சரியான சுபாவங்களைக் குறித்து நீ கவலைப்படாவிட்டால்
சரியற்ற சுபாவங்களால் நீ கவலைப்பட நேரிடும்.

செப்டம்பர் 1

ஜெபம் மட்டும் போதுமா ?

லூக்கா 9:12-17

நீங்களே அவர்களுக்குப் போஜனம் கொடுங்கள்
லூக்கா 9:13

திருச்சபையைச் சேர்ந்த பெண் ஒருத்திக்கு நுரையீரல் பாதிக்கப்பட்டு மருத்துவச் சிகிட்சைக்காக ஒரு பெரிய தொகை தேவைப்பட்டது. உடனேயே போதகரின் ஆலோசனைப்படி அங்கு செயல்பட்ட ஜெபக் குழுவினர் உபவாசித்து ஜெபிக்க ஆயத்தமாயினர். கர்த்தர் தாராளமாக உதவிகளை அனுப்பித்தரும்படி எல்லோரும் ஜெபித்தனர். ஜெபம் முடிந்த பின்பு ஜெபக்குழு உறுப்பினர் கருத்து ஒன்றைக் கூறினார். நாம் ஜெபித்த ஜெபங்களுக்கு பதில் நம்மிடம்தான் உள்ளது. கர்த்தர் ஜெபத்தைக் கேட்டுச் செயல்படுவதாக இருந்தால் நம்மை அவர் முதலாவது செயல்படுத்துவதுதான் நியாயம். அந்தப் பெண்ணுடைய மருத்துவச் செலவிற்கு தேவையானதைச் செய்திட அவர் போதுமான நிதி வசதியை ஏற்கெனவே ஜெபித்த நம்மிடமே தந்துள்ளார் என்றார்.

குறிப்பிட்ட ஒருவர் யாருக்கு உதவி செய்ய விரும்பினாலும் தன்னுடைய பாக்கெட்டிலிருந்து செய்யமாட்டார். சில வசதி மிக்க நண்பர்கள் வாயிலாகத்தான் செய்வார். பல கிறிஸ்தவர்கள் பிறருக்கு உதவ வேண்டும் என்பதில் நல்ல விருப்பமும் பாரமும் ஆர்வமும் உடையவர்கள். ஆனால், அவர்கள் தேவனை நோக்கிச் ஜெபித்து அவரைத்தான் செய்யச் சொல்வார்கள். தாங்களோ சிறு துரும்பையும் அசைக்க மாட்டார்கள். சில திருச்சபைகளில் லட்சக்கணக்காக, கோடிக்கணக்காக நிதி வைத்திருப்பார்கள். ஆனாலும், சபைக்கு ஒரு மின்விசிறி தேவைப்பட்டாலோ, ஒரு நாற்காலி தேவைப்பட்டாலோ அதிலிருந்து எடுத்து வாங்கமாட்டார்கள். சபையாரிடம் தான் தானம் பண்ணச் சொல்வார்கள்.

நன்மை செய்ய தேவனுக்குக் கருவிகள் வேண்டும். நாம்தான் கருவிகள். நாம்தான் அவருடைய சரீரம். அவர் விரும்பினால் நாம்தான் செயல்பட ஆயத்தமாயிருக்க வேண்டும். செய்ய இயன்றவைகளை பிறருக்குச் செய்ய முன்வராமல் தேவனுக்குக் கட்டளை கொடுத்துக் கொண்டிருப்பது சரியான ஆவிக்குரிய முறையல்ல. நாம் இயன்றதைச் செய்திட ஆயத்தமாய் இராவிட்டால், தேவன் எப்படி நம்முடைய ஜெபத்திற்குப் பதில் தருவார்?

சிலர் மற்றவர்களுக்காக ஜெபிக்க ஆயத்தமாயிருக்கின்றனர். உபவாசிக்க ஆயத்தமாயிருக்கின்றனர். நிதி வசூல் செய்யத் தயாராயிருக்கின்றனர். தங்களிடம் உள்ளவைகளில் ஒரு சிறு பகுதியை இழக்கவோ ஆயத்தமாயில்லை. தேவனை அறியாத சமாரியன் காயமடைந்து குற்றுயிராய்க் கிடந்தவனைக் கண்டு தன்னுடையவைகளைக் கொண்டு உதவினான்.

சிந்தனைக்கு...

இறைவன் உனக்கு எதையாவது செய்ய வேண்டுமானால், மனிதனுக்கு நீ என்ன செய்ய வேண்டும் என்பதை அறிந்திரு.

செப்டம்பர் 2

தீயதை மட்டுமே கவனியாமல்

எபிரெயர் 6 : 1-20

நன்மையானவைகளும்... உங்களிடத்தில் உண்டாயிருக்கிறதென்று நம்பியிருக்கிறோம் ... எபிரெயர் 6 : 9

ஒருவரிடம் எத்தனை நல்ல பக்கங்கள் இருந்தாலும் ஒரு மோசமான பக்கத்தைத் தான் கண்கள் அதிகக் கூர்மையாகக் கவனிக்கும். எத்தனை நற்குணங்கள் இருந்தாலும் ஒரு தவறான குணத்தைத்தான் கண்கள் சுற்றிச் சுற்றி வட்டமிடும். ஆனால், பிறரிடம் மேலோங்கியுள்ள நல்ல பக்கத்தைக் கவனிக்கஇயலாமல் போவதின் முக்கியமான காரணம், நாமும் ஏதாவது ஒரு விதத்தில் குறைவுபட்டவர்களாக இருக்கின்றோம் என்பதை உணர மறுப்பதுதான். நாம் எத்தனையோ விதங்களில் தவறுகின்றோம், குறைவுபடுகின்றோம் என்பதை கண்டுகொள்ளாமல் போவதால் தான் மற்றவர்களிடம் காண நேர்ந்த ஒரே ஒரு குறைவு நம்மை வருத்தப்படுத்தி விடுகிறது.

ஆவிக்குரியவர்கள் வித்தியாசமான பார்வையுடையவர்களாக இருக்க வேண்டும். பிறரிடம் உள்ள குறைவுகளைக் காணவிரும்பாமல் கண்களை மூடிவிட வேண்டாம். ஆனால், அவர்களிடம் உள்ள நல்லவைகளைக் கவனிக்கும் நல்ல மனப்பான்மைகளை உருவாக்கிக்கொள்ள வேண்டும். ஒரு பழத்தின் ஒரு பக்கம் சற்று அழுகிப் போனதற்காக அப்படியே வேண்டாம் என்று வீசிவிடுவதில்லையே. கத்தரிக்காய் கொஞ்சம் சொத்தையாய் இருந்தால் அதை வெட்டிவிட்டு மீதமானப் பகுதியை பயன்படுத்தவில்லையா?

மற்றவர்களிடம் காணப்படும் நல்லவைகளை நாம் கவனிக்கவேண்டுமானால் நல்லவைகள்மேல் நமக்கு உண்மையானதோர் பிரியம் வேண்டும். நல்லவைகளைப் பார்த்து நேசிக்கவும், திருப்திப்படவும் பழக வேண்டுமேயன்றி, சிறு சிறு தவறுகளைப் பார்த்து உதறி விடுவதற்கு அவசரப்படக்கூடாது.

நம்முடைய இருதயம் அன்பில் வலிமையில்லாதிருந்தால் பிறரை வெறுப்பதற்கு ஏதாவது ஒரு காரணம் கிடைக்காதா என்றுதான் யோசிப்போம். நம்முடைய இருதயத்தில் தேவ அன்பிருந்தால் மற்றவரை நேசிக்க ஏதாவது காரணம் கிடைக்காதா என்று தேடுவோம்.

மனிதன் வாழ்கின்றபோதோ அவனை விமர்சிக்கவும், வெறுக்கவும் ஒரே ஒரு காரணம் கிடைக்காதா என்று மனிதன் தேடுகின்றான். அவன் மரித்துப் போவிட்ட பின்னரோ அவனைப் பாராட்டிப் பேச ஏதாவது ஒரு நல்லதை தேடிக் கண்டுபிடிக்க விரும்புகின்றான். ஆம், நல்லவை ஒரு மனிதனிடத்தில் மேலோங்கியிருக்கும் போது, ஒரு தவறைப் பார்த்து அவனை உதறிடாமல் இருப்போமாக.

சிந்தனைக்கு...

தீயதைக் கண்டிக்க யாராலும் கூடும்,
நல்லதை மெச்சிடவோ சிலரால் மட்டுமே கூடும்.

செப்டம்பர் 3

தேவ ஊழியம்

அப்போஸ்தலர் 13:17-36

தாவீது தன் காலத்திலே தேவனுடைய சித்தத்தின்படி ஊழியம் செய்த பின்பு
அப்போஸ்தலர் 13:36

போக்குவரத்துத்துறையில் பல்லாண்டுகள் பணி புரிந்து ஓய்வு பெற்றார் ஒருவர். தேவ ஊழியர் ஒருவரிடம் பேசுகின்றபோது, நீங்களெல்லாம் பாக்கிய வான்கள். நீங்கள் கர்த்தருடைய நல்ல ஊழியத்தைச் செய்கின்றீர்கள். எனக்கு அது போன்ற பாக்கியம் கிடைக்காமல் போய்விட்டதே என்றார். அதற்கு அந்த தேவ ஊழியர் ஊழியம் செய்யும் பாக்கியம் கிடைக்காமல் இருந்திருக்காது, நீங்கள் பயன்படுத்த தவறியிருப்பீர்கள் என்று பதிலளித்தார். உடனேயே மற்றவர் எனக்கு எங்கே அந்த பாக்கியம் கிடைத்தது? எனக்குப் போதிக்கத் தெரியுமா, புத்தகம் எழுதத் தெரியுமா, சபை நடத்தத் தெரியுமா என்று கேட்டார்.

போதிக்கத் தெரிந்தவர்களும், புத்தங்கள் எழுதத் தெரிந்தவர்களும், சபை நடத்தத் தெரிந்தவர்களும்தான் தேவ ஊழியத்திற்காக அழைக்கப்பட்டவர்கள் என்ற கருத்து சரியல்ல. தேவ ஊழியம் என்பது போதிப்பதும், ஆராதனை நடத்துவதும், சபைகள் ஸ்தாபிப்பதும், மட்டும் அல்ல. கர்த்தரையும், கர்த்தருடைய தெய்வீகத்தையும் வெளிப்படுத்தும் தன்மையுடைய எந்தச் செயலும் தேவ ஊழியம்தான்.

ஆபிரகாம் போதகரா? தாவீது சுவிசேஷகரா? யோசேப்பு குருவானவரா? தானியேல் பிரதான ஆசாரியனா? நேகேமியா வேதப்பண்டிதரா? இவர்களெல்லாரும் கர்த்தருடைய மிகப்பெரிய ஊழியர்களாக வேதாகமத்தில் பார்க்கின்றோமே, இன்று பிரசங்கிக்கின்ற ஊழியம் மட்டும் போதாது. எழுதுகின்ற ஊழியம் மட்டும் போதாது. ஆராதனை நடத்தும் ஊழியம் மட்டும் போதாது.

தங்களுக்குக் கொடுக்கப்பட்ட பொறுப்புகளை தேவ பயத்தோடு நிறைவேற்றி தேவனை வெளிப்படுத்துகின்ற ஊழியர்கள் அதிகமாகத் தேவை. தாங்கள் செய்கின்ற வியாபாரங்களை உண்மையோடும், நேர்மையோடும், பொது நலச் சிந்தையோடும், விதிமுறைகளை மதிக்கும் பண்புகளோடும் செய்கின்ற ஊழியங்கள் ஏராளம் வேண்டும். குடும்பங்களுக்கு நடுவில் நற்குணங்களோடும், நற்பண்புகளோடும் வாழ்ந்து கிறிஸ்துவைப் பிரதிபலிக்கும் மாதிரி வாழ்க்கை ஊழியங்கள் அதிகமாக வேண்டும்.

ஏனென்றால், மேடைகள் மட்டுமே கர்த்தர் சித்தம் நிறைவேறும் இடங்கள் அல்ல. ஆராதனைத்தலங்கள் மட்டுமே ஆண்டவரின் மகிமையை மக்கள் காண்கின்ற இடங்கள் அல்ல. நாம் வாழ்கின்ற எல்லா இடங்களும், செயல்படும் எல்லாக் களங்களும் தேவ மகிமை வெளிப்படும் ஊழிய ஸ்தலங்களாக மாற வேண்டும்.

சிந்தனைக்கு...

தீமையைவிட்டு விலகி ஓட விரும்பினால்
முதலில் நன்மையை நோக்கி விரைந்து ஓடப் பழகு.

செப்டம்பர் 4

மாறுதல்கள்

பிரசங்கி 2:1-17

இதோ எல்லாம் மாயையும் மனதுக்குச் சஞ்சலமுமாயிருந்தது.... பிரசங்கி 2:17

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு தன்னுடைய வாழ்க்கையில் நல்ல பல மாற்றங்களைக் கண்டார் ஒருவர். தன்னுடைய வாழ்க்கையில் ஏற்பட்ட மாற்றங்களைக் குறித்து பிற மதத்தைச் சார்ந்தவர்களிடமும் பகிர்ந்து கொள்வார். ஒரு முறை பிற மத நண்பர் ஒருவர் அவரிடம் நீங்கள் அன்றும் வாடகை வீட்டில்தான் இருந்தீர்கள். இன்றும் வாடகை வீட்டில்தான் இருக்கின்றீர்கள். அன்றும் சைக்கிளில்தான் வேலையிடத்திற்குச் சென்றீர்கள். இன்றும் சைக்கிளில்தான் வேலையிடத்திற்குச் செல்கின்றீர்கள். அன்றும் தொழிற்சாலையில்தான் வேலை செய்தீர்கள். இன்றும் அங்கேதான் வேலை செய்கிறீர்கள். பொருளாதார நிலையிலும் எந்த மாற்றமும் தெரியவில்லை. இப்படியிருக்க இயேசுவினால் அப்படி என்ன மாற்றங்களைக் கண்டுவிட்டீர்கள்? என்று கேட்டார்.

அதற்கு பதிலளித்த அவர் அன்று வாடகை வீட்டில் நிம்மதியற்றவனாக சண்டைப் போடுகிறவனாக குழப்பங்களோடு வாழ்ந்தேன். இன்று வீடு மாறவில்லை. ஆனால், சண்டையில்லை குழப்பம் இல்லை நிம்மதியாக வாழ்கின்றேன். அன்று அலுத்துக் கொண்டே சைக்கிள் ஓட்டினேன். இன்று பாடிக்கொண்டே சைக்கிள் ஓட்டுகிறேன். அன்று தொழிற்சாலையில் வேண்டா வெறுப்போடும் இது என் தலைவிதி என்ற கசப்புணர்வோடும், மனக்கஷ்டத்தோடும் வேலை செய்தேன். வேலையில் எந்தவித உண்மையும் இருக்கவில்லை.

இன்று அதே இடத்தில் மனநிறைவோடும், மகிழ்ச்சியோடும், உண்மை உத்தமத்தோடும் வேலை செய்கின்றேன். பொருளாதார நிலையில் மாற்றம் இல்லை. ஆனால், என் மனநிலை மாற்றம் பெற்றதால் இருப்பது போதும் என்ற நிறைவு வந்துவிட்டது. இவைகள் யாவும் இயேசுவால் நான் கண்ட மாற்றங்கள்தானே என்று கூறினார். அந்த பிறமத நண்பருக்கு அதை எதிர்த்து எதையும் பேச இயலவில்லை.

ஆம், இயேசுவினால் நாம் காணும் மிகப்பெரிய ஆசீர்வாதம் நம்முடைய மன நிலையில் ஏற்படுகின்ற மாற்றங்களே. ஆண்டவரால் நாம் முதலாவது காண வேண்டியது உள்ளான மனமாற்றங்களே. இயேசுவினால் நாம் பெறுகின்ற புதிய இருதயம், சூழ்நிலைகள் மாறாத நிலையிலும் நமக்கு மனநிறைவையும், திருப்தியையும் நல்ல குணாதிசயங்களையும், நம்பிக்கைகளையும் தருகின்றன. அவைகள்தான் அநேகரால் பெற முடியாதவைகள். சாலொமோனைப் போல செல்வ நிலைகளில் பெருகுவதைவிட, பவுலைப் போல போதுமென்ற மனநிலையையும், நிம்மதியையும் வாழ்க்கையில் காண்பதே மிகுந்த ஆசீர்வாதங்கள்.

சிந்தனைக்கு...

தனக்குள் இயேசுவைக் காணாதவனின் வாழ்வில் பிறர் இயேசுவின் மகிமையைக் காணமுடியாது.

செப்டம்பர் 5

ஆசிரியர் என்பவர்

11 தீமோத்தேயு 3 : 1 -17

நீயோ என் போதகத்தையும் நடக்கையையும்...
11 தீமோத்தேயு 3 : 10

2012ஆம் ஆண்டு செப்டம்பர் 5-ம் தேதி தினசரி தியானங்கள் எழுதுவதற்காக சிந்தனைகளைத் தேடிக்கொண்டிருந்தேன். அப்போது டில்லியில் கல்வி நிறுவனத்தில் பணிபுரியும் சகோதரி ஜோனா எனக்குத் தொலைபேசி மூலம் ஆசிரியர் தின வாழ்த்துக்களைக் கூறினார்கள். ஆசிரியர் தினத்தன்று யாரும் இதுவரை எனக்கு வாழ்த்துச் சொல்லி நான் கேட்டதில்லை. நான் பள்ளிக்கூட ஆசிரியரோ கல்லூரி ஆசிரியரோ அல்ல. தொடர்ந்து அவர்கள் பேசும்போது ஒரு கம்ப்யூட்டர்கூட ஒரு மனிதனைவிட அதிகமானவைளைப் போதிக்கின்றது. அதற்காக நாம் அதைப் பாராட்டுவோமா. மற்றவர்களை உயர்ந்தவிதமாகப் பாதிக்கும்படி எதையாவது செய்தால்தான் ஆசிரியருக்குரிய பாராட்டு கிடைக்கும் என்றார்.

ஆசிரியர் பணி என்பது மிக மிக மேன்மையான பணி. ஆனால், வாயினால் மட்டும் கற்றுக்கொடுத்தால் போதாது. நாம் வாழ்கின்ற விதத்தினால் மற்றவர்கள் கற்றுக்கொள்ள எதையாவது செய்ய வேண்டும். கம்ப்யூட்டரை ப்ரோக்கிராம் பண்ணி வைப்பது போல, பிறருக்குக் கற்றுக் கொடுக்கும்படி ஒருவர் சில விஷயங்களை கற்றுத் தேறி வரலாம். அது ஒரு கம்ப்யூட்டர் ரகமான பணி, அதனால் மற்றவர்களின் மூளையை பிரகாசமடையச் செய்யலாம். ஆனாலும், அதனால் அவர்களின் பண்புகள் பிரகாசிக்காது. நல்ல பண்புகளினால் பிரகாசிக்க இயன்றவன்தான் மனிதன். அவ்விதம் பிரகாசிக்க அவனுடைய இருதயத்திற்கு வெளிச்சமூட்டப்பட வேண்டும்.

அனேகர் வெறுமனே பிறருக்குக் கற்றுக் கொடுக்கும் இயந்திரமாக இருக்கின்றார்கள். அவர்களிடமிருந்து பிறர் நலமான எதையும் பெற்றுக் கொள்ள இயலவில்லை. உலகத்தில் தோன்றின ஆசிரியர்களில் இயேசுவுக்கு இணையானவர் எவருமில்லை. அவர் வார்த்தையினால் போதித்ததைவிட வாழ்ந்த விதத்தினால் போதித்ததுதான் அதிகம். அவர் பேசியதை, கேட்டதை, பார்த்த மக்கள் திரள் ஆச்சரியப்பட்டனர். ஆனால், அவர் வாழ்ந்த விதத்தையும், அவரிடம் வெளிப்பட்ட விசேஷப் பண்புகளையும் பார்த்து அவருடைய சீடர்கள் அவரைப் போல வாழ்ந்து பிரகாசிக்க உந்தப்பட்டார்கள்.

ஆயிரம் புத்தகங்கள் கற்றுத்தர இயலாததை ஒருவருடைய நல்ல வாழ்க்கை கற்றுக் கொடுக்கும். பட்டம் பெற்ற பலரால் பிறரிடம் ஏற்படுத்த முடியாத உயர்ந்த தாக்கங்களை, தேவனுடைய வழியில் நடக்கும் ஒரு பண்பாளரால் ஏற்படுத்த இயலும். நீங்கள் கற்றுக்கொடுக்க இயன்ற கல்வியாளராக இருந்தால் நீங்கள் வாழ்கின்ற விதம் பிறருக்கு எதைக் கற்றுக்கொடுக்கிறது என்பதைக் கவனியுங்கள்.

சிந்தனைக்கு...

நல்ல கருத்தைச் சொன்னது யார் என்பதை அல்ல,
அது உனக்குச் சொல்வது என்ன என்று பார்

செப்டம்பர் 6
அதிகப் பசி

ஏசாயா 44:1-8

தாகமுள்ளவன் மேல் தண்ணீரையும்...
ஏசாயா 44:3

ஒரு முறை தேநீர் அருந்துவதற்காக ஒரு கடைக்குச் சென்றேன். அப்போது அங்கிருந்த வாழைக்காய் பஜ்ஜி என் கவனத்தை இழுத்தது. எண்ணெய்யில் ஊறின இது போன்ற பலகாரங்களை நான் வழக்கமாகச் சாப்பிடுவதில்லை. ஆயினும், அன்று அதை வாங்கிச் சாப்பிட்டுவிட்டேன். காரணம் என்னவென்றால் கடுமையான பசி. பசியின் வேகம் வயிற்றுக்கு உகந்தல்லாததைச் சாப்பிடக் கட்டாயப்படுத்திவிட்டது.

இதுபோலவே, மனித இருதயத்திற்குள்ளிருக்கும் பசியின் வேகங்கள் மனிதனை தனக்கு உகந்தல்லாதவைகளை உட்கொள்ளக் கட்டாயப்படுத்தி விடுகிறது. ஆனால், தேவன் தம்முடைய அன்பினாலும், ஐக்கியத்தினாலும் மனிதனுக்குள் எழுந்துகொண்டிருக்கும் பசியையும் தாகத்தையும் தணிக்கின்றார். அப்பொழுது இந்த உலகத்திலுள்ள தவறான விதமான இன்பங்களும், ஆசைகளும் அவனை அதிகமாக இழுத்துக் கொள்ள இயலாது.

அடங்காப் பசியும், தணியாத தாகமும்தான் மனிதனை பலவிதமான தீங்குகளையும், தீவினைகளையும் விளைவிக்கும் தன்மையுள்ள இன்பங்களை நோக்கி வேகமாக ஓட வைக்கின்றன. டி.வி, சினிமா, சமுதாயக் காட்சிகள், நவீன உலக மனிதர்களின் வாழ்க்கை முறைகள் சராசரி மனிதனுக்குள் பசியையும் தாகத்தையும் மிகுதியாய் உருவாக்கி விடுகின்றன. அவற்றால் அவனுக்குள் வெறுமை உணர்வு பெருகுகின்றன. எனவே, பண ஆசையும், பொருளாசையும், ஆடம்பர ஆசைகளும், பாலியியல் மோகங்களும், இச்சைக்குரிய காரியங்களும் மனிதனை அடிமை களாக்கிவிடுகிறது. அதன் விளைவாக பல தவறுகளும், குற்றங்களும் சரி செய்ய இயலாத கேடுகளும் நேரிடுகின்றன.

இவற்றைத் தவிர்க்க என்ன வழி? இவைகளை எதிர்ப்பதில் வேகம் காட்டுவதும், மனதைக் கட்டுப்படுத்திக்கொள்ள முயற்சி செய்வதும், போதிய பலன்களைத் தராது. முதலாவது, இது போன்ற தவறான விஷயங்களுக்கு நேராக ஓடுவதற்குக் கட்டாயப்படுத்தும் பசியை ஆற்றவும், தாகத்தைத் தணிக்கவும் வழி தேட வேண்டும். தேவ உறவினால் அன்றி இதுபோன்ற தாகங்கள் தணிந்திட வேறு வழியில்லை.

கர்த்தராகிய இயேசு கிறிஸ்து மனித இருதயத்திற்குள் தேவ உறவினைக் கொண்டு வரவே கல்வாரி சிலுவையில் ஜீவன் தந்தார். அவர் செய்த பாவப் பரிகார பலியின் விளைவாக, மனிதன் தனக்குள் தேவனைத் தேடிக் கண்டடையும் பாக்கியம் பெற்றான். அந்த தேவ உறவினைத் தேடும்போது தாகமும் பசியும் சரியான ஆரோக்கியமான வழிகளில் தணிக்கப்படுகின்றன.

சிந்தனைக்கு...

பரிசுத்தமான தேவ வார்த்தைகளின் ஓசையினைக் கேட்டுக் கொண்டேயிரு. அசுத்தமான ஆசைகளின் ஓசைகள் அடங்கிப்போகும்.

செப்டம்பர் 7

பணக்காரப் பிச்சைக்காரன்

லூக்கா 16:19-31

நன்மை செய்யும்படி உனக்குத் திராணியிருக்கும் போது,
நீதிமொழிகள் 3 :27

திருச்சபை ஒன்றில் தங்கள் சபையில் உள்ள ஏழைகளுக்கு உதவி செய்யவேண்டும் என்று யோசித்தனர். யார் உதவி பெற வேண்டிய அளவிற்கு மிகவும் ஏழைகளா யிருக்கின்றனர் என்பதைப் பார்த்துப் பட்டியல் தயாரிக்க முன் வந்தனர். அப்போது கமிட்டியில் உள்ள ஒருவர் குறிப்பிட்ட ஒரு சபை உறுப்பினரின் பெயரைச் சொன்னார். சபைப் பதிவேடுகளின்படி பார்க்கும்போது இவர்தான் மிகவும் ஏழையாயிருக்க முடியும் என்றார். அவர் யார் என்று அவர் சொன்ன போது எல்லாரும் விழுந்து விழுந்து சிரித்தனர். அவர் அந்தத் திருச்சபை உறுப்பினர்களிலேயே மிகப்பெரிய பணக்காரர். அவர் ஏன் அவரை ஏழை என்றார்? அவர்தான் எல்லோரைவிட சபைக்கும், ஊழியங்களுக்கும் குறைவான காணிக்கை கொடுப்பவர். அவர்தான் ஏழைகளுக்கு உதவும் திட்டம் எதற்கும் எதையும் கொடுக்காதவர்

பலருடைய நிலமை இதுதான். பணம் மிகுதியாக இருக்கும். ஆனால், இருதயமோ தயவோ, இரக்கமோ, அன்போ இல்லாமல் வறண்டு போயிருக்கும். ஆயிரம் செல்வம் இருந்தும் கஞ்சத்தனத்தில் மூழ்கிப் போனால் அவன் ஒரு செல் வந்தனல்ல, அவன் ஒரு பரிதாபமான ஏழை. பணமும், செல்வமும் உடையவர்கள் கனிகொடுக்கும் மரம் போல பிறருக்குத் தாராளமாக இரங்கவேண்டும். ஏழை களுக்கும், எளியவர்களுக்கும் கொடுக்க எதுவுமில்லாதவர்கள் எத்தனை செல் வங்கள் வைத்திருந்தும் அவர்கள் ஒரு விதமான வறுமையில் வாடுகின்றார்கள் என்பது உண்மை.

நாபால் மிகப்பெரிய செல்வந்தன். ஆனால், தாவீதின் துன்ப வேளையில் ஒரு சிறு உதவி செய்ய அவனுடைய மனம் இடம் தரவில்லை. ஏனென்றால், இன்னொருவருடைய கஷ்டத்தை உணர்ந்து உதவி செய்வதற்குத் தேவையான அன்போ, நல்லுணர்வோ, அக்கறையோ இருதயத்தில் இல்லை.

தேவன் நமக்குச் சம்பாதிக்கும் திறனைத் தந்திருந்தால், நாம் தேவை யிலுள்ள வர்களுக்கும், ஊழியங்களுக்கும் தாராளமாய்க் கொடுப்பதற்கு கடமைப் பட்டுள்ளோம். நான் சம்பாதித்ததை நானே வைத்துக்கொள்வேன். அது எனக்கே உரியது என ஒருவர் எண்ணினால், அந்தச் செல்வம் அவருக்குச் சஞ்சலத்தைக் கொண்டு வரப்போகும் சாபமாக மாறப்போகிறது என்பது பொருள். நன்மை செய் வதற்கான திராணியிருந்தும் அதனைச் செய்யத்தக்கவர்களுக்குச் செய்யாமல் போனால் அது ஒரு பாவம் என்று வேதம் சொல்கின்றது. ஒருவர் செல்வந்தன் என்பது அவர் தன்னிடம் வைத்திருக்கும் அளவைப் பொறுத்ததல்ல. அவர் பிறருக்குக் கொடுக்கின்ற அளவைப் பொறுத்தது.

சிந்தனைக்கு...

பணத்தைச் சரியாகச் செலவிடாதவன் செல்வந்தன் அல்ல
அதனைக் காவல் காக்கும் காவல்காரனே.

செப்டம்பர் 8

வெற்றி என்றால்...

நெகேமியா 4:7-23

அந்த வேலையை ஓயப்பண்ணுவோம் என்றார்கள்.
நெகேமியா 4:11

ஒருவரைக் குறித்து இன்னொருவர் சொன்னார், அவரை விழ வைக்க பலர் இருந்தனர். ஆனால், மீண்டும் எழ விடாமல் தடுக்க எவரும் இருக்கவில்லை. வீரன் என்பவனோ, வெற்றியாளன் என்பவனோ வீழ்த்தப்பட இயலாதவன் என்று அர்த்தம் அல்ல. விழத்தள்ளிவிட இயலும். ஆனால், உண்மையான வீரனை அல்லது வெற்றியாளனை மறுபடியும் எழுந்து வரஇயலாதபடி தடுத்துவிட இயலாது. ஆம். சில மனிதர்களால் நாம் தோல்வியடைய நேர்ந்திருக்கலாம். சில முயற்சிகளும், யோசனை களும், செயல்பாடுகளும் நமக்கு தோல்விகளைத் தந்திருக்கலாம்.

ஜெயிக்க வேண்டும் என்ற தன்னார்வத்தை இழந்து விடாதவரை, எத்தனை தோல்விகளைக் கண்டாலும் அது வெற்றியே என்றார் முன்னாள் இங்கிலாந்தின் பிரதமர் வின்ஸ்டன் சர்ச்சில். தாவீதின் வாழ்க்கையில் முதல் பகுதி, நாடே போற்றும் பெரிய வெற்றியோடு ஆரம்பித்தது. ஆட்டிடையன் ஒருவன் அரக்கனை அழித்தானாம் என்ற செய்தி சவுல் இராஜாவின் சாதனைகளை இரண்டாம் இடத்திற்குக் கொண்டு சென்றது. ஆயினும், தாவீது சந்தித்தது தொடர் தோல்விகளே. ஆயினும், தோல் வியினால் துவண்டு, வாழ்க்கையே முடிந்தது என்று எண்ணவில்லை. ஜெயித்துக் காட்ட வேண்டும் என்ற அவாவும், தேவன் ஜெயிப்பதற்கு உதவுவார் என்ற விசு வாசமும் அவனை மறுபடியும் வெற்றியின் சிகரத்திற்குக் கொண்டு சென்றது.

சமாதானமாக வாழ்வதில் நீங்கள் தோல்வி கண்டிருக்கலாம். சந்தோஷமாக இருப்பதில் தோல்வி கண்டிருக்கலாம். நற்குணங்களில் தோல்வி கண்டிருக்கலாம். பாவத்தைச் ஜெயிப்பதில் பலமுறை தோல்வி கண்டிருக்கலாம். உறவுகளைத் தக்க வைப்பதில் தோல்வி கண்டிருக்கலாம். முன்னோக்கிச் செல்வதில் தோல்வி கண்டிருக் கலாம். ஆனால், இவை எதுவும் உங்களைத் தோல்வியாளர் என்றோ, ஜெயிக்க இயலாதவர் என்றே இறுதி முத்திரையிட்டுவிட முடியாது.

நீங்கள் தோற்ற இடங்களில், கிறிஸ்துவின் ஐக்கியத்தினால் மறுபடியும் உங்களை ஈடுபடுத்தி ஒரு வெற்றியைக் காண இயலும். ஏனென்றால், சந்தோஷம், சமாதானம், நம்பிக்கை ஆகியவற்றில் உங்களுக்கு வெற்றி வாக்களிக்கப் பட்டிருக்கின்றது. அதனை எட்டும் வரை ஏற்கெனவே எத்தனைமுறையோ தோற்று விட்டோமே என்று அல்ல. மீண்டும் ஒருமுறை வெற்றியை நோக்கிச் செல்ல வேண்டும் என்று கூறிச் செயல்படவேண்டும். நெகேமியா எருசலேம் அலங்கத்தைக் கட்டத்துவங்கிய முதல் பகுதியிலே தோல்விதான் வந்தது. ஆனால் சாதித்துக் காட்டவேண்டும் என்ற உணர்வு இறுதியில் வெற்றியைக் கொண்டு வந்தது.

சிந்தனைக்கு...

உண்மையுள்ளவன் உயர்ந்தால் பலர் எழுவார்கள்.
உண்மையற்றவர்கள் உயர்ந்தால் பலர் விழுவார்கள்.

செப்டம்பர் 9

அறிவும் அனுபவமும்

1 கொரிந்தியர் 2:1-16

ஜென்ம சுபாவமான மனுஷனோ...
1 கொரிந்தியர் 2:14

திருச்சபை போதகர் ஒருவர் மனமாற்றம், சுபாவநிலைகள் மாறுதல் போன்றவற்றை அதிக முக்கியமாக எண்ணி திரும்பவும் திரும்பவுமாக போதிக்கும் பழக்க முடையவர். மனந்திரும்புதல் தொடர்பான போதனைகளை மீண்டும் மீண்டும் கேட்பதால் சலிப்படைந்த சில சபை உறுப்பினர்கள் போதகரின் செயல்பாட்டை ஆட்சேபிக்க ஆரம்பித்தனர். நீங்கள் திரும்பத் திரும்ப மனந்திரும்புதலையே வற்புறுத்திப் போதிக்கின்றீர்கள். எனவே, நாங்கள் ஆவிக்குரிய பிற விஷயங்களை அதிகமாக அறிய முடியவில்லை என்றனர். அதற்கு அந்த போதகர் உண்மையான மனமாற்றம் பெற்றவர்களுக்கு நான் போதிக்காமல்கூட பல விஷயங்களை அவர்களால் அறிந்து கொள்ள இயலும். ஆனால், மனந்திரும்பாதவர்களுக்கு நான் எவ்வளவுதான் போதித்தாலும், அதனால் அவர்களுக்கு எந்தப் பிரயோஜனமும் ஏற்படாது என்றார்.

சற்றும் நடக்க இயலாமல் கால் ஊனமாகிப் போன ஒருவருக்கு ஒலிம்பிக் ஓட்டப் பந்தயத்தில் வெற்றிகரமாக ஓடிப் பரிசு பெறுவது எப்படி என்று மிகச் சிறப்பாகப் போதிக்க முடியும். அவரும் அதனை மிக நன்றாகக் கவனித்து ரசிக்க முடியும். ஆனால், அந்தப் போதனை அவரை ஓட வைத்து விடாது. அது போலவே, உண்மையான மனந்திரும்புதலின் வாயிலாக மறுபடியும் பிறந்த ஆவிக்குரிய அனுபவம் பெறாதவருக்கு மிக நன்றாகப் போதிக்கலாம். ஆவிக்குரிய விஷயங்களை ஆழமாகக் கற்றுக் கொடுக்கலாம். அவற்றை அவர் மிக நல்ல போதனைகள் என்று தலையாட்டிக் கொண்டு நன்றாகக் கேட்க முடியும். ஆனாலும், அவரால் நல்ல ஆவிக்குரிய பண்புகளோடும், நடத்தைகளோடும், மிகச் சிறந்த செயல்களோடும் வாழ்ந்து காட்ட இயலாது.

மனந்திரும்புதல், மறுபடியும் பிறத்தல் ஆகியவற்றின் வாயிலாக புதியதோர் சிருஷ்டி அடைந்தவர்கள் யாருடைய போதனையுமின்றி, தேவ ஆவியின் வாயிலாக பல விஷயங்களைக் கற்றுக்கொள்ள இயலும். ஏனென்றால், பரிசுத்த ஆவியின் அபிஷேகம் பல மேன்மையான உண்மைகளை அறிந்துகொள்ளும் ஆவிக்குரிய அறிவுத்திறனைத் தரும். சிலர் இறையியல் மேதைகளாயிருப்பார்கள். ஆயினும் அன்பு, உண்மை, பொறுமை, தாழ்மை போன்ற பண்புகளை அவர்களிடம் பார்ப்பது மிகவும் கடினமாயிருக்கும். ஆனால், வேதாகமத்தைத் தவிர பிற நூல்களை அதிகமாக படிக்க இயலாத சிலர், நல்ல சுபாவ நிலைகளோடு வாழ்வார்கள். அது கல்வித்திறனால் அல்ல. தேவ ஆவி தந்த அனுபவத்தினால் வந்தது.

சிந்தனைக்கு...

கற்றுக்கொள்வதற்காக மட்டும் அல்ல,
கடைப்பிடிப்பதற்காக கற்பவனே சரியான மாணவன்.

செப்டம்பர் 10

இது வல்லமையா?

1 யோவான் 4:1-12

நீங்கள் எல்லா ஆவிகளையும் நம்பாமல்...
1 யோவான் 4:1

குடிப்பழக்கம் உடைய ஒருவன் சரீர பலவீனமுடையவனாயிருக்கின்றான். அவனால் எதையும் செய்ய இயலவில்லை. அவன் கொஞ்சம் மதுபானம் அருந்துகின்றான். உடனேயே அவன் தன்னிடம் ஒரு புதிய ஆற்றல் வந்ததைப் போல உணருகின்றான். சற்றுமுன்பு எதையும் செய்ய இயலாதவன் போல் சோர்ந்து போயிருந்த அவன், இப்போது தன்னால் எதையும் செய்ய முடியும் என்று நினைக்கின்றான். ஆனால், இவன் தான் பலம் பெற்றுவிட்டதைப் போல உணருகின்றானேயன்றி, அவன் பலமடைந்துவிடவில்லை. அவன் இந்த உணர்வைச் சார்ந்து செயல்பட்டால், நிச்சயம் தோல்வியடைவான்.

இன்றைய கிறிஸ்தவர்கள் பலர், பரிசுத்தாவியின் வல்லமை பெறுகின்ற அனுபவமும் இப்படியாகவே உள்ளது. அவர்கள் அபிஷேகக் கூட்டங்கள் வாயிலாகவும், பிரபல அபிஷேக வல்லமை ஊழியர்கள் வாயிலாகவும், வல்லமையான அபிஷேகம் பெற்றுவிட்டதாக உணருகின்றார்கள். ஆனால், அந்த வல்லமை அவர்களுக்குள் உற்சாக உணர்வையும், பரவச உணர்வையும்,விசேஷ உந்துதலையும் கொடுத்த போதிலும், அவர்கள் உண்மையான வல்லமையைப் பெறவில்லை. அவர்கள் தங்களிடம் பெரிய வல்லமை செயல்படுகின்றதாக உணருகின்ற அதே வேளையில், பணஆசை, பொருளாசை, பாலியல் சோதனைகள், சுய உணர்வுகள், தவறான சுபாவங்கள் போன்றவை தொடர்பான பரிட்சைகளில் தோற்றுப் போகின்றார்கள். ஜெபிக்கின்றபோதும், ஆராதிக்கும்போதும், உணர்ந்த வல்லமை, சுபாவநிலை, ஆசைகளின் அழுத்தங்கள், உணர்ச்சி ரீதியான போராட்டங்கள் போன்றவற்றில் எந்த உதவியும் செய்யாமல் போகின்றது. ஏனென்றால், இது குடிகாரன் மதுபானத்தினால் உணர்ந்தது போன்றதோர் போலி வல்லமையாக இருக்கின்றதேயன்றி, உண்மையான தேவ ஆவியின் வல்லமை அல்ல.

பரிசுத்த ஆவி வழங்கப்படுவதின் முதன்மையான நோக்கம், தீர்க்கதரிசனம் உரைத்தலோ, பிசாசுகளைத் துரத்துதலோ, தரிசனம் காண்பதோ, பரவசம் அடைதலோ, அதிக வல்லமையினால் அசைக்கப்படுவது போன்று உணருவதோ அல்ல. பரிசுத்த ஆவியினால் வருகின்ற வல்லமையின் பிரதான நோக்கம், நல்ல மனநிலையை ஏற்படுத்துதல், சிறந்த சுபாவங்களுடன் வாழுதல், பாவத்தையும், உலகத்தையும், தவறான ஆசைகளையும் வெல்லுதல் போன்றவையாகும். உள்நிலையில் பரிசுத்தமாயிருக்கவும், வெளியில் பரிசுத்தத்திற்குச் சாட்சியாக வாழ்வதற்கும் உதவுதலே உண்மையான பரிசுத்தாவியின் அபிஷேகம்.

சிந்தனைக்கு...

மனிதனின் போலித்தனத்தை நீ வெறுக்கவில்லையேல்.
இறைவனின் உண்மையை நீ விரும்பவில்லை என்பதே பொருள்.

செப்டம்பர் 11
குடும்ப ஜெபம்

யோவான் 4:19-26

உண்மையாய்த் தொழுது கொள்ளுகிறவர்கள்...
யோவான் 4:23

அந்த குடும்பத்தார் தினமும் குடும்ப ஜெபம் தவறாமல் நடத்துவார்கள். குடும்ப ஜெபத்தில் சில பாடல்களைப் பாடுவார்கள். வேதப் பகுதி ஒன்றை வாசிப்பார்கள். தினசரி தியான நூல் ஒன்றின் அன்றைய சிந்தனையை வாசிப்பார்கள். குடும்பத் தேவைகளுக்காக ஜெபித்து முடிப்பார்கள். ஞாயிற்றுக்கிழமைகளில் தவறாமல் ஆராதனைகளில் கலந்து கொள்வார்கள்.

ஆனால், அவர்கள் படித்த வேத பகுதியோ, வாசித்த தியான நூல் சிந்தனையோ, ஆலயத்தில் கேட்ட பிரசங்கமோ அவர்களின் வாழ்க்கைச் செயல்பாடுகளிலோ, குணாதிசய நிலைகளிலோ எந்தத் தாக்கத்தையும், பாதிப்பையும் ஏற்படுத்துவதில்லை. அவர்கள் எப்படியிருந்தார்களோ, அப்படியே இன்றும் இருக்கின்றார்கள். அவர்கள் எப்படி வாழ விரும்புகிறார்களோ அப்படியே வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். அவர்களுடைய வாழ்க்கைத் தரம் பிற மத மக்களின் வாழ்க்கைத் தரத்தைவிட எந்த விதத்திலும் மேம்பட்டதாக இல்லை.

இப்படியிருக்க குடும்ப ஜெபமும், ஆலய ஆராதனைப் பங்கேற்பும் இவர்களுக்கு என்ன பிரயோஜனத்தை ஏற்படுத்தியிருக்கிறது? பிற மதத்தவர்கள் சிலருடைய இல்லங்களிலே பூஜை அறை தனியாக இருக்கும். எப்படி வேண்டுமானாலும் வாழ்ந்து கொண்டு பூஜைகளை மட்டும் சரியாகச் செய்வார்கள். பல கிறிஸ்தவர்களுடைய குடும்ப ஜெபம் பிரயோஜனமற்ற குடும்ப பூஜையாகவே உள்ளது. ஏதோ தங்களுக்கு நல்லது நடக்க வேண்டும் அல்லது தீயது நடக்கக்கூடாது என்பதற்காகவே அவர்கள் குடும்ப ஜெபம் நடத்துகிறார்கள். ஜெபமும், வேத வாசிப்பும், பாடலும், தியான நூல் வாசிப்பும் எல்லாம் பூஜை முறைகளாகவே உள்ளன. இதனால் எந்தப் பயனும் இல்லை.

வேதப் பகுதியில் எதை வாசித்தோம்? அவை நமக்கு என்ன சொல்லுகின்றன? அங்கே நாம் என்ன செய்யவேண்டும்? என்றெல்லாம் எதையும் சிந்திக்காமல் டேப்ரிக்கார்டர் போல வாயினால் பாடுவதாலும், வாசிப்பதாலும், ஜெபிப்பதாலும் என்ன பயன்? வேத வார்த்தைகளை வாசித்து, சிந்தித்து, ஆராய்ந்து வாழ்க்கையில் அவற்றின்படி நடக்கவும் செயல்படவும் ஆர்வமின்றி, ஏதோ பக்தி சம்பந்தமான வழிபாட்டு முறைகள் போல, நாம் எதைச் செய்தாலும், அவை உயிரற்ற விக்கிரக ஆராதனைகளாகவே இருக்கும். பிற மத வழிபாடுகளுக்கும், இவைகளுக்கும் பெரிய வித்தியாசங்கள் இல்லை. இல்லங்களாயினும் தொழில் ஸ்தலங்களாயினும், நாம் கர்த்தருடைய வழிகளில் நடவாமல் செய்யும் ஜெபங்கள் யாவும் பயன் ஏற்படுத்தப் போகாத வெறும் பூஜை முறைகளே.

சிந்தனைக்கு...

ஜெபம் என்பது கூர்மையான அம்பு. ஆனால், அதை இதய சுத்தம் என்ற வில்லில் வைத்துதான் எய்ய வேண்டும்.

செப்டம்பர் 12

தவறுகளை மறைக்காமல்

1 யோவான் 1:1-10

நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால்...
1 யோவான் 1:9

சிலர் தவறுசெய்துவிட்டு அதனை மறைப்பதிலே கெட்டிக்காரர்கள். சிலர் தாங்கள் செய்த தவறை தவறு அல்ல என நியாயப்படுத்துவதில் கில்லாடிகள். சிலர் தவறைச் செய்துவிட்டு இதெல்லாம் ரொம்ப சாதாரண விஷயம், எல்லோரும்தான் தவறு செய்கிறார்கள் என்று சாதாரணமாகப் போய் விடுவார்கள்.

ஆனால், தவறை மறைப்பதோ, நியாயப்படுத்துவதோ, அதனை ரொம்ப சாதாரணமாக எடுத்துக்கொள்வதோ இன்று எளிதாக இருக்கலாம். ஆனால், தவறு என்பது ஒரு நோய். அதனை மறைப்பதோ, சரி என சாதிப்பதோ, அதனை அசட்டை செய்வதோ நல்ல பின்விளைவுகளைத் தராது. தவறுகளை உணருவதுதான் விவேகமானது. ஆகாப் ராஜா தவறுகளை மறைப்பதை சாதனையாக எண்ணி னான். அதுவே அவனுக்குப் பெருஞ் சோதனையாக மாறியது. அவனுடைய முடிவு பரிதாபமாக இருந்தது.

தேவ பக்தனாகிய தாவீதும் தவறு செய்தவன்தான். ஆனால், அந்த தவறு சுட்டிக்காட்டப்பட்டபோது, அவன் அதை மறுக்கவோ, நியாயப்படுத்தவோ, அசட்டை செய்யவோ விரும்பாமல் மனப்பூர்வமாய் உணர்ந்து, தேவனுடைய இரக்கத்தைத் தேடினான். தேவன் அவனை மன்னித்தார். தவறை மறைக்கப் பழகினவனும், அதனை நியாயப்படுத்திச் சாதிக்கிறவனும் அதனைப் பெரிய விஷயமாக நினையாமல் போகிறவனும் தவறுகளில் தொடரவும், தவறுகளில் நிலைத்திருக்கவும் அதிகமதிகமாக ஊக்குவிக்கப்படுகிறான்.

அந்த அனுபவமே ஒரு நாள் மறைக்கவும், நியாயப்படுத்தவும், அசட்டை செய்யவும் முடியாத பெரிய தவறுகளில் அவனை விழவைக்கிறது. பின்னர் சரி செய்ய நினைத்தாலும் முடியாத அளவிற்கு காலதாமதமாகிறது. நோயைக் குறிப்பிட்ட காலம் வரை வெளியே தெரியாமல் மறைக்கவும், அதனைக் கண்டு கொள்ளாமல் இருக்கவும் முடியும். ஆயினும், அது ஒரு நாள் வெளிப்படத்தான் செய்யும். பின்னர் குணமாக்க விரும்பினாலும் முடியால் போகும்.

தேவன் தவறு செய்தவர்களைத் தண்டிப்பார் என்று சொல்வதைவிட, தவறை உணர மறுத்தவர்களை தண்டிப்பார் என்பதே மிகச் சரியான கூற்றாகும். தவறுவது மனித இயல்பு. ஆனால், அதனை மன்னிக்கவும், அதனைச் சரிசெய்யவும் ஆயத்த மாயிருக்கின்ற தேவனுடைய கிருபையை அசட்டை செய்து, தவறுகளில் தொடரு வது தான் பெரிய பாவம். தேவன் தவறைத் தவறு என உணரத்தக்க உணர் வினை இயற்கையாகத் தந்திருக்கின்றார். அந்த உணர்வின் உந்துதலை அடக்கி வைத்து தவறுகளில் தொடர விரும்பாதிருப்போமாக.

சிந்தனைக்கு...

பொய்யைப் பேசுவதற்கு நல்ல திறமை வேண்டும்,
உண்மையைப் பேசுவதற்குத் துணிவும், நேர்மையும் வேண்டும்.

செப்டம்பர் 13

சரியா? தவறா?

மாற்கு 14:1-9

இப்படி வீணாய்ச் செலவழிப்பானேன்?
மாற்கு 14:4

அவர் எப்போதுமே அமைதியாய் மௌனமாயிருக்க விரும்புகின்றவர். அவருடைய மனைவியோ, எப்பொழுதும் எதையாவது பேசிக்கொண்டிருக்க விரும்புகின்றவர். அவர் அமைதியானதோர் சூழ்நிலையில் சந்தோஷத்தை உணருகின்றவர். அவருடைய மனைவியோ ஏதாவது பாடல், இசை என்று கேட்டுக்கொண்டிருப்பதில் சந்தோஷத்தை உணருகின்றவர். வீட்டில் கொஞ்சம் சத்தம் வந்தால் போதும் உடனேயே அவர் என்னை நிம்மதியாயிருக்க விடமாட்டீர்களா? என்று கத்துவார். அதற்கு அவருடைய மனைவி, உங்களுக்கு அமைதியில் நிம்மதி கிடைக்கிறது. ஆனால், எனக்கோ அமைதி நிம்மதியை கெடுக்கிறது என்பாள்.

ஒரு குறிப்பிட்ட சூழல் எல்லோருக்கும் சந்தோஷமாயிராது. நாம் மகிழ்ச்சியைக் காணத் தெரிந்துகொண்ட சூழ்நிலை, மற்றவருக்கு மனச் சோர்வைக் கொடுக்கக் கூடும். எனவே, எப்பொழுதுமே நம்முடைய பக்கத்திலிருந்தே விஷயங்களைப் பார்த்து முடிவு செய்யக்கூடாது. நம்முடைய மனம் எதனைச் சரியாக உணர்கின்றதோ, அப்படியே மற்றவர்களின் மனமும் உணர்கின்றது என்று கூற இயலாது. 300 பணத்தைச் செலவிட்டு இயேசுவின் பாதத்தில் பரிமளத்தைலம் ஊற்றின செயல், இயேசுவுக்கோ சரியாகத் தோன்றியது. ஆனால், மற்றவர்களுக்கோ தவறாகத் தோன்றியது. அந்தப் பெண்மணி அவ்வளவு பெரிய செயலை அவசியமானதாகக் கண்டாள். ஆனால், அங்கு கூடியிருந்தவர்களோ அதனை வீண் விரயமாகக் கண்டனர். அந்தச் செயல் இயேசுவைச் சந்தோஷப்படுத்தியது. மற்றவர்களையோ விசனப்படுத்தியது.

ஆம், எல்லாவற்றையும் நம்முடைய சுய மனநிலை என்ற கண்ணாடியின் வழியாகவே பார்ப்பதால், மற்றவர்களின் பக்கம் இருக்கும் சரியானவைகளையும், நியாயமானவைகளையும் நம்மால் புரிந்துகொள்ள இயலாமல் போகிறது. தன்னுடைய வாழ்க்கையில் மதிப்பிற்குரிய மாற்றங்களை இயேசுவினால் பெற்றிருந்த அந்தப் பெண்மணி, மிகப் பெரிய ஒரு விலையைக் கொடுத்து அந்த மதிப்புணர்வை வெளிப்படுத்துவது நியாயமாகத் தெரிந்தது. தம்முடைய மிக மிக வியாகுலமானதோர் சூழ்நிலையில், தம்மைக் குறித்த ஒரு நல்லெண்ணத்தை அதிகச் செலவில் வெளிப்படுத்திய செயல், இயேசுவுக்கு அந்த வேளையில் ஆறுதலின் செயலாக இருந்தது.

ஆம். நம்முடைய பார்வையில் சரியாக இருப்பதெல்லாம், பிறர் பார்வையிலும் சரியாகத் தோன்றவேண்டும் என்ற எண்ணம் சரியல்ல. அந்தந்த சூழ்நிலையில் எது சரி? எது தவறு? என்பதை நிதானிக்க இயன்றவர் இயேசு ஒருவரே. அதனை நாமும் அறிந்து கொண்டு வாழ்தலே ஆவிக்குரிய விவேகம்.

சிந்தனைக்கு...

பிறருடைய செயல்கள் உனக்கு எதிராக இருந்தால் கவலையுற்றிராதே.
உன்னுடைய செயல்கள் தேவனுக்கு எதிராக இருந்தால் கவலையற்றிராதே.

செப்டம்பர் 14
முயற்சியும் வேண்டும்

யாக்கோபு 2:14-26

விசுவாசம் அவனுடைய கிரியைகளோடேகூட முயற்சி செய்து ...
யாக்கோபு 2:22

ஆவிக்குரிய வாழ்க்கை என்பது தேவன் விரும்புகின்ற பிரகாரமான ஒரு வாழ்க்கையை நாம் வாழ்வதாகும். அதனை நம்முடைய முயற்சிகளால் மட்டும் வெற்றியாக வாழ்ந்து விடமுடியாது. அதே நேரத்தில் நம்முடைய முயற்சிகள் இல்லாமலும் அதனை நாம் வாழ முடியாது. தேவன் நம்முடைய உயர்ந்த செயல்களில் நம்மைப் பலப்படுத்தவும் நம்முடைய முயற்சிகளுக்கு மிகுந்த பலன்களைத் தரவும் தயாராயிருக்கின்றார். ஆனால், முயற்சிகளுக்குள் நம்மை ஈடுபடுத்தாவிடில் எதுவும் நிகழாது. எதுவுமே நம்முடைய முயற்சிகளின்றி தானாக நிகழ்ந்துவிடும் என்று எண்ணக்கூடாது.

முயற்சி என்றவுடன் அது நம்மைச் சார்ந்த முயற்சி அல்ல. அது தேவனைச் சார்ந்த முயற்சி. இதனை விசுவாச முயற்சி என்றும் கூறலாம். தேவன் விரும்புகின்ற ஒன்றை தேவனைச் சார்ந்த விசுவாசத்தோடு செய்ய முதல் அடியை எடுத்து வைப்பதுதான் அந்த முயற்சி. கோலியாத்தைக் கண்டு எல்லோரும் மிரண்டு நின்ற வேளையில், தாவீது அவ்விதமாகத்தான் விசுவாசத்தோடு முதல் அடியை எடுத்து வைக்க முன்வந்தான். அவனை வீழ்த்தும் பலம் தாவீதுக்குக் கிடையாது. ஆயினும், அவன் விசுவாசத்துடன் அவனை வீழ்த்த முயன்று முன்னுக்கு வந்தான். அங்கே தேவன் அவனைப் பலப்படுத்தி மாபெரும் வெற்றியைக் காணச் செய்தார்.

இடிந்து கிடந்த எருசலேமின் மதிற் சுவர்களைத் திருப்பிக் கட்டச் சாத்தியமான சூழ்நிலை இருக்கவில்லை. ஆனால், அதனைக் கட்டிஎழுப்ப தேவன் உதவி செய்வார் என்று நெகேமியா விசுவாசித்தான். அந்த விசுவாசத்தின் அடிப்படையில் அவன் சிரமம் ஏற்று முயற்சி செய்தான். அப்போது அந்த முயற்சிக்குத் தேவன் வெற்றி அளித்தார். கர்த்தருக்கு விரோதமான சில ஆகாத குணங்கள் மற்றும் ஜென்ம சுபாவங்களை நாம் நம்மை விட்டு அகற்ற வேண்டும். அது தானாக நடந்துவிடாது. நம்முடைய முயற்சி அங்கே வேண்டும். அப்போது அதில் வெற்றியடையத் தேவன் நம்மைப் பலப்படுத்துவார்.

சில நல்ல இயல்புகளும், செயல்களும் தானாக வந்துவிடாது. அவைகளைப் பழக்கமாக்கிக்கொள்ள நாம் கர்த்தரைச் சார்ந்து விசுவாசத்துடன் முயற்சிக்க வேண்டும். அப்போது அது நம்மால் கூடாத காரியமாக இராது. நாம் மேன்மையானவைகளை விரும்பி, அவைகளில் வெற்றிபெற வேண்டும் என்ற உண்மையான விருப்பத்துடன் செயல்படும்போது, அங்கே தேவன் நம்மோடிருந்து காரியங்களை வாய்க்கச் செய்கிறார்.

சிந்தனைக்கு...

பல தோல்விகள் முடியாமையால் அல்ல,
முயற்சிக்கும் மனம் இல்லாமையாலே வருகிறது.

செப்டம்பர் 15
கட்டுப்பாடுகள்

1 சாமுவேல் 16:14-23

கர்த்தருடைய ஆவி சவுலை விட்டு நீங்கினார்.
1 சாமுவேல் 16:14

சில ஆண்டுகளுக்கு முன்பு முக்கியமான ஒரு அரசியல் பிரமுகருக்கு தீவிர வாதிகளின் மிரட்டல்களைத் தொடர்ந்து வலுவான பாதுகாப்பு கொடுக்கப்பட்டது. பாதுகாப்பு விதிகளின்படி பாதுகாப்பைப் பெறுகின்ற நபர், சம்பந்தப்பட்ட அதி காரிகளின் முழுக் கட்டுப்பாட்டிற்குள்ளேயே இருக்க வேண்டும். ஆனால், அந்த அரசியல் பிரமுகர் பாதுகாப்புக் காரணங்களுக்காக தான் அதிகமாகக் கட்டுப்படுத்தப் படுவதை விரும்பவில்லை. பாதுகாப்பு அதிகாரிகள் பலமுறை எச்சரித்தும், அவர் தன் போக்கில் செயல்பட்டதால் ஒரு நாள் தீவிரவாதிகள் அவரை தகுந்த நேரம் பார்த்து சுட்டுக் கொன்றார்கள்.

இந்த உலகத்தில் பாவ சக்திகளாலும், தீய சக்திகளாலும் நமக்கு ஆபத்து உண்டு. அசுத்த ஆவிகளாலும், சாத்தானின் தந்திரங்களாலும் நமக்கு ஆபத்து உண்டு. இந்த ஆபத்துகள் நமக்கு நேரிடாதபடி பாதுகாப்பவரே பரிசுத்த ஆவி யானவர். அவர் மூலம் நம்முடைய சந்தோஷம், சமாதானம், நம்பிக்கை, பரிசுத்தம் ஆகியவை பாதுகாக்கப்படுகிறது. அங்கே அசுத்த ஆவிகள் நம்மை அணுக முடியாது.

அதே வேளையில் நமக்குப் பாதுகாப்பு அளிக்கும் பரிசுத்த ஆவியானவர் நம்முடைய நன்மை கருதி விதிக்கின்ற கட்டுப்பாடுகளை நாம் ஏற்க வேண்டும். ஆவியைப் பெற்றும் மனம் போல வாழ முற்பட்டால் பாதுகாக்கும் ஆவியானவர் போய்விடுவார். அதன் விளைவாக நம்மை அசுத்த ஆவிகளும், பாவ சக்திகளும் சூழ்ந்து கொள்ளும். அதன் பிரதிபலிப்பாகவே சமாதானமின்மை, சந்தோஷமின்மை, பரிசுத்தத்தில் நிலைவரமின்மை போன்ற பிரச்சனைகள் ஏற்படுகின்றன.

பிசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கம் போல யாரை விழுங்கலாமென்று சுற்றித் திரிகிறான். மேய்ப்பனின் ஆளுகைக்கு வெளியே வரும் ஆடுகளை கவ்விக் கொள்ள வழிதேடிக் கொண்டிருக்கின்ற ஓநாய் போல, தேவ ஆளுகைக்குள் இருக் கின்றவர்களை கவர்ந்திழுத்துக்கொள்ள எங்கே ஒரு வாய்ப்புக் கிடைக்காதா என்று சாத்தான் கவனித்துக்கொண்டேயிருக்கிறான்.

இஸ்ரவேல் மக்களுக்கு தேவன் அரணாகவும், பாதுகாவலாகவும் விளங்கினார். ஆனால், அந்தப் பாதுகாப்பிற்குள் அவர்கள் காணப்பட, தேவனுடைய வார்த்தை களைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று கூறியிருந்தார். ஆனால், அவர்களோ தேவனுடைய வார்த்தைகளைக் கடைப்பிடிக்க கவனம் செலுத்தவில்லை. எனவே, தேவனால் தரப்பட்டிருந்த பாதுகாப்பு அகன்று போனது.

சிந்தனைக்கு...

இறைவனுக்குத் தன்னை அடிமையாக்கிக் கொண்டவனைப் போல் உலகத்தில் சுதந்திரமாக வாழ்கிறவன் யாருமில்லை.

செப்டம்பர் 16

தரிசனம் தேவை

தீத்து 2:1-15

உன்னை நற்கிரியைகளுக்கு மாதிரியாகக் காண்பித்து...
தீத்து 2:7

ஆபிரகாமும் நீதிமான்தான். லோத்துவும் நீதிமான்தான். ஆபிரகாமும் லோத்துவும் நன்றாக இறை வழியில் பயணம் செய்தவர்கள்தான். ஆனால், ஆபிரகாம் தேவனால் பயன்படுத்தும் தகுதிமிக்க ஒரு சந்ததியைப் பின் வைத்துப் போனான். லோத்துவோ பத்து தலைமுறைக்கு தேவனுடைய சபைக்கு உட்பட இயலாத சாபம் மிக்க ஓர் சந்ததியைப் பின் வைத்துப் போனான். காரணம் என்ன? ஆபிரகாம் நீதிமான் மட்டுமல்ல. நீதிமானுக்குரிய தரிசனம் உடையவன். லோத்து தனக்குள் நீதியை உடையவனாயிருந்தும் நீதிமானுக்குரிய தரிசனமுடைவன் அல்ல.

ஆபிரகாம் தேவ தரிசனத்தை முன்னிறுத்தி வாழ்ந்ததால், அவன் தேவன் விதித்த எல்லைகளுக்கு வெளியே தன்னுடைய ஆசைகளைப் படர விடவில்லை. ஆபிரகாம் தேவ தரிசனமுடையவனாயிருந்ததால், அவன் எதைத் தேர்ந்து கொண்டாலும் தேவசிந்தைக்கிசைந்தே தேர்ந்து கொண்டான். ஆபிரகாம் தேவ தரிசனமுடையவனாயிருந்ததால் தேவன் எதைச் சொன்னாலும்அதனை நம்பி அப்படியே கீழ்ப்படியும் அளவிற்கு தேவனை அறியும் அறிவை உடையவனா யிருந்தான். எனவே, நல்லதோர் மாதிரியாக அவன் வாழ்ந்து, தேவனால் ஆசீர்வதிக்கப்படும் ஒரு சந்ததி உருவாகக் காரணமாயிருந்தான்.

லோத்துவோ, நீதிமானாயிருந்தும் பொருளாசையே அவனுடைய தரிசனமா யிருந்தது. அவன் நீதிமானாயிருந்தும் தேவ சிந்தைக்கேற்றதோர் இடத்தில் அவன் வாழவில்லை. அவன் நீதிமானாயிருந்தும் தேவ ஆலோசனையை ஏற்றுக்கொள்ளும் அளவிற்கு அவன் தேவனை அறிந்திருக்கவில்லை. எனவே, அவன் ஒரு தவறான சாபத்திற்குரிய சந்ததி உருவாகவே காரணமாயிருந்தான்.

ஒரு சபைத் தலைவன் பக்தியாய் வாழலாம். ஆயினும், சபை மக்களுக்கு முன்னால் ஒரு சரியான முன்மாதிரியாக வாழும் தரிசனம் இல்லாவிட்டால், அந்த சபை மக்கள் தேவனால் ஆசீர்வதிக்கப்படுவதற்கு தகுதியான உண்மையான ஆவிக்குரிய சந்ததியாகமாட்டார்கள். பெற்றோரின் தரிசனமற்ற வாழ்க்கை பிள்ளை களின்மேல் சாபங்களைக் கொண்டு வருகிறது. ஒரு போதகர் அல்லது பாஸ்டரின் தரிசனமற்ற செயல்பாடு ஒரு மாய்மாலமான கிறிஸ்தவ சந்ததி உருவாகக் காரண மாகிறது. இன்று நம்மிடம் பிள்ளைகள் நல்லவைகளைப் பாராவிட்டால், நாளை பிள்ளைகளிடம் பிறர் நல்லவைகளைப் பார்க்க முடியாது. இன்று விசுவாசிகள் ஒரு போதகரிடம் நல்லவைகளைப் பார்க்க முடியாமல் போனால், நாளை இந்த விசுவாசிகளிடம் பிறர் நல்லதைப் பார்க்க முடியாது.

சிந்தனைக்கு...

வேடங்கள் நிஜங்களைவிட அதிகக் கவர்ச்சியானவை. ஆனாலும், விரைவில் அது கலையப் போவது உண்மை.

செப்டம்பர் 17

தவறான எண்ணத்தை அகற்றிட

1 பேதுரு 2:11–25

உங்களை அக்கிரமக்காரர் என்று பேசும் விஷயத்தில்
1 பேதுரு 2:12

குறிப்பிட்ட குடும்பத்தில் எப்பொழுதும் கணவன் மனைவி சண்டை. மனைவி கணவனை எதற்கெடுத்தாலும் சந்தேகப்படுவது தான் சண்டையின் முக்கியக் காரணம். அந்தக் கணவன் தன் மனைவிதான் குடும்ப அமைதியின்மைக்குக் காரணம் என்று நம்பியதோடு, பலரிடமும் அதைச் சொல்லி நியாயம் கேட்பான். ஒரு நாள் அவரிடம் அவருடைய நண்பர் மனைவி சந்தேகப்படுகிறாள் என்று குற்றம் கூறும் நீங்கள் அந்தச் சந்தேகத்தை அகற்ற எதையாவது செய்ததுண்டா என்று கேட்டார். அதற்கு அந்த கணவன், தவறு எதுவும் இல்லாத நான் எதற்காக ம னைவியின் சந்தேகத்தை அகற்ற முயற்சிக்கவேண்டும்? என்றார்.

சில நேரங்களில் மற்றவர்கள் நம்மைத் தவறாகப் புரிந்து கொள்கின்றார்கள். காரணமின்றிச் சந்தேகம் கொள்கின்றார்கள். அதுபோன்ற வேளைகளில் நாம் எப்படி என்னைச் சந்தேகிக்கலாம்? எப்படி என்மேல் தவறான எண்ணம் கொள்ளலாம்? என்று போராடுகின்றோம். ஆனால் அந்தத் தப்பெண்ணமோ, சந்தேகமோ, ஆதாரமற்றது, விளக்கி அவைகளை அகற்றுவதற்கு முன் வருவதில் லை. எனவே, தப்பெண்ணம் கொள்கின்றவர்கள் மேலும் மேலும் அந்த விஷயத்தில் வளர்கின்றார்கள். கோபமும், எரிச்சலும், தாழ்மைக் குறைவும் அமைதியாக நம்முடைய குற்றமற்ற நிலையினை விளக்கிச் சரிசெய்ய விடாமல் தடுத்து விடுகிறது.

நம்முடைய மாசற்ற சில செயல்கள் இன்னொருவரின் பார்வையில் சந்தேகத் திற்குரியவைகளாகத் தோன்ற முடியும். நம்முடைய தவறு நினைக்காத சில வார்த்தைகளும், செயல்களும் மற்றவர்களுக்குள் தவறான ஒரு எண்ணத்தை உருவாக்கக் கூடும். இது சிலருடைய ஒரு மனவியல் ரீதியான பலவீனத்தி னாலும் ஏற்படக்கூடும். எனவே, அங்கே எப்படித் தப்பெண்ணம் ஏற்படலாம் என்று போராடுவதால் தீர்வு ஏற்படாது. அதற்குப் பதிலாக தேவ அன்பினாலும், தேவனுக்காகத் தாழ்ந்து போகின்ற ஒரு மன நிலையினாலும், பிறருடைய மனதில் உருவான தப்பான எண்ணங்களையும், நினைவுகளையும் கணக்கீடுகளையும் அகற்றப் பிரயாசப்பட வேண்டும். ஏனென்றால் தேவனை அறிந்த மக்கள் எதையுமே அன்பின் மூலமாகவும், தாழ்மைப்படுவதின் மூலமாகவுமே சரிசெய்ய முன்வர வேண்டும். கர்த்தருக்காக நம்மைத் தாழ்த்திக்கொள்ளும்போது, தேவன் உரிய வேளையில் நம்முடைய நீதியையும், உண்மையையும் குன்றின் மேலிட்ட விளக்காக விளங்கச் செய்ய மறக்கமாட்டார்.

சிந்தனைக்கு...

தரை மட்டும் உன்னைத் தாழ்த்திக்கொள்ள முடிந்தால், வானளாவ உன்னை உயர்த்த தேவனால் முடியும்.

செப்டம்பர் 18
பிறர் மேல் அன்பு

1 யோவான் 3:14-24

கிரியையினாலும் உண்மையினாலும் அன்புகூரக்கடவோம்...
1 யோவான் 3:18

ஒருவரை அவருடைய மனைவி மிக அதிகமாக நேசித்தாள். தன்னை உயிரைப் போல நேசித்து மிகவும் அன்பாகப் பழகும் ஒரு மனைவி தனக்கு கிடைத்ததை அவர் எண்ணிப் பூரிப்படைந்தார். ஆனால், மனைவியின் அன்பை அதிகமாக அனுபவித்த அந்தக் கணவர், தன்னை அதிகமாக நேசித்து வளர்த்த பெற்றோரையும் சகோதரர்களையும் நாளடைவில் வெறுக்க ஆரம்பித்தார். மனைவியின் அதிக அன்பு அவரைப் பிறரை நேசிக்கும் ஒருவராக மாற்றாமல், வெறுக்கின்ற ஒருவராக மாற்றிவிட்டது.

இதுதான் மனித அன்பில் உள்ள பலவீனம். உங்களை ஒருவர் அதிகமாக நேசித்தால், அந்த நேசத்தைக் கொண்டு உங்களால் பிறரை நேசித்துவிட முடியாது. நேசித்த நபருக்குத்தான் அன்பைக் கொடுப்பீர்கள். ஆனால், தேவ அன்பினை ஒரு மனிதன் அனுபவித்தால், அந்த அன்பினால் வந்த பூரிப்பு பிறரை நேசிக்க அவனைத் தூண்டும்.தேவஅன்பை தனக்குள் ருசிக்கின்றவன் தன்னை நேசிக்காத வர்களைக் கூட நேசிக்கும் ஆற்றலினைப் பெறுவான். இதுதான் மனித அன்பிற்கும் தேவ அன்பிற்கும் இடையில் உள்ள வேறுபாடு.

எனவே, எத்தனை மனிதர்கள் நம்மை நன்றாக நேசித்தாலும், தேவனுடைய நேசத்தை நமக்குள் நாம் பெற்றால்தான் பிறரை நேசித்து வாழ இயலும். நம்மை நேசிக்கும் ஆண்டவர் நாம் அவரை மட்டும் அல்ல, பிறரையும் நேசிக்க வேண்டும் என்றார். ஏனென்றால், நாம் பிறரை நேசித்து வாழும் போதுதான் உண்மையான மனித வாழ்வை வாழ்கின்றோம். அந்த உண்மையான மனித வாழ்வை வாழ உண்மையான தேவ அன்பு நமக்குள் வர வேண்டும். நாம் பிறரின் அன்பைத் தேடி அங்கலாய்க்கின்றவர்களாக அல்ல. பிறரை நேசித்து ஆதரிக்கின்ற மனநிலை உடையவர்களாக மாற வேண்டும். அதுவே தேவ விருப்பம்.

கணவனை நேசிக்கும் மனைவியும், பிள்ளைகளை நேசிக்கின்ற பெற்றோரும், நண்பர்களை நேசிக்கின்ற நண்பர்களும் அதுபோல பிறரை ஏன் நேசிக்கவில்லை? அவர்கள் தங்களை நேசிக்கின்றவர்களை மட்டுமே நேசிக்க இயன்ற சுயநல மனிதர்கள். ஆனால், கர்த்தர் நாம் தன்னலம் சாராமல் பிறரை நேசிக்க அழைக் கின்றார். அதற்கு விசேஷ அன்பின் ஆற்றல் வேண்டும். ஆண்டவராகிய இயேசுவோடு நம்முடைய வாழ்க்கையைப் பிணைத்துக் கொண்டு அவருடைய அன்பை அகத்தில் தேட வேண்டும். அவருடைய அன்பை உள்ளத்தில் அடையாளம் காணும்போது, அந்த அன்பினால் பிறரை நேசிக்கும் ஆற்றல் பெறுகின்றோம்.

சிந்தனைக்கு...

மனித அன்பின் மாயையைக் கண்டு கசக்கும்போதுதான், இறைவனுடைய அன்பின் இனிமை தெரியும்.

செப்டம்பர் 19

அதிகாரமில்லாத மரியாதை

ஏசாயா 1:10-17

உங்கள் பண்டிகைகளை என் ஆத்துமா வெறுக்கிறது.
ஏசாயா 1:14

ஒரு குடும்பத்தில் உள்ள பிள்ளைகள் அவர்களின் வயதான தந்தைக்கு மிகுந்த கனமும் மரியாதையும் தருகின்றார்கள். அவருக்காக நவீன வசதிகளுடன் ஏ.சி அறை, அவர் பயணம் செய்ய சொகுசான கார், அவர் விரும்புகின்ற விதமான உடைகள், வாய்க்கு ருசியான விதவிதமான உணவு வகைகள் என அவருக்கு சகல உபசாரங்களும் செய்யப்படுகிறது. வீட்டில் எந்த நல்ல காரியம் என்றாலும் அவரிடம் ஆசிபெற்று, அவரை கனப்படுத்தித்தான் நடைபெறுகிறது.

ஆனால், அந்த குடும்பத்து நிர்வாகத்தில் அவர் தலையிடுவதில்லை. அவர்கள் எதைச் செய்ய வேண்டும், செய்யக்கூடாது என்றெல்லாம் அதிகாரம் செய்வ தில்லை. தனக்கு அளிக்கப்படும் சகல மரியாதைகளையும் உபசாரங்களையும் பெற்றுக் கொண்டு அவர் யாருக்கும் பிரச்சனையில்லாமல் வாழ்கின்றார். ஆம், இவர் மரியாதைக்குரியவர். ஆனால், அதிகாரம் எதுவும் அவருக்கு உரியது அல்ல. பலருடைய வாழ்க்கையில் இயேசு கிறிஸ்துவுக்கு அளிக்கப்படும் முக்கியத்துவம் இத்தகையதே. அவர்களின் வாழ்க்கையில் அவர் வணங்கப்படுகிறார், புகழப் படுகிறார், போற்றப்படுகிறார், கைதட்டல் மரியாதை பெறுகிறார், காணிக்கைகளால் கனப்படுத்தப்படுகிறார், அவரைக் குறித்த வசனங்கள் எழுதிய வசனப் பலகைகளால் மேன்மையாகக் காண்பிக்கப்படுகிறார்.

ஆனால், அவருக்கு எந்த அதிகாரமும் கிடையாது. அவர்களின் உள் விவகாரங் களில், மனநிலைகளில், குணநிலைகளில், உணர்வுகளில், முடிவுகளில், தீர்மானங் களில், அணுகுமுறைகளில் அவருடைய எந்த தலையீடும் கிடையாது. அவர்கள் தங்கள் மனதின்படியே வாழ்கின்றார்கள். தங்களுக்குப் பிரியமான விதத்தில் செயல் படுகிறார்கள். ஆனால், காலையும் மாலையும், பிற வேளைகளிலும், பிரமாதமான கௌரவம், மரியாதை ஆகியவை அவருக்குப் பாடல்கள் வாயிலாகவும், ஜெபங்கள் வாயிலாகவும் வழங்கப்படுகிறது.

ஆனால், இது அவர்களை அவர்களே வசதியாக ஏமாற்றி, போலித்தனமான ஒரு திருப்தியை அற்ப நேரம் காண்கின்ற பிரயோஜனமற்ற பக்தி வாழ்க்கை. ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து ராஜாதி ராஜா, கர்த்தாதி கர்த்தர். அவர் வயதான தாத்தாவைப் போல அளிக்கப்படும் மரியாதைகளையும், பிற உபசாரங்களையும் பெற்றுக்கொண்டு, யார் விஷயத்திலும் தலையிடாதிருக்கிறவர் அல்ல. அவர் செயல்படும் கர்த்தர். அவர் நம்மிடம் செயல்பட வருகிறாரேயன்றி, வெறும் மரியாதை களுக்காக அல்ல.

சிந்தனைக்கு...

இறைவனின் விதிகளை மதித்து வாழத் தயங்கினால்,
சாத்தானின் சதி வலையில் மயங்கி விழ நேரிடும்.

செப்டம்பர் 20

நன்மைக்கேதுவாக

பிலிப்பியர் 1:1-21

சகோதரரே எனக்குச் சம்பவித்தவைகள்.
பிலிப்பியர் 1:12

தேவன் நம்முடைய வாழ்க்கையில் நன்மைகளையும் செய்கின்றார். நன்மைக் கேதுவானவைகளையும் செய்கின்றார். இந்த இரண்டிற்கும் இடையே உள்ள வேறுபாடு என்ன? நன்மையானவைகளை நம்மால் நன்மையானவை என்று பார்த்துப் புரிந்துகொள்ள முடியும். ஆனால், நன்மைக்கேதுவானவைகள் என்பது இறுதியில்தான் நன்மையான முடிவுகளைக் கொண்டு வரும். துவக்கத்தில் அவைகள் நன்மையானவைகள் என்ற வடிவத்தைக் கொண்டிருப்பதில்லை. சில தோல்விகள், சில இழப்புகள், சில மனஸ்தாபங்கள், சில எதிர்ப்புகள், சில ஏமாற்றங்கள் ஆகியவை மனக்கஷ்டமான தோற்றங்களைக் கொண்டவையே. ஆனால், தேவன் அவைகளை நம்முடைய நன்மைக்கேதுவாக அனுமதிக்கக்கூடும்.

கோலியாத்தை வீழத்தும்வரை தேவன் தாவீதின் வாழ்வில் செய்தவை யாவும் நன்மைகளே. ஆனால், அதைத் தொடர்ந்துவந்த சவுலின் தொல்லைகள், ஆதரவற்ற அனாதை நிலைகள், அனைவராலும் கைவிடப்பட்ட சூழ்நிலைகள் ஆகியவை தாவீதின் பிற்கால நன்மைக்கேதுவாக தேவன் நிகழட்டும் என அனுமதித்தவைகளே. அவைகள் நன்மையானவைகள் என்ற தோற்றமற்றவைகள். ஆனால், அவைகளின் வழியாகத்தான் தாவீது, அரசன் என்ற உயர்நிலைக்கு வந்து சேரமுடிந்தது.

தேவனோடு வலிமையான உறவு கொண்டவர்கள், தங்கள் வாழ்க்கையில் வரும் நலமானவைகளில் மட்டும் அல்லாமல், நலமற்றவைகளிலும் தேவனுடைய கரம் இருக்கிறது என்பதை விசுவாசிக்கத் தயங்கமாட்டார்கள். சமையலுக்கு உதவும் உப்பு, மிளகாய், புளி போன்றவை தனித்த நிலையில் சுவையானவைகள் அல்ல. ஆனால், சுவைக்கேதுவாகவே அவை சமையலில் உபயோகப்படுத்தப்படுகின்றன. இறுதி யில் அவற்றின் மூலம் சுவையான உணவு தயாராகிறது. தேவன் நம் வாழ்க்கையில் அனுமதிக்கும் சில காயங்கள் கசப்பானவைகள்தான். ஆயினும், அவை இனிப்பான முடிவுகளுக்கேதுவாகவே அவற்றை அனுமதிக்கிறார் என்பது உண்மை.

தேவன் நமக்கு எதிராக வருகின்ற சோதனைகளையும், நமக்குப் பாதகமாக நிகழுகின்ற சம்பவங்களையும்கூட நமக்கு நன்மை ஏற்படும் விதமாக மாற்ற வல்லவர். மோசேக்கு எகிப்தில் நேரிட்ட எதிர்பாராத சோதனைகள் வருத்தமானவைகள் தான். யோசேப்பிற்கு தன் சகோதரர்கள் செய்த அநீதிகள் அதிக வேதனைக் குரியவைகள்தான். ஆனால், தேவன் அவர்களுக்கு எதிராக எழுந்த அந்த சோதனைக் காற்றுகளைத் தம்முடைய ஞானத்தினால் கையாண்டு, அவை அவர்களைத் தாம் விரும்பிய உயர்வுக்கு நேராகக் கொண்டு செல்லும் விசைகளாக மாற்றினார்.

சிந்தனைக்கு...

நல்லவர்கள் வாழ்வில் தீமையும் நன்மையாகிறது.
தீயவர்கள் வாழ்வில் நன்மையும் தீமையாகிறது.

செப்டம்பர் 21
கலாச்சாரத் தாக்கம்

ரோமர் 12:1-12

இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷம் தரியாமல்
ரோமர் 12:2

நான் ஐரோப்பிய நாடுகளுக்குச் செல்லும் போது அந்த நாட்டு மக்களிடமிருந்து கற்றுக்கொள்ள வேண்டிய ஏராளம் நல்ல விஷயங்களைக் குறித்து சிந்திப்பேன். பாலியல் சம்பந்தமான விஷயங்களில் அவர்கள் கடிவாளம் இல்லாத குதிரைகள் போல வாழ விரும்புவது சீ என்று இகழப்படத்தக்கதுதான். உடை விஷயங்களில் அவர்களிடம் காணப்படும் அடக்கமின்மையும், ஞானமின்மையும் கட்டுப்பாடற்ற சுதந்திரமும் இப்படியுமா என்ற கேள்வியை எழுப்புவது உண்மைதான். அதே வேளையில் சில ஒழுங்குகளுக்கும் மனித நேயத்திற்கும், சில நேர்மையான அணுகுமுறைகளுக்கும். சுத்தம் சுகாதாரம் தொடர்பான விஷயங்களுக்கும், பொறுப்புணர்வுக்கும், பிறர் உதவி நாடாமல் செயல்படும் ஆர்வத்திற்கும் அவர்கள் தரும் முக்கியத்துவம் மெச்சத் தக்கவைகள். அவை நாம் பின்பற்ற வேண்டியவைகள்.

ஆனால், இந்தியாவிலிருந்து அது போன்ற நாடுகளுக்குச் செல்லுகின்ற பெரும்பாலானவர்கள், மிகக் குறைந்த காலத்திலேயே அங்கு நிலவும் தவறான காலச்சாரங்களால் அடியோடு மாறிவிடுகிறார்கள். தவறான உடைக் கலாச்சாரமும், தப்பிதமான பாலுணர்வு கலாச்சாரங்களும் அவர்களை வேகமாகப் பாதித்துவிடுகின்றன. ஏன் இப்படி? என்று கேட்டால் இது இந்த நாட்டு கலாச்சாரமுங்க. இது இந்தியா இல்லீங்க. இங்க இருந்தால் இப்படி இருப்பதுதான் நியாயமுங்க என்று விளக்கம் கொடுப்பார்கள். ஆனால் பண ஆசை, பிறரை மதியாமை, அடுத்தவர்கள் விஷயங்களில் தலையை நுழைத்தல், ஜாதி பேதம், நேர்மையின்மை, வெளிப்படைத் தன்மையின்மை, பிறரைக்குறித்துக் கவலைப் படாடமை, புறங்கூறுதல், கஞ்சத்தனம் போன்ற விஷயங்களை இந்தியாவிலிருந்து எப்படிக் கொண்டு சென்றார்களோ அவற்றைச் சற்றும் சேதமில்லாமல் வைத்துக் கொள்வார்கள். அமெரிக்கா கலாச்சாரத்தாலோ, ஐரோப்பிய கலாச்சாரத்தாலோ அவை பாதிக்கப்படுவதில்லை.

கலாச்சார ரீதியான சூழ்நிலைகள் மாறும்போது மாற்றங்களை முற்றிலும் தவிர்க்க முடியாது. ஆனால், எங்கிருந்தாலும் தேவனுடைய பிள்ளைகள் பரிசுத்தக் கலாச்சாரத் தாக்கத்தை இழந்து போக மாட்டார்கள். அவர்களின் பழக்கவழக்கங்கள் மாறலாம். ஆனால், பரிசுத்தத்தைப் பிரதிபலிக்கும் நிலைப்பாடு மாறாது. அவர்களின் உடைகளில் ரகங்கள் மாறலாம். ஆயினும் அடக்கம், நாணம், ஒழுக்கம், நற்தோற்றம் போன்ற உயர்ந்த சிந்தைகள் ஒரு போதும் மாறாது. அவர்கள் எங்கு போனாலும் உலகத்திற்காக அல்ல. உன்னத தேவனுக்குப் பிரியமாக வாழும் ஆசையுடையவர்கள்.

சிந்தனைக்கு...

நோக்கமின்றி வாழ்கின்றவன் இழந்து போகின்றான்.
நோக்கத்தில் உறுதியற்றவனோ இழிவடைகின்றான்.

செப்டம்பர் 22

முன்மாதிரி

1 தீமோத்தேயு 3:1-16

தன் சொந்தக் குடும்பத்தை நடத்த அறியாதிருந்தால் ...
1 தீமோத்தேயு 3:5

ஒரு குறிப்பிட்ட தேவ ஊழியர் வாலிபர்கள் மத்தியில் சிறப்பாக ஊழியம் செய்து, பல வாலிபர்களை இயேவிடம் வழிநடத்தினார். அவருடைய சவாலான போதனைகள் பல வாலிபர்களின் வாழ்க்கையை மாற்றியதுண்டு. அதே வேளையில், அவருடைய சொந்த மகனோ உலகத்தின் பாதையில் ஒரு தவறான வாழ்க்கை வாழ்ந்தார். அநேக வாலிபர்களை கர்த்தருக்குள் நடத்திய அவருடைய சொந்த மகனின் நிலைமை அனேகரை ஆச்சரியப்படுத்தியது. இதைக் குறித்து ஒருவர் கூறும் போது, “அவருடைய நல்ல போதனைகளைக் கேட்ட வாலிபர்கள் திருந்தினார்கள். நல்ல போதனையாளராகிய அவருடைய முரண்பாடான வாழ்க்கையைக் காண நேர்ந்த மகன் கெட்டுப் போனான்” என்றார்.

நல்ல அறிவுரைகள் ஒரு சிலரை நல்வழிப்படுத்தும். ஆனால், போதிக்கின்றவனின் முரண்பாடான வாழ்க்கை அநேகரைச் சீர்கெட்டவர்களாக்கும். தவறான முன்மாதிரிகள் அநேகர் இடறிப் போக வழிவகுப்பார்கள். பல தேவ ஊழியர்களின் பிள்ளைகள் இந்நாட்களில் கிறிஸ்துவை விட்டு வெகுதூரம் விலகிப் போய்க் கொண்டிருக்கின்றார்கள். நல்ல சில தேவ ஊழியர்களின் பிள்ளைகள்கூட விதிவிலகிப் போகிறார்கள் என்பது உண்மை. ஆயினும், பல பிள்ளைகள் பிசாசின் வலையில் விழுந்ததற்கு முக்கியமான காரணம், போதகத் தந்தைகளின் சாட்சியற்ற தனிப்பட்ட வாழ்க்கை.

பிரமாதமாகப் பிறருக்குப் பிரசங்கம் செய்து விட்டு கிறிஸ்துவின் வழியில் நடவாமல், முரண்பாடாக வாழும் பெற்றோரின் வாழ்க்கை முறையைக் காணும் பிள்ளைகள், கிறிஸ்தவத்தில் எந்தப் பிரியமும் இல்லாமல் போகிறார்கள்.பெற்றோரின் சரியற்ற வாழ்க்கை நல்வழியில் நடக்க வேண்டும் என்ற வாஞ்சையைப் பிள்ளைகளுக்கு ஏற்படாமல் செய்து விடுகிறது. அவர்களுக்கு ஆன்மிக ஆர்வம் வராதபடி, பெற்றோரின் வாழ்க்கை அமைவது எத்தனை பரிதாபம்.

பெற்றோர்களே, உங்கள் பிள்ளைகளுக்கு என்ன போதித்தீர்கள் என்பதைவிட, பிள்ளைகள் எப்படிப்பட்ட ஒரு வாழ்க்கை முறையை உங்களிடம் கண்டார்கள் என்பதைக் குறித்து கரிசனையாயிருங்கள். நீங்கள் வாழ்கின்ற விதமும், உங்கள் குணாதிசயங்களின் தன்மையும், உங்கள் பிள்ளைகளால் கவனிக்கப்படுகிறது. நீங்களே அவர்களுக்கு இடறுதலுக்கான கல்லாக மாறிவிடுவதை தவிர்க்கக் கவனமாயிருங்கள். ஆயிரம் பேருக்குப் போதிப்பதைவிட, தன் குடும்பத்தின் பிள்ளைகளுக்குப் பின்பற்றத்தக்க மாதிரியாக வாழ்வதே மேன்மையானது.

சிந்தனைக்கு...

உயர்ந்த கருத்துக்களால் உலகம் நிறைந்துவிட்டது.
உயர்ந்த மனிதர்களுக்கான இடமோ இன்னும் காலியாக உள்ளது.

செப்டம்பர் 23

தாழ்மையா? பெருமையா?

பிலிப்பியர் 2:1-16

மனத்தாழ்மையினாலே ஒருவரையொருவர் தங்களிலும் மேன்மையானவர்களாக... பிலி 2:3

ஒரு சபைப் பாஸ்டர், தன்னுடைய சபையில் தாழ்மையாக நடந்துகொள்ளும் சிலரைக் கௌரப்படுத்தி, சில பரிசுகளைக் கொடுக்க முன் வந்தாராம். தாழ்மைக்காக மூன்றாவது பரிசு பெறுகின்ற நபரின் பெயர் அறிவிக்கப்பட்டது. ஆனால், அந்த நபர் பாஸ்டரிடம் வந்து, பாஸ்டர் இந்த சபையில் அனைவரையும்விட நான் தான் மிக மிகத் தாழ்மையானவன். எனக்கு முதல் பரிசு தராமல் மூன்றாம் பரிசு தருவது நியாயம் அல்ல என்று சண்டை போட்டாராம். பெருமைக்கு பல வடிவங்கள் உண்டு. அதில் ஒன்றுதான் மிகுந்த தாழ்மையாக இருப்பதாக தனக்குள் எண்ணிக்கொள்ளுதல். அநேகர் தாழ்மையாகத் தோன்றுவதும், தாழ்மையாக நடந்துகொள்வதும் உண்மைதான். ஆனால், அந்த தாழ்மையே பெருமையின் இன்னொரு வேடமாக மாறிவிடுகிறது. ஏனென்றால், அந்த தாழ்மையை பலர் மெச்ச வேண்டும். அதன் அடிப்படையில் தங்களை மேன்மையாக எண்ண வேண்டும் என்றும் எதிர்பார்க்கின்றார்கள்.

ஒரு சகோதரி நகை அணிகின்ற விசுவாசிகளைக் கண்டால், அவர்களை தாழ்மையில்லாத பெருமைக்காரர்கள் என்று நினைக்கவும், பேசவும் செய்வார். தான் நகை அணியாமலிருப்பதை ஒரு பெரிய தாழ்மையாகவும், வசனத்திற்குக் கீழ்ப்படியும் அனுபவமாகவும் எண்ணிக்கொள்வார். ஆனால், அவர் வாழ்வது ஒரு பெரிய பங்களாவில். அவர் செல்வது விலையுயர்ந்த ஆடம்பரமான காரில். அவர் அணியும் உடைகள் விலையுயர்ந்த பட்டுகள். அவர்கள் வீட்டில் உணவு வகைகள் நட்சத்திர ஓட்டல் ரகமாக இருக்கும்.

தாழ்மை என்பது வாழ்க்கையின் அனைத்துப் பகுதிகளிலும் பிரதிபலிக்க வேண்டும். ஏதோ ஒரு சில செயல்களில் மட்டும் தாழ்மையைக் காண்பிப்பது ஒரு வித்தியாசமான பெருமை தேடலின் இன்னொரு வடிவமே. தாழ்மை என்பது முதலாவது சிந்தையில் உருவாக வேண்டும். சிந்தையில் ஏற்படுகிற தாழ்மைதான் உண்மையான ஆவிக்குரிய தாழ்மை ஆகும். அந்தத் தாழ்மையின் பிரதிபலிப்புகளை வாழ்க்கையின் அனைத்துப் பகுதிகளிலும் காண முடியும். பேச்சில், செயலில், குணத்தில், தோற்றத்தில், மனநிலையில் அந்த தாழ்மையை அடையாளங் கண்டுகொள்ள முடியும்.

தாழ்மை யாருடைய பாராட்டுதலையும், புகழையும் எதிர்பார்த்திருக்காது. தாழ்மையுடையவர்கள் தங்களைப் போன்ற தாழ்மையில் மற்றவர்கள் இல்லை என்பதற்காக, அவர்களை மட்டமாக நினைக்கவோ, பேசவோ மாட்டார்கள். தன்னைத் தானே உயர்த்துவதும் பாவமே. தன்னுடைய தாழ்மையை எண்ணி தன்னை உயர்த்திக் காண்பிப்பதும் பாவமே.

சிந்தனைக்கு...

தாழ்மையுள்ளவன் தலைகுனியத் தயாராயிருக்கிறான். ஆனாலும் தேவன் அவனை தலைநிமிர்ந்து நிற்க வைக்கிறார்.

செப்டம்பர் 24

இருதயத்தைக் காத்துக் கொள்ளுங்கள்

பிலிப்பியர் 4:1-9

அவைகளையே சிந்தித்துக் கொண்டிருங்கள்.
பிலிப்பியர் 4:8

நீங்கள் ஒரு மணிநேரம் பரிசுத்தம் சம்பந்தமாக நல்ல தேவ வார்த்தைகளைக் கேட்டுவிட்டு, அடுத்து 10 நிமிடம் டி.வி.யில் ஒரு சினிமாவோ, சீரியலோ பார்க்க நேரிட்டால் ஒரு மணி நேரம் பரிசுத்த வார்த்தைகள் ஏற்படுத்திய உணர்வுகள் யாவும் ஓடிப்போகும். ஆனால், அரை மணிநேரம் டி.வி.யில் சினிமா பார்த்துவிட்டு அல்லது பேஸ்புக் அல்லது வாட்ஸ் ஆப்பை திறந்து நேரத்தைச் செலவழித்துவிட்டு, தேவ வார்த்தையைக் கேட்கச் செல்லுங்கள். அடுத்து சில மணி நேரங்கள் நீங்கள் டி.வி.யில் பார்த்த சினிமாவும், வாட்ஸ் ஆப் சமாச்சாரங்களும்தான் உங்களைச் சுற்றிக் கொண்டிருக்கும்.

டி.வி.பார்த்து முடித்துவிட்டாலும், பேஸ்புக் பார்த்து முடித்துவிட்டாலும், இண்டர் நெட் தேடல்களை முடித்துவிட்டாலும், அவை ஏற்படுத்துகின்ற எதிர்மறையான தாக்கங் களிலிருந்து வெளியேற நீண்ட நேரங்கள் ஆகும். ஆம், நல்லவை ஏற்படுத்திய நல்ல உணர்வுகளையும், உந்துதல்களையும் நாம் விரைவில் இழந்துவிடமுடியும். ஆனால், தவறானவைகள் ஏற்படுத்துகின்ற தவறான உணர்வுகளை வெளியே தள்ள, மிகுதியான நேரங்கள் தேவைப்படும்.

ஆம், கேடான விஷயங்களுக்கு மனிதனுடைய நல்ல உணர்வுகளை விரைந்து அழிக்கும் தன்மை உண்டு. எந்த ஒரு ஏற்பாடும் செய்யாமலே நிலத்தில் ஆகாத செடிகளும், களைகளும் தானாக அதிவேகமாக முளைத்து வருகின்றன. ஆனால், எவ்வளவோ சிரமப்பட்டாலும் நல்ல விதைகளை விதைத்து பலன்களைப் பெறுவது கடினமாயிருக்கின்றது. டிவி பார்த்துவிட்டு, இண்டர்நெட் பார்த்துவிட்டு, வாட்ஸ் ஆப் பார்த்து விட்டு, பேஸ்புக்கில் மூழ்கிவிட்டு ஜெப நேரத்திற்கோ, வேத வாசிப்பு நேரத்திற்கோ, ஆராதனை நேரத்திற்கோ சென்றால் அங்கே மனநிலை நல்ல விஷயங்களுக்குள் ஆழமாகச் செல்லும் உணர்வும், தெளிவும் உடையதாகயிராது.

எனவே, ஆவிக்குரிய உணர்வுகளை இழக்காமலிருக்கவும், ஆவிக்குரிய மன நிலை மழுங்கிப் போகாதிருக்கவும், போதுமான அளவிற்கு இன்றைய நவீன தகவல் தொடர்பு சாதனங்களின் தாக்கங்களுக்கு விலகியிருக்க எச்சரிக்கையாயிருக்க வேண்டும். நல்ல விதைகள் முளைத்து வளரும் முன்பே, ஆகாயத்துப் பறவைகள் அவற்றை அள்ளிக் கொண்டுசெல்ல வருவது போலவே, இன்றைய நவீன தகவல் தொடர்பு சாதனங்கள் தேவ சிந்தனைகளையும், உணர்வுகளையும் கொள்ளை யடித்துச்சென்று விடும். மனித இருதயம் எளிதில் கறைபிடிக்கும் தன்மையுடையதாகவும், எளிதில் கறை அகலாத தன்மை உடையவையாகவும் இருப்பதால், உயர்ந்த விஷயங் களோடு இருதயத்தை இணைத்து வைக்க அதிகக் கவனமாயிருக்க வேண்டும்.

சிந்தனைக்கு...

சுதந்திரம் என்ற பெயரில் மனிதன் வரம்புகளைக் கடக்கும்போது, மறுபடியும் அவன் அடிமையாகிவிடுகிறான்.

செப்டம்பர் 25

அழுதது போதும்

லூக்கா 23: 20-33

எருசலேமின் குமாரத்திகளே, நீங்கள் எனக்காக அழாமல்.
லூக்கா 23 : 28

நாம் ரொம்ப உணர்ச்சிப்பூர்வமானவர்கள். உண்மைகளைச் சொல்லும் போது கல்லாய் உட்கார்ந்து கேட்போம். ஒரு மாற்றத்தையும் உண்மைக்காகச் செய்ய மாட்டோம். ஆனால் யாராவது உணர்ச்சிப் பூர்வமாகப் பேசிவிட்டால் மெழுகாய் உருகிப்போய்விடுவோம். இயேசு எதற்காக மரித்தார் என்று எத்தனைமுறை சொல்லப்பட்டாலும் அது நமக்குள் ஒன்றும் செய்யாது. ஆனால், யாராவது ஒருவர் உருக்கமான குரலில் நெகிழ்ச்சியுடன் இயேசு பாடுபட்ட விதங்களை விளக்கினால் கண்ணீர் விட்டு அழுதுவிடுவோம்.

நம்மை அழவைக்க யாராவது ஒருவர் அவ்வப்போது தேவைப்படுகிறார்கள். நம்மை உணர்ச்சிவசப்படுத்த யாராவது ஒருவர் ரொம்பவும் நடிக்க வேண்டியது அவசியமாகிவிடுகிறது. இயேசுவை இரத்தம் சொட்டப் படம் போட்டுக் காண்பித்தாவது நம்முடைய மனதை இளக வைக்க வேண்டியிருக்கிறது. அவர் வாரினால் அடிபட்டு உடல் முழுவதும் உழப்பட்ட நிலம் போல் நிற்பதை விகாரமாக நடித்துக் காட்டினால்தான் நமக்குப் பச்சாதாபம் பாய்ந்தோடி வருகிறது.

நம்டைய ஆன்மிகத்திற்கு உணர்ச்சிவசப்படுத்துதல்கள் அதிகமாகத் தேவைப் படுகிறது. ஏனென்றால், நாம் எதிலும் உணர்வுப்பூர்வமாக வாழப் பழகி, உண்மைப் பூர்வமாகச் செயல்படும் பழக்கத்தை அடையாமல் போய் விட்டோம். வியாகுல வியாழன் என்ற பெயரில் வியாகுலத்தோடு பாடினால் நமக்குத் திருப்தி. துக்க வெள்ளி மும்மணி ஆராதனையில், முகத்தை துயரத்தால் மூடி துக்கப்பாட்டு நிறையப் பாடினால், நமக்குள் பக்தி பரவசம் மிகுந்து விடுகிறது.

இயேசுவின் பாடு மரண சினிமாப் படங்களை பார்த்துப் பார்த்து ரொம்பவே மனதுருகிவிட்டோம். இயேசு உனக்காக மரித்தாரே, அவருக்காக நீ என்ன செய்தாய்? என்ற கேள்விகளால் மிகுதியாய் குற்ற உணர்வு அடைந்து விட்டோம். வியாகுல வியாழன் அன்றும் துக்க வெள்ளியன்றும் கல்வாரி காட்சி வர்ணனைகளைக் கேட்டு அதிகமாக மனசு இளகிப் போய்விட்டோம்.

ஆனால் மனம் மாறிவிட்டோமா? மனந்திருந்தி இயேசுவினால் மன்னிப்பை பெற்று விட்டோமா? சிலுவையில் இரத்தம் சிந்தி உருவாக்கப்பட்ட இரட்சிப்பின் அனுபவத்தைக் கண்டுவிட்டோமா? மனிதனாக அவர் வந்து பாடுபட்டது. நாம் தேவனுடைய பிள்ளைகளாக மாறி கர்த்தருக்குச் சாட்சிகளாய் வாழவே. அது நம் வாழ்வில் நடந்து விட்டதா?

சிந்தனைக்கு...

துன்பங்கள் உனக்கு சில உண்மைகளை உணர்த்தாவிடில்
இன்பங்களின் பாதையை நீ காணமாட்டாய்.

செப்டம்பர் 26

எது மரியாதை?

ஏசாயா 29:1-14

அவர்கள் இருதயமோ எனக்குத் தூரமாய் விலகியிருக்கிறது.
ஏசாயா 29:13

குறிப்பிட்ட ஒருவர் பகலெல்லாம் பலவிதமான உலகப்பிரகார கதைப் புத்தகங்களையும், நாவல்களையும் படிப்பார். ஆனால், இரவில் தூங்கச் செல்லும் முன்பு அவைகளையெல்லாம் ஒரு குப்பைக் கூடையில் போட்டுவிடுவார். ஆனால், தூங்கச் செல்லும்போது வேதாகமத்திலிருந்து ஒன்றிரண்டு வசனங்களைப் படித்துவிட்டு, அதனை மிகுந்த மரியாதை உணர்வோடு தன் தலையின் பக்கத்தில் வைத்துக் கொள்வார். இவருக்கு தான் வேதாகமத்தையே அதிகமாக கனப்படுத்தி, பிற புத்தகங்களை அற்பமாக நினைப்பதாக எண்ணம்.

ஆனால், இது ஒரு போலியான பக்தி. வேதாகமத்தை அவர் தலைப் பக்கத்தில் வைத்துக்கொண்டாலும், நாள் முழுவதும் அவருடைய இருதயத்தில் முக்கிய இடம் பிடிப்பவை கதைப் புத்தகங்கள்தான். ஆம், நாம் எதை மரியாதையாக எண்ணுகின்றோம் என்பதில் அல்ல. எவைகள் நம்முடைய இருதயத்தில் அதிக முக்கியமானவைகளாகக் கருதப்பட்டு ஏற்கப்படுகிறது என்பதே நம்முடைய பக்தி நிலையை நிர்ணயிக்கிறது.

சிலர் பணத்தை குப்பை என்பார்கள். ஆனால், அந்தக் குப்பைக்காகவே வாழ்க்கையின் முழுப் பகுதியையும் செலவழித்துக் கொண்டிருப்பார்கள். அந்தக் குப்பையை அதிகமாகச் சம்பாதிப்பதற்காக கர்த்தர் மேன்மையாகக் காட்டும் நற்குணங்களையும், நல்ல கொள்கைகளையும்கூட தியாகம் செய்து விடுவார்கள்.

பலருடைய வீடுகளில் இயேசு ஒரு அலங்காரக் கடவுளாக எண்ணப்படுகிறாரேயன்றி அரசாளும் கடவுளாக ஏற்றுக்கொள்ளப்படவில்லை. பலருடைய வீடுகளில் வேதாகமம் ஒரு விக்கிரகம் போலவே வணங்கப்படுகிறதேயன்றி, அந்த வேதத்தின் வழிகளை அவர்கள் ஏற்றுக்கொண்டு நடக்கவில்லை.

மதுபானம் பண்ணி, புகைப் பிடித்து, நியாய நெறிகளை மதியாமல் வாழும் ஒருவர், தான் ஒரு பெரிய வீட்டைக் கட்டியபோது அந்த வீட்டில் ஒரு பெரிய இயேசு படத்தை வைக்கவும், அந்த வீட்டிற்கு இயேசுவின் பெயரைச் சூட்டவும் மிகவும் கவனமாயிருந்தார். அந்தப் படத்தில் இயேசுவின் கண்கள் இரவும் பகலும் மூடாமல் திறந்திருப்பதாகக் காணப்படும். ஆனால், தன்னுடைய தவறான வாழ்க்கைகளை இயேசு கவனிக்கின்றார் என்ற விழிப்புணர்வோ அவருக்கு இல்லை.

இப்படிப்பட்ட பக்தியும் மரியாதையும் தேவ கோபங்களுக்கு வழிவகுக்குமேயன்றி, ஆசீர்வாதங்களை வரவழைக்காது. பக்தி என்பது இயேசுவை மதிப்பது அல்ல, அவருடைய வழியில் நடப்பதே. ஆவிக்குரிய வாழ்க்கை என்பது தேவனை வாயினால் ஆராதிப்பதல்ல, வாழ்கின்ற விதத்தால் அவரைக் கனப்படுத்துவதே.

சிந்தனைக்கு...

அறிந்தும் அதற்கேற்றபடி வாழாத ஆத்திகனைவிட நாத்திகன் பரவாயில்லை.

செப்டம்பர் 27

பொறுமை

1 பேதுரு 2:15-25

அவர் வையப்படும்போது பதில் வையாமலும்...
1 பேதுரு 2:23

ஒரு முறை நல்ல பக்தியுள்ள கிறிஸ்தவர் ஒருவரை, அவருடைய அலுவலகத்தில் பணிபுரியும் இன்னொருவர், நியாயமில்லாமல் பலர் நடுவில் மிகவும் மோசமாகத் திட்டித்தீர்த்தார். ஆனால், இவரோ மிகுந்த பொறுமை காத்து பதிலுக்குப் பதில் பேசாதிருந்தார். அவருடன் பணிபுரிந்த சிலர், என்ன சார்! இவ்வளவு இயேசு பக்தியாக இருக்கின்ற உங்களை, நியாயமில்லாமல் திட்டுவாங்க வைத்து விட்டாரே கர்த்தர் என்று அனுதாப உணர்வோடு கேட்டனர். ஆனால், அவரோ உண்மையான இயேசு பக்தியோடு இருப்பவர்கள், எந்த அளவிற்கு மற்றவர்களின் அநீதியான போக்குகளை சகித்துப் பொறுமை காக்க முடியும் என்று, கர்த்தர் இதன் மூலம் உங்களுக்குக் காண்பித்தார் என்று மனப்பக்குவத்தோடு பதிலளித்தார்.

சிலர் நம்மை நியாயமில்லாமல் கோபித்துக் கொள்ளலாம். அநீதியாக மோசமாகப் பேசிவிடலாம். அக்கிரம சிந்தையோடு அவதூறுகளைக் கூறி விடலாம். அங்கே கர்த்தருக்காய் வாழ்கிற நமக்கு ஏன் இப்படி நிகழ்கிறது என்ற மனப்போராட்டம் ஏற்படவே செய்யும். ஆனால், கர்த்தர் நமக்குத் தந்துள்ள பொறுமையின் ஆற்றலையும் சகிக்கும் வலிமையையும் வெளிப்படுத்தி, கர்த்தரை மகிமைப் படுத்துவதற்காக வந்த நல்ல வாய்ப்புகளாகவே இவற்றை எடுத்துக் கொள்ளவேண்டும்.

தாவீதின் துன்பமான ஒரு வேளையில் சீமேயி என்பவன், அவனை அக்கிரம உணர்வோடு வாய்க்குவந்தபடி மோசமாகத் திட்டினான். ஆயினும், தாவீது தேவனைச் சார்ந்த எண்ணத்தோடு பதிலுக்குப் பதில் பேசாமல் சகித்துக் கொண்டான். அந்த சகிப்புத் தன்மையும் பொறுமை காக்கும் பக்குவமும், கர்த்தருடைய சமுகத் திலிருந்து மிகுந்த ஆதரவையும் பலன்களையும் கொண்டுவரவே செய்தது. கிறிஸ் தவத்தின் மகிமை அற்புதமான அதிசயமான காரியங்களிலேயே வெளிப்படுகிறது என்றே பலர் எண்ணுன்றனர். ஆனால், கிறிஸ்தவத்தின் வல்லமையும், மகிமையும் பொறுமை, தாழ்மை, சகிப்புத் தன்மை போன்றவற்றிலேயே மிகுதியாக வெளிப்படுகிறது. ஏனென்றால் பொறுமை, தாழ்மை, விட்டுக்கொடுத்தல் போன்றவற்றிற்கே மிகுதியான மனபலமும் பக்குவமும் தேவைப்படுகிறது.

சமாரியர்கள் இயேசுவை ஏற்றுக்கொள்ள மறுத்தபோது யோவானும், யாக்கோபும் அவர்களை அழிப்பது மூலமாகவே தேவ வல்லமையை வெளிப்படுத்த விரும்பினர். ஆனால், இயேசுவோ அவர்களை அழிப்பதில் அல்ல, அவர்களைச் சகிப்பதிலேயே தேவ வல்லமையும் மகிமையும் வெளிப்படவேண்டும் என்பதை தெளிவுபடுத்தினார்.

சிந்தனைக்கு...

பெருமை உள்ளவனின் பேரை தேவன் நினைப்பதுமில்லை.
தாழ்மை உள்ளவனின் பேரை பெருமைப்படுத்த மறப்பதுமில்லை.

செப்டம்பர் 28

நம்பிக்கையுடன்

சங்கீதம் 22:19-31

காண்டாமிருகத்தின் கொம்புகளில் இருக்கும்போது...
சங்கீதம் 22:21

குறிப்பிட்ட ஒருவர் பெருந்தொகையைக் கடனாகத் தந்திருந்தவருக்கு, ஒரு குறிப்பிட்ட நாளில் சாயங்காலம் 5 மணிக்குப் பணத்தை திருப்பித் தருவதாகச் சொல்லியிருந்தார். கடன் கொடுத்த நபர் 3 மணிக்கே பணத்தைப் பெற்றுக் கொள்ள வீட்டிற்கு வந்துவிட்டார். நண்பர் ஒருவர் 5 மணிக்கு பணத்தோடு வருவதாக வாக்களித்ததை நம்பிதான் அவர் 5 மணி என்று நேரம் சொல்லியிருந்தார். ஆனால் 4.45 ஆகியும் அவர் வரவில்லை. கடனை வசூலிக்க வந்தவர் இதுவரை அவர் வரவில்லை, இனி எங்கே வரப்போகிறார் என்று எரிச்சலடைந்தார். ஆனால், மற்றவரோ 5 மணிக்கு உங்களுக்கு பணம் கிடைக்கும் என்று நம்பிக்கையோடு சொன்னார். 4.55 வரை அந்த ஆள் வரவில்லை. ஆனால் 5 மணிக்கு சரியாக அவர் வந்துவிட்டார்.

நேரம் சொல்லியிருந்த ஆள் ஒருபோதும் சொல்லியும் செய்யாமலிருந்த தில்லை என்று மற்றவர் அறிந்திருந்ததால் அவ்வளவு உறுதியாகச் சொன்னார். சில நேரங்களில் தேவனும் அப்படியே. நம்முடைய பிரச்சினைகளில், கஷ்டங்களில், சோதனைகளில் அவர் நாம் எதிர்பார்த்த நேரத்தில், எதிர்பார்த்த விதத்தில் எதையும் செய்யமாட்டார். ஆனால், உரிய நேரத்தில் உரிய விதமாக காரியங்களைச் செய்யா மலிருக்க மாட்டார். எனவே, தேவனுடைய காலதாமதங்களையும், தேவனுடைய மௌனங்களையும் நாம் ஒரு விசுவாசத்தோடுதான் பார்க்க வேண்டும். இதுவரை ஒன்றும் நடக்கவில்லை. இனி எங்கே நடக்கப்போகிறது என்று மனம் பதட்டமடைந்து கூறும். ஆனால் விசுவாசம், இல்லை இல்லை, உரிய நேரத்தில் ஏதாவது ஒரு நல்லது நடக்கும் என்று சொல்ல வேண்டும். யோபு 42:2

காலதாமதம் போன்ற சூழல்களிலும், தேவன் மௌனமாயிருப்பது போன்ற சூழல்களிலும், நாம் பதட்டமடையாமல் பொறுமையாயிருப்பது, தேவன் மேலும் அவருடைய உண்மையின்மேலும் நாம் வைத்திருக்கின்ற நம்பிக்கையைப் பிரதி பலிக்கின்றது. இதுவரை செய்யவில்லை என்பது அல்ல. உரிய வேளையில் செய்வார் என்பதே மனதைத் திடப்படுத்தும். பிரசங்கி 3:11

சாத்ராக், மேஷாக், ஆபேத் நோகோவைக் காப்பாற்ற தேவன் ஓடோடி வந்தார் என்று கூற முடியாது. ஆனால், உரிய நேரத்தில வந்தார். தானியேலைக் காப்பாற்றா தேவன் அவசரமாக வந்தார் என்ற கூற முடியாது. அதற்குரிய நேரத்தில் வந்தார் என்பதே உண்மை. ஏதோ அறிகுறிகள் தெரிவதால் அல்ல. ஏதோ அடையாளங்கள் தெரிவதால் அல்ல, கர்த்தரை நம்பியிருக்கின்ற எனக்கு அவரால் உரிய நேரத்தில் உரிய உதவி கிடைக்கும் என்பதுதான் உண்மையான விசுவாசம்.

சிந்தனைக்கு...

கர்த்தரின் பார்வையில் இருக்கிறோம் என்ற எச்சரிக்கை உடையவர்கள் கர்த்தருடைய பாதுகாப்பில் இருக்கிற நம்பிக்கையும் உடையவர்களே.

செப்டம்பர் 29
சுடப்பட்ட பாண்டம்

1 பேதுரு 2:13-25

அவர் வையப்படும் போது பதில் வையாமலும்.
1 பேதுரு 2:23

ஆம், மற்றவர்களின் தவறான மனநிலையின் விளைவான வார்த்தைகளும், செயல்களும் நம்முடைய மனநிலையினை எளிதாக மாற்றுவதற்கும், குழப்புவதற்கும் நாம் இடம் கொடுத்தால், அதனால் நாம்தான் குணரீதியாக நஷ்டப்படுகிறோம். அதனால் நமக்குள் அமைதிக் குறைவும், ஆத்திர உணர்வுகளும், அலைமோதல்களும் ஏற்படுகின்றன. நம்முடைய உள்நிலைகள் அமைதியற்றுக் கொந்தளிப்பதால், அது நம்முடைய வாழ்க்கையின் பல பகுதிகளில் பலவிதப் பாதிப்புகளை ஏற்படுத்துகிறது.

குயவன் ஒரு பாண்டத்தை ஈரமாக வனைந்து வைத்திருக்கும் வேளையில், அதனைத் தொட்டாலோ, தட்டினாலோ, கையில் தூக்கி வைத்து அசைத்தாலோ அது வடிவம் மாறவோ, வளைந்து போகவோ செய்யும். ஆனால், பாண்டத்தை குயவன் தீயில் போட்டு சுட்டபின்பு, அதனை நீங்கள் தட்டினாலும், அசைத்தாலும் அதனுடைய வடிவம் மாறாமல் அப்படியே இருக்கும். ஈரமாக இருந்த பாண்டம் தீயினால் சுடப்பட்டதும் பக்குவப்பட்டு விடுகிறது.

சில நேரங்களில் பிறர் நம்மை ஏதாவது சொல்லிவிட்டாலோ, விமர்சனம் செய்துவிட்டாலோ, அல்லது வருத்தம் தரும்படி நடந்து விட்டாலோ, உடனேயே நாமும் நம் வடிவத்தை மாற்றிவிடுகிறோம். நம்முடைய மனநிலை மாறிவிடுகிறது. சில வார்த்தைகள், செயல்கள் நம்முடைய மனதை வளைத்து ஒழுங்கற்றுப் போகச் செய்துவிடுகிறது. சற்று நேரத்திற்கு முன்பு தோன்றிய விதமாக இப்போது நாம் இல்லை.

இதற்குக் காரணம் என்ன? மனப்பக்குவம் இல்லை. மற்றவர்களின் பேச்சாலும், செயலாலும் நாம் எளிதாக வளைந்து கோணலாகி போகத்தக்க விதமாக பக்குவ மற்று இருக்கின்றோம். இப்படிப்பட்ட நாம் சரியான பக்குவ நிலையை அடைவதற்காக, தேவன் நம்மைப் பலவிதச் சோதனை நெருப்புகள் வழியாகப் போக விடுகிறார். அந்தச் சோதனை நெருப்புகள் நமக்கு வேதனையானது என்றாலும், அவைகளால் நமக்கு மிகுந்த வலிமைகள் ஏற்படுகிறது.

எந்தப் பொய்யான பேச்சுகளையும், விமர்சனங்களையும், அவதூறுகளையும், அநீதியான பேச்சு மற்றும் செயல்களையும், ஏற்றுக்கொள்ளவும், தாங்கிக் கொள்ளவும், உணர்ச்சிவசப்பட்டு தடம் மாறாமலிருக்கவும் அந்த சோதனைத் தீயினால் ஏற் பட்ட பக்குவப்பட்ட மனநிலை உதவி செய்கிறது. இயேசு கிறிஸ்துவுக்கு எதிராக பொய்களும், புரட்டுகளும், விமர்சனங்களும், அநீதியான குற்றச்சாட்டுகளும் எழும்பின போதெல்லாம், அவர் அவைகளை மிகுந்த மனப்பக்குவத் தோடேயே சந்தித்தார்.

சிந்தனைக்கு...

பொறுமை உன்னைவிட்டு ஓடி விடாதிருக்கக் கவனமாயிருந்தால், சிறுமை உன்னைத் தேடிவந்து வருத்தாது.

செப்டம்பர் 30

மந்தநிலை

1 தெசலோனிக்கேயர் 5 : 1-22

ஆவியை அவித்துப் போடாதிருங்கள்...
1 தெசலோனிக்கேயர் 5 : 19

சில பிள்ளைகள் எப்பொழுதும் சாக்லெட், இனிப்புகள், ஐஸ்கிரீம், முறுக்கு, கடலை போன்ற கண்ட, கண்ட திண்பண்டங்களை, தின்று கொண்டிருப்பார்கள். எனவே வயிறு மந்தமாகி, மதியம் மற்றும் இரவு வேளைகளில் தரப்படும் நல்ல உணவினை அவர்களால் விரும்பிச் சாப்பிட முடிவதில்லை. அதன் விளைவாக அந்தப் பிள்ளைகளின் உடல் ஆரோக்கியமற்றுப் போவதுண்டு. இரட்சிப்பின் அனுபவத்தைப் பெற்ற பலர் நாளடைவில் ஆவிக்குரிய விஷயங்களில் போதிய ஆர்வமோ, ஈடுபாடோ இன்றிப் போவதுண்டு. ஆவிக்குரிய உணவுக்கான ஒரு பசி அவர்களிடம் இல்லாமல் போய்விடுவதுண்டு. ஜெபம், வேத வாசிப்பு போன்றவை அவர்களுக்குக் கட்டாய மான கடமைகளாக இருக்குமேயன்றி, அவைகளில் உண்மையான மனப்பூர்வமான ஈடுபாடுகள் இருப்பதில்லை.

ஏனென்றால் அவர்கள் பலவித உலகப்பிரகாரக் காரியங்களினால் தங் களின் இதய நிலையை மந்தமாக்கிவிடுகிறார்கள். பலவித உலகப்பிரகார டி.வி. நிகழ்ச்சிகளைப் பார்க்க அதிக நேரங்களைச் செலவிடுகின்றார்கள். தேவையற்ற ஊர்க் கதைகளையும், பிறரைக் குறித்த காரியங்களையும் மணிக்கணக்கில், பேசிக் கொண்டிருக்கின்றார்கள். பண நிலையைப் பெருக்குவது சம்பந்தமான யோசனைகளில் எப்போதும் மூழ்கி விடுகின்றனர். கட்டுப்பாடற்ற நிலையில் கால நேரம் பாராமல் எதையாவது சாப்பிட்டு வயிற்றை நிரம்பி வழியச் செய்து கொண்டிருக்கின்றனர்.

இதுபோன்ற காரியங்களின் விளைவாக, ஆவிக்குரிய உற்சாகங்களும், ஆர்வங்களும் அகன்று போய் விடுகின்றன. டி.வி.யில் மூழ்கிவிட்டு பலவித தீனிகளினால் வயிற்றில் இடம் இல்லாமல் செய்துவிட்டு, வாய்க்கு வந்தபடி பேசி நேரத்தைச் செலவிட்ட பின்னர், ஜெபிக்கச் சென்றால் ஜெபம் சுறுசுறுப்பாயிராது. வேத வாசிப்பு இனிமையாயிராது. ஆவிக்குரிய சில ஒழுங்குமுறைகளைக் கருத்துடன் கடைப்பிடித்து வாழ்ந்தால்தான் இதயம் தேவனைத் தேடுகின்ற ஆர்வத்தையும், ஆவிக்குரிய உணவிற்கான பசியைக் கொண்டதாகவும், இருக்கும்.

ஒரு விளையாட்டு வீரன் ஒரு இலக்கோடு செயல்படுகிறான். எனவே தன்னுடைய சரீரம் சுறுசுறுப்பை இழப்பதற்கும், உற்சாகத்தை இழப்பதற்கும் ஏது வான எந்த ஒரு உணவையும், பழக்கவழக்கங்களையும் விருப்பத்தோடு தவிர்த்து விடுகிறான். அது போலவே ஆவிக்குரியவர்களுக்கும் ஒரு இலக்கு வேண்டும். எப்போதும் தேவனோடு தொய்வில்லாத ஐக்கியத்தைக் கொண்டிருக்க வேண்டும் என்பதே அந்த இலக்கு.

சிந்தனைக்கு...

ஒரு விஷயம் தவறா, சரியா என்பதையல்ல,
உன் இலக்கிற்கு அது இடையூறாக இல்லையா என்று பார்.

அக்டோபர் 1

வேதாகமம் எதற்கு

யோசுவா 1:1 – 9

நியாயப்பிரமாண புஸ்தகம் உன் வாயைவிட்டுப் பிரியாதிருப்பதாக
யோசுவா 1:8

குறிப்பிட்ட ஒரு கிறிஸ்தவர் எங்கு சென்றாலும் தன் கையில் ஒரு வேதாகமத்தை வைத்திருப்பார். அவருடைய அலுவலக மேசையில் வேதாகமம் இருக்கும். அவர் படுக்கும் கட்டிலில் வேதாகமம் இருக்கும். அவரைப் பார்க்க வருகின்ற யாருடைய கண்களிலும் முதலில் படுவது வேதாகமம்தான். அவருடைய வேதாகம பக்தி பலரால் மெச்சப்பட்டிருக்கிறது. ஆனால், ஒரு விஷயம் என்னவென்றால் எப்போதும் வேதாகமத்தோடு காணப்படுகின்ற அவர், எப்போதாவது ஒரு முறைதான் சில வசனங்கள் வாசிப்பார். போதுமான அளவு வாசிக்கப்படாத ஒரு வேதாகமத்தோடு எப்பொழுதும் ஒட்டிக்கொண்டிருப்பதில் என்ன பயன்?

சிலர் அதிகமாக வேதம் வாசிப்பார்கள். ஆனால், ஒருபோதும் எதையும் கற்றுக் கொள்வதில்லை. சிலர் வேதாகமச் சட்ட திட்டங்களை நன்றாக அறிந்து வைத்திருப்பார்கள். ஆனால், ஒருபோதும் அவைகளை தங்கள் வாழ்க்கையில் கடைப்பிடிக்க மாட்டார்கள். பரிசேயர்கள் அதிக பக்தியாளர்கள் போலச் செயல்பட்டு தங்கள் உடலில் வேத வசனங்கள் அடங்கிய காப்பு நாடாக்களைக் கட்டிக்கொள்வார்கள். ஆனால், வசன நியாயங்களின்படி வாழமாட்டார்கள்.

ஆகவே, வேதாகமத்தை வைத்திருப்பதோ, அதனை அதிகமாக வாசிப்பதோ, அல்லது வேத நியாயங்களை அதிகமாகத் தெரிந்து வைத்திருப்பதோ மட்டும், தேவனைப் பிரியப்படுத்தும் பக்தியாக மாறிவிடாது. வேதாகமம் படிக்கப்படவேண்டும். படிக்கப்பட்டது சிந்திக்கப்படவேண்டும். சிந்தித்தபோது வெளிப்பட்ட சத்தியங்களை வாழ்க்கையில் பின்பற்றவேண்டும். வாழ்க்கையோடு சம்பந்தப்படுத்தப்படாத எந்த ஒரு ஆன்மிகச் செயலும் பிரயோஜனமற்ற வீண் பக்திக் காட்சிகளே.

பலருக்கு வேத வார்த்தைகள்மேல் அளவு கடந்த பக்தியும் உயர்ந்த கருத்தும் உண்டு. ஆனால், அவைகளைப் பயன்படுத்தி பலன் பெறுவதில்லை. நண்பர் ஒருவர் புதிய கரன்சி நோட்டுகள் கிடைத்தால் அவைகளைச் செலவு செய்யாமல் பத்திரமாகப் பாதுகாத்து வைத்துக்கொள்வார். அதனால் என்ன பயன்? செலவு செய்யாமல் அழகு பார்ப்பதால் பணம் பலன் தருமா? அதுபோலவே வேத வார்த்தைகளைப் பயன்படுத்தாவிட்டால் விசேஷம் இல்லை.

தேவன் வேதாகமத்தை ஒரு காட்சிப் பொருளாகத் தரவில்லை. வேத சத்தியங்களை நம்முடைய அறிவைப் பெருகச் செய்வதற்காகவும் தரவில்லை. அவைகள் நம்முடைய இருதயத்தைப் பண்படுத்தி, பரிசுத்தப்படுத்தி, கர்த்தருக்கேற்றதாக மாற்றவேண்டும். அதுவே தேவனுடைய நோக்கம்.

சிந்தனைக்கு...

புத்தகங்களை படித்துக்கொண்டேயிருப்பதில் விசேஷமில்லை.
நீயே புத்தகமாக மாறு. பிறர் உன்னைப் படிக்கட்டும்.

அக்டோபர் 2

அவருடைய ஐக்கியத்தினாலே

பிலிப்பியர் 4:11-23

எவ்விடத்திலும், எல்லாவற்றிலும் திருப்தியாயிருக்கவும்...
பிலிப்பியர் 4:12

கிராமத்தைச் சேர்ந்த ஒருவர் கடுமையாக உழைத்து தன் மகனை உயர் கல்வி பயில வைத்து நல்ல உத்தியோகத்திற்கு வர வைத்தார். பட்டணத்தில் நல்ல நிலையிலிருந்த மகன் தன்னை வளர்த்து ஆளாக்கிய தந்தையை நல்ல சௌவுகரியமான சூழ் நிலையில் தன்னோடு தங்க வைக்க விரும்பி அவரை அழைத்தான். நல்ல வசதியான வீடு, ஏ.சி அறைகள், சௌவுகரியமான கார்கள், எதற்கும் குறைவில்லாத நிலையில் சில மாதங்கள் மகனோடு தங்கினார். ஆயினும், அவர் இந்த நகரச் சூழ்நிலைகளில் பிரியப்படாமல், தன்னுடைய கிராமத்திற்குத் திரும்பிப் போய் அந்த பழைய குடிசை வீட்டில் வாழ்வதையே தெரிந்து கொண்டார்.

ஆம், சௌகரியமும், மனரம்மியமும், சந்தோஷமும் நாம் எவ்வளவு வசதியான சூழ்நிலைகளிலும், சௌகரியமான இடங்களிலும் வாழ்கின்றோம் என்பதை பொறுத்தது அல்ல. நம்முடைய மனநிலையைப் பொறுத்தவையே அவை. சிலர் மிகுதியான பணம், செல்வம், நல்ல சௌகரியங்கள் ஆகியவற்றைத் தந்துதான் கர்த்தர் நம்மை மகிழப் பண்ண முடியும் என நினைக்கின்றனர். ஆனால் அது உண்மையல்ல. ஒரு நல்ல இருதயமும், தேவ ஐக்கியமும்தான் நம்முடைய மனமகிழ்ச்சியை நிர்ணயிக்கின்றன.

நாம் சாதாரண உணவு உண்டு, சாதாரண உடைகளை உடுத்தி, சாதாரணமான ஒரு வீட்டில் தங்கி, சாதாரண வசதிகளில் வாழ்ந்தாலும் கர்த்தர் நம்மோடு வாழ்கின்ற ஒரு நிச்சயமான அனுபவம் இருந்தால் அங்கே பெரிய சமாதானமும், சந்தோஷமும், திருப்தியும், நிறைவும் இருக்கும். அதே வேளையில் நமக்கு ஒரு நல்ல இருதயமும், நல்ல தேவ உறவும் இல்லாத நிலையில், நமக்கு அரண்மனை போன்ற வீடும், சாலொமோன் அனுபவித்தது போன்ற சௌகரியங்களும், ஏராளம் செல்வங்களும் இருந்தாலும், அவை முட்களுக்கு நடுவில் வாழ்வது போன்ற ஒரு வாழ்வாகவே இருக்கும்.

வளமான வாழ்க்கைச் சூழ்நிலைகள் எதுவும் இல்லாமல் சாதாரணமாக இருந்த ஒரு தேவ ஊழியரைப் பார்த்து ஒருவர் சகோதரரே, ஒருநாள் உங்களை கர்த்தர் நல்ல நிலையில் வைப்பார் என்றாராம். அதற்கு அந்த தேவ ஊழியர் பிரதர் கர்த்தர் என்னை ஏற்கெனவே அந்த நல்ல நிலையில் வைத்துவிட்டார் என்றாராம். கர்த்தரோடு தான் ஏற்கெனவே ஐக்கியமாகி அவருடைய அன்பையும், சமாதானத்தையும், நிறைவையும், சந்தோஷத்தையும் அனுபவித்துக் கொண்டிருந்ததால் அவ்விதம் கூறினார். கர்த்தரோடிருப்பதிலேதான் தேவ ஆசீர்வாதங்களையும், அவருடைய சந்தோஷங்களையும் காணுகின்ற ஒரு அனுபவத்தை நாம் தேட வேண்டும்.

சிந்தனைக்கு...

பசி அறியாதவன் உணவின் உண்மை சுவை அறியான்
துன்பம் அறியாதவன் இறைவனின் இன்பத்தை உணரான்.

அக்டோபர் 3

இதுவா ஆராதனை?

ஆமோஸ் 5:10-27

உன் பாட்டுகளின் இரைச்சலை என்னைவிட்டு அகற்று.
ஆமோஸ் 5:23

நாம் வாழ்க்கையை எப்படி வேண்டுமானாலும் வாழ்ந்து விட்டு, வாரத்திற்கு ஒரு முறை ஆலயம் அல்லது சபை என்ற ஓரிடத்தில் கூடிவந்து, தேவனுக்கு ஆராதனை செய்வது கடினமான விஷயமல்ல. அங்கே நாம் நன்றாகப் பாடலாம். நன்றாக ஆரவாரம் செய்யலாம். ஆனந்த நடனங்கள் ஆடலாம். அல்லேலூயா கோஷங்கள் போடலாம். அன்னிய பாஷை என்ற பெயரில சில சத்தங்களை எழுப்பலாம். வேண்டு மானால் இந்நாட்களில் பல இடங்களில் பரவியுள்ள புதிய வல்லமை கலாச்சாரத் தின்படி, சபையார் யாவரும் கீழே விழுந்து வல்லமை வல்லமை, அக்கினி அக்கினி என்று ஆரவாரம் செய்யலாம். இவை யாவற்றையும் செய்துவிட்டு நாம் பரிசுத்த ஆவியில் நிரம்பி வழிந்து அபிஷேக அனலோடு ஆண்டவரை ஆராதித்து விட்டோம் என்ற திருப்தியடையலாம். தேவனை மிகுதியாகக் கனப்படுத்திவிட்டோம் என்று நமக்கு நாமே சொல்லிக்கொண்டு வீடுகளுக்குத் திரும்பலாம்.

ஆனால், இந்தக் கனத்தையும், மரியாதையையும், ஆராதனையையும், பெற்றுக்கொள்ள வாரத்திற்கு ஒரு முறை இயேசு கிறிஸ்து அங்கே வர வேண்டும். ஆனால், மற்ற நேரங்களில் அவர் இந்த ஆராதனையாளர்களை வீட்டிலோ, வீதி யிலோ, உறவுகளின் நடுவிலோ, வியாபாரக் களத்திலோ, வேலை செய்யும் இடத்திலோ, வந்து பார்த்தால் அவர் மனவிசனப்பட நேரிடும். ஏனென்றால், அவர்கள் பேரளவில் எல்லா உலகத்தாரைப் போலவே இருப்பார்கள். இவர்களின் குணங்களையும், சுபாவங்களையும், நடத்தைகளையும், பணம், பொருள், ஆடம்பரம் ஆகிய விஷயங் களில் இவர்களின் மனநிலையைப் பார்த்தால் அங்கே இயேசு விரும்பும்படி எதுவும் இராது. சபைகூடி ஆராதிக்கும் சூழ்நிலைகளுக்கு அப்பால் எப்படி வேண்டு மானாலும் வாழ்ந்துவிட்டு, சபையில் மட்டும் இயேசுவுக்கு ஆராதனை ஆராதனை என்று கத்தினால், அந்த ஆராதனையை ஆண்டவர் விரும்புவாரோ?

சபைகளில் எப்படி ஆராதிக்கின்றோம் என்பதையல்ல. நாம் வாழும் பகுதி களில் எப்படிப்பட்ட வாழ்க்கை வாழ்கின்றோம் என்பதையே இயேசு பார்ப்பார். அங்கே அவருடைய போதனைகளின்படியான உயர்ந்ததோர் குணாதிசயம் சார்ந்த வாழ்க்கை இல்லையென்றால், அவர் நாம் நடத்தும் சபை ஆராதனைகளைப் புறக்கணிக்கவே செய்வார். பரிசுத்தாவியின் நடத்துதலின்படி வாழத் தெரியாதவர்கள், பரிசுத்தாவியினால் நிறைந்து ஆராதிப்பதாக எண்ணுவது முட்டாள்தனம். ஆவியில் நிறைந்து அழகான குணாதிசயங்களோடு வாழ வேண்டியதை உணராதவர்கள், ஆண்டவரே உம்மை ஆராதிக்கிறோம் ஆராதிக்கிறோம் என்று கூச்சலிடுவது, கர்த்தரைப் பரிகாசம் பண்ணுவதற்கு ஒப்பான செயலாகும்

சிந்தனைக்கு...

நல்லவர்களாய் இராதவர்களால் அல்ல.
நல்லவர்கள் போல நடிப்பவர்களால்தான் நாடு நாசமடைகிறது.

அக்டோபர் 4

ஆசிரியர்

தீத்து 2:1-15

உன்னை நற்கிரியைகளுக்கு மாதிரியாகக் காண்பித்து
தீத்து 2:7

வாய்வழிப் போதனைகளால் நமக்குக் கற்றுத் தருகின்றவர்கள் மட்டுமே ஆசிரியர்கள் அல்ல. நம்முடைய வாழ்க்கையில் நாம் பல்வேறு விதங்களில் பல்வேறு விஷயங்களில் கற்றுக்கொள்கின்றோம். தேவன் படைத்த படைப்புகள் யாவும் நமக்கு பல காரியங்களைக் கற்றுக் கொடுக்கின்றன. கல்விக் கூடங்களில் நாம் கற்கும் பாடங்களால் மட்டுமே நம்முடைய வாழ்விற்குத் தேவையான யாவற்றையும் கற்றுக்கொண்டுவிட முடியாது.

கல்வியறிவு மிகுந்த பலர் வாழ்க்கையிலோ வாழத் தெரியாதவர்களாகத் தோல்வியடைகின்றனர். அவர்கள் கற்றறிந்த கல்வியும், பெற்றுயர்ந்த பட்டங்களும் அவர்களை வாழ வைக்க வலிமையுள்ளவையல்ல, என்பது அநேகருடைய வாழ்க்கையில் நாம் கற்றுக்கொள்கின்ற பாடங்களாக உள்ளன நம்முடைய மூளையைக் கூர்மையாக்கும் கல்வி மட்டுமே நமக்குப் போதுமானதல்ல. நம்முடைய இருதயத்தைப் பக்குவப்படுத்தும் கல்வியும் அவசியம்.

தங்களுடைய மூளையால் கற்றுக்கொண்டவைகளைக் கொண்டு, இன்னொருவருடைய மூளைக்குப் பல விஷயங்களைக் கற்றுக்கொடுப்பது ஒரு சிறந்த பணி. தங்களுடைய இருதயங்களில் பெற்ற நல்ல அனுபவங்களைக் கொண்டு இன்னொரு இருதயத்தில் நல்ல அனுபவங்களை உருவாக்குதலும் மெச்சத்தக்க ஆசிரியப் பணியே.

இயேசு கிறிஸ்துவை ஒருவன் நல்ல ஒரு போதகராகக் கண்டான். அவர் வாயினால் போதித்ததோடு வாழ்ந்த விதத்தினாலும் போதித்தார். வாயின் வார்த்தைகளைக் கொண்டும், வாழ்ந்த விதத்தைக் கொண்டும் அவர் ஒரு கூட்டம் சீடர்களை உருவாக்கினார். பின்னாட்களில் ஆயிரக்கணக்கானோருடைய வாழ்க்கை பிரகாசிப்பதற்கு அவர்கள் கருவிகள் ஆனார்கள்.

இளவயதுகளில் மாணவர்கள் கல்வி பயிலுகின்றனர். அவர்களுடைய மூளையை மட்டும் பண்படுத்தாமல் இருதயங்களைப் பண்படுத்தவும் ஏதாவது செய்ய வேண்டும். ஆசிரியர்கள் பள்ளிக் கூடங்களிலும் கல்லூரிகளிலும் ஆன்மீகப் போதனை செய்திட வாய்ப்புகள் அதிகமாகப் பெறுவதில்லை. ஆனால், தங்களின் நல்ல வாழ்க்கை முறையினால் மாணவர்களின் மனதினிலே நல்ல தாக்கங்களை ஏற்படுத்தலாம். அவ்விதம் தாக்கங்கள் ஏற்பட வேண்டுமானால், முதலாவது போதனையாளர்கள் தேவனுடைய ஐக்கியத்தினாலும், நற் போதனைகளினாலும் இருதயத்தில் தாக்கம் பெற்றவர்களாக இருக்க வேண்டும்.

சிந்தனைக்கு...

உயர்ந்த கருத்துகளால் உலகத்தைக் கவருவதைவிட உயர்ந்த ஒரு வாழ்க்கையால் ஒருசிலரையாகிலும்கவருவதே சிறப்பு.

அக்டோபர் 5
மெல்லிய சத்தம்

1 இராஜாக்கள் 19:1-13

அக்கினிக்குப் பின் அமர்ந்த மெல்லிய சத்தம் உண்டாயிற்று.
1 இராஜாக்கள் 19:12

என்னுடைய அறையில் இருக்கும் சிறு கடிகாரத்தைக் குறித்து நான் அவ்வப் போது சிந்திப்பதுண்டு. பகல் வேளைகளில் அது அமைதியாக இருக்கின்றது. ஆனால், இரவு தூங்கச் சென்ற பின்பு அது டிக், டிக் என்ற சத்தத்தை தொனித்துக் கொண்டேயிருக்கிறது. உண்மையில் இரவில்தான் அது சத்தம் எழுப்ப ஆரம் பிக்கின்றதா? இல்லை. பகல் முழுவதும் அதிலிருந்து அதே ஓசை வந்து கொண் டிருக்கின்றது. ஆனால், பலவித இரைச்சல்களால், அந்த சத்தத்தைக் கேட்க முடியாமல் என் காதுகள் மந்தமாகி விடுகின்றன.

தேவனுடைய சத்தமும் அப்படியே. அவருடைய சத்தம் எப்பொழுதும் தொனித்துக் கொண்டுதானிருக்கிறது. ஆனால், பலவிதமான உலக சத்தங்கள் நம்முடைய இதயத்திற்குள் எப்பொழுதும் இரைச்சலை எழுப்பிக்கொண்டிருப்பதால் அவருடைய மெல்லிய சத்தத்தை கேட்க முடியவில்லை. நம்முடைய இதயம் பணம், பொருள், சம்பந்தப்பட்ட சிந்தனைகளினாலும், உலகக் கவர்ச்சிகளி னாலும், உலகத்தோடிசைந்த வாழ்க்கைப் போக்குகளினாலும், அதிகமான மனித ஐக்கிய ஈடுபாடுகளினாலும் நிறைந்திருக்கும்போது, ஒரு பெரிய இரைச்சல் இதயத்திற்குள் ஒரு அமைதியற்ற சூழ்நிலையை ஏற்படுத்திக்கொண்டேயிருக்கும். அங்கே கர்த்தரின் சத்தம் கேட்கப்பட வாய்ப்பே இல்லை.

கர்த்தரின் சத்தத்தைக் கேட்க வேண்டும் என்ற தாகத்தோடு உலகம் சார்ந்த இரைச்சல்களை விட்டு நம்முடைய இதயத்தை விலக்கிக்கொண்டு வர நாம் விரும்பினால்தான், கர்த்தர் தமது சத்தத்தை நமக்குள் கேட்கும்படி செய்ய முடியும். கர்த்தரின் சமுகத்தையும், அவருடைய ஐக்கியத்தையும் முக்கியமாக எண்ணி அதற்காக நம்முடைய வாழ்க்கையை ஒழுங்கு செய்துகொள்ளவும், கணிசமான நேரங்களை கர்த்தருடைய சமுகத்திற்காக செலவிடவும் முன்வரும்போது, கர்த்தர் நம்மோடு பேசுவதை நன்கு உணரமுடியும்.

பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொண்டதாகக் கூறுகின்ற பலர்கூட, தேவ னுடைய சத்தம் கேட்கும் அனுபவம் இல்லாமலிருக்கின்றனர். சில நேரங்களில் தங்களுடைய மனதில் தோன்றிய சில உணர்வுகளையும் சிந்தனைகளையுமே தேவ சத்தம் என்று எண்ணிவிடுகிறார்கள். தேவ உறவை நாம் நமக்குள் அனுபவிப் பதற்காகவே பரிசுத்த ஆவி அருளப்பட்டுள்ளது. அந்த பரிசுத்த ஆவியின் மூலம் தேவன் நம்முடைய ஆவியில் அவருடைய சத்தத்தைத் தொனிக்கச் செய்கிறார். உண்மையாகப் பரிசுத்த ஆவியைப் பெற்றவர்கள் தங்களுடைய ஆவியில் தேவன் பேசுவதை அடையாளம் கண்டு கொள்ள முடியும்.

சிந்தனைக்கு...

இறைச் சத்தத்திற்கு இணங்காத இதயத்திற்கு இறைச்சத்தம் ஒருபோதும் தெரிவதில்லை.

அக்டோபர் 6

நண்பர்கள் யார்?

லூக்கா 16:1-13

அநீதியான உலகப்பொருளால் சிநேகிதரைச் சம்பாதியுங்கள். - லூக்கா 16:9

ஒருவர் தன்னுடைய நண்பர்கள் சிலருடைய விபரங்களைக் குறித்து பேசிக் கொண்டிருந்தார். அவர்கள் ஒவ்வொருவரும் அவருக்கு ஏதாவது ஒரு விதத்தில் உதவி செய்தவர்கள். கடன் கொடுத்து உதவியவர்கள், கைமாற்று தந்து உதவி யவர்கள், ஆபத்தில் உதவியவர்கள் என எல்லோரும் அவருக்கு ஏதாவது செய்திருக்கின்றார்கள். இவர்களைத் தவிர்த்து அவருக்கு வேறு நண்பர்கள் இல்லை. அவருடைய நண்பர்கள் யாவரும் அவருக்குக் கொடுத்தவர்கள். இவர் யாருக்காவது எதையாவது கொடுத்து நண்பர்களைச் சம்பாதிக்கவில்லை.

இவருடைய நட்பு சந்தர்ப்பவாதமானது. சுயநலம் சார்ந்தது. நமக்கு ஏதாவது உதவி செய்தவர்கள் மட்டுமே நமக்கு நண்பர்களாயிருப்பது விசேஷமானது அல்ல. நம்மிடமிருந்து ஏதாவது உதவி பெற்ற நண்பர்களும் நமக்கு வேண்டும். சிலர் எனக்கு யார் நாலணா கொடுத்து உதவியிருக்கின்றார்கள்? என்று கேட்பார்கள். சரியான கேள்விதான். ஆனால், இவர்களால் நாலணா உதவி பெற்றவர்களும் யாரும் இருக்கமாட்டார்கள்.

வாங்குவதைப் பார்க்கிலும் கொடுப்பது நல்லது என்ற கர்த்தருடைய வார்த்தை, பவுல் அப்போஸ்தலனுக்கு மிகவும் பிடித்த வார்த்தை. நம்மில் பலருக்குக் கொடுப்பதைவிட வாங்குவதே நல்லது என்ற வார்த்தைதான் பிடிக்கும். இது உலகத்தின் வார்த்தை. அநீதியான உலகப் பொருட்களைக் கொண்டு நண்பர்களைச் சம்பாதிக்க இயேசு ஆலோசனை கூறினார்.

சில பணக்காரர்கள் மரித்து எடுத்துச் செல்லப்படுவதைக் கவனித்திருக்கின்றேன். கல்லறை வரை சென்று வர பத்து பேர் இருக்கமாட்டார்கள். ஏனென்றால், வாழும் காலமெல்லாம் தனக்குள்ளதை தனக்காக மட்டுமே செலவழித்து, யாரையும் சம்பாதிக்காமல் போனவர்கள். அவர்களின் மரணம் கூட மற்றவர்களைத் துக்கப் படுத்தவில்லை. ஏனென்றால் அவர்கள் உயிரோடு வாழ்ந்த காலத்திலும் யாருக்கும் எதையும் செய்ய இயலாத பிணம் போலவே வாழ்ந்திருக்கின்றார்கள்.

பக்திமிக்க கிறிஸ்தவர்கள் பலர்கூட காணிக்கை கொடுத்து ஆசீர்வாதம் பெறப் பழகியுள்ளனர். ஆனால், பிறருக்கு நன்மை செய்து பலன் பெறும் விசுவாசப் பழக்கம் அவர்களுக்கில்லை. "கொடுங்கள் அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப் படும்" என்றார் இயேசு. பிறருக்குக் கொடுக்க அறிந்தவர்கள் கர்த்தரிடம் பெற்றுக் கொள்ளவும் அறிந்தவர்களே. காணிக்கை கொடுப்பது சம்பந்தமாகப் பேசியிருப் பதைவிட, பிறருக்குக் கொடுப்பது தொடர்பாக வேதம் அதிகமாகப் பேசுகின்றது.

சிந்தனைக்கு...

வீட்டுக்கு ஒரு மரம் நட்டு பயன்பெறு. நாட்டுக்கு ஒரு மரமாய் நின்று நாலுபேருக்கு நிழல்கொடு.

அக்டோபர் 7
வாழ்கின்றீர்களா?

யோவான் 14:1-21

நீ எல்லாவற்றிலும் வாழ்ந்து சுகமாயிருக்கும்படி...
3 யோவான் 2

பொதுவான விஷயங்களை விவாதிக்கின்ற ஒரு கூட்டத்தில் நீங்கள் எதுவரை வாழவிரும்புகின்றீர்கள்? என்ற கேள்வி கேட்கப்பட்டது. சிலர் நூறு வயது என்றனர். சிலர் எண்பது வயது வரை என்றனர். சிலர் எழுபது வயது வரை என்றனர். சிலர் அதிகமாக வாழ்ந்து என்ன சாதிக்கப் போகிறோம். அறுபது வயதுவரை வாழ்ந்தால் போதும் என்றனர். ஆனால், அங்கே இருந்த ஒருவர் நான் சாகிறவரை வாழ விரும்புகின்றேன் என்றார். அவர் சொன்னது முதலில் சிலருக்கு விளங்கவில்லை. ஆனால், பின்னர் புரிந்து கொண்டனர்..

உங்களுக்கு இது புரிந்துவிட்டதா? ஆம். சாகிற வரை வாழ்கின்றவர்கள் வெகுசிலர்தான். ஏனென்றால் வாழ்வது என்பது வெறும் உயிரோடிருத்தல் அல்ல. உயிரோடிருக்கின்ற எல்லோரும் வாழ்ந்துகொண்டிருக்கவில்லை. சிலர் வாழ்க்கையை சுமந்து கொண்டிருக்கின்றார்கள். சிலர் வாழ்க்கையை சகித்துக் கொண்டிருக்கின்றனர். சிலர் வாழ்க்கையைத் தாக்குபிடித்துக் கொண்டிருக் கின்றனர். வாழ்வை வாழ்கின்றவர்கள் வெகுசிலரே. எனவேதான் சிலர், ஏன்தான் வாழ்கின்றேனோ என்றும், சிலர், சீக்கிரம் போய் சேர்ந்தால் சரிதான் என்றும், பேசுகின்றனர்.

சிலர் பணம், பொருள், கல்வி, அந்தஸ்து என்று நினைத்ததெல்லாம் சாதித்து விட்டால் வாழ்வை அனுபவிக்கலாம் என எண்ணி சாதிக்கின்றனர். ஆயினும், அவைகள் அவர்களுக்கு வாழ்வை அனுபவிக்கச் செய்யவில்லை. எனவேதான் சாலாமோன் ராஜா சகல நிலைகளிலும் செழிப்புடன் வாழ்ந்தும், மாயை மாயை, என்று புலம்பியதோடு, இந்த வாழ்வை வெறுத்தேன் என்றும் கூறினான்.

தேவன் மனிதனுக்குத் தந்த வாழ்வை தேவனோடு இணைந்த உறவின் மூலமாகத்தான், அர்த்தமுடையதாகவும் ஆசீர்வாதமானதாகவும் மாற்ற முடியும். அப்போஸ்தலனாகிய பவுலும் பேதுருவும் தங்களின் மரணநாள் நெருங்குவதை முன்னரே அறிந்தபோதிலும், அவர்கள் பதட்டம் இன்றியும் தொடர்ந்து நல்ல தெளிவோடும், தங்களின் நாட்களை பயன்படுத்தினார்கள். ஏனென்றால், அவர்கள் சாகும்வரை வாழ்வை அர்த்தமுடையதாக வாழும் விதமாக கர்த்தராகிய இயேசுவோடு ஐக்கியமாயிருந்தார்கள்.

இயேசு அற்புதம் செய்கிறார், அற்புதம் செய்கிறார் என்பதைவிட அவர் நம்மை வாழ வைக்கின்றார் என்பதே மிகப் பெரிய உண்மை. அவர் நானே ஜீவனாயிருக்கின்றேன் என்றார். நாம் வாழ்வை அனுபவிக்க வேண்டிய விதமாக அனுபவிக்கவும், அதனை ஆசீர்வாதமாக வாழ வேண்டிய விதமாகவும் வாழ்ந்திடவும், நமக்குத் தேவையெல்லாம் இயேசுவின் திவ்ய உறவே.

சிந்தனைக்கு...

இறைவனுடைய காரியங்கள்மேல் உன் கவனம் சரியாகயிருந்தால் உன் தேவைகள்மேல் அவருடைய கவனம்அதிகமாயிருக்கும்.

அக்டோபர் 8
பணமா ? இயேசுவா ?

ரோமர் 8:28-39

கிறிஸ்துவின் அன்பை விட்டு நம்மைப் பிரிப்பவன் யார்?
ரோமர் 8:36

நகர சபை வார்டு ஒன்றில் தேர்தல் நடந்தது. நல்லவர் என்று பலரால் அறியப்பட்ட ஒருவரும் போட்டியிட்டார். பெரிய பணக்காரர் ஒருவரும் போட்டியிட்டார். தேர்தல் பிரச்சாரம் நடந்த போது மக்கள் பெரும்பான்மையினர் நல்லவர் பக்கமே நின்றனர். பணக்காரர் டெபாசிட் இழப்பார் என்று கூறும் அளவிற்கு நல்லவருக்கு நல்ல ஆதரவு இருந்தது. ஆனால், நல்லவர்தான் டெபாசிட் இழந்தார். பணக்காரரின் பணத்திற்காக ஜனங்கள் நல்லவரை டெபாசிட் இழக்கச் செய்து விட்டார்கள்.

பெரும்பாலான பக்தியாளர்களும் இப்படியே, அவர்கள் இயேசுவை நல்லவர் வல்லவர் என்பார்கள். இயேசுவுக்காக இன்னுயிர் இழக்கவும் தயார் என்பார்கள். பணம் பொருள் யாவும் குப்பை என்பார்கள். யார் வேண்டும் நாதா நீரல்லவோ என்பார்கள். ஆனால், நடைமுறை வாழ்க்கையிலோ பணத்தின் பக்கமே நிற்பார்கள். இயேசுவா? பணமா? என்று வரும் போது இறுதியில் பணமே அவர்களுக்கு முக்கிய மாகிவிடும். பணத்திற்காகப் பொய் சொல்லவும், பணத்திற்காகக் குறுக்குவழி நாடுவதும் அவர்களுக்கு எளிதாக இயலும். பணம் சம்பாதிப்பதற்கும், சுய ஆதாயம் அடைவதற்கும் ஆன்மீகம் தடையாகயிருந்தால் அந்தத் தடையை அகற்றவே முன்னுரிமை தருவார்கள்.

பணமும் பொருளும் எளிதாக நம்மை ஈர்க்கின்றதா? பணத்திற்காக, ஆதாயங் களுக்காக இயேசுவின் சத்தியங்களை விட்டு விலகுவது நமக்கு எளிதாயிருக் கின்றதா? அப்படியானால் நாம் வாயினால் இயேசுவை விரும்பிப் பாடினாலும் இருதயத்தில் அவரைப் பெறவில்லை என்பதே பொருள். இயேசுவின் அன்பையும், ஐக்கியத்தையும் இருதயத்தில் ருசிக்காததின் விளைவாகவே பணம், பொருள், புகழ், அந்தஸ்து, ஆடம்பரம் போன்றவை நம்மை எளிதாகச் சத்தியத்தை விட்டு விலகச் செய்ய முடிகிறது.

இறை அன்பை இதயத்தில் ருசிக்காதவர்களும், இறை உறவினை வாழ்வில் அனுபவித்துப் பழகாதவர்களும் பணத்தின் கவர்ச்சிக்கும், ஆடம்பரங்களின் ஈர்ப்புகளுக்கும், சமுதாய அந்தஸ்தின் இழுவைகளுக்கும் தப்பித்து விலகிப் போவது இயலாத காரியமே. அப்போஸ்தலனாகிய பவுல் கிறிஸ்துவின் அன் பினை வாழ்வில் அனுபவித்துப் பழகிய தேவ மனிதன். தேவனால் வருகின்ற மேன்மைகளை தனக்குள் பெற்று மகிழ்ந்தவன். எனவே, ஊழியத்தின் இறுதிக்காலம் வரை யாருடைய பொன்னையும், வெள்ளியையும் இச்சிக்கவில்லை. உலகத் திற்காக இயேசுவின் அன்பை விட்டு விலகவும் இல்லை.

சிந்தனைக்கு...

பணம் உனக்கு நம்பிக்கையைக் கொடுக்கும்,
அந்த நம்பிக்கை உனக்குத் தோல்வியைக் கொடுக்கும்.

அக்டோபர் 9

எது உண்மையான அடையாளம்?

1 யோவான் 2:1–21

அவர் நடந்தபடியே தானும் நடக்க வேண்டும்.
1 யோவான் 2:6

சாத்தானுக்கு அற்புத அடையாளங்களைச் செய்யும் வல்லமை உண்டு. சில நோய்களைக் குணமாக்கவும் அவனால் இயலும். எதிர்காலத்தில் நடக்கப்போகும் சில விஷயங்களை முன்னறிவிக்கவும் அவனால் முடியும். வேத வசனங்களைச் சாதுரியமாக எடுத்துப் பேசவும் அவனால் இயலும். வேதாகமத்தில் இதனை நாம் காண்கின்றோம். உலகத்தில் நடந்த, நடந்து கொண்டிருக்கின்ற பல நிகழ்வுகளும் இதனை உறுதி செய்கின்றன. ஆனால், அவனால் இயலாத ஒன்றுண்டு. வேத வசனங்களுக்கேற்றபடி செயல்பட அவனால் இயலாது. தெய்வீக சுபாவங்களை வெளிப்படுத்த அவனால் முடியாது.

சாத்தான் சில அற்புத அடையாளங்களை ஒரு மனிதன் மூலமாக நிகழ்த்தி, அவனுக்கு இயேசுவின் ஊழியன் போன்ற தோற்றத்தைக் கொடுத்து, அநேகரை வஞ்சிக்க முடியும். ஆனாலும், அந்த மனிதனை இயேசுவின் தரத்திற்கேற்ற உண்மையுடையவனாகவோ, நேர்மையுடையவனாகவோ, பரிசுத்தமானவனாகவோ அவனால் மாற்ற முடியாது. எனவேதான், தேவனுக்கேற்ற உண்மையும் உத்தமும் இல்லாத அநேகர், சில அற்புத அடையாளங்களைச் செய்து தேவ ஊழியர்களாக தங்களைக் காண்பிக்க முடிகின்றது. ஆனால், இது ஒரு சாத்தானின் வஞ்சனையே.

தேவ ஊழியர்கள் என்று அறியப்பட்ட பலர் வேதத்திற்கு முற்றிலும் முரணாக வாழ்ந்தாலும், அவர்களிடம் சில வல்லமையான காரியங்கள் காணப்பட்டால், அதை மட்டுமே அளவுகோலாக வைத்து அவர்களை நல்லவர்களாக ஏற்றுக் கொள்வார்கள். அவர் எப்படியிருந்தால் என்ன? அவர் வழியாக கர்த்தர் வல்லமை யான காரியங்களைச் செய்கின்றாரே என்று நியாயப்படுத்திக் கொள்வார்கள். ஆனால், பொய்யான ஊழியர்கள் தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் கூட வஞ்சிக்கப்படுகின்ற அளவிற்கு பெரிய அற்புதங்களைச் செய்ய முடியும் என்றார் இயேசு கிறிஸ்து.

எனவே, ஒரு ஊழியரை அற்புத அடையாளங்கள் என்ற அளவுகோலைக் கொண்டு கிறிஸ்துவின் ஊழியர் என்ற முடிவு செய்ய முடியாது. அவர் இயேசு கிறிஸ்துவைப் பின்பற்றும் அனுபவம் உள்ளவரா? அவர் இயேசுவின் வழிகளில் நடக்கின்றாரா? அவர் வேத வார்த்தைகளுக்கு இசைந்து வாழ்கின்றாரா? இந்தக் கேள்விகளின் அடிப்படையிலேயே அவர் கிறிஸ்துவின் ஊழியரா அல்லது கிறிஸ்துவின் ஊழியர் போன்ற வேடம் அணிந்த சாத்தானின் ஊழியரா என்பதைக் கண்டறிய முடியும். இயசேுவின் ஊழியருக்கான உண்மையான அடையாளம், இயேசுவின் பாதையில் அவர் நடப்பதுதான் என்பது சந்தேகமற்ற உண்மையாகும்.

சிந்தனைக்கு...

நற்குணங்களைவிட தேவ வல்லமையை ஒரு மனிதனிடம் வெளிப்படுத்தும் அடையாளம் வேறில்லை.

அக்டோபர் 10

பக்தியை அல்ல

தானியேல் 1:1–21

தன்னைத் தீட்டுப் படுத்தலாகாதென்று...
தானியேல் 1:8

சிலர் எங்கு சென்றாலும் தங்களின் பக்தியை வெளிப்படுத்த அதிக ஆர்வ மாயிருப்பார்கள். ஆனால், பக்தியை வெளிப்படுத்துவதும் தேவனை வெளிப் படுத்துவதும் ஒன்றல்ல. ஒரு மனிதன் தான் எதை நம்புகின்றான் என்பதை பிறர் அறியச் செய்வதில் அல்ல. அந்த நம்பிக்கை தனக்குள் எப்படிப்பட்ட விசேஷமான விளைவுகளை ஏற்படுத்தியிருக்கின்றது என்பதை பிறர் அறியச் செய்வதே சிறப்பானது.

அலுவலகத்தில் வேலைபார்த்த கிறிஸ்தவர் ஒருவர் தனக்குக் கொடுக்கப்பட்ட அலுவல்களைவிட தன்னுடைய பக்தியை பலர் அறியச் செய்வதற்கே அதிக ஆர்வம் காட்டுவார். பணி நேரங்களில் உடன் பணிபுரிகின்றவர்களிடம் கிறிஸ்தவம்தான் சரியானது என்று வாதாடிக் கொண்டிருப்பார். தன்னுடைய பணிகளைச் சரியாகச் செய்வதைவிட அந்த அலுவலகத்தில் பூஜை, வழிபாடு என ஏதாவது நடந்தால், அதனை விமர்சிப்பதற்கே அதிகக் கவனம் செலுத்துவார். அலுவலகத்திலிருந்து கொண்டே தன்னுடன் தொடர்புடைய கிறிஸ்தவ ஊழியர்களிடம் நீண்ட நேரம் ஊழியங்கள் தொடர்பாக உரையாடிக் கொண்டிருப்பார். இதுபோன்ற காரணங் களால் அவர் இடமாற்றம் செய்யப்பட நேர்ந்தது.

இது கர்த்தருக்காகச் செயல்பட்டதினால் ஏற்பட்ட ஒரு கஷ்டம் அல்ல. இது பக்தியை பண்புகள் சார்ந்து பக்குவமாக வெளிப்படுத்தத் தெரியாததினால் வந்தது. பணிபுரியும் இடத்தில் உண்மையுடனும், உத்தமத்துடனும், பொறுப்புடனும், சட்ட திட்டங்களை மதிக்கும் பண்புடனும் செயல்பட்டு நற்பெயர் பெற வேண்டும். அந்த நற்பெயர் நல்ல ஒரு கிறிஸ்தவ நம்பிக்கையின் பிரதிபலிப்பாக இருக்கும். அது தான் நம்முடைய கிறிஸ்தவ பக்தி நமக்குள் நம்மை எவ்வளவு நல்லவர்கள் ஆக்கி யிருக்கின்றது என்பதைக் காண்பிக்கும் வழி.

யோசேப்பின் பண்புநிலைகள் அவன் உண்மையானதோர் தேவ பக்தன் என்பதை பிறர் அறியச் செய்ய வழிவகுத்தது. அவன் தன்னுடைய மத நம்பிக்கையைக் குறித்து பெருமை பாராட்டிக் கொண்டிராமல், அந்த நம்பிக்கை தன்னை எப்படிப் பட்டவனாக வாழ வைக்கின்றது என்பதை பிறர் அறியச் செய்தான். தானியேல் பாபிலோன் அரண்மனையில் பணிபுரியும் வாய்ப்புக் கிடைத்த போது யேகோவா தேவன்தான் உண்மையான கடவுள் என்று வாதிட்டுக் கொண்டிருக்க வில்லை. ஆனால், தன்னுடைய உயர்கொள்கை சார்ந்த நிலைப்பாட்டின் மூலம், எல்லோரும் யேகோவா தேவன்தான் உண்மையான கடவுள் என்பதை உணர்வதற்கு வழி ஏற்படுத்தினான்.

சிந்தனைக்கு...

சோதனைகளில் உன்னை நீ தெரிந்துகொள். அப்போது சாதனைகளுக்கு தேவன் உன்னைத் தெரிந்துகொள்வார்.

அக்டோபர் 11
விட்டுக் கொடுத்தலின் பலன்

ஆதியாகமம் 13:1-9

நீ வலது புறம் போனால் நான் இடது புறம் போகிறேன்
ஆதியாகமம் 13:9

அண்ணன் தம்பி இருவருக்கிடையே சொத்துப் பிரச்சினை வந்தது. தம்பி நியாயமில்லாமல் அண்ணனுக்குச் சேர வேண்டிய ஒரு நிலத்தைத் தான் பெற விரும்பினான். கோர்ட்டுக்குப் போயாவது அதைப் பெற்றுக்கொள்ள அவன் தீவிரித்தான். அண்ணனோ பிரச்சினை, வாக்குவாதம், போலீஸ், கோர்ட் என்று எதற்கும் வாய்ப்புக் கொடுக்காமல் தம்பி விரும்பியபடி விட்டுக் கொடுத்துவிட்டார். நியாயமில்லாமல் உரிமை கோரும் தம்பிக்கு ஏன் விட்டுக் கொடுக்க வேண்டும் என்று கேட்டனர். அதற்கு அந்த அண்ணன் என் தம்பிக்கு எது முக்கியமாகத் தெரிந்ததோ, அதற்காக அவன் விடாப்பிடித்தனம் காண்பித்தான். எனக்கு எது முக்கியமாகத் தெரிந்ததோ அதற்காக நான் விடாப் பிடித்தனம் காண்பித்தேன். ஒரு துண்டு நிலத்தை விட எனக்கு அமைதியும், ஐக்கியமும்தான் அதிகப் பிரியம் என்றான்.

விட்டுக் கொடுப்பதாலும், உரிமைகோருவதில் விடாப் பிடித்தனம் காண் பிக்காமல் போவதாலும் நமக்கு சில நஷ்டங்கள் ஏற்படலாம். பொருளாதார ரீதியான நஷ்டத்தை விட, உணர்வு ரீதியாகச் சில விஷயங்கள் நமக்கு அதிகமான மனக் காயத்தைத் தரும். அநியாயம், முறைகேடு, வலிமை காட்டிச் சாதித்தல், மனிதாப மின்மை, உரிமைகள் வன்முறைத்தனமாக மறுக்கப்படுதல் போன்றவற்றைக் காணநேரிடும் போது மனக் கொதிப்புகள் இயற்கையானவை.

ஆயினும், பணத்தை விட, நிலத்தைவிட, சாதித்துக் காட்டுவதைவிட, நம்மை யார் என்று காண்பிப்பதை விட, அமைதி, பொறுமை, பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைத்தல் ஆகியவை அதிக மதிப்பிற்குரியவைகள். அமைதியை இழந்து சாதிப்பதைவிட, சாதிக்கும் வாய்ப்பை இழந்து அமைதியைத் தக்க வைப்பதே அதிக விலை மதிப்புள்ளது.

ஆபிரகாம் லோத்துவுக்கு விட்டுக் கொடுத்துப் போக வேண்டிய அவசியம் இல்லை. ஆனால், ஆபிரகாம் லோத்துவின் பொருளாதார சிந்தைமிக்க மனதைப் புரிந்து கொண்டு விட்டுக் கொடுத்தான். லோத்துவுக்குக் கிடைத்தது குற்ற உணர்வோடு சேர்ந்த சொத்துக்கள். ஆபிரகாமுக்குக் கிடைத்ததோ அமைதி. எதையும் நினைத்து வருந்தத் தேவையில்லை. சொத்தைவிட அமைதியும், அன்பும், ஐக்கியமும் அதிக விலையுள்ளது என்பதை உணர்ந்த ஆபிரகாம் எளிதாக விட்டுக் கொடுத்தான்.

இன்று அமைதியை இழக்காதிருப்பதற்காக விட்டுக் கொடுத்து இழந்தால், அதற்கொரு பிரதி நன்மை பின்னாளில் தேவனால் வராமல் போவதில்லை. ஆபிரகாம் இழந்த பின் ஏராளம் பெற்றான்.

சிந்தனைக்கு...

தவறான குணங்களை நிரந்தரமாகக் கொண்டவன் காணும் அமைதியும் ஆறுதலும், தற்காலிகமானவையே.

அக்டோபர் 12

யார் யூதாஸ்?

தீத்து 1:5-16

கிரியைகளினாலோ அவரை மறுதலிக்கிறார்கள்...
தீத்து 1:16

குடிப்பழக்கத்தினை ஒழிப்பதற்காகப் பாடுபடும் சங்கம் ஒன்று, மது அருந்தும் பழக்கத்தின் தீமையான விளைவுகளை விளக்கி, விழிப்புணர்வுப் பிரச்சாரம் செய்கின்றது. அந்த சங்கத்தின் முக்கியமான கூட்டம் ஒன்றிற்கு வந்த சிலர், மது அருந்தித் தள்ளாடித் தள்ளாடி வந்தால் அது எப்படியிருக்கும்? அவர்கள்தான் அந்த சங்கத்தின் யூதாசுகள். அவர்களின் முரண்பட்ட செயல்பாடுகள், அந்த சங்கத்திற்கு அவமானத்தையும் அவகீர்த்தியையும் கொண்டுவரும். அவர்களின் கொள்கை சாராத நடத்தைகளால், அந்த சங்கம் தூஷிக்கப்படுவது இயற்கை.

கிறிஸ்தவம் ஒரு அதி உன்னத மகிமையான மார்க்கம். கிறிஸ்தவம் மனிதனை மாற்றியமைத்து மகிமை விளங்கச் செய்யும் வல்லமையுள்ளது. கிறிஸ்தவம் பரிசுத்தமான வாழ்க்கை என்ற உயர்ந்த அடையாளத்தை மனிதனுக்குக் கொடுக்கின்றது. கிறிஸ்தவம் மனிதனுடைய பாவம் செய்யும் சுபாவத்தை மாற்றுவதோடு, செயல்களாலும், சுபாவங்களாலும், சிந்தனைகளாலும் பரிசுத்தத்தைப் பிரிதிபலிக்கச் செய்கின்றது.

ஆனால், இத்தனை மகத்தான ஒரு மகிமையான மார்க்கம், இன்று எத்தனை பேரால் அதிக மேன்மையாக எண்ணப்படுகின்றது? கிறிஸ்தவ மார்க்கம் மிக விசேஷமானது என்றும், மிகவும் அவசியமானது என்றும் எத்தனை பேரால் எண்ண முடிகிறது. பிரசங்க மேடைகள் வாயிலாகவும், தொலைக்காட்சிப் பிரச்சாரங்கள் வழியாகவும் அதி உன்னத மார்க்கமாக விவரிக்கப்படுகின்ற கிறிஸ்தவத்தை, எத்தனை பேரால் சரி என்று ஆமோதிக்க முடிகிறது?

கிறிஸ்தவர்கள் பேதுருக்களாக வாழாமல் யூதாசுகளாக வாழ்வதால் கிறிஸ்து அவமதிக்கப்படுகிறார். பவுலைப் போல பிரமாதமாகப் பிரசங்கம் செய்துவிட்டு யூதாசைப் போல அற்ப மேன்மைகளுக்காகவும், சுய ஆசைகளுக்காகவும் இயேசுவைக் காட்டிக் கொடுக்கின்றவர்கள், இன்றைய கிறிஸ்தவ உலகத்தில் ஏராளம் ஏராளம். எங்கள் தெய்வமே உண்மையான தெய்வம். எங்கள் வேதமே சத்திய வேதம் என்ற வாதம் சரியானதுதான். ஆனால், அந்த தெய்வத்தின் மகிமையைப் பாடிக்கொண்டே, எல்லோரையும் போல வாழ்ந்தால் யார் கிறிஸ்தவத்தை மதிப்பார்கள்? ஆம், மனந்திரும்புதலைக் காணாதவர்களும், இயேசுவின் ஐக்கியத்தில் வாழாதவர்களும், பரிசுத்த வாஞ்சை இல்லாதவர்களும் கிறிஸ்தவத்தைக் காட்டிக்கொடுக்கத்தான் முடியும். நம்மால் கிறிஸ்தவம் மதிக்கப்படுகிறதா, அவமதிக்கப்படுகிறதா? யோசிப்போம்.

சிந்தனைக்கு...

தன்னை அதிகமாக மதிப்பிடுகிறவன் வீழ்ச்சிக்கு அருகிலிருக்கின்றான், குறைத்து மதிப்பிடுகிறவனோ எழுச்சிக்குத் தூரமாயிருக்கிறான்.

அக்டோபர் 13

கரடு முரடான சாலை

உபாகமம் 1:26-38

நடந்து வந்த வழிகள் எல்லாவற்றிலும்
உபாகமம் 1:31

கரடுமுரடான ஒரு சாலையில் காரில் சென்றனர். ஒருவர் கண்ணாடியை திறந்து வைத்துக்கொண்டு சாலையின் மேடு பள்ளங்களையும் கரடுமுரடுகளையும் பார்த்து சே.. சே.. என்ன மோசமான சாலை இது. இந்தச் சாலையில் வந்திருக்கவே கூடாது. முதுகெல்லாம் வீணாய் போயிடும் என்று புலம்பிக்கொண்டே வந்தார். ஆனால், சாலை கரடு முரடாயிருந்தாலும் அந்தக் கார் மிகவும் சௌகரியமான நல்ல கார். எனவே, மேடுபள்ளங்கள் வழியாகச் சென்ற போதிலும் உடலை அது பாதிக்கவேயில்லை. ஆனால், அந்த நபரோ சௌகரியமாகப் பயணம் செய்வதை உணராமல் கண்ணாடி வழியாகச் சாலையையே கவனித்துக் கொண்டு சலித்துக் கொண்டார்.

சிலருடைய வாழ்க்கைப் பயணத்திலும் இப்படித்தான். அவர்கள் தங்களுக்கு முன்பாக உள்ள பிரச்சினைகள், நெருக்கடிகள், குறைவுகள், சரீரப் பலவீனங்கள் போன்றவற்றையே கவனித்துக் கவனித்து என்ன வாழ்க்கை இது? என்ன வாழ்க்கை இது என்று புலம்பித் தீர்ப்பார்கள். ஆனால், இவைகளின் நடுவிலும் தேவன் அவர்களை நடத்திச் செல்வதையும், தடைகளைக் கடந்து செல்ல உதவி செய்வதையும், ஏதோ ஒரு விதத்தில் தேவ கிருபை தாங்குவதையும் உணராமல் போவார்கள்.

இஸ்ரவேல் ஜனங்கள் கானானை நோக்கி நடத்தப்பட்டது பயங்கரமான ஒரு கானக வழியாகத்தான். ஆனாலும், எதுவும் குறைவுபடாதபடி தேவன் பார்த்துக் கொண்டார். தடைகளைக் கடந்து போக வைத்தார். எதிரிகளை எளிதாக வீழ்ச்சியடையச் செய்தார். அக்கினி ஸ்தம்பமும் மேக ஸ்தம்பமும் உடன் வரச் செய்தார். மோசேயின் மூலமாக அவர் நம்பிக்கையூட்டிக் கொண்டிருந்தார். ஆயினும், அவர்கள் தேவனையோ தேவன் நடத்தி வருகின்ற விதங்களையோ கவனித்து மன உற்சாகத்தோடு முன்னோக்கிச் செல்லவில்லை. அதற்குப் பதிலாக மோசமான சூழ்நிலைகளையும் எதிர்மறையான நிலைமைகளையும், குறைவுகளையும் கவனித்துக்கொண்டு முறுமுறுத்தார்கள். எனவே, இளைப்பாறுதல் அருளும் தேவன் அவர்களுக்காக பல நன்மைகளைச் செய்திருந்தும் அவர்களோ சமாதானமின்றி மனக் கலக்கத்தோடும் சலிப்போடும் பயணம் செய்தனர்.

உங்கள் சூழ்நிலைகளையல்ல. தேவனைப் பாருங்கள். நீங்கள் சந்திக்க நேரிடும் தடைகளை அல்ல, தேவ கிருபையை நோக்குங்கள். உங்களிடம் இல்லாதவைகளையல்ல, உங்களோடிருக்கும் தேவனைப் பார்த்து நம்பிக்கையோடிருங்கள்.

சிந்தனைக்கு...

துன்பங்களின் துணையுடன்தான் இன்பங்கள் வாழ்க்கையில் பெருகுகின்றன.

அக்டோபர் 14

பலன் தராத நல்ல பழக்கம்

மத்தேயு 22:1-14

நீ கலியாண வஸ்திரமில்லாதவனாய் இங்கே எப்படி.
மத்தேயு 22:12

ஒரு காலகட்டத்தில் தினமும் தூங்கச் செல்லும் முன்பு மறுநாள் காலை எழும்புவதற்கான நேரம் குறித்து அலாரம் வைப்பது என் வழக்கமாயிருந்தது. ஆனால், அலாரம் அடிக்கும் போது உடனே எழும்பாமல், அலாரத்தின் ஓசையை நிறுத்திவிட்டு, மீண்டும் தூங்கி விடுவேன். ஆயினும், அலாரம் வைக்கும் பழக்கத்தை நிறுத்தவே இல்லை. அது அனிச்சைச் செயலாக மாறிவிட்டது. அதனால் எந்தப் பலனும் இல்லை.

சில நேரங்களில் சில நல்ல பழக்கங்கள் நம்மிடம் விலகாமல் ஒட்டிவிடுகிறது. ஆனாலும், அதனால் எந்தப் பயனும் இல்லை. சிலர் வாரம் தவறாமல் ஆலயங்களுக்குச் செல்வார்கள். நல்ல பழக்கம்தான். ஆனால், ஒரு போதும் தேவனை தனிப்பட்ட வாழ்க்கையில் அறிவதில்லை. சிலர் ஆராதனை என்றால் அவ்வளவு பிரியமாக பங்கு பெறுவார்கள். ஆனால், ஒருபோதும் தங்கள் குணங்களாலும், நற்பண்புகளினாலும் தேவனை ஆராதிப்பதில்லை. சிலர் எங்கே கிறிஸ்தவக் கூட்டம் எங்கே ஜெபக்கூட்டம் என ஆவலாய் தவறாமல் போவார்கள். ஆனால், எத்தனை கூட்டங்கள் சென்று எத்தனை பிரசங்கங்கள் கேட்டாலும் மனந்திரும்புதலின் அனுபவத்திற்கு ஒருபோதும் வருவதில்லை. சிலர் நடக்க முடியாமல் படுக்கையில் கிடந்தால்கூட திருவிருந்தில் பங்கு பெறாமல் அவர்களால் இருக்கவே முடியாது. ஆனால், தங்களுக்கும் கிறிஸ்துவுக்கும் ஆத்மீக ஐக்கியம் உண்டா என்று ஒரு போதும் சிந்திக்கமாட்டார்கள்.

நான் எழுதி வெளியிடும் தியான நூலை ஒருநாள்கூட தவறாமல் படித்து, அதிலுள்ள சத்தியங்களுக்காக மனந்திறந்து பாராட்டுகிற பலருண்டு. ஆயினும், அவர்களில் சிலர் அதிலிருந்து படித்து உணர்ந்த எந்த சத்தியத்தின்படியும் வாழ முன்வருவதில்லை. ஆம். இவர்களால் அலாரம் வைக்காமல் இருக்க முடியாது. ஆனால், அடிக்கும் போது எழும்பவும் அவர்களால் முடியாது. இது ஒரு பரிதாபமான அனுபவம் அல்லவா?

அநேகர் நாம் மனந்திரும்பாவிட்டாலும், பரிசுத்தமாக வாழாவிட்டாலும் நற்குணங்களை வெளிப்படுத்தாவிட்டாலும் கோயிலுக்குப் போவதும், ஆராதனை செய்வதும், ஆசீர்வாதமாகவேயிருக்கும் என எண்ணுகின்றனர். ஆனால் அது ஒரு தவறான எண்ணம். நாம் மனந்திரும்பாமலும், தேவனுக்குப் பிரியமாக வாழாமலும், கோயிலுக்குப் போவதும், ஆராதனை செய்வதும், காணிக்கை கொடுப்பதும் தேவனுடைய பார்வையில் பாவமான செயல்களேயன்றி, பரிசுத்தமான செயல்கள் அல்ல.

சிந்தனைக்கு...

பரிசுத்தம் என்ற தகுதியைக் குறித்துக் கவலையின்றி பரிசுத்தராகிய தேவனுக்குப் பணி செய்வதும் ஒரு பாவமே.

அக்டோபர் 15

தாழ்மையிலும் பெருமை

கொரிந்தியர் 12:1-10

மேன்மை பாராட்டுகிறது எனக்குத் தகுதியல்லவே...
11 கொரிந்தியர் 12:1

தேவ ஊழியர் ஒருவர் ஆடம்பரத்தை வெறுத்து தனக்கு வசதி நிலைகள் இருந்த போதிலும், சாதாரணமாக வேட்டி ஜிப்பாதான் அணிவார். காரில் போக வாய்ப்பிருந்தும் சைக்கிளில்தான் எங்கும் போவார். அறுசுவை உணவினை உண்ண வாய்ப்பிருந்தும் மிக எளிமையான உணவுகளையே உண்ணுவார். அவரை கூட்டங்களுக்கு அழைக்கின்றவர்கள் அவருக்காக நட்சத்திர ஓட்டலில் ரூம் போட ஆயத்தமாயிருந்தாலும், அவர் ஏதாவது ஒரு விசுவாசியின் சாதாரண வீட்டில்தான் தங்குவார். தாழ்மைக்கும் எளிமைக்கும் அவர் மாதிரியாக இருக்க விரும்புவார்.

ஆனால், அவருடைய தாழ்மை நிலையை பிறர் கவனிக்கத் தவறும்போதும், அவருடைய எளிமையான வாழ்க்கையைப் பாராட்டத்தவறும்போதும் மிகவும் கோபமடைவார். ஆம், பெருமை என்பது ஆடம்பரத்தோற்றங்களுக்குப் பின்னால் மட்டுமல்ல. அது மிகுந்த தாழ்மைத் தோற்றங்களுக்குப் பின்னாலும் இருக்கும்.

இயேசு தேவ குமாரனாயிருந்தும் ஏழைக் குடும்பத்தில் தோன்றினார். எளிமை யான வாழ்க்கையை வாழ்ந்தார். தாழ்மைக்கு அடையாளமாகத் திகழ்ந்தார். ஆயினும், தம்முடைய தாழ்மையை அவர் பெரிதுபடுத்திப் பேசி பிறருடைய பாராட்டை ஒருபோதும் பெற விரும்பவில்லை. அப்போஸ்தலனாகிய பவுல் கல்வி கேள்வி களிலும் குடும்ப பின்னணியிலும், ஞானம் அறிவு நிலைகளிலும், தெய்வீக வெளிப்பாடுகளிலும் மிகுந்த மேன்மைக்குரியவனாயிருந்தான். ஆயினும், தாழ்மையும் எளிமையுமான வாழ்க்கையையே வாழ்ந்தான். அதே வேளையில், நான் யார் தெரியுமா, என் பின்னணி என்ன தெரியுமா என்று ஒருபோதும் பெருமை பாராட்ட விரும்பவில்லை.

பெருமை என்பது நம்மை வெளியரங்கமாக மற்றவர்கள் நடுவில் மரியாதையைப் பெறும் விதமாகக் காண்பிப்பது மட்டுமல்ல. நம்முடைய தாழ்மை நிலைகளுக்கு ஒரு விசேஷ மரியாதையை எதிர்பார்ப்பதும் ஒரு பெருமையின் வெளிப்பாடுதான். ஆடம்பரமாக வாழ்கின்றவர்களைவிட தங்களைப் பலவிதங் களில் எளிமையாக்கிக்கொண்ட பலரிடம், அன்பற்ற மன நிலைகளையும், நியாயந் தீர்க்கும் மனோபாவத்தையும், பிறரை ஏற்க விரும்பாத குணாதிசயத்தையும், தாங்கள் மட்டுமே சரியாக இருக்கின்றோம் என்ற அகம்பாவ உணர்வையும் கண்டு ஆச்சரியப்பட்டிருக்கின்றேன். அவர்களின் தாழ்மையும் எளிமையும் பாராட்டிற் குரியவைகளாகயிருந்தும், அவைகளையும் சுயமேன்மை தேடும் வழிகளாக மாற்றிக்கொண்டமை, அவர்களுக்கு நியாயமாக வரவேண்டிய நல்ல பலன்களை நஷ்டமாக்கிவிடுகிறது.

சிந்தனைக்கு...

மலருக்கு அதன் மணமே விளம்பரம். நல்ல மனிதனுக்கு அவன் குணமே விளம்பரம்.

அக்டோபர் 16
மதுபானமும் மதியீனமும்

எபேசியர் 5:8-21

துன்மார்க்கத்திற்கேதுவான மதுபானவெறி கொள்ளாமல்...
எபேசியர் 5:18

மதுபானத்தை அருந்திப் போதையில் இருக்கின்ற ஒருவனை, அவனுடைய சொந்த மனைவியால்கூட மதிக்க இயலாது. எவ்வளவோ படித்திருந்தாலும், எவ்வளவோ அந்தஸ்திலிருந்தாலும், மதுபானப் போதையில் ஒருவன் பேசும் போது, அவனுடைய பேச்சை ஒருவரும் மதிப்பதில்லை. மதுபானம் அருந்திவிட்டு ஒருவன் ஆயிரம்தான் அறநெறிகளைப் பேசினாலும், அந்த வார்த்தைகள் பிறருக்கு வெறும் உளறலே. வாயிலே மது வாசனை வீசும் போது தந்தை பேசும் அன்பு வார்த்தைகள் யாவும் பிள்ளைகளுக்கு வெறும் வார்த்தைகளே. மதுபானம் அருந்தும் பழக்க முடைய ஒருவர் தான் பிறரால் எவ்வளவு மதிக்கப்படுவோம் என்பதை அறிய விரும்பினால், இன்னொரு குடிகாரனைக் கவனிக்க வேண்டும். அவனுக்கு எவ்வளவு மரியாதை கிடைக்கிறது என்பதைப் பார்த்து அறிந்து கொள்ளலாம்.

கவலையை மறக்கக் குடிக்கின்றவர்களை மதுபானம் கவலைக்கிடமாக்கு கிறது. சந்தோஷத்தை உணரக் குடிக்கின்றவர்களை, மதுபானம் சஞ்சலத்திற்குள் தள்ளுகின்றது. நேரம் போகவில்லையே என்று குடிப்பவர்களை பின்னர் வாழ்க்கை நேரம் முழுவதையும் போதையால் நாசமாக்குகின்றது. ஆனால், மதுபானத் தினால் வருகின்ற தீமைகள் யாவற்றையும் அதனைக் குடிக்கின்றவர்களும் அறி வார்கள். ஆனாலும் ஏன் அதனை நாடுகின்றார்கள்?

அவர்களுக்குள் உண்மையான சந்தோஷம் இல்லை. அவர்களுக்குள் உண்மையான சமாதானம் இல்லை. சரியான வழியில் தன்னைச் சந்தோஷப்படுத்தும் வழி அவர்களுக்குத் தெரியவில்லை. தங்களைத் தாங்களே மதிமயங்க வைத்து நிஜங்களைப் பாராமலிருக்க அவர்கள் விரும்புகின்றனர். வாழ்வில் மனநிலையை மகிழ்ச்சிகரமாகவும், மனரம்மியமாகவும் வைத்துக்கொள்ள அவர்கள் அறியாததால், அவர்கள் போதையின் தயவை நாடுகின்றார்கள். தாகம் மிகுந்தவன் நல்ல தண்ணீரைக் காணாமல் அழுக்கான குட்டை நீரை அருந்தித் தன்னை நோயாளி யாக்கும் செயலாக அது மாறுகின்றது.

கர்த்தராகிய இயேசு தாகமாயிருக்கின்றவர்களே! என்னிடம் வாருங்கள் என்றார். அவர் அருளும் சமாதானமும், சந்தோஷமும், திருப்தியும், நிறைவும் மது பானத்தை அவசியமற்றதாக்குகிறது. அவருடைய அன்பின் ஐக்கியத்தைஅக மதில் பெற்றுக்கொண்டால், மனநிலைகளை மகிழ்ச்சியாக்க மதிகேடான வழி களைத் தேடவேண்டிய அவசியமேயில்லை. இதற்கு இந்த தியானநூலை எழுதிய நானே சாட்சியாயாயிருக்கிறேன்.

சிந்தனைக்கு...

வாழ்க்கை முழுவதும் கற்றுக்கொண்டேயிரு. ஆயினும் உன் வாழ்க்கையை பிறர் கற்றுக்கொள்ள ஏதாவது செய்.

அக்டோபர் 17

மகிமை வெளிப்பட்டால்

மத்தேயு 8:1-12

அவர் ஒளியிலிருக்கிறது போல நாமும் ஒளியிலே நடந்தால்...
1 யோவான் 1:7

நாம் யாவருமே தேவனுடைய மகிமையைக் காண அதிகமாக ஆசைப் படுவோம். தேவன் தம்முடைய பிரசன்னத்தை அதிகமாக வெளிப்படுத்தினால் நன்றாயிருக்குமே என நாம் எண்ணுவோம். ஆண்டவர் தம்மை நமக்கு அதிகமாக வெளிப்படுத்துவதை நாம் மிகவும் விரும்புவோம். ஆனால் அதிக மகிமை, அதிக பிரசன்னம், அதிக வெளிப்படுத்தல் ஆகியவை நிகழ்ந்தால் அது எப்படியிருக்கும்? அது தேவனுடைய வெளிச்சத்தை மிகுதியாக நம் வாழ்க்கையில் கொண்டுவரும், அப்படியானால் அங்கே என்ன நடக்கும்? சிலர் தேவனை அடிக்கடி தரிசிப்பதாகவும், தங்களோடு அவர் நேரடியாகப் பேசுவதாகவும் பெருமையாகக் கூறுவார்கள். ஆயினும், அவர்களின் வாழ்க்கையிலோ ஏராளம் தவறுகள் அவைகள் அவர்கள் தேவனை ஒரு போதும் தரிசித்தது இல்லை என்பதை தெளிவுபடுத்தும்.

தேவனுடைய வெளிச்சம் மிகுதியாகும்போது, அங்கே நம்முடைய சிறுசிறு தவறுகளும், குறைகளும் அதிகமதிகமாக வெளிப்படும். இதுவரை நாம் தவறு என நினைத்திரா பல காரியங்களை நாம் தவறு என உணரவேண்டிவரும். இதுவரை நமக்கு வெளிப்படாமல் இருந்த பல குறைவுகள் இப்போது நமக்கு வெளிப் படும். அப்போது அவைகளுக்காக அதிகமாக மனம் வருந்துதலும், மனந்திரும்புதலும், நம்மை சரி செய்துகொள்ள ஆயத்தப்படுதலும் அதிகமாக அவசியப்படும். ஆம், அதிக தேவ மகிமையும், அதிக தேவ ஐக்கியமும் அதிக பரிசுத்த வெளிச்சத்தை நமக்கு முன்பாக வீசி, அதிகமாக நம்மை அறிந்து கொள்ளும் தேவையை ஏற்படுத்தி, நம்மை அதிகமாக சுத்திகரித்துக்கொள்ள வேண்டிய அவசியத்தையே உருவாக்கும்.

பல்வேறு விதமான சோர்வான சூழ்நிலைகளுக்கு மத்தியில் ஏசாயா தீர்க்கதரிசி, தேவ மகிமையை அதிகமாகக் காண வாஞ்சித்திருப்பான்? ஆனால், தேவமகிமை அதிகமாக வெளிப்பட்டபோது என்ன நடந்தது? பரவசம் அல்ல. தான் இன்னும் பரிசுத்தமடைய வேண்டிய தேவையையே பய உணர்வோடு பார்க்க முடிந்தது. இஸ்ரவேல் மக்களின் குறை நிறைகளை தெளிவாகப் பார்த்து, அவர்களை எச்சரிக்கும் பணிக்கு அழைக்கப்பட்ட ஏசாயா முதலாவது தன்னைத் தேவ வெளிச் சத்தில் சரியாகப் பார்த்துச் சரிசெய்துகொள்ள வேண்டியது அவசியமாயிருந்தது. ஆம். அதிகத் தேவ மகிமை என்பது அதிகப் பரவசம், அதிக வல்லமை என மட்டுமே எண்ணக் கூடாது. அங்கே அதிகமாக நம்முடைய குறைநிலையை உணர்ந்து, சரிசெய்ய வேண்டிய ஒரு தேவை உண்டு என்பதை நாம் அறிய வேண்டும்.

சிந்தனைக்கு...

பிறருடைய தவறுகளையே கவனித்துக் கொண்டிருப்பவன் தான் தவறிப் போவதை தவிர்க்க இயலாது.

அக்டோபர் 18

யார் காரணம்?

1 சாமுவேல் 20:24-34

அப்பொழுது சவுல் யோனத்தான்மேல் கோபமுண்டவனாகி
1 சாமுவேல் 20:30

மேசையில் வைத்திருந்த பேனாவைக் காணவில்லை என்று கணவன் அங்குமிங்கும் தேடினான். எங்கும் கிடைக்கவில்லை. எரிச்சலடைந்த அவன் மேசையிலிருந்த பேனாவை எடுத்தது யார்? என்று கோபத்துடன் மனைவியை நோக்கிச் சத்தமிட்டான். மனைவி நான் எடுக்கவில்லை என்றாள். பேனாவை எடுத்தது யார் என்று பிள்ளைகளை நோக்கிக் கத்தினான். அவர்கள் ஒவ்வொருவரும் நான் எடுக்கவில்லை. நான் எடுக்கவில்லை என்று பதிலளித்தார்கள். சே.. இந்த வீட்டில் எந்தப் பொருளையும் வைத்து எடுக்கமுடியாது என்று கோபம் கோபமாகச் சத்தமிட்டான். ஆனால் , பேனாவை யாரும் எடுக்கவில்லை. அது அவனுடைய சட்டைப் பாக்கெட்டிலிருந்து முந்தின நாள் தொலைந்து போயிருக்கிறது.

சிலருடைய சந்தோஷம் காணாமல் போகிறது. சிலருடைய சமாதானம் காணாமல் போகிறது. சிலருடைய நல்ல பண்புகள் காணாமல் போகிறது. ஆனால், அவைகளுக்கு அவர்கள் காரணத்தைப் பிறரிடமே பார்க்கின்றார்கள். தங்களை விட்டு விலகிப்போன சமாதானத்திற்குப் பிறரையே குற்றவாளியாக்குகின்றார்கள். ஆனால், உண்மையில் அதற்கு அவர்களேதான் காரணம்.

தங்களின் தவறான மனநிலைகளினாலும், தவறான குணநிலைகளினாலும் பக்குவமற்ற இருதயத்தாலும் முரண்பாடுகளாலும் அவர்கள் அமைதியையும், ஆனந்தத்தையும் இழந்து விடுகின்றார்கள். ஆனால், பிறர்மேல் பழி போடுகின் றனர். சவுல் தனக்குள் கீழ்ப்படியாத ஒரு இருதயத்தை உடையவனாயிருந்தான். தேவ உறவை இழந்த அவன் எப்பொழுதும் எரிச்சலான மனநிலையுடன் அமைதியிழந்து வாழ்ந்தான். ஆனால், அவன் தாவீதையும் தன் மகனையும், ஆசாரியர்களையும், தன் மகளையும் எதிரிகள் போல எண்ணி எரிந்து விழுந்தான்.

நம்முடைய இருதயம் தேவ ஐக்கியத்தினால் பண்பட்ட இருதயமாக இருந்தால் பிறர் நம்மை எளிதாக கோபப்படுத்தவோ, எரிச்சலூட்டவோ, அமைதியிழக்கச் செய்யவோ முடியாது. நாம் நமக்குள் சாந்த குணத்தையும் பொறுமையையும், தாழ்மையையும், அன்பையும் கொண்டிராமல் வாழ்ந்தால், மற்றவர்கள் நம்மை அதி கமாகப் பாதிப்படையச் செய்வது போலிருக்கும். ஆனால், உண்மையில் காரணம் அவர்களல்ல. நாம்தான் காரணம். நம்மிடம் நற்குணங்களை வளர்க்காத பலவீன நிலமையை உணராமல், பிறரது தீயகுணங்களைக் கண்டு கொதிப்படைவதில் அர்த்தமில்லை. பிறருடைய தீயகுணங்களையே பார்த்துப் பார்த்துச் சோர்ந்து போகாமல், நாம் இன்னும் நற்குணங்களில் நல்ல வலிமை பெறப் பிரயாசப்படுவோம்.

சிந்தனைக்கு...

உன்னிடம் உள்ள குறையை இன்று நீ பார்க்காவிடில்,
உன்னிடம் இல்லாத குறையை ஊரார் விரைவில் பார்ப்பார்கள்.

அக்டோபர் 19

இனிமையும் தரமும்

1 தெசலோனிக்கேயர் 5:11-28

ஒருவருக்கொருவர் பக்திவிருத்தி உண்டாகும்படி செய்யுங்கள் ...
1 தெசலோனிக்கேயர் 5:11

சில உணவு வகைகள் நாவிற்குச் சுவையாயிருக்கும். எனவே, அதனை எவரும் அனுபவித்துச் சாப்பிடுவார்கள். ஆனால், நாவில் சுவைக்கின்ற அளவிற்கு அவை சரீரத்திற்கு ஏற்றதாயிருப்பதில்லை. சில உணவு வகைகள் சரீரத்திற்கு மிகவும் நல்லவை. ஆனால், நாவிற்கு அவை சுவையாயிருப்பதில்லை. எனவே அவற்றை நல்லவை என்று எண்ணிச் சாப்பிட்டாலும், அதனை விரும்பி அனுபவித்துச் சாப்பிடுவதில்லை. ஆனால், சில உணவு வகைகள் நாவிற்கும் சுவையாயிருக்கும். சரீரத்திற்கும் மிகவும் ஏற்றதாயிருக்கும். இவ்வித உணவு வகைகளை விருப்பத் திற்குரிய உணவு வகைகள் என்று சொல்லலாம்

சிலர் மிகவும் நல்லவர்கள். அவர்களின் உறவு எந்தத் தீங்கையும் தராது. சிலரு டைய உறவு மிக மிக இனிக்கும் தன்மையுடையவை, ஆனால், அந்த உறவுகள் அவ்வளவு நலமாயிருப்பதில்லை. சிலருடைய உறவு இனிக்கவும் செய்யும், அவர் களின் உறவு நல்ல பயனுள்ளதாகவும் இருக்கும். அதுதான் சரியான வாழ்க்கை.

நாம் மிக மிக நல்லவர்களாக இருக்கலாம். ஆனால், நம்முடைய வார்த்தை களிலும், செயல்களிலும், நடத்தைகளிலும் மற்றவர்களை மகிழச் செய்யும் தன்மை யில்லாவிட்டால் பிரயோஜனம் என்ன? நாம் இனிக்க இனிக்கப் பிறரோடு பேசிப் பழகலாம். மற்றவர்களை மகிழச் செய்யும் பல நல்ல செயல்களைச் செய்யலாம். ஆயினும் நம்மிடம் நேர்மை, உண்மை, தாழ்மை, உயர்ந்த ஒழுங்குகள், சிறந்த பழக்கவழக்கங்கள் இல்லாவிட்டால் மற்றவர்களுக்கு நம்முடைய உறவு நல்லதல்ல.

நாம் சரியானவர்களாகவும் இருக்க வேண்டும். நாம் சந்தோஷம் தரத்தக் கவர்களாகவும் இருக்க வேண்டும். சிலர் மிகவும் நல்லவர்கள். அவர்களைப் பார்க்கும் போது யோவான் ஸ்நானன், எலியா, நாத்தான் போன்றோர் நினைவிற்கு வருவார்கள். ஆனால், அவர்களிடத்தில் இயேசுவிடம் ஜனங்கள் கண்ட அன்பான வார்த்தைகளையோ, இனிய விதமான அணுகுமுறைகளையோ பார்க்க முடியாது.

நாம் சர்க்கரை போடாத தேனீர் போலவும் இருக்கக் கூடாது. வெறும் ஐஸ்கீரிம் போலவும் இருக்கக் கூடாது. அன்பின் இனிமையைப் பிறர் நம்முடைய வார்த்தைகளிலும், வாழும் விதங்களிலும் பார்க்க வேண்டும். தவறுகள் சற்றும் நம்மிடத்தில் காணப்படாமல் இருக்கலாம். ஆனால், அன்பை எந்த அளவிற்கு நம்மிடம் காணமுடிகிறது என்பதையும் யோசிக்க வேண்டும். ஆம், நல்லவர்களாகவும் வாழ்வோம். இனியவர்களாகவும் வாழ்வோம். அதுதான் உண்மையான ஆவிக்குரிய அனுபவம்.

சிந்தனைக்கு...

வாழ்க்கையை முழுமையாக இயேசுவிடம் ஒப்படைத்து விட்டால், துன்பங்கள் நம்மைத் துக்கப்படுத்துவதில்லை.

அக்டோபர் 20

தேவ ஐக்கியத்தின் அதிகத் தேவை

சங்கீதம் 88:1-18

இரவும் பகலும் உம்மை நோக்கிக் கூப்பிடுகிறேன்...
சங்கீதம் 88:1

குறைந்த வயதிலே கான்சர் நோயினால் பாதிக்கப்பட்ட கணவருக்காக, அவருடைய மனைவி அதிக விசுவாசத்தோடு ஊக்கமாகச் ஜெபித்தார். ஆனாலும், அவருடைய கணவர் சில மாதங்களுக்குள் மரித்துப் போனார். இந்த மரணம் அந்தச் சகோதரியின் விசுவாசத்தை பலவீனப்படுத்தி, அவரை மிகுதியாகச் சோர்ந்து போகச் செய்யும் என்றே பலரும் எண்ணினார்கள். ஆனால், அந்த சகோதரியோ முன்பைவிட ஆவிக்குரிய வாழ்க்கையிலும், தேவனோடுள்ள ஐக்கியத்திலும் மிக அதிகமாக வளர்ந்தார்கள். அதைக் குறித்து அந்த சகோதரி கூறுகின்ற போது, கணவரின் மரணம் என் விசுவாசத்தை அசைத்தது உண்மைதான். ஆனாலும், எப்பொழுதையும்விட எனக்கு இப்பொழுது அதிகமான ஆறுதலும், அமைதியும், தைரியமும், சூழ்நிலைகளைச் சந்திக்கத் தக்க மனபலமும் தேவைப்டுகிறதை உணர்கின்றேன். எனவே எனக்குத் தேவனுடைய உதவி அதிகமாகத் தேவைப் படுவதால், அவரோடு எனக்கு ஐக்கியமும் பெருகி வருகிறது என்றார்.

எதிர்பாராத இன்னல்கள் வந்துவிட்ட பிறகு, தீங்குகள் தடுக்கப்படாமல் போய் விட்ட பிறகு, நடக்கக்கூடாதது நடந்துவிட்ட பிறகு, இனி விசுவாசத்தால் என்ன பயன்? ஜெபிப்பதால் என்ன பிரயோஜனம் என்ற எண்ணங்கள் நமக்கு ஏற்படுவது இயற்கை. ஆனால், முன்பைவிட இப்போதுதான் அவற்றின் தேவைகள் அதிக மாயுள்ளன. இழப்புகளையும், வெறுமைகளையும், வேதனைகளையும் சந்திக்க நேரிடும்போதுதான் ஒரு விசேஷ ஆறுதலும், மன ஊக்கமும், நம்பிக்கையும், மன அமைதியும் அதிகமாகத் தேவைப்படுகின்றன. அவைகள் கிடைக்காமல் போனால், வாழ்க்கையில் முற்றிலும் முடமாகிப் போவோம். வேதனைகளைத் தடுப்பதற்காகத் தேவைப்பட்ட விசுவாசத்தையும், ஜெபத்தையும்விட வந்துவிட்ட வேதனைகளைத் தாங்கிக் கொள்ளவே அதிக விசுவாசமும் ஜெபமும் தேவைப் படுகிறது என்பதே உண்மை.

நடக்கக்கூடாதது எல்லாம் நடந்துவிட்டதே. இனி தேவ பக்தியைக் கொண்டு எதைச் சாதிக்கப் போகிறோம் என்ற எண்ணங்கள் ஏற்படுவது இயற்கையானது. ஆனால், வாழ்க்கைப்பாதை என்பது சில நிகழ்வுகளோடு முடிந்துவிடுவதில்லை. அங்கே நியமிக்கப்பட்ட யாத்திரையில் நாம் தொடர்ந்து செல்ல வேண்டிய தேவை உள்ளது. எனவே, அந்தப் பாதையில் முன்பைவிட அதிகமான ஆதரவும், ஆறுதலும், வழிகாட்டுதலும், தாங்குதலும் அவசியமாகிறது. எனவே, தொடர்ந்த தேவ பக்தி தேவையாகிறது.

சிந்தனைக்கு...

கஷ்டங்களைப் புரிந்துகொள்ளச் சிலர் இருந்தாலும்,
உள்ளத்தின் உணர்வுகள் கர்த்தருக்கு மட்டுமே புரியும்.

அக்டோபர் 21
மாறுகின்ற உணர்வுகள்

மத்தேயு 27:1-10

நான் பாவம் செய்தேன்...
மத்தேயு 27:4

சமீபத்தில் சென்னையை சேர்ந்த ஒருவன் தன் மனைவியின் மேல் வெறுப்படைந்து அவளை கொலை செய்தான். ஆனால் நெருப்பு வைத்து அவள் தற்கொலை செய்து கொண்டதாக போலீசுக்கு அறிவித்து தப்பிக்கொண்டான். ஆனால் சில நாட்களில் அவன் மனநிலையும் உணர்வுகளும் மாறியது. தன் உள்மனதின் தாக்குதல்களைத் தாங்க முடியாத அவன் தானாகப் போய் போலிசில் சரணடைந்து உண்மைகளைக் கூறினான். பெரும்பாலும் மனிதன் அதிகமாக நினைத்து நினைத்து வருந்தும் ஒரு காரியம் தன்னுடைய மனஉணர்வுகளைச் சார்ந்து எடுத்த தவறான முடிவுகளைக் குறித்துதான். சிலரால் தாங்கள் எடுத்த முடிவும் தாங்கள் நடந்துகொண்ட விதமும், சரியானதல்ல என்று மிக விரைவிலேயே உணர முடிகிறது. ஆயினும் அதற்குள் அதிக சஞ்சலத்திற்குரியக் காரியங்கள் நடந்துவிடுகின்றன.

நம்முடைய மனநிலைகளும், உணர்வுகளும் எப்போதும் ஒரேவிதமாக இராமல் மாறுந்தன்மை உடையது. எனவே அவ்வப்போது உள்ள நம்முடைய மன உணர்வுகளுக்கும் மனக் கடினத்திற்கும் இசைந்து செயல்படுவது மிகவும் ஆபத்தானது. சில சூழ்நிலைகளில் நம்முடைய மனநிலைகளுக்கேற்ப பின் விளைவு களை யோசியாமல் சில முடிவுகளை எடுப்போம். வாய்க்கு வந்தபடி பேசுவோம். கடுஞ்சொற்களால் பிறரைக் காயப்படுத்தி மகிழ்வோம். தவறான பாதையில் கால்களை வைப்போம். ஆனால் நம்முடைய வெறுப்புணர்வும், கோப உணர்வும் எவ்வளவு நேரம் நீடிக்கும் என்று கூற முடியாது. எனவே அவசரப்பட்டு நாம் பேசுகிற வார்த்தைகளும், நடந்து கொள்கின்ற விதங்களும் எடுக்கின்ற முடிவுகளும் பின்னர் நினைத்து நினைத்து வருந்தத்தக்கவையாகிவிடும்.

நேரம் செல்ல செல்ல மனநிலை மாறத் துவங்கும். உணர்வுகள் வேறுவிதமாக மாறும். அவ்வப்போது அப்படி நான் பேசியிருக்கக் கூடாது அந்த முடிவை எடுத்திருக்கக் கூடாது, அப்படி நான் அவசரப்பட்டு நடந்திருக்கக் கூடாது என்பது போன்று சிந்திக்க துவங்குவோம். அங்கே நம் மனமே நம்மை குற்றவாளியாக்கும் தவறுகளுக்காக வருந்துவோம். ஆனாலும் நடந்ததை பெரும்பாலும் மாற்ற முடியாமல் போகும். இயேசுவைக் காட்டிக் கொடுத்து காசு வாங்குவது யூதாசுக்கு சாதாரணமாகயிருந்தது. காரியம் நடந்தது. ஆனால் திடீரென்று அவன் மனநிலை மாறியது. தவறை உணர்ந்தான். மனசாட்சியால் பாதிக்கப்பட்டான். ஆனாலும் நடந்தது நடந்ததுதான். எனவே மனநிலையில் பாதிக்கப்பட்டு தற்கொலை செய்ய நேரிட்டது. நம்முடைய மனநிலைகளைச் சார்ந்து செயல்பட்டு மோசம் போகாதிருப்போமாக

சிந்தனைக்கு...

நீ செய்த தவறினை பிறருக்கு அறியாமல் மறைப்பது எளிது ஆனால் நீ அதனை மறப்பதுதான் கடினம்.

அக்டோபர் 22

அவரை அறிந்திருந்தால்

II **தீமோத்தேயு - 4:14-22**

நான் விசுவாசித்திருக்கிறவர் இன்னார் என்று அறிவேன்...
II **தீமோத்தேயு - 1:12**

ஒருமுறை இரவு நேரம் சிலருடன் காரில் பயணம் செய்தேன். ஓட்டுனரின் பக்கத்தில் இருந்த நான் அந்த ஓட்டுனர் எங்கே கண்ணயர்ந்து போய் தூங்கி விடுவாரோ என்ற எண்ணத்தில், இரவெல்லாம் தூங்காமல் பயணம் செய்தேன். அவர் சரியாக ஜாக்கிரதையாகக் காரை ஓட்டியும் எனக்கு அவரைக் குறித்துச் சரியாகத் தெரியாததால் தூங்காமலே பயணம் செய்து சிரமப்பட நேர்ந்தது. அந்த ஓட்டுனரைக் குறித்து நன்றாக நான் அறிந்திருந்தால், கவலையில்லாமல் தூங்கிக்கொண்டே சுகமாகப் பயணம் செய்திருப்பேன்.

இதுபோலவே கர்த்தர் நம்முடைய வாழ்க்கை வாகனத்தை ஓட்டுகிறார் என்ற நம்பிக்கை இருந்தாலும், அவரைக் குறித்த அதிகமான அறிவு நமக்கு இல்லாமல் போனால் இளைப்பாறுதலோடு பயணம் செய்ய இயலாது. கடந்துபோன நாட்களிலே எத்தனையோ சோதனையான வாழ்க்கைச் சாலைகளில் அவர் நம்மைப் பாது காப்பாக நன்றாகத்தான் கொண்டு சென்றிருக்கிறார். ஆனாலும், நாமோ அந்த நம்பிக்கையில் வலிமையில்லாமல் அப்படி நடக்குமோ, இப்படி நடக்குமோ என்ற பதட்டத்திலே இளைப்பாறுதலாய் இராமல் போயிருக்கின்றோம். விசுவாச வாழ்க்கையிலே நாம் முக்கியமாக அடையவேண்டிய ஒரு அனுபவம், கர்த்தர் எல்லாச் சூழ்நிலைகளிலும் நம்மை சமாதானத்தின் பாதையில் இளைப்பாறு தலோடு அழைத்துச் செல்வார் என்பதுதான். ஆனால், அதற்கு முக்கியத் தேவை, தேவனோடு பழகி அவரை அறிதல்.

தேவனை அறிகின்ற அறிவும், அவரோடு நெருக்கமான உறவும் இருந்த தால் தாவீது தன்னால் கோலியாத்தை வெல்ல முடியும் என்று நம்பினான். சிங்கத்திடமிருந்தும், கரடியிடமிருந்தும் தன்னைக் காத்துக்கொண்ட தேவன் கோலி யாத்தை வென்றிடத் தனக்கு உதவுவார் என்று நம்பிட அவனால் முடிந்தது.

எகிப்திலிருந்து தேவன் இஸ்ரவேல் ஜனங்களை நன்றாகத்தான் வழிநடத்திக் கொண்டிருந்தார். ஆயினும், அவர்கள் தேவனைச் சரியாக அறிந்திருக்கவில்லை. எனவே, அவர்கள் ஒருபோதும் இளைப்பாறுதலோடு பயணம் செய்யவில்லை. பலவிதத் தீங்குகளைச் சந்திக்க நேர்ந்த பவுலுக்கு, ஒரு நம்பிக்கை இருந்தது. எப்படியாகிலும் கர்த்தர் சகல தீமையிலிருந்தும் தன்னை இரட்சித்து, பரம ராஜ்யம் கொண்டு சேர்ப்பார் என்பதே அந்த நம்பிக்கை. ஏனெனில், அவன் கர்த்தரை நன்கு அறிந்து கொண்டவன். எனவே, அவன் கிறிஸ்துவின் சமாதானத்தை அனு பவித்தவனும், அந்த சமாதானத்தைப் பிறருக்குச் சொல்லுகிறவனாகவும் இருந்தான்.

சிந்தனைக்கு...

உலகம் உன்னை கசக்க வைக்கும்போதெல்லாம் இறைவன் உனக்கு இனிமை தரக் காத்திருக்கிறார் என்பதை மறவாதே.

அக்டோபர் 23

ஒரே ஒரு தவறு

பிரசங்கி 10:1-20

ஞானத்திலும் கனத்திலும் பேர்பெற்றவனை...
பிரசங்கி 10:1

போதகர் ஒருவர் பாலியல் சம்பந்தமான ஒரு குற்றச்சாட்டிற்கு ஆளாகி அது நிரூபிக்கப்பட்டது. அவர் இவ்வளவு மோசமான ஒருவராக இருந்திருக்கிறாரே என்று பலரும் பேச ஆரம்பித்தனர். ஆனால், அவரை நன்கு அறிந்திருந்த ஒருவர் அவரைக் குறித்துப் பேசும் போது, அவர் பாலியல் தவறில் விழுந்தது உண்மையாயிருக்கலாம். ஆயினும், அவர் ஒரு மோசமான போதகர் அல்ல. அவர் தன்னுடைய வாழ்க்கையில் மிகவும் நல்லவராகவேயிருந்தார் என்று கூறினார்.

ஒரே ஒரு தவறை அடிப்படையாக வைத்து ஒருவர் முற்றிலும் தவறானவர் என்று முடிவு செய்ய இயலாது. ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்ற பழமொழி எல்லா இடத்திற்கும் பொருந்தாது. ஒரு வெள்ளைத் துணியில் ஒரு சிறு அழுக்கு படிவது போல, சில நல்லவர்களின் வாழ்க்கையில் ஒரே ஒரு தவறு நடந்து விடுவதுண்டு. ஆயினும், அவர் மோசமானவர் என்று அர்த்தம் அல்ல. ஆனால், சிலருடைய வாழ்க்கையில் ஒரே ஒரு தவறு அவர்களை முற்றிலும் தவறானவர்களாக எல்லோரையும் பார்க்க வைத்துவிடும். எனவே நாம் எவ்வளவு நல்லவர்களாயிருந்தாலும் அதனால் வருகின்ற நற்பெயரையும், நல்லெண்ணத்தையும் ஒரே ஒரு தவறால் இழக்க நேரிடும் என்ற எச்சரிக்கை அவசியம். ஒரு கோப்பைப் பாலில் ஒரு சிறு அழுக்கு கலக்க நேரிட்டாலும் அதனை ஆகாதது என்றே எவரும் தள்ளிவிடுவார்கள்.

எனவே, நாம் நம்முடைய நல்ல வாழ்க்கையை, ஒரு சிறு மதியீனத்தால் கறைபடுத்தி விடக்கூடும் என்ற எச்சரிக்கையோடு வாழவேண்டும். தாவீது மிக நல்ல தேவ மனிதன்தான். ஆயினும், அவனுடைய ஒரே ஒரு மதியீனச் செயல் அவனைத் தலைகுனிய வைத்தது. எவ்வளவு வலிமையாகக் கப்பலைக் கட்டியிருந்தாலும் ஒரு சிறு துளையின் மூலம், அதனை முழுவதும் மூழ்கடிக்க இயலும்.

ஆம், நம்முடைய முழு நற்பெயரையும் இழக்க பல தவறுகள் செய்யத் தேவையில்லை. ஒரேயொரு தவறு செய்தால் போதும். மோசே பூமியிலேயே மிகவும் சாந்தமான மனிதன்தான். ஆனால், கானானுக்குச் செல்லவிடாமல் அவனைத் தடை செய்தது ஆயிரம் பாவங்கள் அல்ல. ஒரே ஒரு தவறுதான். சற்று நேரக் கோபமும், எரிச்சலும், கசப்பும் அவனை நிர்பாக்கிய மனிதனாக மாற்றியது. ஞானத்திலும், கனத்திலும் பேர் பெற்றவனைக்கூட சொற்ப மதியீனம் முட்டாள் என்று எல்லோரையும் பார்க்க வைத்துவிடும். எனவே, ஒரே ஒரு தவறும் நேரிடாமல் கவனமாயிருப்போம்.

சிந்தனைக்கு...

ஆயிரம் நற்செயல்கள் செய்தால்தான் நல்லவன் என்று பார்க்கப்படுவாய். ஆனால், ஒரே ஒரு தீய செயலால் தீயவனாகிவிடுவாய்.

அக்டோபர் 24

முதலில் மருத்துவம்

1 கொரிந்தியர்-1 : 1 -10

இயேசு கிறிஸ்துவுடன் ஐக்கியமாயிருப்பதற்கு...
1 கொரிந்தியர் - 1:9

ஒரு மனிதன் நல்ல சத்தான உணவு வகைகளை உண்கின்றான். சரீர ஆரோக்கியத்திற்கு உதவுகின்ற நல்ல பழவகைகளையும், காய்கறிகளையும் சாப்பிடுகின்றான். போதுமான நேரங்கள் தூங்குகின்றான். முறையாகத் தினமும் உடற்பயிற்சி செய்கின்றான். சரீர நலனுக்கு உகந்ததல்லாத எந்தக் கெட்ட பழக்கங்களும் கிடையாது. ஆயினும், அவனுக்கோ அவனுடைய சரீரத்தில் ஆரோக்கியமில்லை. எதையும் திடமாகச் செய்கின்ற வலிமை இல்லை. ஏன் இப்படி என்பதை அவனால் விளங்கிக்கொள்ள முடியவில்லை.

இவன் பின்பற்றுகின்ற ஆரோக்கியம் தொடர்பான காரியங்கள் யாவும் மிகவும் அவசியமானவையே. ஆரோக்கியமாயிருக்க விரும்புகின்ற எவரும் இவற்றைக் கடைப்பிடிப்பது மிகவும் நல்லது. ஆயினும், ஒரு நல்ல சரீரத்தில்தான் இந்த விதமான நல்ல வாழ்க்கை முறைகள் உரிய பலன் தரும். சரீரத்தில் ஒரு வியாதி இருக்கையில் இதுபோன்ற நடவடிக்கைகளால் சில பலன்கள் உண்டென்றாலும் பூரணபலன்கள் இல்லை. முதலாவது, நோயினால் ஏற்படும் பாதிப்புகளுக்கு உகந்த முறையான மருத்துவம் பார்க்க வேண்டும்.

சிலர் பக்தி மிக்கவர்கள் என்பது உண்மை. ஜெபம், உபவாசம், வேத வாசிப்பு, ஆராதனை, காணிக்கை, ஊழியம் என அவசியமான அத்தனை காரியங்களையும் செய்கின்றனர். ஆயினும், பரிசுத்த வாழ்க்கையில் வெற்றியில்லை. மகிழ்ச்சியானதோர் ஆவிக்குரிய அனுபவம் இல்லை. காரணம் என்ன? பக்தியான பல காரியங்களைச் செய்தாலும், அடிப்படையில் பாவம் என்ற நோய்க்கு உரிய மருத்துவம் பார்க்கப்பட்டதா என்பது மிக முக்கியம்.

மனந்திரும்புதல், மறுபடியும் பிறத்தல் என்ற அனுபவத்தை விசுவாசித்துப் பெறுதல், தேவ உறவில் வாழ அர்ப்பணிப்பு, தேவனுடைய பிள்ளையாக மாறிவிட்ட ஆவிக்குரிய விழிப்புணர்வு ஆகியவற்றை மனத்தெளிவோடு கடந்து வந்தோமா என்பது முக்கியம். தேவ உறவுடன் அல்லது தேவ நட்பின் ஐக்கியத்தில் வாழ்தல் என்ற அனுபவத்தை விரும்பி ஏற்றுக்கொண்டு வந்தால்தான், பாவத்திற்குத் தீர்வு எற்படும். அப்பொழுதுதான் நம்முடைய நல்ல ஆவிக்குரிய பக்திச் செயல்களெல்லாம் அதற்குரிய நல்ல விளைவுகளைத் தரும். எனவே, மேலும் மேலும் ஆவிக்குரிய பக்திச் செயல்கள் என்னும் ஆரோக்கிய நடவடிக்கைகளை மட்டுமே நம்பாமல், அடிப்படையில் பாவத்தின் மேலாண்மையை மேற்கொள்ளத் தேவையான, தேவ உறவிற்கு நம்மை அர்ப்பணித்தோமா என்பதை முதலாவது சிந்திக்க வேண்டும்.

சிந்தனைக்கு...

பாவம் தேவ அன்பைத் தடுப்பதில்லை. நம்மைத்தான் அதனை ருசிக்கவிடாமல் தடுக்கிறது.

அக்டோபர் 25

காத்திருப்போம்

யாக்கோபு 5- 7:20

நீங்களும் நீடிய பொறுமையோடிருந்து...
யாக்கோபு 5:8

மாம்பழங்களைத் திருடிச் சாப்பிடும் ஓர் குரங்கு ஒருநாள் சற்று வித்தியாசமாக யோசித்தது. மாம்பழத்தைச் சாப்பிட்டுவிட்டு கொட்டையை வீசி எறியாமல் அதனை மண்ணில் புதைத்து வைத்தது. அது முளைத்து மரமாகி கனி கொடுத்தால் நிறைய பழங்கள் கிடைக்கும் என்று எண்ணியது. ஒவ்வொரு நாளும் அங்கே வந்து பார்த்தது. ஆனால், அங்கே எதுவும் முளைக்கவில்லை. மண்ணைத் தோண்டிப்பார்த்தது. மாங்கொட்டை அங்கே பத்திரமாக இருந்தது. தினமும் அப்படியே செய்தது. ஆனால் மாங்கொட்டையிலிருந்து செடி முளைக்கவில்லை. எனவே, பொறுமையிழந்த குரங்கு அதனை வீசி எறிந்துவிட்டுப் போய்விட்டது.

குரங்கின் நோக்கமும், ஆர்வமும் நல்லதுதான். ஆனால், அதற்குப் பொறுமை தேவைப்பட்டது. தினமும் பொறுமையின்றி மண்ணைக் கிளறிக் கிளறி கொட்டையை எடுத்ததால் முளைக்கும் வாய்ப்புக் கிடைக்கவில்லை. அதுபோல நாமும் சில நேரம் நல்ல காரியங்களைச் செய்கின்றோம். தேவன் சொன்னபடி வாழ முன்வருகின்றோம். ஆனால், பொறுமையில்லை. உடனடியான விளைவுகளைத் தேடுகின்றோம். சில நல்ல செயல்களுக்கும் பண்புகளுக்கும் உரியபலன் சற்று காலந்தாழ்ந்துதான் வரும் என்பதை அறியவில்லை.

காலையில் ஜெபித்தால் மாலையிலேயே பதில் கிடைத்துவிடும் என்று சொல்லிவிட முடியாது. இரண்டுநாள் உபவாசித்துவிட்டால் மூன்றாம் நாளே யாவும் தலைகீழாக மாறிவிடும் என்று எண்ணிவிட முடியாது. சில விஷயங்களுக்காக நாம் எதிர்பார்க்கும் நேரங்களைவிட தேவன் அதிக நேரத்தையே குறிக்கின்றார். சில நற்செயல்களுக்குரிய நற்பலன்கள் நாம் நினைத்த காலத்தைவிட சற்று காலந் தாழ்ந்தே வரும்.

யோசேப்பும், யோபுவும், தாவீதும் நீண்ட காலம் பொறுமையோடு காத்தி ருந்துதான் தங்களின் நல்ல பக்திக்குரிய பலன்களைக் கண்டனர். நாம் காத்தி ருப்பதில்தான் விசுவாசம் விளங்குகிறது. நாம் பொறுமையோடு அமர்ந்திருப்பதில் தான் தேவன்மேல் வைத்த நம்பிக்கை நிரூபணம் ஆகிறது. இஸ்ரவேல் மக்கள் கானகத்தில் பயணம் செய்தபோது தேவன் எப்படிச் செயல்படப் போகிறார், என்ன ஆலோசனை தரப் போகிறார் என்றெல்லாம் காத்திருக்காததின் விளைவாகத் தேவனால் வருகின்ற நற்பலன்களை இழந்து போனார்கள். தேவன் நீதியுள்ளவர். நற்கிரியைக்கு நிச்சயம் பலன் தருவார். பொறுமைதான் அதனை நிச்சயமாக அடையும் வழி.

சிந்தனைக்கு...

ஜெபத்திலே உன்னைத் தேவனுக்குக் காண்பித்துக் கொண்டேயிரு.
செயல்களில் அவரின் கரத்தை நீ கண்டுகொண்டேயிருப்பாய்.

அக்டோபர் 26

தேவையும் பயன்பாடும்

கொலோசெயர் 3:1-17

விக்கிரக ஆராதனையான பொருளாசை...
கொலோசெயர்-3:5

ஒருவர் எந்த ஒரு புதிய பொருளைப் பார்த்தாலும் அது தனக்குப் பயனுள்ளதா என்று பார்த்து அதை வாங்க விரும்புவார். அவருடைய வீட்டில் இருக்கும் ஏராள மான பொருட்களை யாராவது பார்க்க நேரிட்டால் இது என்ன வீடா அல்லது பல்பொருள் அங்காடியா என்று யோசிக்கத் தூண்டும். யார் அவருடைய வீட்டிற்கு வந்தாலும் தான் வைத்திருக்கின்ற பொருட்கள் தனக்கு எந்தெந்த விதத்தில் பயனுள்ளதாயிருக்கின்றது என்று விளக்கம் கொடுப்பார். தான் அவ்வளவு பொருட்கள் வைத்திருப்பது நியாயம்தான் என்று காண்பிப்பார்.

எல்லாப் பொருட்களும் பயனுள்ளதுதான். ஆனால், அவை யாவும் தேவையா என்பதே முக்கியமான கேள்வி. ஆனால், பயனுள்ள பொருட்கள் யாவும் நமக்கு அவசியமானவைகள் அல்ல. அவற்றில் பல பொருட்கள் இல்லாமலே நாம் நன்றாக வாழ முடியும். சில நேரங்களில் புதிது புதிதாகப் பொருட்கள் வரும்போது அதனுடைய பயன்பாடு விளக்கிச் சொல்லப்படுகிறது. உடனேயே அது நமக்கு மிகவும் அவசியம் என்று சிந்திக்கத் தூண்டப்படுகிறோம். இது பயனுள்ளதா? என்று கேட்பதற்குப் பதிலாக இது மிகவும் அவசியமானதா? என்ற கேள்வியைக் கேட்கும்போது பொரு ளாசை நம்மேல் ஆதிக்கம் செலுத்துவது குறைந்துவிடும்.

பொருளாசையை வேதம் விக்கிரக ஆராதனைக்கு ஒப்பிடுகிறது. ஒவ்வொரு பொருளும் மிக முக்கியம் என நாம் நினைக்கும்போது, பொருட்களே நமக்குக் கடவுள் போல் ஆகிவிடுகின்ற அபாயம் உண்டு. இந்நாட்களில் ஷாப்பிங் என்று கூறி கடைகளுக்குச் செல்வது பலருக்குப் பொழுதுபோக்காகிவிட்டது. ஒரு பொருளுக்குத் தேவை ஏற்பட்டுக் கடைக்குச் செல்லாமல், ஏதாவது பொருள் வாங்கப் போகலாம் என்ற சிந்தையோடுதான் பலர் கடைகளுக்குச் செல்கின்றனர்.

சாலொமோன் ராஜா பெண்ணாசைப் பிரியன் மட்டும் அல்ல. அவள் பொருள் வாங்கிக் குவிக்கும் பொருளாசைப் பிரியனாகவும் இருந்தான். எனவே, அவன் இறுதி யில் எதனாலும் திருப்தியடைந்து நிறைவுடன் வாழ இயலாமல் போனான். நம்முடைய மனதை கடவுளுடன் அதிகமாக இணைத்து, தேவ ஐக்கியத்தைத் தேடும் அனு பவங்களில் மனமகிழ்ச்சியைத் தேடுகின்ற பழக்கங்கள் வேண்டும். பொருட்கள் மூல மாகவே அதிக சௌகரியத்தையும், அதிக சொகுசையும் விரும்பிப் பயணம் செய்தால் அதற்கு எல்லையே இராது. நாம் பக்தியாக பல காரியங்கள் செய்வதில் மட்டும் அல்ல. பணம் பொருள் விஷயங்களில் நம்முடைய மனம் அதிகமாக இழுக்கப்படாமல், போதுமான கட்டுப்பாடுகளுடன் வாழ்வதில் இறை பக்தியைப் பிரதிபலிக்க வேண்டும்.

சிந்தனைக்கு...

எவ்வளவு செல்வம் உனக்குண்டு என்பது அல்ல. எப்படிப்பட்ட இருதயம் உனக்குண்டு என்பதே உன் வாழ்வை நிர்ணயிக்கும்.

அக்டோபர் 27

தேவனுக்காக வாழ்தல்

கொலோசெயர் 1:1-20

கர்த்தருக்கு பிரியமுண்டாக அவருக்கு பாத்திரராக.....
கொலோசெயர் 1:10

ஆன்மீக நம்பிக்கை உடைய நம்மில் பலருக்கு தேவனுக்காக எதையாவது செய்ய வேண்டும் என்ற எண்ணங்கள் ஏற்படுவது இயற்கை. எனவே ஆலயப் பணிகள், சுவிசேஷ ஊழியங்கள், ஊழியங்களுக்காக நிதிவசூல் செய்தல் போன்றவற்றோடு நம்மை இணைத்துக் கொண்டு சில காரியங்களைச் செய்ய முடியும். அவ்விதம் செய்யும் போது ஆண்டவருக்காக நம்மால் இயன்றதைச் செய்கின்றோம் என்ற ஒரு திருப்தி ஏற்படலாம். ஆயினும் நாம் ஆண்டவருக்காக வாழவேண்டும் என்பதற்குத்தான் அவர் அதிக முக்கியத்துவம் தருகிறார்.

ஆண்டவருக்காக வாழ்வது என்றால் என்ன? தேவன் மனிதனைப் படைத்ததின் பின்னால் உள்ள அடிப்படை நோக்கங்கள் நிறைவேறும் விதமாக நம்முடைய வாழ்க்கை முறை அமைவதுதான் அவருக்காக வாழ்வது ஆகும். நாம் தேவனை நமக் குள் அறியவேண்டும். சூரியனின் பிரகாசத்தைப் பெற்ற சந்திரன் ஒளிர்வது போல, நாம் தேவனை அறிவதின் மூலம் தேவனை வாழ்க்கையில் வெளிப்படுத்தவேண்டும். நம்முடைய தனிப்பட்ட வாழ்க்கையில் தேவ விருப்பங்களுக்கு இசைந்து நாம் வாழவேண்டும். அனுதினமும் நாம் தேவ உறவையும் ஐக்கியத்தையும் தேடி அனுபவிக்க வேண்டும். நாம் வாழ்கின்ற விதத்தினால் தேவனை தினமும் கனப்டுத்த வேண்டும். இவைகள்தான் நம்மை படைத்ததின் பின்னால் உள்ள தேவ நோக்கங்கள். இதுதான் தேவனுக்காக நாம் வாழ்வதின் பிரதிபலிப்புகள்.

நாம் கைப்பிரதிகள் கொடுக்கின்ற ஒரு சிறு ஊழியம் முதல் பல நாடுகளுக்கு சென்று பல லட்சங்களுக்கு பிரசங்கிக்கும் வாய்ப்பைப் பெற்ற பெரிய ஊழியம்வரை செய்யலாம். நாம் ஒரு சிறிய பாஸ்டராகவோ அல்லது பலநூறு சபைகளை ஸ்தாபிக்க இயன்ற பெரிய பாஸ்டராகவோ இருக்கலாம். நம்முடைய மிகுந்த செயல்பாடுகள் நம்மைப் பார்க்கும் மக்களுக்கு கர்த்தருக்காக அரும்பாடுபட்டவர் என்றும், அதிகமாக சாதித்தவர் என்றும் நம்மைக் குறித்து பேச வைக்கலாம்.

ஆயினும் நம்முடைய தனிப்பட்ட வாழ்க்கை நற்சுபாவங்கள், நல்ல தன்மைகள், தெய்வீக இயல்புகள், பொறுமை, தாழ்மை, எளிமை, அன்பு, இரக்கம், சுயவெறுப்பு போன்ற தேவப்பண்புகளைப் பிரதிபலிக்க வேண்டும் இல்லையேல் நம்மைப் படைத்த தேவநோக்கம் நம்மில் நிறைவேறவில்லையென்றே அர்த்தமாகும். அந்த நிலையில் நம்முடைய அனைத்து ஆன்மீகச் செயல்களும் தேவனுடையப் பார்வையில் கனம் பெறாதவையே.

சிந்தனைக்கு...

கடவுளுக்காக நீ எதையாவது செய்வதல்ல. உன்னிடம் அவர் எதையாவது செய்திட அனுமதிப்பதே பக்தி.

அக்டோபர் 28
பிரியம் இல்லையேல்

யோவான் 8:42-59

என் வசனத்தை நீங்கள் ஏன் அறியாமலிருக்கிறீர்கள்.
யோவான் 8:43

புகழ்பெற்ற எழுத்தாளர் ஒருவர் அவருடைய சிறந்த சிந்தனைகளுக்காக சமுதாயத்தில் மிகுந்த பாராட்டுகளைப் பெற்றிருந்தார். அவருடைய கருத்துக்கள் அநேகரைக் கவர்ந்தது. பிரபல பத்திரிகை ஒன்று அவருடைய மனைவியை பேட்டி கண்டது. அவருடைய சிறந்த சிந்தனைகளைக் குறித்து அவரிடம் கருத்துக் கேட்டனர். அதற்கு அவருடைய மனைவி அவர் நல்ல சிந்தனையாளர் என்று பலர் பாராட்டுவதைக் கேட்டிருக்கின்றேன். ஆனால், அவருடைய புத்தகங்களை நான் படித்தது கிடையாது. எனவே, அவருடைய சிந்தனைகள் பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்றார். அவருக்கு அருகில் இருக்கும் உங்களால் எப்படி அவருடைய புத்தகங்களை படிக்காமல் இருக்க முடிந்தது என்று கேட்டனர் பத்திரிகையாளர். அவர் என்னை நேசிப்பது இல்லை. எனவே, அவரை எனக்குப் பிடிக்காது. ஆகையால், அவருடைய கருத்துக்களைப் படிக்க ஆர்வப்படவில்லை என்று பதிலளித்தார்.

ஒருவரை நாம் விரும்ப முடியாவிட்டால் அவருடைய எந்த ஒரு நல்லதையும் நாம் விரும்ப இயலாது. அதனால் நாம் பயனடையவும் முடியாது. இன்று உலகமெல்லாம் இயேசுவின் போதனைகளால் கவரப்பட்டவர்கள் ஏராளம் ஏராளம். மிகப் பெரிய அறிஞர்களும், தத்துவமேதைகளும், அரசியல் தலைவர்களும் இயேசுவின் உயர்ந்த போதனைகளால் தொடப்படுகின்றனர். ஆனால், அவர் பிறந்த மண்ணில் வாழ்கின்ற யூதர்களோ, இன்றும் அவருடைய போதனைகளின் மேன்மைகளை உணரவுமில்லை, அவற்றைப் பயன்படுத்தவுமில்லை. ஏனென்றால், அவரை அவர்கள் ஏற்கவுமில்லை. விரும்பவுமில்லை.

இன்றும் பல பக்தியுள்ள கிறிஸ்தவர்கள்கூட வேதாகமத்தைப் போதுமான அளவு படிப்பதில்லை. அவருடைய சத்தியத்தின் மகிமையை வெளிப்படுத்தும் புத்தகங்களை வாங்கிப் படிப்பதில்லை. சிறந்த சத்தியப் போதனைகளைக் கேட்கப் போதிய ஆர்வம் காட்டுவதில்லை.

ஏனென்றால், இயேசுவின்மேல் சத்திய ரீதியான ஈர்ப்பும் பிரியமும் அவர்களுக்கு இல்லை. அவர்கள் வாயினால் அவர்தான் ஆத்துமநேசர் என்பார்கள். அவரை நேசிக்கின்றேன் என்பார்கள். அது மதரீதியான ஒரு பக்தி வார்த்தை, அது உண்மையல்ல. இயேசுவின்மேல் வைத்த பிரியம் ஆவிக்குரிய உண்மையான பிரியமாக இருந்தால், அவர்களின் இருதயம் அவருடைய வார்த்தைகளுக்குக்காய் ஏங்கும். அவருடைய சத்தியங்களின் அழகைக் கண்டு பரவசமடையவும். அந்தப் போதனைகளால் அவர்களின் இருதயம் ஆழமாய் ஈர்க்கப்படும்.

சிந்தனைக்கு...

உன் வாழ்க்கையின் செயல்முறைகள் உன்னுடைய ஐக்கியம் யாரோடு என்பதை வெளிப்படுத்துகின்றது.

அக்டோபர் 29

வருவது வரட்டும்

அப்போஸ்தலர் 20:13-28

ஒன்றையுங் குறித்துக் கவலைப்படேன்...
அப்போஸ்தலர் 20:24

எலி அங்குமிங்கும் ஓடித் தன்னுடைய இரையைத் தேடுகின்றது. திடீரென அதனைக் கபக்கென்று பிடித்துவிட பூனை ஓடி வருகிறது. உயிர் தப்ப வேகமாக ஓடுகின்றது எலி. பூனையின் வாயில் சிக்காமல் எங்கேயோ போய் ஒளிந்து கொள் கின்றது. ஆனாலும், அது அதிக நேரம் ஒளிந்திருப்பதில்லை. வெளியே போனால் ஆபத்து என எண்ணி அங்கேயே இருந்து விடுவதில்லை. மீண்டும் அது வெளியே வந்து தன்னுடைய இரையைத் தேட ஆரம்பித்து விடுகின்றது. ஆம். ஆபத்தான சூழ்நிலைகளின் நடுவிலும் அது வந்தால் பார்த்துக் கொள்ளலாம் என்ற சிந்தனையில் தன்னுடைய வேலைகளில் தீவிரமாயிருக்கிறது.

பல வேளைகளிலும் துன்பங்களைக் குறித்த எதிர்ப்பார்ப்பும், அச்சமும் இயல்பாக நாம் செய்ய வேண்டிய பல வேலைகளைச் செய்யவிடாமல் நம்மைத் தடுத்துவிடுவதுண்டு. அப்படி ஆகிவிடுமோ, இப்படி ஆகிவிடுமோ என்ற அச்ச உணர்வுகள் எதையும் செய்யவிடாமல் நம்மைப் பலவீனப்படுத்தி விடுவதுண்டு. பல வேளைகளில் நிகழப்போகாத சில கஷ்டங்களைக் குறித்த நினைவுகளும் நம்மைச் செயலற்றவர்களாக நிற்கவைத்து விடுவதுண்டு. நாளை என்ன நடக்கும் என்று நம்மால் எதுவும் இன்றே கூற இயலாது. அதற்காக இன்றைக்குச் செய்ய வேண்டியவைகளை நாம் செய்யாமல் நின்று கொண்டிருக்கக் கூடாது.

தேவனுடைய கட்டுப்பாட்டிற்குள் நாம் இருந்தால் அவருடைய கட்டுப்பாட்டிற் குள்ளேயே அனைத்தும் இருக்கிறது, என்ற நம்பிக்கையோடும் மன அமைதி யோடும் நமக்கு முன்பாக உள்ள கடமைகளைச் செய்து கொண்டேயிருப்போம். எருசலேமின் அலங்கங்களைக் கட்டுவதற்குச் சென்ற நெகேமியாவுக்குக் கடுமை யான எதிர்ப்புகள் வந்தன. தொடர்ந்து கட்டுமானப் பணிகளில் ஈடுபட முடியாத அளவிற்கு விரோதிகள் செயல்பட்டனர். ஆயினும், நெகேமியா தன்னுடைய வேலைகளை நிறுத்திவிடவில்லை. தேவனைச் சார்ந்த விசுவாசத்தோடும், வந்தால் பார்த்துக் கொள்வோம் என்ற துணிவோடும், ஆயுதங்களை ஒரு புறம் பிடித்துக் கொண்டே, வேலைகள் தொடர்ந்து நடைபெற ஏற்பாடு செய்தான்.

எல்லாச் சூழ்நிலைகளிலும் நம்முடைய மனதில் உள்ள கவலைகளையும், பாரங்களையும் கர்த்தருடைய சமுகத்தில் வைத்துவிட்டு, அவரோடு நம்முடைய மனதிலுள்ளவைகளையெல்லாம் பகிர்ந்துகொண்டிருக்க வேண்டும். அப்பொழுது உலகம் தர இயலாத ஒரு விசேஷமான சமாதானம் நம்முடைய இருதயத்தை ஆளுகை செய்து எல்லாப் பயங்களும், பீதிகளும் நீங்கிப்போகச் செய்யும்.

சிந்தனைக்கு...

தியாகம் இல்லாத கிறிஸ்தவனும் வீரம் இல்லாத போர்ச் சேவகனும் எதையும் சாதிக்கமாட்டான்.

அக்டோபர் 30

பணமா? குடும்ப வாழ்வா?

ஆதியாகமம் 2 : 15 – 25

ஏற்ற துணையை அவனுக்கு உண்டாக்குவேன்....
ஆதியாகமம் 2: 18

ஆவிக்குரிய நண்பர் ஒருவர் நன்கு படித்திருந்த ஒரு பெண்ணைத் திருமணம் செய்தார். திருமணத்திற்குப் பிறகு அவளுடைய நல்ல கல்வித் தகுதிக்கு மிகுதி யான சம்பளம் தரும் ஒரு வெளிநாட்டு வேலை வாய்ப்பு வந்தது. அவளுடைய பெற்றோர் இவ்வளவு படித்த நீ சும்மாயிராமல் அந்த வேலைக்குச் சென்று நிறையப் பணம் ஈட்டலாமே என்றனர். ஆனால், அந்த ஆவிக்குரிய நண்பரோ எனக்கு ஒரு வாழ்க்கைத்துணை வேண்டும் என்பதற்காகத்தான் நான் திருமணம் செய்தேன். எனக்கு அதிகம் பணம் சம்பாதித்து தருகின்ற ஒருவருக்காக அல்ல என்று கூறி அவளை வெளிநாட்டிற்கு அனுப்ப மறுத்துவிட்டார்.

இன்றைய சமுதாயத்தில் கணவன் மனைவி ஐக்கியம், குடும்ப வாழ்க்கை, பிள்ளைகளைக் கண்காணித்து வளர்த்தல், போன்ற எல்லாவற்றையும்விட பணம் தான் மிக முக்கியமாகக் கருதப்படுகின்றது வாழ்க்கைத் துணை தேடுகின்ற பலர் தங்களுக்கு ஒரு நல்ல வாழ்க்கைத் துணை வேண்டும் என்பதைவிட, வரப்போகிற பெண் எவ்வளவு கொண்டு வருவாள்? எதிர்காலத்தில் எவ்வளவு சம்பாதிப்பாள்? என்ற கேள்விகளுக்கே முதல் கவனம் செலுத்துகின்றார்கள். பணம், படிப்பு, பொருள், நகைகள் ஆகியவற்றின் அடிப்படையிலேயே வாழ்க்கைத் துணை தேடப்படுகிறது.

எனவே, பலர் தங்களுடன் வாழ்வதற்கு ஒரு பெண்ணை அடைகின்றார்களே யன்றி, ஒரு மனைவியை அடையவில்லை. மனைவி என்பவள் தன்னுடைய வாழ்க்கைக்கு ஏற்ற துணை என்ற அடிப்படையிலேயே தேடப்பட வேண்டும் ஆதாமுக்கு ஒரு துணையைக் கொடுக்க விரும்பிய தேவன் அது அவனுக்கு ஏற்ற துணையாக இருக்கவேண்டும் என்று விரும்பினார். வாழ்க்கையின் பெரும் பகுதியும் ஆளுக்கு ஒரு ஊராக அல்லது ஆளுக்கு ஒரு நாடாக வாழ்ந்துவிட்டு, பண வசதிகளில் மட்டும் பெருகுவதால் என்ன பிரயோஜனம்? அதில் என்ன அர்த்தம் இருக்கின்றது?

அனுதின வாழ்க்கைச் சூழ்நிலைகளில் ஒருவருக்கொருவர் துணையாக இருக்கவும், ஒருவரோடொருவர் வாழ்க்கையைப் பகிர்ந்துகொள்ளவும், ஒருவருக் கொருவர் ஆதரவும், ஆறுதலுமாய் இருப்பதற்கே திருமணம் செய்ய வேண்டும். வெறுமனே திருமண உறவுக்குள் வந்துவிட்டு, பின்னர் பண ஆசையின் விளைவாக ஒருவரைவிட்டு ஒருவர் பிரிந்தே வாழ்வதினால் குடும்ப வாழ்வின் நோக்கம் நிறை வேறாது. இந்தப் பண ஆசைதான் தேவனுடைய நோக்கங்களை மதியாமல், பலரை பணத்தையே கடவுளைப் போல எண்ணிச் செயல்பட வைக்கின்றது.

சிந்தனைக்கு...

பணம் உனக்கு நம்பிக்கையைக் கொடுக்கும்.
அந்த நம்பிக்கை உனக்குத் தோல்வியைக் கொடுக்கும்.

அக்டோபர் 31
புண்படுவது ஏன்?

லூக்கா 9:23-26

அவன் தன்னைத்தான் வெறுத்து...
லூக்கா 9:23

அடிக்கடி நாம் இவ்விதமாக உணருகின்றோம் அல்லவா. பிறருடைய சில வார்த்தைகளாலும், செயல்களாலும், அவர்கள் நடந்து கொள்கின்ற விதங்களினாலும் அடிக்கடி புண்பட்டதாக உணருகின்றோம். ஆனால், நாம் நன்றாகச் சிந்தித்துப் பார்க்கும்போது பல வேளைகளில் பிறர் நம்மை உண்மையில் புண்படுத்தவில்லை. ஆனால், நாமோ புண்பட்டு வருந்துகிறோம். ஏனென்றால், நம்முடைய மனநிலை ஒரு புண்போல உள்ளது. அதில் ஒரு சிறு துரும்பு தொட்டால்கூட நமக்கு பெரிய வேதனையைத் தந்து விடுகிறது

எத்தனையோ முறை பிறர் நம்மை மட்டந்தட்டவில்லை. ஆனால், நாம் மட்டந்தட்டப்பட்டதாக உணர்ந்து விடுகிறோம். பிறர் நம்மை இழிவுபடுத்தும் நோக்கோடு எதையும் செய்யவில்லை. ஆனால், நாம் அவர்களின் தவறான நோக்கமற்ற வார்த்தைகளை, செயல்களை தவறாகப் புரிந்து கொண்டோம். ஒருவேளை அந்த வார்த்தைகளை செயல்களை கூர்ந்து கவனித்து, அவைகளைப் புண்படுத்தும் வார்த்தைகள் என்று நாம் எடுத்திருக்கலாம். ஆனால், அது உண்மையல்ல. மற்றவர்களுடைய வார்த்தைகளின் தோற்றத்தையும், செயல்களின் தோற்றத் தையும் மட்டும் கவனிக்கக் கூடாது. அவற்றின் பின்னால் உண்மையிலேயே ஒரு தவறான நோக்கம் இருந்ததா என்றும் பார்க்க வேண்டும்.

என் நண்பர் என்னைப் பார்த்து "நீ ஒரு மடையன்" என்றால் உண்மையிலேயே அவர் என்னை மடையன் என்று நம்புகிறார் என்று அர்த்தமல்ல. "உனக்கு ஒன்றும் தெரியாது" என்று சொல்லிவிட்டால் உண்மையிலேயே எனக்கு எதுவும் தெரியாது என்று அவர் எண்ணுவதாக அர்த்தம் கொள்ள முடியாது. ஒரு கால கட்டத்தில் சின்னச் சின்ன விஷயங்களுக்கெல்லாம் நான் கலவரப்படுவதை ஆராய்ந்து பார்த்தேன். சாதாரண வார்த்தைகளுக்கெல்லாம் புண்படுத்தப்பட்டதாக எண்ணி யதைச் சோதித்துப் பார்த்தேன். உண்மையில் தவறு எங்கேயிருக்கிறது என்று ஆராய்ந்து பார்த்தபோது, அது என்னிடம்தான் என்று கண்டு கொண்டேன்.

சுய உணர்வு மேலோங்கியுள்ளது. அது தன்னை யாரும் லேசாகக்கூட பாதித்துவிடக் கூடாது என்று சுயநலமாக இருக்கிறது. சுய நேசத்தின் பிரதி விளைவு தான் அடிக்கடி புண்படும் அனுபவம் என்பதை உணர்ந்தேன். ஆம், பிறருடைய பேச்சும், செயலும் நம்மை அதிகமாகப் புண்படுத்துகிறது என்றால் நாம் சுயத்திற்கு மரித்தோமா அல்லது சுயத்திற்காகவே வாழ்கின்றோமா என்று யோசித்துப் பார்க்க வேண்டும். தேவ அன்பினால் இதயம் பக்குவமடைந்து, எடுத்ததெற்கெல்லாம் சல சலப்படையாதிருக்கிற ஒரு மனநிலையைப் பெறும்படி தேவ கிருபையை நாடவேண்டும்.

சிந்தனைக்கு...

மனசாட்சிக்கு விரோதமாகச் செயல்படுகிறவன், தன் மன அமைதிக்குக் கல்லறை கட்டுகிறான்.

நவம்பர் 1
இயந்திரங்கள்

1 தெசலோனிக்கேயர் 1:1 –10

விசுவாசிகள் யாவருக்கும் மாதிரிகளானீர்கள் ...
1 தெசலோனிக்கேயர் 1 : 7

சில கிறிஸ்தவர்களை ஜெப இயந்திரங்கள் என்று சொல்லாம். அவர்கள் தினமும் கணிசமான அளவு ஜெபிப்பார்கள். இவர்கள் ஜெபவீரர்கள் என்றும் அறியப்படுவார்கள். ஆனால், இவர்களின் வாழ்க்கைமுறை எந்த விதத்திலும் கர்த்தருக்கு ஏற்றவிதமாயிராது. சில கிறிஸ்தவர்களை ஆராதனை இயந்திரங்கள் என்று சொல்லலாம். இவர்கள் ஆராதனைச் சூழலில் வந்துவிட்டால் கைளை உயர்த்தி, அசைத்து, உரத்த குரல் எழுப்பி, பாடி பரவசமாகி தேவதூதர்கள் என நினைக்கத் தூண்டும் விதமாக ஆராதிப்பார்கள். ஆனால், அவர்களுடைய வாழ்க்கைப் பகுதிகளில் கர்த்தர் கனப்படுவதே இல்லை.

சில கிறிஸ்துவர்களை காணிக்கை எந்திரங்கள் என்று சொல்லாம். உதாரத் துவமாக ஊழியங்களுக்குக் கொடுப்பதும், தாராளமாக மிஷினரிப் பணிகளைத் தாங்குவதும் இவர்களின் இரத்தத்தோடேயே கலந்துள்ளது. ஆனால், இவர்களிடம் காணிக்கை கொடுக்கும் பழக்கம் இருந்தாலும், கனி கொடுக்கும் ஆவிக்குரிய பழக்கமோ இல்லை. சில கிறிஸ்தவர்களை ஊழிய இயந்திரம் என்று சொல்லலாம், இவர்கள் ஊழிய தாகம் மிக்கவர்கள். அங்கு இங்கு என்று இரவு பகலும் கர்த்தருடைய பணியைச் செய்கின்றவர்கள், ஆனால், ஒரு போதும் இவர்கள் கர்த்தரின் வழிகளில் நடப்பதும் இல்லை. கர்த்தருக்குப் பிரியமான சாட்சிகளாக வாழ்வதும் இல்லை.

இயந்திரங்களுக்குக் குறிப்பிட்ட விதமாக இயங்கத் தெரியும். ஆயினும், உணர் வுள்ள இருதயம் இல்லை. எனவே, ஞானமாகச் சிந்தித்துச் செயல்படத் தெரியாது. அநேகர் தேவ உறவில்லாமலே ஜெபிக்கப் பழகிக்கொண்டனர். எனவே, ஜெபம் இருந்தும் அன்போ, தாழ்மையோ, உண்மையோ, சாந்தமோ வாழ்க்கையில் இல்லை. சிலர் ஆராதிக்கப் பழகிக் கொண்டனர். ஆனால் நாம் வாழ்கின்ற விதமும், நம்முடைய குணங்களும் தேவனை மகிமைப்படுத்துகிறதா என்று சிந்தித்தறியும் உணர்வுள்ள இருதயம் இல்லை. சிலர் காணிக்கை கொடுக்க தங்களை தயார்படுத்திக் கொண்டனர். ஆயினும், கர்த்தருக்கு எதை நாம் முக்கியமாகக் கொடுக்கவேண்டும், எதனை கர்த்தர் எதிர்பார்க்கின்றார் என்றெல்லாம் சிந்திக்கும் ஆவிக்குரிய மனம் இல்லை.

சிலர் ஊழியம் செய்யப் பழகிக் கொண்டனர். ஆனால், தங்களின் தனிப்பட்ட வாழ்க்கையில் அவர்கள் போதிப்பதைப் பின்பற்றுவதில்லை. நம்முடைய வாழ்க்கை பிறர் பார்த்து பின்பற்றுவதற்கேற்ற முன்மாதிரித் தன்மையைக் கொண்டிருக்க வேண்டும் நாம் நமக்குள் எப்படியிருந்துகொண்டு எப்படிப்பட்டதோர் வாழ்க்கையை வாழ்கின்றோம் என்பது மிகவும் முக்கியம்.

சிந்தனைக்கு...

கிறிஸ்து வாழ்கின்றார் என்பதை வாயினால் சொல், அவர் உன்னிடம் வாழ்கிறார் என்பதை வாழ்க்கையினால் சொல்,

நவம்பர் 2

நற்குணம் தேவை

மத்தேயு 5:39 -48

நீங்களும் பூரண சற்குணராயிருக்கக் கடவீர்கள்...
மத்தேயு 5 : 48

மணப்பெண் தேடிய ஒருவன் இப்படி விளம்பரம் செய்திருந்தானாம். என்னைத் திருமணம் செய்கிறவருக்கு நிறைய பணம் இல்லாமலிருந்தால் பரவாயில்லை. என்னிடம் ஏராளம் பணம் இருக்கிறது. அவளுக்கு ரெம்ப அழகு தேவையில்லை. நான் நல்ல அழகாக இருக்கிறேன். அவள் அதிகம் படித்திருக்கத் தேவையில்லை. நான் நிறையப் படித்திருக்கிறேன். அவள் அதிக அறிவாளியாயிருக்கத் தேவையில்லை. நான் நல்ல அறிவு படைத்தவனாயிருக்கின்றேன். ஆனால் அவள் நல்ல குணங்கள் மட்டும் இல்லாமல் இருந்துவிடக் கூடாது. ஏனென்றால் என்னிடம் அவை இல்லவே இல்லை.

ஆம், குணமில்லாத இவனுடன் வாழவேண்டுமானால் நல்ல குணமுள்ள ஒரு பெண் மிகவும் அவசியம். சிலர் மற்றவர்களிடம் நல்ல குணங்கள் இல்லை என்று கண்டு மிகவும் வருந்துவார்கள். அவர்களுக்கு நல்ல குணங்களைத் தரும்படி தேவனிடம் மன்றாடுவார்கள், ஆனால், இவர்களிடமும் நற்குணங்கள் காணப்படுவதில்லை. இந்த பூமியில் நல்லவர்களும், நற்குணம் உடையவர்களும் மிக மிகக் குறைவே. ஆனால், தீயவர்களோடும் நற்குணமற்றவர்களோடும் நாம் தொடர்பு கொள்ளவும், செயல்படவும் தேவைகள் உள்ளன. நற்குணமற்றவர்களோடு எப்படிச் செயல்படுவது? நாம் நற்குணமுடையவர்களாக வாழ்வதினால் மட்டுமே அது சாத்தியதையாகும்.

தீமையை தீமையினால் அல்ல. நன்மையினால் வெல்லவே நாம் அழைக் கப்பட்டுள்ளோம். நாம் பணத்தைத் தேடுகின்றோம். பதவியைத் தேடுகிறோம். அந்தஸ்தைத் தேடுகின்றோம். அறிவைத் தேடுகின்றோம். ஆனால், இந்தப் பொல்லாத பூமியில் வெற்றியாக வாழ, எல்லாவற்றையும்விட நல்ல குணங்களும் பண்புகளும் அல்லவா தேவைப்படுகிறது. திருமண உறவுகள் ஏன் உடைகிறது? வியாபார ஐக்கியங்கள் ஏன் பிளவுபடுகின்றன? சபை ஐக்கியங்கள் ஏன் சிதறுகின்றன?

உயர்குணங்கள் இல்லாமையினால்தான். மற்றவர்களின் மோசமான குணங் களைக் கண்டு நம்மால் எரிச்சலடைய முடிகிறது. நம்மால் வெகுண்டெழ முடிகிறது. பழிக்குப் பழி நடவடிக்கைகளை நாட முடிகிறது. ஆனால், சகிக்க வேண்டியதல்லவா அவசியம். பொறுக்கவேண்டியதல்லவா அவசியம். சாந்தமாயிருப்பதல்லவா மிகவும் அவசியம். ஆனால், முடியவில்லை ஏன் நம்மிடம் நற்குணவலிமை இல்லை. சவுலிடமிருந்து வெளிப்பட்ட தவறான குணங்களைத் தாவீது தன்னிடமிருந்த நற்குணங்களைக் கொண்டுதான் சந்தித்தான்.

சிந்தனைக்கு...

இறைவனின் நற்குணங்கள் உன்னிடம் வெளிப்படாத நிலையில், நீ பெற்றதாக எண்ணும் இறைச் சந்தோஷம் போலியானதே.

நவம்பர் 3

தவறை அறிதல்

நீதிமொழிகள் 16:1-20

தீமையை விட்டு விலகுவதே செம்மையானவர்களுக்குச் சமனான பாதை.. நீதிமொழிகள் 16:17

நண்பர் ஒருவர் தானும் சரி, தன்னுடைய மனைவியும் சரி வீட்டை நன்கு சுத்தமாக வைக்க அதிகக் கவனம் செலுத்துவதில்லை. அழுக்குத் துணிகள், உடனுக்குடன் அகற்றப்படாத குப்பைகள், துடைக்கப்படாமல் தூசிபடிந்த பொருட்கள், ஒழுங்கின்றி தாறுமாறாய் கிடக்கும் வீட்டுச் சாமான்கள் என அந்த வீடு மிக மோசமாகவே காட்சியளிக்கும். ஆனால், அதைக்குறித்து யாரும் அவர்களுக்குச் சொல்லி உணர்த்தத் தேவையில்லை. ஏனென்றால், யார் அவர்களின் வீட்டிற்கு வந்தாலும் அவர்களே முந்திக் கொண்டு எங்கள் வீடு சுத்தமாயில்லை. எங்கள் வீட்டில் எதுவும் ஒழுங்காக இல்லை என்று ஆலயங்களில் பாவ அறிக்கை செய்வது போல, மறைக்காமல் சொல்லி விடுவார்கள். ஆனால், அந்த நிலைமையை ஒருபோதும் மாற்றாமல் அதன் நடுவில் வாழ்வதற்குப் பழகிக் கொண்டார்கள்.

சிலருக்குத் தவறானவைகளை தவறானவைகள் என்று அடையாளங்காண முடிகிறது. அவை நல்லதல்ல என்று உணர முடிகின்றது. அவை அகற்றப்பட வேண்டியது என்பது புரிகிறது. ஆனால், அவற்றை வெறுக்கும் மனநிலை இல்லை. அவற்றை அவர்கள் வெறுக்காததால் அவற்றை விலக்குவதற்கான உந்துவிசையும் வலிமையான ஆர்வமும் இல்லை.

தேவ உறவுடன் நாம் வாழ்வதை உறுதிப்படுத்தும் முக்கியமான ஓர் அடையாளம் பாவத்தை அறிதல் அல்ல. பாவத்தை வெறுத்தல் ஆகும். பரிசுத்தமான தேவனுடைய பரிசுத்த ஐக்கியம் நம்மோடிருந்தால் தவறானவைகளை அடையாளங்கண்டு ஒத்துக்கொள்வதோடு நின்றுவிடமாட்டோம். அவற்றை வெறுக்கவும் விலக்கவும் அதிக ஆர்வம் காட்டுவோம். ஏனென்றால், தேவ உறவுடன் வாழ்கின்ற மனிதனால் தவறான குணங்களோடும், தவறான செயல்களோடும், தவறான பழக்கங்களோடும் சேர்ந்து உறுத்தலில்லாமல் வாழ முடியாது.

சிலர் சில பிரசங்கங்களைக் கேட்கும்போது, சில புத்தங்களைப் படிக்கும் போது தேவன் தவறானவைகளைக் குறித்து தங்களுக்கு உணர்த்தியதைச் சொல்வார்கள். ஆனால், அவற்றை விட்டு விலகுவதற்கு எதையும் செய்யமாட்டார்கள். ஏனென்றால், மனிதனுடைய பொதுவான அறிவைக்கொண்டுகூட தவறுகள் சுட்டிக் காட்டப்படும் போது உணரமுடியும். ஆனால், அங்கே வெறுக்கின்ற ஒரு மன நிலை தோன்றாது. தேவன் பேசினார். தேவன் உணர்த்தினார். தேவன் எச்சரித்தார் என்றெல்லாம் நாம் சொல்லியும், அவ்விதம் உணர்த்தப்பட்ட காரியங்களை வெறுத்து விலக்கும் தூண்டுதல் ஏற்படாவிட்டால், நாம் தேவனோடு இல்லை என்றுதான் பொருள் ஆகும்.

சிந்தனைக்கு...

நீ புகழப்படும்போது புகழ்ந்தவன் யார் என்பதைப்பார்.
நீ இகழப்படும்போது உன்னை நீ யார் என்று பார்.

நவம்பர் 4

தோல்விகள்

நீதிமொழிகள் 24 : 1 – 17

ஏழுதரம் விழுந்தாலும் திரும்பவும் எழுந்திருப்பான்...
நீதிமொழிகள் 24 : 16

தாமஸ் எடிசன் விஞ்ஞான கண்டுபிடிப்புகளின் மன்னர். அவர் ஆயிரக் கணக்கான அறிவியல் அடிப்படை சார்ந்த பொருட்களைக் கண்டுபிடித்தார். டெலிபிரிண்டர், கிராமபோன், மின்சார பல்பு, ஒலிபெருக்கி என அவர் ஏராளமான புதிய கருவிகளை உருவாக்கினார்.

ஆயிரத்திற்கு அதிகமான கண்டுபிடிப்புகளுக்கு சொந்தக்காரராகிய அந்த மனிதர் ஆயிரக்கணக்கான தோல்விகளையும் காண நேர்ந்தவர் ஒவ்வொரு கண்டுபிடிப்புகளும் பல தோல்விகளுக்குப் பின்னரே வெற்றியடைந்தன. தோல்விகள் எவைகளை நாம் எப்படிச் செய்யக் கூடாது என்பதை நமக்குத் தெளிவாகச் சொல்லுகின்றன என்று அவர் நம்பினார்.

வெற்றிகளை விரும்பும் நாம், தோல்விகளைக் காண நேர்ந்ததும் துவண்டு போகின்றோம். ஒவ்வொரு தோல்வியும் இன்னும் நாம் மாற வேண்டியது இருக்கிறது என்றும், இன்னும் நாம் வித்தியாசமாக யோசிக்க வேண்டியுள்ளது என்றும், இன்னும் நாம் தொடர்ந்து பிரயாசப்பட வேண்டிய தேவை உள்ளது என்றும் நமக்கு உணர்த்துகின்றது. ஆனால், சில வேளைகளில் நாம் தோல்விகளைக் காண நேர்ந்ததும், முயற்சிப்பதை நிறுத்திவிடு என்று அது சொல்வதாகத் தவறாக எண்ணிவிடுகிறோம்.

ஒரு கற்பாறையை சம்மட்டியால் அடிக்கும் போது உடனேயே உடைந்து விடுவதில்லை. அடி விழுந்ததும் உடையாத நிலை ஒரு தோல்வி அல்ல. அது விரைவில் உடையப் போகிறது. அதுவரை இன்னும் சிலமுறை அடிக்க வேண்டியுள்ளது என்பதையே அது உணர்த்துகின்றது. எலியா பலமுறை ஜெபித்த பிறகுதான், தேவன் நியமித்த வெற்றி வந்தது. மோசே எகிப்தில் பலமுறை தோல்வியடைந்தான். ஆயினும், வெற்றி பெறும்வரை போராடு என்பதே, தேவ வழிநடத்துதலாயிருந்தது. இறுதியில் வெற்றி வந்தது.

தேவ சித்தம் செய்வதிலும் நாம் சிலமுறை தோல்வியடைய நேரிடலாம். தேவ நன்மைகளைத் தேடுவதிலும் நாம் சில முறை தோல்வியடையலாம். உண்மையிலும், உத்தமத்திலும்கூட சில முறை நாம் தோல்வியடையலாம். சிலரிடம் நல்லதை எதிர்பார்த்தும் சில முறை தோல்வியடையலாம். ஆயினும், இனி வெற்றி பெற முடியாது என்பதல்ல அவைகள் தருகின்ற செய்தி. இன்னும் நீ அதிகமாகத் தொடர்ந்து பிரயாசப்பட வேண்டிய தேவை உள்ளது என்பதே அவைகள் தருகின்ற செய்தி.

சிந்தனைக்கு...

தொடர்ந்த தோல்விகளினால் வரும் தொய்வைவிட, தொடர்ந்த வெற்றிகளினால் வரும் கர்வம்தான் மனிதனை அழிக்கிறது.

நவம்பர் 5
உண்மையான கனிகள்

கலாத்தியர் 5:13-26

ஆவியின் கனியோ, அன்பு, சந்தோஷம்...
கலாத்தியர் 5 : 22

என்னிடம் அன்பாகப் பேசிப் பழகின சிலர் உண்மையில் அன்பானவர்கள் அல்ல என்பதை பின்னர் கண்டறிந்தேன். மிகவும் தாழ்மையாக நடந்துகொண்ட சிலர் உண்மையில் அப்படியிருக்கவில்லை.

பொறுமையானவர்கள் என்றும் சாந்தமானவர்கள் என்றும் நான் நம்பும் விதமாக நடந்து கொண்ட சிலர் பின்னர் குமுறும் எரிமலைகளாகவும், கொந்தளிக்கும் கடல்களாகவும் இருந்ததைக் கண்டேன்.

மிகவும் ஒழுக்கமானவர்கள் என்ற தோற்றத்தைக் கொடுத்த சிலர்; பின்னர் ஒழுங்குகள் விஷயத்தில் எந்த விழிப்புணர்வுமில்லாமல் வாழ்ந்ததைக் கண்டேன்.

ஏனென்றால், அவர்கள் தங்களிடம் உண்மையில் நற்குணங்களையோ, நற்பண்புகளையோ கொண்டிராமல், அவ்விதமாக இருப்பதைப்போலத் தங்களைக் காண்பிக்கவே விரும்பியுள்ளனர். ஒரு ஆன்மிக ஏற்றுக் கொள்ளுதலுக்காக அவர்கள் சில நல்ல சுபாவங்கள் தங்களிடம் இருப்பது போல காண்பித்துக் கொண்டார்கள். ஆனால், உள்ளான நிலைமை வித்தியசமாயிருந்ததால் அதிக நாட்கள் அந்த உண்மை நிலைமையை மறைத்து வைக்க இயலவில்லை.

உண்மையான நற்சுபாவங்களும், குணங்களும், ஒரு மனிதனுடைய இருதயம் நல்ல ஒரு இருதயமாகவும், கர்த்தருடைய ஆளுகை உடைய இருதயமாகவும் இருப்பதின் விளைவாகவே ஏற்படுகின்றது. அந்த இருதயம் எந்த சோதனையான சூழ்நிலையிலும், தன்னுடைய நற்குணங்களை வெளிப்படுத்த இயன்றதாக இருக்கும்.

அநேகர் சபைக்காக, சபைச் சூழலுக்காக, பக்தியான தோற்றத்திற்காக, ஆவிக் குரிய வாழ்க்கையில் இருக்கிறோம் என்பதற்காகவே சில நல்ல குணங்களையும், ஒழுங்குகளையும் தங்களிடம் தோன்றச் செய்கின்றனர். அவைகள் அதிக தூரப் பயணத்திற்கு உதவாது. விரைவில் அவைகள் விலகிப் போகும். ஏனென்றால் கிறிஸ்தவ வாழ்க்கை என்பது கனிகளை நம்மிடம் ஒட்டவைக்கும் வாழ்க்கை அல்ல. கர்த்தரோடு அகத்தில் ஏற்படுத்திக் கொள்கின்ற ஆழமான உறவினால் நற் குணங்களை விளைவாகக் கொண்டுவருவதுதான் உண்மையான கிறிஸ்தவ வாழ்க்கை.

சிந்தனைக்கு...

வேதமறிந்து அதன்படி வாழாதவனை விட,
வேதமே அறியாமல் வாழ்பவன் ஆயிரம் மடங்கு மேல்.

நவம்பர் 6
பயன்தராத நியாயங்கள்

1 கொரிந்தியர் 6:1-12

நீங்கள் ஏன் அநியாயத்தைச் சகித்துக் கொள்ளுகிறதில்லை ...
1 கொரிந்தியர் 6:7

ஒருவர் தன்னுடைய மனைவியோடு சேர்ந்து வாழ்வதில் இருக்கின்ற சிரமங்களைக் குறித்து இறைப்பணியாளர் ஒருவரிடம் கூறினார். அந்த மனைவியின் குணநிலைகள், செயல்கள், நடத்தைகள் யாவற்றையும் கேட்டுத் தெரிந்து கொண்ட அந்த இறைப்பணியாளர், அந்த கணவருடைய பக்கத்தில் நியாயங்கள் மிகுதியாக இருப்பதைக் கண்டார். உங்கள் மனைவியை விட்டுப் பிரிந்து செல்வதற்கு உங்களுக்கு ஏராளம் நல்ல நியாயங்கள் இருக்கிறது. ஆனால், இந்த நியாயங்களைச் சார்ந்து நீங்கள் செயல்பட்டால், உங்கள் மனைவிக்கு நஷ்டங்களும் கஷ்டங்களும் ஏற்படும். ஆனால், உங்களுக்கு எந்த லாபமும் கிடைக்கப் போவதில்லை என்றார்.

சில நேரங்களில் நம்முடைய பக்கத்தில் எவ்வளவு நியாயங்கள் இருக்கிறது என்பதையே நாம் பார்க்கின்றோம். ஆனால், அந்த நியாயங்களின் அடிப்படையில் செயல்பட்டால் நமக்கு நன்மையா தீமையா என்று பார்ப்பதில்லை. சில வேளை நியாயங்கள் நன்றாக இருக்கின்றது. ஆனால், அந்த நியாயங்களால் நமக்கு நஷ்டங்களேயன்றி லாபமில்லை. அவற்றால் நம்முடைய மன உணர்வுகளைச் சற்று நேரம் திருப்திப்படுத்திக் கொள்ளலாம். ஆனால், அவற்றால் நம்முடைய வாழ்விற்குத் தீமையே அன்றி நன்மை இல்லை.

நம்முடைய நல்ல நியாயங்களால் நமக்கு நன்மை வர வாய்ப்பில்லையென்றால், அந்த நியாயங்களை விட்டுக் கொடுத்து சில கஷ்டங்களைச் சகிப்பது தான் நல்லது. அநீதிமானாகிய சவுலுக்கெதிராக தேவ பக்திமானாகிய தாவீதுக்கு நியாயங்கள் பல இருந்தன. சவுலைக் கொல்வதற்குக் கிடைத்த வாய்ப்பைப் பயன்படுத்தியிருந்தால், அது அந்தச் சூழ்நிலையில் அநியாயம் அல்ல. ஆனாலும், தன்னுடைய நியாயங்களுக்காகப் போராடிச் செயல்படுவது, தேவனுடைய பார்வையில் நலமாயிராது என்று அவன் எண்ணினான். எனவே, சவுலினால் வந்த அநீதிகளைச் சகித்துக் கொண்டு பொறுமையாயிருந்தான். எனவே, தேவன் அவனுக்கு ஆதரவாக நின்று, தம்முடைய நேரத்தில் தம்முடைய நீதியின்படி செயல்பட்டு, அவனுக்கு உயர்வுகளைக் கொடுத்தார்.

எத்தனையோ குடும்ப வாழ்க்கைகள் உடைந்து போயின. எத்தனையோ விவாகரத்துக்கள், அந்தக் குடும்பத்துப் பிள்ளைகளை அனாதைகளாக்கியிருக்கின்றன. அவர்களுக்கு நியாயங்கள் இருந்தது உண்மை. சில கஷ்டங்களைச் சகிப்பதற்குப் பதிலாக பலர் நியாயங்களுக்காகப் போராடி ஜெயித்தார்கள். அந்த வெற்றி, வாழ்க்கைக்குத் தோல்வியாகிப்போனது.

சிந்தனைக்கு...

புதிய கருத்தை மனிதன் காலம் கடந்தே ஏற்றுக்கொள்கிறான்,
அதற்குள் அவன் பழமையாகி விடுகிறான்.

நவம்பர் 7
கனிகள் எப்படி ஏற்படும்?

யோவான் 15:1-11

என்னில் நிலைத்திராவிட்டால் கனிகொடுக்க மாட்டீர்கள்...
யோவான் 15:4

ஹாஸ்டலில் ஒரே அறையில் தங்கியிருந்த மாணவர்களில் ஒருவன் இரட்சிப்பின் அனுபவம் பெற்று கர்த்தருக்குப் பிரியமாக வாழ்கின்றவன். இன்னொருவன் கடவுள் நம்பிக்கையில்லாமல் எதையும் நம்பிக்கையினால் சாதிக்க முடியும் என்ற கொள்கையுடையவன். கடவுள் நம்பிக்கையில்லாதவன் மற்றவனிடம் “நீ ஏன் இயேசுவை நம்பிக் கொண்டிக்கிறாய்?”அதனால் என்ன பயன் என்று கேட்டான். அதற்கு அவன் “இயேசுவால் தூய்மையான ஒரு வாழ்க்கையை வாழ முடிகின்றதே” என்றான். அதற்கு மற்றவன் “இயேசு இல்லாவிட்டால் அவ்விதம் வாழ முடியாதா? ஒரு வாரம் நீ என்னைக் கவனித்துப் பார். இயேசு இல்லாமலே நானும் உன்னைப் போல் வாழ்ந்து காட்டுகிறேன் என்று சவால் விட்டான்.

சொன்னபடியே ஒருவாரம் எந்தத் தப்பும் தவறும் செய்யாமல் அவனால் தூய்மையாக வாழ முடிந்தது. பார்த்தாயா இயேசுவின் துணையில்லாமலே நான் நன்றாக வாழ்ந்துவிட்டேனே என்றான் அவன். ஆனால், அந்த ஒருவாரமும் அவனுடைய முகத்தில் சந்தோஷமேயில்லை. அந்த ஒருவாரமும் அவன் சுமக்க முடியாத ஒரு சுமையை வேறு வழியின்றி மிகப்பிரயாசப்பட்டுச் சுமப்பதைப் போல உணர்ந்து இறுக்கமான ஒரு மனநிலையோடிருந்தான். ஆனால், கடவுள் பக்தியுடைய மற்றவனோ மிகுந்த மனமலர்ச்சியுடன் எப்பொழுதும் காணப்படுவான்.

ஒரு வேளை மனதை அதிகமாகச் சிரமப்படுத்தி கட்டுப்படுத்தி எந்தக் குற்றமும் குறையும் தவறுமில்லாமல் வாழலாம். ஆனால், அதுவே தூய்மையான வாழ்க்கையல்ல. அது ஒரு கடின முயற்சியினால் உருவான சுயநீதி வாழ்க்கை. ஆனால், இயேசுவினால் தூய்மையான வாழ்க்கையை வாழ்கின்றவர்களிடம் ஒரு பெரிய சமாதானமும், சந்தோஷமும், மனநிறைவும் காணப்படும்.

அவர்கள் கடுமையான ஒன்றை இயேசுவின் ஐக்கியத்தினால் எளிதாக்கிக் கொள்கின்றார்கள். அதனால் அவர்களிடம் சந்தோஷத்தை அதிகமாகப் பார்க்க முடியும். அவர்கள் பிறரிடம் சந்தோஷமாயிருப்பார்கள். அவர்கள் பிறரிடம் அன் பாயிருப்பார்கள். அவர்களிடம் தாழ்மை இருக்கும். அவர்களிடம் பெருமையைப் பார்க்க முடியாது. ஏனென்றால் அவர்கள் சுய மன ஆற்றலால் முயற்சி செய்து தூய்மை யாக வாழவில்லை. அவர்கள் தேவ சமுகத்தை தங்களுக்குள் அனுபவித்து அதனுடைய விளைவாக ஏற்பட்ட மன மகிழ்ச்சியின் விளைவாக, தேவனுக்குப் பிரிய முண்டாகும்படி தூய்மையாய் வாழ்கின்றார்கள்.

சிந்தனைக்கு...

வெளியில் காட்டும் தோற்றங்கள் அல்ல,
உள்ளே ஏற்படும் மாற்றங்களே முதல் தேவை.

நவம்பர் 8

அழகான முகம், அழகற்ற வாழ்க்கை

நீதிமொழிகள் 31:10-31

சௌந்தரியம் வஞ்சனையுள்ளது, அழகும் வீண்...
நீதிமொழிகள் 31:30

அழகான தோற்றம் கொண்ட பெண் ஒருத்தி, ஒழுக்கக்கேடான பல தவறு களைச் செய்து, பலவிதக் குற்றங்களுக்காக நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டாள். அவளைப் பார்த்து நீதிபதி" நீ இவ்வளவு அழகான பெண்ணாயிருந்தும் உன்னு டைய வாழ்க்கை ஏன் இவ்வளவு அசிங்கமாக இருக்கிறது? என்று கேட்டார். அதற்கு அந்தப் பெண் என்னுடைய அழகான தோற்றம்தான் மிகப் பெரிய காரணம் என்றாள்.

ஆம். அவளுடைய அழகு பலரைக் கவர்ச்சிக்க இயன்றதாகவும், பலரை மயக்க இயன்றதாகவும் இருந்ததால், அதனை அவள் மிகவும் தவறாக உப யோகிக்கத் தூண்டப்பட்டாள். ஆம். அழகு கர்வத்தையும் பெருமையையும் ஏற்படுத்தி யதால், அதனை அவள் சுயலாபத்திற்காகத் தவறாகப் பயன்படுத்தி, வாழ்க்கையை அழகற்ற தாக்கிக் கொண்டாள்.

பல சினிமா நடிகைகளும் மாடலிங் பெண்களும், தங்களுக்கு இலவச மாகக் கிடைத்த அழகை வியாபாரப் பொருளாக்கி, தங்களின் வாழ்க்கையை அருவருப்பாக்குவதோடு, அநேகருடைய இருதயத்தையும் அழகிழக்கச் செய்து விடுகின்றார்கள்.

தோற்றங்கள் மட்டுமல்ல. செல்வமும் அழகானதுதான். அறிவும் அழகானது தான். அதிகாரமும் அழகானதுதான். வசதிகளும் அழகானவைதான். ஆனால், இந்த அழகு அவற்றை உடையவருக்கு எளிதாகக் கர்வத்தையும், பெருமையையும், அலட்சிய உணர்வையும்! கொடுத்து வாழ்க்கையை அழகற்றதாக்கக் கூடும். எனவே, அவற்றைக் கையாளுவதில் அதிக கவனமும் கட்டுப்பாடும் அவசியம்.

பணம், பொருள், அதிகாரம், பதவி, சமுதாய அந்தஸ்து, அழகு, திறமை போன்றவை அநேகரை எளிதாகக் கவுரவும், மயக்கவும் செய்யும். ஆனால், அவற்றால் ஏற்படும் அகந்தையும் பெருமையும் அந்த அழகை, அழகற்ற முடிவு களுக்குக் காரணமாக்கும். சாலொமோன் ராஜா எல்லா நிலையிலும் அழகான வற்றையே பெற்றிருந்தான். அநேகரைக் கவர்சிக்க இயன்ற ஞானம், அறிவு, புத்தி, ஐசுவரியம் யாவும் அவனிடமிருந்தது.

ஆயினும், அவன் வாழ்ந்த வாழ்க்கை அழகற்றது. தேவனோடு நெருங்கி வாழ்ந்து பரிசுத்தம் என்னும் அழகைப் பெற்று அணியாவிட்டால், பிற அழகு யாவும் நம்மை வஞ்சிக்க முடியும். அன்பு, தாழ்மை, உண்மை, நேர்மை, பொறுமை, இரக்கம், மனத்தூய்மை போன்றவையே மனிதனை மனிதன் என்று காட்டும் உண்மையான அழகின் அம்சங்களாகும்.

சிந்தனைக்கு...

தவறுகளைக் கண்டு கொள்ளாதவனிடம் கவனமாயிரு.
கண்டித்து உணர்த்துகின்றவனுக்கோ கடனாளியாயிரு.

நவம்பர் 9
பலவிதக் கண்ணாடிகள்

ஏசாயா 6:1-7

தேவனோ உங்கள் இருதயங்களை அறிந்திருக்கிறார்...
லூக்கா 16:15

பொருட்காட்சி ஒன்றிற்குச் சென்றிருந்தபோது அங்கே பலவிதக் கண்ணாடிகளைப் பார்வைக்காக வைத்திருந்தனர். ஒரு கண்ணாடிக்கு முன் சென்றால் அது ஒருவரை மிகப் பருமனாகக் காண்பிக்கும். இன்னொரு கண்ணாடி அவரை மிகவும் நோஞ்சானைப் போன்று காண்பிக்கும். வேறொரு கண்ணாடி மிக உயரமான ஆளாகக் காண்பிக்கும். இன்னொரு கண்ணாடி மிகவும் குட்டையாகக் காண்பிக்கும். ஒரு மனிதன் ஒரு விதமாக இருக்க, அந்தக் கண்ணாடிகள் ஒவ்வொன்றும் அவனை ஒவ்வொரு விதமாகக் காண்பித்தன.

நாம் எப்படியிருக்கிறோம்? நம்முடைய சரியான உருவம் எப்படி? இவைகளை நாம் அறிந்திருக்க வேண்டும். மனிதர்கள் பலவிதக் கண்ணாடிகளைப் போன்றவர்கள். சிலர் நாம் சாதாரணமானவர்களாக இருக்கும்போது, மிகவும் நல்லவர்கள் என்று நம்மைப் பார்த்துச் செல்வார்கள். சிலர் நாம் நல்லவர்களாக வாழும்போது மிகவும் மோசமானவர்கள் என்று சொல்வார்கள். சிலருடைய பார்வையில் நாம் எதற்கும் தகுதியற்றவர்களாளவும் இருப்போம். இவர்களின் பார்வைகள் நம்மைப்பற்றிய சரியான தகவலை நமக்குத் தருவதில்லை.

சில நேரங்களில் பிறர் நம்மை அளவுகளைக் கடந்து மெச்சும்போது, அதிகமாக மகிழ்ந்து விடுகின்றோம். அதுபோல யாராவது குறைத்துப் பேசிவிட்டால், மிகவும் துக்கமடைகின்றோம். ஏனென்றால், நம்முடைய சரியான நிலையை நாம் அறிந்திருக்கவில்லை. இந்த உலகம் எவ்வளவோ தவறான மனிதர்களைத் தலைசிறந்தவர்களாகப் பார்த்து, பாராட்டி அவர்களை உயர்ந்த ஸ்தானங்களிலே வைத்திருக்கிறது. பாராட்டுக்குரிய எத்தனையோ நல்லவர்களைத் தகுதியற்றவர்களாகப் பார்த்து, அவர்களை மிகச் சாதாரணமாக ஒதுக்கியிருக்கிறது.

நம்மைக் குறித்த மற்றவர்களின் அபிப்பிராயங்களை அசட்டை செய்து விடக் கூடாது. அதே வேளையில் அவர்களுடைய மதிப்பீடுகளையே சரி என நினைத்து, நம்முடைய உண்மை நிலைக்குமேல் உயர்வாக நம்மைப் பார்த்து விடாமலும், தாழ்வாகப் பார்த்துவிடாமலும் சரியாக நம்மைப் பார்த்தறிந்து, நிச்சயித்துக் கொள்ள விழிப்பாயிருக்க வேண்டும். நாம் எப்படியிருக்கிறோம் என்பதை நமக்குச் சரியாகச் சொல்பவர் தேவன் ஒருவரே. அவருடைய சமுகத்தில் நாம் அனுதினம் போய் நிற்கும்போது நம்மை நாம் இருக்கிறபடியே கண்டுகொள்ளும் ஒரு பெரிய பாக்கியம் கிடைக்கிறது. அதுபோல, பிறரது குற்றச்சாட்டுகளாலோ, இகழ்ச்சிகளாலோ சோர்ந்து போகவும் மாட்டோம்.

சிந்தனைக்கு...

நம்மை இகழ்கிறவர்களைவிட,
புகழ்கிறவர்களால்தான் அதிக கேடு வருகிறது.

நவம்பர் 10

தேவன் தங்குமிடம்

1 கொரிந்தியர் 6:1-20

உங்கள் சரீரமானது நீங்கள் தேவனால் பெற்றதும் ...
1 கொரிந்தியர் 6:19

பாழடைந்து கிடக்கிறது ஒரு பழைய கட்டிடம். இந்தக் கட்டிடத்தில் குற்றங்கள் புரிகின்றவர்களும், தகாத நடத்தைக்காரர்களும் வந்து தங்கியிருப்பதற்குத் தயக்கம் காட்டமாட்டார்கள். இந்த மோசமான கட்டிடத்தில் பாம்பு, பல்லி, பூரான், சிலந்தி, வௌவால் போன்ற பிராணிகள் தானாக வந்து சௌகரியமாகத் தங்கி யிருக்கும். ஆனால், ஒரு சராசரி நல்ல மனிதனால், இந்தக் கட்டிடத்தில் ஒரு நாள் கூட விரும்பித் தங்கியிருக்க முடியாது.

அதுபோலவே, ஒரு மனிதனின் இயற்கையான இருதயம், பரிசுத்தமான தேவன் தங்குவதற்கு ஏற்றதல்ல. தேவனுக்கேற்ற தெய்வீக அழகோ, நல்ல ஒழுங்குகளோ, இல்லாத மனித இருதயம் தேவன் தங்குவதற்குத் தகுதியானதல்ல. இந்த இருதயம் பிசாசுக்கு ஏற்றது. பிசாசானவன் இங்கே விரும்பி வந்து தங்கியிருப்பான். ஏனென் றால், பிசாசானவன் பாவத்தின் நடுவிலும், பரிசுத்தமற்றவைகளின் நடுவிலும் பிரச்சினையில்லாமல் தங்கக்கூடியவன். எந்த ஒரு அழைப்புமில்லாமல், அவன் தானாக வந்து அங்கு தங்கியிருப்பான்.

ஆனால், தேவனுக்கு அது முடியாதது. அதே வேளையில் மனிதன் தேவன் தங்குவதற்காகப் படைக்கப்பட்டவன். எனவேதான், அவன் தேவ சாயலாகப் படைக்கப்பட்டான். ஆனால், பாவம் தேவனை விட்டு மனிதனை வெகுதூரம் போக வைத்ததால், மனிதன் தேவ சாயலற்று, பாவத்தின் உறைவிடமாக மாறிப் போனான். ஆயினும், தேவன் மனிதனிடம் தங்கவே விரும்புகின்றார். அதற்காகவே தேவன் மனு உருவில் பூமிக்கு வந்தார். மனிதனிடம் தங்குவதற்குத் தடையாக இருந்த பாவத்தை, அவனை விட்டு நீக்குவதற்குப் பாவ நிவாரணம் செய்தார். இதன் மூலமாக ஒரு மனிதன் தன்னை தேவன் தங்குமிடமாக மாற்றுவதற்கான மேன்மையான வாய்ப்பைப் பெற்றான்.

ஒரு மனிதன் இரட்சகராகிய இயேசுவை மனதார விரும்பி, தன்னிடம் வர அழைக்கும்போது அவர் வருகின்றார். அங்கே இயேசு வந்து அவனுடைய இரு தயத்தை தேவன் தங்குவதற்கேற்றவிதமாக மாற்றுகின்றார். இதுதான் இயேசு ஒரு மனிதனிடம் செய்ய விரும்பும் முதலாவது நற்கிரியை. நாம் நல்ல ஆராதனைக் காரர்களாகவும், ஜெப வீரர்களாகவும், காணிக்கை வழங்குகின்றவர்களாகவும், இருக்கலாம். ஆனால், நாம் தேவன் தங்குவதற்கேற்றவர்களாக உள்ளோமா என்பதே முக்கியம். தேவன் தங்குவதற்கான ஆலயமாக, நாம் கிறிஸ்துவினால் மாற்றப்பட்டிருக்கின்றோமா என்பதே மிக முக்கியம்.

சிந்தனைக்கு...

கோயில் கட்டினால் அது பக்தி,
அவருக்கு உன்னைக் கோயிலாக்கினால் அதுதான் புத்தி.

நவம்பர் 11
பிரச்சினைக்குத் தீர்வு

ஏசாயா 57:11-21

துன்மார்க்கருக்குச் சமாதானம் இல்லையென்று....
ஏசாயா 57:21

மன அமைதியின்றித் தவித்த ஒருவர் அவ்வப்போது கிறிஸ்தவ ஆலயங்களுக்குச் சென்று ஆறுதலூட்டும் பிரசங்கங்களைக் கேட்டு வருவார். ஒரு நாள் அவர் மனமுடைந்திருந்த வேளையில் தொலைக்காட்சியில் கிறிஸ்தவ நிகழ்ச்சி ஒன்றைப் பார்த்தார். ஆனால், அந்த நிகழ்ச்சியில் பேசிய கிறிஸ்தவப் போதகர் மருந்துக்குக்கூட ஆறுதலாக எதையும் பேசவில்லை. துன்மார்க்கனுக்குச் சமாதானமில்லை என்ற தலைப்பில் பேசிய அவருடைய பிரசங்கம், முழுவதும் கண்டிப்பின் வார்த்தைகளாகவே இருந்தது. ஆறுதலைத் தேடிக்கொண்டிருந்த அவருக்கு இந்தப் பிரசங்கியாரை அடித்து உதைக்க வேண்டும் போலத் தோன்றியது.

ஆயினும், துன்மார்க்கனுக்குச் சமாதானமில்லை என்ற கடுமையான வார்த்தை, அவருக்குள் திரும்பத் திரும்ப தொனித்துக் கொண்டிருந்தது. துவக்கத்தில் கோபமடைந்தவர் தனக்குள் எதுவோ உணர்த்தப்படுகிறது என்பதை உணர்ந்தார். எத்தனையோ ஆறுதல் பிரசங்கங்களினால் வராத ஒரு விடுதலை தனக்குள் ஏற்படுவதை உணர்ந்தார். தன்னுடைய மன அமைதியின்மைக்கு, தன்னுடைய தேவனற்ற துன்மார்க்க வாழ்க்கைதான் காரணம் என்பதை உணர்ந்தார் . அவருடைய மனந்திரும்புதலுக்கு அது வழி வகுத்தது.

மருந்துகளில் இரண்டு வகை உண்டு. முதல் வகை மருந்து வியாதிகளால் சரீரத்தில் ஏற்படும் வேதனைகளை உணராமல் செய்கின்றவை. இரண்டாவது வகை, வேதனைகளின் காரணமான வியாதியைக் குணமாக்கும் மருந்துகள். முதல் வகை மருந்துகளை தொடர்ந்து உபயோகித்தால் நோய் முற்றி ஆபத்து ஏற்படும். இரண்டாவது வகை மருந்து, வேதனைகளை உடனடியாக அகற்றாவிட்டாலும் அவைகளுக்கு நிரந்தரத் தீர்வுகளைத் தருகின்றவை.

துன்பங்கள் மனிதனைத் தாக்கி மனஅமைதி அகலும்போது ஆறுதலான வார்த்தைகள் அவசியமே. ஆயினும், ஆறுதலான வார்த்தைகளையே நாடிக் கொண்டிருந்தால், அடிப்படைப் பிரச்சனைகளுக்கு தீர்வு ஏற்படாமல் போகும். இயேசு நம்முடைய பாவப் பிணிகளையும், மன அமைதியை அழிக்கும் வாழ்க்கை முறைகளையும் மனந்திரும்புதலின் வாயிலாக குணமாக்கி, உண்மையான மன அமைதியையும் ஆறுதலையும் தருகிறவர். அதுதான் நமக்கு அவசியம். நோய் கண்டுபிடிக்கப்படுதலும், அவைகள் நமக்கு சுட்டிக் காட்டப்படுதலும் நமக்கு மகிழ்ச்சியைத் தரும் விஷயங்களாகத் தோன்றுவதில்லை. ஆனால், அவைகளால் நாம் உரிய சிகிட்சைகளுக்கான வழிகளைக் கண்டறியலாம்.

சிந்தனைக்கு...

கர்த்தரின் கண்டிப்பைக் கண்டு கொள்ளாதவன், அவருடைய ஆறுதலை ஒருபோதும் கண்டடைய முடியாது.

நவம்பர் 12

அறிவு அலட்சியம் செய்யப்படுகிறது

எபேசியர் 5:1-17

கர்த்தருக்குப் பிரியமானது இன்னதென்று...
எபேசியர் 5:10

தேவன் பரிசுத்தர். அவர் நீதிமிகுந்தவர். அவர் உண்மையும் உத்தமமும் உடையவர். அவர் நியாயமும் நேர்மையும் மிக்கவர். தேவனைக் குறித்த இவ்வித மான அறிவு மனிதனுக்கு இல்லையா? தேவன் எப்படிப்பட்டவராக இருப்பார் என்பதை நான் அறியவில்லை என்று யாரும் கூற இயலாது. அப்படியானால் பலவிதமான பக்தியான செயல்களைச் செய்யும் மனிதன், ஏன் அவருக்குப் பிரிய மான நல்ல குணங்களோடு வாழ்வதற்கு முன்வரவில்லை?

அறிவை அவன் அலட்சியம் செய்கின்றான். தேவனைக் குறித்த அறிவை அவன் பெற்றிருந்தும், அந்த அறிவு சார்ந்து செயல்பட அவன் கவனம் செலுத்த வில்லை. அங்கே அவன் அறிவை அவமதிக்கின்றான். மனிதன் தான் தேவன்மேல் பக்திகொண்டு அவரைக் கனப்படுத்துவதாக எண்ணுகின்றான். ஆனால், தேவனைக் குறித்த அறிவின் அடிப்படையில் செயல்படாமல், தன்னுடைய மனப் பிரியம் சார்ந்து பக்தியைக் காட்டுவதால், தேவன் அங்கே அவமதிக்கப்படுகின்றார் என்பதே உண்மை.

உண்மை, உத்தமம், நேர்மை, நியாயம், அன்பு, நீதி, தாழ்மை, தயவு, பொறுமை, சாந்தம் போன்ற நற்குணங்கள்தான் தேவனுக்குப் பிரியம் என்று நாம் அறிந்து கொள்ளவில்லயோ? ஆனால், அறிந்து கொண்டும் அவற்றைக் குறித்துக் கவலைப்படாமல், வேறு சில பக்தியான ஆராதனை முறைகள் மூலம் அவரைக் கனப்படுத்த விரும்பினால், அவர் அதனை ஏற்பாரோ?

இஸ்ரவேல் மக்களின் பக்திச் செயல்களுக்காக தேவ பாராட்டுக் கிடைத்ததைவிட, அதிகமாகத் தேவ கோபமே கிடைத்தது. அவர்கள் துன்மார்க்கச் செயல்களால் மட்டுமல்ல, தேவனைக் குறித்த சரியான அறிவைச் சாராத தங்களின் பக்திச் செயல்களால்தான் அதிகமாகத் தேவனைக் கோபப்படுத்தினார்கள். எனவேதான், தேவன் உங்களின் பலிகளின் திரள் எனக்கு என்னத்திற்கு என்றும், உங்கள் சர்வாங்க பலிகளை வெறுக்கின்றேன் என்றும் கூறினார்.

ஆனால், தேவனைக் குறித்த அறிவைச் சார்ந்து செயல்பட தேவ வல்லமை வேண்டும். ஏனென்றால், நற்செயல்களுக்கு முயற்சிகள் போதுமானவை. நற்குணம் சார்ந்த வாழ்க்கைக்கு நல்ல ஒரு வலிமையான இருதயம் தேவை. அந்த நல்ல இருதயத்தை தேவனிடமிருந்து பெறுவதுதான் உண்மையான பக்தி. ஆம். நம்முடைய மனதைத் திருப்திப்படுத்தும் விதமான பக்தி முறைகளில் அல்ல. தேவன் திருப்திப்படும்படியான பக்தியில் நாம் வளர வேண்டும்.

சிந்தனைக்கு...

பேசுகின்றபடி வாழாதவர்களின் போதனைகள்
கேட்டதின்படி வாழாத ஒரு கூட்டத்தை உருவாக்குகிறது.

நவம்பர் 13

அதிக ஆசையினால்

லூக்கா 12:13-34

பொருளாசையைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள்...
லூக்கா 12:15

பொருளாசை பிடித்த ஒரு புலவன் சிறப்பு மிக்க ஒரு பாட்டு எழுதினான். அதனைப் பார்த்த அரசனும், அவைப் புலவர்களும் வெகுவாகப் பாராட்டினார்கள். அந்தப் புலவனால் எவ்வளவு வெள்ளிக்கட்டிகளைச் சுமந்து செல்ல இயலுமோ அவ்வளவு வெள்ளிக் கட்டிகளைப் பரிசாகக் கொடுக்க அரசன் கட்டளையிட்டான். பேராசை மிக்க அந்தப் புலவன், இதுதான் சரியான வேளை என்று எண்ணி, தன்னால் சுமக்க முடியாத அளவிற்கு அதிகமான வெள்ளிக்கட்டிகளைக் கேட்டு வாங்கிச் சுமந்து சென்றான். கொஞ்ச தூரம் நடந்து சென்ற பின்பு அந்தச் சுமையைச் சுமக்க இயலாமல் அவன் மிகவும் சிரமப்பட்டான். ஆனாலும், பாரத்தைக் குறைக்க அவனுக்கு மனமில்லை. இறுதியில் சுமை தாங்காமல் விழுந்ததால் அவனுடைய முதுகுதண்டும் முறிந்து போனது.

பொருளாசையின் முடிவு இவ்வண்ணமாகவே இருக்கின்றது. ஆசைகளின் பெருக்கம் நம்மையே இறுக நெருக்கி, நம்மை விழுந்துவிடச் செய்கின்றது. பொருள் பெருகப் பெருக ஆசைகளும் பெருகிக் கொண்டேயிருக்கும். சிலர் செல்வநிலைகளில் பெருகும்போதுதான், இன்னும் அதிகமாக வேண்டும் என்ற பேராசைகளில் சிக்கி, தங்கள் மன அமைதியை இழந்து போகிறார்கள். திருப்தியாயிருக்கும் ஒரு மனநிலை பக்குவத்தை நாம் பெறாவிட்டால், சேர்க்கும் செல்வங்களே நம்மை நாசமாக்கும் நாசகாரிகளாக மாறிவிடுகின்றன.

விசுவாசமும், பக்தியும் உடைய ஒருவர் கடுமையாக உழைத்து உயர்ந்த நிலைக்கு வந்தார். ஆனால், செல்வம் பெருக ஆரம்பித்ததும் வேறு சிலரைப் போல அபரிமிதமான உயர்வுகளை அடைய மனம் நாடியது. அதன் விளைவாக அவரது முழு கவனமும் நிலம் வாங்குவதிலும், வீடு கட்டுவதிலும், புதிய தொழில்களைத் துவங்குவதிலுமே சென்றது. காலப்போக்கில் அதிக அலுவலும், சொத்துக்கள் சம்பந்தமான பிரச்சினைகளும் அவருடைய நல்ல பக்தியையும் அழித்து, நல்ல பண்புகளையும் அழித்து, இறுதியில் அவரிடம் தெரிந்ததெல்லாம் பண ஆசையும், பொருளாசையும்தான்.

சாலொமோன் கேளாத பெருஞ்செல்வத்தை தேவன் அவனுக்குக் கொடுத்தார். ஆனாலும், அவனுடைய ஆசை எல்லைகளைக் கடந்ததாக இருந்தது. அதன் விளைவாக அவன் அதிக வரி விதித்து நாட்டு மக்களைக் கசக்கிப் பிழிந்தான். அதன் விளைவாக மக்கள் அவன்மேல் அதிருப்தியுற்றனர். (1 இராஜா - 12:4) இறுதியாக இஸ்ரவேல் சாம்ராஜ்யமே இரண்டாக உடைந்தது.

சிந்தனைக்கு...

பணம், பொருள்தான் இறைவனின் ஆசீர்வாதம் என எண்ணுகின்றவனை, சாத்தான் ஏற்கெனவே ஏமாற்றியிருக்கிறான்.

நவம்பர் 14

மீண்டும் பாவ வாசனை

ரோமர் - 8:1-15

மாம்சத்தின்படி நடவாமல்
ரோமர் - 8:4

ஒருவர் பல நாட்களாகக் குளிக்கவில்லை. அழுக்கேறிய உடலுடன் மோசமான துர்நாற்றம் வீசும் விதமாக உள்ளார். இவர் இந்த நிலைமையில் மதிப்பிற்குரிய மனிதர்களின் அருகில் வந்தால், அவரை யாரும் விரும்பமாட்டார்கள். ஒரு வேளை நல்ல கோட் சூட் அணிந்து, டை கட்டி, ஷூ போட்டுக் கொண்டு வந்தாலும் தோற்றம்தான் மாறும். நாற்றம் போகாது. ஒரு வேளை அந்த துர்நாற்றத்தை மறைக்க வாசனைத் தைலங்களை உடலில் தெளிக்கலாம். ஆனால், அழுக்கான உடலில் அந்த நல்ல வாசனைத் தைலம், மிக மோசமான இன்னொரு விதமான துர்வாசனையை ஏற்படுத்தும்.

மனிதன் பலவிதமான பக்திச் செயல்கள் என்னும் அழகான ஆடைகளை அணிந்து, தனக்கு நல்லதோர் பக்தி தோற்றத்தை ஏற்படுத்தலாம். ஆனால், அவற்றால் பாவ வாசனை அகலாது. அதனால் பக்தி மிகுந்த பலரிடம்கூட நல்ல பண்புகளோ, நல்ல செயல்களோ, நல்ல நடத்தைகளோ இல்லை. ஆராதனை, பிரார்த்தனை, வேத வாசிப்பு, காணிக்கை, ஊழியம் எனப் பல பக்தியான செயல்களால் பக்திமான் என்ற தோற்றம் ஏற்படுமே தவிர, பரிசுத்தவான் என்ற நிலை ஏற்பட்டுவிடாது. அவற்றால் பாவசாயலான சுபாவங்கள் மாறாது.

சிலர் தங்களிடமுள்ள பாவ நிலைமை நீங்குவதற்கு ஏதுவாக வேதம் என்ன சொல்கிறதோ அவற்றைச் செய்வதில்லை. அதே வேளையில், கிறிஸ்தவம் போதிக்கும் சில நல்ல குணங்களைத் தங்களின் சொந்த பக்தி முயற்சிகளால் ஏற்படுத்திக் கொள்வார்கள். இப்போது இவர்களிடம் சில நல்ல பண்புகளைப் பார்க்க முடியும். ஆனாலும், பல பகுதிகளில் பழைய சுபாவங்களும், ஜென்ம சுபாவங்களும் வந்து கொண்டுதானிருக்கும். பழைய பாவ சுபாவங்களும், புதிய நல்ல சுபாவங்களும் சேர்ந்து கலப்படமாக வெளிப்படும்போது, அது மாய்மாலம் அல்லது சுயநீதி என்ற இன்னொரு விதமான மோசமான தோற்றமாக மாறும்.

முதலாவது அடிப்படை மனமாற்றம் ஏற்பட வேண்டும். உண்மையான மனந்திரும்புதலுக்கு வர வேண்டும். வேத வார்த்தைகளின் அடிப்படையில் இயேசுவை இரட்சகராக ஏற்றுக் கொண்டு மறுபடியும் பிறந்த ஆவிக்குரிய நிச்சயமான அனுபவத்தைப் பெற வேண்டும். அப்போது தேவ ஐக்கியத்தால் பாவம் அகலும், பரிசுத்தம் தோன்றும், பழைய மனிதன் அகற்றப்பட்டு ஆவியினால் பிறந்த புது மனிதன் வெளிப்படுவான். அப்போதுதான் ஆவிக்குரிய நற்குணங்கள் தோன்றி, விரும்பத்தக்க ஆவிக்குரிய நிலையை அடைய முடியும்.

சிந்தனைக்கு...

தன்னுடைய முட்டாள்தனங்களை நன்கு கண்டு கொண்டவனே, பிறரால் ஞானியாகப் பார்க்கப்படும் தகுதி பெறுகிறான்.

நவம்பர் 15
வெற்றி தோல்விகள்

சங்கீதம் 20 :1-9

நாங்களோ எழுந்து நிமிர்ந்து நிற்கிறோம்...
சங்கீதம் 20 : 8

பல கிராண்ட்ஸ் போட்டிகளில் வென்று விளையாட்டுத் தர வரிசையில் முன்னிலையில் இருந்தவர் டென்னிஸ் வீராங்கனை செரினா வில்லியம்ஸ். ஆனால், சமீபத்தில் தரவரிசையில் மிகவும் தாழ்ந்த நிலையில் இருந்த ஒரு டென்னிஸ் விளையாட்டுக்காரியிடம் பரிதாபமாகத் தோற்றுப்போனார். அந்த தோல்வியை ஜீரணிப்பது செரினாவுக்கு மிகவும் கடினமாயிருந்தது. ஆயினும், அந்தத் தோல்வி இனி வெற்றியே இல்லை என்ற அர்த்தத்தைக் கொடுத்துவிடவில்லை. மீண்டும் மனந்தளராமல் போட்டிகளில் கலந்து கொண்டார். மறுபடியும் வெற்றிகளைக் காண ஆரம்பித்தார்.

வாழ்க்கைப் பாதையில் வெற்றிகளும் தோல்விகளும் மாறி மாறி வரவே செய்யும். வெற்றிகளைக் காணும்போது இதுவே நிரந்தரம் என்று எண்ணிவிடவும் முடியாது. தோல்விகளைக் காணும்போது இனி எழும்ப இயலாது என்று எண்ணிவிடவும் கூடாது. வெற்றியைத்தக்க வைக்க தகுந்த விழிப்புணர்வும் தேவை. தோல்வியிலிருந்து எழுந்து வர நல்ல நம்பிக்கையுணர்வும் தேவை.

தேவனால் வல்லமையாகப் பயன்படுத்தப்பட்டவர்களும், தேவனால் விசேஷக் கிருபை பெற்றவர்களும் வெற்றி தோல்விகளை மாறி மாறிச் சந்தித்தே முன்னேறினார்கள். வெற்றியின் வேளைகளிலும் தோல்வியின் நேரங்களிலும் அவர்களின் பார்வை தேவன் காண்பித்த இலக்கின் மேலேயே இருந்தது. யோசேப்பும் தாவீதும் வெற்றி தோல்விகளை மாறி மாறிச் சந்தித்துக் கடந்து வந்தவர்களே. அவர்கள் வென்ற வேளைகளில்தேவனை மகிமைப்படுத்தினார்கள். வீழ்ந்த வேளைகளில் தேவனை உறுதியாகப்பற்றிக்கொண்டார்கள். வெற்றி யாளன் என்பவன் தொடர்ந்து வெற்றிகளையே பெற்றுக்கொண்டிருப்பவன் அல்ல. தோல்விகளைக் காண நேரிட்டாலும் மீண்டும் மீண்டும் எழுந்து வெற்றியை நோக்கி முன்னேறத் துடிப்பவனே உண்மையான வெற்றியாளன்.

ஆடு மேய்த்துக்கொண்டிருந்த தாவீது நாடெங்கிலும் வியந்து பாராட்டப்படும் அளவிற்கு நம்பர் ஒண் சாதனையாளனாக மாறினான். ஆயினும் தொடர்ந்து வந்த சூழ்நிலைகளில் அவனுடைய எண்ணங்கள் ஈடேறாமல் தோல்வியைச் சந்தித்தான். ஆயினும், மனந்தளர்ந்து போய் மறுபடியும் ஆடுமேய்க்கும் தொழிலுக்குத் திரும்பிவிடவில்லை. தேவனைச் சார்ந்த தளராத விசுவாசத்தோடு மீண்டும் மீண்டும் தோல்வியின் படுகுழிகளிலிருந்து எழுந்து வரவே தீவிரம் காட்டினான்.

சிந்தனைக்கு...

நல்லவர்களின் வாழ்வில் தீமையும் நன்மையாகிறது.
தீயவர்களின் வாழ்வில் நன்மையும் தீமையாகிறது.

நவம்பர் 16
செயல்பட வேண்டும்

ஆதியாகமம் 1:25-31

நீங்கள் பலுகிப் பெருகி பூமியை நிரப்பி...
ஆதியாகமம் 1:28

வியாபாரம் செய்து மிகவும் வசதிமிக்க நிலைமையிலிருந்த ஒருவருக்கு ஆன்மிக வாழ்வில் அதிக ஆர்வம் ஏற்பட்டது. எனவே, அவர் தன் சொத்துக்களையெல்லாம் ஆன்மீக ஆசிரமம் ஒன்றிற்குக் கொடுத்துவிட்டு அங்கேயே தங்கி விட்டார். உபன் யாசங்கள் கேட்பதிலும், மந்திரங்கள் ஓதுவதிலும், ஆன்மீக நெறிகளைக் குறித்த புத்தகங்கள் படிப்பதிலும், பிரார்த்தனைகள் செய்வதிலும் தன்னுடைய நேரங்களை முழுமையாகச் செலவழித்தார்.

ஆனால், இதுவல்ல உண்மையான ஆன்மீக வாழ்க்கை. ஆன்மீக வாழ்க்கை என்பது எங்கேயோ அமர்ந்து கொண்டு பிரார்த்தனை செய்வதும், பக்தியுடன் பாடுவதும், உபதேசங்கள் கேட்பதும், கடவுளைத் துதித்துக் கொண்டும் இருப்பது அல்ல. எனக்குக் கோயில் கட்டி, என்னை வழிபட்டுக் கொண்டிரு. என்னைப் பாடித் துதித்துக் கொண்டிரு. வேறு வேலை எதுவும் செய்யாமல் பிரார்த்தனை செய்து கொண்டிரு என்று வழிபாடுகள் சார்ந்த ஆன்மிகத்திற்கு தேவன் அழைக்கவில்லை. ஆன்மீகம் என்பது ஒரு ஆக்கப்பூர்வமான விளைவுகள் ஏற்படுத்தும் செயல்பாடுகள் சார்ந்தது.

ஆதாமைப் பார்த்து பலுகிப் பெருகு என்றார். நோவாவிடம் ஒரு பேழையைக் கட்டச் சொன்னார். ஆபிரகாமை ஒரு பெரிய சந்ததியை உருவாக்க அழைத்தார். மோசேயை இஸ்ரவேல் மக்களை கானானுக்கு வழிநடத்துவதற்காக அழைத்தார். யோசேப்பை அந்நிய நாட்டிற்கு அதிபதியாகச் செய்தார். தானியேலை தேவனை அறியாத நாட்டில் உயர் பதவி வகிக்கச் செய்தார். நெகேமியாவை இடிந்து கிடக்கும் எருசலேம் மதில்களைக் கட்டும்படி ஏவினார். இயேசு தம்முடைய சீடர்களிடம் உலகமெங்கும் போய் நற்செய்தி அறிவிக்கச் சொன்னார். தேவ மனிதர்கள் யாவரும் ஒரு ஆக்கப்பூர்வமான பணியைச் செய்ய அழைக்கப்பட்டவர்களே.

தேவன் ஒரு வேலையைச் செய்திடவே நம்மை அழைக்கின்றார். ஒரு ஆக்கப்பூர்வமான செயல்பாட்டிற்காகவே நம்மைத் தெரிந்து கொள்கின்றார். ஆனால், அந்த வேலையை அல்லது செயலை வெற்றியாக தேவ பக்தி வெளிப்படும் விதமாகச் செய்ய வேண்டும். நாம் செய்யும் பணியில் அல்லது வேலையில் தெய்வீக வாசனை வீச வேண்டும். தெய்வீகக் குணாதிசயங்களும் உயர்ந்த பண்புகளும் பிரதிபலிக்க வேண்டும். அதுதான் ஆன்மிகமாக வாழ்தல். நாம் செய்கின்ற வேலைகளில் மிக முக்கியமானது சமுதாயத்தின் நடுவில் கர்த்தரை வெளிப்படுத்தி வாழ்கின்ற ஆவிக்குரிய சாட்சி வாழ்க்கை ஆகும். அதற்குத் தேவையான வலிமையும், ஆற்றலும் பெறவே ஜெபம், வேத தியானம், ஆராதனை, துதி, உபவாசம் போன்றவை.

சிந்தனைக்கு...

எத்தனை புத்தகங்கள் படித்தவன் என்பதல்ல. எத்தனை பேர் படிக்கத்தக்க புத்தகமாய் இருக்கிறாய் என்பதைப் பார்.

நவம்பர் 17

இது நம்முடையதல்ல

எபிரெயர் 11:8-16

மேன்மையான பரம தேசத்தையே விரும்பினார்கள்...
எபிரெயர் 11:16

நான் படித்த பள்ளிக்கூடத்தின் பக்கத்தில் புளிய மரங்கள் ஏராளம் உண்டு. அங்கே விழுந்து கிடக்கும் புளியங்காய்களை பொறுக்குவதில் எங்கள் நடுவில் பலத்த போட்டியிருக்கும். சிலவேளைகளில் இது உன் பங்கு. இது என் பங்கு என்று ஆளுக்கு சில மரங்களை பங்கு வைத்து, அதன்படி புளியங்காய்களைப் பொறுக்குவோம். சில வேளைகளில் நாங்கள் சண்டையிடும் சத்தத்தைக்கேட்டு, அதன் சொந்தக்காரர் ஓடிவருவார். நாங்களோ தப்பித்தோம், பிழைத்தோம் என்று தலை தெறிக்க ஓடிவிடுவோம். இந்த உலகத்தைப் பாருங்கள். இது என் பூமி. இது என் பாட்டன் பூமி. இது என் நிலம். இது என் வீடு. இந்த தோப்பு எனக்குத்தான் சொந்தம் என்று எத்தனையோ சண்டைகள், வழக்குகள், கொலைகள் எத்தனை! விரோதங்கள் எத்தனை!

இன்று ஆன்மீக வட்டாரங்களிலே பதவி போட்டி, சொத்து தகராறு. யார் பெரியவன் என்ற பிரச்சினை ஆகியவை பெருத்துப் போயுள்ளன. நிலையற்ற உலகத்தில் சொத்துக்காகவும், பதவி சுகத்திற்காகவும், பெரியவன் என்ற பெருமைக்காகவும், ஆவிக்குரிய பண்பு நிலைகளும், கொள்கைகளும் தியாகம் செய்யப்படுகின்றன. அநேகர் இவ்வுலக ஆஸ்தி, அந்தஸ்து ஆகிய காரியங்களில் காண்பிக்கின்ற ஆர்வத்தில் ஒரு சிறு பகுதிகூட நித்திய வாழ்வு தொடர்பான உரிமைகள் விஷயத்தில் காண்பிப்பதில்லை. அழிந்து போகிறவைகளுக்காக அல்ல. அழியாதவைகளுக்காகச் செயல்பட ஆண்டவர் நம்மை அழைத்தார்.

ஆபிரகாமுக்கும் லோத்துவுக்கும் கருத்து வேறுபாடு ஏற்பட்டு பிரிந்து போக வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டபோது, ஆபிரகாம், "இது எனக்குதான் சொந்தம்" என்று போராட விரும்பாமல்,லோத்து விரும்பியபடி விட்டுக் கொடுக்கத் தயாராயிருந்தான். ஏனென்றால், அவன் நிலையற்ற உலகில் சொத்துக்களைப் பெரிதாக எண்ணாமல், தேவன் தரப்போகும் நிலையான நகரத்தின் மேலேயே கண்களை வைத்துக் கொண்டிருந்தான்.

பிரியமானவர்களே! இந்த உலகில் நாம் பரதேசிகள், நாம் அன்னியர்கள். இது நமக்குச் சொந்தமானதல்ல. அங்கே நாம் உரிமை பாராட்டி அதிக நாள் எதையும் அனுபவக்கப் போவதில்லை. வெறுமனே வந்தோம். வெறுமனேதான் மண்ணுக்குத் திரும்புவோம். நமக்குச் சொந்தமானதல்லாததற்காக நாம் போடும் போட்டிகளும், சண்டைகளும் விருதா. நித்தியப் பங்கை நினைப்போம். தேவன் நமக்குச் சொந்தமாகத் தருவேன் என்று வாக்களித்த மறுமைக்காகப் பிரயாசப்படுவோம். வீண் ஆசைகளை விட்டு விலகி, நமக்குரிய விண் மகிமையைத் தேடுவோம்.

சிந்தனைக்கு...

இழந்ததை எண்ணி வருந்தாதே. அதை நீ கொண்டு வரவில்லை.
இருப்பதை எண்ணிப் பெருமைப்படாதே. அதை நீகொண்டுபோவதில்லை.

நவம்பர் 18

சுவையான இச்சைகள்

11 தீமோத்தேயு 2:1-22

பாலியத்துக்குரிய இச்சைகளுக்கு நீ விலகியோடி...
11 தீமோத்தேயு 2:22

ஐஸ்கிரீம் மிகவும் சுவையானது. அதனை மனதார வெறுக்கவோ, வேண்டாம் என்று விலக்கவோ முடியுமா? ஆனால் ஐஸ்கிரீம் நம்முடைய சரீரத்திற்கு எந்தெந்த விதத்தில் கேடு செய்கிறது என்ற அறிவைப் பெறும் போது, அதனை விரும்பத்தக்கதாக உணர்ந்தாலும், வேண்டாம் என்று விலக்கி வைக்க உந்தப்படுகின்றோம். அதுபோலவே சில பாவமான விஷயங்களை மனதார வெறுப்பதும், விலக்கி வைக்க விரும்புவதும் கடினமான காரியங்கள். வாலிபன் ஒருவன் பாவத்தை வெறுப்பது சம்பந்தமான பிரசங்கம் ஒன்று கேட்டான். அதனை மிகச் சரியென்று ஒத்துக் கொண்டான். ஆனால், தன்னை ஒப்புக்கொடுக்கும்படி அழைத்தபோது அவன் தயங்கினான். ஏனென்றால், தன்னால் சில காரியங்களை தவறு என்று உணர இயன்றாலும், அவற்றை வெறுக்க முடியவில்லை என்றான்.

உணர்ச்சி ரீதியான சில இன்பங்கள், உற்சாகம் தரும் சில ஐக்கியங்கள், பொழுது போக்கு குதூகலம் தரும் சில நிகழ்ச்சிகள் போன்றவை ஐஸ்கிரீம் ரகமானவை. அவற்றை வெறுப்பதும், விலக்குவதும் எளிதானதல்ல. ஆனால், பரிசுத்தமான வாழ்க்கையின்மேல் ஒரு நல்ல ஈடுபாடு வரும்போது, இவற்றைத் தவிர்க்க வேண்டும் என்ற நல்ல விருப்பமும் வர இயலும். சில விஷயங்கள் வெறுக்கத்தக்கதாக இருப்பதால் அல்ல. அவை ஆரோக்கியத்திற்கு எதிரானவைகள் என்ற நல்ல ஆவிக்குரிய அறிவைச் சார்ந்துதான் அவற்றைத் தவிர்க்க முடியும்.

நல்ல உடல் நலனை விரும்புகின்ற ஒருவனுக்கு ஐஸ்கிரீமையோ, பிட்சாவையோ, பர்கரையோ தவிர்ப்பதற்கேற்ற ஒரு நல்ல மனநிலை வந்துவிடும். அதுபோலவே சில காரியங்கள் சுவைமிகுந்ததாயினும் கர்த்தருடைய ஐக்கியம், கர்த்தருக்கேற்ற ஓர் நல்ல வாழ்க்கை, உயர்ந்த பரிசுத்த ஜீவியம் ஆகியவை குறிக் கோள்களாக மாறும்போது அவற்றிற்கு விலகிச் செல்லும் ஆர்வமும், ஆசையும் வந்துவிடும். நான் சுவை மிகுந்த பல உணவு வகைகளை விலக்கி வைக்கின்றேன். ஆனால், அவை வெறுப்பிற்குரியதாகவோ, சுவையற்றவையாகவோ எனக்குத் தோன்றவில்லை. ஆனால், சரீரத்தை சற்று பிரச்சனைகளிலிருந்து விலக்கி வைக்க விரும்புவதால், சுவையான உணவு வகைகளையும் விலக்கி வைக்க முடிகின்றது.

அதுபோலவே, நம்முடைய வாழ்க்கையைச் சரியாக வைப்பதும், சந் தோஷமாக வைப்பதும், கர்த்தருக்கு உகந்ததாக வைப்பதும் நம்முடைய நோக்கங்களாக மாறினால், அவற்றை விலக்கி வைப்பதும், அவற்றிற்கு விலகிப் போவதும் இயலாத காரியங்கள் அல்ல.

சிந்தனைக்கு...

எதையும் விட்டு விலகத் தயாரானவனே, இறைவனை விட்டு விலகாதிருக்க விருப்பமாயிருக்கிறான்.

நவம்பர் 19
விரும்புவதும் பின்பற்றுவதும்

லூக்கா 10:25-37

நீயும் போய் அந்தப்படியே செய்...........
லூக்கா 10:37

குறிப்பிட்ட ஒருவர் எது சரியான கிறிஸ்தவப் போதனை, எது கலப்படமான போதனை என்று சரியாகக் கண்டுபிடிப்பார். யார் சரியான தேவ ஊழியர்கள், யார் கள்ளப் போதகர்கள் என்பதை மிகக் கூர்மையாக ஆராய்ந்து அறிவார். தவறான உபதேசங்களையும் தவறான உபதேசிகளையும் கடுமையாக விமர்சிப்பார். அவரிடம் சற்று நேரம் பேச நேர்ந்தவர்கள் அவர் எவ்வளவாய் சத்தியத்திற்காக நிற்கின்றார் என்றே எண்ணுவார்கள். ஆனால், அவர் சரியான சத்தியத்தின்படியான ஒரு சரியான கிறிஸ்தவ வாழ்க்கையை வாழ்வதில்லை.

சிலர் நல்ல தரமான ஆவிக்குரிய புத்தகங்களை விரும்பிப் படிப்பார்கள். சரியான பிரசங்கங்களைப் பகுத்தறிந்து ஆவலாகக் கேட்பார்கள். சரியான சத்தியங்களைப் பேசும் பிரசங்கிமார்களை அதிகமாக விரும்புவார்கள். ஆனால், அந்த சத்தியங்களின் அடிப்படையில் வாழமாட்டார்கள். ஏனென்றால் சரியானவைகளை விரும்பவும் பாராட்டவும் ரசிக்கவும் ஒரு நல்ல மனநிலை போதுமானது. ஆனால் அவைகளைப் பின்பற்றவோ ஒரு நல்ல இதயம் வேண்டும்.

என்னுடைய ஆவிக்குரிய புத்தகங்களை வரிவிடாமல் படித்து, விலாவாரியாக அதிலுள்ள சத்தியங்களுக்காகப் பாராட்டின சிலரிடத்தில், நான் கண்ட துக்கமான விஷயம், அவர்கள் அந்த சத்தியத்தின்படி வாழவில்லை என்பதுதான். அவைகளைப் படித்து மனநிலையில் ஒருவித மகிழ்ச்சியை உணரவும், மனந்திறந்து பாராட்டவும் அவர்களுக்கு முடிகிறதேயன்றி, அவைகளுக்கேற்றபடி வாழ்க்கையைச் சீர்செய்து கொள்ள இயலவில்லை.

ஆம், உண்மையை விரும்புவதும், ஒத்துக் கொள்வதும் என்பது வேறு. அவைகளை வாழ்க்கை முறையாக்கிக் கொள்வது என்பது வேறு. அநேகர் உண்மைகளை விரும்பவும் பாராட்டவும் முடிவதால், தாங்கள் தேவனுக்கு முன்பாக நல்லவர்களாக இருப்பதாக எண்ணிக்கொள்வார்கள். ஆனால், அது ஒரு தவறான புரிந்துகொள்ளுதல் ஆகும். நாம் நம்மை பாவிகள் என்ற நிலையில் பார்க்க முடிந்தவர்களாய், உண்மையான மனந்திரும்புதலின் வாழ்க்கைக்கும், பாவத்தைக் குறித்து வருந்தும் நிலைக்கும் நேராக வந்தால்தான், ஒரு பரிசுத்தமாக்கப்பட்ட இதயத்தைப் பெற முடியும். அப்பொழுதுதான் உண்மையை ரசிக்கின்றவர்களாக மட்டுமன்றி, உண்மையின்மேல் தாகங்கொண்டவர்களாக, அதனை வாழ்க்கையில் பின்பற்ற முடியும். அந்த அனுபவம்தான் தேவனுக்கு முன்பாக நம்மை நல்லவர்களாக நிற்க வைக்கும்.

சிந்தனைக்கு...

புத்தகங்களைப் படித்துக்கொண்டேயிருப்பதில் விசேஷமில்லை. நீயே புத்தகமாக மாறு. பிறர் உன்னைப் படிக்கட்டும்.

நவம்பர் 20

அனுபவங்கள் எவ்வளவு?

எபிரெயர் 6 : 1 -12

பூரணராகும்படி கடந்து போவோமாக...
எபிரெயர் 6:2

லண்டன் மாநகருக்குப் போயிருக்கிறீர்களா? என்று யாராவது என்னைக் கேட்டால் நான் "ஆம்" என்று பதில் கூற முடியும். 2003-ம் ஆண்டு லண்டன் வழியாக நான் அமெரிக்கா சென்றேன்.ஆனால், லண்டன் ஹீத்ரு விமான நிலையத்தில் சில மணி நேரங்கள் தங்கியிருந்த ஒருஅனுபவத்தைத் தவிர, லண்டனில் நான் எங்கும் போகவும் இல்லை. எதையும் பார்க்கவும் இல்லை.

இதுபோலவே இரட்சிக்கப்பட்டிருக்கின்றீர்களா? என்றால், சிலர், தயங்காமல் "ஆம்" என்று கூறுவார்கள். ஆனால், இரட்சிப்பின் அனுபவங்கள் அவர்களுக்கு மிகவும் சுருக்கமானது. சிலருக்கு ஞானஸ்நானம் எடுத்துக்கொள்வதுதான் இரட்சிப்பின் அனுபவம். சிலருக்குச் சபை கூடி ஆராதிப்பதுதான் மனந்திரும்பிய அனுபவம். அவைகளுக்கு அப்பால் விசேஷமாகக் கூற எதுவும் இராது.

இந்நாட்களில் பெரும்பாலான கிறிஸ்தவர்கள் ஒருவிதமான மாயையில் சிக்கித் தங்களைச் சரியாக அடையாளம் காண இயலாதவர்களாக உள்ளனர். அவர்கள் ஆசையோடும் ஆர்வத்தோடும் ஆண்டவரை ஆராதித்து மகிழ்வதையே ஆவிக்குரிய வாழ்க்கை என்று எண்ணுகின்றனர். நாம் கூடிவரும் இடங்களில் நம்முடைய பக்தியை வெளிப்படுத்துவதில் அல்ல, நாம் வாழ்கின்ற சூழ்நிலைகளில் எப்படிப்பட்ட மனநிலைகளோடும், குணநிலைகளோடும் பண்புகளோடும் வாழ்கின்றோம் என்பதே இரட்சிப்பின் அனுபவத்திற்கு அடையாளங்களாகின்றன.

ஆனால், இரட்சிப்பு என்பது அவ்வளவு குறுகிய ஒரு எல்லைக்குட்பட்டதல்ல. ஒரு சில ஆவிக்குரிய சடங்குகளில் பங்கு பெற்றதை ஆவிக்குரிய வாழ்க்கையாக எடுத்துக்கொள்ள முடியாது. பாவங்களின்மேல் வெற்றி, பரிசுத்த வாழ்க்கையில் வேகமான முன்னேற்றம், தேவ ஐக்கியத்தை அனுதின வாழ்க்கையில் அனுபவித்தல், கர்த்தருக்கேற்ற நற்குண வாழ்க்கையில் வேண்டும் வளர்ச்சி, பிறருக்கு நன்மை செய்வதில் ஆழ்ந்த ஈடுபாடு, உண்மை, நேர்மையில் பிரகாசித்தல் போன்ற பல்வேறு ஆவிக்குரிய அனுபவங்கள் வாழ்க்கையில் வேண்டும்.

அவை இல்லாத பட்சத்தில் இரட்சிக்கப்பட்டேன் என்று கூறுவதும், அபிஷேகம் பெற்றேன் என்று கூறுவதும், அர்த்தமற்றது. எனவேதான், யோவான் மனந்திரும்புதலுக்கேற்ற கனிகளைக் கொடுங்கள் என்று பிரசங்கித்தான். ஏனென்றால், கனிகளால் நிரூபிக்கப்படாத மனந்திரும்புதல் பிரயோஜனமற்றது.

சிந்தனைக்கு...

சிறந்த சிந்தனைகள் என்ற உரம் இல்லையேல், வாழ்வில் உயர்ந்த செயல்கள் என்ற கனிகள் இருப்பதில்லை

நவம்பர் 21
சிறு தோல்விகள்

யாத்திராகமம் - 6:1-12

பார்வோன் எனக்கு எப்படிச் செவிகொடுப்பான்?
யாத்திராகமம் 6 : 12

பட்டத்து இளவரசன் ஒருவன் எதிரி நாட்டின்மேல் போர்தொடுக்கப் போகும் பெரிய படைக்குத் தலைமை தாங்கிச் செல்ல ஆயத்தமாகிக் கொண்டிருந்தான். எதிர்பாராத விதமாக எலி ஒன்று குறுக்கிடவே வாளை எடுத்துக் கொண்டு அதனை வெட்டும்படி துரத்தினான். அவன் எவ்வளவோ முயன்றும் முடியாமல் எலி தப்பி யோடி விட்டது. சோர்ந்து போன இளவரசன், கேவலம் ஒரு எலியைக்கூட வெட்ட இயலாத நான் எப்படி எதிரி நாட்டோடு சண்டையிட்டு வெற்றி பெறப் போகிறேன் என்று எண்ணி, யுத்தத்திற்குப் போகாமல் பின்வாங்கிப் போனான்.

சில நேரங்களில் இந்தப் புத்தியீன இளவரசனைப் போல, நாமும் சிறு சிறு தோல்விகளைக் கண்டு சோர்ந்து போய், நம்மை நாமே எதற்கும் லாயக்கற்ற வர்கள் என்று முடிவு செய்துவிடுகின்றோம். இஸ்ரவேல் மக்களை விடுவிக்கும்படி எகிப்து சென்ற மோசேக்கு துவக்கத்தில் அந்த மக்களே செவி கொடுக்கவில்லை. எனவே, சோர்ந்து போன அவன், இவர்களே எனக்குச் செவிகொடுக்காத போது, எகிப்தின் ராஜா எனக்கு எப்படிச் செவிகொடுப்பான் என்று தயங்கி நின்றான். ஆனாலும், அதே மோசேயின் முன்னால் தேவன் அந்த நாட்டு மன்னனையே அடங்கிப் போக வைத்தார்.

நாம் பெரிய பலசாலிகளாக இருந்தாலும், சில நேரங்களில் சில சின்ன விஷயங்களில் நாம் தோற்றுப் போய் விடக்கூடும். நாம் மிகப்பெரிய திறமை யாளர்களாக இருந்தாலும், சாதாரண சில காரியங்களில் அந்தத் திறமை நமக்குக் கை கொடுக்காமல் போக முடியும். மிக வலிமையான ஆவிக்குரிய நிலைகளை உடைய பலர் சில சின்னக் காரியங்களில், சாதாரண உலக மனிதன் அடையும் வெற்றியைக்கூட அடைய முடியாமல், தோல்வி அடையும் வேளைகள் உண்டு. ஆனாலும், இந்தச் சின்ன விஷயத் தோல்விகள், பெரிய வெற்றிகளுக்கு நாம் தகுதி யானவர்கள் அல்ல என்பதை முடிவு செய்துவிட முடியாது.

சிலுவையின் பாதையில் இயேசுவை பின்பற்ற விரும்பிய பேதுருவால் அது கூடவில்லை. ஆனாலும் கர்த்தருடைய வேளை வந்தபோது, பேதுரு அதை விட மிகக் கடுமையான சூழ்நிலைகளிலும் கர்த்தருடைய பலத்தில் மிகப்பெரிய சாதனைகளைப் புரிந்தான். முதல் தோல்வி முற்றிலும் தோல்வி என்ற நிலை ஏற்படவில்லை. சிறு தோல்விகளைச் சுட்டிக்காட்டி, பெரிய வெற்றிகளுக்கு நேராக நாம் போகக்கூடாதபடி தடை செய்ய விரும்பும் சாத்தானுக்கு, நாம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

சிந்தனைக்கு...

உன்னுடைய முயற்சிகள் ஒரேயடியாக மாற்றங்களை ஏற்படுத்தாவிட்டாலும், ஒரு சில மாற்றங்களையாவது ஏற்படுத்தவே செய்யும்.

நவம்பர் 22
ஆபரணங்கள்

1 தீமோத்தேயு 2:1-15

பொன்னினாலாவது, முத்துக்களினாலாவது...
1 தீமோத்தேயு 2:9

சமீபத்தில் ஒரு பிரபல நகைக் கடை விளம்பரத்திற்காக ஒரு பெண்ணின் படம் பத்திரிக்கையில் வந்தது. அந்தப் பெண் மிக, மிக அழகானவள். ஆனால், அவள் அணிந்திருந்த ஏராளம் நகைகள், அவளின் அழகை அதிகமாக மறைத்து, ஒரு பொம்மையின் தோற்றத்தைக் கொடுத்தது. “அழகாகத் தோன்றுங்கள்” என்ற அறிவிப்போடு விளம்பரம் செய்யப்பட்டிருந்தது. ஆனால், அந்த விளம்பரப் படத்தை சரியாகக் கவனிக்கும் போது, அதிக நகை அணிதல் அழகை அழிக்கும் என்ற உண்மைதான் வெளிப்பட்டது.

நகை அணிதலே பாவம் என்ற கூற்றிற்கு வேதாகமத்தில் உரிய சான்றுகள் இல்லை. நன்றாகத் தோன்றவேண்டும் என்ற மனிதனுடைய இயற்கையான ஆசை உணர்வை பாவம் என்று கூற இயலாது. ஒரு பெண்ணின் உடலோடு ஆபரணங்கள் இணையும் போது அவளுக்கு ஒரு நல்ல தோற்றம் கிடைப்பது உண்மைதான். ஆனால், இந்த நகை அணிதல் பலருடைய அழகை அழிக்கிறது. நகைகளின் அளவு அதிகரிக்க, அதிகரிக்க அவர்களில் பெருமை, ஆடம்பரம், சுயமேன்மை, பிறர் கவனத்தை இழுத்தல் ஆகியவை வந்து விடுகிறது. அது விரும்பத்தக்கவை அல்ல. வெறுக்கத்தக்க தோற்றமே அது.

கிறிஸ்தவப் பெண்கள் அடக்கம், ஒழுக்கம், தாழ்மை, சாந்தம் ஆகிய குணங்களால் பிறர் மனதில் மதிப்பிற்குரிய இடத்தைப் பெற வேண்டும். ஆனால், இன்றைய திருச்சபைகளில் பரிசுத்தமான தேவனைக் கனப்படுத்துவதாக எண்ணிக் கொண்டு வருகின்ற பல பெண்கள், தேவனை, கனவீனப்படுத்துகின்றார்கள். அவர்களின் விதவிதமான ஆபரண அலங்காரங்கள், அவர்களிடமுள்ள பெருமையையும், செல்வம் சார்ந்த மேன்மை பாராட்டலையும் வெளிப்படுத்துகின்றன. ஆனால், ஆவிக்குரிய அம்சங்களோ, அடையாளம் தெரியாமல் போய்விட்டன.

உலகத்தின் பார்வைக்கு நம்மை மேன்மையாகக் காண்பிக்க நகைகளை வாங்கிக் குவிக்கும் நாம், தேவனுடைய பார்வையில் மேன்மையாய் தெரியும் விதமாக தாழ்மை, அடக்கம், நாணம், சாந்தம், பரிசுத்தம், ஒழுங்குகள் போன்ற விலையேறப்பெற்ற நகைகளை அணிந்திருக்கின்றோமா என்று சிந்திக்க வேண்டும். தகுதியான வஸ்திரத்தினாலும், நாணத்தினாலும், தெளிந்த புத்தியினாலும், தேவபக்தியுள்ளவர்களென்று சொல்லிக்கொள்ளுகிற ஸ்திரீகளுக்கு ஏற்றபடியே நற்கிரியைகளினாலும், தங்களை அலங்கரிக்க வேண்டும் என்ற வேத நியமத்திற்கு, நகைகளின் அளவுகள் எதிராகப் போகாதிருக்கட்டும்.

சிந்தனைக்கு...

கண்ணாடியில் உன் முகத்தைப் பார்த்தால் அழகு தெரியும்,
வேதவெளிச்சத்தில் உன் அகத்தைப் பார்த்தால் தவறுபுரியும்.

நவம்பர் 23

இவைகளும் தவறுகளே

யோனா 4:1–11

நினிவேக்காக நான் பரிதபியாமலிருப்பேனோ....
யோனா 4:11

வாழ்க்கையில் சில எதிர்பாராத எதிர்ப்புகள், தடைகள், தோல்விகள், நஷ்டங்கள் ஏற்படும்போது நாம் எங்கேயாவது தவறு செய்து விட்டோமா? தேவன் நம்மேல் கோபமடையத்தக்கவிதமாக ஏதாவது தப்புச் செய்து விட்டோமா? என எண்ணிப் பார்க்கும் பழக்கம் பல விசுவாசிகளிடம் உள்ளது. ஆனால், அப்படி எண்ணிப் பார்க்கும்போது, மிகமிகத் தவறாகத் தோன்றுகின்ற விதமான எதையும் பார்க்க முடியாவிட்டால், தாங்கள் தவறு எதுவும் செய்யவில்லை என முடிவு செய்கின்ற பழக்கமும் பலரிடம் உள்ளது.

ஆனால், சிலரிடம் அன்பாயிராமல் போனதையோ, சிலர் செய்த தவறுகளைக் குறித்த கசப்புகளை மனதைவிட்டு நீக்க விரும்பாததையோ, சிலருடைய குற்றங்களை கிறிஸ்துவின் அன்பில் மன்னிக்க மனமில்லாதிருப்பதையோ, சிலருடைய விஷயத்தில் விட்டுக் கொடுத்து இறங்கி வர மறுத்ததையோ, தேவன் பலமுறை உணர்த்தியும், சுய உணர்வுகளுக்கு தேவனைவிட அதிக முக்கியத்துவம் கொடுத்ததையோ தவறுகளாக எண்ணுவதில்லை. யோனா தர்சீசை நோக்கி கப்பலில் பயணம் செய்தபோது, தேவன் பெருங்காற்றை அனுப்பி அவனுடைய பிரயாணத்திற்குப் பிரச்சினைகளை ஏற்படுத்தினார். அந்த பெருங்காற்றாகிய சோதனைப்புயல் வருவதற்கான காரணம் என்ன?

நினிவே மக்கள் மகாபாவிகளாயிருந்து, கடந்தகாலங்களில் செய்த அக்கிரமமான செயல்களின் நினைவுகள் யோனாவின் மனதை நிரப்பியிருந்தன. எனவே அவன், அந்த ஜனங்கள் தேவனுடைய அன்பு, மன்னிப்பு, கிருபை, இரக்கம் ஆகியவற்றைப் பெறுவதை விரும்பவில்லை. அவர்கள் செய்த தவறுகளுக்குத் தக்க தண்டனை அவர்களுக்கு கிடைக்க வேண்டும் என்பதே அவனுடைய வாஞ்சையாக இருந்தது. எனவேதான் அவன், தேவ சித்தப்படியான நினிவே யாத்திரையை மேற்கொள்ளாமல், சுய சித்தப்படியான தர்சீசு யாத்திரையைத் துவங்கினான்.

இந்த அன்பற்ற மனநிலையை மாற்றி, அன்பு காட்டும் ஊழியனாக அவனை மாற்றவே, அவனுடைய பிரயாணப் பாதையில் பெருங்காற்றினை அனுப்பி தேவன் தடை ஏற்படுத்தினார். ஆம்,சில நேரங்களில் நம்முடைய மனநிலைகள் அன்பற்றதாகவும், மன்னிக்கும் மனோபாவமற்றதாகவும், மற்றவர்களுக்குக் கேடு விளைவதே நியாயமானது என்ற எண்ணத்தில் உறுதியானதாகவும், யோனாவைச் சந்தித்தது போன்ற பெருங்காற்றுகள் நம்மையும் சந்திக்க வாய்ப்புண்டு.

சிந்தனைக்கு...

கர்த்தரின் கண்டிப்பை கண்டு கொள்ளாதவன், அவருடைய ஆறுதலை ஒருபோதும் கண்டடைய முடியாது.

நவம்பர் 24
ஆதாரம் என்ன?

யோவான் 8:42-59

என்னைக் கண்டவன் பிதாவைக் கண்டான்.
யோவான் 4:9

கடவுள் இல்லை என்று சாதிக்கும் ஒரு நாத்திக நண்பர் ஒருவரிடம் அவருடைய ஆத்திக நண்பர் கடவுள் இல்லை என்று சாதிக்க உன்னிடம் என்ன ஆதாரங்கள் உள்ளன? என்று கேட்டார். அதற்கு அந்த நாத்திக நண்பர் கடவுள் உண்டு என்று நம்புகின்ற உங்களிடம் அதற்குரிய ஆதாரங்கள் எதுவும் இல்லாதபோது, இல்லை என்று சாதிக்க எங்களிடம் ஆதாரங்கள் எதற்கு? என்றார்.

கடவுள் இல்லை என்று சொல்லுகின்றவர்களைக் கண்டால் கடவுளை நம்புகின்ற வர்களுக்குக் கோபமும் ஆத்திரமும் வருகிறது. சிருஷ்டிப்புகளைக் காண்பித்து, வேதாகமச் செய்திகளைக் காண்பித்து விளக்கம் கொடுக்க அதிக தீவிரம் ஏற்படு கிறது. ஆனால், கடவுள் இருக்கிறார் என்பதற்கு நாம் நம்மிடம் கொண்டிருக்கின்ற ஆதாரங்களும், அடையாளங்களும் எவை என்பது மிக முக்கியம். ஒரு மனிதனிடம், சமாதானம், உண்மை, தாழ்மை, இரக்கம், வாழ்க்கை மாற்றம், உயர்ந்த தன்மை கள், அன்பு, போன்ற உயர்குணங்கள் இருப்பதுதான் கடவுள் ஒருவர் இருப்பதற்கான அடையாளங்கள். வேதாகமத்தைக் காட்டி விளக்கம் கொடுத்தால் வேதாகமமே ஒரு கற்பனைப் புத்தகம் என்று சொல்லிவிட வாய்ப்பு உண்டு. ஆனால், ஒரு மனிதன் வாழ்க்கை மாற்றத்தைப் பிரதிபலிக்கும் நற்பண்புகளைக் கொண்டிருக்கும்போது, அவைகளை எளிதாக மறுக்க இயலாது.

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து என்னைக் கண்டவன் பிதாவைக் கண்டான் என்றார். (யோவான்-14:9) பிதாவின் உருவத்தை அவர் தம்முடைய முகத்தில் பதிந்திருந்தாரா? இல்லை. பிதாவாகிய தேவனுடைய உயர்குணங்கள் அவரிடம் வெளிப்படவும் பிரதிபலிக்கவும் செய்தன. எனவே, அந்த உண்மைகளை எளிதாகப் பிறர் மறுதலிக்க இயலவில்லை. வெறும் கடவுள் நம்பிக்கை அல்ல. கடவுளை நம்முடைய வாழ்க்கையின் செயல் பாடுகள் வழியாகவும், குணாதிசயங்கள் வாயிலாகவும் பிறருக்கு வெளிப்படுத்த வேண்டும்.

கடவுளை நம்புகின்ற நமக்குள் கடவுள் வந்து செயல்பட நாம் அனு மதிக்காத நிலையில், நம்மிடம் கடவுளுடைய எந்த தெய்வீக சிறப்பம்சத்தையும் பிரதிபலிக்க இயலாது. அவ்விதம் பிரதிபலிக்க இயலாத நிலையில் கடவுளை நம்ப இயலாதவர்களைவிட கடவுளை நம்பியும், அவருக்கேற்ற தெய்வீக அம்சங்கள் இல்லாத நாம்தான் நாத்திகர்களைவிட அதிகமாக தேவ கோபத்திற்குரியவர்கள். கடவுளை நம்பாதவர்கள் பரிதாபத்திற்குரிய வர்கள். கடவுளை நம்பியும் அவரைத் தங்களுக்குள் அறியாதவர்கள் தேவ கோபத்திற் குரியவர்கள்.

சிந்தனைக்கு...

இன்னொருவரை மாதிரியாகக் கொள்வதைவிட இன்னொருவருக்கு மாதிரியாயிருக்க முயற்சி செய்.

நவம்பர் 25

சுவை உணர்ந்த நாவு

சங்கீதம் 119 : 89 -112

உமது வேதத்தில் நான் எவ்வளவு பிரியமாயிருக்கிறேன்.
சங்கீதம் 119:97

அமெரிக்காவில் பிரபலமானதும் அங்குள்ளவர்களால் மிகவும் விரும்பிச் சாப்பிடப் படுகின்றதுமான சில உணவு வகைகளை நான் சாப்பிட்டபோது, எனக்கு அது விசேஷச் சுவையின்றி "சப்" பென்று இருந்தது. இதைப் போய் அமெரிக்கர்கள் எப்படித்தான் விரும்பிச் சாப்பிடுகிறார்களோ? என மனதிற்குள் எண்ணினேன். ஆனால், இந்திய முறை காரசார உணவு வகைகளில் பழகிப்போன என் நாவுக்குத் தான் அவை சுவையற்றவையேயன்றி, அமெரிக்கர்களின் நாவுக்கு அவை சுவையானவைகள்தான்.

சுவை உணருவதில் எல்லா நாவுகளும் ஒன்று போல இருப்பதில்லை. அதுபோல, தேவன் அருளிய வேத வசனங்கள் என்ற உணவு தேனிலும் மதுர மானது என்று தாவீது கூறினான். ஆனால், வேதம் அநேகருக்கு சலிப்பான ஒரு புத்தகமே. அநேகர் வேதம் படிப்பதை ஒரு கடமையாகச் செய்கின்றார் களேயன்றி, அவர்கள் அதனால் எந்த விசேஷச் சுவையையும், உணரவில்லை.

ஏனென்றால், வேதம் என்பது ஆவிக்குரியவர்களுக்கு மட்டுமே சுவை யாயிருக்கும். ஆவிக்குரியவர்களின் இதயத்திற்குத்தான் அது பரவசமானதும், மகிழ்ச்சியானதுமாக இருக்கும். உண்மையான இரட்சிப்பைக் கண்டடைந்து, பரிசுத்த ஆவியினால் மறுபிறப்பின் அனுபவத்தைப் பெற்றுக் கொண்டு புதிய சிருஷ்டிகளாக மாறினவர்களுக்கு வேதம் மிகுந்த சுவையானதும், நெடுநேரம் படிப்பதற்கு இன்ப மானதுமாக இருக்கும். ஏனென்றால், ஆவிக்குரிய வேதத்தின் சுவையை உணர்ந்திட மாம்சீக இருதயத்தால் கூடாது. ஆவியினால் மறுபடியும் பிறந்த ஆவிக்குரிய இருதயத் தால்தான், கர்த்தரின் வேதத்தால் களிப்படையும் உணர்வைப் பெற முடியும்.

நான் பங்குபெறும் சில கூட்டங்களில் கலந்துகொண்டு சத்தியத்தைக் கேட்பதற்காக, சிலர் ப ல மைல்களைத் தாண்டி வருவதுண்டு. ஆனால்,சிலர் பக்கத்துத் தெருக்களிலிருந்துகூட வருவதில்லை. அவர்களும் ஆவிக்குரியவர்கள்தான். சத்தி யத்தை அறிய வேண்டும் அதனால் ஆத்துமாவில் ஒரு விசேஷ சந்தோஷத்தைப் பெற வேண்டும் என்ற ஆர்வம் அவர்களுக்கில்லை. ஏனென்றால், சத்தியத்தி னால் மகிழும் தன்மையுள்ள ஒரு இருதயம் அவர்களுக்கில்லை. உண்மையான ஆவிக்குரிய மறுபிறப்பை வாழ்க்கையில் கண்டவர்கள்தான் உண்மையான தேவ சத்தி யத்திற்காகவும், வேத வார்த்தைகளுக்காகவும் மிகுந்த தாகமும் பசியுமுடைய வர்களாக இருக்க முடியும். தேவனால் பிறந்தவர்கள்தான் தேவனுடைய வார்த்தைகளை விரும்பிக் கேட்க இயலும்.

சிந்தனைக்கு...

தேவனுக்குரியவைகளை தேடிக்கொண்டிருப்பதில் நீ கவனமாயிரு.
தேவையானவைகள் உன்னைத் தேடிவரும்; நீ நம்பிக்கையோடிரு.

நவம்பர் 26

பாவியாக மரித்தால்

எபிரெயர் 2:1-18

இவ்வளவு பெரிதான இரட்சிப்பைக் குறித்து...
எபிரெயர் 2:4

நீ ஏழையாகப் பிறந்தது உன்னுடைய தவறு அல்ல. ஆனால் நீ ஏழையாக மரித்தால் அது உன்னுடைய தவறு என்றார் மிகப் பெரிய பணக்காரரும், மைக்ரோ ஸாப்ட் நிறுவனருமான பில்கேட்ஸ். இது ஒரு நல்ல கருத்து. பணக்காரனாக மாறுவது தொடர்பானதோர் சிந்தனையாயிருந்தாலும், வேறு விதத்திலும் இதை யோசிக்கலாம். நாம் பாவிகளாகப் பிறந்தது நம்முடைய தவறு அல்ல. ஆனால், பாவிகளாகவே மரிப்போமானால் அது நம்முடைய தவறே.

நாம் பல தவறுகளைச் செய்திருக்கலாம். பல குற்றங்களைப் புரிந்திருக்கலாம். பலவிதமான தீய சுபாவங்களோடு வாழ்ந்து வாழ்க்கையை அழகற்றதாக்கி யிருக்கலாம். இவை யாவும் புதுமையானவைகள் அல்ல. ஏனென்றால் நாம் யாராயிருந்தாலும் பிறக்கும் போது பாவம் செய்கின்ற இயற்கையோடுதான் பிறந்திருக்கின்றோம். எனவே, இவை இவ்விதம் நிகழ்ந்திருப்பது இயற்கையானதுதான். ஆயினும், இதனை சாக்காகக் காட்டி பாவியாக மரித்துவிடக் கூடாது.

ஏனென்றால், பாவத்திலிருந்து விடுதலையடைந்து பரிசுத்தமாக வாழ்வதற்கான தேவ கிருபை நமக்கு அருளப்பட்டிருக்கின்றது. கர்த்தராகிய இயேசு கிறிஸ்து மரித்து நாம் பாவ விடுதலை அடைந்திட வழி ஏற்படுத்தியிருப்பதால், இனிய யாரும் சாக்குப் போக்குச் சொல்ல இயலாது. பாவியாகப் பிறந்ததால், பாவியாகவே மரித்திருக்கின்றேன் என்று யாரும் கூற இயலாது. ஆகையால்தான் இவ்வளவு பெரிதான இரட்சிப்பைக் குறித்து நீங்கள் கவலைப்படாவிட்டால், தண்டனைக்கு எப்படித் தப்பித்துக் கொள் வீர்கள் என்று வேதம் சொல்கிறது. (எபிரேயர் 2:4)

இன்று இயேசு என்ற இரட்சகரை அறியாமல் அநேகர் மரிக்கின்றனர். அது போல, இயேசு என்ற இரட்சகரை அறிந்தும் அவரை தங்களுக்குள் பெறாமல் அநேகர் மரிக்கின்றனர். தேவனுடைய நியாயத்தீர்ப்பு என்பது, நீ ஏன் பாவம் செய்தாய் என்பதாக இராது. நீ ஏன் பாவம் செய்யாதிருக்ககும்படி தேவ கிருபையை பயன்படுத்தாமல் போனாய்? என்பது தொடர்பாகவே இருக்கும். இயேசுவை அறியாமலே மரித்தவர்களைவிட, இயேசுவை அறிந்தும் அவரால் விடுதலை அடையும் படி தங்களை ஒப்புவிக்காதவர்களே, அதிகமான தேவ கோபத்தைக் காண்பார்கள். திருச்சபைகளிலே வாரந்தோறும் பாவ அறிக்கை செய்கின்றவர்களில், எத்தனை பேர் அதனை உண்மையாகச் செய்கின்றனர். பாவ அறிக்கை செய்வதைக் குறித்து அறியாதவர்களைவிட, அறிந்தும், உண்மையாகப் பாவத்தை விட்டு வராதவர்களே அதிக ஆக்கினை அடைவார்கள்.

சிந்தனைக்கு...

தன் பலவீனங்களைத் தகுந்த முறையில் கண்டு கொண்டவன், தன் பலத்தை தகுதியான முறையில் தக்க வைக்கிறான்.

நவம்பர் 27
அசௌகரியங்கள்

11 கொரிந்தியர் 12 : 1 – 10

கிருபை உனக்குப் போதும்.
11 கொரிந்தியர் 12:9

மாபெரும் மிஷனரி இயக்கத் தலைவராகிய வில்லியம் கேரி அசௌகரியங்களுக்கு நடுவிலேயே வாழ்ந்தவர். அவருடைய குடும்ப வாழ்க்கை மன மகிழ்ச்சியைத் தரவில்லை. அவர் வாழ்ந்த காலத்தின் சமுதாயச் சூழ்நிலை அவருக்கு சாதகமாயிருக்கவில்லை. தட்பவெட்பநிலை அவருடைய சரீர நலனுக்கு ஏற்றதாகயிருக்கவில்லை.

பத்து வேதாகம மொழி பெயர்ப்புகள் யாவும் எரிந்து அழிந்து போயின. அவர் கட்டிய வீடும் பள்ளிகூடங்களும் வெள்ளப் பெருக்கால் சேதமடைந்தன. அவருடைய மிஷனரி நடவடிக்கைகளை குறை கூறிக் கொண் டிருக்கவும் பலர் இருந்தனர். ஆயினும், அசௌகரியங்களுக்கு நடுவில் வாழ்ந்து கொண்டே அவர் அசாதாரணமான சாதனைகளைச் செய்தார்.

அதற்கு அடிப்படைக் காரணம் என்ன? அவருடைய உயர்ந்த இலக்கு, சுயநல நோக்குடன் செயல்படாமை, தேவனைப் பிரியப்படுத்திச் செயல்படும் பண்பு, தேவ ஐக்கியத்தினால் அனுதின வாழ்வில் பெற்றுக்கொண்ட அகத்தூண்டுதல்களும், ஆவிக்குரிய ஆனந்தங்களுமே.

எதையாவது சாதிக்க வேண்டுமானால் மனத்தெளிவுடன் பதட்டமின்றிச் செயல்படத்தக்க ஒரு சௌகரியமான சூழல் அவசியம் என்பது பொதுவான ஒரு எண்ணம். ஆயினும் சில சூழ்நிலைகளில் இவ்விதமான நல்ல சூழ்நிலைகளைக் காண்பது கடினம். ஆயினும், அதனால் நாம் செயல்பாடற்றவர்களாகப் போய்விடத் தேவையில்லை. உயர்ந்த இலக்கும், தேவ உறவின் நிச்சயமும், தேவனைப் பிரியப்படுத்தி வாழும் மனநிலையும் இருந்தால், எல்லா அசௌகரியங்களுக்கு நடுவிலும் அபாரமான சாதனைகளைக் காணமுடியும்.

ஏனென்றால், அப்படிப்பட்ட மனிதனுக்கு தேவன் தருகின்ற சமாதானமும் நம்பிக்கையும் எத்தகைய சூழ்நிலையிலும் மனிதனை முன்னோக்கி நடத்தவும், சோர்ந்து போகாதிருக்கச் செய்யவும் போதுமானதாயிருக்கின்றது.

ஆண்டவராகிய இயேசு அசௌகரியங்களுக்கு நடுவில்தான் வாழ்ந்தார். ஏதாவது ஒன்று அவருக்கு எதிராகவே இயங்கிக்கொண்டிருந்தது. ஆயினும், பிதாவாகிய தேவனோடிருந்த அவருடைய ஐக்கியம் எல்லாச் சூழ்நிலைகளிலும் அவரை மனத்தெளிவோடு சோர்வின்றிச் செயல்பட வைத்தது. எதனை அவர் நிறைவேற்ற பூமிக்கு வந்தாரோ, அதனை வெற்றியாக நிறைவேற்றி முடித்தார்.

சிந்தனைக்கு...

வெற்றிகள் நம்மைத் தேடி வருவதில்லை
நாம்தான் வெற்றியைத் தேடிச் செல்ல வேண்டும்.

நவம்பர் 28

உணர்ச்சி நிலை

எபிரெயர் 3:1-19

பாவத்தின் வஞ்சனையினாலே கடினப்பட்டுப் போகாதபடிக்கு...
எபிரெயர் 3:13

வெளிச்சத்தில் நடக்கும் வரை நம்மிடம் நாம் காண நேரிடும் அழுக்குகள் நம்மை அதிகமாக உறுத்தும். ஆனால், அழுக்குகள் இருப்பதை அறிந்திருந்தும் மனதில் உறுத்தல்கள் இல்லையென்றால், நாம் வெளிச்சத்தை விட்டு விலகி இருளுக்குள் வந்துவிட்டோம் என்று பொருள். ஏனென்றால், தவறுகள் இருந்தாலும் இருளின் விளைவாக நம்முடைய கண்களுக்கு அவை தோன்றாது. எனவே, அங்கே உறுத்தல்கள் இல்லை. ஆனால், அது நமக்கு நலமானதல்ல. இருளினால் அழுக்குகள் மறைக்கப் படலாம். ஆனாலும், அதனுடைய பிரதிவிளைவுகள் தவிர்க்கப்படுவதில்லை.

ஆவிக்குரிய வாழ்க்கையில் நம்முடைய ஆவிக்குரிய உணர்ச்சி நிலைகளை இழந்து போகாதிருக்கத்தான் நாம் அதிக விழிப்பாயிருக்க வேண்டும். இந்த ஆவிக்குரிய உணர்ச்சி நிலை (SPRITUAL SENSITIVENESS) மரத்துப் போய்விட அனுமதித்தால், அதன் பின்னர் ஆவிக்குரிய வாழ்க்கை என்பது பிரயோஜனமற்ற ஒன்றாக மாறிவிடும்.

இரட்சிப்பின் அனுபவத்திற்குள் பிரவேசித்த ஒரு மனிதனிடம் பரிசுத்த ஆவியானவர் நடத்துகின்ற முக்கியமான ஒரு செயல் என்னவென்றால் சரி எது? தவறு எது? என்பதைக் குறித்து போதிய விழிப்புணர்வைக் கொடுப்பதுதான். குணத்தாலோ, பழக்கத்தாலோ, பேச்சாலோ, சிந்தனையாலோ, வேறெந்தச் செயலாலோ தேவனுடைய வார்த்தைகளுக்கு முரணாக நாம் செல்லும்போது பரிசுத்தாவியினால் புதிதாக்கப்பட்ட மனசாட்சியினால் நமக்குள் குற்ற உணர்வும், அமைதிக்குறைவும் மன வருத்தமும் ஏற்படும்.

ஆனால், இந்த உணர்ச்சி நிலை இருப்பது நாம் தேவனுடைய பரிசுத்த வெளிச்சத்தில் நடப்பதற்கு ஒரு அடையாளமாயிருக்க முடியும். அந்த வெளிச்சத்தில் நடப்பதால்தான் நம்முடைய சிறு தவறும், குறைவும் அங்கே வெளியரங்கமாகிறது. ஆனால், திரும்பத் திரும்ப அதுபோன்ற மன உறுத்தல்களை உணர்ந்தும், அவைகளை அசட்டை செய்துகொண்டிருந்தால் அந்த உணர்ச்சி நிலை மழுங்கிப் போய்விடும். அதன் பின்னர் பாவங்கள் நம்முடைய மனதைப் பாதிக்கும் விஷயங்களாகவோ, குற்ற உணர்வைத் தொடும் விஷயங்களாகவோ இராது. அதுவே ஆவிக்குரிய வாழ்க்கையின் அஸ்தமனத்திற்கு அடையாளம் ஆகிவிடும்.

பல விசுவாசிகளும் ஊழியர்களும் கொஞ்சங் கொஞ்சமாக இந்த ஆவிக்குரிய உணர்ச்சி நிலைகளை இழந்துவிட்டதால்தான், தவறுகளிலும் குற்றங்களிலும் தொடர்ந்தும் அவர்களின் மனம் பாதிக்கவில்லை. ஆவிக்குரிய நுண்ணுணர்வுகள் அழிந்ததால் உணர்வுகள் மரத்துப் போய்விட்டன.

சிந்தனைக்கு...

செய்த பாவத்தைவிடக் கொடியது.
செய்த பாவத்தை மறைப்பதுதான்.

நவம்பர் 29
மாதிரி வாழ்க்கை

1 தீமோத்தேயு 4 : 1 – 16

விசுவாசத்திலும் கற்பிலும் விசுவாசிகளுக்கு மாதிரியாயிரு.
1 தீமோத்தேயு 4:12

அவர் ஒரு இறையடியார். தேவனுக்காக சன்னியாசியாக மாறியவர். சௌகரியமான வாழ்க்கையை வெறுத்து மிக மிக எளிமையாக வாழ்கின்றவர். உலகத்தின் ஆடம்பரமான சூழ்நிலைக்கு அப்பால் போய் மலைப்பாங்கான ஒரு இடத்தில் ஒரு சிறிய ஆசிரமம் அமைத்துத் தங்கியிருக்கின்றவர். பொய், புரட்டு, வஞ்சகம், சூதுவாது எதுவும் இல்லாதவர். எல்லோரும் நலமாக நன்றாக இருக்க விரும்புகின்றவர். ஜனங்கள் மத்தியில் மிக நல்லவராக அறியப்பட்டு மகான் என அழைக்கப்படுகின்றவர்.

இவருடைய வாழ்க்கை ஒரு நல்ல அழகான வாழ்க்கை என்பதில் சந்தேகமில்லை. ஆனால், இந்த விதமான ஒரு வாழ்க்கையை நாம் மாதிரியாக எடுத்துக்கொண்டு, அவரைப் போல நாம் மாறிவிட முடியுமா? அவரைப் போல சன்னியாசியாகி, உலகச் சூழ்நிலைகளைவிட்டு வெளியே போய் வாழ முடியுமா? எல்லோருக்கும் இயலாது. எல்லோரும் அப்படி மாறினாலும் நன்றாகயிராது.

ஆனால், இவரிடம் உள்ள நல்ல குணங்களைப் போல நம்மிடமும் நல்ல குணங்கள் காணப்பட்டு, மனிதர்களின் நடுவில் ஒரு சராசரி வாழ்க்கையை வாழ்ந்தால், அது மற்றவர்களுக்குப் பின்பற்றத்தக்க நல்ல மாதிரியாக இருக்கும். தேவனுக்காக வாழ்க்கை சௌகரியங்களை விட்டும், உறவுகளை விட்டும், குடும்ப பந்தங்களை விட்டும் தூரமாகப் போய் நல்லவர்களாக வாழ்வதில் அல்ல.

மனிதர்களின் நடுவில் உலாவி, ஒரு வேறுபட்ட நல்ல குணாதிசயங்களுடைய வாழ்க்கையை வாழ்வதில்தான், தேவனுடைய நாமம் அதிகமாக மகிமைப்படும். ஏனென்றால், அவ்விதமான ஒரு வாழ்க்கை மற்றவர்களும் பின்பற்றத்தக்க நல்ல ஒரு முன்மாதிரியான வாழ்க்கையாக இருக்கும். அதுதான் சமுதாயத்தின் நடுவில் மிகப்பெரிய தேவை.

ஆபிரகாம் ஒரு முற்றும் துறந்த முனிவன் அல்ல. யோசேப்பு ஒரு ஆசிரமவாசி அல்ல. மோசே ஒரு ரிஷி அல்ல. தானியேல் ஒரு தவஞானி அல்ல. அவர்கள் மிகப் பெரிய தேவ மனிதர்களாக அறியப்பட்டனர். ஆனால் ,இவர்கள் எல்லோரைப் போல சாதாரண வாழ்க்கை வாழ்ந்து, தாங்கள் வைக்கப்பட்ட சூழ்நிலையில் ஒரு முன்மாதிரியான வாழ்க்கை மூலம் தேவனை மகிமைப்படுத்தியவர்கள். இதுபோன்ற ஒரு முன்மாதிரி வாழ்க்கை வாழ்கின்றவர்களைத்தான் தேவன் தேடுகின்றார். மருத்துவர் நோயாளிகளின் நடுவில்தான் அதிகமாகத் தேவைப்படுகிறார்.

சிந்தனைக்கு...

இறைவனுக்காக எவ்வளவு செய்கிறாய் என்பதல்ல.
அவர் எதிர்பார்ப்பதைச் செய்கிறாயா என்பதே முக்கியம்

நவம்பர் 30

கட்டளைகள் எதற்காக?

மல்கியா 3:1-18

அவருடைய கட்டளைகளைக் கைக்கொள்ளுகிறதினால் என்ன பிரயோஜனம்? மல்கியா 3:14

மருத்துவரிடம் சென்று சிகிட்சை பெற விரும்புகின்றோம். மருத்துவர் இதைச் சாப்பிடாதே, அதைச் சாப்பிடாதே, இந்த மருந்தைச் சாப்பிடு அந்த மாத்திரையைச் சாப்பிடு என்று பல மருத்துவ ஆலோசனைகளைக் கட்டளையிடுகிறார். அவர் சொன்னபடியே எல்லாவற்றையும் கவனமாகப் பின்பற்றுகின்றோம். ஆயினும், டாக்டர் சொன்னபடியெல்லாம் கீழ்ப்படிந்து செயல்பட்டதற்காக அவர் நமக்கு ஏதாவது பணத்தையோ, பொருளையோ தருவாரா? எதுவும் தரமாட்டார். நாம் தான் அவருடைய மருத்துவ ஆலோசனைகளுக்காக டாக்டர் பீஸ் கட்டவேண்டும்.

இவ்விதமாகவே தேவனும் நம்முடைய வாழ்க்கைப் பாதையில் நம்முடைய நன்மைக்காக, பல்வேறு ஆலோசனைகளை தம்முடைய கட்டளைகளாகத் தருகின்றார். அவைகளுக்கு நாம் கீழ்ப்படிந்து வாழ்ந்தால் அவைகளால் நமக்குத்தான் நல்லது. ஆனால், தேவ கட்டளைகளுக்கு நாம் கீழ்ப்படிய பல நேரங்களிலும் தேவன் நம்மை ஆசீர்வதித்தாக வேண்டும் என்று, நாம் நிபந்தனை வைக்கின்றோம். தேவனுடைய ஆலோசனைகளுக்குக் கீழ்ப்படிந்து வாழ்ந்தும் கூட, தேவன் எதிர்பார்த்த நன்மைகளைத் தரவில்லையே என்று கோபித்துக் கொள்கின்றோம்.

மதுபானம் பண்ணி, சண்டை போட்டு, காயப்பட்டு, மருத்துவமனை, காவல் நிலையம், நீதிமன்றம் என அலைக்களிக்கப்பட்ட ஒருவர், ஒரு சோதனையான வேளையில் மனந்திரும்பி எல்லாவற்றையும் விட்டுவிட்டார். அதன் விளைவாக உடலில் காயங்கள் ஏற்படுவது நின்றது. சண்டை அடிதடி நின்றது. ஆனால், தான் குடிப்பதை நிறுத்தியும், சண்டையிடுவதை நிறுத்தியும் கடவுள் நான் கேட்ட நன்மையை தரவில்லையே என்ற கோபத்தில் மறுபடியும் அவர் குடிக்கத் துவங்கினார். முடிவு மீண்டும் அடிதடிச் சண்டைகள் காயங்கள் கோர்ட் கேஸ்கள் என வாழ்க்கை அலசடிப்பட ஆரம்பித்தது.

தேவனுடைய கட்டளைகளுக்கிணங்கி கீழ்ப்படிந்து வாழ்கின்ற மனிதனை, தேவன் விசேஷமாக ஆசீர்வதிக்கின்றார் என்பது உண்மை. ஆயினும், நன்மை பெறுவதற்காக மட்டுமே நாம் அவருடைய கட்டளைகளுக்குக் கீழப்படியக் கூடாது. நன்மை கிடைத்தாலும் கிடைக்காவிட்டாலும் தேவன் நம்முடைய வாழ்க்கை சந்தோஷமாகவும், சமாதானமாகவும் இருப்பதற்காகத் தந்தருளின கட்டளைகளையும், ஆலோசனைகளையும் நாம் நிச்சயம் கடைப்பிடிக்க வேண்டும். அந்த அனுபவமே நிச்சயமாக ஆசீர்வாத உயர்வுகளை நமக்களிக்கும்.

சிந்தனைக்கு...

இறைவனின் விதிகளை மதித்து வாழத் தயங்கினால், சாத்தானின் சதி வலையில் மயங்கி விழ நேரீடும்.

டிசம்பர் 1

எது செல்வம் ?

ஏசாயா 55:1-13,

திருப்தி செய்யாத பொருளுக்காக உங்கள் பிரயாசத்தையும் செலவழிப்பானேன்... ஏசாயா 55:2

கல்லூரியில் ஒன்றாகப் படித்த நண்பர்கள் இருவர் பல வருடங்களுக்குப் பின்பு சந்திக்க நேர்ந்தது. ஒருவர் பெரிய தொழிலதிபராயிருந்தார். இன்னொருவர் எளிமை யாக ஊழியம் செய்யும் தேவ ஊழியராக மாறியிருந்தார். தொழிலதிபர் ஊழியரிடம் எப்படியிருக்கிறாய் என்று கேட்டார். மிக நன்றாக இருப்பதாகக் கூறியதோடு தான் தேவ ஊழியராக இருப்பதையும் கூறினார். உடனேயே தொழிலதிபர் உனக்கு சொந்த வீடு இருக்கிறதா? நல்ல கார் இருக்கிறதா? வங்கியில் நல்ல சேமிப்பு இருக்கிறதா? வசதியான நண்பர்கள் இருக்கிறார்களா? சொத்து ஏதாவது வாங்கி யிருக்கிறாயா? என்று பல கேள்விகளைக் கேட்டார்.

தேவ ஊழியர் இவைகள் எதுவும் இல்லை என்றார். பின்னர் நன்றாயிருக்கிறேன் என்றால் என்ன அர்த்தம் என்றார் தொழிலதிபர். அதற்கு தேவ ஊழியர், எனக்கு இவைகள் இல்லை. ஆனால் சமாதானம், திருப்தி, நம்பிக்கை, நிறைவு, சந்தோஷம், தைரியம் ஆகியவை இருக்கிறது. பயம், கவலை, அதிருப்தி, பதட்டம், பொறாமை ஆகியவைகள் இல்லை என்றார். அதற்கு அந்தத் தொழிலதிபர் உன்னிடம் இல்லாத வைகள் எல்லாம் என்னிடம் இருக்கின்றன. ஆனால், உன்னிடம் இருக்கிறவைகள் தான் என்னிடம் இல்லை என்றார்.

சாலொமோன் ராஜாவிடம் அநேகரிடம் இல்லாத பல செழிப்பான வியஷங்கள் இருந்தன. அவன் எதற்கும் குறைவில்லாத மனிதன். ஆனால் திருப்தி, நிறைவு, மனரம்மியம், சந்தோஷம், ஆகியவைகள்தான் இல்லை. அப்படியானால் எல்லாம் இருந்தும் என்ன பயன்? மனிதனுடைய இருதயத்திற்கு அமைதி, நம்பிக்கை, நிறைவு, திருப்தி, தைரியம் ஆகியவைகள் தேவை. அவைகளால்தான் மனிதன் மகிழ முடியும். இவைகளை எதனால் பெற இயலுமோ அதுதான் உண்மையான செல்வம். தேவனோடு ஏற்படுத்திக் கொள்கின்ற உறவும், அனுதின தேவ ஐக்கியமும்தான் இவைகளைத் தரமுடியும். இதுதான், உண்மையான, செல்வம். ஆனால், இந்த செல்வத்தையுடையவர்கள் வாழ்க்கையில் அந்தச் செல்வத்தினால் வருகின்ற நிறைவையும் திருப்தியையும், பார்க்க முடியும்.

பலர் தேவ பக்தர்களாக இருந்தும், தேவ ஊழியர்களாகயிருந்தும் பணம், பொருள், அந்தஸ்து, உயர்வு என்று அங்கலாய்த்து நிறைவடையாத ஒரு மன நிலையோடே வாழ்கின்றனர். ஏனென்றால், அவர்களிடம் தேவ பக்தியிருந்தும் உண்மையான தேவ உறவு இல்லை. உண்மையான தேவ உறவைக் கண்ட வர்களுக்கு என்றுமே வாழ்வு திருப்தியானதுதான்.

சிந்தனைக்கு...

பண்படாத நிலத்தில் விதைகள் வீணாப்போகும். தேவனால் பக்குவப்படாதவன் வாழ்வில் நன்மைகள் விருதாவாய்ப் போகும்.

டிசம்பர் 2

அவசியமானவர்கள்

11 இராஜாக்கள் 2:1-14

இஸ்ரவேலுக்கு இரதமும் குதிரை வீரருமாயிருந்தவரே.
11 இராஜாக்கள் 2:12

ஒருவர் ஒரு பெரிய விபத்திலிருந்து மிக மிக ஆச்சரியமான விதத்தில் உயிர் பிழைத்துக்கொண்டார். இதனை ஒரு மிகப் பெரிய விஷயமாக எண்ணிய ஒருவர், அதனை அந்த நபரின் மனைவிக்கு அவசரம் அவசரமாக போய் அறிவித்தார். அதைக் கேட்ட அந்த நபரின் மனைவி, நல்ல சேதிதான். மக்கள் தொகை எண்ணிக் கையில் ஒரு நபர் குறைவது தவிர்க்கப்பட்டது என்றாராம். ஆம், அந்தப் பெண்ணிற்கு கணவன் சாகாமல் பிழைத்தது, ஒரு பெரிய விஷயமாகத் தோன்றவில்லை.

சில கணவர்கள் இறந்த பின்பு, அவர்களின் மனைவிகள் அதிகப் பாதிப்பு எதையும் உணராமல், நல்ல முகமலர்ச்சியோடு சந்தோஷத்தோடு இருந்ததைக் கவனித்திருக்கின்றேன். சில மனைவிகள் இறந்த பின்பு எந்த மனவியாகுலமும் இல்லாமல், கணவர்கள் ஜாலியாக இருந்ததைக் கண்டிருக்கின்றேன். உடனிருந்த வர்களின் பிரிவுகள் அவர்களைப் பெரிதாகப் பாதிக்கவில்லை.

மனிதத்தன்மைப் பற்றாக்குறை, அன்பற்ற மனநிலை போன்றவை இவற்றின் காரணங்களாக இருக்க இயலும். ஆனால், சிலர் தங்களை மற்றவர்களுக்கு அதிக முக்கியமானவர்களாகவும், மற்றவர்களின் மனதில் நல்ல இடத்தைப் பெற இயன்றவர்களாகவும் விளங்க வைக்கத் தவறிவிடுகின்றனர். சிலருடைய வாழ்க்கை முறையும், குணநிலைகளும் மற்றவர்கள் மனதில் முள்ளாகக் குத்திக் கொண்டிருக்கின்றதேயன்றி, இதமானதாக இல்லை. சிலர் தங்களின் தவறான குணங்களாலும், செயல்களாலும் மற்றவர்களின் இருதயத்தில் அவசியமற்றவர்கள் என்றும், விரும்ப இயலாதவர்கள் என்றும் ஆகிவிடுகின்றனர். எந்த ஒரு பொருளும் ஒரு வீட்டில் போதிய பயன்பாடுகளைத் தர இயலாதவையாகயிருந்தால், அவை அங்கிருந்து விலக்கப்படுவது அவர்களுக்கு வருத்தத்தைத் தராது. சிலர் சிலருடைய வாழ்க்கையில் தேவையற்ற ஒரு பொருளைப் போலவே கருதப்படுவதற்கு ஏதுவாக வாழ்ந்து முடித்து விடுகின்றனர். எனவே, அவர்களின் இழப்பு ஒரு பெரிய பாதிப்பை ஏற்படுத்த இயலாததாகப் போய்விடுகிறது.

சிலர் மரித்து அடக்கம் பண்ணப்பட எடுத்துச் செல்லப்படும்போது, கல்லறை வரை செல்ல ஒரு பத்துப் பேர் இருப்பதில்லை. நன்றியற்ற மனிதர்கள் என்பது மட்டுமே அதற்கு காரணமாயிராது. வாழ்கின்ற காலத்தில் மற்றவர்களின் மனதில் முக்கியமாக எண்ணப்பட ஏற்றதான ஒரு வாழ்க்கை வாழாமல் போனதும் ஒரு காரணம். நாம் வாழ்வது ஒரு பெரிய ஆசீர்வாதமாகவும், நாம் மரிப்பது ஒரு பெரிய இழப்பாகவும் கருதப்படும் விதமாக நாம் பிறர் நடுவில் நல்ல ஓர் வாழ்க்கையை வாழ வேண்டும்.

சிந்தனைக்கு...

உன்னால் பிறருக்கு நஷ்டமில்லை என்பது உண்மைதான்
உன்னால் பிறருக்கு லாபம் என்ன என்பதே கேள்வி.

டிசம்பர் 3
ஏன் சோதனைகள்?

யோபு 23:1-17

அவர் என்னைச் சோதித்தபின் நான் பொன்னாக விளங்குவேன்...
யோபு 23:10

உபத்திரவத்தின் கொடிய காற்று யோபுவின் வாழ்க்கையைத் திக்குமுக்காடச் செய்தது. அவனுடைய துக்கம் யாராலும் ஆற்ற முடியாத ஒன்றாகயிருந்தது. அவன் அழுதான். புரண்டான். வியாகுலத்தால் புலம்பினான். அவனுடைய துன் பத்தின் காரணத்தையோ, அதன்மேல் தேவனுடைய நோக்கம் இன்னதென்பதையோ அவனால் கண்டு பிடிக்க இயலவில்லை. எதற்காக இந்த சோதனைகளைத் தேவன் வர விட்டார் என்பது அவனால் புரிந்து கொள்ள முடியாத ஒன்றாகயிருந்தது.

ஆயினும், அவனுக்கு ஒரு நிச்சயம் இருந்தது. இந்தச் சோதனைகளுக்குப் பின்னால் நான் பொன்னாக விளங்குவேன் என்று அவன் அறிக்கையிட்டான். சோதனைகளின் காரணத்தை அவன் அறிய முடியாவிட்டாலும் அந்த சோதனைகள் நிச்சயம் தன்னைப் பொன்னாக மாற்றும் என்று அவன் நம்பினான். தான் அனுபவிக்க நேரிடுகின்ற எல்லா உபத்திரவங்களும், தன்னை பல விதங்களில் பிரகாச மடையச் செய்யப் போகின்றது என்று அவன் விசுவாசித்தான்.

ஆம், நம்முடைய வாழ்க்கையிலும் நாம் சந்திக்க நேரிடுகின்ற எல்லாச் சோதனைகளின் காரணங்களையும் கண்டறிவது இயலாத காரியமே. ஆனால், கர்த்தர் மேல் விசுவாசம் வைத்து, அவருடைய வழிகளில் நடக்கின்றவர்களுக்கு ஏற்படுகின்ற எந்த ஒரு கஷ்டமும், நஷ்டமும், தோல்வியும், ஏமாற்றமும், கசப்பும் வேதனை களும் அவர்களின் அக அழகை அதிகமாக்குமேயன்றி அருவருப்பாக்காது. சில நேரங்களில் நாம் காரணமில்லாமல் துன்பப்பட நேரிடலாம். நியாயமான தேவையில் லாமல் நாம் சிறுமைப்படுத்தப்படலாம். நாம் அனுபவிக்க நேரிடும் வேதனை களுக்கு நாம் எந்த விதத்திலும் காரணமாயிருப்பதில்லை. ஏன் இந்தக் காரண மில்லாத கஷ்டம்? என மனம் அங்கலாய்க்கும். ஆனால், அதுவும் நன்மையாகவே மாறும். அங்கே நாம் இன்னும் அதிகமான தாழ்மையையும், பொறுமையையும், சாந்த குணத்தையும் அடைகின்றோம். அவைகள் நமக்கு ஆதாயங்களே.

சோதனைகள் எந்த வடிவில் வந்தாலும் விசுவாசிக்கின்றவர்களின் தரத் தையும், மதிப்பையும் அதிகமாக்குமேயன்றி, குன்றிப் போகச் செய்யாது. மோசேயையும், யோசேப்பையும், தாவீதையும், பவுலையும் சோதனைகள் பிரகாசிக்கச் செய்ததேயன்றி, ஒளி மங்கிப் போகச் செய்யவில்லை. ஒரு வேளை காரணமறியமுடியாத சில கஷ்டங்களை நீங்களும் சந்தித்துக் கொண்டிருக்கலாம். இந்த சோதனைகள் உங்களின் குணங்களையும், சுபா வங்களையும் பொன்னாக மாற்றும்படி கர்த்தரையே பற்றிக் கொண்டிருங்கள்.

சிந்தனைக்கு...

இடுக்கமான இறைவனின் பாதையில் நடப்பவன்தான், விசாலமான இதய விடுதலையை அனுபவிக்கின்றான்.

டிசம்பர் 4

வாழப் பழகலாம்

பிலிப்பியர் 4 :10-23

எந்த நிலைமையிலிருந்தாலும் மனரம்மியமாயிருக்கக் கற்றுக்கொண்டேன்
பிலிப்பியர் 4:11

சுமார் 20 வருடங்களுக்கு முன்பு, அமைதியான ஒரு சூழலில் நல்ல ஒரு வீட்டில் நான் தங்கியிருந்தேன். ஆனால் திடீர் என்று ஏற்பட்ட சில நிர்ப்பந்தங்களால் வாகனப் போக்குவரத்து மிகுந்த ஒரு சாலையோரத்தில் ஒரு சாதாரண அறையில் நான் தங்க நேர்ந்தது. வாகன சத்தமும், மனிதர்களின் ஆரவாரமும், அறையின் வசதியற்ற நிலையும் என்னை மிகவும் பாதித்தது. தேவன் எப்படியாவது உடனடியாக இங்கிருந்து நான் போகும்படியான ஒரு காரியத்தைச் செய்ய வேண்டும் என்று அதிகமாகச் ஜெபித்தேன். அங்கு சில நாட்கள் தங்குவது கூட எனக்கு மிகுந்த ஒரு சுமையாகத் தோன்றியது. ஆனால் என் ஜெபம் கேட்கப்படவில்லை. அந்த அறையில் நான் பலவருடங்கள் வாழ்ந்தேன். போகப் போக எல்லாம் சரியாகி விட்டது. சத்தத்தினாலும் இரைச்சலினாலும், வசதிக்குறைவினாலும் நான் மன திற்குள் வருத்தமடையாதபடி, எல்லாம் பழகிப் போய்விட்டது.

வாழ்க்கையில் சில எதிர்மாறான விஷயங்கள் நம்மை விட்டு விரைவில் விலகிப் போகும். நம்முடைய மனம் வருந்தும்படியான சில சூழ்நிலைகளை தேவன் அதிசயமாய் மாற்றிப் போடுகின்றார். நாம் வேண்டுதல் செய்தபடி நல்லவைகள் நமக்கும் நடக்கும். ஆனால், சில விஷயங்கள் நாம் எவ்வளவுதான் உபவாசித் தாலும், ஜெபித்தாலும் அவை மாறாமல் தொடர்ந்து விடும்.

ஆனால், நம்முடைய ஜெபங்களும் உபவாசங்களும் வீண் அல்ல. அவை நாம் எதிர்பார்த்தபடி சிலவற்றை அகற்றவில்லை. ஆனாலும், நமக்குள் அவற்றினால் வருத்தமும், சோர்வும் ஏற்படாதபடிகாரியங்கள் நடைபெறுகிறது. வருத்தங்கள் விலகிப் போகிறது. நாம் மாறாத சூழ்நிலைகளோடும் வாழப்பழகிக் கொள்கிறோம்.

தேவன் நாம் வேண்டாம் என்று சொல்லுகின்ற யாவற்றையும் நம்மை விட்டு விரட்டி விடுவார் என்று கூற இயலாது. சிலவற்றோடு நாம் வாழப் பழகுவதுதான் வருத்தமடையாமல் வாழ்வதற்கான வழி. அவ்விதம் வாழ்வதற்குத் தேவையான கிருபைகளை தேவன் நமக்குத் தருகின்றார். வெயில் காலமும், குளிர் காலமும், மழைக்காலமும் இயற்கையானவை. நம்முடைய வசதிக்காகவும், நாம் வருத்த மடையாமல் இருக்கவும் இவை மாற்றப்பட்டு விடுவதில்லை. ஆனால், நாம் அவை களின் நடுவில் வாழ்வதற்காகப் பழகிக்கொள்ள வேண்டும். அது சாத்தியமாகாத விஷயமல்ல. தேவ உறவும், தேவ ஐக்கியமும் நாம் எந்த நிலைமையிலிருந்தாலும் சோர்ந்து போகாமல் வாழ்வதற்குத் தேவையான வலிமையைத் தருகிறது.

சிந்தனைக்கு...

தேவ அன்பின் அனலில் வாழப் பழகியவனை உலகத்தின் சோதனை நெருப்புகள் ஒன்றும் செய்வதில்லை.

டிசம்பர் 5
உயர்ந்த வாழ்க்கை

மத்தேயு 23:1-13

அவர்கள் சொல்லியும் செய்யாதிருக்கிறார்கள்.
மத்தேயு 23:3

குறுக்கு வழியில் முன்னேற விரும்பிய ஒருவன் மோசடி வழக்கு ஒன்றில் சிக்கிக் கொண்டான். அந்த வழக்கை விசாரித்த நீதிபதி அவனைக் குற்றவாளியாகத் தீர்த்து சிறைத்தண்டனை வழங்கினார். சிறைவாசத்தின்போது படிப்பதற்காக அவனுக்கு ஒரு புத்தகத்தை வழங்கினார். இது ஒரு மிக நல்ல புத்தகம். இதனைப் படித்தால் நேர்மையான வழிகளில் முன்னேறுவதற்கு உனக்கு நல்ல ஆலோசனைகள் கிடைக்கும் என்றார். அதற்கு அவன் ஐயா இந்தப் புத்தகத்தை ஏற்கெனவே பலமுறை படித்துவிட்டேன் என்றான். படித்துவிட்டாயா? என்று நீதிபதி ஆச்சரியப்பட்டார். அதற்கு அவன் ஐயா, அந்தப் புத்தகத்தை எழுதியவனே நான் தான் என்றான்.

சிலர் உயர்ந்த கருத்துக்களை உருவாக்கக் கூடியவர்கள். ஆனால், உயர்ந்த மனிதர்களாக இருப்பதில்லை. சிலர் சிறந்த சிந்தனைகளை வெளிக்கொண்டுவர முடிந்தவர்கள். ஆனால், சிறந்த ஒரு வாழ்க்கை வாழ இயலாதவர்கள். சிலர் மிகச் சிறந்த வழிகளை மக்களுக்குக் காண்பிக்கின்றவர்கள். ஆனால், மிக மோசமான வழிகளில் நடந்து பழகிப்போனவர்கள். உயர்ந்த கருத்துக்களும், சிந்தனைகளும், கூட வியாபாரப் பொருட்களாக மாறிப்போய் விட்ட காலம் இது.

ஆனால், நாம் பின்பற்றத் துணியாத உயர்ந்த கருத்துக்களைப் பிறர் பின்பற்ற வேண்டும் என விரும்புவது விவேகமற்றது. நாம் நடக்க விரும்பாத வழிகளில் மற்றவர்களை வழி நடத்த விரும்புவது ஒரு மோசடித்தனம். நாம் செய்ய வாஞ்சிக்காத நற்செயல்களைப் பிறர் செய்யும்படி போதிப்பது ஒரு மிகப்பெரிய மாய்மாலம். சிலர் தங்களின் நல்ல கருத்துக்களாலும், உயர்ந்த சிந்தனைகளினாலும், சிறந்த போதனைகளினாலும் மற்றவர்கள் அவர்களை உயர்ந்த மனிதர்கள் என்று எண்ண வைத்து விடுவார்கள். ஆனால், அவர்கள் வாழ்கின்ற விதங்களையும் அவர்களுடைய குணாதிசயங்களையும் காண நேரிடுகின்றவர்கள், இவர்களா இப்படி? என்று அதிர்ச்சி அடைவார்கள்.

சாலொமோன் மிக மிக ஞானமான வார்த்தைகளை எழுதினான். மிக மிகச் சிறப்பான சிந்தனைகளை வெளிக்கொணர்ந்து வாழ்க்கையின் அர்த்தங்களைப் புரிந்துகொள்ளச் செய்தான். ஆனால் அவன் வாழ்ந்த வாழ்க்கையோ அவன் எவ்வளவு முட்டாள் தனமாக வாழ்க்கையைக் கழித்துப்போட்டான் என்பதை தெளிவுபடுத்துகிறது. உயர்ந்த சிந்தனைகளைவிட உலகத்திற்குத் தேவை உயர்ந்த மனிதர்களே.

சிந்தனைக்கு...

மனிதனின் சிந்தனைகள் வானத்தைத் தொடுகின்றது,
செயல்களோ மண்ணைக் கவ்வுகின்றது.

டிசம்பர் 6

ஆண் - பெண் நட்பு

1 கொரிந்தியர் 10:1–23

நிற்கிறவன் என்று எண்ணுகிறவன்.
1 கொரிந்தியர் 10:12

நண்பர்களாக நெருங்கிப் பழகும் விஷயத்தில் ஆண் பெண் என்ற வித்தியாசம் பார்க்கக்கூடாது. ஆண்களுடன் நெருங்கிப் பழகுவதுபோல பாலின வேறுபாடு பாராமல் பெண்களிடம் நெருங்கிப் பழகலாம். ஆண்களுக்கு கம்பெனி கொடுப்பதுபோல, பெண்களுக்கும் கம்பெனி கொடுக்கலாம். ஆனால், தப்பிதமான எண்ணத்துடனும், தவறான நோக்கத்துடனும் பழகுவதுதான் தவறு. இது நவீன சிந்தனையாளர் ஒருவருடைய கருத்து. இவர் பல பெண்களிடம் நெருங்கிப் பழகினாலும், எந்தவித தவறும் நிகழ்ந்ததில்லை என்று சாதனையாகக் கூறுகின்றார்.

ஒருவேளை இவருடைய இந்த பரந்த சிந்தனையும் கருத்தும், இவர் விஷயத்தில் சரியாக இருக்கலாம். ஆனால், இந்த அணுகுமுறை எல்லோருடைய விஷயத்திலும் சரியாகவும் பொருத்தமாகவும் இராது. இவர் ஒருவேளை மனக்கட்டுப்பாடு விஷயத்தில் விதிவிலக்கான விசேஷ நபராக இருக்கலாம். ஆனால், இவரைப் போல எல்லோரும் இருக்க வாய்ப்பில்லை. எனவே, இவருடைய இந்தக் கருத்தை நல்ல ஒரு கருத்தாக யாருக்கும் கொடுப்பது நல்லதல்ல. யாரும் இதை ஏற்பதும் நல்லதல்ல. சர்க்கஸ்காரன் கம்பியில் நடக்க முடிகிறது என்பதற்காக, எல்லோரும் வாருங்கள் கம்பியில் நடக்கலாம் என்று கூறினால் அது ஆபத்தானது. வெகு சிலருக்கு மட்டுமே சாத்தியமாகும். ஒரு ஆலோசனையை எல்லோருக்கும் பொது ஆலோசனையாக்குவது தவறு. ஆண் பெண் நட்பு விஷயத்தில் போதுமான இடைவெளியும் ஜாக்கிரதையும் தேவை என்பது ஆண் பெண் சம்பந்தமான இயற்கை விதி.

ஆண் பெண் நெருங்கின நட்புநிலை என்பது பஞ்சையும் நெருப்பையும் ஒரே இடத்தில் நெருக்கமாக வைக்கின்ற ஒரு செயலாகவே இருக்கும். ஆண் ஆணிடம் தான் நட்புநிலைகளில் நெருக்கமாயிருக்க வேண்டும். பெண் பெண்ணிடம்தான் நட்பு நிலைகளில் நெருங்கிப் பழக வேண்டும். இது கட்டளை அல்ல. ஆண் பெண் இருவருடைய இயற்கையான தன்மையின் அடிப்படையிலான ஒரு உண்மை. ஒரு தாய், பிள்ளைகள், கணவன், மனைவி என்பது போன்ற உறவுகளுக்கு அப்பால், எந்த ஒரு ஆண் பெண் தொடர்பு நிலையிலும் போதிய இடைவெளியும் அதிக நெருக்கம் ஏற்படுத்தாத பழக்க வழக்கங்களும் அவசியம்.

வயது வித்தியாசங்களைக்கூட நெருங்கிப் பழகுவதற்கான காரணங்களாக எடுத்துக் கொள்ளக்கூடாது. ஓர் இரும்புத்துண்டும், இன்னொரு இரும்புத்துண்டும் ஒரு இடத்தில் இருப்பது போல, ஒரு இரும்பு துண்டும் ஒரு காந்தமும் ஒரே விதமாக இருக்க இயலாது. யாரோ ஒருவர் சரியாக இருக்க முடிந்தது என்பது எல்லோருக்கும் இயன்ற விஷயமாயிராது.

சிந்தனைக்கு...

உரிய முறையில் உன்னை நீ புரிந்து கொண்டால், பிறர் உன்னைப் புரிந்து கொள்ளவில்லை எனக் கலங்க மாட்டாய்.

டிசம்பர் 7
சுவைக்கேற்ற போதனைகள்

11 தீமோத்தேயு 4 :1 –11

தங்கள் சுய இச்சைகளுக்கேற்ற போதகர்களை...
11 தீமோத்தேயு 4 : 3

ஒருவர் எங்கு சென்றாலும், தனக்கு விருந்து உபசரணை செய்கின்றவர்கள், தான் விரும்புகின்ற விதமான அயிட்டங்களையே தனக்குச் சமைத்துத் தரவேண்டும் என்று எதிர்பார்ப்பார். சிலர் இவர் விஷயத்தில் மிகவும் அதிருப்தி அடைவார்கள். ஏனென்றால், இவர் விரும்புகின்ற விதமான உணவு அயிட்டங்களை அவர்களுக்கு நன்கு செய்யத் தெரியாது. அவர் விரும்பிய அளவிற்கு அவை சுவையாயிரா விட்டால் உடனையே, அதைக் குறித்துத் தன்னுடைய அதிருப்தியைக் காட்டிவிடுவார்.

நம்முடைய சுவைகளுக்கேற்றபடி விருப்பமான உணவைக் கேட்பது தவறல்ல. ஆயினும், விருந்து தருகின்றவர்களின் தேர்வுகளுக்கும், விருப்பங்களுக்கும் நாம் மதிப்புக் கொடுக்கவும் வேண்டும். ஆவிக்குரிய வாழ்க்கையிலும் சிலருடைய நிலை இதுதான். அவர்கள் தேவனுடைய வார்த்தைகள் என்பதும், ஆவிக்குரிய செய்தி கள் என்பதும் தாங்கள் எதிர்பார்க்கும் ரகமாகவும், தங்களின் மனச் சுவைகளுக்கு ஏற்றதாகவும் இருக்கவேண்டும் என்று எதிர்பார்ப்பார்கள்.

தொடர்ந்து தேவ செய்தி கேட்கும் ஒருவர் வழக்கமாகச் செய்திவேளை முடிந்ததும் சாதாரணமாகப் போய் விடுவார். ஒருநாள் வழக்கத்திற்கு மாறாக மிகவும் பிரியத்தோடு பிரசங்கம் கேட்டார். பிரசங்கம் முடிந்ததும் பிரசங்கியாரிடம் வந்து, இதுதான் நான் ரொம்ப நாளாய் எதிர்பார்த்த செய்தி. இன்றுதான் உங்களின் தேவ செய்தி என்னைத் தொட்டது என்றார். ஆம், அவருடைய உள்ளத்தைத் தொடுவதற்கும், திருப்தியை உணர்வதற்கும் ஒரு குறிப்பிட்ட விதமான ரகத்தையும் சுவையையும் குறித்திருக் கின்றார். ஆனால் உண்மையான தேவ செய்திகள் அப்படியிராது. அவை வேதத் திற்கேற்றதா, வேதத்தோடு ஒத்துப் போகிறதா, என்னுடைய ஆவிக்குரிய வாழ்க்கைக்குப் பயனுள்ளதா என்றுதான் பார்க்கவேண்டும். என்னுடைய சுவைக்கும் பிரியத்திற்கும் ஏற்றதாக தேவ செய்தி அமைய வேண்டும் என்று எதிர்பார்ப்பது நியாயமல்ல.

தேவ செய்தி என்பது தேவ ஆவியானவர் நம்முடைய ஆவிக்குரிய தேவையின் அடிப்படையில் அருளுவதாகும். அதனை நம்முடைய மனதின் சுவை ஈடுபாடுகளின் அடிப்படையில் எதிர்பார்க்க முடியாது. மருத்துவர் தருகின்ற மருந்தை ஏற்கின்ற நோயாளியைப் போல நாம் இருக்கவேண்டும். அதற்குப் பதிலாக, உணவகத்தில் நமக்குப் பிரியமான அயிட்டத்தை ஆர்டர் செய்து சாப்பிடுவது போல அது இருக்கக் கூடாது. தேவ செய்தி என்பதை தேவ ஆவிக்கு இசைந்ததா என்றும், நம்முடைய பக்தி விருத்திக்குப் பிரயோஜனப்படுமா என்றுதான் பார்க்க வேண்டும்.

சிந்தனைக்கு...

தன்னுடைய நியாயத்தை தலைமேல் வைக்க விரும்புகிறவன்,
தேவ நியாயத்தைக் காலின் கீழ் போட்டுவிடுகிறான்.

டிசம்பர் 8

தடை செய்வது எது?

1 சாமுவேல் 14:1-16, மாற்கு 2:1-12

ரட்சிக்கக் கர்த்தருக்குத் தடையில்லை.
1 சாமுவேல் 14:6

எதிர்பாராத வேளையில் மழை பெய்தபோது, அன்று மாலையில் ஒழுங்கு செய்யப் பட்டிருந்த நற்செய்திக் கூட்டத்திற்கு யாரும் வரவில்லை. மழை ஜனங் களைத் தடுத்து விட்டதே என்று கூட்டத்தை ஒழுங்கு செய்தவர் புலம்பினார். அவர் வீட்டிற்குத் திரும்பிக் கொண்டிருந்த வழியில் கல்யாண மண்டபம் ஒன்றில் திருமண வைபவம் நடந்து கொண்டிருந்தது. அங்கே அவர் உற்றுப் பார்த்தார். அங்கே மண்டபம் முழுவதும் ஜனங்கள் இருந்தனர். உடனேயே பாஸ்டர், கன்வென்ஷனுக்கு ஜனங்களை வரவிடாமல் செய்த மழை, கல்யாண வீட்டிற்கு வர விரும்பிய யாரையும் தடுக்க முடியவில்லையே என்று புலம்பினார்.

இப்போது சிந்தியுங்கள். நற்செய்திக் கூட்டத்திற்கு வரவிடாமல் தடை செய்தது எது? மழையா? இல்லை, ஜனங்களின் ஆர்வம் அல்லது விரும்பத்தின் பெலவீனமே தடுத்திருக்கின்றது. எப்படியாகிலும் கல்யாண வைபவத்திற்குப் போக வேண்டும், என்று விரும்பிய ஜனங்களை மழையால் தடுக்கமுடியவில்லை. பல நேரங்களில் நாம் சில விஷயங்களைச் செய்யாமல் போனதற்கு நாம் சொல்லுகின்ற காரணங்கள் என்ன? இது மட்டும் அப்படியிருந்திருந்தால் செய்திருப்பேன். அது மட்டும் அப்படியிராதிருந்திருந்தால் செய்திருப்பேன் என்று சொல்லுகிறோம். ஆனால் முக்கியமான காரணம் என்ன? ஏதோ ஒன்றை எப்படி யாவது செய்ய வேண்டும் என்ற உண்மையான விருப்பம் இல்லை. சில விஷயங் களுக்கு நாம் கொடுக்கும் முக்கியத்துவத்தின் அளவுதான் அதனைச் செய்வதையும், செய்யாமல் போவதையும் நிர்ணயிக்கின்றது.

சூழ்நிலைகள், சில நிகழ்வுகள், சில மனிதர்கள் நாம் செய்ய நினைத்த நல்லதைச் செய்ய முடியாமல் போனதற்குக் காரணம் என நாம் சொல்வது சட்ட ரீதியாகச் சரிதான். ஆயினும், நாம் ஒன்றை எப்படியாவது செய்ய வேண்டும் என்றி ருப்பதில் வலிமையாயிருந்தால், இவை எதுவும் தடைகளாயிராமல் தடுக்கப்பட்டிருக்க முடியும். பெலிஸ்தியரை வீழ்த்த இயலாமல் இருந்ததற்கு சவுல் ராஜாவுக்கு நிறைய காரணங்கள் இருந்தது. ஆனால், சவுலால் முடியாதது அவனுடைய மகனாகிய யோனத்தானால் முடிந்ததே. அதற்கு என்ன காரணம்? எப்படியாவது பெலிஸ் தியர்களை வீழ்த்தியாக வேண்டும் என்ற வலிமையான விருப்பமே காரணம். எனவே, ஒரே ஒரு ஆள் துணையோடு ஒரு மிகப் பெரிய காரியத்தைச் செய்து முடித்தான்.

தடைகளை ஏற்படுத்தும் சூழல்களுக்கு முக்கியத்துவம் கொடுத்தால், நம்முடைய எந்த ஒரு நல்ல ஆசையையும் நிறை வேறாமல் தடுக்க, ஏதாவது ஒன்று வந்து கொண்டேயிருக்கும்.

சிந்தனைக்கு...

இறைவனுடைய காரியங்கள்மேல் உன் கவனம் சரியாகயிருந்தால் உன் தேவைகள்மேல் அவருடைய கவனம் அதிகமாயிருக்கும்.

டிசம்பர் 9

நம்மை மாற்றுவோம்

பிரசங்கி 11:1-10

காற்றைக் கவனிக்கிறவன் விதைக்கமாட்டான்.
பிரசங்கி 11:4

ஒரு மாலைவேளையில் விளையாட்டுத் திடலில் அமர்ந்து மாலைப் பத்திரிகை ஒன்றை ஆர்வமாகப் படிக்க ஆரம்பித்தேன். ஆனால், அன்று தொடர்ந்து சற்று பலமான காற்று வீசிக்கொண்டேயிருந்தது. எனவே, என்னால் அந்தப் பத்திரிகையைச் சீராக வைத்துப் படிக்க முடியவில்லை. காற்றில் அந்தப் பத்திரிகை அங்கும் இங்கும் அசைந்து கொண்டிருக்கவே, எனக்கு ஆத்திர ஆத்திரமாக வந்தது. ஆனால் இந்த ஆத்திரமும் கோபமும், முறையற்றதும் முட்டாள்தனமானதும் என்பதைப் புரிந்துகொள்ள அதிக நேரம் ஆகவில்லை. காற்றிற்கேற்ப நான் என்னைத்தான் மாற்றிக் கொள்ளவேண்டுமேயன்றி, என் வசதிக்கேற்ப அதனுடைய இயற்கையான செயல்பாட்டை மாற்ற முடியாது.

சிலருடைய இயற்கையான சுபாவங்களும் நடைமுறைகளும் நம்மைத் தொந்தரவுபடுத்துகிறவைகளாக இருக்கமுடியும். சிலருடைய இயற்கையான கருத்தோட்டங்களும், சிந்தனைகளும் நம்முடைய மனநிலைகளைப் பாதிக்கின்ற தன்மையுடையவைகளாக இருக்கலாம். அவர்களை நாம் விரும்புகின்ற விதத்தில் வார்த்து எடுத்து, நம்முடைய வசதிக்கேற்ப வைக்க முடியாது. நாம்தான் நம்மைத் தேவையான அளவிற்கு மாற்றியமைத்துக் கொள்ள வேண்டும்.

தேவனுடைய நியாயங்களுக்கு முரண்படாத விதமாக, நம்முடைய நியாயங்களைத் தேவையான அளவிற்கு, அனுசரித்துப் போகும் விதமாகச் செய்து கொள்ள வேண்டும். எனக்கேற்றபடி எல்லோரும், எனக்கேற்றபடி எல்லாம் இருக்க வேண்டும் என எதிர்பார்த்தால், மற்றவர்களோடு நாம் எந்தத் தொடர்பும் வைத்து எதையும் செய்ய முடியாது. மற்றவர்களை மாற்றுவதிலேயே நாம் குறியாகயிராமல், நம்மை மாற்றிக்கொள்ள வேண்டிய தேவைகளையும் உணரவேண்டும்.

அதுபோலவே வாழ்க்கைச் சூழ்நிலைகளும், சிலகாரியங்கள் நமக்கு எதிராகவே நடைபெறும். சில காற்றுகள் நமக்கு எதிராகவே சில வேளை வீசும். அவைகளின் மேல் கசந்து கொண்டிருப்பதால் அவைகளை மாற்றிவிட முடியாது. அவைகளின் நடுவிலும் நாம் வாழப் பழகிக்கொள்ள வேண்டும். யோசேப்பிற்கும் தாவீதுக்கும், தானியேலுக்கும் வாழ்க்கைச் சூழ்நிலைகள் சாதகமாக அமையவில்லை. ஆனாலும், அவர்கள் எல்லாம் தங்களுக்கு எதிராக இயங்குகின்றது என்று கசந்துபோய் கோப உணர்வுகளில் சிக்கவில்லை. தேவனுடைய கிருபையை நாடி அவைகளுக்கு நடுவில் எப்படி வாழ்வது என்பதைக் கற்றுக் கொண்டு அவைகளை வெற்றியாகக் கடந்து சென்றார்கள்.

சிந்தனைக்கு...

பிறர் மதிக்கவில்லையே என்று மனம் குமுறும் முன், பிறரை மதிக்க நீ கற்றுக்கொண்டாயா என்று கவனி.

டிசம்பர் 10

தேவாலயம்

எசேக்கியேல் 8:1-18

என் பரிசுத்த ஸ்தலத்தை விட்டு என்னைத் தூரமாய்ப் போகப் பண்ணும்படியான... எசேக்கியேல் 8:6

சிறிது காலத்திற்கு முன்பு பிரபல கவிஞர் ஒருவருடைய ஒரு கட்டுரையின் சில வரிகளைப் படித்தேன். அங்கே பக்தன் ஒருவன் இறைவனிடம் கேள்வி ஒன்று கேட்கின்றான். "இறைவா நீர் எங்கே இருக்கிறீர் என்பதைவிட, எங்கே இல்லை என்பதை அறிய விரும்புகிறேன்" என்பதே அந்தக் கேள்வி. அதற்கு இறைவனின் பதில் என்னை வழிபடும் ஸ்தலங்களில் நான் இருப்பதில்லை என்பதாக இருந்தது. இது ஒரு கவிஞனின் கற்பனை. ஆனால், நடைமுறை நிலைமைகள் இந்த கற்பனை உண்மையோடு அதிகமாக ஒத்துப் போகின்றன.

தேவாலயங்களிலும் ஆராதனை ஸ்தலங்களிலும், தேவ பயமற்றவர்களும் தேவனைக் கனப்படுத்த கவலையற்றவர்களும் மிகுந்து போய்விட்டார்கள். தேவனை கனப்படுத்தக் கட்டப்பட்ட பல தேவாலயங்களில், தேவன் மிகவும் கனவீனப்படுகிறார். அன்பும், தாழ்மையும், பண்பும், ஐக்கியமும், அமைதியும் வெளிப்படவேண்டிய சபைகளில் இன்று வெறுப்பும், கசப்பும், கோபமும், பகையும், பொறாமையும், எரிச்சலும், நீர்வீழ்ச்சியாய் கொட்டுகிறது. பிறர் அங்கு தெய்வீகத்தைக் காணாமல் சாத்தானுடைய தன்மைகளையே காண முடிகின்றது.

கர்த்தரை மகிமைப்படுத்துகின்றோம் என்ற பெயரில் பெரிய ஆலயங்களையும், மணிக்கூண்டுகளையும், எழுப்பிவிட்டு அங்கே சுய கௌரவங்களையும், மேட்டி மையான சிந்தனைகளையும், பதவி வெறிகளையும் வைராக்கியங்களையும், காழ்ப்புணர்ச்சிகளையும் காட்டுவோமேயென்றால், அங்கே தேவன் எப்படி இருக்க முடியும்? எனவே, பல தேவாலயங்கள் தேவனுடைய பெயரில் கட்டப்பட்டுள்ள போதிலும், அங்கே தங்கியிருந்து செயல்படுவது சாத்தானே. ஏனென்றால், அங்கே தேவனுடைய ஆவி செயல்பட அனுமதிக்கப்படாமல், சாத்தானுடைய ஆவியின் செயல்பாடுகளே ஏற்கப்பட்டிருக்கின்றன.

வாழ்க்கையில் அன்பு இல்லை. பொறுமை இல்லை. தாழ்மை இல்லை. சுய வெறுப்பு இல்லை. கபடமும், பொய்யும், மாய்மாலமும், பொருளாசையும் இருதயத்தை நிரப்பியிருக்கின்றன. ஆயினும் சபைகூடி வந்து அல்லேலுயா ஸ்தோத்திரம் என்று கூச்சலிட்டுக் கொண்டாடி, தேவப் பிரசன்னத்தை தேடுவோர் அநேகர். தனிப்பட்ட வாழ்க்கையில் தேவனைக் கனப்படுத்தும் சுபாவங்கள் ஏதுமின்றி, ஆரவாரப் பாடல்களைப் பாடித் தேவனை மயக்கிவிடலாம் என்பது போல செயல்படும் விவேகமற்றோர் பலர். இவர்களுக்கு நடுவில் தேவன் எப்படித் தங்கியிருக்க முடியும்?

சிந்தனைக்கு...

நீ வாழ்கின்ற வாழ்க்கை இறைவனைப் பிரதிபலிக்காவிட்டால், நீ செய்கின்ற வழிபாடு இறைவனுக்கு ஏற்றதல்ல.

டிசம்பர் 11

நியாயங்கள் இருந்தாலும்

எபேசியர் 4:17-32

நீங்கள் கோபங்கொண்டாலும் பாவஞ்செய்யாதிருங்கள்.....
எபேசியர் 4:26

அவன் ஒரு குடிகாரன். ஒருநாள் அவன் அதிகமான குடிவெறியில் அந்த வழியாக வருகிறவர்கள் போகிறவர்கள் யாவரையும் மோசமாகத் திட்டிக்கொண்டிருந்தான். சிலர் அதைக் கண்டுகொள்ளவில்லை. ஆனால், வாலிபன் ஒருவன் அந்தக் குடிகாரன் தன்னை திட்டினதால் கோபமடைந்து அவனை கடுமையாக அடித்து உதைத்து காயப்படுத்தினான். குறுக்கிட்டவர்களைப் பார்த்து, அவன் எவ்வளவு மோசமாகப் பேசினான் தெரியுமா? அவனை அடிக்காமல் சும்மா விடலாமா? என்று கத்தினான். அவன் அடித்ததற்கு நல்ல நியாயம் இருந்தது. ஆனால், சற்று நேரத்தில் அவன் கைது செய்யப்பட்டான். அதன் விளைவாக காவல்நிலையம், நீதிமன்றம் என அலைய நேரிட்டது.

சில நேரங்களில் நம் பக்கம் நல்ல நியாயங்கள் இருக்கின்றது. ஆனால், அந்த நியாயங்கள் நமக்கு நன்மையை அல்ல, தீமையையே கொண்டுவருகின்றன. நாம் கடுமையாகக் கோபமடைகிறோம். அவ்விதம் கோபமடைய நமக்கு நியாயம் இருக்கிறது. ஆனால், அவ்விதம் கோபமடைவதினால் நமக்குத் தீங்குதான் நேரிடுகிறது. சிலர் பேசின பேச்சுக்களையும், செய்த அக்கிரமமான செயல்களையும் நினைத்துப் பார்க்கும்போது, நாம் அவர்களைக் வெறுப்பதும், பழிவாங்க விரும்புவதும் நியாயம்தான் என்பது நிச்சயம். ஆனால், மனதில் உறைகின்ற வெறுப்பும், பழிவாங்கும் உணர்வும், நமக்கு ஒருபோதும் நல்ல விளைவுகளைத் தராதே.

எனவே, நம்முடைய நியாயங்கள் நமக்குள் தவறான குணநிலைகளையும், மனநிலைகளையும் ஏற்படுத்துமென்றால் அங்கே நமக்கு எச்சரிக்கை தேவை. ஏனென்றால், கோபம், வெறுப்புணர்வு, பழிவாங்கும் மனோபாவம் போன்றவை நம்முடைய மனஅமைதியைக் குலைப்பவை. தவறான செயல்ளுக்கு நேராக அவைகள் நம்மை ஏவி, வாழ்க்கையை நாசமாக்கும் தன்மை உடையவை.

யோசேப்பு தன் சகோதரர்கள் தனக்கிழைத்த துரோகங்களை மனதில் வைத்துக் கொண்டிருந்திருந்தால் அது நியாயம்தான். ஆனால், அவனை அது பழிவாங்கும் மனநிலைக்கு நேராக நடத்தி அமைதியை இழக்கச் செய்திருக்கும். தேவ உறவையும் அது பழுதுபடுத்தியிருக்கும். சவுலின் அநீதியான செயல்களினால் கோபமடைந்து தாவீது சவுலைப் பழிவாங்க விரும்பியிருந்தால் அது நியாயமாகத்தான் இருக்கும். ஆனால், தேவனால் உயர்த்தப்படும் நல்ல ஆசீர்வாத வாய்ப்பை இழந்து போயிருப்பான். ஆம். நியாயங்களைவிட அவைகளால் நமக்கு ஏற்படுவது நன்மையா தீமையா என்பதே முக்கியம்.

சிந்தனைக்கு...

பழிவாங்க விரும்புகிறவன் ஏற்கெனவே பட்ட காயத்தோடு, இன்னுமொரு காயத்தையும் சேர்த்துக்கொள்கிறான்.

டிசம்பர் 12

அடுத்த கட்டம் வரும்

சங்கீதம் 37:1-27

நீதிமான் கைவிடப்பட்டதை நான் காணவில்லை.
சங்கீதம் 37:25

தேவ பயம் மிக்க ஜார்ஜ், அந்த அலுவலகத்தில் உண்மையும் உத்தமமுமாகப் பணி புரிந்தான். அவனுடைய நேர்மையான அணுகுமுறையால் வெறுப்படைந்த சுரேஷ், ஜார்ஜை எப்படியாவது அங்கிருந்து போக வைக்க முயற்சி செய்தான். அவனுடைய தந்திரங்கள் பலித்தது. பொய்யாகக் குற்றஞ்சாட்டப்பட்டு ஜார்ஜ் வேலை நீக்கம் செய்யப்பட்டான். அன்று அலுவலகத்திலிருந்து துக்கத்தோடு வெளியே வந்த ஜார்ஜைப் பார்த்து, சுரேஷ் கேலியாகச் சிரித்தான். உண்மையாய்ச் செயல்பட்ட எனக்கு தேவன் உதவவில்லையே என்ற வருத்தம் ஜார்ஜை விசனப்படுத்தியது.

ஆனால், சில வாரங்களில் அவன் வேலை பார்த்த அலுவலகத்திற்கு, எதிர் அலுவலகத்திலிருந்து ஒரு வேலை வாய்ப்பு அறிவிப்பு வந்திருந்தது. ஜார்ஜ் அந்த வேலைக்கான நேர்காணலில் கலந்து கொண்டான். அந்த வேலைக்கு அவன் தெரிந்து கொள்ளப்பட்டான். முன்பு அவன் செய்த வேலையைவிட அதிக அந்தஸ்தான வேலை அது. சம்பளமும் இரண்டு மடங்கு. போக்குவரத்திற்கு ஒரு காரும் தரப்பட்டது. இப்பொழுது ஜார்ஜ் காரில் வந்து இறங்கிச் செல்வதை, சுரேஷ் பார்த்து வெட்கத்தால் முகத்தை திருப்பிக் கொள்கிறான்.

சில நேரங்களில் நாம் நேர்மையும், நியாயமுமாய் தேவ பயத்துடன் செயல் பட்டாலும், அதற்குரிய பலன் கிடைக்காமல் யாரோ ஒருவருடைய பொல்லாப்பான செயல்பாட்டினால் பாதிக்கப்படுகிற நேரங்கள் வருவதுண்டு. அங்கே தேவன் அக்கிரமத்திற்கு எதிராக வெற்றி தரவில்லையே, உண்மையின் பக்கம் நின்று தீயவர்களைத் தோல்வியடையச் செய்யவில்லையே, என்ற வருத்தங்கள் ஏற்படுவது இயல்பானது.

ஆனால், இவ்விதம் நடந்துவிட்டதால் தேவனுடைய செயல்பாடுகள் அங்கே முற்றுப் பெற்றுவிட்டதாக அர்த்தம் அல்ல. ஆனால், இனி அடுத்து தேவன் என்ன செய்யப் போகிறார் என்று கவனிக்க வேண்டும். உண்மையும், உத்தமமும் நிறைந்த யோசேப்பிற்கு எதிராக அக்கிரமமும் அநியாயமும் வெற்றி பெற்றது. ஆனால், அது நிரந்தரமாயிருக்கவில்லை. அவனுக்கு ஒரு அடுத்தகட்டம் இருந்தது. தேவன் அவனை உயர்ந்த நிலைக்குக் கொண்டு வந்தார். நீங்கள் எதிர்பார்த்த நேரத்தில், எதிர்பார்த்த விதத்தில், தேவன் உங்கள் எதிர்பார்ப்பைத் தராமல் துக்கமடைய விட்டிருக்கலாம். ஆனால், இது முடிவு அல்ல. நாடகத்தின் அடுத்த காட்சி துவங்கு வதற்கு முன், வருகின்ற சிறிய இடைவேளை இது.

தேவனுக்கு முன்பாக உத்தமத்தை விடாமல் உறுதியாயிருந்து காத்திருங்கள். நீங்கள் எதிர்பாராத இடத்தில் எதிர்பாராத விதத்தில், எதிர்பாராத நேரத்தில் உங்களுக் காக தேவன் உயர்வான ஒன்றை ஆயத்தமாக்கி வைத்திருக்கக்கூடும்.

சிந்தனைக்கு...

சத்தியத்தின் பாதையில் இன்றைய நஷ்டம் தற்காலிகமானவை.
நாளை வரப்போகும் லாபங்களே நிரந்தரமானவை.

டிசம்பர் 13
தங்க முலாம்

II கொரிந்தியர் 11:1-15

ஒளியின் தூதனுடைய வேஷத்தை...
II கொரிந்தியர் 11:14

தங்க முலாம் பூசப்பட்ட நகைகள் துவக்கத்தில் அசல் தங்க நகைகளைவிட அதிக ஜொலிப்பாக இருக்கும். சில நேரம் இந்த மித மிஞ்சிய ஜொலிப்பே அது உண்மையான தங்க நகை அல்ல என்பதை பிறர் அறியச் செய்துவிடும். மித மிஞ்சிய ஜொலிப்புடன் அது காணப்பட்டாலும், அந்த ஜொலிப்பு படிப்படியாக மங்கி முற்றிலும் இல்லாமல் போய்விடும். ஆனால், இந்த தங்கமுலாம் நகைகளை உண்மையானவைகள் என்று நம்பி மோசம் போகிறவர்களும் உண்டு.

சில சபைகள் இப்படித்தான் மிகமிகப் பளபளப்பாகச் ஜொலிக்கின்றன. சில சபைத்தலைவர்களும் இப்படித்தான் மகா பரிசுத்த வல்லமையாளர்களாக ஒரு கால கட்டத்தில் ஜொலிக்கின்றார்கள். நான் பார்த்த வரைக்கும் வல்லமை,அக்கினி, அற்புதம், அதிசயம், அபிஷேகம் என மிகமிக அதிகமாகப் பேசி, ஜனங்களிடம் தங்களை பெரிய பரிசுத்த வல்லமையாளர்களாகக் காண்பிக்கின்றவர்கள், பெரும்பாலும் தங்க முலாம் ரகமான ஊழியர்களாகவேயிருக்கின்றார்கள். இயேசுவின் போதனைகளைவிட, இயேசு போதித்த சாட்சி வாழ்க்கை முறைகளைவிட வல்லமை, அக்கினி, அபிஷேகம், அற்புதம் என்று அதிகமாகப் பேசுகின்ற எந்த ஒரு சுவிசேஷகரும், பாஸ்டரும் சந்தேகத்திற்குரியவர்களே. இவர்கள் போலி ஊழியர்களாக இருப்பதற்கு அதிக வாய்ப்புண்டு. எந்த ஒரு தேவ ஊழியர் பரிசுத்தமான வாழ்க்கை முறை தொடர்பான காரியங்களைவிட, ஆராதனை என்பதற்கு அதிக முக்கியத்துவம் தந்து பேசுகிறாரோ அவர் ஒரு தங்க முலாம் ரக ஊழியராயிருக்க அதிக வாய்ப்புண்டு.

கிறிஸ்துவுக்கேற்ற வாழ்க்கை முறை, திவ்ய சுபாவங்கள், உலகத்தால் கறை படியாத ஒரு சாட்சியுள்ள வாழ்க்கை, தேவ ஐக்கியத்தில் வாழும் ஆவிக்குரிய அனுபவம், ஆகியவற்றைக் குறித்த போதனைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கின்றவர்களும், அவற்றிற்காக அறியப்பட்டவர்களுமே உண்மையான தேவ ஊழியர்கள். இவைகளை இரண்டாம் இடத்திற்குத் தள்ளிவிட்டு அற்புதம், வல்லமை, அபிஷேகம் என்பவற்றை தங்களின் பிரதானமான ஊழிய அடையாளங்களாகக் காட்டுகின்ற எவரும், தங்க முலாம் ரகமான போலியான ஊழியர்களாகவேயிருப்பார்கள்.

இவர்களின் முக்கியமாகக் கவனிக்க வேண்டிய எச்சரிப்பிற்குரிய தரமற்ற விஷயம். இந்தப் போலியான ஜொலிப்பு அநேகரை எளிதாகத் தன்பக்கம் இழுத்துக் கொள்கிறது. பரிட்சைகளின் போது இந்த ஜொலிப்பு போலி என்று அறியப்பட்டாலும், அதற்குள் அநேகர் வஞ்சிக்கப்பட்டு விடுகின்றனர்.

சிந்தனைக்கு...

ஒரு பக்கத்தை மட்டும் பார்த்துக் குதிப்பான் மூடன்.
மறுபக்கத்தைப் பார்க்கும் வரை பொறுத்திருப்பான் ஞானி.

டிசம்பர் 14

ஆராய்வது அவசியம்

1 தீமோத்யேு 1:1–11

வேற்றுமையான உபதேசங்களைப் போதியாதபடிக்கும்...
1 தீமோ 1:3

பூமி என்பது தட்டையானது என்பதுதான் நீண்டகாலமாகவும் பெரும்பான்மை யினராலும் நம்பப்பட்டு வந்தது. ஆனால், கலிலியோ போன்ற சிலர், பூமி உருண்டை என்பதைக் கண்டுகொண்டார்கள். பூமியைச் சூரியன் சுற்றுவதாகவே நீண்டகாலம் மக்கள் நம்பினர். ஆனால், ஒரு நாள் பூமியைச் சூரியன் சுற்றவில்லை, பூமிதான் சூரியனைச் சுற்றுகிறது என்ற உண்மை உறுதிப்பட்டது. இன்று கிறிஸ்தவ மக்கள் மத்தியில் நிலவுகின்ற சில உபதேசங்கள் தவறானவைகள். அவர்கள் சரி என்று நம்புகின்ற சில வேத விளக்கங்கள் வேதத்திற்கேற்றவை அல்ல. ஆனாலும், அவை நீண்டகாலமாக ஏராளமான மக்களால் மறுப்பின்றி நம்பப்பட்டும் கடைபிடிக்கப் பட்டும் வருகின்றன. ஏனென்றால், பெரும் பான்மையானவர்கள் அவைகளைச் சரி என்று நம்புகின்றனர். பெரும்பான்மையான போதகர்களால் அவைகள் சரியென்று விளக்கம் தரப்படுகின்றன.

ஆனால் பெரும்பான்மையினர் சரி என்று சொல்லுவதால் அது சரியாகத்தான் இருக்கும் என்பது உண்மையல்ல. பெரும்பான்மையோர் நீண்டகாலமாக ஒன்றைப் பின்பற்றுவதால் அவர்கள் சரியாகத்தான் போய்க் கொண்டிருக்கிறார்கள் என்பதும் உண்மையல்ல. கானானை வேவு பார்க்கச் சென்ற பன்னிரெண்டு பேரில் பெரும்பான்மையினராகிய பத்துப் பேர் கானானைச் சுதந்தரிக்க முடியாது என்று தான் சொன்னார்கள். ஜனங்களும் அதையே உண்மையென்று நம்பினார்கள். ஆயினும் சிறுபான்மையினராகிய காலேபும் யோசுவாவும் கானானை எளிதாகச் சுதந்தரிக்கலாம் என்றனர். மக்கள் அதை ஏற்றுக் கொள்ளவில்லை. ஆனால், அதுவே உண்மையாக இருந்தது.

ஆகாப் இராஜா யுத்தத்திற்குச் செல்லும் போது நானூறு பேர் சொன்னது பொய்யாக இருந்தது. அவர்கள் நடுவில் ஒரே ஒரு மிகாயா சொன்னதே உண்மை யாயிருந்தது. ஆம், பலர் சொல்வதாலோ நம்புவதாலோ நாமும் நம்பிவிடக் கூடாது. ஆராய்ந்து பார்க்கும் அனுபவம் வேண்டும். சிலரே சொல்வதால் அசட்டை செய்துவிடக் கூடாது. சோதித்துப் பார்க்க வேண்டும். ரோமைத் திருச்சபை ஏராள மான தவறான உபதேசங்களையும் மதக் கோட்பாடுகளையும் உருவாக்கி தப்பித மாகச் செயல்பட்ட போது, அதனைப் பெரும்பான்மையினர் சரி என்று நம்பித்தான் ஏற்றுக் கொண்டார்கள். ஆனால், ஒரு தனிமனிதனாகிய மார்ட்டின் லூத்தர் அவை களைத் தவறென்று கண்டுணர்ந்தார். பெரும்பான்மையினரால் நம்பப்படுகிறவைகள் எல்லாம் சரி என்று லூத்தர் எண்ணியிருந்தால் ஒரு சமயப் புரட்சி ஏற்பட்டிருக்காது.

சிந்தனைக்கு...

உண்மையற்ற ஆயிரம் நண்பர்களைச் சம்பாதிப்பதைவிட, உண்மையுள்ள ஒரு சிலருக்கு நீ நண்பனாவதே மேன்மை.

டிசம்பர் 15
இன்னுமொரு ஆசீர்வாதம்

ஆதியாகமம் 32:7-32

நீர் என்னை ஆசீர்வதித்தாலொழிய....
ஆதியாகமம் 32:26

யாக்கோபு ஒருநாள் தேவனை நோக்கி விடாப்பிடியாக நீர் என்னை ஆசீர் வதித்தாலொழிய நான் உம்மைப் போகவிடேன் என்று அடம் பிடித்தான். ஆனால், உலகரீதியாகப் பார்க்கும்போது, ஏற்கெனவே அவன் போதுமானஅளவிற்கு ஆசீர் வதிக்கப்பட்டவனாகவேயிருந்தான். மனைவிகள், மறுமனையாட்டிகள் பிள்ளைகள், பெருஞ்செல்வங்கள் என அவன் எதிலும் குறைவில்லாதவனாகவே யிருந்தான். பின்னர் எதற்காக அவன் தேவனிடம் இரவெல்லாம் போராடி, தன்னை ஆசீர் வதிக்கும்படிக் கெஞ்சினான்?

அவன் எல்லாவற்றையும் பெற்றிருந்த போதிலும் இன்னும் பெறாத ஒரு ஆசீர்வாதம் இருப்பதை உணர்ந்தான். அந்த ஆசீர்வாதத்தை தேவனிடமிருந்து பெறாதவரை, தான் ஏற்கெனவே பெற்றிருந்த பேராசீர்வாதங்கள் தன்னை வாழ வைக்கப்போவதில்லை என்பதை உணர்ந்தான். ஏராளமான பெருஞ்செல்வங்களை அவன் சம்பாதித்திருந்த போதிலும் அவன் பயத்திலிருந்தும், பீதியிலிருந்தும் விடுதலையாகாதவனாகவேயிருந்தான். எனவேதான் தன்னைத் தாழ்த்தி தேவ ஆசீர்வாதத்திற்காக இரவு முழுவதும் தேவனை நோக்கி விடாப்பிடியாகப் போராடினான்.

ஒருமுறை சகோதரர் ஒருவர் கர்த்தர் எல்லா விதத்திலும் எங்களை நிறை வாகவே ஆசீர்வதித்திருக்கின்றார். எங்களுக்குப் பொருளாதார ரீதியாகவோ சரீரப் பிரகாரமாகவோ எதுவும் குறைவுபடவில்லை. ஆயினும், ஏதோ ஒரு குறைவு இருப்பதைப் போல உணருகின்றோம். அதுதான் புரியவில்லை என்றார். அது விளங்கிக் கொள்ள இயலாத புதிர் அல்ல. அவர் கர்த்தர் தங்களுக்கு பலவித நன்மைகளைத் தந்திருப்பதாக நம்பிய போதிலும், அந்த கர்த்தரோடு தாங்கள் வாழ் கின்றோமா என்றும், அந்த கர்த்தர் தங்களோடு வாழும்விதமாகச் செய்ய வேண்டியதைச் செய்தோமா என்றும் யோசிக்கத் தெரியாமலிருந்தார்.

ஆம். பணம், பொருள், கல்வியறிவு, அந்தஸ்து, சமுதாய மேன்மைகள் இவைகளுக்கப்பாலும் நமக்கு ஒரு பெரிய ஆசீர்வாதம் தேவைப்படுகிறது. அதுதான் தேவ ஐக்கியம். அந்த அனுபவத்தை மிகப் பெரிய ஆசீர்வாதமாக எண்ணி அடையும்வரை, நம்முடைய பிற ஆசீர்வாதங்களால் நாம் ஒரு மனநிறைவான அமைதியின் வாழ்க்கையைக் காண முடியாது. இனம் புரியாத கலக்கங்களும் சோர்வுகளும் உங்களைத் தொந்தரவு செய்கிறதா? யாக்கோபுவைப் போல உங்களுக்கும் தேவனை நோக்கி மன்றாட வேண்டிய ஒரு தேவை உள்ளது என்பதே அதனுடைய அர்த்தம்

சிந்தனைக்கு....

எவ்வளவு தூரம் ஓடினோம் என்பதைவிட எதைச் சாதிக்க ஓடினோம் என்பதே முக்கியமானது.

டிசம்பர் 16

ஆடம்பர வாழ்வு ஆகாது

பிலிப்பியர்3:1-16

இடுக்கமான வாசல் வழியாய் உட்பிரவேசியுங்கள் ...
மத்தேயு 7:13

குறிப்பிட்ட ஒரு தேவ ஊழியர் சாதாரணமான ஒரு நிலையிலிருந்து மிகவும் வசதியான ஒரு நிலமைக்கு வந்தார். மிக ஆடம்பரமாக வீட்டைக் கட்டிக்கொண்டார். மிக ஆடம்பரமாக விதவிதமாக நவநாகரீகமாக உடுத்திக் கொள்வார். பணத்தைக் குறித்து கவலைப்படாமல் விலையுயர்ந்த பொருட்களை வாங்கிக் குவிப்பார். நட்சத்திர அந்தஸ்துள்ள ஓட்டல்களில் போய் உண்ணுவதில் மிகவும் பிரியமாயிருப்பார். இவ்விதமாக மிகச் சொகுசாக வாழ்வதற்கு கர்த்தர் தன்னை உயர்த்தியிருப்பதாக அவ்வப்போது சாட்சி கூறி மகிழ்வார்.

செல்வச் சீமானாக இருந்த ஆபிரகாம் ஒரு எளிமையான வாழ்க்கையையே வாழ்ந்தான் என்பதை அவரால் சிந்திக்க இயலவில்லை. ஒன்று இடுக்கமான வாசல். இன்னொன்று, விசாலமான வாசல். இரண்டு வித வாசல்களைத் தேவன் நமக்கு முன்பாக வைத்திருக்கின்றார். இடுக்கமான வாசலின் முடிவு நித்திய வாழ்வு. விசாலமான வாசலின் முடிவு நித்திய அழிவு. இதில் ஏதாவது ஒரு வாசலை நாம்தான் விரும்பித் தேர்ந்தெடுத்துப் பிரவேசிக்க வேண்டும்.

ஒருவேளை சாலொமோனைப் போல நமக்கு வசதியும் வாய்ப்பும் மிகுந்த சுகமான செழிப்பான சூழ்நிலை இருக்கலாம். ஆயினும், அந்தச் சூழ்நிலைக்கேற்றபடி அதிகச் சௌகரியங்களாலும் ஆடம்பரமான வசதிகளாலும் நம்மை நிரப்பிக் கொள்ளக்கூடாது. ஏதோ கர்த்தர் தந்த வசதி நிலைகள்தானே என்ற எண்ணத்தில் அவைகளால் நம்மை அதிகமாகச் சுகப்படுத்திக்கொள்ள விரும்பினால், அது ஒரு விசாலமான வாசல் பிரவேசம் ஆகும். அது நம்மை அழிவிற்கே அழைத்துச் செல்லும். சுகமான சூழ்நிலைகள் இருந்தால்கூட, எளிமையும் சுய வெறுப்பும் கலந்த ஒரு இடுக்கமான வாசல் அனுபவத்தை, நாம்தான் தேர்ந்தெடுத்து வாழவேண்டும். அதுவே தேவனுடைய விருப்பம். அதுவே ஆவிக்குரிய வாழ்க்கை.

பாபிலோன் அரண்மனையில் தானியேலுக்கு விசாலமான சௌகரியமான ஒரு நல்ல சூழ்நிலை கிடைத்தது. ஆயினும், அவன் அதைக் கர்த்தரின் ஆசீர்வாதம் என எண்ணாமல் சுயவெறுப்பும் எளிமையும் நிறைந்த ஒரு இடுக்கமான வாசல் அனுபவத்தையே தெரிந்து கொண்டான். எனவேதான் அவன், தேவனுக்குப் பிரியமானவன் என்ற சாட்சியைப் பெற்றான். சில நேரங்களில் நமக்கு முன்னால் வருகின்ற அனைத்து விசாலமான சுக சூழ்நிகைளும் தேவனால்தான் வந்தது என்று கூறவிட முடியாது. நம்மை அகல வாசல் வழியாகப் பிரவேசிக்க வைத்து, வழி தவறிப் போகத் தூண்டும் சாத்தானாலும் அவை வரக்கூடும். பகுத்தறியும் விழிப்புணர்வு தேவை.

சிந்தனைக்கு...

எரியாத விளக்குகளால் யாருக்கு லாபம்?
பிறருக்கு உதவாத செல்வங்கள் இருப்பதே சாபம்.

டிசம்பர் 17
தேவ திட்டம் அறியாவிடில்

உபாகமம் 28:1-14

நீ கர்த்தரின் சத்தத்திற்குச் செவிக் கொடுக்கும்போது..........
உபாகமம் 28:2

எகிப்தில் பலவிதங்களில் பாதிக்கப்பட்டிருந்த மக்களை ஆசீர்வதிப்பது தேவனுடைய பிரதான நோக்கமாக இருந்திருந்தால், அங்கேயே அவர்களை ஆசீர்வதித்துச் செழிக்க வைத்திருப்பார். ஆனால், அவர்களுக்கு கானான் என்ற தூர தேசத்தைக் காண்பித்து அதனை நோக்கி நடத்திக் கொண்டிருந்தார். ஏனென்றால், அதனுடைய பின்னணியில் தேவனுடைய அனாதி திட்டம் இருந்தது. அந்த திட்டம் நிறைவேறும் விதமாக அந்த ஜனங்கள் அவர் காட்டிய பாதையில் சென்றால்தான் அவர்கள் ஆசீர்வதிக்கப் படுவார்கள். அவர்கள் தேவனுடையத் திட்டத்திற்கு இசைந்து நடவாமல், நன்மைகளை அனுபவிப்பது மட்டுமே நோக்கமாகக் கொண்டிருந்ததால், ஆசீர்வாதத்தை அடையாமல் போனார்கள்.

இன்று நம்மில் அனேகர் இடைவிடாத பிரார்த்தனைகள் மூலமாகவும், கடுமை யான உபவாசங்கள் மூலமாகவும், தாராளமான காணிக்கைகள் மூலமாகவும்,பிர பல தேவ ஊழியர்கள் மூலமாகவும் தேவ நன்மைகளைத் தீவிரமாகத் தேடுவது உண்மை. ஆயினும் எதிர்பார்க்கும் அளவிற்கு ஆசீர்வாத விளைவுகள் இல்லை. காரணம் என்ன? தேவனுடைய திட்டங்களையும் நோக்கங்களையும் உணர்ந்து, அவைகள் நிறைவேறத்தக்கதான ஒரு ஆவிக்குரிய வழியில் அவர்கள் வேகமாக நடக்கவில்லை.

அநேகர் மனந்திரும்பாத பழைய பாவ நிலையிலிருந்து கொண்டே ஜெபங்களால் மன்றாடுகின்றனர். அநேகர் பரிசுத்தமான ஒரு வாழ்க்கையைக் குறித்த விசேஷக் கரிசனை எதுவுமில்லாமலே, காணிக்கைகளால் நன்மைகளை அடைய வாஞ்சிக் கின்றார்கள். சிலர் கர்த்தருடைய வேதத்தை அறியவும், அந்த வேதத்தின்படி வாழவும் எந்த தாகமும் கொள்ளாமல், பிரபல ஊழியர்களின் பிரார்த்தனைகளினால் பிரச்சினை களிலிருந்து விடுதலையடைய விரும்புகின்றனர்.

நாம் மனந்திரும்பி, இரட்சிப்பின் அனுபவம் பெற்று, பரிசுத்த ஆவியால் வழி நடத்தப்பட்டு, தூய வாழ்வில் வெற்றிகண்டு நித்திய வாழ்விற்குத் தகுதிபெற்று இப்படியாய் தேவ நோக்கங்களை நிறைவேற்ற வேண்டும் என்பதே தேவனுடைய திட்டம். இந்த திட்டத்தை நாம் தலைக்குமேல் பிடிக்காமல் எவ்வளவுதான் தலைகீழாக நின்று ஆசீர்வாதங்களைத் தேடினாலும், உண்மையான ஆசீர்வாதங்களைப் பெற முடியாது.

ஏனென்றால், தேவனுடைய திட்டம் சார்ந்து செயல்படுவதின் பிரதிவிளைவுகள் தான், தேவனால் வரும் ஆசீர்வாதங்கள். நாம் அவருடைய திட்டத்தை இலக்காகக் கொண்டு செயல்படும்போது, கர்த்தர் நம்முடைய வாழ்க்கையில் எதை எதை எப்படிச் செய்ய வேண்டுமோ, அதை அருமையாகச் செய்து முடிப்பார். தேவ ஆளுகைக்கு உட்படுத்தப்பட்ட வாழ்க்கைதான் தேவ நன்மைகளுக்கு தகுதிபடைத்ததாக மாறுகிறது.

சிந்தனைக்கு...

சிந்திக்கும் முன்பு செயல்படுகிறவன் முட்டாளாகின்றான்.
சிந்தித்த பின்பும் செயல்படாதவன் சோம்பேறியாகிறான்.

டிசம்பர் 18

நன்மை செய்ய பழகுங்கள்

அப்போஸ்தலர் 9:17-30

அவர்கள் அவனைச் சீஷனென்று நம்பாமல்...
அப்போஸ்தலர் 9:26

ஒரு ஒட்டகத்தின்மேல் இருவர் பாலைவனத்தின் வழியாகப் பயணம் செய்து கொண்டிருந்தார்கள். பல நாட்களாகப் பயணம் தொடர்ந்ததால் கொண்டு வந்த தண்ணீர் எல்லாம் தீர்ந்து போய்விட்டது. குடிக்கத் தண்ணீரின்றித் தவித்தார்கள். அப்பொழுது அவர்களில் ஒருவனுடைய கண்ணிற்கு தூரமாக ஒரு நீரோடை பாய்வது போல் தெரிந்தது. ஆனால் மற்றவனோ அது நீரோடை அல்ல. சூரிய ஒளியினால் பாலைவன மணலில் வழக்கமாக தோற்றமளிக்கும் கானல் நீர் எனும் வெறும் மாயத் தோற்றம் என்றான். பாலைவனங்களில் பிரயாணிகள் நீரோடை போன்ற தோற்றத்தைக் கண்டு ஏமாறுவது வழக்கமானதால் அப்படிச் சொன்னான்.

பயணம் தொடர்ந்து. ஆனால், தண்ணீர் தாகம் பொறுக்க முடியாமல் இரு வருமே மயங்கி விழுந்தனர். அப்போது எதிரே வந்த இன்னொரு பயணி தண்ணீர் கொடுத்து அவர்களைக் காப்பாற்றினான். தொடர்ந்து நீங்கள் வரும் வழியிலே ஒரு நீரோடை உண்டே. அங்கே நீங்கள் தண்ணீர் பிடித்திருக்கலாமே என்றான். அது நீரோடை அல்ல. வெறும் மாயத்தோற்றம் என்று நினைத்து கவனிக்காமல் வந்த பிரயாணி அதைக் கேட்டு தன் தவறை நினைத்து வருந்தினான்.

எவரையும் அவசரப்பட்டு ஏற்றுக்கொள்ளக் கூடாது. சோதித்தறியாமல் யாரோடும் ஆழமான ஈடுபாடுகள் கொள்ளக்கூடாது. அதே வேளையில் எல் லோரையும் சந்தேகக் கண்களோடு பார்ப்பது நல்லதல்ல. போலித்தனங்கள் பெருத்த இந்த நாட்களில் உண்மைக்காகவும் சிலர் உண்டு. கபடமாகப் பேசுகின்ற பலர் நடுவில் மாசற்ற மனநிலையோடும் சிலர் உண்டு. எதையாவது எதிர்பார்த்துத் திரிகிற பலர் நடுவில், எந்த ஆதாயத்தையும் நோக்கமாகக்கொள்ளாத சிலருமுண்டு.

வாழ்க்கையில் சிலவேளைகளில் சில மனிதர்களால் நாம் ஏமாற்றப்படலாம். அல்லது சில கசப்பான காரியங்களால் பிறரால் நாம் காயப்படலாம். அதற்காக எல்லாரும் அப்படித்தான் என்று எண்ணிவிடக் கூடாது. அந்த அளவுகோலை நாம் உபயோகித்தால் சில வேளை நாம் சில நல்ல மனித உறவுகளையும் இழந்து விடுவோம். ஜாக்கிரதையாக இருக்கிறோம் என்ற பெயரில் நாம் எல்லோரையும் புறக்கணித்தால் சிலரால் வரவேண்டிய நல்ல காரியங்களையும் நாம் இழக்க நேரிடும். யூதாஸ் இயேசுவைக் காட்டிக் கொடுத்தான். அதற்காக இயேசுவின் சீடர்கள் எல்லாரும் காட்டிக் கொடுத்தவர்கள் அல்ல. பேதுரு மறுதலித்தான். அதற்காக இயேசுவின் சீடர்கள் எல்லாம் மறுதலித்தவர்கள் அல்ல. ஆம், எதிலும் கொஞ்சம் யோசனை செய்து சோதித்துப் பார்க்க வேண்டும்.

சிந்தனைக்கு...

அவசரப்பட்டு ஒருவரின் கருத்தை ஏற்காதே,
ஆத்திரப்பட்டு எதிர்க்கவும் செய்யாதே. சிந்தித்துப் பார்.

டிசம்பர் 19

வாழ்வு பயனற்றதா?

ரூத் - 1:1-22

நீங்கள் என்னை மாராள் என்று சொல்லுங்கள்...
ரூத் 1:20

சமீபத்தில் ஒரு கலைப்பொருள் அங்காடிக்குச் சென்றபோது, அங்கே தேங்காய் மூடியினால் செய்யப்பட்டிருந்த ஒரு பொம்மை, கண்ணைக் கவருகின்ற, விதமாகச் சிறப்பாக இருந்ததைப் பார்க்க முடிந்தது. இனி எதற்கும் பயனற்றது என்று வீசி எறியத்தக்க நிலையில் உள்ள ஒரு சாதாரணப் பொருளை, ஒரு கலைஞன் அவ்வளவு சிறப்பான ஒரு பொருளாக மாற்ற முடிந்திருந்தது, சிந்தனையைத் தூண்டுவதாக இருந்தது. வாழ்க்கையில் சில நேரங்களில் எதிர்பாராத விதமாக நேரிட்டு விடுகின்ற சில துயர நிகழ்வுகளும், ஏமாற்றங்களும், தோல்விகளும், பலரை இனி "நான் வாழ்வதால் என்ன பயன்? இனி என் வாழ்க்கைக்கு என்ன அர்த்தம் இருக்கிறது?" என்று எண்ணச் செய்து விடுகின்றது. ஈடு செய்ய இயலாத சில இழப்புகள், வியாதிகள், சரி செய்ய இயலாத சில வீழ்ச்சிகள் வாழ்க்கையின் அனைத்துப் பயன்பாடு களும் முடிந்து போய்விட்டது போன்ற எண்ணத்திற்குத் தள்ளிவிடுகிறது.

கட்டிய கணவனையும், பெற்றெடுத்த பிள்ளைகளையும் வரிசையாக இழந்து அன்னிய மண்ணில் எதற்கும் இனிப் பிரயோஜனமற்றவள் என்ற நிலைக்குத் தள்ளப்பட்டவள் நகோமி. ஆயினும், அது அப்படியாகத் தொடரவில்லை. சில வேத னைகளுக்குப் பின்பு வாழ்க்கை அவளுக்கு மிகுந்த பயனுடையதாகவும், அர்த்த முடையதாகவும் இருப்பதை அவளால் காணமுடிந்தது.

அரண்மனையில் வளர்ந்த மோசே ஜனங்களை ஆளுகின்ற தகுதியுடையவன், ஆனால், அந்தோ பாவம் ஆடுகளை மேய்க்கின்றவனாக மாறினான். அதுவே நாற்பது ஆண்டுகளுக்குத் தொடர்ந்ததால், ஒரு வேளை மோசே "தேவை யில்லாமல் ஒரு விஷயத்தில் நுழைந்து ஆடு மேய்க்கும் ஒரு நிலைக்கு வந்து சேர நேர்ந்ததே, இனி என் வாழ்க்கையில் என்ன இருக்கிறது" என்று அவ்வப் போது எண்ணியிருக்கக் கூடும். ஆனால், எல்லாம் முடிந்து போய்விட்டது என எண்ணத்தக்க சூழ்நிலையிலிருந்த அவனுடைய வாழ்க்கையை தேவன் தொட்டார். அவனை உபயோகப்படுத்தினார். அவன் ஒரு மாபெரும் தலைவனாகவும், தீர்க்கதரிசியாகவும் மாறி நீங்காப் புகழ்பெற்றான்.

ஆம். தேவன் ஒரு அற்புதமான கலைஞர். அவர் இனி எதற்கும் பயனற்றது என்பது போன்ற ஒரு வாழ்க்கையை, மிகச் சிறந்த அர்த்தமுடையதாக மாற்ற இயலும். சில குறைவுகள் நிரந்தரமாகிவிட்டால்கூட தேவன் தரும் புதிய நிறைவு கள் அந்தக் குறைவுகளை மறக்கச் செய்வதோடு, ஒரு பெரிய திருப்தியான வாழ்க் கைக்கு வழி நடத்தும்.

சிந்தனைக்கு...

அடைக்கப்பட்ட வழிகளுக்காகக் கவலைப்படாதே. தேவனுடைய புதிய வழிகளைக் காணும் கண்கள் திறக்கப்பட காத்திரு.

டிசம்பர் 20

எதற்காகச் ஜெபம்

யாத் 33:1-14

ஒருவன் தன் சிநேகிதனோடே பேசுவது போல....
யாத்திராகமம் 33:11

ஜெபம் என்பது தேவனைச் சந்திக்கும் ஓர் களம். தேவ உறவினை உண்மையென்று நிரூபிப்பது ஜெபமே. தேவ உறவோடும் ஐக்கியத்தோடும் நாம் வாழ்வதை உறுதிப் படுத்துவது ஜெபமே. ஜெபிக்கச் செல்கின்றோம் என்றால் தேவனை சந்திக்கச் செல் கின்றோம். அவரோடு பேசப் போகிறோம், அவருடைய அன்பை ருசிக்கப் போகிறோம். அவருடைய பிரசன்னத்தை உணரப் போகின்றோம் என்பது போன்ற உணர்வுகளும், எண்ணங்களும் நமக்கு வேண்டும்.

தேவன் தம்மை நேசிக்கின்றவர்களுக்கும் தம்முடைய ஆளுகையை ஏற்றுக் கொள்ளுகின்றவர்களுக்கும், தம்முடைய சமுகத்தை வெளிப்படுத்த விரும்புகின்றார். அவர் தம்முடைய பிரசன்னத்தை அவர்களுக்கு வெளிப்படுத்தி அவருடைய அன்பையும் ஐக்கியத்தையும் அவர்கள் உறுதிபடுத்திக்கொள்ளவும் அனுபவிக்கவும் விரும்புகின்றார்.

தேவன் தம்மை எப்படி அவர்களுக்கு வெளிப்படுத்த முடியும்? இதற்காகவே தேவன் ஜெபத்தை நம்முடைய வாழ்க்கையில் மிகவும் முக்கியப்படுத்துகின்றார். ஜெபிக்கின்ற மனிதன் தேவன் தம்முடைய பிரசன்னத்தை அவனுக்கு வெளிப்படுத்த வதற்கு வழி ஏற்படுத்திக் கொடுக்கின்றான். தேவனுடைய பிரசன்னம் அல்லது சமுகம் நமக்கு வெளிப்படாவிட்டால், நாம் தேவ அன்பை உணரவோ அவருடைய ஐக்கியத்தை அனுபவிக்கவோ, எந்த வாய்ப்பும் இல்லை. ஜெபம் என்ற பிரதான வாசலைத் தவிர, தேவன் தம்மை நமக்குள் காண்பிக்க வேறெந்த வழியும் இல்லை.

ஜெபம் என்பதை நம்முடைய தேவைகளுக்காக தேவனை நோக்கிக் கெஞ்சுகின்ற ஒரு மத சம்பிரதாயம் என்ற ரீதியில் பலர் புரிந்துகொள்வதால்தான், அதனுடைய உன்னதமான நோக்கம் வெளிப்படாமல் போகின்றது. அநேகருக்கு உலக ரீதியாக எல்லாத் தேவைகளும் எளிதாகக் கிடைத்துவிடுவதால், ஜெபம் என்ற ஒன்றின் மூலம் பெரிதாக எதையும் தேட வேண்டிய தேவை இல்லாமல் போகிறது.

ஆனால், ஜெபம் என்பது தேவப் பிரசன்னத்தை உணருகின்ற இடம் அல்லது தேவன் தம்மை காண்பிக்கும் இடம் என்ற உண்மையை அறிந்துகொண்டால், தினமும் ஜெபத்தில் நம்மை ஈடுபடுத்த போதிய தேவைகள் இருப்பதை நம்மால் உணர முடியும். அடுத்த முறை ஜெபத்தைக் குறித்துச் சிந்திக்கும்போது, தேவையைக் கேட்டுப் பெறுகின்ற ஒரு அனுபவமாக மட்டும் அதனை எண்ணாமல், நம்மை நேசிக்கிற தேவனைச் சந்திக்கும் ஒரு அனுபவமாகவும், தேவப் பிரசன்னத்தை உணருகின்ற ஒரு அனு பவமாகவும் அதை நினைப்போமாக.

சிந்தனைக்கு...

யாரோ ஒருவருடைய ஜெபத்தை சார்ந்திருப்பவன் அவிசுவாசி,
தன்னுடைய ஜெபத்தைச் சார்ந்திருப்பவனே விசுவாசி.

டிசம்பர் 21

கட்டுப்பாட்டிற்குள்

1 பேதுரு 5: 1-14

அவருடைய பலத்த கைக்குள் அடங்கியிருங்கள்
1 பேதுரு 5:6

உயர உயரப் பறந்து கொண்டிருக்கும் பட்டம் ஒரு சிறிய நூலின் கட்டுப்பாட்டிற்குட் பட்டே அவ்விதம் பறக்கின்றது. பட்டம் உயர உயரப் பறப்பதற்கு அந்த நூல் அவசியமில்லை என்றாலும், அந்த நூலின் கட்டுப்பாட்டை நூல் இழந்துவிட்டால் சற்று நேரத்தில் அது எங்கேயோ போய் விழுந்துவிடும். கட்டுப்பாடு இருக்கும் வரைதான் பட்டத்தின் மகிமை உயரத்தில் தெரியும்.

அதுபோல நம்முடைய வாழ்க்கையில் பலவிதமான ஆற்றல்கள் செயல்பட்டு நம்மை உயரங்களுக்குக் கொண்டுச் செல்லலாம். ஆனால், தேவனுடைய வார்த்தை களும், தேவனுடைய ஆவியும் நம்மைக் கட்டுப்படுத்தி நடத்தாவிட்டால் அந்த உயர்வுகளிலிருந்து எந்த நேரத்திலும் நாம் விழுந்துவிட இயலும். கல்வித் திறனும், திறமைகளும் முயற்சிகளும் பெரிய சாதனைகளைக் காணும்படி நமக்கு உதவலாம். ஆனாலும், நம்மை நாமே சரியாக நடத்திச் செல்ல இயலாதவர்கள்.

நம்மையும் நம்முடைய சுபாவங்களையும், நம்முடைய இதய நிலையையும், நம்முடைய ஆசைகளையும் சரியாக ஒழுங்குபடுத்தி கட்டுப்படுத்திக் கொண்டு செல்ல, கர்த்தர் நமக்கு வேண்டும். சவுல் ஒரு அசாதாரணமான ஆற்றல் உள்ள மனிதன். அவன் உயர்ந்து வந்தான். ஆனால், அவன் தேவனுடைய வார்த்தைகளின் கட்டுப்பாட்டை விரும்பி ஏற்றுச் செயல்படவில்லை. தன் மனதின் பாதையிலே கடிவாளம் இல்லாத குதிரையைப் போல் ஓட விரும்பினான். எனவே, உயர்ந்த நிலையிலிருந்து அவன் பரிதாபமான பள்ளத்திற்குள் விழுந்தான். அறிவாலும், ஞானத்தாலும் உயர்ந்த கோபுரமாய் விளங்கின சாலொமோன், தேவ கட்டுப்பாடு என்ற நூலோடு இணைந்திருக்கவில்லை. அறிவையும் ஞானத்தையும் அதிக மாகப் பெற்றிருந்தும், மனம்போன வாழ்க்கைக்கு எந்தக் கட்டுப்பாட்டையும் அவன் காணவில்லை. எனவே, அவனுடைய சாம்ராஜ்யம் உடைந்தது.

தேவனே! நான் எதை யோசித்தாலும், எதைத் திட்டமிட்டாலும், எதை அடைந் தாலும் உம்முடைய கட்டுப்பாட்டுக் கயிற்றின் தொடர்பை இழந்து விடாமல் செயல்பட கிருபை தாரும். என்னுடைய ஆற்றல்களையும், அறிவு வளங்களையும், புத்திக் கூர்மையையும், ஆசைகளையும் உம்முடைய ஆளுகையின் வட்டத்திற்குள்ளேயே வைத்துக்கொள்ளும். உம்முடைய வார்த்தைகளின் கட்டுப்பாட்டை விட்டு விலகிப் போய் பறக்க என்னை அனுமதியாதிரும். நான் எதைச் செய்தாலும் அதனை உம்முடைய கட்டுப்பாட்டின் எல்லைக்குள்ளிருந்துகொண்டே செய்திடச் செய்யும். இவ்விதமாக தினமும் பிரார்த்தனை செய்வோமாக.

சிந்தனைக்கு...

இறைவனின் விதிகளை மதித்து வாழத் தயங்கினால், சாத்தானின் சதிவழிகளில் மயங்கி விழ நேரிடும்.

டிசம்பர் 22

குறை கூறும் ஆவி

ரோமர் 14:8-23

ஒருவரையொருவர் குற்றவாளிகளென்று தீர்க்காதிருப்போமாக ...
ரோமர் 14:13

என்னுடைய புத்தங்களைப் படிக்க நேர்ந்த ஒரு சகோதரர் புத்தகத்தின் கருத்துக்கள் மிக நன்றாயிருப்பதாக உணர்ந்து என்னோடு தொடர்பு கொண்டார். என்னையும் என்னுடைய புத்தகங்களையும் அதிகமாக மெச்சினார். ஒருமுறை அவரோடு சற்று நீண்ட நேரம் பேசிக்கொண்டிருக்க நேரிட்டது. அப்போது அவர் ஊழிய நிலையில் முன்னணியில் உள்ள பல ஊழியர்களிடமும் பாஸ்டர்களிடமும் உள்ள குறைபாடுகளையும் அவருக்கு நேரிட்ட கசப்பான அனுபவங்களையும் நீளமாகப் பட்டியலிட்டு விளக்கினார்.

அவர் சொன்ன பல விஷயங்களும் விமர்சனங்களும் சரியானவைதான். ஆனால், அவர் விமர்சித்த விதம் தனக்குப் பிரியப்படாத எவரையும் இவர் வெளுத்து வாங்கி விடுவார் என்பதை எனக்கு உணர்த்தியது. அப்போது நான் இப்போது என்னை தலைக்குமேல் தூக்கி உயர்த்துகின்ற இவர், ஒரு நாள் அற்ப காரணத்திற்காக பொத் என்று கீழே போட்டாலும் போடுவார் என எனக்குள் நினைத்தேன். அது நான் எதிர்பார்த்த காலத்திற்கு முந்தியே வந்து நிகழ்ந்தது.

சிலருடைய தவறுகளை சிலர் மிகக் கறாராகக் கண்டிப்பதும் விமர்சிப்பதும், உண்மையில் தவறுகளின்மேல் கொண்ட வெறுப்பினால் அல்ல. சில நற்செய்தி யாளர்களை அவர்கள் நேசிப்பதும் கனப்படுத்துவதும் நலமானவைகள்மேல் கொண்ட பற்றினால் அல்ல. அவர்கள் தாங்கள் வரைந்த கோட்டிற்குள் நிற்க இயன்றவர்களை வாழ்த்துவார்கள். சற்று அவர்களின் மனநிலைகளுக்குப் பிரியப்பட மறுத்தாலோ தூஷிப்பார்கள். ஏனென்றால், யாரையும் தொடர்ந்து நல்லவர்களாக பார்க்க விரும்பும் பண்பட்ட மனநிலை அவர்களுக்குக் கிடையாது. அவர்கள் குற்றஞ் சாட்டும் மனநிலையாலும், குறை கூறும் குறுகிய இதயத்தாலும், யாரை எப்படி விமர்சிக்கலாம், வேதனைப்படுத்தலாம் என்பதிலேயே குறியாயிருப்பார்கள்.

அவர்கள் சில நற்செயல்களைப் பாராட்டினாலும், அது யாரோ சிலரின்மேல் கொண்ட வெறுப்பின் விளைவாகவும், உணர்சிவசப்பட்டதின் விளைவாகவுமே இருக்கும். அவர்களால் சத்தியத்தையும் உண்மையையும், தங்களின் மன உணர்வுகளைக் கடந்து சென்று, கனப்படுத்தவோ நேசிக்கவோ முடியாது.

ஆம், உண்மையில் சத்தியத்தின்மேல் கொண்ட அன்பினாலும் வைராக்கியத் தாலும் தவறுகளை விமர்சிக்கின்றோமா அல்லது எங்கே விமர்சிக்கும் வாய்ப்பு கிடைக்கின்றது என்ற தவறான சிந்தையால் விமர்சிக்கின்றோமா என்று நம்மை நாமே ஆராய்ந்து பார்ப்போம்.

சிந்தனைக்கு...

பிறரிடம் குறைகளையே கண்டுபிடிக்க அறிவு தேவையில்லை, ஆனால், முட்டாள்தனம் கொஞ்சமாவது வேண்டும்.

டிசம்பர் 23
சூரியனும் விளக்கும்

11 பேதுரு 1:13-21

இருளுள்ள ஸ்தலத்தில் பிரகாசிக்கிற விளக்கைப் போன்ற... 11 பேதுரு 1:19

பகலிலே சூரியன் பிரமாதமாகப் பிரகாசிக்கின்றது. எங்கும் ஒளி வெள்ளம். அங்கே வேறு விளக்குகளுக்குத் தேவையும் இல்லை. வேலையும்இல்லை. ஆனால், எவ்வளவுதான் பகல் முழுவதும் சூரியன் பிரகாசித்தாலும், தொடர்ந்து வரப்போகிற இரவு வேளைக்கு அது உதவி செய்யப் போவதில்லை. பகல் முழுவதும் நாம் அனுபவித்த நல்ல வெளிச்சத்தைக் கொண்டு, இரவு வேளையை நாம் சந்திக்க முடியாது. இரவுக்கு வேறு வெளிச்சம் தேவை

அறிவு, ஞானம், புத்தி, சிந்தனை சக்தி, தத்துவார்த்த பார்வை ஆகியவை சூரிய ஒளியைப் போல பிரகாசிப்பது உண்மைதான். அவைகளால் நல்ல உபயோகம் உண்டு என்பதும் உண்மைதான். ஆனால், மனித வாழ்வின் இரவுப் பகுதிகளுக்கு அவைகள் போதிய உதவி செய்யாது. பாவம் என்னும் இருள் மனித வாழ்வை இருளாக்குகின்றது. பலவிதச் சோதனைகளும், இழப்புகளும், ஏமாற்றங்களும், தோல்விகளும், நஷ்டங்களும் மனித வாழ்வை இருட்டாக்கிவிடுகின்றன. அவ்விதமான இருளின் நடுவில் நாம் நடக்க வேண்டிய பாதையைக் கண்டறிய அறிவோ, ஞானமோ, புத்தியோ, தத்துவமோ உதவி செய்யாது.

அந்த இருளைக் கடந்து செல்வதற்கு தேவனுடைய வார்த்தைகளாகிய விளக்குகள் தேவை. அவை வேதாகமத்தில் அச்சிடப்பட்டுள்ள வார்த்தைகளல்ல. அது தேவன் நம்முடைய உள்ளத்திற்குள் வந்து நமக்குள் பேசுகின்ற அவருடைய வார்த்தைகள். வேதாகம வார்த்தைகளாயினும் அந்த வார்த்தைகள் தேவ உறவினால் உயிரூட்டப்பட்டு நமக்குள் தொனிக்கவேண்டும். அந்த வார்த்தைகளின் வெளிச்சத்தில், இருள் போன்ற வாழ்க்கைப் பகுதிகளில் நாம் நடக்க வேண்டிய பாதையை அறியமுடியும். அறிவும், ஞானமும், சிந்தனை சக்தியும், தத்துவங்களும் உடைய பலர், இருள் நிறைந்த இந்தப் பாவ உலகில் ஒரு நல்ல வாழ்க்கைப் பாதையைக் கண்டு, அதில் நடக்க இயலவில்லை.சோதனைகளின் நடுவிலும், நெருக்கடிகளின் நடுவிலும் நம்பிக்கை பெற்று அவர்களால் அமைதியோடு வாழ இயலவில்லை.

ஆம், தேவனுடைய வார்த்தைகளுக்கு அறிவாளிகளின் வார்த்தைகளைப்போல கவர்ச்சியில்லை. தேவனுடைய வார்த்தைகளுக்கு தத்துவ சிந்தனைகளைப் போல அதிகப் பரவசம் இல்லை. புத்திமிக்கவர்களுக்கு வேத வார்த்தைகள் பெரிய மேன்மையாகத் தெரியவில்லை. ஆனால் அறிவும், ஞானமும், தத்துவமும் தராத வெளிச்சத்தையும், ஊக்கத்தையும், நம்பிக்கையையும், செயல்படும் ஆற்றலையும் வேத வார்த்தைகள் நிச்சயம் தரும்.

சிந்தனைக்கு...

உன் வேத அறிவை உலகம் பாராட்டும். வேதத்திற்கேற்ற வாழ்க்கையைத்தான் இறைவன் பாராட்டுகிறார்.

டிசம்பர் 24
சுத்திகரிப்பு

அப்போஸ்தலர் 3:19-26

பொல்லாங்கு களிலிருந்து விலக்கி, உங்களை ஆசீர்வதிக்கும்படி ...
அப்போஸ்தலர் 3:26

ஒரு முறை என்னுடைய துணிகள் சிலவற்றை வீட்டிலிருந்த ஒரு பெட்டியில் அவசர, அவசரமாக அடுக்கி வைத்தேன். சில நாட்களுக்குப் பின்னால் பெட்டியைத் திறந்தபோது, அதிலிருந்த துணிகளிலிருந்து மோசமான ஒரு வாசனை வந்தது. மட்டுமின்றி நல்ல துணிகள் அங்காங்கே ஏதோ பூச்சிகளால் அரிக்கப்பட்டிருந்தன. துணிகளை வைக்கும் முன்பு அந்தப் பெட்டியின் உட்புறத்தை நன்கு சோதித்து, சுத்தம் செய்யாததால் பல துணிகள் நஷ்டம் ஆனது.

ஆம். ஒரு நல்ல பொருளை எதில் வைக்கின்றோமோ, முதலாவது அதனை நன்கு சுத்தம் செய்தல் அவசியமாகின்றது. அதுபோலவே தேவனுடைய ஆசீர்வாதங் களும், தேவன் தம்முடைய ஆசீர்வாதங்களை நம்முடைய வாழ்க்கையில் வைக்கும் முன்பு, வாழ்க்கையைச் சுத்தம் செய்யவே விரும்புகிறார். சுத்தப்படுத்தப்படாத வாழ்க்கை யில் அவருடைய ஆசீர்வாதங்கள் நிலைக்க முடியாது. சுத்திகரிக்கப்படாத இருதயத்தில் அவருடைய சமாதானம், சந்தோஷம், நம்பிக்கை ஆகியவை பராம ரிக்கப்பட முடியாது.

நம்மைச் சீர்செய்து கொள்ளுதல், செவ்வை செய்தல், சுத்திகரித்தல் ஆகியவை நம்மிடம் தேவன் தங்கிச் செயல்படுவதற்கான வழிகளைத் திறந்து வைக்கிறது. ஏனென்றால், தேவன் நம்மோடு நேரடியாகச் சம்பந்தப்படாமல், நாம் தேடும் நன்மை களை அவர் நமக்கு அளிக்க இயலாது. அவர் நம்மோடு தங்குவதற்கான ஒரு பரிசுத்த சூழ்நிலை உருவாகும்போது, தேவன் நம்மோடு தங்கியிருந்து நமக்கு நன்மைகளைத் தர முடியும். யோர்தானைக் கடக்க வழி அறியாதிருந்த இஸ்ரவேல் ஜனங்களுக்கு தேவன் முதலாவது அற்புதம் செய்யவில்லை. அவர்கள் தங்களைப் பரிசுத்தப்படுத் திக்கொள்ளச் சொன்னார். ஆம். முதலாவது அவர்கள் நடுவில் அவர்களுக்காக செயல்படத் தேவன் ஏற்றதொரு சூழ்நிலையை உருவாக்க விரும்பினார். அதனைத் தொடர்ந்து நிகழ்ந்ததே அற்புதம்.

ஒரு பாத்திரத்தில் பாலை ஊற்றும் முன்பு, அதனைச் சுத்தப்படுத்த போதிய கவனம் செலுத்தாவிடில், பால் அங்கே வீணாகிவிடும். ஏராளமான விசுவாசிகள் தேவனுடைய நன்மைகளைப் பெறுகின்ற நிலைகளில் காண்பிக்கும் ஆர்வத்தின் அளவிற்கு, அவரால் வாழ்க்கை உரிய முறையில் சுத்தமாக்கப்பட வேண்டும் என்ற நிலைகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பதில்லை. ஆனால், தேவன் நம்மை நிறைவாக ஆசீர்வதிக்கும் முன்பு, நம்மை அதற்கேற்ப நிறைவாகச் சுத்திகரிக்க விரும்புகின்றார். ஆயினும் அதை நம்முடைய ஒத்துழைப்பின்றி அவர் செய்ய முடியாது.

சிந்தனைக்கு...

பகைவர் பெருகினால் தூய்மையாய் வாழக் கவனமாயிரு. நண்பர் பெருகினால் தூய்மையைத் தக்கவைக்க ஜாக்கிரதையாயிரு

டிசம்பர் 25
சந்தோஷப்படுத்துதல்

லூக்கா - 2:1-20

எல்லா ஜனத்துக்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும்.
லூக்கா - 2:10

தொழிலதிபர் ஒருவர் சனி, ஞாயிறு மாலை வேளைகளில் நவ நாகரீக உணவு விடுதிகள், கிளப் போன்ற இடங்களுக்குச் சென்று தன்னுடைய நண்பர்களுடன் பல்லா யிரக்கணக்கான ரூபாய்களைச் செலவு செய்வார். ஒரு நாள் அவர் ஒரு நவநாகரீக ஓட்டல் பக்கத்தில் பசியுடன் நின்றுகொண்டிருந்த ஒருவனுக்குப் பத்து ரூபாய் கொடுத் தார். அந்தப் பத்து ரூபாயைப் பெற் றுக்கொண்ட அவன் அடைந்த அளவுக்கு மிஞ்சிய மன உற்சாகத்தைக் கண்ட அந்தத் தொழிலதிபர் சிந்திக்க ஆரம்பித்தார். பத்து ரூபாய் ஒரு மனிதனை இவ்வளவு சந்தோஷப்படுத்துகிறதே, நான் பல்லாயிரங்களைச் செலவிட்டும் இத்தகைய ஒரு மகிழ்ச்சியைக் காண முடியவில்லையே என யோசித்த அவர் அன்றிலிருந்து ஆடம்பர ஓட்டல்களுக்குச் சென்று செலவிடும் பல்லாயிரங் களைக் கொண்டு ஏழைகளைச் சந்தோப்படுத்த ஆரம்பித்தார். அது அவருக்குப் பெரிய ஒரு சந்தோஷம் தருவதாக மாறியது.

நம்மில் அநேகர் நம்மை நாமே சந்தோஷப்படுத்தும் சுயநல விஷயத்தில் மிகவும் கருத்தாய் இருக்கின்றோம். தங்களுக்கு சந்தோஷத்தைத் தேடுவதே பலருடைய முக்கிய இலக்காக உள்ளது. ஆனால், பிறரைச் சந்தோஷப்படுத்துதல் என்பது மிக மிக முக்கியமான ஒரு நற்பண்பு. ஏனென்றால், பிறரைச் சந்தோஷப் படுத்த விரும்பும் நற்பண்புடையவர்கள், தங்களை மிகுதியாக சந்தோப்படுத்தக் கூடியவர்களாயிருக்கின்றார்கள்.

இயேசுவின் பிறப்பு சகல ஜனங்களுக்கும் சந்தோம் தருகின்ற ஒரு நற்செய்தி என்று வானதூதன் கூறினான். இயேசு தம்மை சந்தோஷப்படுத்திக் கொள்ளுவதற்கு முக்கிய கவனம் செலுத்தாமல், மற்றவர்களைச் சந்தோஷப்படுத்துவதற்கான ஒரு நற்செய்தியாக வந்தார். அவர் தம்மை சஞ்சலத்திற்கு உட்படுத்தி மனுக்குலத்திற்கு இரட்சிப்பின் மூலம் சந்தோம் தந்திட வந்தார். பாவ மன்னிப்பின் வாயிலாகத்தான் மனிதன் தேவனருளும் சந்தோஷத்தைப் பெற முடியும் என்பதால், அந்தப் பாவ மன்னிப்பை அருளுவதற்காக தம்மையே பாவ பலியாகக் கொடுக்க வந்தார்.

கிறிஸ்துமஸ் சந்தோஷம் என்பது புத்தாடைகளிலோ, புதுப்பொலிவான தோற்றங்களிலோ, பலவிதக் கேளிக்கைகளிலோ, பல் சுவை உணவுகளிலோ அல்ல. பிறர் சந்தோஷப்படுவதற்கு நம்முடைய வாழ்வு ஒரு கருவியாக மாறவேண்டும் என்ற நல்ல ஒரு சிந்தையிலிருந்துதான் கிறிஸ்துமஸ் சந்தோஷம் வருகிறது. பாவ மன்னிப்பின் வாயிலாக வரும் கிறிஸ்துவின் சந்தோஷத்தை நீங்கள் அடைந் திருந்தால், நிச்சயம் எல்லாக் காலங்களிலும் பிறரைச் சந்தோஷப்படுத்தும் நல் வழிகளில் எதையாவது செய்து கொண்டேயிருப்பீர்கள்.

சிந்தனைக்கு...

கர்த்தரிடத்திலிருந்து எவ்வளவு நன்மைகள் பெற்றோம் என்பதை மட்டுமல்ல. நம்மிடமிருந்து பிறர் எவ்வளவு பெற்றார்கள் என்பதையும் பார்க்க வேண்டும்.

டிசம்பர் 26

உறவுகள்

மத்தேயு 15:1-9

உன் தகப்பனையும் தாயையும் கனம் பண்ணுவாயாக...
மத்தேயு - 15:4

மிகப் பிரபலமாக இருந்த ஒரு தேவ ஊழியரைக் குறித்து என் நண்பர் ஒருவரோடு பேசிக்கொண்டிருந்தபோது, அவர் அவருடைய அருமை பெருமைகளைப் பிரமாத மாகச் சொல்லிக்கொண்டிருந்தார். அவ்விதம் கூறிவருகின்ற போது அவர் ஊழியத் திலே முழுக்கவனத்தையும். வைத்ததினால், தன்னுடைய நோய் வாய்ப்பட்ட தாயைக் கூட சில வருடங்களாகப் போய் பார்க்கவில்லை என பெருமையாகச் சொன்னார். ஆனால், அது பெருமைப்படுவதற்குரிய விஷயமாக என் பார்வையில் தோன்றவில்லை

அநேகர் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டவுடன் சொந்த பந்தங்களையெல்லாம் உதறிவிட வேண்டும் என எண்ணி விடுகிறார்கள். அதுவே மிகப்பெரிய தேவ பக்தியின் பிரதிபலிப்பு எனவும் எண்ணுகின்றனர். ‘ஆனால் உன் தாயையும், தந்தையையும் கனப்படுத்துவாயாக” என்ற வேதக் கட்டளைக்குப் புதிய ஏற்பாடு எதிரானதல்ல. உறவுகளும், சொந்தங்களும், பந்தங்களும் கர்த்தரோடுள்ள பந்தத்திற்கும் சொந்தத்திற்கும் ஊறுவிளைவிக்காத வரை, அவைகளை உதறத் தேவையில்லை. உறவு நிலைகளைக் கட்டிக்காப்பது பக்திக்கு அப்பாற்பட்டதல்ல.

மறுபடியும் பிறந்த அனுபவம் பெற்ற ஒரு மனிதனுடைய உண்மையான சொந்தமும் பந்தமும், அவனைப் போல மறுபடியும் பிறந்த அனுபவம் பெற்றவர்களே என்பது உண்மைதான். ஆவிக்குரியவர்களுக்கு ஆவியினால் பிறந்தவர்கள்தான் தேவனுடைய பார்வையில் நித்தியமான சொந்தம். மரியாளைச் சுட்டிக்காட்டி இதோ உம்முடைய தாய் வந்திருக்கிறார் என்று சீடர்கள் சொன்ன போது, இயேசு தம்முடைய வசனத்தைக் கேட்டுக் கொண்டிருந்தவர்களைச் சுட்டிக்காட்டி, இவர்கள்தான் என் தாயும் சகோதரர்களும் என்றார். அதன் மூலம் இரத்த சம்பந்தமான உறவு அல்ல, ஆவி யினால் ஏற்படும் உறவே உண்மையான உறவு என்பதை இயேசு தெளிவுபடுத்தினார்.

அதே வேளையில் புதிய ஏற்பாடு அன்பையும், தயவையும், இரக்கத்தையும் முக்கியப்படுத்துகிறது. அது மட்டுமன்றி நம்முடைய ஆவிக்குரிய கொள்கையின் விளைவு, மற்றவர்கள் பார்வையில் தவறாகப் பார்க்கப்பட்டு தூஷிக்கப்பட இடம் தருவது நல்லதல்ல. தாய் தந்தைக்குச் செய்ய வேண்டிய தார்மீகக் கடமையை கொர்பான் என்னும் காணிக்கை முறையை கேடகமாகக் காட்டி தவிர்த்த பரிசேயர்களின் செயலை இயேசு கண்டனம் செய்தார். உறவுகள் விஷயத்தில் நம்முடைய அன்பின் அளவு கர்த்தர்மேல் கொள்கின்ற அன்பை விட அகமாகிவிடக் கூடாதேயன்றி, அன்பையே தியாகம் செய்தவர்களாக நம்மை மாற்றிவிடக்கூடாது. அன்பையும் கடமையையும் மறந்த தேவபக்தி பக்தியே அல்ல.

சிந்தனைக்கு...

இறை உறவை இழந்துவிட்டு மனித உறவில் மயங்காதே. மனித உறவை இகழ்வு செய்வோர் இறை உறவை அடைவதில்லை. ற்கத் தயங்காதே.

டிசம்பர் 27

நாம் செயல்படுகிறோமா?

1 பேதுரு 1:13-25

உங்கள் நடக்கைகளெல்லாவற்றிலேயும் பரிசுத்தராயிருங்கள்
1 பேதுரு 1:15

தேவன் நமக்கு சுகம் தருகிறவராகச் செயல்பட வேண்டும். அவர் நம்மைப் பாதுகாக்கின்றவராகச் செயல்படவேண்டும். அவர் பிரச்சினைகளிலிருந்து விடுவிக்கின்றவராகச் செயல்படவேண்டும். அவர் நமக்கு நல்ல ஆலோசனைகள் தருகிறவராகச் செயல்படவேண்டும். அவர் நம்முடைய பிள்ளைகளை ஆசீர்வதிக்கிறவராகச் செயல்படவேண்டும். அவர் நம்முடைய எல்லைகளை விருத்தியடையச் செய்கிறவராகச் செயல்படவேண்டும்.

இவ்விதம் நம்முடைய வாழ்க்கையில் நாம் அவருக்கு ஏராளம் வேலைகளைக் கொடுத்து அவரைச் செயல்பட அழைக்கின்றோம். நல்லது. தேவனும் நமக்காகச் செயல்படச் சித்தமாகவேயிருக்கின்றார். ஆனால், நமக்காக அவரைச் செயல்பட அழைக்கும் நாம், அவருக்காகச் செயல்பட நம்மை அர்ப்பணித்திருக்கின்றோமா? நாம் விரும்புவதையெல்லாம் ஜெபத்தின் மூலம் வெளிப்படுத்தும் நாம் வேதாகமம் மூலம் தேவன் வெளிப்படுத்தின விருப்பங்களைச் செய்திட முன்வருகின்றோமா?

பலர், ஜெபம் மூலம் தங்கள் விருப்பங்களைத் தேவனுக்குச் சொல்லிவிட்டு, வேறொன்றையும் செய்யாமல் சும்மா இருந்து விடுகின்றனர். நாம் நல்ல பண்புகளோடு வாழ வேண்டும். தினமும் தேவ உறவைத் தேட வேண்டும் . பிறருக்கு நன்மை செய்ய வேண்டும். தேவ சாயலை வெளிப்படுத்த வேண்டும். பிறர் முன்பு நல்ல குணங்களுக்கும் நல்ல நடத்தைகளுக்கும் நாம் சாட்சியாக வாழவேண்டும். இவைகளெல்லாம் தேவன் நம்மிடம் எதிர்பார்க்கும் விஷயங்கள். இவைகளை நாம் முக்கியமாக எண்ணாமல், ஜெபம் என்ற ஒரே செயல்மூலமாக மட்டும் தேவ நன்மைகளைத் தேடினால், தேவன் நமக்கு உதவி செய்ய முடியாது.

அநேகர் எந்த ஒரு நன்மையையும் எந்த ஒரு ஆசீர்வாதத்தையும் ஜெபம் என்ற ஒரே ஒரு செயலின் மூலமாக மட்டுமே எதிர்பார்க்கின்றனர். ஜெபத்திற்கு அப்பால் தங்களின் வேலை, தொழில், குடும்பம், உறவுகள், தொடர்புகள், குணங்கள், நடத்தைகள் போன்ற பகுதிகளில், எந்த அளவிற்கு தேவ விருப்பத்தின்படியும் தேவனுடைய எதிர்பார்ப்பின்படியும் செயல்படுகின்றோம் என்று சிந்திப்பதில்லை. நம்முடைய வாழ்க்கையின் அனைத்துப் பகுதிகளிலும் தேவன் செயல்பட வேண்டுமானால், எல்லாப் பகுதிகளிலும் நாமும் அவருக்காக அவர் விரும்பியபடி செயல்பட வேண்டும். நம்முடைய சரியான செயல்பாடுகள் என்ற ஒத்துழைப்போடுதான் தேவன் நமக்கு நன்மை செய்ய இயலும்.

சிந்தனைக்கு...

தேவனுக்காக நாம் செயல்படும்போதுதான்
தேவன் நமக்காகச் செயல்படுவதைக் காணஇயலும்.

டிசம்பர் 28

யாரை நோக்கி முதலில்

சங்கீதம் 91:1-16

நான் அவனுக்கு மறு உத்தரவு அருளிச் செய்வேன்...
சங்கீதம் 91:15

ஜெபம் என்ற விஷயத்தில் ஏராளமான கிறிஸ்தவர்களுடைய நம்பிக்கை சில ஊழியர்கள் மேலேயே உள்ளது. அவர்களைத் தொடர்பு கொண்டு ஜெபிக்கக் கேட்டுக் கொண்டால், பரலோகம் உடனேயே பதில் அனுப்பும் என அவர்கள் எண்ணுகின்றனர். இன்றைய பல தேவ ஊழியர்கள் விசுவாசிகளை ஜெபிக்கப் பழக்காமல் தங்களைச் சார்ந்து நின்று ஜெப உதவி பெறவே பழக்குகின்றனர். எனவே, ஒரு கஷ்டம் பிரச்சினை என்றவுடன் அவர்கள் முதலாவது ஊழியர்களைக் கூப்பிடுகின்றார்களேயன்றி, தேவனை நோக்கிக் கூப்பிடவில்லை.

ஆனால், இது சரியான முறை அல்ல. நாம் உண்மையாகக் கர்த்தரை விசுவாசிப்போமென்றால், தேவன் நமக்கு அருகிலும் ஊழியர்கள் தூரத்திலும் இருக்க வேண்டும். தேவ ஊழியர்கள் விசேஷப் படைப்புகள் அல்ல. அவர்கள் நம்மைப் போன்ற மனிதர்களே. நமக்கிருக்கும் பல பலவீனங்கள் அவர்களுக்கும் உண்டு. அவர்கள் எப்போதும் நமக்காக மனதுருக்கத்தோடும், பாரத்தோடும், கண்ணீர் சிந்தும் கண்களோடும், ஜெப ஆவியில் நிறைந்திருப்பார்கள் என்று கூற முடியாது. பலவித மான அலுவல்களில் இருக்கும் அவர்கள், எப்போதும் இயேசு கெத்மனேயில் விழுந்து கிடந்ததைப் போல நமக்காக முகங்குப்புற விழுந்து கிடப்பார்கள் என நம்புவது தவறு. பலர் அப்படி ஒரு பொய்யான தோற்றத்தை ஜனங்களுக்குக் கொடுத்து, அவர்களை ஏமாற்றுவதில் வெற்றி கண்டிருக்கிறார்கள்.

நம்முடைய ஜெப விண்ணப்பங்கள் போய்ச் சேரும் நேரத்தில், தேவ ஊழி யர்கள் களைத்துப் போயிருக்கலாம். பல அலுவல்களுக்கு நடுவில் நசுங்கிக் கொண்டிருக்கலாம். எனவே, நம்முடைய இதயம் உணருகின்ற விதமான ஒரு பாரத்தை, அந்த நேரத்தில் அவர்கள், பெற்று உணர்வுப்பூர்வமாகச் ஜெபிக்க முடியும் எனக் கூற முடியாது. ஆனால், எப்போதும் தூங்காதவராக, சோர்ந்து போகாதவராக, நம்முடைய பாரங்களை அப்படியே அறிந்தவராக, ஆண்டவராகிய இயேசு நமக்காக பிதாவாகிய தேவனிடம் பரிந்து பேச ஆயத்தமாயிருக்கிறார்.

நம்முடைய ஜெப விண்ணப்பங்கள் ஒரு ஊழியருக்குப் போய் அங்கிருந்து ஆண்டவருக்கு அனுப்பப்படுவதைவிட, நாமே நேரடியாக அவருக்கு அனுப்பிவிடுவது மிக மிக நல்லது அல்லவா? விசுவாசிகளின் ஜெபத்தை சாதாரணமாக எடுத்துக் கொண்டு ஊழியர்களின் ஜெபத்தை விசேஷமாக எடுத்துக்கொள்வதாகக் கர்த்தர் ஒரு போதும் சொல்லவில்லையே. ஊழியர்களிடம் ஜெப பாரத்தைப் பகிர்ந்து கொள்வோம். ஆனால், சார்ந்து நிற்பதைத் தவிர்த்துவிடுவோம்.

சிந்தனைக்கு...

உன் விசுவாசம் இறைவனின் கதவுகளை நேரடியாகத் தட்ட வேண்டுமேயன்றி, தேவ ஊழியருடைய கதவையல்ல.

டிசம்பர் 29
இறங்கி விடாதீர்

1 பேதுரு 2:15-25

உபத்திரவங்களைப் பொறுமையாய்ச் சகித்தால் ....
1 பேதுரு 2:19

உங்களுக்கு எதிராக சிலர் மோசமாகப் பேசுகிறார்கள். அநாகரிகமாகச் செயல் படுகிறார்கள். ஆனால், நீங்களோ கோபத்திற்குப் பதிலாக பொறுமையையும், சகிப்புத் தன்மையையும் கடைப்பிடிக்கிறீர்கள். ஆனால், உங்களை எதிர்ப்பவர்களுக்கு உங்கள் பொறுமை கோழைத்தனமாகவும், உங்கள் சகிப்புத் தன்மை இயலாமையாகவும் தெரிகின்றது. அடடே என்னுடைய பொறுமையை அவர்கள் தவறாகப் புரிந்துகொண்டு என்னைக் கோழை என்று நினைக்கிறார்களே. நான் கோழை அல்ல என்பதைக் காண்பிக்காவிட்டால், அவர்கள் உச்சத்திற்கு போய் விடுவார்களே. இவ்வாறாக எண்ண ஆரம்பித்து பொறுமையை விட்டுவிடுகிறீர்கள்.

பாருங்கள். இதுதான் பிசாசானவனின் தந்திரம். எவ்வளவு தந்திரமாக உங்களுடைய நல்ல சுபாவ நிலையிலிருந்து இறங்கி வரவைத்து விட்டான் பார்த்தீர்காளா? நம்முடைய நல்ல குண இயல்புகளையும் நல்ல சுபாவங்களையும் மற்றவர்கள் எப்படிப் பார்க்கிறார்கள் என்பதற்கு முக்கியத்துவம் கொடுக்கக் கூடாது. மற்றவர்கள் எப்படி வேண்டுமானாலும் அதை எடுத்துக் கொள்ளட்டும். நாமோ நம்முடைய நல்ல நிலையைக் காத்துக் கொள்வதிலேயே உறுதியாக இருக்கவேண்டும். ஏனென்றால், நாம் நல்ல சுபாவங்களை வெளிப்படுத்துவது பிறருடைய பாராட்டைப் பெறுவதற்காக அல்ல. தேவனுக்காக, தேவனுடைய பாராட்டைப் பெறுவதற்காகவே.

இயேசு சிலுவையில் தொங்கும் போது, இவன் தேவனுடைய குமாரனானால் இறங்கி வரட்டும் என்று அநேர் பரிகாசம் செய்தனர். எலியா வந்து இவனை இரட்சிக்கிறானா பார்ப்போம் என்று பலர் வேடிக்கை பேசினார்கள். அவர் கோழை யாகவும், பலவீனராகவும், எதுவும் செய்ய இயலாதவராகவும் அந்த மணி வேளையில் அவர்களால் கருதப்பட்டார். அவரை முதுகில் அடித்துவிட்டு அடித்தது யார்? என்று ஞான திருஷ்டியால் சொல்லச் சொன்னார்கள். ஆயினும், உணர்ச்சிவசப்பட்டு தம்முடைய வல்லமையை வெளிப்படுத்திக் காண்பிக்க விரும்பவில்லை. பிதாவாகிய தேவனுக்கு முன்பாக அந்த நேரத்தில் எப்படிக் காணப்பட வேண்டுமோ அப்படிக் காணப்படுவதிலேயே அவர் குறியாயிருந்தார்.

நம்முடைய சிறந்த சுபாவ நிலையை விட்டு இறங்கி வரச் செய்ய சாத்தான் செய்யும் தந்திரத்திற்கு ஏமாந்து விடக்கூடாது. முதலாவது, நாம் இப்படிப்பட்ட நல்ல சுபாவங்களில்தான் இருக்க வேண்டும் என்ற உறுதியான தீர்மானம் வேண்டும். இரண்டாவது, அதை விட்டுவிட ஏவுகின்ற சோதனைகளில் ஜெயம் பெறும் ஆர்வம் வேண்டும்.

சிந்தனைக்கு...

நல்லதை ஒருவன் சொன்னால் சொல்லப்பட்டதை நண்பனாக்கு
நல்லதை ஒருவன் செய்தால் செய்தவனுக்கு நண்பனாகு.

டிசம்பர் 30

எதிரிகள்

நியாயாதிபதிகள் 6:1-10

மீதியானியரின் கை இஸ்ரவேலின்மேல் பலத்துக் கொண்டபடியால்...
நியாயாதிபதிகள் 6:2

தேவனை வாழ்க்கையில் முறையாகக் கனப்படுத்த நாம்தவறுகின்றபோது, நமக்கெதிராக வருகின்றவர்களின் முன்பாக நாம் கனவீனப்படுகின்ற சூழ்நிலைகளை தேவன் அனுமதிக்கின்றார். இதனுடைய தேவ நோக்கம் எதிராளிகளின் கரம் பலப்படட்டும் என்பதோ, நாம் மற்றவர்களுக்கு முன்பாக வெட்கப்படவேண்டும் என்பதோ அல்ல. அவ்விதச் சூழ்நிலைகள் மூலமாக, தேவனோடு நமக்குள்ள உறவுநிலைகளைச் சரிசெய்து கொள்வதற்கான தேவையை, அவர் நமக்கு உணர்த்துகின்றார்.

நியாயாதிபதிகளின் புத்தகத்தில் இதைத்தான் திரும்பத் திரும்பப் பார்க்கின்றோம். அவர்கள் தேவனுடைய வழியை விட்டு விலகினபோது அவர்களுடைய வழிகளில் சத்துருக்கள் சுதந்திரமாக வந்தனர். அவர்கள் தேவனைக் கனப்படுத்தி வாழத் தவறியபோது, எதிரிகள் அவர்களை எளிதாக வெட்கப்படுத்தினர். ஆம், எதிராளிகள் மூலமாக நமக்குச் சில பாதிப்புகளை அனுமதித்து, அதன் மூலம் தேவனோடு நமக்கிருக்க வேண்டிய உறவு நிலைகளுக்கு ஏற்பட்ட பாதிப்புகளைச் சரி செய்யத்தூண்டுவது தேவனுடைய ஒரு வழியே.

சிலர் சத்துருவாகிய சாத்தான் தங்களுக்கெதிராக மூர்க்கமாகப் போராடுகிறான் என்பார்கள். சிலர் யாரோ தங்களுக்குப் பில்லிசூனியங்கள் செய்து தங்களைத் துன்புறுத்துகின்றனர் என்பார்கள். சிலர் தங்களின் எதிராளிகளின் கரம் எப்போதும் தங்களுக்கு எதிராகப் பலத்திருக்கிறது என்பார்கள். ஆனால், இவை யாவற்றையும் மேற்கொள்ள ஒரே ஒரு வழிதான் உண்டு. பிசாசுகளைக் கட்டிச் ஜெபிப்பதினால் மட்டும் அவனை மேற்கொண்டுவிட முடியாது. பிரபல ஊழியர்களைக் கொண்டு ஜெபிப்பதால் மட்டும், பில்லிசூனியப் பிரச்சினைகள் போய்விடாது. எதிராளிகளுக்கு எதிராகப் போராடுவதால் பெரிய வெற்றிகள் வராது.

தேவனோடுள்ள நம்முடைய ஐக்கியத்தின் வலிமைதான் எதிராளிகளின் செயல்களைப் பலவீனப்படுத்தும். தானியேலுக்கு எதிராகப் பிரபுக்கள் குரூரப் புத்தியோடு செயல்பட்டபோது, தானியேல் அவர்களுக்கு எதிராகப் போராடவில்லை. அவன் அனுதினமும் தேவனோடுள்ள தனது உறவு நிலையை உயிரோட்டமாக வைத்துக் கொள்வதிலேயே அதிகக் கரிசனையாயிருந்தான். எனவே, சீறிப்பாயும் சிங்கங்கள் கூட, அவனுக்கு முன்பாக வாய்திறவாப் பிராணிகள் ஆகிவிட்டன. எதிராளிகள் நம்மை எதிர்க்கும் போது கர்த்தரோடுள்ள உறவுகளைப் பலப்படுத்தத் தவறிவிட்டோமா என யோசித்து உறவு நிலைகளைச் சீர்செய்து கொண்டால், அதுவே எதிர்ப்பவர்களுக்கு முன்பாக நம்மைக் காக்கும் கோட்டையாக மாறும்.

சிந்தனைக்கு...

தோல்வியைக் கண்டு துவண்டு போகாதே.
ஆனால், அதன் காரணங்களைக் கண்டுபிடிக்க மறந்து போகாதே.

டிசம்பர் 31

ஆயத்தமாவோம்

யோசுவா 3:1-17

உங்களைப் பரிசுத்தம் பண்ணிக் கொள்ளுங்கள்...
யோசுவா 3:5

துரித இரயில் வண்டியோ அல்லது பேருந்தோ குறிப்பிட்ட ஒரு தூரத்தை ஓடி முடித்த பிறகு, அது பல விதங்களில் சோதிக்கப்படுகிறது. அதனுடைய இயந்திர பாகங்களெல்லாம் சரியாக இயங்கும் நிலையில் இருக்கிறதா என்று கவனிக்கப்பட்டு, சரி செய்யப்பட வேண்டிய பகுதிகள் பழுது பார்க்கப்பட்டு சீர் செய்யப் படுகின்றன. நீண்ட தூரம் ஓடி வந்திருக்கின்ற நிலையில் வாகனத்தில் படிந்துள்ள அழுக்குகள் கழுவி அகற்றப்பட்டு சுத்தமாக்கப்படுகிறது. இப்போது அது தனது அடுத்த கட்ட ஓட்டத்திற்கு நன்கு ஆயத்தமாக்கப்பட்டுள்ளது.

கர்த்தருடைய பெரிதான கிருபையால் ஒரு ஆண்டினை முடித்துள்ளோம். கர்த்தருக்குச் சித்தமானால் புதிய ஒரு ஆண்டிற்குள் பிரவேசிக்கும் நேரத்தை நெருங்கி வந்துள்ளோம். முடிவடையும் தருவாயில் உள்ள இந்தப் பழைய வருடம், நம்மில் அநேகருக்கு ஒருவேளை பல்வேறு காரணங்களினால் சோர்வானதாகவும், சோதனையானதாகவும், எதிர்பார்த்தபடி சில காரியங்கள் நடவாமல் போய் ஏமாற்றமானதாகவும் இருந்திருக்கக்கூடும். ஆயினும், பலவிதச் சூழ்நிலைகளைக் கடந்து இம்மட்டும் வந்து சேர தேவ கிருபை நமக்குத் துணை நின்றிருக்கிறது. இந்த உணர்வோடு, கர்த்தருக்கு மனதார நன்றிகளைச் செலுத்துவோம்.

கடந்தவை கசப்பானவைகளாக இருந்தாலும், வரப்போகிற ஆண்டை கர்த்தர் ஒரு மதுரமான ஆண்டாக மாற்றித்தர முடியும். விசுவாசத்தினால் நீதிமான் பிழைப்பான். ஒரு புதிய அடுத்த கட்ட வாழ்க்கைப் பயணத்திற்கு ஆயத்தமாகும் வித மாக நாம் எப்படிச் செயல்பட்டோம், எப்படிச் செயல்படுகிறோம், எப்படியிருக்கின்றோம் என்றெல்லாம் இப்போது சற்று சோதனை செய்து பார்ப்போமா?

கர்த்தர் நம்மோடிருந்திருந்தால், கர்த்தர் நமக்குப் பல நிலைகளில் நல்லவராக யிருந்ததை, உணர்ந்திருக்க முடியும். கர்த்தர் நம்மோடிருந்திருந்தால், கர்த்தருடைய சமாதானம் நம்மோடிருந்திருக்கும். கர்த்தம் நம்மோடிருந்திருந்தால், கர்த்தரின் சத்தம் நம்முடைய ஆத்துமாவில் தொனித்ததை நாம் உணர்ந்திருப்போம்.

இவ்வித விஷயங்களில் நாம் குறைந்து போயிருந்தாலோ, குன்றிப் போயி ருந்தாலோ நாம் கர்த்தரோடிருக்கப் போதிய அளவு கவனமாயிருக்கவில்லை என்று அர்த்தம் ஆகும். அதுவே நம்முடைய பல சோர்வுகளுக்கும், அமைதிக் குறைவுகளுக்கும், நம்பிக்கை இழப்புகளுக்கும் காரணமாயிருந்திருக்க முடியும். இப்போதும் ஒரு புதிய தீர்மானத்துடன் கர்த்தரோடு வலிமையான உறவு கொள்ள நம்மை ஆயத்தமாக்குவோம். நாளை நமக்காகக் கர்த்தர் அற்புதம் செய்வார்.

சிந்தனைக்கு...

தேவனுக்காக நீ இருக்கிறாய் என்பது நிச்சயமாகிவிட்டால்
தேவன் உனக்காக இருப்பது நிச்சயமற்றதாயிராவிது.

ஆசிரியரின் பிற நூல்கள்

1.	சந்தோஷத்தின் வழிகள்
2.	இறை ஆசியுடன் இனிய குடும்பம்
3.	வெளிச்சத்தில் வெளிப்படும் உண்மைகள்
4.	வழிகாட்டும் சிந்தனைகள்
5.	சிலுவையில் இயேசுவின் இதய ஓசைகள்
6.	நம்பிக்கையில் சந்தோஷமாயிருங்கள்
7.	பரிசுத்த வாழ்வின் பாதையில்
8.	நாம் ஏன் ஜெபிக்க வேண்டும்?
9.	துதி மலர்கள் ஆயிரம்
10.	தேவன் அங்கீகரிக்கும் ஜெபம்
11.	ஆராதனையும் அனுதின வாழ்க்கையும்
12.	விசுவாசத்தின் பிரதிபலிப்புகள்
13.	சிலுவையின் பாதையில் சில மனிதர்கள்
14.	துக்கம் சந்தோஷமாக மாறும்
15.	ஆசீர்வாதங்கள் தடைபடுவது ஏன்?
16.	கிறிஸ்தவம் பேச்சில் அல்ல... செயலில்
17.	வல்லமையாக ஜெபிப்பது எப்படி?
18.	சிந்தையை சீராக்கும் சிந்தனைகள்
19.	யார் என்னை தேற்ற முடியும்?
20.	மனந்திரும்பியது உண்மையா?
21.	சிலுவையில் அறையப்படும் சத்தியங்கள்
22.	உண்மையான ஆராதனை
23.	கலங்காதே மனமே கலங்காதே
24.	சத்திய சிந்தனை முத்துக்கள்
25.	ஆசீர்வாதத்தின் அடித்தளங்கள்
26.	தேவனுடைய மனிதர்கள் எங்கே? எங்கே?
27.	வாலிப வயதுகளில் நீ
28.	துன்பங்கள் ஏன்? ஏன்?
29.	கண்ணீரின் காலங்களில்
30.	விசுவாசமா? வியாபாரமா?
31.	சிந்திக்க தூண்டும் சிந்தனைகள்
32.	ஆராதனை என்றால் என்ன?
33.	காதல் சரியா? தவறா?
34.	சோர்ந்து போகாதே மனமே

35.	தேவ உறவினால் வாழும் வாழ்க்கை
36.	அக்கினி வார்த்தைகள்
37.	மனநிலைகள் மாறணுமே
38.	கிறிஸ்தவன் இங்கே, கிறிஸ்தவம் எங்கே?
39.	சிந்தனைத் தோட்டத்தில் சிறுமலர்கள்
40.	அர்த்தமுள்ள ஆவிக்குரிய வாழ்க்கை
41.	உண்மையைச் சொல்கிறேன் இது கிறிஸ்தவம் அல்ல
42.	எப்படி வாழணும் கிறிஸ்தவ வாழ்க்கை
43.	வாலிபத்தை பாதுகாப்பது எப்படி?
44.	நீங்களும் உங்கள் பிள்ளைகளும்
45.	வித்தியாசமான விக்கிரகங்கள்
46.	தேவனுக்காக வாழ்வது என்றால்
47.	ஆவிக்குரிய வாழ்க்கை எதற்காக
48.	இறை உறவினால் வாழும் குடும்பம்
49.	தேவனால் ஆசீர்வதிக்கப்பட வழிகள்
50.	நான் ஏன் வாழ வேண்டும் ?
51.	இது சத்தியமா, சிந்தியுங்கள் !
52.	கிறிஸ்தவ வாழ்க்கை என்றால் என்ன?
53.	சத்தியத்தின் வெளிச்சத்தில்
54.	திருச்சபை என்பது எதற்காக?
55	மனம் திரும்புதலும் மறுபடி பிறத்தலும்
56	பரிசுத்தமாக வாழச் செய்வது எது?
57	பரிசுத்த ஆவியின் அபிஷேகம் எப்போது? எப்படி?
58	கேட்டாலும் கேளாவிட்டாலும்
59	வலிமையான நம்பிக்கைகள்
60.	உண்மை கிறிஸ்தவ அடையாளங்கள்

IN ENGLISH

1.	True Worship
2.	Godliness for youth, why?
3.	In the Times of Distress
4.	Powerful Prayer Life, How?
5.	Delightful family with Divine Blessings